திருமூலர் அருளிய

# திருமந்திரம்

அனுபவ உரை


ஆசிரியர்

திருமந்திரச் செம்மல்

**டி.வி. வெங்கட்டராமன்** இ.ஆ.ப. (ஓய்வு)

*முன்னாள் தலைமைச்செயலர், தமிழக அரசு*

பாரதி பதிப்பகம்

108, உஸ்மான் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
த.பெ.எண். 4984, போன் : 4340205

விலை ரூ.140.00

❒ THIRUMOOLAR ARULIYA THIRUMANTHIRAM – ANUBAVA OURAI ❒ BY : T.V. VENKATTARAMAN, I.A.S. ❒ FIRST EDITION : NOVEMBER 1996 ❒ PRICE: Rs.140.00 ❒ DESIGNED AND PUBLISHED BY: BHARATHI PATHIPPAGAM, 108, USMAN ROAD, T.NAGAR, CHENNAI - 17. PH : 4340205 ❒ LASER TYPESET BY : GRAPHIC ACCESS, CHENNAI - 94. ❒ PRINTED AT : MANI OFFSET, CHENNAI - 600 005. ❒

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம் 26வது குரு மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
வழங்கியருளிய

# அருளாசி

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே".

திருமந் திரமே சிவகதிக்கு வித்தாம்
திருமந் திரமே சிவமாம் அருமந்த
புந்திக்கு ளேநின்று போற்றும்அடி யார்தமக்குச்
சந்திக்கும் தற்பரமே தான் – அபியுக்தர் வாக்கு

வடமொழியில் பதஞ்சலி யோக சூத்திரம் போலத் தமிழில் அமைந்து விளங்கும் யோக நூல் திருமந்திரம் இதனைத் திருமூறை வரிசையில் பத்தாவதாக அமைத்துப் போற்றினர் நம் முன்னோர்.

''அறம்பொருள் இன்பம்வீடு அடைதல்நூற் பயனே'' என்பது இலக்கண நூற்பா. ஒரு நூல் இம்மை வாழ்வுக்குரிய அறம் பொருள் இன்பங்களை உணர்த்துவதோடு மறுமையில் வீடு அடைவதற்குரிய நெறியையும் மக்கட்குத் தெரிவிக்க வேண்டும் என்பது இதன் பொருள். இதன் அடிப்படையில் திருவள்ளுவர் முப்பாலில் நாற்பாலை மொழிந்துள்ளது போலத் திருமூலர் வீட்டுப் பாலில் ஏனையே மூன்றையும் இணைத்து இந்நூலைத் தமிழ் உலகிற்குத் தந்துள்ளார்.

திருமந்திரம் வேதோநிடதம் – சிவாகமங்களின் முடிந்த பயனை உணர்த்தும் உயரிய நூல். இந்நூலின் பாடற் பொருள் அரிதின் முயன்று ஒருவர் உணர்த்த உணரும் நிலையில் இருப்பதால் பலரும் இந்நூலைப் படித்தப் பயன்பெறத் தவறி வந்தனர்.

இந்நூல் மக்கள் அரிதிற் கிடைத்த இம்மானுடப் பிறப்பின் கால அளவினை யோக முயற்சியால் நீட்டிக்கச் செய்து வாழ்வின் பயனை இவ்வொரு பிறப்பிலேயே அடைய வழிகாட்டுகிறது.

''உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டா
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே.''

என்பதொரு திருமந்திரம் உடம்பைப் பேணுதலின் அவசியத்தை வலியுறுத்துகிறது.

இந்நூலில் கூறப்பெறும் அட்டாங்க யோகம் ஆறாதார யோகத்திற்கு அடிப்படையாக விளங்குவது. வாழ்க்கையில் மக்கள் அறிந்து கடைப்பிடிக்கத்தக்கது. இதனை உணர்ந்த பின்னரே இராஜ யோகம் எனப்படும் ஆறாதார யோக பயிற்சியை ஆசிரியன் வாயிலாக மக்கள் மேற்கொள்ள வேண்டும். அனுபூதிமான்களோடு பழகியும் உணர்ந்தும் கடைப்பிடிக்கத் தக்க யோகம் இது.

இவை போன்ற பல நுண் பொருள்கள் அடங்கிய இந்நூலைக் கற்று அதனை மக்கட்குத் தெளிவாக எளிய நடையில் எடுத்துரைக்கும் முயற்சியில் நம் அன்பர் திருமந்திரமணி திரு டி.வி.வெங்கட்டராமன் அவர்கள் வெற்றி கண்டுள்ளார். இவர் எழுதியுள்ள இந்நூலில் ''ஒன்றவன்தானே'' என்ற பாடலுக்கு எழுதிய உரைவிளக்கம் மிகச் சிறப்புடையதாய் விளங்குகிறது. இவ்வாறே தான் எடுத்துக்கொண்ட ஒவ்வொரு தலைப்புகளையும் விரிவாகவும் விளக்கமாகவும் தோத்திர சாத்திர இலக்கிய மேற்கோள்களோடு இவர் எழுதியுள்ள திறன் மிகவும் பாராட்டத்தக்கதாயுள்ளது.

பல்லாண்டுகளாகத் திருமந்திரத்தை முறையாகக் கற்றும் அனுபூதிச் செல்வர்களோடு பழகியும் இந்நூலைத் தெளிவாக உணர்ந்தும் பல இதழ்களில் கட்டுரை வடிவில் வெளியிட்டு வந்துள்ளதை திருமுறைகள் சித்தாந்த சாத்திரங்கள், வடமொழி நூல்கள் முதலானவற்றை மேற்கோள் காட்டி விரிவு செய்தும் அழகுறுத்தியும் இவற்றை நூல் வடிவில் இவர் தமிழ் மக்களுக்கு அளிக்கின்றார். பாரதி பதிப்பகத்தார். இந்நூலினை ஒளியச்சில் செம்மையுற அச்சிட்டுள்ளனர்.

அன்பர் திருமந்திரமணி திரு டி.வி.வெங்கட்டராமன் அவர்கள் எல்லா நலங்களோடும் இனிது வாழ்ந்து,தொடர்ந்து தன் திருமந்திர அனுபவ உரைகளை மக்கட்கு வழங்கி வரவும் அன்பர்கள் இந்நூலைக் கற்றுப் பயன் பெறவும் ஸ்ரீ செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

★★★★★

உ

சிவமயம்

## திருக்கயிலாய பரம்பரை

## சீர்வளர்சீர் சிவப்பிரகாச பண்டாரச்சந்நிதி

குருமகாசந்நிதானம், திருவாவடுதுறை ஆதீனம்

அவர்கள் வழங்கியருளிய

# அருளாசி

சமயத்துறையில், தமிழ் மொழியிலே தோத்திர சாத்திர நூல்களுக்கு மூலமாக இருப்பது திருமூலர் திருமந்திரம். பன்னிரு திருமுறையில் திருமந்திரம் பத்தாந் திருமுறையாக விளங்குகிறது. தமிழகத்துச் சித்த பரம்பரைக்கு மூலமாகவும் மிகச் சிறந்த யோகியாகவும் ஞானியாகவும் விளங்கியவர் திருமூலர். திருவாவடுதுறையில் மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத்து வீற்றிருந்து இந்தச் சித்தநாதர் அருளிய திருமந்திரம் ஆகிய தமிழ் மூவாயிரம் அறிவால் விளைந்த பயன் அன்று. சிவானந்த அனுபவத்தால் விளைந்த பேறு ஆகும். உலக மக்கள் அனைவரையுமே உய்விக்கத் தமிழகத்தில் மலர்ந்து மணம் பரப்புகின்ற அனுபவ ஞானத் திருநூல்.

உலகத்து யாவருடைய உள்ளத்திலும் எஞ்ஞான்றும் நின்று நலம் பயக்க வல்லதான இத்திருநூலின் அரிய பொருளையெல்லாம் அன்பர்கள் எளிதில் தெளிவாகத் தெரிந்து பயன்கொள்ளும் வண்ணம் தமிழக அரசு முன்னாள் தலைமைச் செயலாளரும் நமது ஆதீன அன்பிற்கும் பாராட்டுதலுக்கும் உரியவர்களுமாகிய திரு. டி.வி.வெங்கட்டராமன் அவர்கள் கலைமகள், திருக்கோயில் ஆகிய திங்கள் இதழ்களில் கட்டுரை அமைப்பில் எழுதி வெளியிட்டு வந்தார்கள். அவற்றில், வேண்டும் மாற்றங்களையும் சேர்க்கைகளையும் சிறக்கச் செய்து ஒரு தனி நூலாக இப்பொழுது வெளியிடுவது மகிழ்ச்சியளிக்கிறது.

புகழ் பெருக அரசுப்பணிகளைச் சிறப்பாக ஆற்றி வந்ததற்கு இடைபேயும் இவர்களது உள்ளத்தைக் கவர்ந்து பற்றிக் கொண்டது திருமந்திரம். அருள் நலச்சிறப்பால், இவர்கள் திருமந்திரக் கடலில் முகந்து கொண்ட நன்முத்துக்களை நமது ஆதீனத்திலும் தமிழக நற்சபைகளிலும் வாரி வழங்கி மகிழ்வித்தவர்கள். இவர்களது திருமந்திர உள்ளம் இப்பொழுது நூல் வடிவு கொண்டு தமிழக உலா கொள்ள வருகிறது. திருமந்திரச் செல்வரின் இனிய இந்நூல் தமிழ் மக்கள் அனைவரிடத்தும் திகழ்ந்து மேன்மைமிகு வாழ்வினை அருளவும், அன்பர் அவர்களது திருமந்திரப் பணிநலம் உலகு அனைத்தும் பயன் கொளும் வண்ணம் சிறக்க இவர்கள் நலம்மிக்க நீடுவாழ்வில் திகழவும் அருள நம் வழிபடுமூர்த்தி அருள்தரு ஞானமா நடராசப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

திருவாவடுதுறை
13-08-1996

★★★

# டாக்டர் பா. இராமன் அவர்களின் அணிந்துரை

திருக்கயிலாயத்தில் நந்தியானவர் திருமூலருக்கு ஒன்பது ஆகமங்களை விளக்கியுரைத்தனர். திருமூலர் மண்ணுலகிற்கு வந்து மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகம் புரிந்தார். தாம் முன்பு கேட்ட சிவாகமங்களின் சாரத்தை மூவாயிரம் பாடல்களாகப் பாடியருளினார். இப்பாடல்களின் தொகுப்பே திருமந்திரம் என வழங்குகிறது. இதனைத் தனித்தமிழ் ஆகமம் என்பர். மந்திரம் என்பதற்கு 'நினைப்பவரைக் காப்பது' என்று பொருள். திருமந்திரம் எக்காலத்தும் நினைப்பவரைக் காக்க வல்லது. ''ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க'' என்றதால், திருமந்திரம் சிவசொரூபம் என்க பத்தாம் திருமுறையான திருமந்திரம் தாய் எனவும், ஏனைய திருமுறைகள் அதன் சேய் எனவும் கூறுவர். சமயகுரவர் நால்வர்தம் திருப்பாடல்களைப் புகழ் நூல்கள் எனவும் திருமந்திரத்தைப் பொருள் நூல் எனவும் இயம்புவர். இதன் பெருமை அளவிடற்கரிது.

காண்பான், காட்சி, காணப்படு பொருள் என்னும் திரிபுடி, சுத்தமாயை, அசுத்தமாயை, சத்திகள், பரசிவம் ஆகியோரைத் திருமூலர் 'விளங்கக் கண்டேன்' என்றார். இந்நூல் நுதலிய பொருள் இதுதான். பதியின் இயல்பையறிந்து பாசத்தை நீக்கிப் பசுவானது பதியை எவ்வாறு அடைதல் வேண்டும் என்னும் நெறிகளைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என வகுத்துரைக்கின்றார். சிவயோகத்தின் சிறப்பினை எடுத்துரைத்தாலும் அன்பே சிவம் எனும் அன்பு நெறியையே யாவற்றினும் மேலானது என்று கூறுகின்றார். முதன்மையான சித்தாந்த சாத்திரங்கள் கூறுவதுபோல் பதிபசுபாச இயல்பினை விளக்கிப் பதியை அடையும் நெறியையும் இந்நூல் தெளிவாகக் காட்டுவதால் இது சாத்திரமும் தோத்திரமும் பொதிந்த பொன்னூல் எனலாம்.

திருமந்திரச் செம்மல் சான்றோர் திரு. டி.வி.வெங்கட்டராமன், இ.ஆ.ப., (ஓய்வு), அவர்கள் நுண்மாண் நுழைபுலம்மிக்கவர். திருமூலரின் திருவருளுக்குப் பாத்திரமானவர். மூலன் செய்த மூவாயிரத்தையும் முற்றக்கற்றவர். சைவச்சான்றோர் வரைந்த திருமந்திர உரைகளைப் படித்துச் சுவைத்தவர். சித்தாந்த சாத்திரங்களிலும் திருமுறைகளிலும் புலமை பெற்றவர். பல்லாண்டுகளாகத் தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று எண்ணித் திருமந்திர மாநாடு நடத்துவதும், திருமந்திரச் சொற்பொழிவு ஆற்றுவதும், மாத இதழ்களில் கட்டுரை எழுதுவதுமான அரிய தொண்டினைச் சிறிதும் அயராது செய்து வருகின்றார். இன்று திருமந்திரத்தைப் படித்து உணர வேண்டும் என்ற அவா நூற்றுக்கணக்கானவருக்கு ஏற்பட்டதற்கு இப்பெரியாரே காரணமாவார் மிகையன்று.

பல்லாண்டுகளாகத் தாம் பேசியும் எழுதியும் வந்த திருமந்திரச் செம்பொருளை நூல் வடிவாக ஆக்கியுள்ளார். எளிதில் புரிந்து கொள்ள முடியாத பாடல்களுக்குத் தெளிவான விளக்கம் அளித்துள்ளார். அதனால் மூலநூலைப் படித்து அறிய முடியாதவர்கள் இந்த உரைநடை நூலைப் படித்து அறிந்து சுவைக்கலாம்

பதி பசு பாசம் ஆகிய முப்பொருளையும் பதியை அடைவதற்குரிய நெறியையும் எத்தனை வகையில் விளக்கினாலும் புரியாது என்பதால்,

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர், காரைக்காலம்மையார், திருநீலக்கண்டக்குயவனார், சேக்கிழார், தாயுமானவர், பட்டினத்தார் போன்ற அருளாளர் தம் முக்கிய வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் அவர்தம் அமுத மொழிகளையும் காட்டிக்கூற வந்த பொருளை கல்மேல் எழுத்துப்போல் நெஞ்சத்தில் பதித்து விடுகிறார்.

திருமுறைகளை மேற்கோளாகக் காட்டியதுபோல் சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம், திருவருட்பயன் ஆகிய சித்தாந்த சாத்திரங்களையும் காட்டி விளக்கியுள்ளார். இவர் தம் நூல் கற்கண்டு எனலாம், மாணிக்கம் எனலாம். எப்பக்கத்திலும் இனிக்கின்றது. எப்பக்கத்திலும் ஒளி வீசுகின்றது. இவர் தம் செவ்விய மொழிநடையும் செறிவான பொருளுரையும் ஆதியோடந்தமாய்ப் பரந்து மிளிர்கின்றன. என்னால் எப்பொருளைச் சான்றாகக் காட்டுவது எனத் தேர்ந்து சொல்ல இயலவில்லை. இருப்பினும் சிலவற்றை மட்டும் சான்றாகக் காட்டுவல்.

''குடம் உடைந்தால் ஓடு, உடல் உடைந்தால் பயன் உண்டா? விஞ்ஞானம் குறை அறிவு; மெய்ஞ்ஞானம் நிறை அறிவு. அறிவால் பார்க்காதே அருளால் பார். இரசவாதத்தால் இரும்பு பொன்னாதல்போல் குருவின் திருவடித் தீக்கையால் சீடன் சிவசமத்துவம் அடைவான். அலை ஓய்ந்த ஆழ்கடல்போல் தெளிந்த சிந்தையர்.

செல்வமும், கல்வியும் சிவனைக் காணமாட்டா. மாணிக்கத்துள்ளே மரகதம் காண முடியுமா? முடியும். சிவனுள்ளே சக்தி. பிறப்புக்கெட ஞானமலர் கொண்டு அருச்சிக்க. தூல தேகம் போய்ச் சூக்கும தேகமாகிப் பொன்னுடல் உண்டாகி ஈனமில் காயமாகிச் சத்திவடிவாய் நிலை பெறுவர் தூய அடியார். ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள், ஆசை மனத்தின் செயல். அது பற்றே. மனம் இறந்த ஞானிகட்கு ஆசை தோன்றாது. இதுவே ஞானியின் உச்ச நிலை. தான் சிவத்தை விழுங்க நினைப்பது பற்று; தன்னைச் சிவம் விழுங்குவது தன்னை இழந்த நிலை''.

இவ்வாறு எத்தனை எத்தனையோ நன்முத்துக்களைக் கண்டுகளிக்கலாம். ஞானத்தை விளக்க குரு சீடர் வினா விடையாக அமைத்திருப்பதும், கிருத்துவப் பெரியார், அடைக்கலப்பத்தில், 'மலரடிக்கே கூவிடுவாய். அடியேன் நின் அடைக்கலமே' என்ற வரிகளை ஒரு தாளில் எழுதி வைக்கச் சொல்லிப் பின் காலவயப்பட்டதும், இந்நூலாசிரியருக்கு அடைக்கலப்பத்தே துன்பக்காலத்தில் உற்றதுணையாக அமைந்ததும் ஆகிய செய்திகளைக் கற்போர் எவரும் சிவனுக்கே அன்பராகுவர் என்பது திண்ணம்.

நூலறிவும் நுண்ணறிவும் மிக்க சான்றோர் திரு டி.வி.வெங்கட்டராமன், இ.ஆ.ப. (ஓய்வு), அவர்கள் தெய்வத் தமிழன்னைக்குச் சூட்டும் மணம் கமழ் மலரே இந்நூலாகும். இவர் எல்லா நலத்துடனும் பல்லாண்டு வாழ்ந்து இத்தகு அரிய நூல்கள் பலவும் ஆக்க வேண்டும் என்பதே என் விழைவு.

இவண்

**ப. இராமன்**

# ஆசிரியர் முன்னுரை

பல ஆண்டுகளுக்கு முன்பு இது நடந்தது. ஒரு நாள் மாலை வழக்கம்போல் நான் சென்னையில், மயிலாப்பூரில் உள்ள அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோவிலுக்குச் சென்றிருந்தேன். திருக்கோவிலில் அருள்மிகு கற்பகாம்பிகை சன்னிதி நுழைவு வாயிலுக்கு வெளியே இடது பக்கத்தில் மாட்டப்பட்டிருந்த ஒரு பலகை என் கண்களுக்குத் தென்பட்டது. அதில்,

**"உடம்பார் அழியில் உயிரார் அழிவார்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவுமாட்டார்"** **(திருமந்திரம்)**

என்று எழுதப்பட்டிருந்தது. இப்போது அந்தப் பலகை அங்கு இல்லை.

அதுவரை நான் திருமந்திரத்தைப் படித்திருக்கவில்லை. உண்மையில் அப்போது நான் சமய நூல்களைப் பொதுவாகப் படித்தது கிடையாது. தமிழ் மொழியில் சமய, தோத்திர, சாத்திர நூல்களைப் படிக்கும் வாய்ப்பினையும் பெற்றிருக்கவில்லை. அதற்குக் காரணம் நான் தமிழ் மொழியை முறையாகக் கற்காததுதான். பள்ளியிலும், கல்லூரியிலும் வடமொழியைக் கற்ற காரணத்தினால் தமிழ் மொழியைப் படிப்பதற்கு இடமே இல்லாமல் போய்விட்டது. திருமுறைகளைப் பற்றியும், சைவ சாத்திர நூல்களைப் பற்றியும் ஒன்றும் தெரிந்து கொள்ள இயலாத நிலையில் இருந்தேன். சித்தர்கள் இலக்கியம் என்றால் அது என்ன என்று கேட்கும் அளவுக்கு ஓர் அறியாமை நிலையில் இருந்தேன். சொல்லப்போனால், சமயத்தின் மீது அதிகப் பற்றில்லாததும் இதற்கு ஒரு விளக்கமாக இருக்கலாம் என்றும் நினைக்கிறேன்.

அருள்மிகு கற்பகாம்பாள் சன்னிதியில் நான் கண்ட திருமந்திரக் குறிப்பு என் உள்ளத்தில் ஒரு வித்தியாசமான உணர்வினை உருவாக்கியிருக்க வேண்டும். திருமந்திர நூலைப் படிக்க வேண்டும் என்கிற ஆர்வம் ஏற்பட்டது. அந்த நாட்களில் சென்னையில் அப்போதிருந்த மூர்அங்காடிக்கு நான் பழைய நூல்களைக் குறைந்த விலைக்கு வாங்குவதற்காக அடிக்கடி சென்று வருவது வழக்கம். மூர்அங்காடி தீக்கு இரையான பின்னர் பழைய நூல்களைக் காண்பதே அரிதாகி விட்டது. ஒரு பெரிய பொக்கிஷத்தை நாம்

இழந்து விட்டோம். ஒருமுறை நான் மூர் அங்காடிக்குச் சென்றிருந்தபோது திருமந்திர நூல் ஒன்று கிடைக்குமா என்று ஒரு கடையில் கேட்டேன். அந்த கடைக்காரர் வயதானவர். உடனே திருமந்திரத்தைப் பற்றி ஒரு சிறு நூலை எனக்கு எடுத்துக் கொடுத்தார்கள். ராஜாஜி அவர்களும் சோமு அவர்களும் சேர்ந்து எழுதியிருந்த கட்டுரைகளின் தொகுப்பு அது. கல்கியில் வெளிவந்த கட்டுரைகளைச் சேர்த்து ஒரு நூலாகப் பிரசுரித்திருந்தார்கள். நம்ப முடியாத மலிவு விலைக்கு அந்த நூலை வாங்கி, வீட்டிற்குச் சென்று படிக்கத் தொடங்கினேன். இன்னும் படித்துக் கொண்டிருக்கின்றேன். திருமந்திரத்தில் என்னை ஈடுபடுத்திய இறைவனுடைய பெரும் கருணையைப் பற்றி வேறு என்ன சொல்வது?

திருமூலர் பெருமான் அருளிச் செய்துள்ள திருமந்திர மணிமாலை விளக்க நூல்கள் போதிய அளவில் வெளிவரவில்லை என்றே கருதுகிறேன். வெளிவரும் நூல்களையெல்லாம் அவ்வப்பொழுதே வாங்கி விடுவேன். அவற்றையெல்லாம் படித்து, மனநிறைவு பெறும் வகையில் விளக்கம் பெறுவதில் என்னைப் போன்றவர்களுக்குப் பல இடர்கள் இருந்தன. பல நூல் ஆசிரியர்கள் தமிழ் மொழியிலே வல்லுநர்களாக இருந்த காரணத்தினால், அவர்கள் கொடுத்த தமிழ் மொழி விளக்கங்கள் பல நேரங்களில் எனது அறிவுக்கு எட்டுவதில்லை. வேறுசில நூல் ஆசிரியர்கள் தாங்கள் பெற்றிருந்த சாத்திர அறிவின் அடிப்படையில் சிறந்த விளக்கங்களைக் கொடுத்திருந்தாலும், எனக்குப் போதிய சாத்திர அறிவு கிடையாது என்பதால் அந்த விளக்கங்களை என்னால் முழுமையாகப் புரிந்து கொள்ள இயலவில்லை. சாத்திர நூல்கள் படிக்காத என்னைப்போன்ற பல அன்பர்கள் இந்த இக்கட்டான நிலைமையில் இருக்கின்றார்கள் என்பதை நான் அனுபவத்தின் அடிப்படையில் தெரிந்து கொண்டேன்.

எப்படியிருந்தாலும் திருமந்திர மணிமாலையை நன்கு கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற விருப்பம் வளர்ந்து கொண்டே வந்தது. மூவாயிரம் மந்திரங்களில் முன்னூறுக்கும் மேற்பட்ட மந்திரங்களைப் படித்துத் தெரிந்து கொள்வதில் அதிகப் பிரச்சினை தோன்றவில்லை. ஆனால், மற்ற மந்திரங்கள் வெகு கடினமாக இருந்தன. இந்த நிலை இரண்டு வகையில் ஏற்பட்டது. ஒன்று, மந்திரங்களில் பயன்படுத்தப்பட்ட தமிழ்ச் சொற்கள் இயல்பாகவே கடினமாக இருந்தன. இரண்டாவது, பல மந்திரங்களில் சொற்கள் எளிதாக இருந்தாலும் அவற்றின் பொருள் ஆழமாக இருந்தது. அவற்றைப் பற்றிய விளக்கங்களைப் பெறுவதற்கு, ஆழ்ந்த அறிவு தேவைப்பட்டது. அதைவிட முக்கியமானது ஒன்று, அந்தச் சொற்கள் உணர்வு நிலையில்தான் போதுமான பொருளைத் தரும் என்கிற எண்ணமும் எனக்கு ஏற்பட்டது. சாத்திர அறிவோ அல்லது ஆன்மிக அனுபவமோ இல்லாத எனக்கு இந்த நிலையில், திருமந்திரத்தை முழுமையாகப் படித்துச் சுவைப்பதற்குத் தேவையான ஆற்றல் என்றுமே கிடைக்காது என்கிற எண்ணமே மேலிட்டது.

மீண்டும் ஒருமுறை திருவருளின் பெருங்கருணையைக் காண முடிகின்றது. கொடைக்கானல் மலைப்பகுதியில் பெருமாள்மலை எனும் இடத்தில் பல ஆண்டு காலம் வாழ்ந்து வந்த ஒரு பெரியவரின் நட்புக் கிடைத்தது. அவரை ''பெருமாள்மலை ஐயப்ப சுவாமிகள்'' என்றும், ''ராமுடு சிவா சுவாமிகள்'' என்றும் அவருடைய சீடர்கள் பெயரிட்டிருந்தார்கள். என்னுடைய உறவினர் ஒருவருடைய உதவியோடு இந்தப் பெரியாரைச் சந்திக்கும் பேறு பெற்றேன். அடிக்கடி எங்கள் வீட்டுக்கு அவர்கள் வரத் தொடங்கினார்கள். திருமந்திரத்தில் ஆழ்ந்த அனுபவம் பெற்ற பெரியார் ஒருவரைச் சந்திக்கின்றோம் என்கின்ற உணர்வு ஏற்பட்டது. இரவு நேரங்களில் அவர் என்னுடன் தங்கும்பொழுதெல்லாம் திருமந்திரத்தில் காணப்படும் கருத்துக்களின் நுட்பத்தை அனுபவரீதியாக எனக்கு வழங்குவார்கள். மிகக் கடினமான மந்திரங்களைச் சில விநாடிகளிலேயே தெள்ளத்தெளிவாகப் புரிய வைத்துவிடுவார்கள். வாசி யோகத்தை அவர்கள் முழுமையாகப் பயின்றிருந்தார்கள். அவர்கள் விரும்பியிருந்தால் வாசியோக சாதனைகள் பலவற்றைச் செய்திருக்கக்கூடும் என்றும் நான் கருதுவதற்கு இடமுண்டு. குறிப்பாக எட்டாவது, ஒன்பதாவது தந்திரங்களில் காணப்படும் அனுபவ மந்திரங்கள் பலவற்றிற்கு எனக்குத் தெளிவாக விளக்கம் கொடுத்து உதவினார்கள். அவர்கள்தான் என்னைப் பேசச் சொன்னார்கள். கட்டுரைகளை எழுதச் சொன்னார்கள். அவர்கள் எனக்குச் செய்த உதவி அளவிடற்கப்பாற்பட்டது. அவருக்கு நான் என்றென்றும் கடமைப்பட்டவன். அந்தப் பெரியார் இப்பொழுது நம்மிடையே இல்லை.

திருமந்திர மணிமாலை சைவப்பெருமக்களால் பன்னிரு திருமுறைகளில் பத்தாம் திருமுறையாகப் போற்றப்படுகின்றது. சைவ சாத்திர நூல்களிலே இது ஒரு சிறந்த நூலாகவும் கருதப்படுகிறது. எனவே, சைவ சாத்திர நூல்களைக் கற்றறிந்து கொள்ள வேண்டும் என்கின்ற ஆவலும் ஏற்பட்டது. ஸ்ரீலஸ்ரீ தர்மபுர ஆதின மகாசன்னிதானம் அவர்கள் இதில் எனக்குப் பெருத்த துணையாக இருந்தார்கள். சாத்திர நுட்பங்களையெல்லாம் அவ்வப்போது எடுத்துக்காட்டி எனது சிந்தனையைத் தூண்டி விடுவார்கள். மேலும் மேலும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற ஆவலையும் உண்டாக்கினார்கள். ஸ்ரீலஸ்ரீ திருவாவடுதுறை ஆதின மகாசன்னிதானம் அவர்களும் என்னை இவ்வாறே ஊக்கப்படுத்தினார்கள். இந்த இரண்டு பெரியார்களுக்கும் எத்துணை நன்றி கூறினாலும் தகும். தருமை மகாசன்னிதானம் அடியேனுக்குத் ''திருமந்திர மணி'' என்கிற பட்டம் கொடுத்ததும், திருவாவடுதுறை மகாசன்னிதானம் ''திருமந்திரச் செம்மல்'' என்கிற பட்டம் கொடுத்ததும் என் வாழ்க்கையில் நடந்த இரண்டு பொன்னான நிகழ்ச்சிகளாகும். இந்த இரண்டு பெரியார்களும் இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கியிருப்பது நான் பெற்ற பேறாகும்.

திருமந்திரம் ஒரு அனுபவ நூல் என்றும், இங்கே கிடைக்கும் அனுபவ உண்மைகள் நம்மைச் சாத்திரங்களுக்கும் அப்பால் அழைத்துச் செல்கின்றன

என்றும், அதை அருள் அனுபவம் என்றும் கூறலாம். அந்த அருள் அனுபவம் நமக்கு முத்திப் பேற்றினை அளித்து நம்மைப் பேரின்பத்தில் ஆழ்த்தும் ஆற்றல் பெற்றது என்றும், திருமந்திரக் கல்வி அனுபவக் கல்வியாக அமைய வேண்டும் என்றும் சைவப் பெரியார்கள், திரு அ.ச.ஞானசம்பந்தம், முனைவர் வை.ரத்தினசபாபதி ஆகியோர் அடியேனுக்கு அடிக்கடி எடுத்துச்சொல்லி, ஊக்கமளித்து என் உள்ளத்திலே பல கருத்துக்களை ஆழமாகப் பதிய வைத்துச் செய்த ஒரு பெரும் தொண்டிற்கு நான் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

என்னோடு பேசாமலே பேசி, அருள் பாலித்து, அன்பு உபதேசம் செய்து திருமந்திர மணிமாலையை வாழ்க்கை நூலென எடுத்துக்காட்டி ஆன்மிகச் சாதனைக்கான நெறிகளை உள்ளத்திலே உணர்த்திய தவத்திரு தேமொழியார் சுவாமிகள் அவர்களை நான் என்றென்றும் போற்றி வணங்குவன்.

இறைவன் திருவருளால் பல மாதங்களாகக் 'கலைமகள்' மாத இதழிலே, திருக்கோயில் இதழிலும் நான் எழுதி வந்த திருமந்திரக் கட்டுரைகள் என்னுடைய எண்ணங்களைத் தெளிவாக்கிக் கொள்ளப் பெரிதும் பயன்பட்டன. எனக்கு ஏற்பட்ட தெளிவினை மற்றவர்களும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்கிற ஒரே நோக்கத்துடன் இந்த நூலை எழுதத் தொடங்கினேன். நான் எழுதியிருந்த கட்டுரைகளை இதற்காகப் பயன்படுத்திக் கொண்டுள்ளேன். அந்தக் கட்டுரைகளைப் பிரசுரித்து என்னை கௌரவித்த ''கலைமகள்'' ஆசிரியர் அவர்களுக்கும், ''திருக்கோயில்'' ஆசிரியர் அவர்களுக்கும் என்னுடைய நன்றி உரித்தாகுக. காலப்போக்கில் என்னுடைய கருத்துகளில், எண்ணங்களில் தோன்றிய மாறுதல்கள் அடிப்படையில் இந்தக் கட்டுரைகளைப்பல இடங்களில் மாற்றி எழுதியிருக்கின்றேன்.

சென்னை விவேகானந்தா கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பல ஆண்டுகள் பணியாற்றி, மாணவர்களிடையே நன்மதிப்பைப் பெற்று ஓய்வடைந்துள்ள டாக்டர் ப.ராமன் அவர்கள் ஒரு சிறந்த இறை உணர்வாளர். அன்பும், அடக்கமும் நிரம்பக் கொண்டவர். பாம்பன் சுவாமிகளுடைய தத்துவங்களை நன்கு கற்றுணர்ந்தவர். தமிழில் பல நூல்களை வெளியிட்டவர். என்னுடைய ஆன்மிகப் பணிகளுக்குப் பெரிதும் துணையாக இருப்பவர். அவர்கள் நான் எழுதிய கட்டுரைகளைப்படித்து, தமிழ் இலக்கண விதிகளுக்கு ஏற்ப அங்கங்கே திருத்தங்களைச் செய்து எனக்கு உதவியுள்ளது அவர்கள் என் மீது வைத்துள்ள பேரன்பிற்குச் சான்றாகும். மேலும் அவர்கள் அச்சுப் பிழைகளைத் திருத்தி, சரிபார்த்து இந்த நூல் நன்கு வெளிவருவதற்குப் பெரும் பங்கை ஏற்றுள்ளார்கள். அத்துடன் சிறந்ததொரு அணிந்துரையையும் வழங்கி இருக்கின்றார்கள். இப்பெரியாருக்கு நான் எவ்வாறு நன்றி சொல்வது என்று தெரியவில்லை.

எட்டாண்டுகளுக்கு மேலாக எனக்கு எழுத வேண்டும் என்கிற எண்ணம் ஏற்படும்பொழுதெல்லாம் சற்றும் யோசியாமல் உடனே என்னிடம்

வந்து தட்டச்சுப் பணியை மேற்கொண்டு அழகுழறச் செய்து முடிக்கும் சிறந்த ஆற்றலைப் பெற்றிருப்பவர் எனது இனிய நண்பர் திரு அ.கமலக்கண்ணன் அவர்கள், நான் சொல்லுவதை முதலில் சுருக்கெழுத்தில் எடுத்துப்பிறகு தட்டச்சில் ஏற்றும் வழக்கம் இவருக்குக் கிடையாது. நான் சொல்லச் சொல்ல ஒரு பிழையுமின்றி நேரிடையாகவே தட்டச்சில் ஏற்றும் மெச்சத் தகுந்த திறனை அவர்கள் பெற்றிருக்கிற காரணத்தினால் என்னுடைய எண்ணங்கள் எழுத்து வடிவம் பெற அதிகம் நேரம் எடுத்துக்கொண்டதே இல்லை. இந்த நூல் முழுவதையும் அவ்வாறே செய்து முடித்துக்கொடுத்த திரு.அ. கமலக்கண்ணன் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றி உரித்தாகுக. இந்நூலில் மந்திர எண்கள் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் பதிப்பித்த திருமந்திரம் என்ற நூலில் உள்ளபடி கையாளப்பட்டிருக்கின்றன. திருப்பனந்தாள் சன்னிதானம் அவர்களுக்கு என்னுடைய நன்றியும் வணக்கமும் உரித்தாகுக. எனது வாழ்க்கையின் ஒளி விளக்காகத் திகழ்ந்து என்னை வழி நடத்தி வரும் திருவேற்காடு அன்னதான சிவம் தவத்திரு ஐயப்ப சுவாமிகள் அவர்களுடைய திருவடிகளைத் திருவருளின் திருவுருவம் எனப் போற்றிப் பணிந்து அகமகிழ்கின்றேன்.

**"எவ்வாறு காண்பான் அறிவு தனக்கு எல்லை**
**அவ்வாறு அருட்செவன் ஆதியரன் தானும்"**

என்பார் திருமூலர் பெருமான்.

எனது அறிவுக்கெட்டியவரை நான் எழுதியுள்ள இந்த நூலில் கருத்துப் பிழைகள் ஏதேனும் இருந்தால் அவற்றைப் பொறுத்து, என்னைத் திருத்தியருள வேண்டுகிறேன்.

இவண்

**டி.வி. வெங்கட்டராமன்**

## காணிக்கை

இருபது ஆண்டுகளுக்குக் கூடுதலாக நான் நெருங்கிப் பழகி வந்த அருமை நண்பர், **திரு. பழ. சிதம்பரம்** பதிப்புத் துறையில் பல சாதனைகளைப் படைத்தவர்; இயல்பாகவே ஆன்மீகத்தில் ஊறி நின்றவர். அவர்களின் நினைவுக்கு ஓர் காணிக்கையாக இந்த நூலை வைப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

**- டி.வி.வெங்கட்டராமன்.**

# பொருளடக்கம்

## முதற் பகுதி


| | | |
|---|---|---|
| 1. | திருமூலர் - நான்மறை யோகிகளில் ஒருவர் | 17 |
| 2. | வேதமும் ஆமமும் | 31 |
| 3. | ஒன்றவன் தானே | 44 |
| 4. | ஆதியோடு அந்தம் இலாத பராபரம் | 82 |
| 5. | அரன் அங்கி தன்னில் சங்காரம் | 91 |
| 6. | இன்னருட் சக்தி | 101 |
| 7. | அன்னம் இரண்டு உள | 114 |
| 8. | உறவெனும் பாசம் | 126 |
| 9. | அன்பும் சிவமும் | 135 |
| 10. | உள் நின்ற சோதி | 143 |
| 11. | அறம் அறியாரே | 152 |
| 12. | சூடுவன் நெஞ்சிடை வைப்பன் | 162 |
| 13. | குருவே சிவம் | 171 |
| 14. | ஐந்தெழுத்து மந்திரம் | 181 |
| 15. | யோக வழியில் | 190 |
| 16. | சிவன் உறை சிந்தை | 200 |
| 17. | வென்ற ஐம்புலனால் மிக்கீர் | 206 |
| 18. | மன வாலயம் | 215 |
| 19. | ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் | 224 |
| 20. | காணாத கண்கள் | 234 |
| 21. | திருக்கூத்து தரிசனம் | 242 |
| 22. | அறிவுதயம் | 252 |
| 23. | நமன்வரின் | 262 |

## இரண்டாம் பகுதி


| | | |
|---|---|---|
| 24. | ஆசை அறுமின்கள், ஆசை அறுமின்கள் | 269 |
| 25. | தூங்கிக் கண்டார் சிவயோகம் | 278 |
| 26. | பேச்சற்ற பேரின்பம் | 286 |
| 27. | அடியார் பெருமை | 295 |
| 28. | அடியார் உள்ளம் | 299 |
| 29. | அருளால் அமுதப் பெருங்கடல் ஆட்டி | 308 |
| 30. | அருளாளர்களின் அருள் உணர்வுகள் | 318 |
| 31. | அருளாளர் பெற்ற அறிவு | 326 |
| 32. | ஆனந்த உணர்வு | 335 |
| 33. | அருள் அனுபவம் | 340 |
| 34. | அருளாளர்களின் மந்திர மொழி | 349 |
| 35. | என்னை ஆண்டு கொண்டான் | 357 |
| 36. | நின் பெருமையினால் பொறுப்பவனே | 363 |
| 37. | தத்துவமசி மகாவாக்கியம் | 371 |
| 38. | மறை பொருளும் மறை மொழியும் | 380 |
| 39. | திருமந்திரச் செம்பொருள் | 390 |
| 40. | உபதேசம் | 403 |
| 41. | நான் பெற்ற இன்பம் | 413 |
| 42. | திருமூலர் ஒரு சித்தர் | 424 |

டி.வி. வெங்கட்டராமனின்

# திருமூலர் அருளிய திருமந்திரம்

— அனுபவ உரை —



திருமூலதேவ நாயனார்

திருச்சிற்றம்பலம்

# திருமூலர் அருளிய திருமந்திரம்

## – அனுபவ உரை –

### முதற் பகுதி

## 1. திருமூலர் - நான்மறை யோகிகளில் ஒருவர்

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த திருமூலதேவ நாயனார் மிகச் சிறந்த யோகியாகவும், சித்தராகவும், ஞானியாகவும், ஆன்மிகத்தின் சிகரமாகவும், இறைவனை முற்றிலும் உணர்ந்தவராகவும் விளங்கினார். இவரை நான்மறை யோகிகளில் ஒருவர் எனச் சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தில் குறிப்பிடுகின்றார். இவர் எத்தனை நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தார் என்பது பற்றிய பிரச்சினைகளுக்கு வரலாற்று ஆசிரியர்கள் முடிவு காணவில்லை. அந்தப் பிரச்சினைக்குள் நாம் இப்போது புகவேண்டிய அவசியமில்லை. திருமூலதேவ நாயனார் பற்றிய வரலாலற்றுக் குறிப்புகள் சிலவற்றைச் சேக்கிழார் பெருமான் அருளிச் செய்த திருத்தொண்டர் புராணத்தின் வாயிலாக அறிகின்ற வாய்ப்பைப் பெற்றுள்ளோம். கயிலை மலையில் வெகுகாலம் தவம் செய்து வந்த சிவ யோகியார் ஒருவர் தென்னாடு வருகின்றார். இப்பொழுது திருவாவடுதுறை எனப் பெயர் பெற்றுள்ள ஊர் அக்காலத்தில் சாத்தனூர் என வழங்கப்பெற்று வந்தது. இதற்கு ''தென்கரைத்திரையூர் நாட்டுப் பிரமதேயம் சாத்தனூர் திருவாவடுதுறை'' என்னும் கல்வெட்டே சான்று. திருமூலதேவ நாயனார் தனது பயணத்தில் பல புகழ்பெற்ற தலங்களைத் தரிசித்துக் கொண்டு சாத்தனூரை வந்தடைந்தார். அப்பொழுது மூலனெனும் பெயருடைய இடையன் ஒருவன் மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தவன் திடீரென மரணம் அடைந்தான். அவனிடம் மிகுந்த பற்றுக் கொண்ட மாடுகள் அவன் உடலைச் சுற்றி நின்று கதறி அழுதன. அப்பசுக்களின் மீது அளவற்ற கருணை கொண்ட சிவயோகியார் தனது தவத்தால் பெற்ற அட்டமா சித்தியைப் பயன்படுத்தித் தனது உடலை ஓர் இடத்தில் மறைத்து வைத்துக் கூடு விட்டுக் கூடு பாயும் உபாயத்தின் மூலம் தம்முயிரை இறந்துகிடந்த மூலனின் உடலில் செலுத்தினார். மூலனும் உயிர் பெற்று எழுந்தான். பசுக்களும் மிகுந்த மகிழ்ச்சியுடன் அவனைச் சுற்றித் துள்ளி விளையாடின.

மாலை நேரம் வந்தபோது மூலன் பசுக்களை மனைதோறும் புக விட்டான். அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்த அவனுடைய மனையாள் அவனை நெருங்கினாள். அவரோ பொதுமடத்திற்குள் சென்று தங்கினார். மூலன் உடலில் தற்காலிகமாக இடம் கொண்ட சிவயோகியாரின் உயிர் அவள் தீண்டுவதற்கு இசையவில்லை. இரவெல்லாம் பேசவுமில்லை. மறுநாள் ஊர்ப்பெரியோர் முன் மூலர் தன்னைப் புறக்கணிப்பது பற்றிக் கூறினாள். அவர்கள் அவரை நன்கு ஆராய்ந்து அவர் சிவயோகத்தில் வைத்த மனமுடையவராயிருக்கின்றார். பற்றறுத்து உபதேசம் பெற்றவர் போல் உள்ளார். இனி அவர் உறவு முறைத் தொடர்புக்கு உதவார் என்றனர். இவளும் மனவருந்திச் சென்றாள்.

சிவயோகியார் ஏற்கனவே தனது உடலைப் பாதுகாப்பாத வைத்திருந்தார். அதைத் தேடி அவர் அங்குச் செல்லவும், அவ்வுடல் அந்த இடத்தில் காணப்படவில்லை. எல்லாம் இறைவன் செயலேயாகுமென முற்றிலும் உணர்ந்த மூலனுடலில் தங்கியிருந்த சிவயோகியார் திருவாவடுதுறையின் திருக்கோயிலின் மேற்றிசையில் இருந்த ஓர் அரச மரத்தின் கீழ் பல ஆண்டுகள் யோக நிட்டையில் அமர்ந்தார். இறைவன் தந்த ஆகமப் பொருளை, இறைவன் திருவருளால், திருமந்திரம் என்கின்ற ஒப்பற்ற தமிழ் வேதமாம் மூவாயிரம் பாடல்களில் பாடினார். இந்த மூவாயிரம் பாடல்களை ஆண்டுக்கு ஒரு பாடலாகப் பாடினார் என்று கர்ண பரம்பரையாக வந்த செய்தியையும் சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் குறிப்பிடுகின்றார். இறுதியில் இறைவனுடன் இரண்டறக் கலந்தார் என்பது வரலாறு.

**''ஊனுடம்பிற் பிறவி விடந் தீர்த்துலகத் தோர்உய்ய**
**ஞான முதல் நான்குமலர் நல்திருமந் திரமாலை''** (பா. 26)

என்பது சேக்கிழார் வாக்கு. நலம் சிறந்த ஞான யோகக் கிரியா சரியையெல்லாம் அழகிய தமிழில் வழங்கிய திருமூலதேவநாயனார் மலர்க்கழல்களை வணங்கித் தொடங்குவோம்.

திருமூலர்பெருமான் அருளிச் செய்த திருமந்திர மணிமாலை எனப்படும் நூல் சைவத் திருமுறைகளில் பத்தாம் திருமுறையாகச் சைவப்பெருமக்களால் போற்றப்படுகிறது. ஆனால், முன்னமே கூறியதுபோல் திருமூலர் எந்தக் காலத்தவர் என்று ஆராய்ச்சியாளர் இன்னும் தெளிவாக முடிவு செய்யவில்லை. கி.பி.8 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனார் ''நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்'' என்று குறிப்பிடுகின்றார். இவருக்கு முந்திய நாவுக்கரசரோ, ஞான சம்பந்தரோ திருமூலரைப் பற்றிக் குறிப்பிடவில்லை. இந்தக் கணக்கில் சிலர் நாவுக்கரசருக்குப் பின்பும், சுந்தரமூர்த்தி நாயனாருக்கு முன்பும் திருமூலர் வாழ்ந்து இருந்ததாகக் கொள்வர். இதைப் பற்றிய முடிவான சான்றுகள் இல்லை. ஆனால் தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு வாழ்ந்த

தலைசிறந்த யோகிகள், சித்தர்கள் போன்றவர்களுடைய சாதனைகளில் நம்பிக்கையும் பற்றும்கொண்ட பெரியவர்கள், திருமூல நாயனார் 5,000 ஆண்டுகளுக்கு முன்னரே வாழ்ந்தார் என்றும், 3000 ஆண்டுகளுக்கு மேல் யோக நிலையில் ஒரே உடலைப் பற்றி நின்றனர் என்றும் கூறிப் போற்றுவார்கள்.

திருமந்திரத்தில் பாயிரம் என்கின்ற பகுதியில் திருமூல நாயனார் தனது வாழ்க்கை வரலாற்றின் சில பகுதிகளைக் குறிப்பிடுகின்றார். சிவபெருமானின் அருள்பெற்ற நந்தி தேவரைக் குருநாதராகக் கொண்ட சனகர், சநந்தனர், சநாதனர், சனற்குமாரர், சிவயோகமாமுனி, பதஞ்சலி, வியாக்கிரமர் என்கின்ற எழுவருடன் தானும் ஒருவரென்று அவர் கூறிக் கொள்கிறார். இந்த எட்டுப்பேர்களும் நந்தி அருளாலே நாதன் எனும் பெயர் பெற்றனர். சைவத்தின் மேன்மையை விளக்கவும், சிவவழிபாட்டினைப் பரப்பவும், நமது புனித நாட்டின் பல பகுதிகளுக்குச் சென்றனர். இறப்பைப் பற்றியும், பிறப்பைப் பற்றியும், சிவபரம்பொருளின் பெருமையைப் பற்றியும், சிவபெருமானை அடைவதற்கான பாதைகளைப் பற்றியும் தங்கள் அனுபவத்தின் மூலமும், இறைவனிடமிருந்து தாங்கள் பெற்ற உபதேசத்தின் அடிப்படையிலும் எட்டுத் திசைகளிலும் சென்று, தங்கள் பணியை நேரிடையாகவும் மாணாக்கர் வழியாகவும் நிறைவேற்றியதாகவும் திருமூலர்பெருமான் சுட்டிக்காட்டுகின்றார்.

திருமூலர் இறை அனுபவம் முற்றிலும் பெற்ற ஓர் ஒப்பற்ற யோகியாவார். இறைவனைப் புறத்திலும் அகத்திலும் வழிபட்டு, தனது யோகத்தின் வலிமையாலும், தவத்தின் சாதனையாலும் எங்கும், எவ்வுலகிலும் காணப்படும் பரம்பொருளைத் தம்முள் கண்டவராய் இறை அனுபவம் நிறைந்தவராகத் திகழ்கிறார். திருவருள் அவருக்கு இட்ட பணி, மக்களிடையே சைவத்தையும், ஆன்மிகத்தையும் பரப்புவதாகும். இதற்காகவே பூவுலகில் எண்ணற்ற ஆண்டுகள் திருமூலர் வாழ்ந்திருந்தார்.

**''செப்புஞ் சிவாகமம் என்னும் அப் பேர்பெற்றும்**
**அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றுத்**
**தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்**
**ஒப்பில் எழுகோடி யுகம் இருந் தேனே''.** **(திருமந்திரம் .. 74)**

இறைவன் அருளைப் பெற்ற திருமூலர் எண்ணற்ற ஆண்டுகள் இவ்வுடம்பினில் தங்கியிருந்ததற்குச் சான்றாகப் பின்வரும் மந்திரத்தை எடுத்துக் கொள்ளலாம்.

**''இருந்தேன்இக் காயத்தே எண்ணிலி கோடி**
**இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே**
**இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே**
**இருந்தேன் என்நந்தி இணையடிக் கீழே''.** **(திருமந்திரம் ..80)**

எண்ணற்ற ஆண்டுகள் ஒருவர் ஒரே உடலில் வாழ முடியுமா என்கிற ஐயப்பாடு எழுகிறது. அவ்வாறு எழுவதில் வியப்பு ஒன்றும் இல்லை. ஆனால், திருமூலர் பெருமான் போன்ற சித்தர்கள் எழுதியுள்ள பாடல்களின் உட்கருத்தைப் புரிந்து கொண்டாலன்றி, வெளிப்படையாக மட்டும் பார்த்து விளக்கம் பெறுவது கடினம். நமக்கு உண்மை கிடைக்காது.

திருமூலர் இறை உணர்வு முழுமையாகப் பெற்ற ஒரு அருளாளர் ஆவார். பல ஆண்டுகள் சிவபோகத்தில் ஆழ்ந்து நின்றார். அவரது திருவுள்ளத்திலிருந்து வெளிவந்த மந்திரங்கள் அவருடைய இறை நிலையைப் பிரதிபலிக்கின்றன. இறைவனுடன் இரண்டறக் கலந்த உயிரின் இருப்பிடம் திருவருளேயாகும். அதற்கு இரவு பகல், இறப்பு பிறப்பு என்பது இல்லை. அத்தகைய உயிரின் நிலை உடலைச் சார்ந்த அனுபவங்களுக்கு அப்பாற்பட்டதாகும். திருமூலரைப் போன்ற யோகியர்களைச் சித்தர்கள் எனக் குறிப்பிடுகிறோம். அறிவு, அறியாமை என்று நாம் அன்றாட வாழ்வில் குறிப்பிடுகின்ற நிலைகளைக் கடந்து, இறைவனுடைய திருவருளால் பெற்ற பேரறிவில் இவர்கள் ஊன்றி நிற்பார்கள்.

திருமூலருடைய சுயானுபவம், சிவானுபவம் மேலும் வெளிவருகிறது:

**''நந்திஅரு ளாலே மூலனை நாடிப்பின்**
**நந்திஅரு ளாலே சதாசிவ னாயினேன்**
**நந்திஅரு ளால் மெய்ஞ் ஞானத்துள் நண்ணினேன்**
**நந்தி அருளாலே நானிருந் தேனே''.**

**(திருமந்திரம் ... 92)**

இந்த மந்திரத்தின் உட்கருத்து, மூலன் என்று பெயர் பெற்ற சிவயோகியார் நீண்ட காலம் இறைவனை நாடித் தீவிர யோக நிலையில் நின்றார். தன்னுள் இருக்கும் மூலாதாரச் சக்தியினைக் கட்டுப்படுத்தி, மேற்கெழுத்தி, சாதாரண வாழ்க்கையின் அடிப்படைப் பற்றுக்களை நீக்கி, இறைவன் அருளால் ஞான விளக்கம் பெற்று, நானென்றும், தானென்றும் காணப்படும் வேற்றுமையை ஒழித்துச் சிவசக்தியுடன் இரண்டறக் கலந்தார் என்பதேயாகும்.

திருமந்திரத்தில் ஆழச் சென்று திருமூலர் பெருமானுடைய வரலாற்றை நாம் பார்த்தோமென்றால் பெரிய புராணத்தில் காணப்படும் நிகழ்ச்சிகளின் உண்மை நிலை நம் கண்களுக்குப் புலப்படத் தொடங்குகிறது. உண்மையில், மாதவம் செய்த சிவயோகியார் கூடு விட்டுக் கூடு பாய்ந்து மூலன் உடலில் நுழைந்திருக்க வேண்டியதில்லை. உண்மை என்னவென்றால் சிவயோகியார் யோகத்தின் தொடக்கக் கட்டத்தில் தன்னுடைய மூலாதாரக் கனலை எழுப்பினார். தன்னைச் சுற்றியுள்ள உயிர்களின், ''பசுக்களின்'' தளையைப் படிப்படியாக அறுத்துக் கொண்டார். பல ஆண்டுகள் தவமிருந்து மெய்ஞ்ஞானம் பெற்றார். இறைவனுக்கும் உயிருக்கும் இடையே நிற்கும்

பாசத்தளை அகன்ற பின் சிவபெருமானின் பூரண அருள் பெற்று, வேற்றுமை எண்ணங்கள் நீங்கிப்பற்றற்றவராக, இறையுணர்வை முழுமையும் பெற்றவராக, தான் பெற்ற இன்பத்தை இவ்வையகத்து வாழ்வாங்கு மாந்தர் அனைவரும் பெறும்பொருட்டுத் திருமந்திர மணிமாலையை அருளிச் செய்தார். அவர் இந்தச் சாதனையைச் செய்வதற்கு உறுதுணையாக இருந்தது திருவருளேயாகும். திருவருள் காரணமாக அவர் போதிய வலிமை பெற்றார். அவருடைய ஆழ்ந்த தவத்தில் உருவான ஆன்மிகச் சிந்தனைகளை ஒப்பற்ற தமிழ் மொழியில் அவர் உலகுக்கு எடுத்துக்காட்டப் பரம்பொருளே உதவியது. ஐயமில்லை எனத் திருமூலர் பெருமான் ஆழ்ந்த நன்றியுணர்வுடன் தெரிவித்துக் கொள்கின்றார். இதற்குப் பின்வரும் திருமந்திரமே சான்று.

**''பின்னைநின் றென்னே பிறவி பெறுவது**
**முன்னைநன் றாக முயல்தவம் செய்கிலர்**
**என்னைநன் றாக இறைவன் படைத்தனன்**
**தன்னைநன் றாகத் தமிழ் செய்யுமாறே''.** **(திருமந்திரம் - 152)**

ஒருவனை இறைவன் படைத்தால் மட்டும் போதாது. நன்றாகப் படைக்க வேண்டும், இறைவனுடைய அருள் மழை பொழிவதற்கான தகுதி பெற பல நற்பணிகளையெல்லாம் ஏராளமான பிறப்புகளில் செய்திருந்த உயிரே இறைவனுடைய பெருமையைப் பிறருக்கு எடுத்துச் சொல்லக்கூடிய ஆற்றலைத் திருவருளால் பெறுகிறது. உண்மை விளக்கம் கிடைக்கின்றது. அறியப்பட வேண்டிய ஒன்று உள்ளத்திலே ஞாயிறு போன்று உதிக்கின்றது. அறியாமை அகலுகின்றது. மாயையின் உட்பொருள் பற்றித் தெளிவு ஏற்படுகிறது. சிவபெருமானின் திருவருளால் திருமூலருடைய உள்ளத்தில் கிடைத்த சகல விளக்கங்களும் திருமந்திரத்தில் காணப்படுவதாகத் திருமூலர் தெரிவிக்கின்றார். அந்த நிலையில் திருவருள் உள்ளத்தில் பதியத் தொடங்குகிறது. அறிய வேண்டியவை, அறிய வேண்டாதவை போன்றவற்றைப் பற்றிய சரியான உணர்வுகள் உள்ளத்திலே எழுகின்றன. குழப்பங்கள் நீங்குகின்றன. உயிரானது தன்னை நோக்குகின்றது. தன்னை அறியாமையில் கிடத்திய மாயையின் விளக்கம் கிடைக்கின்றது.

**''ஞேயத்தை ஞானத்தை ஞாதுரு வத்தினை**
**மாயத்தை மாமாயை தன்னில் வரும்பரை**
**ஆயத்தை யச்சிவன் தன்னை யகோசர**
**வீயத்தை முற்றும் விளக்கியிட் டேனே''.** **(திருமந்திரம் ... 90)**

சான்றோர் பெருமக்கள் திருமூலரைக் கைலாய பரம்பரையினர் என்பர். சிவபெருமான் திருவடிகளில் உள்ளத்தை வைத்து, சிவயோகம் புரிந்து, சிவமாம் தன்மை பெற்று, பூவுலகில் சிவலோக நிலையைப் பெற்று வாழ்ந்தார் என்பது இதன் பொருளாகும்.

திரு.வி.க. அவர்கள் திருமூலரைப் போன்ற பல சித்தர்கள் இன்னும் நம்மிடையே வாழ்கின்றார்கள் என்று பொருள்படக் குறிப்பிட்டார். கைலாய மலையின் அடித்தலத்திலே மட்டும் பூத உடலில் அவர்கள் வாழவில்லை என்றும், அம்மலைக்கு மேலே சிவபெருமானோடு என்றுமே அருகிலிருந்து கொண்டு உண்மை விளக்கங்களை அவ்வப்பொழுது மக்களுக்குத் தந்து வரும் பிறப்பும் இறப்புமற்ற வாழ்வுடையவர்களாக வாழ்ந்து வருகின்றார்கள் என்றும் திரு.வி.க. அவர்கள் விளக்கம் தந்துள்ளார்கள். கருணை நிரம்பிய உள்ளங்கள் உடையவர்கள் இறைவனுக்கு ஒப்பானவர்கள். அவைகள் இறைவனுடைய இருப்பிடங்கள். திருவருள் முழுமையாக அவர்களுடைய உள்ளத்தில் பதிந்து, அவர்களை வழிநடத்திச் செல்கிறது. பெருங்கருணை கொண்ட இறைவன் உயிர்கள் உய்விக்கும் பொருட்டு அவர்களுக்கு உடலையும், உடலைச் சார்ந்த அனுபவங்களையும் கொடுத்து அவர்களுடைய அறியாமையைத் தனது திருவருட் சக்தியால் நீக்கி, அவர்களுக்குத் தன்னுடைய திருவடிகளைக்காட்டி, ஒப்பற்ற இறை அனுபவத்தை நல்கி, மட்டில்லா மகிழ்ச்சியை அளித்து அருள்மழை பொழிகின்றான். இதுவே களிம்பறுத்தல் எனப்படும்.

**''விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு**
**தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து**
**உண்ணின் றுருக்கியொ ரொப்பிலா ஆனந்தக்**
**கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே''.**

**(திருமந்திரம் - 113)**

திருமூலர் பெருமானைப் போன்ற யோகிகள் மரணம் இல்லாப் பெருவாழ்வு பெற்றவர்கள் என்று கூறப்படுகின்றது. சித்தர்கள் உடலை ஒரு கருவியாகக் கொண்டு இப்பிறவியில் அவ்வுடலினில் புகுந்து உயிரினது குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக, உடம்பினை வளர்த்து, யோகத்தின் சிகரத்தை எட்டி, தெளிந்த அறிவு பெற்றவர்களாகத் தாம் பெற்ற அனுபவத்தை மக்களுடன் பகிர்ந்து கொள்கின்றார்கள். உயிரின் சாதனைக்கு உடம்பு இன்றியமையாதது. உயிரை வளர்க்க உடம்பைப் பேண வேண்டும். வாழ்நாட்களை வீணாக்கக் கூடாது. ''போது சடக்கெனப் போகின்றது'' ஆண்டுகள் கழிகின்றன. கற்பனை குறுகுகிறது. அப்பனை நம் இதயத்தில் அமர்த்திப் போற்ற வேண்டும். எனவே, சித்தர்கள் உடம்புக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள்.

**''உடம்பார் அழியில் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவுமாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே''.**

**(திருமந்திரம் 724)**

"உடம்பினை முன்னம் இழுக்கென்றி ருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண் டான்என்
றுடம்பினை யானிருந் தோம்பு கின்றேனே". (திருமந்திரம் 725)

திருமூலர் சித்தருக்கெல்லாம் தலைவர் ஆவார். முடிவான முடிவைக் கண்ட ஓர் தலைசிறந்த ஞானி. அவர் போன்றவர்கள் கண்ட முடிவு முழுமையானதாகும். மனத்தின் எல்லைக்கு அப்பாற்பட்ட ஓர் உண்மையை உணர்ந்தவர் சித்தர் ஆவார். அது ஒரே உண்மையாகத்தான் இருக்க முடியும். பல உண்மைகளாக இருக்க முடியாது. இருப்பதற்கு நியாயம் இல்லை. உண்மை ஒன்றே. எல்லாம் ஒருவனே என்பதுதான் சித்தர்கள் கண்ட உண்மையாகும். சித்தர்கள் போதிப்பது சித்தாந்தம். அத்துடன் சிவத்தையும் சேர்த்துக் கொண்டால் நமக்குக் கிடைப்பது சைவசித்தாந்தம். அதாவது சித்தர்கள் சிவமெனும் பரம்பொருளை அனுபவித்துத் தங்கள் உணர்வினை வெளியிடுகிறார்கள். இருவினைக்கு அப்பால் நிற்கும் இறைவனை, பேரின்ப நிலையை, அன்பின் வடிவை, படைத்தல், காத்தல், அழித்தல், அருளல் போன்ற தொழில்களையெல்லாம் புரியும் தேவர்களுக்கு அப்பாற்பட்ட ஓர் உண்மையை, இப்பிரபஞ்சத்திற்கு ஆதாரமாய், பிரபஞ்சமாய், எல்லாவற்றிற்கும் காரணமாய், எல்லாவுமாய் விளங்குகின்ற ஒருவனை, மனத்திற்குள் உணர்ந்து, அவனுடைய தன்மையை விளக்கி, அவனை அடையும் வழிகளை உலகிற்கு எடுத்துக்காட்டுவதே சைவ சித்தாந்தமாகும். இதைச் சித்தர்களின் தலைவராகிய திருமூலர் திருமந்திரத்தில் ஒன்பது தந்திரங்களில், முப்பது உபதேசங்களில், 300 மந்திரங்களில், 3000 தமிழில் நமக்கு அளிக்கின்றார்.

சித்தர்களைப் பற்றி நாம் மேலும் சற்றுச் சிந்திக்க வேண்டும். சித்தர்கள் பரிபூரண சித்திக்கு, சிவமுத்திக்கு வழிகாட்டும் இறையுணர்வாளர்கள் ஆவார்கள். சித்தர்கள் படிப்பினால் மட்டும் அறிவினை வளர்த்து, தத்துவங்களிலே மூழ்கியவர்களாக, ஆன்மிகத்தை ஏட்டளவிலே புரிந்து கொண்டு, அதைப் பேசிப் பேசி, பிறரை மயக்குபவர்கள் அல்லர். அவர்கள் பேரறிவு பெற்றவர்கள். ஜீவன் முக்தர்கள். இவ்வுலகிலும் இறையுணர்வோடு கலந்து வாழ்பவர்கள். அவர்களுடைய உள்ளத்தில் சுத்த சிவம் எங்கும், எப்பொழுதும் தோய்ந்து நிற்கின்றான். அதன் காரணமாக அவர்கள் உள்ளத்தில் அன்பும் கருணையும் ஆற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓட, மக்களிடையே பாமரராகக் கலந்து, வாழ்ந்து, அவர்களுடைய இன்ப, துன்பங்களைத் தாமே ஏற்று, அவர்களுடைய வாழ்வில் சரியான இறை நெறியைப் போதித்து, நல்வழியில் நடத்திச் செல்ல எத்தனை தியாகம் செய்ய வேண்டுமானாலும் அதனைச் செய்யத் துணிந்து நிற்பவர்கள். சித்து அசித்து, உண்மை இன்மை, வித்தை அவித்தை, அறிவு அறியாமை, இன்பம் துன்பம், இவற்றிற்கான வேறுபாடுகளை நன்குணர்ந்து, உள் தெளிந்து, திருவடியே தஞ்சமெனப்பெற்று, பிறப்பையும் இறப்பையும் வளர்க்கும் மும்மலங்களின்

ஆட்டங்களிலிருந்து விடுபட்டு என்றும் மனத்தினுள்ளும், புத்தியிலும் இறைவனுடன் கலந்து, நான் என்ற நினைவு மறந்தவர்களாக வாழ்பவர்கள் சித்தர்கள் ஆவார்கள். திருமூலர் பெருமான் ''சித்தர் சிவலோகம் இங்கே தரிசித்தோர்'' என்கின்றார். முதன்மைக் கடவுளுடைய விளக்கம் நாதம். அந்த நாதத்தின் முடிவைத் தம்முள் உணர்ந்து, குற்றமற்ற தூய்மையான இன்பத்தில் எல்லாத் தத்துவங்களுக்கும் அப்பாற்பட்ட நிலையிலிருப் பவர்கள் சித்தர்கள் ஆவார்கள். திருமந்திரம் கூறுவதாவது:-

**''சித்தர் சிவலோகம் இங்கே தரிசித்தோர்**
**சத்தமுஞ் சத்த முடிவுந்தம் முள்கொண்டோர்**
**நித்தர் நிமலர் நிராமயர் நீள்பர**
**முத்தர்தம் முத்தி முதல்முப்பத் தாறே''.** (திருமந்திரம் 125)

மேலும், ஐம்பொறிகள் வழியாகக் கிடைக்கக்கூடிய அனுபவங்களில் மக்கள் மயங்கி நிற்கும்பொழுது அந்தச் சிற்றறிவினை ''ஆமேவு பால் நீர் பிரிக்கின்ற அன்னம்போல்'' பேரறிவிலிருந்து பிரித்து, பிறவிக்குக் காரணமான கன்ம நிலையிலிருந்து விடுபட்டவர்களாகத் தவயோகத்துள் புகுந்து தன்னொளி பெற்றுப் பரம்பொருள் உலகெங்கும் தானான உண்மை நிலையினைத் தம்முடைய பெருவெளியிலேயே உணர்ந்தவர் சித்தர்கள் ஆவர். வாழ்வையும், வாழ்வு தரும் அனுபவத்தையும், அதே நேரத்தில் அவர்கள் தள்ளிவிட மாட்டார்கள். ஆனால், அவற்றையே இறைவனின் தன்மையை வெளிக்காட்டும் ஏணியாக மாற்றி, படிப்படியாக ஏறி, ஒப்பில்லாத ஆனந்தத்தைத் தம்முள் பெற்று, விவரிக்க இயலாத இறை நிலையைத் தம்முள் கண்டு அனுபவித்து இன்புற்று வாழ்கின்றார்கள். இதைத் திருமூலர் எவ்வளவு தெளிவாகக் கூறுகின்றார் என்று பாருங்கள்:

**''முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்**
**ஒப்பிலா ஆனந்தத் துள்ளொலி புக்குச்**
**செப்ப அரிய சினங்கண்டு தான்தெளிந்**
**தப்பரிசாக அமர்ந்திருந் தாரே''.** (திருமந்திரம் 126)

தம்முள் சிவத்தை இவர்கள் கொண்டிருப்பதாலும், சிவமெனும் பரம்பொருள் எங்கும் நிறைந்திருப்பதாலும் இவர்களும் எங்கும் இருப்பர். எல்லாம் இறைவன் செயல் என்பதை எப்பொழுதும் மனத்திற் கொண்டிருப்பர். காலத்திற்கு அப்பாற்பட்ட இறைவனுடனே அவர்கள் கலந்து இருப்பதால், முக்காலத்தின் இயல்பையும் அவர்கள் நன்குணர்ந்தவர்களாகின்றனர். இந்த நிலையில் இருக்கும் சித்தர்களின் தன்மையை **''இழவு வந்து எய்திய சோம்பே''** என்கின்றார் திருமூலர்.

தன் நினைவு இழந்த நிலை இழவாகும். சோம்பல் என்பது பந்த பாசங்கள் நிறைந்த மனம் ஒடுங்கி இறைவனுடன் முழுதும் கலந்த நிலையில் விலகிச் சும்மா இருத்தல் ஆகும். உடலைச் சார்ந்த கருவிகளின் இயக்கம்

ஒய்வடைகிறது. உள்ளத்தின் இயக்கம் தொடங்குகிறது. தெய்வீகம் நிரம்பிய திருமந்திரம் பின்வருமாறு:-

**"இருந்தார் சிவமாகி எங்கும் தாமாகி**
**இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி**
**இருந்தார் முக்காலத் தியல்பைக் குறித்தங்கு**
**இருந்தார் இழவுவந் தெய்திய சோம்பே".** **(திருமந்திரம் 127)**

சித்தர்கள் தம் வாழ்நாள் முழுவதும் தங்களுடைய மனவெளியிலே இறைவனுடைய எண்ணம் கலந்தவராக இருந்து கொண்டே இருப்பர். ஐம்பொறிகளால் தூண்டப்படும் உணர்ச்சிகளை முழுமையாக அடக்கியவர்களாக, தான் என்கின்ற ஆணவ மலத்தின் காரணமாக இயங்கும் தன்மையை அறவே ஒழித்துக்கிடப்பவர்கள் சித்தர்கள். எண்ண அலைகள் படிப்படியாகக் குறைந்து ஒடுங்கிய மனநிலையில் முழுமுதற் கடவுளின் தன்மையாகிய ஒலியினைத்தம்முள் அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். அவர்களுடைய சஞ்சாரம் உடம்பின் கருவிகளுக்கு அப்பால் நடைபெறுகிறது. அதுவே தூங்காமல் தூங்கும் சுகமாகும்.

**"சோம்பர் இருப்பது சுத்த வெளியிலே**
**சோம்பர் கிடப்பதுஞ் சுத்த வெளியிலே**
**சோம்பர் உணர்வு சுருதி முடிந்திடஞ்**
**சோம்பர் கண்டாரச் சுருதிக்கண் தூக்கமே".** **(திருமந்திரம் 128)**

தூக்கம் என்பது வெறும் கண் உறங்குதல் மட்டுமல்ல. உறங்குதல் உடலைப் பற்றியது. உறங்கும்பொழுது உடலைப் பற்றிய கருவிகள் ஒய்வு பெறும். ஆனால், சித்தர் அடையும் நிலையில் மனமும் ஒடுங்கி, சித்தமும் உறங்கி இறைவனின் உணர்வு இதயத்தில் தங்குகின்றது. அந்த நிலையைத் தாயுமானவர் **"தூங்காத தூக்கமது தூக்கும் பராபரமே"** என்று அழகாக வருணிக்கிறார். அந்த நிலையில் சித்தர் இறைவனுடைய திருவருள் அமுதத்தைத் தம்முள்ளேயே பெறுகின்றார். மனமும் சித்தமும் ஆகிய அந்தக் கரணங்களும், மற்ற கருவிகளும் ஒடுங்கியிருத்தல் காரணமாக ஒப்பற்ற யோக நிலையில் இருக்கின்றனர். அந்த நிலையின் விளைவாகத் தம்முள் பேரின்பத்தை அனுபவிக்கின்றார்கள். அந்த நிலையை விவரிக்கவும் இயலுமா?

**"தூங்கிக்கண் டார்சிவ லோகமும் தம்உள்ளே**
**தூங்கிக்கண் டார்சிவ யோகமும் தம்உள்ளே**
**தூங்கிக்கண் டார்சிவ போகமும் தம் உள்ளே**
**தூங்கிக்கண் டார்நிலை சொல்வதெவ் வாறே".**

**(திருமந்திரம் 129)**

திருமூலர் அந்த நிலையைப் பெற்றிருந்தார் என்பது பல மந்திரங்களில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. உள்ளமாகிய ஆணிப்பொன்மன்றத்தில்

இறைவனுடைய பேரொளியை எப்பொழுதுமே காண்கின்றார். இறையறிவும், இறை ஆற்றலும் சேர்ந்து திருக்கூத்து நடைபெறும் இடமாக அவருடைய உள்ளம் அமைகின்றது. இதையே பொதுமன்றம் என்று சித்தர் வழங்குவர். தம்முள் இந்த ஒலி, ஒளி, அசைவுகளைச் சித்தர்கள் அனுபவிக்கும்பொழுது பல வண்ணங்களின் எழில்களாகத் தரிசிக்கின்றனர். அவற்றைத் தரிசித்து, தொழுது அவர்கள் பெறும் பேறு எத்தகையது என வெறும் சொற்களால் விவரிக்க இயலாது.

**"மாணிக்கத் துள்ளே மரகதச் சோதியாய்**
**மாணிக்கத் துள்ளே மரகத மாடமாய்**
**ஆணிப்பொன் மன்றில் ஆடுந் திருக்கூத்தைப்**
**பேணித் தொழுதென்ன பேறுபெற் றாரே." (திருமந்திரம் - 131)**

சித்தாந்தம் என்பது சித்தர்களுடைய அந்தமாகும். அதாவது சித்தர்கள் கண்ட முடிவான முடிவாகும். வேதத்தின் முடிவை வேதாந்தம் என்கின்றோம். நாதத்தின் முடிவு நாதாந்தமாகிறது. போதாந்தம் என்பது அறிவுக்கறிவு அல்லது பேரறிவாகும். சித்தர்கள் கண்ட உண்மை சித்தாந்தமாகும். இன்னும் சற்று சிந்தித்தால், சித்தர்களைச் சமயங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் என்றும் எடுத்துக் கொள்ளலாம். சமயங்களுடைய முடிவாக நிற்கும் உண்மையை அவர்கள் அறிந்தவர்கள் ஆவார்கள். சமயக் கருத்துகள் ஒருவேளை இந்த உண்மையைப் போதிக்கலாம். ஆனால், முக்கியம் அதுவல்ல. சித்தர்கள் இந்த உண்மையைத் தம்முள் உணர்ந்தவர்கள் என்பதுதான் முக்கியமாகும். பாமர மக்கள் சமயக் கோட்பாடுகளைப் பின்பற்றும்பொழுது பெரியவர்கள் விட்டுவைத்துப் போயிருக்கின்ற வழிபாடுகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் தங்களுடைய வாழ்வு இம்மையிலும், மறுமையிலும் நன்கு அமையுமென்கின்ற நம்பிக்கையுடன் சமயத்தின் அடிப்படையில் நாட்டம் கொள்கின்றார்கள். ஆனால், சித்தர்கள் அத்துடன் நின்றுவிடுவதில்லை. சமயக் கோட்பாடுகளுக்கு அப்பாலும், அவற்றின் உள்ளும் புறமும் இருக்கக் கூடியவற்றை ஆராய்ந்து பார்க்கக்கூடிய ஆன்மிக வலிமையைத் தங்கள் தவத்தாலும், யோகத்தாலும், அறத்தாலும் பெறுகின்றார்கள். அந்த வலிமையைப் பெற்றவர்கள் உண்மையை நோக்குகின்றார்கள். உண்மை அவர்களுக்கு வெளிப்படும் போது தெளிந்த நிலையை அடைகிறார்கள். சில நேரங்களில் அவர்கள் பேசாது இருந்து விடுகிறார்கள். உணர்ந்த பிறகு, மீண்டும் உலகத் தொடர்பைப் பெற்று, தாம் அனுபவித்த உண்மையைப் பிறருக்கு எடுத்துக் கூறுகின்றார்கள். அல்லது மறைமுகமாகச் சொல்லுகின்றார்கள். புகழ்பெற்ற விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் அவர்கள் ''நாம் பேசும் மொழிகளால் ஆன்மிக உணர்வுகளை விளக்க இயலாது'' என்று கூறினார். அதே நிலையில்தான் சித்தர்களும் இருக்கின்றனர். சமயக் கோட்பாடுகளுக்கு உட்பட்டுத்தத்துவ விவாதம் செய்து ஒரு தத்துவத்தை மற்றொரு தத்துவத்திற்கெதிராக நிலைநாட்ட வேண்டுமென்பது

அவர்களுடைய கொள்கையல்ல. அவ்வாறு விவாதங்களில் ஈடுபடுபவர்களைப் பற்றிப் பெரிதாக அவர்கள் எண்ணுவதில்லை.

**"இத்தவம் அத்தவம் என்றிரு பேரிடும்**
**பித்தரைக் காணின் நகுமெங்கள் பேர்நந்தி**
**எத்தவ மாகிலென் எங்குப் பிறக்கிலென்**
**ஒத்துணர் வார்க் கொல்லையூர் புகலாமே". (திருமந்திரம் 1543)**

எல்லாச் சமயங்களும் உடல், உயிர், உலகம் ஆகியவற்றிற்கு அடிப்படையாக நிற்கும் பரம்பொருளையே அறிந்து கொள்ள முயலுகின்றன. அறிஞர்கள் சிறு சிறு தத்துவங்களை முன்னிறுத்தி அவற்றையே தலையாயதாகக் கொண்டு மற்றத் தத்துவங்களில் குறைகளைக் காண முயலுகின்றனர். கற்றறிந்த தத்துவ சமயக் கோட்பாடுகளின் மூலமாகத் தாங்கள் உண்மை எல்லாவற்றையும் அறிந்து விட்டதாக நினைத்துக் கொள்கின்றனர். இவர்கள் எல்லோரையும் திருமூலர் தெளிந்த நிலை அற்றவர்களே என்று கூறுகின்றார். உள்நின்ற பரம்பொருளைப்புறத்தே காண முயலும் தத்துவவாதிகள் மாயைக் குழியில் விழுந்தவராகக் கருதப்படலாம். மெய்யுண்மையை உணர்ந்த சித்தர்கள் இறைவனைத் தம்முள்ளேயே காண்கின்றார்கள். திருமந்திரம் கூறுவதைக் கேளுங்கள்:

**"ஆயத்துள் நின்ற அறுசம யங்களும்**
**காயத்துள் நின்ற கடவுளைக் காண்கிலா**
**மாயக் குழியில் விழுவர்; மனைமக்கள்**
**பாசத்தில் உற்றுப் பதைக்கின்ற வாறே". (திருமந்திரம் - 1530)**

**"ஆறு சமயமுங் கண்டவர் கண்டிலர்**
**ஆறு சமயப் பொருளும் அவனலன்**
**தேறுமின் தேறித் தெளிமின் தெளிந்தபின்**
**மாறுதல் இன்றி மனைபுகலாமே". (திருமந்திரம் - 1533)**

சித்தர்கள் அடையும் நிலை பாசத்தைக் கடந்த நிலையாகும். மனம், வாக்கு, காயத்தால் மூளும் வல்வினையைக் கடந்த இடமாகும். எல்லாம் தெரியும் அறிவுதனை அறிந்த பிறகு சித்தர்கள் தங்களுடைய சாதனையைப் பற்றிப் பேசிப் பேசி பிதற்றிக் கொண்டிருப்பதில்லை. பேரளவில் விஷயம் தெரிந்த பகுதியறிவு பெற்றவர்களே மூச்சை அடக்குதல் பற்றியும் குண்டலினி போன்ற சக்தியைப் பற்றியும் பேசி மக்களை ஈர்க்கப் பார்க்கின்றார்கள். ஆனால், உண்மையின் தன்மையை அறிந்து, ஐம்புலன்களை ஒடுக்கி நிற்கும் சித்தர்கள் இவ்வாறு பேசிப் பயனில்லை என்பதை அறிந்தவர்கள். இந்த உணர்வினைத் திருமூலர் பெருமான் பின்வரும் மந்திரத்தால் நம்முடன் பகிர்ந்து கொள்கின்றார்.

**''வாசியு மூசியும் பேசி வகையினால்**
**பேசி யிருந்து பிதற்றிப் பயனில்லை**
**ஆசையும் அன்பும் அறுமின் அறுத்தபின்**
**ஈசன் இருந்த இடம் எளிதாமே.''** **(திருமந்திரம் - 2613)**

பிறவிப் பயன் முழுவதையும் பெற்றடைந்து, தான் பெற்ற பேரறிவின் பயனாக எஞ்சி நிற்கும் கன்மங்களையெல்லாம் முடித்துக் கொண்டு மேல்வரும் வினை தன்னை நெருங்காதவண்ணம் தூய வாழ்வினை மேற்கொண்டவர்களாயும் இறைவனுடைய அருள் எப்பொழுதும் தங்க ளோடு இணைந்து விளங்கும் நிலையைப் பெற்றவர்களாயும் சித்தர்கள் வாழ் கின்றார்கள். அப்பேர்ப்பட்ட பெருமக்களைத் தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள் என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். இறைவனுடைய அருளும் சித்தர்களுடைய ஆற்றலும் பின்னி நிற்கும் நிலை சித்தர் நிலையாகும்.

**''தன்னை யறிந்திடும் தத்துவ ஞானிகள்**
**முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பர்கள்**
**பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்**
**சென்னி'பில் வைத்த சிவனரு ளாலன்றே''** **(திருமந்திரம் - 2611)**

இது அமைதியில் ஒடுங்கும் நிலையாகும். தம்முள் இருக்கும் சக்தியை அறிந்தவர்களுக்கு மலமில்லை, மாசில்லை, மான அபிமானமில்லை, குலமில்லை, உயிர்களுடன் பற்றி நிற்கும் குண விசேஷங்களும் இல்லை. நலனில்லை, கேடில்லை, பிரம்மன் போன்ற கோடிக்கணக்கான தேவர்கள்கூட பாசத்தால் கட்டப்பட்ட நிலையும் இல்லை. சித்தர்கள் நிலை கடவுள் நிலையாகும். இறைவனுடன் பொருந்திய பிறகு கிடைக்கக்கூடிய நிலை இது. இந்த நிலையில் இருந்த திருமூலர்.

**''ஒழிந்தேன் பிறவி யுறவென்னும் பாசங்**
**கழிந்தேன் கடவுளும் நானுமொன் றானேன்**
**அழிந்தாங் கினிவரு மாக்கமும் வேண்டேன்**
**செழுஞ்சார் புடைய சிவனைக் கண்டேனே''.**
**(திருமந்திரம் - 2958)**

என்கிறார்.

மக்கள் அன்றாட வாழ்வில் உலகத்தோடு இணைந்து வாழ முற்படுகின்றார்கள். அவ்வழியாக இன்பமடையப் பார்க்கின்றார்கள். இதில் வியப்பொன்றில்லை. பிறந்த பிறகு சமூகத்தினருடன் ஒத்து வாழ்தல் மூலமாகக் கிடைக்கக்கூடிய பயன்களைப் பெற்றுத் தீர்வதற்கே சீவன் முற்படு கிறது. அவ்வாறு இல்லாவிடில் பிறப்பின் நோக்கம் நிறைவேறாது. ஆனால், அதன் நிலையில் என்றுமே இன்பத்தைத் தொடர்ந்து பெற்றிருக்க முடியாது. இன்பமும் துன்பமும் மாறி மாறி வந்து கொண்டேயிருக்கும். அதை

அறிந்தும்கூட மக்கள் ''இச்சையுளே வைப்பர்''. சற்றுச் சிந்தித்துப் பார்க்கும் பொழுது இவையெல்லாம் தேவையற்றது என்று புரிந்து கொள்ள முடிந்தாலும், வலுவான பாசத்தால் கட்டுப்பட்ட மக்கள் நிலையான பேரின்பத்தைப் பெற இயலுவதில்லை. ஆனால், என்றாவது ஒருநாள் உண்மையை எல்லாச் சீவன்களும் உணர்வதற்கான வழியினை இறைவன் நமக்குக் காட்டுகின்றான். திருவருளினால் நமக்கு அந்த நேரம் கிட்டும்பொழுது இனி உலக அனுபவங்கள் தேவையில்லை என்கின்ற முடிவு தோன்றுகின்றது. மனச்சேட்டைகள் அடங்குகின்றன. பிறவித் துயரைக் கொடுக்கும் அறிவு மாறி, அகத்தில் பேரொளி புலப்படத் தொடங்குகின்றது. வாழ்க்கையின் உண்மையான நோக்கம் அகக்கண்களுக்கு விளங்கத் தொடங்குகிறது. நிலையான நெறி ஒன்றினை மனம் பற்றிய பிறகு, அதனால் ஏற்படும் பெரும் பேற்றினை மனம் அடைகின்றது. இந்தச் சாதனையைச் செய்த சித்தர் உலகுடன் பேசாப் பெருமையைப் பெறுவர்.

**''பெற்றார் உலகிற் பிரியாப் பெருநெறி**
**பெற்றார் உலகிற் பிறவாப் பெரும்பயன்**
**பெற்றார் அம்மன்றிற் பிரியாப் பெரும்பேறு**
**பெற்றார் உலகுடன் பேசாப் பெருமையே''. (திருமந்திரம் - 132)**

இத்தகைய பேறு பெற்ற சித்தர்களைச் சீவன் முக்தர்கள் என்று அழைப்பது வழக்கம். இந்தப் பிறப்பிலேயே அவர்கள் பிறவாப் பெரும் பயனைப் பெற்ற பின்னர், மக்களை, மற்ற சீவ ராசிகளை, மற்ற இதயங்களைப் புறக்கணித்துவிட்டு வெறுமனே தங்கள் வாழ்நாட்களைக் கழிப்பதில்லை. எங்கும் நிறைந்து, எங்குமிருந்த நெடுஞ்சுடரைத் தம்முள் காணும் சித்தர்கள் பிறருடைய உள்ளங்களிலும் காண்கின்றார்கள். வேற்றுமை என்னும் மாயைத் திரை அகன்ற பின்னர்த் தம்முள் எல்லாச் சீவராசிகளையும், எல்லாச் சீவராசிகளிலும் தம்மையும் காண்கின்றார்கள். சீவ ராசிகளிடத்து அன்பும் கருணையும், பாசமும் பரிவும், உருக்கமும் தயவும் தோன்றுகிறது. இந்த உயர்ந்த நிலையை அடைந்த சித்தர்கள் தமக்கின்றி, பிறருக்காக வாழ்கின்றார்கள். வள்ளலார் வாடிய பயிரைக்கண்டு வாடினார். திருமூலரோ மக்களிடமிருந்து ஒதுங்கி விடாது, தான் கண்ட உண்மைகளைப் பிறருக்கு உபதேசித்து ''அறம் செய், அன்பு கொண்டவனாய் இரு, அன்பு செய்வோரை சிவனறிவன்'' என்று போதித்தும் அவர்களுக்கெனவே வாழ்கின்றார். நாட்கள் கழிந்து கொண்டே போகின்றன, யாக்கை நிலைத்து நிற்பதில்லை. அறம் செய்வதன் மூலம் இறைவனுடைய கழலடியைக் காண வேண்டுமென்பதே திருமூலர் உலகுக்குப் பறைசாற்றும் நெறியாகும். பிறருக்கு அன்பு செய்வதன் மூலம், இறைவனை அன்பெனும் பீடத்தில் அமர்ந்திருக்கும்பொழுது, சீவராசிகளிடம் பேரன்பு செலுத்துவதன் மூலமாக இறைவனை அடையலாம் என்பது திருமூலர் நமக்குக் கற்பிக்கும் கல்வியாகும். அன்பையும் அறத்தையும் இரண்டு அடிக்கற்களாக வைத்து வாழ்வை நடத்திச் செல்லக்கூடிய ஒருவன் கட்டாயம் பெரும் பேற்றினை அடைவான். இதில் சந்தேகமில்லை. இறைவனுடைய அருள்பெற்றும்

விளங்குவான். இதுதான் உண்மையான ஆன்மிகம். மூச்சை அடக்கிப்பலவிதமான ஆசனங்களில் உடலைப் பொருத்தி வாட்டித்தான் இறைவனை அடைய வேண்டுமென்பதில்லை. அன்பு கொண்ட இதயம் இறைவனை அடைகின்றது. இறைவன்பால் அன்போடு இருக்க வேண்டு மென்பது மட்டுமில்லை. எல்லா சீவராசிகளிடமும் அன்பைச் செலுத்தினாலே போதுமானது. அன்பெனும் உயர்ந்த நிலையை முற்றிலும் உணர்ந்த சித்தர்கள் பெற்றிருக்கின்றார்கள். அந்த அன்பின் அடிப்படையில்தான் நமக்கு உண்மை நிலையைத் தெளிவுபடுத்துகின்றார்கள்.

சித்தர்களுக்கெல்லாம் தலைவராய் விளங்கும் திருமூலரின் திருமந்திர மணிமாலை ஓர் அறிவுப் பொக்கிஷம். ஓர் ஆன்மிகக் களஞ்சியம். என்றும் வற்றாத பசுவிடமிருந்து நமக்குச் சொரிந்து கிடைக்கின்ற ஞானப்பால். ஓர் விரிந்த ஆழ்ந்த அனுபவக்கடல். அக்கடலினுள் கிடைக்கக்கூடிய நல்முத்துக்கள் ஏராளம். ஆழ்கடலில் மூழ்கி இம்முத்துக்களை எடுத்துக் கரை சேர்வதற்கு திறமையும், முதிர்ந்த அனுபவமும் வேண்டுமென்பதை மறுக்க இயலாது என்றாலும், எனக்கு அத்தகைய திறமையும், அனுபவமும் இல்லையென்கின்ற குறையை நான் உணர்ந்திருந்த போதிலும், திருமந்திரத்தைப் படிப்படியாக படித்து, சிந்திக்கக்கூடிய வாய்ப்பினை இறைவனருளால் நாம் எல்லோரும் பெற்றிருக்கிறோம் என்கிற ஒரே காரணத்தினால், எனக்குத் தோன்றும் ஒருசில எண்ணங்களை இந்த முத்துக்குவியலில் இருந்து எடுத்து வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

அந்த இறைவனே ஓர் முத்தினில் முத்து. முகிழ் இள ஞாயிறு. தேடிப்பார்த்து அடைய வேண்டிய பரம்பொருள். முகிழ் இள ஞாயிற்றைப்போல், எங்கெங்கும் ஒளி வீசிக் கொண்டிருப்பவன். இந்த இரண்டு கருத்துக்களும் ஒன்றுக்கொன்று முரண்பாடு உடையனபோலத் தோன்றும். ஆனால், உண்மையில், கிடைப்பதற்கரிய ஒருவன் இளம் ஞாயிறைப்போல எங்கும், எப்போதும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றான். அவன் அழியாத் தன்மையைப் பெற்றிருக்கும் சீவனையும் கடந்தவன். தனித்து நிற்பவன். பல்வேறு அண்டங்களுக்கு அப்பாற்பட்டவன். ஒப்பில்லாதவன். பவளம் போன்ற இதழ்களையும், முத்துப்போன்ற பற்களையும், இனிய மொழியையும் உடைய பெண்களுடைய சக்தியிலும் மயங்காத ஓர் அறிவுப் பேரொளியாகி, தொடர்பவர்களுடைய மருளினை நீக்கி, என்றும் அருள் தன்மை பொருந்தியவனாக நிற்கின்றான்.

**''அமரத் துவங்கடந் தண்டங் கடந்து**
**தமரத்து நின்ற தனிமையன் ஈசன்**
**பவளத்து முத்தும் பனிமொழி மாதர்**
**துவளற்ற சோதி தொடர்ந்துநின் றானே''.** **(திருமந்திரம் - 2788)**

❋ ❋ ❋

# 2. வேதமும் ஆகமமும்

அறமும் ஆன்மிகமும் நமது வாழ்க்கையின் சிறப்புமிக்க அடிப்படையாக இருந்து, நம்முடைய நெறி, குறிக்கோள் போன்றவற்றிற்கு ஒரு ஆதாரமாக இருந்துள்ளன. தொன்று தொட்டு நம் நாட்டு மக்கள் அன்றாட வாழ்க்கையை நடத்துவதே ஒரு தலையாய கொள்கை என்று கருதவில்லை. இறை உணர்வு, கூட்டு வாழ்வு, சமுதாய நலன் போன்ற உயர்ந்த பண்புகளுக்கு முக்கிய இடம் கொடுத்து, எளிமையான வாழ்வே நம்மை இறைவனுக்கு அருகில் கொண்டு செல்லும் என்கிற கோட்பாட்டில் தீவிரமான நம்பிக்கை வைத்து வந்தனர் நம் நாட்டு மக்கள்.

பல ஆயிரம் ஆண்டுகளாக யோகிகளும் ஞானிகளும் இயற்கை எழில் நிரம்பிய பல இடங்களில் அமர்ந்து கொண்டு தங்களது மனம், புத்தி, சித்தம் ஆகியவற்றை ஒருமுகப்படுத்திக் காணும் பொருள்களுக்கு அப்பாற்பட்ட, அவற்றிற்கு மூல காரணமாக இருக்கின்ற பரம்பொருளைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தார்கள். பரம்பொருளைத் தம்முள் அனுபவித்தார்கள். அந்த இறை அனுபவம் அவர்களுடைய புனித உள்ளங்களிலிருந்து ஆற்று வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது. திருவருள் முழுமையாகப் பெற்ற அவர்கள் உலக மக்களின் உயர்வுக்காக அருளிச் செய்தவை வேதமும் ஆகமமுமாகும். அவர்களுடைய உள்ளங்களிலே தோன்றிய இறை எண்ணங்கள் அவர்களுடையவையல்ல. இறைவனின் திருவாக்கு என்று நம் முன்னோர்கள் கூறியுள்ளனர். எனவே, வேதாகமங்கள் இறைவனுடைய மொழியாகவே கருதப்படுகின்றன. **''வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே''** என்று மாணிக்கவாசகப் பெருமான் பாடினார். வேத காலத்து முனிவர்கள் உலக விஷயங்களில் பற்று வைக்காமல் எல்லாவற்றிற்கும் மேலான பரம்பொருளை ஆர்வத்துடன் நாடினார்கள்.

சீரிய முறையில் இறைவனைப் பற்றிச் சிந்தித்தவர்களாக, தங்கள் உள்ளத்தை அவர்கள் ஆழ்ந்து ஆராய முற்பட்டார்கள். அதன் விளைவாக இறை உணர்வு முழுதும் பெற்ற அருள் பெரியார்களுடைய உள்ளங்களில் வேதங்கள் கனிந்த அனுபவமாக எழுந்தன. அவர்களுடைய உள்ளங்களிலே எழுந்த வேதங்களின் ஒலி பரம்பொருளைப் பற்றிய உண்மைகளைத் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்தது. அந்த உண்மைகளை உணர்ந்து

கொண்ட வேத முனிவர்கள் பேரறிவைத் தம்முள் அனுபவித்துப் பேரின்பம் பெற்றார்கள். அத்துடன் நின்றுவிடவில்லை அவர்கள். தாங்கள் பெற்ற இன்பத்தை உலக மக்களுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டி, வழிவழியாக, வாய்மொழியாகத் தங்களுடைய சீடர்களுக்கு வேதங்களையும் ஆகமங்களையும் உபதேசித்தனர்.

வேதம் முதலில் ஒன்றாகவே இருந்தது. எண்ணிலடங்காத மந்திரங்களைக் கொண்டிருந்தது. பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு வியாச முனிவர் வேதத்தை ருக் வேதம், யசுர் வேதம், சாம வேதம், அதர்வ வேதம் என்று நான்காகப் பிரித்தார். இவ்வாறு வேதத்தைப் பிரித்தமை காரணமாகவே அவருக்கு வேதவியாசர் என்ற பெயர் ஏற்பட்டது.

ருக் வேதம் செய்யுள் வடிவில் உள்ளது. யசுர் வேதம் உரைநடையிலும், சில பகுதிகளில் செய்யுள்களாகவும் உள்ளது. சாம வேதம் இசையுடன் பாடும் பாணியில் அமைந்துள்ளது. சாம வேதத்தில் பெரும்பாலும் ருக்வேத செய்யுள்கள் காணப்படுகின்றன. அதர்வ வேதத்தில் பல மந்திரங்கள் உள்ளன. மூன்று வேதங்களில் உள்ள செய்யுள்கள் வேள்விகள் நடத்துவதற்கான முறைகளை விரிவாக விளக்குகின்றன. அதர்வ வேதம் உபாசனைக்குப் பயன்படுகிறது. நன்மை பயக்கவும், இடர்களை நீக்கவும், பகைவரை அழிக்கவும், பொது நலம் புரியவும் தேவைப்படும் மந்திரங்கள் அதர்வ வேதத்தில் காணப்படுகின்றன.

வேதங்கள் சாகைகள் எனப்படும் உட்பிரிவுகளுடன் அமைந்துள்ளன. மேலும், இந்தச் சாகைகளில், சம்ஹிதை, பிராமணம், ஆரண்யகம் என்ற மூன்று பகுதிகள் இருக்கின்றன. இந்த மூன்று பகுதிகளையும் முறையே கர்ம காண்டம், உபாசன காண்டம், ஞான காண்டம் என்று பாகுபடுத்தியும் கூறுவதுண்டு.

வேதங்கள் மிகப் பழமையானவை. பல ஆயிரம் ஆண்டு காலமாக முனிவர்கள் வேதங்களை அருளிச் செய்துள்ளார்கள். அவை இறைவனைப் பல நிலைகளில் துதிக்கின்றன, போற்றுகின்றன. இம்மையிலும் மறுமையிலும் மனிதர்கள் நல்ல பயனை அடைய வேண்டிச் செய்யும் வேள்விகள் விளக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கான மந்திரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. செய்யப்பட வேண்டிய செயல்களையும், தவிர்க்கப்பட வேண்டிய செயல்களையும் வேதங்களின் கர்ம காண்டம் தெளிவுபடுத்துகின்றது. இறைவனை உபாசனை செய்யும் வழிகள் உபாசான காண்டத்தில் வருகின்றன. நற்கருமங்களை சுயநலமின்றிச் செய்து மனத்தூய்மையை முதலில் பெற வேண்டும். பின்னர் தியான முறைகளைக் கையாண்டு ஒருமைப்பட்ட மனநிலையை அடையும் பொழுது, இறைவனைப் பற்றிய அனுபவத்தை, மெய்யுணர்வைப் பெறலாம். மெய்ப்பொருள் எத்தகையது என்பதை ஞானகாண்டம் விளக்குகின்றது. ஞானகாண்டம் இயற்கை எழில் மிகுந்த காடுகளில் தோன்றியது என்று கருதலாம். அறிவில் முதிர்ந்தவர்கள்,

இறைசிந்தனையில் தமது மனத்தை முழுமையாகச் செலுத்தி, காடுகளுக்குச் சென்று, எல்லாப் பற்றுக்களையும் களைந்து, தீவிர சிந்தனையில் ஈடுபட்டு, மெய்ப்பொருளின் தன்மையைத் தம்முள் உணர்ந்து உலகிற்கு அளித்ததே உபநிடதங்கள் எனப்படும். இவையே ஞானகாண்டப் பகுதிகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அறியாமையை நீக்கிக்கொண்டு ஒவ்வொருவரும் தன்னுள் இருக்கும் இறைத்தன்மையை உணர்ந்து கொள்வதே உபநிடதங்களுடைய கல்வியுமாகும். உபநிடதங்கள் வேதங்களின் தத்துவ ஞான அனுபவப் பகுதிகளாக திகழ்கின்றன. எனவே உபநிடதங்கள் வேதத்தின் முடிவாக, வேதாந்தமாக எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆகவே, உபநிடதங்கள் வேதங்களின் உட்பிரிவுகளாகும். வேதங்கள் வேறு உபநிடதங்கள் வேறு என்பதல்ல.

பண்டைத் தமிழ்நாட்டிலும் வேதம் ஒலித்ததாகச் சங்க நூல்கள் சொல்லுகின்றன. சேர நாட்டிலும் சோழ நாட்டிலும் மக்கள் காலை வேளையில் முதல் கோழி கூவும் போதே எழுந்து விடுவார்கள் என்று கூறப்பட்டபொழுது, பாண்டிய நாட்டுப் புலவர் ஒருவர் மதுரை மாநகரில் பொழுது விடிவதற்கு நெடுநேரத்திற்கு முன்பிருந்தே வேதியர்கள் வேதம் ஓத மக்கள் எழுந்து விடுவார்கள் என்று பெருமையோடு கூறினார்.

**"பூவினுள் பிறந்தோன் நாவினில் பிறந்த**
**நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப**
**ஏமஇன் துயில் எழுதல் அல்லதை**
**வாழிய வஞ்சியும் கோழியும் போலக்**
**கோழியின் எழாதுஎம் பேரூர் துயிலே".**

இது பரிபாடலில் வருகின்றது.

வேதங்களை இறைவனுடைய திருவாக்காகப் பெரியோர்கள் கூறுவர். ''இறைவனுல்'' என்று திருமூலர் குறிப்பிடுகிறார். வேதங்கள் காட்டும் பரம்பொருள் ஒன்றேயாகும். வேதங்களில் பல தெய்வங்களுடைய பெயர்கள் காணப்பட்டாலும், வேதங்களின் முடிவான முடிவு இறைவன் ஒருவனே என்பதாகும். ஓங்கி, பரந்து, ஆழ்ந்து நிற்கும் பரம்பொருளுடைய முழு விளக்கமாக வேதங்கள் அமைந்துள்ளன. ஆகவே, வேதங்கள் ஒரு பொதுமறையாகும். இறைவனுடைய நெறியை அடைவதுதான் மக்களாய்ப் பிறந்தவர்களுடைய இலட்சியமாகும் என்பதை வேதங்கள் உணர்த்துகின்றன. அறிவில் கண்டுபிடிப்பது கடினமான ஒன்று என்று பெரியோர்கள் கூறுகின்றனர். அப்படி அடைவதற்கான அறங்களை வேதங்கள் எடுத்துக் கூறுகின்றன. அந்த அறங்களை நாம் கடைப்பிடிக்க வேண்டியது நமது கடமையாகும் என்று திருமூலர் உணர்த்துகிறார். வேதத்தில் கூறப்பட்டுள்ள அறத்தைத் தவிர வேறொன்றும் இல்லை என்றும் திருமந்திரம் அறிவிக்கின்றது. வேதங்களில் நம்முடைய வாழ்க்கைக்குத் தேவையான எல்லா அறங்களும் உண்டென்றும் திருமூலர் கூறுகின்றார்.

நம்முடைய அறிவுத் திறத்தினால் தர்க்க வாதம் செய்து, வாதிட்டு உண்மையை நிலைநாட்டுவதாகச் சொல்லிக் கொண்டு நேரத்தை வீணாக்குவதைவிடத் தர்க்கவாதங்களைத் தவிர்த்து, வேதங்களில் கூறப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதன் மூலமாகவே அவற்றின் உட்பொருளை உணர்ந்து மக்கள் தலையாய இன்பம் பெறக்கூடும் என்றும் திருமூலநாயனார் சொல்லுகின்றார்.

**"வேதத்தை விட்ட அறம்இல்லை; வேதத்தின்**
**ஓதத் தகும்அறம் எல்லாம் உள; தர்க்க**
**வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற**
**வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே"** **(திருமந்திரம் - 51)**

வேதங்களில் நம்முடைய வாழ்க்கைக்குத் தேவையான எல்லா அறங்களும் உண்டென்று திருமூலர் கூறுவதைச் சிலர் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். மனிதன் பகுத்தறிவு உடையவன். அந்த அறிவைக் கொண்டு ஆராய்ச்சி செய்து கிடைக்கும் உண்மையின் அடிப்படையிலேதான் வாழ்க்கை வளர இயலும் என்ற கொள்கை உடையவர்கள் பலர் உண்டு. விஞ்ஞானரீதியாக நமக்குக் கிடைக்கும் அறிவு மிகவும் முக்கியமானதுதான். அதைப்பயன்படுத்திக் கொண்டு வாழ்க்கையில் பல வகைகளில் முன்னேறி இருக்கின்றோம். ஆனாலும், பகுத்தறிவினால் மட்டுமே நாம் எல்லாவற்றையும் கண்டுகொள்ள முடியாது. பகுத்தறிவிற்கு ஒரு எல்லை உண்டு. ஆனால், பரம்பொருள் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டது. பகுத்தறிவினால் மட்டும் அதை அடைந்து விட முடியாது.

**"எதுக்களாலும் எடுத்த மொழியாலும்**
**மிக்குச்சோதிக்க வேண்டா".**

என்றார் ஞானசம்பந்தப்பெருமான். திருமூல நாயனாரும்

**"காட்டுங் குறியுங் கடந்தனர் காரணம்**
**ஏட்டின் புறத்தில் எழுதிவைத் தென்பயன் ...."**

என்று குறிப்பிடுகின்றார்.

வேதங்கள், ஆகமங்கள் போன்ற நூல்கள் அனுபவத்தை வலியுறுத்துகின்றன. அவை நமக்கு எடுத்துத் தருவது உணர்வுபூர்வமான உண்மையாகும். இறையுணர்வாளர்களின் உள்ளங்களிலிருந்து வெளித்தோன்றிய அனுபவ உண்மையானதால் அதைப் பெற்று இன்புற, தனித் தன்மை வாய்ந்த மனநிலை தேவைப்படுகின்றது. வேதங்கள் அறிவாற்றல் கொண்ட மனிதன் தன்னுடைய அறிவினால் மட்டும் தெரிந்துகொள்ள முடியாத ஒன்றை எடுத்துக்காட்டுகின்றன. வேதங்களில் தோத்திரப் பகுதிகளும், வேள்விகளை நடத்துவதற்கான வழிகள் மட்டுமே

காணப்படுகின்றன என்று கூறுவாரும் உண்டு. அவ்வாறு கூறுபவர்கள் வேதங்களை முற்றுணர்ந்தவர்களாகமாட்டார்கள். வேள்விகளுக்கு அப்பாலுள்ள பரம்பொருளை வேதங்கள், உபநிடதங்கள் மூலமாக நமக்கு விளக்குகின்றன என்பதைப் பெரியோர்கள் நமக்கு எடுத்துக்காட்டி உள்ளார்கள். இந்த விளக்கத்தைப் பெற்று, அறத்தைக் கடைப்பிடித்து இறை அனுபவத்தைப் பெற வேண்டும்.

எனவே, வேதங்களை வெறுமனே பாடம் படிப்பது போல ஓதிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது என்று திருமூலநாயனார் சொல்லுகின்றார். வேதங்கள் மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய நெறியைக் காட்டுகின்றன. அவை சுட்டிக்காட்டும் பாதையில் செல்லாவிட்டால் அவற்றைப் படித்தும் பயன் இல்லை. வேதங்களை உரைக்கின்றவர்கள் எல்லோரும் வேதியர்கள் ஆவதில்லை. வேதம் இறைவனுடைய மொழி ஆகும். இறைவன் அதை எப்பொழுதுமே நமது உள்ளங்களில் விளக்கிக் கொண்டிருக்கின்றான். பிரம்மன் வேதங்களை உச்சரித்துக்கொண்டே இருக்கின்றான். மற்ற தேவர்களும் விடாமல் வேதங்களை எடுத்துரைத்துக் கொண்டிருக்கின்றனர். இருந்தபோதிலும் அவர்கள் இறப்பிற்கும், பிறப்பிற்கும் அப்பாற்பட்ட நிலையான பதவியைப் பெறுவதில்லை. பிரம்மனுக்கும் பிறவி உண்டு. வேதங்களை நன்குணர்ந்து அவற்றால் சொல்லப்பெற்ற வேள்விகளையெல்லாம் சிறப்பாகச் செய்து வாழ்ந்தவர்களும், வேதங்கள் காட்டும் மெய்ப்பொருளை உணராவிட்டால் அவற்றைப் படித்ததன் பயனை அடையமாட்டார்கள். எனவே, வேதங்களைக் கற்று, உணர்ந்து மெய்ப்பொருளைத் தெரிந்து கொண்டு வேதத்தை ஓதுபவர்கள் உண்மையான வேதியர்கள் ஆகிறார்கள். வேதங்களின் முழுப்பயனை அடைய வேண்டுமென்றால் அவை காட்டும் மெய்ப்பொருளை நாட வேண்டும். இதுவே பிறப்பின் குறிக்கோளாகும். வேள்விகளுக்கு அப்பாற்பட்ட ஒரு பரம்பொருளை அறிந்து கொள்வதற்கான ஒரு சாதனம் வேதம் என்று உணர்ந்து அதன் வழி நடப்பவரே வேதியர் என்ற ஒரு புரட்சிகரமான கருத்தைத் திருமூலர் வெளியிடுகின்றார்.

**"வேதம் உரைத்தாலும் வேதிய னாகிலன்**
**வேதம் உரைத்தாலும் வேதா விளங்கிட**
**வேதம் உரைத்தாலும் வேதியர் வேள்விக்காய்**
**வேதம் உரைத்தாலும் மெய்ப்பொருள் காட்டவே."**

**(திருமந்திரம் - 52)**

மெய்ப்பொருளை நமக்கு உணர்த்துவதே வேதங்களின் நோக்கமாகும். அந்த உணர்வினைப் பெறுவதற்கு வேதங்கள் நெறிகளை வகுத்துத் தந்துள்ளன. வேதங்களின் சிகரமாகிய ஞான காண்டம் வேத நெறியை நமக்குத் தெளிவாகத் தருகின்றது. ஞானகாண்டத்தின் அங்கமாகிய

உபநிடதங்கள் எல்லா நெறிகளும் ஒன்று சேர்ந்து ஒரு பெரு வழியாக அமைந்து, திருநெறியாக விளங்குவதே வேதாந்தமாகும் என்று எடுத்துக்காட்டுகின்றன. தூய்மை, வாய்மை, ஞானம் இவற்றால் கிடைக்கக்கூடிய பேரின்பத்தை உபநிடதங்கள் உணர்த்துகின்றன. இறைவன் ஒருவனே. அவன் விண்ணாய்ப்பரந்து நிற்கின்றான். உயிருக்குயிராய் உள்ளந்தோறும் இடங்கொண்டுள்ளான். அவனே பேரறிவும் பேரர்ற்றலுமாகும். அவனே உண்மை. அவனை நாம் பற்றுவதற்கு வழி கொடுக்காமல் புறத்தோற்றங்கள் நமது மனதை மறைக்கின்றன. மனதிலுள்ள மலங்களை நீக்கி, உலகப் பொருட்களில் மனதைப் பறிகொடுக்காமல் அனைத்தும் கடந்து நிற்கும் பரம்பொருள் ஒன்றை ஞானாசிரியன் வழியாக உணர்ந்து பெறுதலே திருநெறியாகும். அந்த நெறியை வேதாந்தம் விளக்குகின்றது என்கிறது திருமந்திரம்.

**"திருநெறி யாவது சித்தசித் தன்றிப்**
**பெருநெறி யாய பிரானை நினைந்து**
**குருநெறி யாஞ்சிவ மாநெறி கூடும்**
**ஒருநெறி ஒன்றாக வேதாந்தம் ஓதுமே."** **(திருமந்திரம் - 54).**

வேதாந்தம் காட்டும் திருநெறியைச் சிவமாம் நெறி என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். வேதத்தைச் செய்தவன் சிவபெருமானே என்பது அவருடைய உணர்வாகும். இதைக் குருநெறி என்றும் அழைக்கின்றார். ஆகவே, வேதங்களின் முடிவு சிவமாகிய பரம்பொருளைச் சுட்டிக் காட்டுகிறது என்று உணர்த்தி அதுவே சித்தாந்தங்களின் முடிவு என்றும் பின்னர் விளக்கி, சித்தாந்தங்களின் முழுமுதற் தன்மையைத் திருமூலர் விளக்கிச் சொல்லுவார்.

மக்கள் ஐம்பொறிகளின் இயக்கத்திற்கு ஆட்பட்டு இன்பத் துன்பங்களை அனுபவிக்கின்றார்கள். எங்கும் எப்போதும் சிற்றின்பத்தையே நாடுகின்றனர். நாதம் என்னும் ஒலி இறைவனுடைய புகழைப் பரவச் செய்ய அமைந்துள்ள ஒன்றாகும். கூத்தும் ஆட்டமும் இறைவனின் தன்மையை மக்கள் கண்முன்னே நிறுத்துவதற்கான சாதனங்களாகும். கணிகையர்கள் பாடலையும் ஆடலையும் பரப்பி மக்களை உலக இயலில் அழுந்தச் செய்கின்றார்கள். மேல் நிலைக்குச் செல்ல வேண்டுமென்கின்ற விருப்பம் உள்ளவர்கள் கூட உலக ரசனைகளில் ஈடுபடும் அளவுக்கு இந்தப் பாடலும் ஆடலும் அவர்களை அழைத்துச் செல்கின்றன. பரம்பொருளை அறிந்து கொள்ள வேண்டுமென்றால் மனதை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்கின்ற கட்டுப்பாட்டுடன் புறத்தோற்றத்தில் மயங்கிக் கெடாமல், அலைந்து திரியாமல் இருக்க வேண்டும். மக்கள் சாதாரணமாகப் பொருளை ஈட்டும் முயற்சியில் ஈடுபடுவர். வேதங்கள் மெய்ப்பொருளை ஈட்டுவதற்கான இடமாகும். அந்த இடத்திற்குச் செல்ல விரும்புபவர்கள் உலகக் கொள்கைகளை மறந்து வேதங்கள் கூறுகின்ற ஒழுக்கத்தையும்

சீலத்தையும் பேண வேண்டும். அவ்வாறு செய்யாமல் வெறுமனே வேதத்தைப் படிப்பதால் மட்டும் நாம் விரும்பும் பயன் கிட்டாது.

**"பாட்டும் ஒலியும் பரக்குங் கணிகையர்**
**ஆட்டும் அறாத அவனியில் மாட்டாதார்**
**வேட்டு விருப்பார் விரதமில் லாதவர்**
**ஈட்டும் இடஞ்சென் றிகலுற் றாரே". (திருமந்திரம் - 56)**

ஆகவே, வேதத்தின் முடிந்த பொருள் வேட்கையற்ற நிலையாகும். வேதாந்த நிலையில் சீவன் இடைவிடாது சிவனோடு பொருந்தி நிற்கின்றது. புலன் வகைகள் தத்தம் பணியினைச் சிவத்தோடு இணைத்துக் கொள்கின்றன. சீவகரணங்கள் சிவகர்ணங்களாகின்றன. வேதத்தில் முடிவை உணர்ந்த பெரியோர்கள் உலகப் பற்றினை நீக்கி நிற்கின்றார்கள். அவ்வாறு நிற்பவர்களே வேதாந்தத்தின் முழுப்பொருளைத் தமக்குள் கண்டவர்கள். உலகப் பொருட்கள் மீதுள்ள விருப்பங்களை நீக்காமல் ஏட்டளவில் தகுதி பெற்றவர்கள், அறிவு பெற்றவர்கள் வேதாந்தத்தின் உண்மையை உணர்ந்தவர்களாக மாட்டார்கள்.

**"வேதாந்தங் கேட்க விரும்பிய வேதியர்**
**வேதாந்தங் கேட்டுந்தம் வேட்கை ஒழிந்திலர்;**
**வேதாந்த மாவது வேட்கை ஒழிந்திடம்**
**வேதாந்தங் கேட்டவர் வேட்கைவிட் டாரே". (திருமந்திரம் - 79)**

வேதங்கள் பொது, ஆகமங்கள் சிறப்பு. வேதங்களின் முடிவு வேதாந்தம். சிவாகமங்களின் முடிவு சித்தாந்தம். ஆகமங்கள் என்றால் இறைவனை அணுகுதல் என்பதாகும். மெய்ப்பொருளை உணர்த்துவது ஆகமம். அதை அணுகுவதற்கான பாதைகளை தெளிவாக்குவதும் ஆகமம். இறைவனுக்கும் உயிருக்கும் இடையே நிற்கும் மும்மலங்களான பாசத்தை அகற்றுவதற்காகத் தகுந்த வழிகளைக்காட்டி, பதியாகிய இறைவனை உயிரானது அணுகுவதற்கான முறைகளை நமக்குக்கற்பிப்பது ஆகமம்.

பேரறிவு உடைய சிவமானது ஞானமயமானது. ஆனந்தமயமானது. உயிர்களோ பாசங்களால் கட்டுப்பட்டுள்ளன. பாசம் உயிர்களுக்கு அறியாமையைக் கொடுக்கின்றது. பாசத்தோடு சம்பந்தப்பட்ட உயிரானது அறியாமையில் மயங்கி இறைவனை உணர்ந்து கொள்ளும் திறத்தினை இழந்து நிற்கின்றது. அந்தத் திறத்தினை மீண்டும் உயிரானது பெறச் செய்வது இறைவனுடைய திருஅருளாகும். அந்தத் திருவருளின் காரணமாக உலகம் தோற்றுவிக்கப்பட்டு தனு, கரண, புவன போகங்கள் உருவாகி அவற்றை உயிரானது பயன்படுத்துவதற்காக இறைவனுடைய ஐந்தொழில் இயக்கம் நடைபெறுகின்றது. அந்த இயக்கத்தில் உயிர் படிப்படியாக முதிர்வு பெற்று இறைவனுடன் இரண்டறக் கலக்கும் ஓர் நிலையை அடையச் செய்வதற்கான வழிகளை ஆகமங்கள் கற்பிக்கின்றன. ஆகவே, ஆகமங்களில் நமக்குக்

கிடைக்கும் பொருள்கள் மெய்ப்பொருளை உணர வேட்கையைக் கொடுத்து, அந்த வேட்கையைத் திருப்தி செய்ய வழிகளையும் காண்பிக்கின்றன. எனவேதான் வேதங்கள் பொது என்றும், ஆகமங்கள் சிறப்பு என்றும் கூறப்பட்டன. வேதங்களும் ஆகமங்களும் மெய்ப்பொருளை உணர்த்தும் இறைவநூல் என்றும், நாதன் உரை என்றும் திருமூலர் வலியுறுத்துகிறார். இவ்விரண்டையும் முழுமையாக நாடினால் இறைவன் என்றும், உயிர் என்றும் இரண்டாக நினைக்கும் நினைப்புகளும், வேறுபாடுகளும் மறைந்து, மனமானது இறை அமைதியில் லயிக்கும். இதை உணராதவர்களுக்குத் தான் என்றும், நான் என்றும் இரண்டு பிரிவுகள் கண்முன் நின்று மாயையின் காரணமாக அவர்களை ஆட்டிப்படைக்கும். வேறுபட்ட காட்சியினை மனதிலிருந்து நீக்கி ஒன்றுபட்ட காட்சியை நமக்கு அளிப்பது வேதங்களும் ஆகமங்களும் ஆகுமெனத் திருமூலர் கூறுகின்றார்.

**''வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன்நூல்**
**ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுள்ளன**
**நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்**
**பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே''. (திருமந்திரம் - 2397)**

இதையே சிவஞானசித்தி பின்வருமாறு விளக்கித் தருகின்றது:

**''வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்;**
**வேறுமுள நூல் இவற்றின் விரிந்த நூல்கள்;**

**ஆதிநூல், அனாதிஅம லன்தருநூல் இரண்டும்;**
**ஆரணநூல் பொது; சைவம் அருஞ்சிறப்பு நூலாம்;**

**நீதியினால் உலகர்க்கும், சத்திநிபா தர்க்கும்**
**நிகழ்த்தியது; நின்மறையின் ஒழிபொருள் வேதாந்தத்**

**தீதில்பொருள் கொண்டுரைக்கும் நூல்சைவம்; பிறநூல்**
**திகழ்பூர்வம்; சிவாகமங்கள் சித்தாந்த மாகும்''.**

வேதம் இலட்சியம். ஆகமம் இலக்கணமாகும். வேதம் மெய்ப் பொருளை அறிவிக்கின்றது. ஆகமம் அதை அடைவதற்கான இலக்கணத்தை யும், சாதனங்களையும், அடைந்ததன் பயன்களையும் கூறுகிறது. பொது நூல் உண்மையை உணர்த்தும், சிறப்பு நூல் அதற்கான வழிகளைக் காட்டும். வேதம் நிலமெனவும், ஆகமம் அதில் விளைந்த பயிரெனவும் சொல்லப்படுகிறது. மாறாக, வேதத்தை ஒரு மரம் எனவும், ஆகமத்தை அதில் விளைந்த பழுத்த கனி எனவும் சான்றோர்கள் கருத்துத் தெரிவிப்பார்கள்.

உயிர்களுக்கு இறைவன் இன்பத்தையும் துன்பத்தையும் மாறி மாறிக் கொடுத்து அவற்றை அனுபவிக்க வைக்கின்றான். இயற்கையில் மழையும், கோடையும் மாறி மாறி வருவதுபோல உயிர்களுக்கு ஏற்றமும் இறக்கமும்

ஒன்றன்பின் ஒன்றாக வந்து கொண்டிருக்கின்றன. இவற்றிற்கெல்லாம் காரணமாக இருப்பது உயிரைக் கட்டும் மும்மலங்களாகும். எப்பொழுது உயிர்கள் தோன்றினவோ அப்போதே உயிர்களைப் பந்திக்கும் பாசமும் உருவாகியது. ஊழிக்காலம் வரும்பொழுது உயிர்களெல்லாம் இறைவனிடம் ஒடுங்குகின்றன. உடல்களெல்லாம் மறைகின்றன. பிரபஞ்சத்தின் பொருள்களும் மறைகின்றன. தங்கி நிற்பது பேரறிவும் பேராற்றலும் மிக்க இறைவன் மட்டும்தான். அவனே எல்லாவற்றிற்கும் முடிவாகவும் முதலாகவும் நிற்கின்றான். மக்களுடைய வினைப்பயனைத் தீர்க்கும் இறைவன், வினைகள் மீண்டும் உருவாகக் காரணமாகின்றான். உயிர்களெல்லாம் இறைவனிடம் ஒடுங்கி நிற்கும்பொழுது, மீண்டும் படைப்பு என்கின்ற பணி தொடங்கப்பெறுகிறது. அதன் வழியாக உயிர்கள் அனுபவங்களைப் பெற்று மெய்யுணர்வினை அடைய வேண்டும் என்பது நியதி. அம்மையப்பரிடம் தேவி இது பற்றிய விளக்கங்களைக் கேட்க, சிவபெருமான் வேதங்களையும், ஆகமங்களையும் உமாதேவியாருக்கு உலகம் உய்யத் திருவருள் செய்தான் என்று திருமந்திரம் கூறுகின்றது.

**''மாரியுங் கோடையும் வார்பனி தூங்கநின்**
**றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்து**
**ஆரிய முந்தமி ழும்உட னேசொலிக்**
**காரிகை யார்க்குக் கருணைசெய் தானே''.** **(திருமந்திரம் - 65)**

மொழி எண்ணங்களை வெளிப்படுத்தப் பயன்படுகின்றது. மொழிக்கு அப்பாற்பட்ட உணர்வுகளை மட்டும் கொண்ட நிலையும் உண்டு. அதற்கும் அப்பால் மொழியற்ற, முற்றிலும் உணர்ந்த வெகு நுட்பமான அமைதி நிலையும் உண்டு. மொழிகளது நிலை நான்கு வகைப்படும். அவை முறையே சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி எனப்படும். இறைவனிடமிருந்து முதலில் ஆகமங்களைக் கேட்டவர்கள் சூக்கும நிலையில் அவற்றைப் பெற்றார்கள். பின்னர் பைசந்தி, மத்திமை என்கின்ற நுண்ணிய நிலையில் வேறு சிலர் பெற்றார்கள். அவர்களிடமிருந்து ஆகமங்களை இவ்வுலகில் வாழும் மக்கள் வைகரி என்னும் பேசப்படும் மொழியாகிய பருமொழியினால் பெற்றார்கள். ஆகவே, இறைவன் பெரும் கருணையோடு இப்புவியில் வாழும் மக்கள் மெய்ப்பொருளை உணர்ந்து கொள்ள பரு மொழிகளைப் படைத்தான் என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

சிவபெருமானுக்கு நாற்றிசை நோக்கி நான்கு முகங்கள் உண்டு. வானை நோக்கி ஒரு முகம். ஆக மொத்தம் ஐந்து முகங்கள் உண்டு. அவை முறையே சத்தியோசாதம் (மேற்கு), வாமதேவம் (வடக்கு), அகோரம் (தெற்கு), தற்புருடம் (கிழக்கு), ஈசானம் (உச்சி) எனப்படும். இறைவன் நான்கு வேதங்களைக் கீழ் உள்ள நான்கு முகங்களாலும், ஆகமங்களை மேலே உள்ள ஈசான முகத்தாலும் அருளிச் செய்தான் என்பதைத் திருமூல நாயனார் ''அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே'' என்கிறார்.

மேலும், சிவபெருமான் எல்லாவற்றிற்கும் மேலான நிலையில் பரம்பொருளாக இருந்து, பின்னர் பரமசிவமாகித் தன்னிடத்திலிருந்து வெளிப்பட்டு வந்து தத்துவம் என்கின்ற நிலையில் இருக்கும் சக்திக்கு மெய்ப்பொருளை உணர்த்தியதாகத் திருமூல நாயனார் கூறுகின்றார். இச்சக்தி தன்னிடமிருந்து வெளிப்பட்ட சதாசிவத்திற்கு உணர்த்தினாள். சதாசிவம் தன்னிடத்திலிருந்து தோன்றிய மகேசுவரருக்கும், அவர் ருத்திர தேவனுக்கும், அவர் திருமாலுக்கும், திருமால் பிரம்மனுக்கும் உணர்த்த, இவ்வாறு ஆகமங்கள் பரம்பொருளிடமிருந்து வெளிவந்து வெவ்வேறு பொறுப்புகளில் இருக்கின்ற தேவர்கள் வழியாக மக்கள் பயனடையும் வகையில் நந்தி பெருமானுக்கு மெய்யுணர்வாக வழங்கப்பட்டது என்று திருமூலர் கூறுகின்றார். அத்தகைய ஆகமங்கள் சிவதன்மமாகிய சிவபுண்ணியத்தை, திருநெறியை மக்களுக்கு விளக்கித் தந்து இப்பிறவிலேயே மக்கள் திருநெறியைக் கடைப்பிடித்து, வாழ்க்கையின் குறிக்கோளாகிய திருவருளை முழுமையாக அனுபவிக்க எல்லா வகைகளிலும் விளக்கித் தருகின்றன என்று திருமூலர் கூறுகின்றார்.

**"சிவமாம் பரத்தினிற் சத்தி சதாசிவம்**
**உவமா மகேசர் உருத்திர தேவர்**
**தவமால் பிரமீசர் தம்மில் தாம் பெற்ற**
**நவஆ கமம்எங்கள் நந்திபெற் றானே".** **(திருமந்திரம் - 62)**

இதனை மாணிக்கவாசகப் பெருமான்

**"மன்னு மாமலை மகேந்திர மதனிற்**
**சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்"**

என்று கூறுகிறார். "ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள்வாழ்க" எனவும் வாழ்த்துகின்றார்.

ஆகமங்களை இறைவன் உமாதேவிக்கு அறிவித்தான் என்பதைப் பெரியபுராணம் பின்வருமாறு எடுத்துக்காட்டுகின்றது.

**"வெள்ளி மால்வரைக் கயிலையில் வீற்றிருந் தருளித்**
**துள்ளு வார்புனல் வேணியார் அருள்செயத் தொழுதே**
**தெள்ளும் வாய்மையின் ஆகமத் திறனெலாந் தெரிய**
**உள்ள வாறுகேட் டருளினாள் உலகைஆ ளுடையாள்".**

ஆகமங்களை மூல ஆகமங்கள் என்றும், உபாகமங்கள் என்றும் இரு பிரிவுகளாகப் பெரியோர்கள் வைத்துள்ளனர். மூல ஆகமங்கள் இருபத்தெட்டு எனக் கணக்கிடப்பட்டுள்ளன. மூல ஆகமங்கள் சிவபேதம் என்றும், ருத்திர பேதம் என்றும் இரு பிரிவுகளாக உள்ளன. சிவபேதம் பத்தும், ருத்திர பேதம் பதினெட்டும் ஆகும். இவ்விரு வகை ஆகமங்களையும் உபதேசித்தவர் சிவபெருமான் ஒருவரே. சிவபேதமாகிய

பத்து ஆகமங்களுள் ஒவ்வொன்றையும் மூன்றுமூன்று பேர்களாகச் சிவபெருமானிடமிருந்து நேராகக் கேட்டனர். ருத்திர பேதமாகிய ஆகமங்கள் ஒவ்வொன்றினையும் இரண்டு இரண்டு பேர்கள் பெற்றார்கள். ஆக சிவபெருமானிடமிருந்து நேராக ஆகமங்களைக் கேட்டவர்களுடைய எண்ணிக்கை அறுபத்தாறு ஆகும். இவர்கள் இறைவனை வணங்கி அவனுடைய மேன்முகமாகிய ஈசான முகத்தினிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள். இதைத் திருமூலர் ''அஞ்சலிக் கூப்பி அறுபத்தறுவரும் அஞ்சாம் முகத்தில் அரும்பொருள் கேட்டதே'' என்பார்.

இருபத்தெட்டு மூல ஆகமங்களுடன் இருநூற்றி ஏழு உபாகமங்கள் இருப்பதாகவும் கணக்கிடப்படுகிறது. முதலில் ஆகமங்கள் கணக்கற்று இருந்தனவென்றும், பின்னர் ஒரு அளவுக்கு வைக்கப்பட்டன என்பதைத் திருமூலர் ''எண்ணில் இருபத்தென்கோடி நூறாயிரம்'' என்றும், குறிப்பிடுகின்றார். இந்த எண்ணிக்கைகள் ஆகமங்கள் எழுதப்பட்ட கிரந்தங்களின் அளவு என்றும் எடுத்துக் கொள்ளலாம். இவற்றில் பல மறைந்து விட்டன. இன்று நமக்குக் கிடைப்பவை மிகவும் குறைவே. இந்த இருபத்தெட்டு ஆகமங்களுள் திருமூலருடைய குருவான நந்திபிரான் ஒன்பது ஆகமங்களைக் கற்றுணர்ந்தார் என்பதை ''நவஆகமம் எங்கள் நந்தி பெற்றானே'' என்று திருமூலர் பெருமான் குறிப்பிட்டுள்ளார். நந்திபெருமானிடம் ஒன்பது ஆகமங்களையும் கேட்டு உலகுக்கு உணர்த்தினவர்கள் எட்டுப்பேர்கள் என்பதும், அவர்களில் தானும் ஒருவர் என்பதும் திருமூலர் திருவாக்காகும். இவரைத் தவிர அவ்வாறு ஆகமங்களைக் கேட்டவர்கள் நான்கு நந்திகள், சிவயோக மாமுனிவர், பதஞ்சலி, வியாக்கிரமர் ஆவார்கள். இந்த ஒன்பது ஆகமங்கள் எவை என்று திருமூலர் பின்வரும் திருப்பாட்டில் புலப்படுத்துகின்றார்.

**''பெற்றநல் ஆகமங் காரணங் காமிகம்**
**உற்றநல் வீரம் உயர்சிந்தியம் வாதுளம்**
**மற்றவ் வியாமள மாகுங்கா லோத்தரந்**
**துற்றநற் சுப்பிரஞ் சொல்லு மகுடமே''.** **(திருமந்திரம் - 63)**

அதாவது இருபத்தெட்டு ஆகமங்களில் காரணம், காமிகம், சிந்தியம், சுப்பிரம் என்னும் சிவபேத ஆகமங்கள் மற்றும் வீரம், வாதுளம், காலோத்தரம், மகுடம் என்னும் ருத்திரபேத ஆகமங்கள், மற்றும் வியாமளம் என்னும் தந்திர சாத்திரம் திருமந்திரத்திற்கு அடிப்படையாக அமைவது என்று கூறுவர். காலோத்தரம் என்பது மூல ஆகமம் இல்லையென்றும் கூறப்படுகின்றது. மேலும், வியாமளம் என்பது தந்திர சாத்திரமாகையால் அதைத் திருமூலர் குறிப்பிட்டிருக்க மாட்டார் என்றும் ஓர் கருத்து நிலவுகின்றது. எனவே, மேற்கூறிய திருப்பாட்டில் உள்ள மூன்றாவது அடியில் வரும் வியாமளம், காலோத்தரம் என்பவை பிற்காலத்தில் வேறொருவர் புகுத்தினார் என்ற கருத்தும் நிலவுகிறது.

திருமந்திர மாலை ஒன்பது தந்திரங்களைக் கொண்டது. திருமூல நாயனார் ''நாள்தோறும் சிந்தை செய்து ஆகமம் செப்பலுற்றேன்'' என்கிறார். இந்நூலில் உள்ள ஒன்பது தந்திரங்களும் ஒன்பது ஆகமங்களின் சாரம் என்று சொல்லப்படுகின்றது. ஆனாலும், திருமூலர் ஒவ்வொரு ஆகமத்தையும், ஒவ்வொரு தந்திரமாகச் செய்தார் என்று கூறுவதற்கு இல்லை. எல்லா ஆகமங்களும், எல்லாப் பொருளையும் பலவாறாகக் கூறுகின்றன. தனித்தனியாக அவை தனித்தனிப் பொருளை எடுத்துக் கூறவில்லை. சிலவற்றைத் தொகுத்தும், சிலவற்றை விரித்தும் எடுத்துக் கூறுகின்றன. ''சீலாங்க வேதத்தைச் செப்ப வந்தேனே'' என்று திருமூலர் கூறும்போது நந்திபெருமான் அவருக்குச் சிறப்பாக உணர்த்திய ஆகம அறிவின் சாரத்தைத் திருமந்திர மாலையாக அருளிச் செய்தார் என்றே எடுத்துக் கொள்ள வேண்டும். முற்றிலும் உணர்ந்த யோகியார் தான் கற்று அனுபவித்த உண்மையை ஒன்பது பகுதிகளாகப் பிரித்துக் கூறும்பொழுது, ஆகமங்களின் சுருக்கத்தை அவர் தருகின்றார் என்றவாறு எடுத்துக் கொள்ளக்கூடாது.

ஆகமங்கள் இறைவனை நமக்கு உணர்த்துகின்றன. இறைவன், உயிர், பாசம் ஆகியவற்றின் இயல்புகளைத் தெளிவாக்குகின்றன. ஐம்பூதங்களால் ஆகிய உடலானது உயிரினுடைய இருப்பிடமாக இருக்கின்றது. உடல் சடப்பொருளாகும். பிற பொருள்களை அறியும் தன்மையற்றது. உயிர்கள் குறைந்த அறிவைக் கொண்டவை. துணையின்றி அறியும் திறமை அவற்றிற்குக் கிடையாது. இறைவனோ பேரறிவாளன். அந்தப் பேரறிவு உயிர்கள்கண் திரும்பும்பொழுது உயிர்கள் ஞானக்கண்ணால் பார்க்கத் தொடங்குகின்றன. அதுவே இறைவனுடைய அருளாகும். ஆனால், அந்த அருளினைப் பெறும் வரை உயிர்கள் பாசத்துடன் சம்பந்தப்பட்டிருப்பதால், அறியாமை நிலையில் மூழ்கி நிற்கின்றன. மாயையிலிருந்து தோன்றிய உடலும், உட்கருவிகளும் உயிர்களுக்கு உலக அனுபவத்தைச் சேர்த்து, உண்மை அறிவினை மறைத்து வைக்கின்றன. இவை எல்லாமுமே இறைவனுடைய செயலாகும். உயிர்களுக்கு அனுபவத்தைக் கொடுத்து, அறிவினைப் பெருக்கி, பேரின்ப வடிவான மெய்ப்பொருளுடன் கலந்து கொள்ளும் வாய்ப்பை அளிப்பதும் இறைவனே ஆகும். அந்த அனுபவத்தின் அடிப்படையில் ஒவ்வொரு உயிரும் பல பிறப்புக்கள், இறப்புகள் கொண்ட பாதையில் பயணம் செய்து, இறைவன் அருளால் பக்குவத்தைப் பெறுகின்றன. முதிர்ந்த நிலையை அடைவதற்கான சிறப்பு வழிகளை உயிர்கள் மேற்கொள்வதன் காரணமாகத்தான் பேரறிவின் அனுபவத்தைப் பெற முடியும். தக்க நேரத்தில், தக்க நிலையில் உயிர்களின் வினைக்கேற்ப ஞான ஒளியை அவைகளுக்குத் தருவதற்காக ஞானாசிரியன் தோன்றுகின்றான். உயிர் அந்த ஞானாசிரியனை நாடிச் சேருகிறது. இந்தச் சேர்க்கையும் இறைவனுடைய அருளினால் நடைபெறுகிறது. படைத்தல், காத்தல், மறைத்தல் போன்ற தொழில்களைச் செய்யும் இறைவன் உயிர்களுக்குத் தக்க நேரத்தில் திருவருளினைப் பொழிந்து அவைகளுடைய அகக்கண்களை விழிப்பிக்கின்றான். கன்மமும் மாயையும் உயிரை உலகில்

ஈடுபடுத்துகின்றன. உயிருக்கு உலகானுபவங்கள், பயிருக்குத் தேவையான உரத்தைப்போல, உயிரின் உயர்வுக்கு இவை தேவைப்படுகின்றன. சரியை, கிரியை, யோகம், ஞானம் போன்ற மார்க்கங்களில் உயிர்களை இறைவன் தக்க நேரத்தில் செலுத்தி அவைகளுக்குப் பரஞானத்தை அருளிச் செய்கின்றான்.

மலங்கள் உயிரோடு இணைந்து நிற்கின்றன. இந்தச் சேர்க்கையால் மனிதன் பெறும் வினைப்பயன்களை அவன் நுகர்ந்தேயாக வேண்டும். இந்த வழியில்தான் உயிர் தூய்மை அடைகிறது. தூய்மை பெற்ற உயிர் தன்னை ஒரு அறிவுமயமான பொருளென்று அறிந்துகொண்டு இறைவன் பேரறிவான பொருள் என்றும் உணர்ந்து கொண்டு, திருவருளில் மூழ்கி நிற்பதே மனிதனின் குறிக்கோள் என்று திருமூல தேவநாயனார் எடுத்துக் கூறுகின்றார்.

"அவிழ்க்கின்ற வாறும் அதுகட்டு மாறும்
சிமிட்டலைப் பட்டுயிர் போகின்ற வாறும்
தமிழ்ச்சொல் வடசொல் எனும் இவ் விரண்டும்
உணர்த்தும் அவனை உணரலு மாமே". (திருமந்திரம் - 66)



# 3. "ஒன்றவன் தானே"

உலகில் பல அருளாளர்கள் தொன்றுதொட்டு இறைவனை நாடி அடைவதற்கான முயற்சிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு இறைவனைப் பற்றிய பேரறிவைத் தாம் பெற்று, அந்த அனுபவத்தின் அடிப்படையில் பரம்பொருளின் தன்மையைப் பற்றியும், உயிர்களுடைய நிலையைப் பற்றியும், பரம்பொருளுக்கும் உயிர்களுக்கும் இடையே உள்ள உறவைப் பற்றியும் தோத்திரங்கள் மூலமாகவும், சாத்திரங்கள் மூலமாகவும் பல நுட்பமான உண்மைகளை நமக்கு அறிவித்திருக்கின்றார்கள். இந்த உண்மைகளை அருளாளர்கள் சொல்லக் கேட்டு நாம் தெரிந்து கொள்கின்றோம். தத்துவ மேதைகளும், அறிஞர்களும் அவர்களுடைய அறிவாற்றல் அடிப்படையில் இந்த உண்மைகளைத் தத்துவரீதியாக நமக்கு எடுத்துச் சொல்லும் போதும், அந்த உண்மைகளின் தன்மை, ஆழம் முதலியவற்றைப் பற்றிக் கற்றுணர்ந்து பிரமித்து விடுகின்றோம். ஆச்சரியப்படுகிறோம். அறிவு மட்டத்தில் பரம்பொருளைப் பற்றித் தெரிந்து கொள்வது ஒரு படியாகும். உணர்வுரீதியாகப் பரம்பொருள் உண்மையைத் தெரிந்து கொள்வது மற்றொரு நிலையாகும். சாத்திரங்களும் தோத்திரங்களும் நமக்குப் பரம்பொருளைக் கோடிட்டுக் காண்பித்து, அதை அடைவதற்கான மார்க்கங்களைத் தெரிவித்துத் தங்கள் பணியை முடித்துக் கொள்கின்றன. சாதகன் இறை உண்மையை அனுபவரீதியாகப் பெற்றுக்கொள்வதே முடிவான முடிவு என்று அருளாளர்கள் நமக்குத் தெரிவிக்கின்றார்கள். இந்த அனுபவம் உயிரை இறைவனுடன் இணைக்கின்றது. இதை உயிர் அனுபவம் என்றும் சொல்லலாம். திருவருளால் மட்டுமே நிகழக்கூடிய நிகழ்ச்சி இதுவாகையால் இதை அருள் அனுபவம் என்றும் கூறலாம். இந்த அனுபவத்தில் கிடைக்கக்கூடியது பேரறிவாகும். இறைவனாகிய பேரறிவில் உயிராகிய சிற்றறிவு ஐக்கியம் அடைவதே ஆன்மிகச் சாதனையின் முடிவாகும். நமது அருளாளர்கள் இந்தத் துறையில் தலையாய அனுபவம் பெற்றவர்கள். அவர்களுடைய அனுபவமும், எடுத்துக்காட்டலும் ஆன்மிக அடிப்படையில் முடிவான முடிவாகும். ஏனென்றால், அவை உயிருக்குச் சொல்லொணா இன்பத்தையும், அமைதியையும், மன நிறைவையும் தருகின்றன.

இந்த இடத்தில் நாம் நம்முடைய அனுபவங்களைப் பற்றிச் சற்று சிந்திப்பது நல்லது. நாம், நம்முடைய பொறிகள், புலன்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி, நம்மைச் சுற்றியுள்ள பொருள்களைப் பற்றிய அறிவையும்

அனுபவத்தையும் பெறுகிறோம். இதை விஷய அனுபவம் என்பார்கள். நம்முடைய ஆற்றல் எல்லாம் இந்த விஷய அனுபவத்தைப் பெறுவதிலேயே பயன்படுத்தப்படுகின்றது. கடந்த சில நூற்றாண்டுகளில் அறிஞர்கள் பலர் மனிதனைப் பற்றியும், இந்தப் பூமியைப் பற்றியும், பிரபஞ்சத்தைப் பற்றியும் அறிந்து கொள்வதற்கான பல முயற்சிகளில் ஈடுபட்டு, பல நவீன கருவிகளை இதற்காக உற்பத்தி செய்து, அவற்றைப் பயன்படுத்தி, பௌதிக ரசாயன அடிப்படையில், நமது அறிவு வியக்கத்தக்க வகையில் வளரும் வகையில் பல சாதனைகளைப் புரிந்திருக்கிறார்கள். இதனால் பெற்ற அறிவை விஞ்ஞான அறிவு எனலாம்.

பல விஞ்ஞான மேதைகளுடைய முயற்சியின் விளைவாக நமக்கு ஏராளமான விஞ்ஞான அறிவு கிடைத்திருக்கின்றது. இருந்தாலும் விஞ்ஞானிகள் திருப்தி அடைவதில்லை. தாங்கள் பெற்றுள்ள அறிவு முடிவான அறிவில்லை என்று கருதுகின்றார்கள். மேலும், மேலும் தெரிந்து கொள்ள வேண்டும் என்கின்ற ஆவலினால் உந்தப்பட்டு, மேலும் பற்பல புதிய கருவிகளை உருவாக்கி அவற்றின் மூலமாகத் தங்களுடைய அறிவையும் அனுபவத்தையும் விரிவாக்கிக் கொள்கிறார்கள். ஆழப்படுத்திக் கொள்கிறார்கள்.

இருந்தாலும், இயற்கையைப் பற்றிய அறிவை நாம் முழுமையாகப் பெற்றுவிட்டோம் என்று ஒருவராலும் சொல்ல முடியாது. பல கோடி சீவ ராசிகளையும், தாவர இனங்களையும், இயற்கையின் இயக்கம், நியதி ஆகியவற்றையும் நாம் கண்டு அனுபவிக்கும்போதெல்லாம் இயற்கையின் விரிந்த ஆழ்ந்த தன்மை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பொருளைக் கூறிட்டுக் கொண்டே போனால் கடைசியில் கிடைப்பது எல்லாவற்றையும்விட நுண்ணியமான அணு என்கின்ற பொருள் என்று விஞ்ஞானிகள் கூறினார்கள். ஆனால், இப்பொழுது அந்த அணுவையும் பிளந்து பார்க்கும்போது அதற்குள்ளும் பல பொருள்கள் இருப்பதைத் தத்துவ ரீதியாகவும், பரிசோதனைகள் மூலமாகவும் விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளார்கள். இவ்வாறு சொல்லக்கூடிய அணுவின் உட்பொருட்களில் ஒன்று எலக்ட்ரான் என்பதாகும். இந்த அணுவையோ அல்லது எலக்ட்ரான் போன்ற அணுவின் உட்பொருட்களையோ நாம் கண்களால் காண முடியாது. எனினும் அவை இல்லையென்று ஒருவரும் மறுத்துச் சொல்வதில்லை. ஒரு காலத்தில் அணுவுக்குள் இந்த எலக்ட்ரான் என்பது வட்டமாக நடுவில் இருக்கும் புரோட்டான், நியூட்ரான் போன்ற உட்பொருட்களைச் சுற்றி வந்ததாகக் கருதப்பட்டது. ஆனால், இப்பொழுது அந்த எலக்ட்ரான் என்னும் உட்பொருளுடைய தன்மையை மேலும் மேலும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது அதைக் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் ஒரு இடத்தில் இருப்பதாக நிர்ணயிக்க முடியாது என்று விஞ்ஞானிகள் கூறி வருகின்றனர். ஓரளவு அதை யூகிக்கலாமென்றும் மற்றபடி தெளிவாக அதனுடைய நிலையை நிர்ணயிப்பது கடினம் என்றும் இப்பொழுது கருதப்பட்டு

வருகின்றது. அணுவின் உட்பொருள்களுக்குள் ஏராளமான பலவிதத் தன்மை வாய்ந்த உட்பொருள்கள் இருப்பதாகவும் கூறப்படுகின்றது. ஆகவே, இயற்கையின் தன்மையை முடிவாகப் புரிந்துகொண்டு விட்டோமென்று கூற முடியாது.

வேறு உதாரணத்தையும் கொடுக்கலாம். சென்ற நூற்றாண்டில் விஞ்ஞானிகள் பொருள் (Matter) என்றும் ஆற்றல் (Energy) என்றும் பேசி வந்தார்கள். இன்று இவ்வாறு இவ்விதமாகப் பாகுபாடு செய்யப்படுவதில்லை. பொருளுக்கும் ஆற்றல் நிறைந்திருப்பதாகவும், பொருளையே ஆற்றலாக்கி விடலாமென்றும், ஆற்றலைப் பொருளாக்கி விடலாமென்றும் விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது இயற்கையின் உண்மையான தன்மையை அறிவதென்பது மிகக் கடினமென்றே புலப்படுகிறது. ஆனால், விஞ்ஞானிகள் சளைத்துவிடாமல் மேலும் மேலும் பரிசோதனைகள் மூலம் அறிவை வளர்த்துக் கொண்டே போகின்றார்கள். அறிவு வளர வளர நாகரீகமும் வளர்கிறது. எந்தக் கொள்கையை முன்வைத்து அறிவை அடைய முற்படுகின்றோமோ அந்தக் கொள்கை மறக்கப்பட்டு அறிவினால் கிடைக்கக்கூடிய ஆற்றலை இக வாழ்விற்குப் பயன்படுத்தவே தொடங்கி விடுகின்றோம். இதுவும் திருவருளின் விளையாட்டு போலும்!

அருளாளர்கள் உணர்வு நிலையிலிருந்து கொண்டு பிரபஞ்சங்களின் எல்லா உண்மைகளையும் திருவருளால் தம்முள் உணர்ந்து கொள்கின்றார்கள். உதாரணமாக, அண்டங்களிலுள்ள கோள்கள், புவனங்கள் அனைத்தும் உருண்டை வடிவமாகவே உள்ளன என்றும், அவை எந்த அளவையாலும் அளந்து காண முடியாதவை எனவும், அவற்றின் அற்புதங்கள் சொல்லில் அடங்கா எனவும், இவ்வண்டங்கள் விரிந்தவண்ணம் உள்ளன எனவும், வீட்டுச் சாளரத்தின் வழியே புகும் சூரியனின் கதிர்களில் மிதக்கும் நுண்ணிய அணுப்போன்ற துகள்கள் போல எண்ணிறந்த உலகங்கள் மிதந்து கொண்டிருக்கின்றன எனவும், கூறியுள்ள மணிவாசகப் பெருமானின் திருவாக்கினை நினைத்துப் பார்க்கும்பொழுது அருளாளர்கள் மெய்ஞ்ஞான வழியில் பல உண்மைகளைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தெரிந்து கொண்டு விட்டார்கள் என்பது நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றது.

**"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்**
**அளப்பரும் தன்மை வளப்பரும் காட்சி**

**ஒன்றனுக்கு ஒன்று நின்று எழில்பகரின்**
**நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன**
**இல்நுழை கதிரின் நுண் அணுப் புரையச்**
**சிறியவாகப் பெரியோன் தெரியின்"**

**(திருவண்டப்பகுதி - திருவாசகம்)**

நம்மால் பொருளிலுள்ள அணுவை ஐம்பொறிகளின் மூலம் உணர முடிவதில்லை. ஆனால், அணுவின் தன்மையைப் பற்றி விஞ்ஞானிகள் கூறுவதை ஒப்புக் கொள்கின்றோம். காற்றை நாம் பார்ப்பதில்லை: ஆனால் காற்றடிப்பதை உணர்ந்து கொள்கின்றோம். ஆகாயத்தைப் பார்க்கின்றோம்; ஆனால் ஆகாயம் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள முடிவதில்லை. அவ்வளவு தூரம் போகத் தேவையில்லை. நம்மைச் சுற்றிப் பற்பல சீவராசிகளைப் பாபார்க்கின்றோம். ஆனால், அவை எவ்வாறு இயங்குகின்றன என்பதைத் தெரிந்து கொள்ளவில்லை. தெரிந்த சில விஷயங்களை வைத்துக் கொண்டு பெருமையாகப் பேசிக் கொள்கின்றோம். ஆனால், தெரியாதவற்றை நினைக்க வேண்டிய சந்தர்ப்பம் வரும்பொழுது புரியாத நிலையில் தட்டிக் கழித்து விடுகின்றோம். விஞ்ஞானிகள் சொல்லுவதை ஒப்புக் கொள்ளும் நாம் ஆன்மிக அனுபவம் பெற்ற அருளாளர்கள் கூறுவதை ஒப்புக் கொள்ளத் தயங்குகின்றோம். இறைவன் இல்லை என்கிற நிலையிலிருந்து வாதத்தைத் தொடங்கும் பெரியவர்கள், விஞ்ஞானத்தின் உண்மைகளை ஒப்புக் கொண்டவர்கள், விஞ்ஞானிகளும் முடிவான உண்மையைக் கண்டுபிடிக்கவில்லை என்பதையும் சற்று புரிந்து கொள்ள வேண்டும். சிறிது அடக்கத்துடன் இந்தப் பிரச்சினையை அணுகிச் சிந்தித்துப் பார்க்கும்பொழுது நாம் ''அறிவு அறிவு'' என்று பறைசாற்றி வரும் நிலை முடிவான நிலை அன்று என்பதைப் புரிந்து கொள்ள இயலும். இதையே திருமந்திரத்தில் திருமூலர் அழகாகப் பின்வருமாறு பாடுகின்றார்:

**''எல்லாம் அறியும் அறிவு தனைவிட்டு**
**எல்லாம் அறிந்தும் இலாபமங் கில்லை**
**எல்லாம் அறிந்த அறிவினை நானெனில்**
**எல்லாம் அறிந்த இறையென வாமே''.** **(திருமந்திரம் - 2596)**

நாம் பெறும் அறிவு சுட்டிக்காட்டுவது என்ன என்பதைப் பற்றிச் சற்று சிந்திக்க வேண்டும். நாம் அறிவு பெறுகின்றோம் என்றால் நாம் யார்? நாம், நமது உடல், அத்தோடு சேர்ந்திருக்கும் கருவிகள், மனம், புத்தி, சித்தம் போன்ற உட்கருவிகள் அல்ல என்பது தெரியும். நாம் யார் என்பதைப் பற்றிய சிந்தனையை வேறொரு கட்டுரையில் தொடருகின்றோம். இங்கே நாம் என்பது உயிர். உயிர் என்பது அறியும் ஆற்றல் பெற்ற ஒரு பொருள் என்கிற அளவுக்குத் தெரிந்து கொள்ளலாம். நாம் அறியும் பொருளாக இருந்தாலும், நம்முடைய அறிவாற்றலுக்கு குறைபாடுகள் உண்டு. நம்முடைய அறிவுச் சக்தி தானாக இயங்குவதில்லை. அறிவோடு அறிவாக பேராற்றல் ஒன்று நமது அறிவை இயக்கி வருவதால்தான் நமது அறிவு இயங்குகின்றது. இல்லாவிட்டால் இயங்காது. மேலும், நம்முடைய அறிவு தான் சார்ந்த பொருளின் தன்மையைப் பெறும் இயல்புடையது. அதாவது எந்த ஒரு நேரமும், எந்தப் பொருளைப் பற்றிச் சார்ந்து இருக்கின்றதோ, அந்தப் பொருளைப் பற்றிய அறிவை மட்டும் பெறும். இவையெல்லாம் நம்முடைய அறிவின் குறைபாடுகள். அதே நேரத்தில் நம்முடைய அறிவாற்றல் நமக்கு

இறைவனால் அருளிச் செய்யப்பட்டிருப்பதால், இறைவனுடைய அருளாற்றலின் தன்மையைக் குறிப்பிட்ட அளவு பெற்றிருக்கின்றது என்பதை உணர வேண்டும். இதுவே உயிர் என்று சொல்லி இயங்கி வருகின்ற நாம் பெற்ற பெரும் புண்ணியம். இறைவன் பேரருளாளன். எல்லையற்ற அறிவொளி பெற்றவன். பேராற்றல் பெற்றவன். அவனுடைய அறிவும் அருளுமே நம்மை இயக்கி வருகின்றன. இதை அருளாளர் பெருமக்கள் நன்கு அறிந்து, உணர்ந்து, அவர்களுடைய அனுபவத்தை நமக்குத் தந்துள்ளார்கள். அவர்களுடைய அறிவாற்றல் புறத்தே சென்று விஷய அனுபவத்தைப் பெறுவதற்குப் பதிலாக நம்முள்ளேயே கிடக்கும் பரம்பொருள் உண்மையை உணர்ந்து கொண்டிருக்கின்றது. அந்த உணர்வை அருளாளர் பெருமக்கள் தோத்திரங்கள், சாத்திரங்கள் மூலமாக நம்முன் வைத்துள்ளார்கள்.

திருமூலர் பெருமான் அருளிச் செய்துள்ள திருமந்திரமாலை ஓர் சிறந்த அனுபவ நூல். அவருடைய திருவாக்கு தெளிவாகவும், ஆழமாகவும் இறை உண்மையை வெளிப்படுத்துகின்றது. எல்லாவற்றிற்கும் சிகரமாக விளக்குவது பாயிரப் பகுதியிலுள்ள முதல் மந்திரம், அது பின்வருமாறு:

**"ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்**
**நின்றவன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து**
**வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்**
**சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே". (திருமந்திரம் - 1)**

அதே நிலையை விவரிக்கும் திருஞானசம்பந்தருடைய பாசுரம் வருமாறு:

**"ஈறாய்முதல் ஒன்றாய்இரு பெண் ஆண்குணம் மூன்றாய்**
**மாறாமறை நான்காய்வரு பூதம் அவை ஐந்தாய்**
**ஆறார்சுவை எழோசையொ டெட்டுத்திசை தானாய்**
**வேறாய்உடன் ஆனான் இடம் வீழிம்மிழ லையே".**

அப்பர் சுவாமிகள் பின்வருமாறு அருளுகின்றார்:

**"இரு நிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனாய்**
**எறியும் காற்று மாகி**

**அருநிலையதிங் களாய் ஞாயிறாகி ஆகாசமாய்**
**அட்ட மூர்த்தியாகிப்**

**பெருநலமும் குற்றமும், பெண்ணும் ஆணும்**
**பிறர்உருவும், தம்முருவும் தாமேயாகி,**

**நெருநலையாய் இன்றாகி நாளையாகி**
**நிமிர்புன் சடை அடிகள் நின்றவாறே".**

இரத்தினச் சுருக்கமாக மாணிக்கவாசகர் ''ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க'' என்று வாழ்த்துகின்றார்.

அருட்பிரகாச வள்ளலார் இந்த உண்மையை மேலும் பின்வரும் அடிகளில் தெளிவாக்குகின்றார்:

**''மந்திரமாய்ப் பதமாகி, வண்ண மாகி,**
**வளர்க லையாய்த் தத்துவமாய்ப் புவன மாகி,**

**சந்திரனாய், இந்திரனாய், இரவி யாகித்**
**தானவராய், வானவராய்த் தயங்கா நின்ற**

**தந்திரமாய், இவையொன்றும் அல்ல வாகித்**
**தானாகித் தனதாகித் 'தான்நான்' காட்டா**

**அந்தரமாய் அப்பாலாய், அதற்கப் பாலாய்,**
**அப்பாலுக் கப்பலாய் அமர்ந்த தேவே''.**

இவற்றையெல்லாம் பார்த்தால் இறை உணர்வாளர்களுடைய அனுபவம் ஒன்றேதான் என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியும். தங்களுடைய யோகத்தின் ஆற்றலாலும், தவத்தின் வலிமையாலும், தியானத்தின் ஆழத்தினாலும், உண்மையை உணர்ந்த அருளாளர்கள் தங்கள் உள்ளத்தில் எழும் அனுபவங்களை மந்திரமாக நமக்குத் தரும்பொழுது, உண்மை ஒன்றே என்கின்ற காரணத்தினால் அவர்களுடைய மொழியில் ஒற்றுமை தோன்றுகிறது.

அருளாளர்கள் தரும் பரம்பொருள் விளக்கம் அவர்களுடைய அனுபவத்திலே தோன்றியதாகும். இறைவனைச் சிற்றறிவினால் அறிந்து கொள்ள முடியாது. நமது அறிவுக்கு அப்பாற்பட்டு இருக்கும் ஓர் உண்மையை இறைவனுடைய திருவருளாலே நாம் அறிந்து கொள்ள முடியும். திருவருளைப் பெற்ற அருளாளர்களுடைய திருவாக்கு மந்திர சக்தியைப் பெற்றது. அவர்களுடைய பரம்பொருள் விளக்கம் முழுமை யானது. எல்லா அனுபவங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது. ஒன்று அவன்தானே என்று கூறிவிட்டார் திருமூலர் பெருமான்.

இறைவன் ஒருவனே என்பது அதற்குப் பொருள். உலகெலாம் வியாபித்திருப்பதும் ஒரே பொருளே. மற்றவையெல்லாம் தெய்வங்கள். பரம்பொருளின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் உட்பட்டு இயங்குகின்றன. மெய்ப்பொருள் ஒன்றாகத்தான் இருக்க முடியும். உள்ளது ஒன்றே. அதுவே உண்மை என்பது வேத வாக்கு. இறைவன் பரிபூரணன். பரம்பொருளுக்குப் பல பெயர்கள் கொடுத்து வழிபட்டாலும் உள்ளது ஒன்றே. ஒரு நேரத்தில் அல்லது ஒரு இடத்தில் இருந்து மறைந்து, மற்றொரு நேரத்தில் அல்லது மற்றொரு இடத்தில் அழிந்து மறைவது மெய்ப்பொருள் ஆகாது.

இடத்தாலும், காலத்தாலும் கட்டுப்படாதவை மெய்ப்பொருள். தோன்றி அழியக்கூடிய பொருளை மெய்ப்பொருள் என்று கூற முடியாது. ''நித்தியமாய், நிர்மலமாய், நிட்கலமாய், நிராமயமாய், நிறைவாய், நீங்காச் சுத்தமுமாய், தூரமுமாய், சமீபமுமாய், துரிய நிறைச்சுடராய்'' விளங்கும் என்று பரம்பொருளின் தன்மையைத் தாயுமானார் பெருமான் கூறுகின்றார்.

பரம்பொருளின் தன்மையைப் பலவாறாகப் பிரித்துச் சொன்னாலும் எல்லாவற்றிற்கும் மேலாகப் பரம்பொருள் என்பது ''சத், சித், ஆனந்தம்'' என்றே அழைக்கப்படுகிறது. இந்த மூன்று நிலைகளையும் உணர்ந்தே அனுபவிக்க இயலும். எனவேதான் சமயத்தின் குறிக்கோள் இந்த மூன்று நிலைகளையும் அனுபவித்துத் தனதாக்கிக் கொள்வது என்பதாகும். சமயங்களும் மக்களும் பரம்பொருள் எங்கும் வியாபித்திருக்கின்ற நிலையில் அதுவே நிலையான பொருள் என்று எடுத்துரைக்கின்றனர். **''சுத்த சிவம் எங்கும் தோய்ந்து நிற்கின்றான்''** என்கின்றார் திருமூலர். **''எங்கும் சிவனடிக்கே செல்வம்''** என்பதும் திருமூலர் வாக்கு. இப்பரம்பொருள் **''நெஞ்சு நிறைந்தங் கிருந்த நெடுஞ்சுடர்''** (திருமூலர்) ஆகும்.

**எல்லா வுயிர்க்கும் இறைவனே யாயினும்**
**கல்லாதார் நெஞ்சத்துக் காண வொண்ணாதே.**

**(திருமந்திரம் - 312)**

எல்லாவற்றிற்கும் காரணமான எங்கும் பரவியுள்ள பரம்பொருளின் தன்மையை விளக்க இயலாத நிலையைப் பிரம்மனும் திருமாலும் அடிமுடி காணாத நிலை என்று கூறப்படுகின்றது. இந்த மெய்ப்பொருள் ஒன்றைத்தான் பலர் பலவாறாகத் துதிக்கின்றனர். இதையே

**''ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி''**

என்று ருக் வேதம் கூறுகின்றது.

**''ஆரறி வார்எங்கள் அண்ணல் பெருமையை**
**யாரறி வார்இந்த அகலமும் நீளமும்**
**பேரறி யாத பெருஞ்சுடர் ஒன்றதின்**
**வேரறி யாமை விளம்புகின் றேனே''.** **(திருமந்திரம் - 95)**

பரம்பொருளைச் சுட்டறிவினால் மட்டும் அறிந்து கொள்ள முடியாது. அவனருளாலே நம்முடைய உணர்வுகள் தூய்மைப்பட்டிருக்கும் நேரத்தில் உள்ளத்திலே தோன்றும் ஞான ஒளி வாயிலாக உணர்ந்து கொள்ள முடியும். அப்படி அனுபவிக்கப்படும் பரம்பொருளைச் சத்தியம், ஞானம், ஆனந்தம் என்று மறைகள் கூறுகின்றன. பரம்பொருள் அறிவுப் பெருவழி. ஆனந்தத்தின் இருப்பிடம். இங்கே பயன்படுத்தப்படும் சொல் ஆனந்தம். இன்பம் என்று கூறுகின்றபொழுது அதற்கெதிராகத் துன்பம் என்கிற அனுபவம் உடனேயே வருகின்றது. ஆனால், ஆனந்தம் என்கின்ற நிலைக்கு

எதிராகவோ மேலாகவோ ஒரு நிலை கிடையாது. ஆனந்தத்திலிருந்து உயிர்கள் தோன்றின. தோன்றிய உயிர்களெல்லாம் ஆனந்தத்தில் வாழ்கின்றன. இறுதியில் ஆனந்தத்தில் லயமடைகின்றன என்று உபநிடதங்கள் கூறுகின்றன. பரம்பொருளோடு வேறொரு தெய்வத்தையும் ஒப்பிட முடியாது. ''சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை'' என்பார் திருமூலர் பெருமான். அவனுக்கு உவமை அவனே. அவனின்றி வேறு தேவர்களும் இல்லை. அவனல்லாது செய்கின்ற தவங்களும் இல்லை. பரம்பொருளின்றிப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருள் புரிதல் போன்ற தொழில்கள் நடைபெறா. உயிர்களுக்குத் தலைவன் ஈசன், அவனின்றி ஒரு அணுவும் அசையாது. அவனுக்கு அப்பாற்பட்டு வேறு ஒன்றும் இல்லை. எங்கும் வியாபித்திருக்கும் பரம்பொருள் எதிலும், எல்லாவற்றிலும் அடங்கி நிற்கும். ''படம் கொண்டு நின்ற பல்லுயிர்க்கெல்லாம் அடங்கலும் தாமுமாய் நின்றான்'' என்பார் திருமூலர் பெருமான். உயிருக்கு உயிராக நிற்கும் ஈசன், அணுவிற்கு அணுவாக அடங்கி நிற்கும். இன்று விஞ்ஞானிகள் அணுவுக்குள்ளே மாபெரும் சக்தியை கண்டுபிடித்துள்ளார்கள். சக்தி என்பது இறைவனுடைய அம்சமாகும். அணுவுக்குள்ளே ஈசன் இருப்பதைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே திருமூலர் பெருமான் சொல்லிவிட்டார்.

**''அணுவில் அணுவினை ஆதிப் பிரானை**
**அணுவில் அணுவினை ஆயிரங் கூறிட்**
**டணுவில் அணுவை அணுக வல்லார்கட்**
**கணுவில் அணுவை அணுகலுமாமே''.** (திருமந்திரம் - 2003)

அணுவைத் துளைத்துப் பார்க்கும் பொழுதும் அந்த அணுவிலே தெரியக் கூடிய சக்தியை இறைவனுடைய சக்தியாகவே திருமூலர் பெருமான் பார்க்கின்றார். அருளாளர்கள் கண்ட உண்மை அணுவை எவ்வளவு கூறிட்டுப் பார்த்தாலும் அகக் கண்கட்குத் தோன்றும் காட்சி அந்த இறைவனுடைய தன்மையேயாகும். இறைவன் அணுவிற்குள் அணுவாக இருக்கின்றான். பரம்பொருளை அனுபவிக்க முயல்பவர்கள் சிந்தனையில் இது முதற்கட்டமாகத் தோன்ற வேண்டும். அணுவுக்குள் அவனும், அவனுள் அணுவும் வேற்றுமையற்ற நிலையில் கலந்திருக்கக் கூடிய உண்மை நன்கு தெரிந்து விடும்.

**''அணுவுள் அவனும் அவனுள் அணுவுங்**
**கணுவற நின்ற கலப்ப துணரார்**
**இணையிலி யீச னவனெங்கு மாகித்**
**தணிவற நின்றான் சராசரந் தானே''.** (திருமந்திரம் - 2010)

''அணுத் தரும் தன்மையில் ஐயோன் காண்க'' என்று மாணிக்கவாசகர் குறிப்பிடுகின்றார்.

அணுவில் இருக்கும் இறைவன் அண்டமெல்லாம் நிறைந்தவனாகவும் அதற்கும் அப்பாற்பட்டும் நிற்கின்றான். எல்லையற்ற பரம்பொருள் மண்ணிலும் விண்ணிலும், தீயிலும் நீரிலும், நிற்பது மட்டுமல்லாமல் அவற்றிற்கெல்லாம் ஆதாரமாகவும் விளங்குகிறது. சொற்பதம் கடந்த தொல்லோனுடைய அருளினால், ஆணையால், சராசரங்கள் யாவும் சுழன்றும் இயங்கியும் வருகின்றன. இறைவனுடைய தாண்டவம் எப்போதும் எல்லா இடங்களிலும் காணப்படுகின்றது. ''எங்கும் திருமேனி, எங்கும் சிவசக்தி''. எண்ணிலா அண்டங்களுக்கும் இறைவன் ஆதாரமாக விளங்குகின்றான். பல்வகைச் சீவராசிகளுக்கு அடிப்படைத் தத்துவமாக விளங்குகின்றான். பல திசைகளிலும் சூழ்ந்துள்ள இறைவனுக்கு எண்ணற்ற பிரபஞ்சங்களே நடஞ்செய்யும் ஆலயமாக அமைகின்றன.

**''அண்டம் எழுகோடி பிண்டம் எழுகோடி**
**தெண்டிரை சூழ்ந்த திசைகள் எழுகோடி**
**எண்டிசை சூழ்ந்த இலிங்கம் எழுகோடி**
**அண்ட நடஞ்செயும் ஆலயந் தானே''.** (திருமந்திரம் - 2773)

அருவமாக இருக்கும் பரம்பொருள் உயிர்களின் உணவுக்காக அரு உருவமாகவும், உருவமாகவும், அனுபவப் பொருளாகவும் உயிர்களோடு கலந்துள்ள நிலையில் உணர்வுகளால் அறிந்து கொள்ளக்கூடிய தன்மையிலும் நிற்கின்றது. பரம்பொருள் எண்ணற்ற அண்டங்களோடு கலந்து நிற்கின்றது. உள்ளும் புறமும் தோய்ந்து நிற்கிறது. நீரினில் பால் போல் குணமும், மணமும் இணைந்து நிற்கின்றது. இதை உணர்ந்தால் கிடைக்கக்கூடிய ஆனந்தம் விவரிக்க இயலாத ஒன்று.

**''ஆரும் அறியாத அண்டத் திருவுருப்**
**பார்முத லாகப் பயிலுங் கடத்திலே**
**நீரின்றிப் பால்போல் நிற்கின்ற நேர்மையைச்**
**சோராமற் காணுஞ் சுகம் அறிந் தேனே.''** (திருமந்திரம் - 450)

இறைவன் படைத்தலுக்கும், காத்தலுக்கும், ஒடுக்கத்திற்கும் காரணமாக இருக்கின்றான். அவனே உயிர்களுக்கு அருள் புரிந்து, தக்க நேரத்தில் பல பரிபாகம் செய்து அவற்றைத் தன்னுடன் கலக்கச் செய்கின்றான். விரும்பியமாத்திரத்திலேயே பல ஊழிகளையும், உலகங்களையும், உடலையும் படைத்து அருள் புரிபவன் அவனே.

**''ஒருவனுமே உலகேழும் படைத்தான்**
**ஒருவனுமே உலகேழும் அளித்தான்**
**ஒருவனுமே உலகேழும் துடைத்தான்**
**ஒருவனுமே உலகோடு உயிர்தானே.''** (திருமந்திரம் - 404)

இறைவன் உடலிலும், உயிரிலும், அசையும் பொருளிலும், அசையாப் பொருளிலும் இரண்டறக் கலந்துள்ளான். தண்ணீரில் உப்புக் கரைந்திருக்கும்

பொழுது உப்பினைத் தனியாகப் பார்க்க முடிவதில்லை. ஆனால், கதிரவனின் வெப்பத்தால் நீர் ஆவியாகும் பொழுது உப்பானது தனியே தங்குகின்றது. அதேபோல இறைவன் தான் படைத்த உயிரினங்களுடன் வேற்றுமையின்றிக் கலந்துள்ளான்.

இதனையே மாணிக்கவாசகர் ''எள்ளும் எண்ணெயும் போல் நின்ற எந்தையே'' என்கின்றார்.

எல்லாப் பொருள்களிலும் வியாபித்துள்ள இறைவன் இப்பூவுலகத்தைத் தாங்கிக் கொண்டு ஆகாய வடிவினனாய் இருக்கின்றான். அவனே சுடுகின்ற தீயாகவும், கதிரவனாகவும், திங்களாகவும் உள்ளான். அவனே அருள் மழை பொழியும் ஆற்றலாகவும் நிற்கின்றான். அவனே பரந்து உயர்ந்த மலையாகவும், குளிர்ச்சியான கடலாகவும் நிற்கின்றான். இந்த மந்திரத்தின் உட்பொருள் அவனன்றி வேறில்லை என்பதேயாகும். அவனாலேயே அசைவில்லாத சடப்பொருள்கள் அசைகின்றன. அவனன்றி ஓர் அணுவும் அசையாது.

**''தானே இருநிலந் தாங்கிவிண் ணாய் நிற்குந்**
**தானே சுடும் அங்கி ஞாயிறுந் திங்களுந்**
**தானே மழைமொழி தையலு மாய் நிற்குந்**
**தானே தடவரை தண்கட லாமே''.** **(திருமந்திரம் - 10)**

அருளாளர்கள் இறைவனைத் தூய சோதியாக, நந்தா விளக்காக, மாசற்ற சுடராகத் தங்களுடைய உள்ளத்தில் அனுபவிக்கின்றார்கள். சூரியனும் சந்திரனும், விண்மீன்களும் அவனது ஒளியாலேயே பிரகாசிக்கின்றன. அவற்றின் இயக்கங்களில் அவன் வெளிப்பட்டு நிற்கின்றான். இறையெனும் அணையா விளக்கைத்தவிர வேறு விளக்கு இருக்க முடியாது. நம்முள் விளக்கினை ஏற்றி, வெளியை, அம்பலத்தை அறிய வேண்டும்.

அறிவு வழியாகப் பரம்பொருளின் தன்மையை விளக்கிக் கொண்டே போனாலும், அதை உணர்வுரீதியாக அனுபவித்தாலன்றி உண்மை விளக்கம் கிடைக்காது. அருளாளர்கள் இந்த உண்மை விளக்கத்தைப் பெற்றவர்கள். பரிசோதனை மூலமாகவும் விஞ்ஞான வழிகளினாலும் ஐம்பொறிகளைப் பயன்படுத்தி அவர்கள் இந்த உண்மையைக் கண்டுகொள்ளவில்லை. இந்த உண்மையை உணர்வதற்கான வழிகள் வேறு என்பதை அவர்கள் அறிவார்கள். அவர்கள் கடைப்பிடித்த மார்க்கம், வழி நடந்து சென்ற பாதை, மற்ற மார்க்கங்கள், பாதைகள் போல் அல்ல. இறைவனை அவர்கள் எங்கெல்லாமோ தேடிச் செல்லவில்லை. புண்ணிய நதிகளில் நீராடுவதும், திருத்தலங்களுக்குச் சென்று அங்குள்ள இறைவனை வணங்குவதும், ஆன்மிகத்தில் பக்குவமடைந்த பெரியோர்கள் உபதேசங்களைக் கேட்பதும் ஓரளவிற்குப் பயன்படுகின்றன. நமது மனதைக் குவித்து, ஒருங்கமைத்து

தான் என்கின்ற நினைவை சற்று அகற்றி வைப்பதற்கு இந்த மார்க்கங்கள் பயன்படுகின்றன. அவற்றின் எல்லையை அடைந்த அருளாளர்கள் தாங்கள் வீற்றிருந்த இடங்களிலேயே இறைவனைக் காண்கின்றார்கள், வணங்குகின்றார்கள், வழிபடுகிறார்கள். எல்லாவற்றிற்கும் அடிப்படையாக இருக்கக்கூடிய பரம்பொருள் ஊனிலும் உயிரிலும் உள்ளது என்று அனுபவித்த அருளாளர்களின் திருவாக்கு மந்திரமாகும். அது நிலை பெற்றது. மாறாத தன்மையை உடையது. இது புறவழிச் சாதனையன்று. இது அகவழிச் சாதனையாகும்.

**"என்ஒன்றி நினைந்தவர் தம்பால்**
**உள்நின்று மகிழ்ந்தவன் ஊர்ஆம்"**

என்கிறார் திருஞானசம்பந்தர்.

அறிவுக்கு அப்பாற்பட்ட இறைவனை அனுபவப் பொருளாக்கிய சாதனை நம்முடைய அருளாளர்களைச் சாரும். நமது சுட்டறிவுக்கு எட்டாத இறைவனைத் தனது உள்ளம் கவர்கள்வன் என்று கூறித் தன்னுடைய குழந்தை விரலால் சீர்காழிப் பெருமானைச் சுட்டிக்காட்டி "பிரம்மாபுரம் மேவிய பெம்மான்" என்று உலகோருக்கு உணர்த்திய பெருமை உலகின் முதல் ஞான குருவான திருஞானசம்பந்தப் பெருமானைச் சேரும். புறத்தே இறைக்காட்சியைத் தந்து அனுபவிக்கும் மெய்யுணர்வாளர்கள் அகத்தேயும் இக்காட்சியிலே ஊறி நிற்பதை அருளாளர்களுடைய திருவாக்கின் வாயிலாக அறிந்து கொள்கின்றோம். இதைப் பற்றிச் சற்று மேலும் சிந்திக்க வேண்டும். இறைவன் நமது உடலிலும் தங்குகின்றான் என்று கூறுவதைப் பலர் ஏற்பதில்லை. நமது உடல் ஒரு சடப்பொருள். அழியும் தன்மையுடையது. இது எவ்வாறு இறைவனுடைய இருப்பிடமாகும் என்று பகுத்தறிவாளர்கள் ஐயம் எழுப்புகின்றார்கள். இதற்கு அறிவு ரீதியான விளக்கம் கொடுப்பது கடினம். அருளாளர்களுடைய அனுபவத்தைச் சுட்டிக் காட்டி அதை விளக்கமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றால் அதை பகுத்தறிவாளர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அவர்களைப் பொறுத்தவரை இதுபோன்ற அனுபவத்தை விஞ்ஞானரீதியாக விளக்க முடியாது என்பதே அவர்களுடைய நிலையாகும்.

மனிதன் தோன்றின நாள் முதற்றே பரம்பொருள் என்று ஒன்று உள்ளதா இல்லையா என்கின்ற கேள்வியைக் கேட்டுக்கேட்டு அதற்குப் பலவாறாகப் பதில் அளிக்கச் சிந்தனையாளர்கள் முயற்சி செய்திருக்கின்றார்கள். இறைவனைப் புறத்திலே காண முடியும் என்கின்ற கோட்பாடு உடைய சமயங்கள் நம் நாட்டில் மட்டுமன்று, மேல்நாடுகளிலும் இருந்து வந்துள்ளன. ஆனால், எல்லாவற்றிற்கும் மேலான நிலையான இறைவனைத் தம்முள் உணர முடியும் என்னும் எண்ணத்தை, நம்பிக்கையை உலகிற்கு அருளாளர்கள் தங்களுடைய அனுபவம் மூலமாக எடுத்துக் காட்டியுள்ளார்கள். இந்த உணர்வு நிலையைப் பற்றிச் சற்று சிந்திக்க

வேண்டும். நம்முடைய ஐம்பொறிகள் இயங்கும் பொழுது அவை தூண்டி விடுவது நம்முடைய உள் உணர்வைத்தான் என்பதை முதலில் யாவரும் ஒப்புக் கொள்வார்கள். கண்கள் பார்க்கின்றன, காதுகள் கேட்கின்றன, வாய் பேசுகிறது, மூக்கு நுகர்கிறது. நாம் வேறு ஒரு பொருளைத் தொடும்பொழுது அதனாலும் பற்று உணர்வு ஏற்படுகிறது. இந்த ஐம்பொறிகள் புறத்தே உள்ள பொருட்கள் பற்றிய அறிவினை நம்முள் இருக்கும் மனதுக்குள் சேர்க்கின்றன. மனமானது விஷய அனுபவங்களில் சேர்க்கையாகின்றது. அவற்றால் எழும்பக்கூடிய எண்ண அலைகள் மனத்தின் அமைப்பிற்கு உரு அளிக்கின்றன. இந்த விஷய அனுபவங்களையும், எண்ண அலைகளையும் பாகுபடுத்தி அவற்றிற்கெனப் பொருளையும் நெறியையும் தருகின்றது புத்தி. இந்தப் பக்கம் எல்லாம் நிறைவேற்றப்பட வேண்டுமென்றால் நான் என்கின்ற எழுச்சி தோன்ற வேண்டும். நான் என்கின்ற முனைப்பின்றி விஷய அனுபவங்களுக்கும் எண்ணங்களுக்கும் பொருளே இருக்காது. மனம், புத்தி, அகங்காரம் ஆகியவற்றை உட்கருவிகள் என்று சொல்லுவார்கள். இந்த உட்கரணங்களின் பணியே மற்ற உயிர்களிடத்தே தம் நிலையை வலுப்படுத்திக் கொள்வதுதான். இவ்வாறு வலுப்படுத்திக் கொள்வதன் வாயிலாகவே பிரபஞ்ச இயக்கம் நடைபெறுகிறது. படைப்புத் தொழில் தொடங்குகிறது.

உடலையும், உடலில் கருவிகளையும் கொண்டு புறத்தை மையமாக வைத்து வாழும் வாழ்க்கை நான், எனது என்கிற பற்றின் அடிப்படையில் அமைகின்றது. வேற்றுமைகள் வளருகின்றன. புறக்காட்சி உடலையும், உள்ளத்தையும் நிரப்புகின்றது. அகக்காட்சி மறைகின்றது. சாதாரணமாகச் சொல்லப் போனால் வாழ்வின் நிர்ப்பந்தங்களில் மூழ்கி உலகத் தத்துவங்களிலே ஈடுபட்டு சமூகத்தின் கட்டுப்பாடுகளுக்குள் வாழ்ந்து குடும்பம் என்றும், மனைவி மக்கள் என்றும், சொத்தென்றும், செல்வமென்றும் சூழலில் அகப்பட்டுக் கொண்டு அத்தகைய சூழலில் வீழ்ந்து நிற்கின்றோம் என்றும் அறிந்து கொள்ளாமல் ஒருவித மாயையில் நாம் இருக்கும்போது, நமது மனதை உட்புறம் செலுத்தி, அக்காட்சி பெறும் முயற்சியில் இயங்குவது மிகமிகக் கடினமாகும். அகக்காட்சி என்கிற உணர்வே, அனுபவமே இருக்க முடியாது என்றுகூடச் சொல்லத் தோன்றும். இந்த நிலையை மாற்றி வெற்றி கண்டவர்கள் அருளாளர் பெருமக்கள். மனம், புத்தி, அகங்காரம் போன்றவைகள் வெறும் கருவிகள் என்று அவர்கள் உணர்ந்தவர்கள். அவற்றை முதற்கண் அவர்கள் அடக்க முற்படுகிறார்கள். சதா வெளியே தாவி ஓடத் தயாராக இருக்கும் ஐம்பொறிகளைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகிறார்கள். மனமும், எண்ண அலைகளும் விஷய அனுபவத் துடிப்பும் சிறிது சிறிதாகத் தங்கள் இயக்கத்தைக் குறைத்து ஒடுங்கிய நிலையில் வரும் பொழுது சொல்லொணா அமைதி தோன்ற ஆரம்பிக்கின்றது. அகண்ட, ஆழ்ந்த கடலின் கரையோரத்தில் நின்று இயற்கைக் காட்சியை அனுபவிக்கும் ஒருவனுக்கு, என்றும் ஓயாத கடலலைகளின் படமும், அவ்வலைகளின் ஓசையுமே மனதில் நிற்கின்றது. கடலின் அகண்ட, விரிந்த, ஆழ்ந்த தன்மையை அவன் அப்பொழுது அறிந்து

கொள்வதில்லை. அதே மனிதன் ஒரு கப்பலில் நடுக்கடலில் பிரயாணம் செய்யும் பொழுது நான்கு பக்கங்களிலுமுள்ள நீரின் கரையற்ற நிலையை உணருகிறான். கடலின் ஆழத்தையும் அவன் ஓரளவு புரிந்து கொள்ள முடிகின்றது. அலையற்ற அக்கடலின் மத்தியில் பிரயாணம் செய்யும் அவனுக்குச் சிந்தை தெளிகின்றது. மனம் அமைதி அடைகின்றது. அந்த நிலையில் கடலின் உண்மையான தன்மையை உணர்ந்து கொள்கின்றான்.

**"திரையற்ற நீர்போல் சிந்தை தெளிவார்க்குப்**
**புரையற் றிருந்தான் புரிசடை யோனே". (திருமந்திரம் - 2955)**

மனதிலே சஞ்சலங்கள் நிற்கின்ற பொழுது கிடைக்கும் அனுபவத்தில் ஞானிகள் இறைவனைக் காண்கின்றார்கள். அதாவது இறைவனுடைய ஆற்றலை உணருகின்றார்கள். அவர்களுடைய அறிவு பெரும் மாறுதலை அடைகிறது. எங்கும் வியாபித்து நிற்கும் பேரறிவைப் பேரொளியாகக் காண்கிறார்கள். இந்தப் பேரறிவே உயிருக்கு உயிராக நின்று உயிரை, உடலை இயக்குகின்றது என்று தெரிந்து கொள்கிறார்கள். இதுவே அவர்கள் பரம் பொருளை உணர்ந்த நிலையாகும். அந்த நிலைக்கு வந்தவர்கள் இறைவனை வேறெங்கும் தேடப்போவதில்லை. சாதாரண மக்கள் உண்மையில் இறைவனை வழிபட வேண்டுமென்கின்ற ஆவலுடன் மனம் என்கின்ற தேரிலேறி நாடு முழுவதும் அலைந்து திரிகின்றார்கள். அந்த மனம் என்னும் தேருடன் பூட்டப்பட்டுள்ள ஐங்குதிரைகளும் ஐம்பொறிகளாகும். ஐம்பொறிகளும் மனமும் போகும் வழியே அவர்கள் சென்று கொண்டிருந்தால் இறைவனை எப்படி அடைவது? மெய்யுணர்வாளர்கள் ஐம்பொறிகளையும் உட்கருவிகளையும் தம்முள் அடக்கித் தானென்கின்ற நிலையை மறந்து இறை அனுபவத்தைப் பெறுகின்றார்கள். எங்கும் வியாபித்துள்ள இறைவன் தம்முள் இருப்பதையும் உணருகின்றார்கள். இதைத் திருமூலர் அழகாக எடுத்துரைக்கின்றார்.

**"மாயனை நாடி மனநெடுந் தேரேற்றிப்**
**போயின நாடறி யாதே புலம்புனர்**
**தேயமும் நாடுந் திரிந்தெங்கள் செல்வனைக்**
**காயமின் னாட்டிடைக் கண்டு கொன்டேனே".**
**(திருமந்திரம் - 2983)**

சமய நெறி இறைவனை அடையப் பல வழிகளைச் சுட்டிக் காண்பிக்கின்றது. சிறப்புமிக்க சரியை, கிரியை, யோகம், ஞானம் போன்றவை சைவ சமயம் காண்பிக்கும் பாதைகளாகும். சமய நெறிக்குட்பட்டு வாழ்க்கையை இறை வழிபாட்டுக் களமாக எண்ணித் தாம் மேற்கொள்ளும் எல்லாவிதப் பணிகளும் இறைவனுக்குச் செய்யும் தொண்டு என்கின்ற வகையில் வாழ்க்கையை வாழ்ந்து, அதிலே ஒரு மகிழ்ச்சியையும் அமைதியையும் பெற்று, கர்மங்களின் வலிமையை உணர்ந்தவண்ணம், அந்த வலிமையைக் குறைக்கும் முகத்தான் தனது மனம், வாக்கு, காயம்

ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொள்வதை ஒரு முழுமையான சமய வாழ்வாகக் கருதலாம்.

அதே நேரத்தில் இதுபற்றி அருளாளர்கள் வேறு கருத்தினையும் நமக்கு வழங்குவார்கள். திருக்கோயில்களுக்குச் செல்லலாம். அங்குள்ள புனித நீரில் நீராடலாம். இறைவனைப் பல வழிகளில் வழிபாடு செய்யலாம். இவற்றையெல்லாம் செய்த பிறகும் இறைவனைக் காணவில்லை அல்லது உணரவில்லை என்று அங்கலாய்த்துக் கொண்டால் அதற்குப் பொறுப்பு இறைவனாகுமா? ஆணவம் என்கின்ற தனித்தன்மையில் தொடர்ந்து நின்று கொண்டு நானும் திருக்கோயிலுக்குச் சென்றேன். பெரிய செலவில் இறைவனுக்கு அபிஷேகம் செய்தேன், பார்த்து மகிழ்ந்தேன். அத்துடன் என் பணி முற்றிற்று என்று சொல்லிக் கொண்டிருப்பவர் அதைச் செய்யாமலேயே இருந்தாலும் அவர்களுக்குப் பெருத்த இழப்பு ஒன்றும் ஏற்படாது.

மனத்தின் தன்மையை மாற்றுவதன் மூலமாகவே ஆன்மிக அனுபவத்தைப் பெற முடியும். ஆன்மிக அனுபவம் கிட்டும்போது உள்ளத்தினுள்ளேயே தீர்த்தங்களில் நீராடலாம். திருக்கோயில்களிலுள்ள இறைவனைச் சந்திக்கலாம். எம பாசத்தை அகற்றலாம். மனத்திலுள்ள மாசும், மறுவும் நீக்கப்பட்ட பின் தீர்த்தங்கள் தெளிவாகத் தெரிகின்றன. இந்த அனுபவத்தை உதறிவிட்டுப் பள்ளமும் மேடும் திரிந்து என்ன பயன்? திருமூலர் பெருமான் கூறுவதைக் கேளுங்கள்:

**"உன்னத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்**
**மெள்ளக் குடைந்துநின் றாடார் வினைகெடப்**
**பள்ளமும் மேடும் பரந்து திரிவரே**
**கள்ள மனமுடைக் கல்வியி லோரே".** **(திருமந்திரம் - 509)**

உலகில் பரவி நிற்கும் பரம்பொருளே ஊனில் நிறைந்த ஆன்மாவாக விளங்குகின்றது என்பது வேதவாக்காகும். உபநிடதங்கள் இதைப் பல உவமானங்கள் வழியாக விளக்குகின்றன. குடத்தின் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் இருப்பது ஒரே ஆகாய வெளி. குடம் உடைந்ததும் உள்ளும் புறமும் நிற்கின்ற ஆகாய வெளி ஒன்றாகி விடுகின்றது. திருமூலர் பெருமான் இதை வேறு ஒரு உவமானத்தினாலும் எடுத்துரைக்கின்றார். மண் ஒன்று என்றாலும் அதே மண்ணினால் பல பாத்திரங்கள் செய்யப்படுகின்றன. பரம்பொருள் ஒன்றே. அவனே உயிருக்கு உயிராக எல்லா உயிர்களிலும் தோய்ந்து நிற்கின்றான். ஒரே பொருள் எல்லா உயிர்களிடமும் பரவி நிற்கின்றது. நம்முடைய ஐம்பொறிகளில் ஒன்றாகிய கண் புறப்பொருள்களைக் காண்கின்றது. ஆனால், தன்னுடைய இயக்கத்திற்கே காரணமாகியுள்ள உயிரையும், அந்த உயிராய் நிற்கும் பரம்பொருளையும் காண்பதில்லை. மனிதன் தன்னுடைய உண்மைச் சொரூபத்தை அறியாமையில் வைத்திருப்பது மாயையாகும். இதுவும் இறைவனுடைய செயல்தான். கண் பிற பொருள்களைக் காணும். அகக்காட்சியைக் காணாது.

ஊனக் கண் குறைந்த அறிவைக் கொண்டது. ஞானக்கண் அல்லது அருட்கண்ணாலேதான் இறைவனைக் காண முடியும். அது அருள் நிலை. அது நமக்குக் கிடைக்கும்வரை, நாம் மருள் நிலையில் இருப்போம். அதுவும் இறைவனின் ஆற்றலே. இதை இறைவனின் திரோதான சக்தி என்று சொல்வார்கள்.

**"மண்ணொன்று தான்பல நற்கல மாயிடும்**
**உண்ணின்ற யோனிகட் கெல்லாம் ஒருவனே**
**கண்ணொன்று தான்பல காணுந் தனைக்காணா**
**அண்ணலும் இவ்வண்ண மாகிநின் றானே".**

**(திருமந்திரம் - 440)**

ஆகவேதான் எங்கும் நிறைந்த பரம்பொருள் ஒவ்வோர் உயிரினிடமும் அவரவர் உள்ளத்தில் இருப்பதாகச் சித்தர்கள் உணருகிறார்கள். ''உள்ளத்துளேதான் கரந்தெங்கும் நின்றவன்'' என்கின்றார் திருமூலர் பெருமான். உடலுக்குள் புகுந்து உயிருக்குயிராய் நிற்கும் இறைவனை மக்கள் எளிதில் உணராத காரணத்தினால் இறைவனைக் கள்ளத் தலைவன் என்று அழைக்கின்றார். உள்ளமும், அதிலுள்ள பொருளும் எல்லோருக்கும் பொது. அந்த நிலையை அறியாத மக்கள் மாயக்குழியில் விழுந்து பாசத்தில் பதறுகின்றனர். மக்களுடைய மனநிலையை ஒட்டியவாறு இறைவன் அவரவருடைய மனதில் தென்படுகின்றான். உள்ளமாகிய மனமண்டலத்தில் ஒன்றி நிற்பவனாகவும் உள்ளான். சீவராசிகள் இறைவனைப் புறத்தில் வழிபட முற்படும்பொழுது புறத்திலும் எங்கும் வியாபித்த தன்மை பெற்றவனாக நிற்கின்றான். உண்மையில் எங்கும் உள்ளான். ஆனால், நாம் முகத்தின் கண்களால் பார்க்க முற்படும் பொழுது காணப்படுபவனல்லன். ஆகவேதான், ''கமழ்கடை நந்தி கள்ளத்தலைவன்'' என்று திருமூலதேவநாயனார் குறிப்பிடுகின்றார்.

இந்த உண்மையை முற்றிலும் உணர்ந்தவர்கள் சித்தர்கள். உடலிலேயே இறைவனின் ஆலயத்தையும், கர்ப்பகிரகத்தையும் கண்டவர்கள். நமது நாட்டிலுள்ள கோயில்களின் அமைப்பைப் பற்றிச் சிந்தித்தால் வியக்கத்தக்க உண்மை வெளிப்படும். ஆலயத்தில் நம் கண் முன் தோன்றுவது முதலில் கோபுரமாகும். இந்த கோபுர வாயில் வழியாகக் கோவிலிலுள்ள பல பிரகாரங்களைச் சுற்றி இறைவனிருக்கும் மூலஸ்தானத்திற்குச் செல்கின்றோம். நமது உடல் திருக்கோயிலின் ஞாபக மூட்டுகிறது என்கிறார் திருமூலர் பெருமான். நமது உடல் இறைவனிருக்கும் இருப்பிடம் மட்டுமன்று. அவ்வாறு இறைவன் இருப்பதை நினைப்பூட்டும் சின்னமுமாகும். மனிதன் கட்டிய கோயிலைவிட நுட்பமான தன்மை வாய்ந்தது இறைவன் தனக்கெனக் கட்டிக் கொண்ட உடலாகிய திருக்கோயில். இந்த உடலுக்குள்ளும் நடுவில் இருதயமாகின்ற மூலத்தானம் இருக்கின்றது. உள்ளமாகிய இந்த இருப்பிடத்தில் இறைவன் தங்கியுள்ளான்.

இலிங்க வடிவாகச் சிவபெருமானைத் திருக்கோயில்களில் சிந்திக்கின்றோம். மனித உடம்பே சிவலிங்க உருவமுடையது ஆகும். திருமந்திரம் இதைத் தெளிவாகச் சொல்கிறது:

**"மானுட ராக்கை வடிவு சிவலிங்கம்**
**மானுட ராக்கை வடிவு சிதம்பரம்**
**மானுட ராக்கை வடிவு சதாசிவம்**
**மானுட ராக்கை வடிவு திருக்கூத்தே".** **(திருமந்திரம் - 1726)**

இந்த மனித யாக்கைக்குள் உயிர் நிற்கின்றது. உயிரினால் உடம்பு இயங்குகின்றது. இறைவன் உயிருக்குயிராக உடலில் நிற்கின்றான். ஆகவே, சிவனே சிவசொரூபமாகும். உடம்பாகிய இக்கோயிலுக்கு வாயும் மற்ற பொறிகளும் கோபுர வாசல்களாக அமைகின்றன. உடலின் கருவிகளைச் சரியாகக் கட்டுப்படுத்தாமல் அவ்வழியே செல்லும் மக்களுக்கு இறைவனுடைய திருக்கோலம் தெரிவதில்லை. ஆனால், தெளிந்த சித்தர்களுக்குச் சீவன் சிவலிங்கமாகத் தெரிகின்றது. அப்பொழுது நமது உடல் தீயிலிட்ட செம்பொன்னாக மாறிவிடுகின்றது. ஐம்புலன்களும் தீய குணங்களிலிருந்து விடுபட்டவைகளாய்த் தூய நிலையை எய்துகின்றன. இந்தத் திருமந்திரத்தைப் பாருங்கள்:

**"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்**
**வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே".**

**(திருமந்திரம் - 1823)**

இந்த மந்திரத்தைப் பற்றிக் கயிலாய சித்தர் கூறுவதைத் தெரிந்து கொள்ளுதல் பொருத்தமாயிருக்கும்.

''பாலின்கண் நெய் இருந்தாற் போலவே பூரண சிவலிங்கம் உள்ளமாகிய சீவாத்மாவை இடங்கொண்டிருக்கையினாலே, 'உள்ளம் பெருங்கோயில்' ... உள்ளப் பெருங்கோயிலாகிய சீவாத்மாவுக்கு ஐம்பூத வடிவு வளையமாகையினாலே, 'ஊனுடம்பு சுற்றாலை' .... வைகரி வாக்குச் சுற்றாலாகிய வடிவுக்கு முன்னிலையாகையினாலே, 'வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்' ... காரணகுரு கைகாட்டும் படியே உள்ளமாகிய சீவாத்மா கர்ப்பூரமும் சோதியும் கலந்தாற்போலவே பூரணமாகிய சிவலிங்கத்தில் ஐக்கிய பதம் பெற்ற படியினாலே, 'தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்' .... தெளிந்தபின் புலன் ஐந்தும் சிவாம்சமாகத் தோற்றுகையினாலே, கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே' ...''

இதே கருத்து உபநிடதங்களிலும் காணப்படுகின்றது. இந்த அனுபவம் யாவருக்கும் பொது. அதை விவரிப்பதில் வித்தியாசமிருக்கலாம். தன்னுள்

இருக்கும் இறைவனை உணர்ந்து கொள்ளுபவர்கள் சித்தர்கள். அந்த அனுபவத்தின் அடிப்படையில் அவர்கள் ஜீவன் முக்தர்களாகின்றார்கள் என்று உபநிடதங்களும் விளங்குகின்றன.

**"ஏஷ தேவோ விச்வகர்மா மஹாத்மா ஸதா**
**ஜனானாம் உற்ருதயே ஸந்நிவிஷ்ட:**
**உற்ருதா மனீஷா மனஸாஅபிக்லுப்தோ ய**
**ஏதத் விதுரம்ருதாஸ்தே பவந்தி"**

**(ஸ்வேதாச்வதரோபநிஷதம் 4-17)**

"பிரபஞ்சத்தைப் படைத்து எங்கும் நிறைந்திருக்கும் தெய்வம் அன்பினாலும், அறிவினாலும், எண்ணத்தினாலும் வரையறுக்கப் பட்டவனாய் சீவராசியின் உள்ளத்தில் வீற்றிருக்கிறான். அதை அனுபூதியில் அறிகிறவர்கள் அமிர்த சொரூபமாகிறார்கள்."

**"பராஞ்சி கானி வ்யத்ருணத் ஸ்வயம்பூ: தஸ்மாத்**
**பராங் பச்யதி நாந்தராத்மன்**
**கஸ்சித்தீர: ப்ரத்யகாத்மானம் ஐக்ஷத் ஆன்ருத்த**
**சக்ஷு: அம்ருதத்வம் இச்சன்."** **(கடோபநிஷதம் 4-1)**

"தானாகத் தோன்றுகின்ற பிரம்மதேவன் இந்திரியங்களைப் புறத்தில் போகும்படி சிருஷ்டித்தான். ஆகையினால் புறத்தில் இருப்பவைகளையே அவன் காண்கின்றான். உள்ளிருக்கும் ஆத்மனை அவன் காண்பதில்லை. மரணமின்மையை விரும்புகிற யாரோ ஒரு பேரறிஞன் இந்திரியங்களைச் சேர்த்தெடுத்து உள்முகமாகத் திருப்பி ஆத்மதரிசனம் பெறுகிறான்."

ஆகவே, எங்கும் நிறைந்த இறைவன் நம்முள்ளும் இருக்கின்றான். இதற்குச் சான்று அருளாளர்களின் அனுபவம். எவ்வாறு தேனின் தன்மை இன்பமாகுமோ அவ்வாறே ஊனின் தன்மை இறைமையாகும். இதை ஏட்டளவில் மட்டும் அறிந்து கொள்ளாது தூய்மையான மனத்தின் வழி உணர்ந்து கொள்ள வேண்டும். அந்த உணர்வு வரவில்லையென்றால் இறைவன் இல்லையென்கின்ற நினைப்பேதான் மனதில் எழுந்து மனமும் குழம்பி நிற்கும். மனித உள்ளத்திற்குள்ளும் வெளியேயும் இறைவன் எங்குமாகி நிற்கின்றான் என்கின்ற உணர்வுடையவர்களுக்கு இறைவன் அவ்வண்ணமே உள்ளத்தின் உணர்விலும் உள்ளத்திற்கு வெளியேயுள்ள பொருள்களிலும் தோற்றமளிக்கின்றான். நிறங்கள் எவ்வண்ணம் அவ்வண்ணம் ஈசன். ஆனால், இறைவன் உள்ளத்திலும் இல்லை வெளியிலும் இல்லை என்பவர்களுக்கு அந்த இறையின்பம் கிடைக்க நியாயம் இல்லை. அவர்களும் கொடுத்து வைக்கவில்லை. இந்த முடிவு ஆராய்ச்சியின் விளைவாக நமக்குக் கிடைத்த முடிவன்று. தெய்வப் பேரின்பம் இறைவன் அருள் பெற்று இறை நிலையில் உள்ளம் தோய்ந்து அனுபவிக்கப்பட்ட பேரின்பமே.

ஒன்றவன்தானே. பரம்பொருள் ஒன்றே. பேரறிவும் பேராற்றலும் பேரருளும் கொண்டது. ஆயினும் பரம்பொருள் பரம்பொருளாக வீற்றிருக்க முடியாது. வீற்றிருப்பதும் ஏதுமில்லை. சீவராசிகள் உய்வடைவதற்குப் பரம்பொருள் தனது ஆற்றலைப் பலவாறு வெளிப்படுத்துகிறது. அவ்வாறு செய்வதால் உயிரானது தனது குற்றங்களை நீக்கிக் கொள்ள வாய்ப்பினைப் பெறுகிறது. அந்த இயக்கமே பரம்பொருளின் அருள் இயக்கமாகும்.

## இரண்டவன் இன்னருள்:

அருள் என்றாலே உள்ளத்தில் ஒரு மகிழ்ச்சி தோன்றுகிறது. அருட்கண்கள் இறைவனைக் காணும் கண்கள். இறைவனுடைய அருளை நாம் அனுபவிக்கும்பொழுது இறைவனாகிய உண்மையை உணருகின்றோம். அருளாளர்கள் இறைவனின் அருளாட்சியில் மூழ்கி நிற்பவர்கள். எங்கும் எதிலும் இறைவனுடைய அருளைக் காண்பார்கள். தங்களுக்கு நேரிடும் இன்பங்களையும், துன்பங்களையும் இறைவனுடைய அருள் வீழ்ச்சியாகவே கருதுவார்கள். அறியாமை என்னும் இருளில் நாம் கிடக்கும்போது நம்மை அவ்வாறு கிடத்தி, உடலின் கருவிகள், கலை, கல்வி ஆகியவற்றின் மூலம் நமக்குச் சிறிது விளக்கத்தைக் கொடுத்து கிடைக்கும் அனுபவமெல்லாம் நான் என்கிற நிலையில் பெறுகிறேன் என்கிற உணர்வை வழங்குவதும் அருட்சக்தியே. இதைத் திரோதான சக்தி என்று சொல்லுவார்கள்.

இறைவன் ஒன்றவனாக இருந்தாலும், தனது அருட்சக்தியைப் பல வகைகளில் வெளிப்படுத்துகின்றான். அரு உள் என்பது அருளாகிறது. சீவ ராசிகளில் உடலில் இறைவன் ''உள்'' ஆயும் ''அரு'' ஆயும் மறைந்து கிடக்கின்றான். இறைவன் பேரறிவும் பேராற்றலும் கொண்டவன். பேரறிவுடைய பரம்பொருள் பிரபஞ்ச இயக்கத்தைத் தொடங்கி அருளால் சீவராசிகள் உய்வடையச் செய்ய வேண்டும். பேரறிவாக மட்டும் இருக்கின்ற நிலையில் இதைச் செய்ய இயலாது. ஆகவேதான் பரம்பொருள் அருள் மழை பொழிவதற்காகப் பேராற்றல் மிக்க இயக்கமாகத் தன்னை மாற்றிக் கொள்கின்றது. சிவம் அல்லது பரம்பொருள் பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பதற்கான சக்தியென்னும் நிலைக்குப் பிரதானம் கொடுக்கின்றது. பராபரம் என்பது சிவமும் சக்தியும் பிரிக்கவொண்ணாத ஆதி நிலை. எல்லாச் சீவன்களும் சக்தியும் உட்படப் பரம்பொருளில் ஒடுங்கியிருந்த நிலை. இது ஒரு பேரொளியாக விளங்கும் நிலை. இது ஆதி அந்தம் இல்லாத ஒன்றாகும். இந்த நிலையில் ஒன்றைத் தொடங்குவது அல்லது முடிப்பது என்பதில்லை. பராபரமாய் நிற்கும் பரம்பொருளின் அம்சமான சக்தி பராபரியென வழங்கப்படும். இதுவே இறைவனின் இயற்கைத் தன்மை அல்லது சொரூப நிலை. இந்த இயற்கை நிலையில் பராபரமும் பராபரியும் ஒன்றி நிற்கும் நிலை பேரறிவான நிலையாகும். ஆகவேதான், இந்த நிலையைச் சிவஞான சித்தியார் ''சித்தியின் வடிவே தென்னில் தடையிலா ஞானமாகும்'' என்றது.

இந்த இயற்கை நிலையில் இறைவனுடைய விருப்பம் மாத்திரம் உயிர்களை உய்விக்க வேண்டும் என்பதாம். அந்த நிலை உலகத் தோற்றத்திற்குத் தொடங்கும் காரணமாக அமைகின்றது. ஆதி சிவனான பரமசிவன், ஆதி சக்தியாகிய பராசக்தியுடன் இணைந்து நிற்கும் நிலையாகும்.

சொல்லொணா ஆற்றல் படைத்த முழுமுதற் பொருளுக்கு இப்பிரபஞ்சத்தைத் துவக்குவதற்குத் தேவையான ஆற்றல் மிகச் சிறியதாகும். ஆகவே, இறைவனே திருவுளம் கொண்ட மாத்திரம் சக்தியென்னும் இறைவனின் பேராற்றல் வெளிப்படுகின்றது. இயற்கை நிலையில் பேரறிவுள்ள நிலையிலிருக்கும் சக்தி படைப்புத் தொழிலுக்காகத் தனது பேராற்றலின் சிறு பகுதியை வெளிப்படுத்தத் தொடங்குகின்றது. இதிலிருந்து தெரிவது இறைவனின் ஒரு அம்சமே சக்தி வடிவாக பிரபஞ்சத் தோற்றத்திற்குக் காரணமாக இருக்கின்றது என்பதுதான். திருமந்திர வாக்கு பின்வருமாறு:-

**"ஆதியோ டந்தம் இலாத பராபரம்**
**போதம தாகப் புணரும் பராபரை**
**சோதி யதனிற் பரந்தோன்றத் தோன்றுமாந்**
**தீதில் பரையதன் பால்திகழ் நாதமே".**

**(திருமந்திரம் - 381)**

பரம்பொருள் தனது பேராற்றலைச் சக்தி வடிவாக வெளிக்காட்டத் தொடங்கும் நிலையில் நாதம் என்று அழைக்கப்படுவன். இந்தப் பொதுவாகத் தோன்றும் நாதம் தனது சக்தியில் ஒரு பகுதியை வெளிக்காட்ட எழும்பும்பொழுது அந்த ஆற்றலானது விந்து என்னும் சக்தியாகின்றது. ஆகவே சிவன் என்றும், சக்தியென்றும், தோன்றுவர் நாதம் என்றும், விந்து என்றும் அழைக்கப்படுவர். இந்த நிலையில் சிவமும் சக்தியும், நாதமும் விந்துவும், அருவ நிலையிலே காணப்படுவர். இவற்றிலிருந்து மாயை தோற்றுவிக்கப்படுவதும், உலக இயக்கத்திற்கு இந்த மாயையே முதல் காரணமாக இருப்பதும் இந்த மாயை ஆணவ மலத்துடன் கலவாது தூய்மையான நிலையில் இருப்பதும் ஆணவ மலத்துடன் கலந்து அசுத்த நிலையில் இருப்பதும், இந்தப் பல்வேறு நிலைகள் காரணமாக உலக இயக்கங்கள் தோன்றுவதும் பற்றிய விவரங்கள் சிவாகமங்களிலும், சைவ சித்தாந்த சாத்திர நூல்களிலும் விளக்கப்பட்டுள்ளன.

இறைவன் உலகத்தைத் தோற்றுவித்து நடத்தக் கருதும்பொழுது அருவமாகவும், அரு உருவமாகவும், உருவமாகவும் விளங்குவன். இயற்கை நிலையிலிருந்து பரிணமித்து, இறைவன் உருவம் கொள்ளும் நிலையில் உயிர்களை உய்விக்க வேண்டுமென்கின்ற அவனுடைய அளவற்ற கருணையும் அருளும் வெளிப்படுகின்றது. சிவம் என்றும் சக்தியென்றும்

பேதம் ஏற்படும்பொழுது பிரபஞ்சம் படைப்பதற்கான பணிகள் துவங்கி அப்பணிகளுக்கான அதிகாரிகளும் தோன்றுகின்றனர். பேதம் என்பது உண்மையில் பேதமான நிலைமை அன்று. உயிர்கள் தோன்றுவதற்கான கிரியை என்னும் சக்தியினுடைய தன்மை மிகுந்திருப்பதால் இந்த நிலையைப் பேதநிலையாகக் கருதலாமேயொழிய உண்மையில் பரம்பொருளில் பேத நிலையென்பது கிடையாது. இந்தக் கருத்தையே சிவஞான சித்தியாரில் காண்கின்றோம்.

**"சிவம் சத்தி தன்னை ஈன்றும்**
**சத்திதான் சிவத்தை யீன்றும்**
**உவந்து இருவரும் புணர்ந்து,**
**இங்கு உலகு, உயிர் எல்லாம் ஈன்றும்**
**பவன் பிரம்மச் சாரியாகும்**
**பான்மொழி கன்னி யாகும்**
**தவம் தரும் ஞானத் தோர்க்கு**
**இத்தன்மைதான் தெரியு மன்றே."**

சக்தி தனது ஆற்றலை வெளிப்படுத்தி பிரபஞ்சத் தோற்றத்திற்குக் காரணமாக இருக்கும்பொழுதும், இறைவனுடைய முழுமை குறைந்து விடாது. முழுமையாகவும், என்றும், எங்கும் உளதாய் உள்ள பரம்பொருள் படைப்பு போன்ற காரியங்களுக்காகச் சக்தி நிலையில் விளங்குகின்றதே தவிர இதனால் முழுமை குறைந்து விடாது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். பரம்பொருளின் ஒளியாகிய சக்தி ஆனந்த வடிவமாக இருப்பதுடன் சிவமெங்குள்ளதோ அங்கும் நிரம்பியதாக ஊனுக்கும் உயிருக்கும் அடிப்படையாகச் சிவனுடன் இணைந்தே தொழில்படுகின்றது. இந்த உண்மையை ஆராய்ந்து பார்த்தால் நன்கு விளங்கும். இதனைத் திருமந்திரம் பின்வருமாறு கூறுகின்றது:

**"தானெங் குளனங் குவதையன் மாதேவி**
**ஊனெங் குளதங் குளளுயிர்க் காவலன்**
**வானெங் குள தங் குளே வந்து மப்பாலாம்**
**கோனெங்கும் நின்ற குறிபல பாரே."** **(திருமந்திரம் - 1055)**

பேராற்றலினால் இயக்கம் நடைபெறும்போதும் பரம்பொருள் முழுமையானதாகவே இருக்கின்றது என்பதைப் பிரஹதாரண்ய கோபனிஷத்தில் பின்வருமாறு விவரிக்கப்படுகிறது:

**"ஓம் பூர்ணமதஹ, பூர்ணமிதம்**
**பூர்ணாத் பூர்ணம் உதச்யதே**
**பூரணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவா வதிசிஷ்யதி".**

அதாவது, அதுவும் பூரணம், இதுவும் பூரணம், பூரணத்திலிருந்து பூரணம் தோன்றிற்று. பூரணத்திலிருந்து பூரணத்தை எடுத்துவிட்டால் மிகுந்திருப்பதும் பூரணமே என்பதாம்.

உதாரணமாக எத்தனை பூஜ்யங்களைக் கூட்டினும் மொத்தம் பூஜ்யமே. ஒரு பூஜ்யத்திலிருந்து எத்தனை பூஜ்யங்களைக் கழித்தாலும் மிகுந்திருப்பது பூஜ்யமே. இஃது ஓர் உதாரணம்தான். பரம்பொருள் பூஜ்யம் அன்று. உள்பொருள். ஆனாலும் ஓர் உருவும் இல்லாதது. **ஆகாசம் சரீரம் பிரம்ம, ஆகாசம் பிரம்ம,** என உபநிடதம், பிரம்ம சூத்திரம் கூறுகின்றன.

ஆகவே, சிவமும் சக்தியும் இருநிலையில் நின்று எண்ணற்ற உயிர்களுக்குப் பக்குவத்தை அளிப்பதற்காகவும் பிறப்பின் நோக்கத்தை அடையச் செய்வதற்காகவும் வேறு பல பயன்களைத் தருவதற்காகவும் படைத்தல் என்னும் தொழிலாகிய விளையாட்டை மேற்கொள்கிறார்கள். உயிர்களுக்கு அறிவையும், ஆற்றலையும், மற்ற தத்துவங்களையும் இந்திரியக் கூட்டங்களையும் பொருத்தி அருள்புரிகின்றான். மாணிக்கவாசகர் பெருமான் **''காத்தும் படைத்தும், கரந்தும் விளையாடி''** என்றார். இறைவன் உலக இயக்கத்தை நடத்திச் செல்லுதல் விளையாட்டென வழங்கப்படுகிறது. **''ஐயா, நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின் - உய்வார்கள் உய்யும் வகையெல்லா உய்ந்தொழிந்தோம்''** என்பது திருவாசகம். இந்த விளையாட்டு என்பது பரம்பொருளின் பொழுது போக்கிற்காக ஏற்பட்டதன்று. உயிரினங்கள் தங்களுடைய வினையினைத் தீர்த்துக்கொள்ளும் வகையில் அனுபவங்களைப் பெறுவதற்காக தனு, கரண, புவன போகங்களை இறைவன் செய்து வைத்தான் என்பதே பொருள். ஆகவேதான், திருமந்திரத்தில் சிவனும், சக்தியும் விளையாடலுற்றார் எனக் கூறப்படுகிறது. அந்த மந்திரம் பின்வருவமாறு:

**''ஒருவன் ஒருத்தி விளையாடல் உற்றார்**
**இருவர் விளையாட்டும் எல்லாம் விளைக்கும்**
**பருவங்கள் தோறும் பயன்பல வான**
**திருவொன்றிற் செய்கை செகமுற்று மாமே.''**

**(திருமந்திரம் - 396)**

இந்த விளையாட்டினைப் புரியும் இறைவன் தானே சக்தியோடு கூடி ஐந்தொழிலைச் செய்யும் தலைவர்களுக்குத் தலைவனாக விளங்குகின்றான். படைப்பதும் அவனே, காப்பதும் அவனே, ஒடுக்கிக் கொள்வதும் அவனே, உயிரினங்களுக்கு வீட்டுப் பேற்றினை அளிப்பதும் அவனே.

**''தானே படைத்திருந் தானே அளித்திடுந்**
**தானே துடைத்திடுந் தானே மறைந்திடுந்**
**தானே யிவை செய்து தான்முத்தி தந்திடுந்**
**தானே வியாபித் தலைவனு மாமே''** **(திருமந்திரம் - 1809)**

ஆகவே, சிவமும், சக்தியும் சேர்ந்த பரம்பொருளே நமக்குத் தந்தையும் தாயுமாவர். அவர்களே ஊழித்தலைவர்கள். கால இட தத்துவங்களுக்கு அப்பாற்பட்டவர்கள். நாதமாயும், விந்துவாயும், ஒலியாயும், ஒளியாயும் அமர்ந்தவர்கள். இந்த உண்மையைத் தெரிந்து கொள்ளும் நிலையில் அருளின் தன்மை விளங்குகின்றது. இதைத் திருமூலர் பெருமான் அனுபவித்த நிலை பின்வரும் திருமந்திரத்தில் காணப்படுகிறது.

**"என்னம்மை என்னப்பன் என்னுஞ் செருக்கற்று**
**உன்னம்மை ஊழித் தலைவனும் அங்குளன்**
**மன்னம்மை யாகி மருளி யுரைசெய்யும்**
**பின்னம்மை யாய்நின்ற பேர்நந்தி தானே."**

**(திருமந்திரம் - 1129)**

திருவருள் இறைவனிடமிருந்து தோன்றி, பிரபஞ்சத்தின் இயக்கத்திற்குக் காரணமாக இருந்து, சீவராசிகள் உய்வடைவதற்குத் தனு, சுரண, புவன போகங்கள் ஆகியவற்றை அளித்து, சீவராசிகள் உலகத்தில் ஈடுபட்டுத் தங்கள் வினைப்பயனை அனுபவிப்பதற்காக திரோதான சக்தியாகத் திகழ்ந்து, கடைசியாக வீடு பேறு நல்கும் நிலையில் அருட்சக்தியாக உயிரிலும், உள்ளத்திலும், உடலிலும் நிரம்பி நிற்கும் தன்மையினை அருளாளர்கள் அனுபவத்தில் காண்கின்றார்கள். நமக்கு எடுத்துச் சொல்கின்றார்கள். நாம் காணும் படைப்பெல்லாம் இறைவனின் ஆற்றல் சக்தியே என்பதை நாம் அறிந்து கொள்வதில்லை. மலப்பிணைப்பு நம்மை மயங்கச் செய்கின்றது.

இறைவனின் திருவருள் தோன்றும் நிலை அதுவே. சீவராசிகளுடைய குறைந்த அறிவு நீங்கிப் பேரறிவு என்கின்ற உணர்வினை ஊட்டுவதற்காகவும், பக்குவத்தை அளிப்பதற்காகவும் இறைவனுடைய ஆற்றல் இயக்கம் பெற்று, அருளில் நிறைவு பெறுகிறது. உயிரினங்களின் மலங்களை நீக்குவதற்காகவே ஏற்பட்ட படைப்பு இது. ஆயினும் ஆருயிர்கள் அதனை அறிந்து கொள்ளாது மலப்பிணிப்பால் மாயையின்கண் மயங்கிக் கிடக்கின்றன. உயிர்களைப் பாசத்தில் பொருத்தி அனுபவிக்கச் செய்வது இறைவனின் அருட்சக்தி. சில காலம் உடலில் தங்கி உயிர்கள் வினைப்பயன்களை அனுபவிக்கும்போது, அந்தப் பாசத்திலிருந்து உயிரினங்களை வேறுபடுத்தச் செய்வதும் அதே அருட்சக்தியாகும். வேறுபட்ட உயிரினங்கள் சீவன் என்றும், சிவன் என்றும் அதுவரை மனதின்கண் வைத்திருந்த மருள் நிறைந்த நிலையை நீக்கி உண்மை ஞான ஒளி பெறச் செய்வதும் அதுவே. அறிவானும், அறியப்படும் பொருளும் ஒன்றாகச் சேர்வதும் அருட்சக்தியால்தான். திருவருளை எல்லா உயிர்களும் அடையும்பொருட்டு பரம்பொருள் தன்னையே சிவமாகவும், சக்தியாகவும் பிரித்துக் கொள்கின்றது. இதைக் கூறும் திருமந்திரம் பின்வருமாறு:

"பாசத்தி லிட்ட தருளந்தப் பாசத்தின்
நேசத்தை விட்ட தருளந்த நேசத்திற்
கூசற்ற முத்தி யருளந்தக் கூட்டத்தின்
நேசத்துத் தோன்றா நிலையரு ளாமே." (திருமந்திரம் - 1802)

எல்லாவற்றிற்கும் ஒருவனே காரணமாய் இருப்பதால் **"அவனருளாலே அவன் தாள் வணங்கி"** என்று மாணிக்கவாசகர் பெருமான் வாழ்த்துகின்றார்.

## நின்றனன் மூன்றினுள்:

பரம்பொருளின் அருள் இயக்கம் படைத்தல், காத்தல், ஒடுக்குதல் ஆகிய மூன்று நிலைகளில் வெளிப்படுகின்றன. இவற்றுடன் மறைத்தல், அருளுதல் ஆகிய இரண்டு நிலைகளையும் சேர்த்துக் கொள்வார்கள். மறைத்தலும், அருளுதலும் சீவராசிகள் உய்வடைவதற்காக இறைவன் மேற்கொள்ளும் தொழில் ஆகும். இது சக்தியின் வெளிப்பாடு. உயிர்களுக்காக இறைவன் எல்லையற்ற கருணையுடன் மற்றைய அதிகாரிகளைக் கொண்டு இந்த இயக்கத்தை மேற்கொள்கிறான். இயற்கையின் நியதியில் முத்தொழில்களின் பிரதிபலிப்பைப் பார்க்கலாம். அழிவின்றி ஆக்கமில்லை, ஆக்கமின்றிக் காத்தல் இல்லை ஒரு விதையைப் பூமியில் நடும்பொழுது அந்த விதை அழிகின்றது. பிறகு முளையாகி, செடியாகி, மரமாகி, பூவாகி, காயாகி, கனிந்து உலருகின்றது. இறைவனுடைய படைப்பிலும் ஆக்கமும், காத்தலும், ஒடுக்குதலும் ஒன்றோடொன்று தொடர்புடையனவாகவே இருக்கின்றன. அவற்றிற்குத் தலைவனாக உள்ள இறைவன் ஒருவனே ஆகிலும் மாயையின் அம்சமான மும்மூர்த்திகள் இப்பணிகளைச் செய்கின்றனர். இந்தப் பணிகளுக்குத் தலைவர்களாக இருக்கும் பிரம்மனும் திருமாலும், உருத்திரனும் இறைவனுடைய அம்சங்களேயாவார்கள். அவர், இவர், தனித்தனி என்றும், ஒருவருக்கொருவர் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்றும் நினைப்பதும் பேசிக் கொள்வதும் அறியாமையாகும். அவர்கள் எல்லோருக்கும் மேலானவனும் அவருடைய பணிகளுக்குப் பெருமை கொடுப்பவனும் ஆவன் இறைவன். மற்ற தேவர்கள் உயர்ந்த உயிர்கள் என்கின்ற நிலையிலிருந்தாலும், இறைவன் இருவினைக்கு அப்புறம் இருந்து கொண்டு மூவருக்கும் முதல்வனாகத் திகழ்கின்றான். இதைத் தெரிந்து கொள்ளாத மக்கள் இவர்களைப் பிரித்து வைத்துப் பேசி வருவது பேதைமையாகும் என்கிறார் திருமூலர் பெருமான்.

"ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத் தலர்மிசை யானுஞ்
சோதிக்கில் மூன்றுந் தொடர்ச்சியில் ஒன்றெனார்
பேதித் துலகம் பிணங்குகின் றார்களே". (திருமந்திரம் - 104)

இறைவன் முத்தொழிலைச் செய்கின்றான் என்கிறபோது அது உயிர்களுக்காகச் செய்யப்படுகின்றது என்பதும், அப்படியென்றால் உயிர்கள் பாச நீக்கம் பெற்று, வீடு பேறு அடைவதற்காக இந்தத் தொழில் நடக்கின்றது என்பதும், இதற்காகவே இறைவன் உயிருக்கு உயிராகவும், உயிருக்கு வேறாகவும், உயிரை நடத்திச் செல்லும் நாயகனாகவும் இயங்குகின்றான் என்பதும் புலனாகும். ஆக, இறைவன் பதி, பசு, பாசம் என்கிற மூன்று பொருள்களிலும் நின்றான் என்றும் எடுத்துக் கொள்ளலாம். ''பதி, பசு, பாசம் எனப் பகர்'' என்பார் திருமூலர் பெருமான். எல்லாவற்றிற்கும் காரணமான பதியினுடைய இயல்புகள் சத்து, சித்து, ஆனந்தம் ஆகும். இந்த மூன்று இயல்புகளையுடைய இறைவன் உடலுக்குள்ளே உயிருக்கு உயிராகப் பொருந்தி நிற்கிறான். பசுவாகிய மலத்தால் கட்டுண்ட உயிர் உடலில் நின்று, இன்பத் துன்பங்களை அனுபவித்துப் பின்னர் உடலை விடுகின்றது. உயிரை வினைப்பயனை நுகரச் செய்து, மேலும் வினைகளைப் புரிய வைத்து மீண்டும் மீண்டும் பிறப்பிற்குக் காரணமாகிறது. உயிர் பல்வேறு நிலைகளில் பிறப்புகளைப் பெற்று உய்வதற்கான வழிகளைத் தேடிக் கொள்ளவே பாசத்தின் ஆட்டத்திற்கு ஆளாக்கிக் கொள்கிறது. உண்மை நிலை மறைக்கப்பட்டுள்ள போது பதியாகவும், பசுவாகவும், பாசமாகவும் கருதுகிறோம். அறிவு பெற்ற நிலையில் உயிர் தன்னை மற்ற தத்துவங்களிலிருந்து பிரித்துக் கொண்டு பாசத்தளையை அகற்றியதாய்ப் பதியினைச் சேருகிறது. பதியென்பது அறிவும், ஒளியும் நிரம்பிய நிலையாகும். படைப்பின் நோக்கமே பதி, பசு, பாசம் என்கின்ற தத்துவங்களை வேற்றுமை நிலையில் நிறுத்திப் பிறகு அந்த வேற்றுமையை அகற்றுவதாகும். இதை விளக்கும் திருமந்திரம் பின்வருமாறு:

**''பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்**
**பதியினைப் போற்பசு பாசம் அனாதி**
**பதியினைச் சென்றணு காப்பசுபாசம்**
**பதியணு கிற்பசு பாசம் நிலாவே.''** (திருமந்திரம் - 115)

இறைவன் படைப்பிலுள்ள உயிர்கள் எண்ணற்றவை. பிரம்மன் முதலிய பெருந்தேவர்களையும் பசுவினத்தில் இந்தப் படைப்பு உள்ளடக்கும். பாசத்தால் கட்டப்பட்டது உயிர். பாசமானது ஆணவம், கன்மம், மாயை என்கிற மூன்று வகையான மலங்களைக் கொண்டதாகும். இந்த மலங்கள் நீக்கப்பட்டபொழுது பாசத் தளைகள் அறுக்கப்படுகின்றன. தூய்மையான நிலையில் உயிர்கள் இறைவனைப் பற்றி விடாது நிற்கும்.

**''பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப்**
**பசுக்களைக் கட்டிய பாசமூன் றுண்டு**
**பசுத்தன்மை நீக்கியப் பாசம் அறுத்தாற்**
**பசுக்கள் தலைவனைப் பற்றிவிடாவே''.** (திருமந்திரம் - 2406)

பதியினைப் போல் பசு, பாசம் அநாதி என்றார் திருமூலர் பெருமான். உயிர் ஒரு அறிவுப் பொருள். பாசத்தின் கூறுகளாகிய ஆணவம், கன்மம், மாயை ஆகியவை உயிரைப் பந்தித்தாலும், அதன் விளைவாக உயிருக்குக் கிடைக்கக்கூடிய அனுபவங்கள் இறைவன் காட்டிய நெறியின் அடிப்படையிலேயே நடத்திச் செல்வதும் இறைவன் ஆவன். படிப்படியாக உயிர்களைத் தூய்மைப்படுத்தி, பாசத்தின் வேகத்தைக் குறைத்துத் தருபவனும் இறைவன் ஆவன். **''வேகம் கெடுத்து ஆண்ட வேந்தனடி வெல்க''** என்றார் மாணிக்கவாசகப் பெருமான்.

மலங்கள் மூன்றாகிய காரணத்தால் உயிர்களும் மூன்று வகைப்படுவர். அவர்கள் விஞ்ஞான கலர், பிரளயா கலர், சகலர் எனப்படுவர். இம்மூவகையினருள் விஞ்ஞான கலர் நான்கு வகையினர். பிரளாய கலரும் சகலரும் தனித்தனியே மூன்று வகையினர். ஆக மொத்தம் உயிர்கள் அனைத்தும் பத்து வகையினர் ஆவர்.

விஞ்ஞானம் என்பது மெய்யுணர்வு அல்லது உண்மை உணர்வாகும். உண்மை உணர்வு கொண்டு மாயையின் பிரதிபலிப்பாகிய கலைகளிலிருந்து விடுபட்டவர் விஞ்ஞான கலர் ஆவர். இறைவனால் விசேஷ ஞானம் அளிக்கப்படுபவர்கள். தவத்தாலும், யோகத்தாலும் இறைவனுடைய அருள் பெற்று உண்மை அறிவு பெற்றவர்களும் விஞ்ஞான கலர் ஆவர். இந்த ஞானத்தில் விளைவாக கன்மம், மாயை இவைகளிடமிருந்து பிரிக்கப்பட்டவர்களாக ஆணவ மலத்துடன் மட்டுமே கலந்து நிற்கின்றனர். ஆணவ மலமும் மென்மையாகப் பற்றியிருக்கும்.

பிரளய காலத்தில் எல்லாச் சீவராசிகளும் இறைவனுடன் ஒடுங்கும் நேரத்தில் பிரபஞ்சத்தை நடத்துகின்ற தத்துவங்களும் கலைகளும் நீங்கும் பொழுது ஆணவம், கன்மம் ஆகிய இரண்டு மலங்களுடன் கூடி நிற்பவர் பிரளயா கலர் ஆவர்.

சகலர் பாசப்பற்று நீங்காதவர். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களும் அவர்களைத் தெய்வத் தன்மையிலிருந்து தடுத்து நிறுத்தி வைக்கின்றன. இவர்களுக்கு ஆணவ மலப் பிணிப்பு மிக வன்மையாக உண்டு. அறியாமை என்னும் நிலையில் மாயையால் கட்டுப்பட்டு வினைப்பயனை அனுபவிப்பவர்கள்.

மூவகைச் சீவராசிகளும் தத்தம் நிலையில் பக்குவமுற்றும், பக்குவமல்லாமலும் இருதரத்தினராய் இருப்பர். இறைவனை அடைய வேண்டுமென்கின்ற ஆர்வத்தால் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு இறைவனை அடைபவர்கள் பக்குவர்கள் ஆவார்கள். இறைவனைப் பெற வேண்டுமென்கின்ற ஆர்வமின்றி உலகத்தில் வாழ்ந்து போகங்களை நுகர்ந்து வினைப்பயன்களைத் தொடர்ந்து அனுபவிப்பவர்கள் பக்குவமற்றவர்கள் ஆவார்கள். இந்த ஆர்வத்தை அளிப்பது இறைவனுடைய அருளாகும்.

விஞ்ஞான கலரிலும் பக்குவத்தை எய்தி ஞானத்தைப் பெற்றவரும் அந்த அளவு பக்குவத்தைப் பெறாதவர்களும் இருப்பார்கள். அதேபோல பிரளயா கலரும் இயற்கையிலேயே ஆணவத்தைத் தவிர மீதி இரண்டு மலங்களை விட்டவர்களாகவும் அல்லது செயற்கையாக முயற்சிகள் எடுத்து அவற்றின் பயனாக இந்த இரண்டு வினைகளை விட்டவர்களாகவும் இருக்கக்கூடும்.

சகலர்களைப் பொறுத்தவரை மூன்று மலங்களால் பிணைக்கப்பட்ட நிலையிலிருந்தாலும், அவர்களும் பக்குவம் பெற்றுச் சாதகம் செய்து, வீடு பேற்றினை அடையக்கூடிய ஆற்றலைப் பெற்றவர்கள்தான். தவத்தாலும், யோகத்தாலும் இவர்களும் பிரளயாகலர், விஞ்ஞான கலர் ஆகியவர்களுடைய நிலையை எய்திச் சிவமாம் தன்மையைப் பெறக் கூடியவர்கள்.

உயிர்களுக்குச் சார்பாக உள்ள நிலைகள் மூன்றாகும். அவை முறையே இருள், மருள், அருள் என்று கூறப்படுகின்றன. இவற்றின் அடிப்படை அறிவாகும். இருளில் அழுந்தி இருக்கக்கூடிய நிலை உயிரினுடைய அறியாமை நிலையாகும். இதைக் கேவல நிலை என்று கூறுவார்கள். திருமூலர் பெருமான் இதைத் **தொல்பதம்** என்கிறார்.

கருணைக்கு இருப்பிடமான இறைவன் உயிர்களை மலப்பிடிப்பிலிருந்து விடுவிக்கும் பொருட்டு, அவைகளுக்குத் தனு, கரணம், புவனம், போகம் ஆகியவற்றை அளிக்கின்றான். அவற்றின் வாயிலாகச் சிறிது அறிவு விளக்கம் பெற்ற உயிர்கள், ஐம்பொறிகள், நான்கு உட்கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தித் தான் என்கிற முனைப்போடு, வினைகளைப் புரிந்தும், வினைப்பயன்களை அனுபவித்தும், பல பிறவிகள் எடுத்து, அனுபவங்களால் இளைத்து ''இறைவா தாங்கிக் கொள்'' என்கிற உணர்வோடு மேலும் வினைகளைப் புரியும் விருப்பங்கள் அற்றவர்களாக, ஞான வாழ்விலே தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, கடைசியாக ஏதோ ஒரு பிறவியில் முத்திப் பேற்றினைத் தரும் தகுதியை முழுமையாகப் பெறுவதெல்லாம் இறைவன் உயிர்களின் உய்வுக்காகப் புரியும் திருவிளையாடலாகும். பாச மறைப்பு அகலுகின்றது. அருள் வாழ்க்கை தொடங்குகிறது. தத்துவங்கள் நீக்கிக் கொள்ளப்படுகின்றன. உயிர் சிவமாம் தன்மையைப் பெறுகின்றது.

**''சிவமாகி ஐவகைத் திண்மலஞ் செற்றோர்**
**அவமாகாச் சித்தர்; முத் தாந்தத்து வாழ்வார்**
**பவமான தீர்வோர், பசுபாசம் அற்றோர்**
**நவமான தத்துவம் நாடிக்கண் டோரே.''** **(திருமந்திரம் - 497)**

தத்துவங்களுடனும் கலைகளுடனும் பொருந்தி, மும்மலங்களுக்கும் ஆட்பட்டு, உலகில் வாழ்க்கை நடத்திச் செல்லும் சகலருடைய நிலையைக் குறைவாக எண்ணக்கூடாது. ஏனென்றால், இந்த நிலையில்தான் மலங்களின்

தடையைச் சிறிது சிறிதாக நீக்கி இறைவன் உயிர்களிடையே மிகுந்துள்ள ஆணவத்தின் வலிமையைக் குறைத்து, உள்ளத்தில் அறிவு விளக்கத்தைச் சற்றே எடுத்து வைக்கின்றான். மலப்பிணிக்கு மருந்துபோல அமைவது சகல நிலை. பொதுவாக உயிர்கள் இதைத் தெரிந்து கொள்வதில்லை. சகல நிலையில் திருவருளுக்காக ஏங்கும் ஒரு இன்பமயமான வாய்ப்புக் கிட்டுகிறது. இதை நாம் பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்து கொள்வதில்லை. ஆகவேதான், சகல நிலையைத் திருமூலர் பெருமான் **நற்பதம்** என்கிறார். இந்தச் சகல நிலையில் திருவருளின் ஒளியை நாடி, சற்றுப் பெற்று, அந்த ஒளியில் தூய ஆன்ம நெறியினைக் கடைப்பிடித்து இவ்வுடலில் வாழும் வரை உயிர்களிடம் அன்பையும், கருணையையும் காட்டி, தான் என்கிற உணர்வைக் குறைத்துக் கொண்டு விருப்பும், வெறுப்பும் இல்லாதவாறு, ஒருவகையான பற்றற்ற வாழ்வினை மேற்கொள்வதைப் **பிற்பதம்** என்று திருமூலர் பெருமான் குறிப்பிடுகிறார்.

இறைவன் புரியும் முத்தொழில் உயிர்கள் தத்துவங்களோடு தங்களைச் சேர்த்துக் கொண்டு பின்னர் அவைகளிடமிருந்து விடுபட்டு இறைவனுடைய திருவடியைச் சேரும் நெறியினைத் தெளிவுபடுத்துவதற்குத்தான். உயிர்களுடைய வினைக்கேற்ப, பக்குவத்திற்கேற்ப சீவராசிகள் மூவகை நிலைகளையும் அடையக்கூடிய தகுதி பெற்று, இப்பிறவியிலேயே உயிர்கள் சிவமாம் தன்மையைப் பெறக்கூடிய வாய்ப்புக்களை இறைவனுடைய திருவருள் அளிக்கின்றது. ஒரு வகையில் இறைவனே பாசத்திற்குக் காரணமாக இருப்பதால், மும்மலங்களும் அவன் உயிர்களுக்குத் தந்த குறைபாடுகள் என்றே எடுத்துக் கொள்வதில் தவறில்லை. உணர்ந்து கொள்வோர் வாழ்க்கையில் கன்மமும், மாயையும் உயிர்கள் வீடு பேற்றை அடையக்கூடிய மார்க்கமாக அமைகின்றன. இந்த வழியைப் பின்பற்றிச் செல்பவர்கள் முக்குற்றமாகிய காமம், வெகுளி, மயக்கம் ஆகியவற்றிலிருந்து விடுபடுவர். இவ்வாறு சோபானரீதியாக தத்துவங்களைக் களைந்து, தூய்மையை அடைந்து வரும் சீவர்கள், சீவ முக்தி, பர முக்தி, சிவ முக்தி ஆகிய மும்முக்திகளை அடைகின்றனர். உயிர் தன்னிலை விளக்கத்தைத் தன்னுள் உணர்ந்து சீவ முக்தியை அடைகின்றது. பிறப்பின் நோக்கத்தைத் தெரிந்து கொள்கின்றது. தன்னைப் பற்றிய அறிவைப் பெற்று, வைராக்கியத்துடன் பிரபஞ்சத்தை விட்டுத் தள்ளி நிற்கும். இத்தோடு நிற்காமல் மேலும் சென்று இறைவனுடைய பேரறிவு, பேராற்றல் ஆகியவற்றை உணர்ந்தவைகளாகப் பேரின்பம் பெற்று இறை எனும் பெரும் சுடரில் அந்த உண்மையில் தன்மையைத் தெரிந்து கொள்வது பரமுத்தி நிலையாகும். பெருஞ்சுடராகிய பேரறிவில் சிறிய சுடரான உயிரானது ஒன்றிக் கொண்டு கிடைக்கும் பேரானந்தத்தில் திளைப்பது சிவமுத்தி என்று கூறப்படுகின்றது. தத்துவங்கள் நழுவி விடுகின்றன. எஞ்சி நிற்பது உயிரும், சிவமாகிய பரம்பொருளும்தான். மும்மலங்களோடு கூடியிருக்கும்போது சீவன் மருள் நிலையில் நிற்கின்றது. தத்துவங்களைக் கடக்கும்பொழுது

பரசொரூபம் பெறுகிறது. இறைவனுடன் பொருந்தி இறைத் தன்மையைப் பெற்றிருக்கும்போது உயிர் சிவசொரூபத்தை அடைகின்றது. பளிங்கு ஒன்றைப் பாருங்கள். அதற்கு எதிரே ஒளி வீசும் மாணிக்கக்கல் ஒன்றை வையுங்கள். அந்த வெண்மையான பளிங்கானது மாணிக்கத்தின் வண்ணத்தையும், அழகையும், பூரிப்பையுயும் வெளிப்படுத்தும். சிவசொரூபமாக இருக்கும் உயிர்கள் சிவபரம்பொருளின் தன்மையை வெளிப்படுத்துகின்றன.

**"மணியொளி சோபை யிலக்கணம் வாய்த்து**
**மணியென லாய்நின்ற லாறது போலத்**
**துணிமுச் சொருபாதி சத்தியாதி சாரப்**
**பணிவித்த பேர்நந்தி பாதம் பற் றாயே."** (திருமந்திரம் - 2482)

**நான்கு உணர்ந்தான்:**

எல்லோராலும் உணரப்பட வேண்டிய இறைவன் நான்குணர்ந்தான் என்று திருமூலர் பெருமான் கூறும்பொழுது சற்று வியப்பாகவே இருக்கும். இதற்குப் பொதுவாக அறிஞர்கள் பொருள் கூறுவது இறைவன் நான்கு வேதங்களையும் முற்றிலும் உணர்ந்தவன் என்பதாகும். உண்மையில் நான்கு வேதங்களின் முடிவான பொருளே இறைவனல்லவா? வேதங்கள், யோகிகள் மேற்கொண்ட ஆழ்ந்த தியானத்தின் விளைவாகத் தெளிந்த உள்ளங்களிலிருந்து எழுந்த உண்மையாகும். வேதங்கள் வெளிப் படையாகப் பல தெய்வங்களைப் போற்றி, வாழ்த்தி வணங்குகின்றன. தெய்வங்கள் பலவானாலும் இறைவன் ஒருவனே என்று வேதங்கள் கூறுகின்றன. வேதங்கள் அறத்தை வலியுறுத்துகின்றன. இறை வழிபாட்டிற்கான நெறிகளை விளக்கித் தருகின்றன. வேதங்களின் ஆழ்ந்த உண்மையைப் புரிந்து கொண்டவர்கள். வேதங்கள் போற்றும் இறைவனைத் தம்முள்ளேயே உணர்ந்து கொள்கின்றார்கள். வேதங்களால் உணரப்படும் பொருளாகிய இறைவனை நாமும் உணர வேண்டும் என்பதே வேதங்களுடைய மேற்கோளாகும்.

வேத மந்திரங்களில் தலையாய் நிற்பது பிரணவ மந்திரம் ஆகும். "ஓமிதி பிரம்மா" என்கிறது வேதம். "ஓம் என்பதே பிரம்மமாகும்" என்பது பொருளாகும். "ஓம் இதி ஏதத் அக்ஷரம் இதம் சர்வம்" என்கிறது மண்டுக்கியா உபநிடதம். அதாவது ஓம் என்னும் சொல்லே எல்லாம் ஆகும் என்பது இதற்குப் பொருளாகும். இதைத் தெரிந்து கொண்டவர்கள் இறைவனை அனுபவிக்கின்றார்கள் என்று வேதங்கள் கூறுகின்றன. ஓம் என்பது முதல் ஒலி. அது இறைவனுடைய ஆற்றலின் வெளிப்பாடாகிய நாதத்திற்கே காரணமானது. ஓம் என்ற சொல்லே நாதமாக வெளிப்பட்டு, ஓசை அலைகளை உருவாக்கி இறைவனுடைய உலக இயக்கத்திற்குத் தொடக்கமாக அமைகின்றது. ஓம் என்னும் ஒலியே யோகிகள் தங்களுடைய

சித்தத்திலே இறையாற்றலின் பிரதிபலிப்பாகத் தெரிந்து கொள்கின்றார்கள். பிரபஞ்சத்தின் இயக்கத்தில் வெவ்வேறு அணுக்களின் அசைவுகள் ஓம் எனும் ஒலியால் ஏற்படுகின்றன. ஐம்பூதங்களும், ஐம்புலன்களும், பிரபஞ்சமும் ஓம் எனும் ஆதி மந்திரத்திலிருந்து தோன்றியவை. யோகிகள் ஓம் என்கின்ற பொருளின் உண்மையை நமக்கு எடுத்துக் கூறும் போது, அதை உணர்ந்தவர்கள் இறைவனைத் தம்முள் கண்டு கொள்கின்றார்கள் என்று சொல்கிறார்கள். ஓம் என்கின்ற சொல்லின் விளக்கத்தைப் பெறும் வேதங்களின் உண்மையையும் தெரிந்து கொள்கின்றோம்.

நான்கு வேதங்களையும் நன்கு கற்றுணர்ந்தவர்கள் தெளிவான சிந்தனை உடையவர்களாகி இறையுண்மையை அறிகின்றார்கள். வேதத்தை உணர விரும்புபவர்கள் மந்திரங்களைக் கற்றால் மட்டும் போதாது. வேதங்களின் முடிவான பொருள் பற்றற்ற நிலையே ஆகும். ஆகவே, பரம்பொருளை உணர்ந்தவர்கள் பற்றற்றவர்களாய் நிற்கின்றார்கள். எனவேதான் திருமூலர் பெருமான் **''பற்று அற்றவர்கள் பற்றி நின்ற பரம்பொருளே''** என்கின்றார். வேதங்களைப் படித்து, தொடர்ந்து வேட்கை மிகுந்தவர்களாய் இருப்பவர்கள் வேதங்கள் கண்ட இறைவனை உணர மாட்டார்கள். இதுபற்றிய திருமந்திரத்தைக் கீழே காணுங்களேன்.

**''வேதாந்தம் கேட்க விரும்பிய வேதியர்**
**வேதாந்தம் கேட்டுந்தம் வேட்கை ஒழிந்திலர்**
**வேதாந்த மாவது வேட்கை ஒழிந்திடம்**
**வேதாந்தங் கேட்டவர் வேட்கை விட்டாரே.''**

**(திருமந்திரம் - 229)**

ஆகவே, வேதங்கள் கூறும் பரம்பொருளை உணர உண்மை ஒழுக்கம் வேண்டும். அறிவு பக்குவமடைய வேண்டும். பொருட்கள் மீது விருப்பு வெறுப்பின்றி நிற்க வேண்டும். பரம்பொருள் மீது உண்மையான அன்பும் பக்தியும், நம்பிக்கையும் இருக்க வேண்டும். ஐம்பொறிகளையும் புலன்வழி செல்லாது தடுத்து, பாச பந்தங்களை அகற்ற வேண்டும். கடைசியில் தான் என்கின்ற நினைப்பையும் இழத்தல் வேண்டும். இறைவன் விருப்பு வெறுப்பு அற்ற இடம். ஆசா பாசங்களை வைத்துக் கொண்டிருப்பவன் இறைவனாக முடியாது. அவற்றிற்கு அப்பால் சென்றவன்தான் எல்லா உயிர்களிடமும் ஒற்றுமை உணர்வு பெற்ற இறை நிலையை அடைய முடியும். இதைத் திருமந்திரம் பின்வருமாறு கூறுகிறது.

**''சத்திய முந்தவம்தான் அவன் ஆதலும்**
**எய்த்தகும் இந்தியம் ஈட்டியே வாட்டலும்**
**ஒத்த உயிர்கள் உண்டா யுணர்வுற்றுப்**
**பெத்தம் அறுத்தலு மாகும் பிரமமே''.** **(திருமந்திரம் - 228)**

**"மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்**
**ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே**
**மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே**
**... ... ... ..."**
**அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே."**

என்பது திருவாசகம். பரம்பொருள் என்பது பேரறிவு. வேதங்களும் பேரறிவு என்பதும் ஒன்றே. வேதங்கள் இடைவிடாது சொல்லிக் கொண்டிருக்கும் பரம்பொருளை நினைத்தமாத்திரத்திலும் அறியலாம்.

**"உன்னும் அளவில் உணரும் ஒருவனைப்**
**பன்னு மறைகள் பயிலும் பரமனை**
**... ... ... ...**
**... ... ... ..."**

என்பது திருமந்திரம்.

ஆகவே, இறைவன் வேதங்களை உணர்ந்தவனாகத்தான் இருக்க முடியும்.

வேறொரு கருத்தையும் சொல்லலாம். வேதங்களை உணர்ந்த இறைவன் வேத நெறியை நமக்குப் போதிக்கின்றான். திருஞானசம்பந்தர் பெருமானுடைய பிறப்பிற்குக் காரணம் **"வேத நெறி தழைத்தோங்க"** என்கிறார் சேக்கிழார் பெருமான். வேதங்களை ஒதுவதிலும், சடங்குகளைச் செய்வதிலும் மட்டுமே வேத நெறி இல்லை. வேத நெறி அவற்றிற்கு அப்பாலும் செல்கின்றது என்பதைத் தெரிவிக்கவே திருஞானசம்பந்தர் பெருமான் இந்தப் பூவுலகில் திரு அவதாரம் செய்தார் என்பது ஆளுடைய பிள்ளையாருடைய வாழ்க்கையிலிருந்து நன்கு தெளிவாகின்றது. காதலாகிக் கசிந்து, கண்ணீர் மல்கி ஓத வேண்டும் என்கிறார் சீர்காழிப் பிள்ளையார். அதாவது, உயிரையும், உடலையும், பொருளையும் சிவபரம்பொருளிடம் ஒப்படைத்துவிட்டு எல்லாம் அவன் செயல் என்று அவனை நினைப்பதிலும், துதிப்பதிலும் வாழ்க்கையை நடத்துவதே வேத நெறியாகின்றது என்று பொருள் கொள்ளலாம். வேத நெறி சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கிற நான்கு நிலைகளில் வெளிப்படுகின்றது. வேதங்களை உணர்ந்த இறைவன் இந்த நான்கு நெறிகள் மூலமாகவும் உலக மக்களை உணர்விக்கின்றான்.

## ஐந்து வென்றனன்

ஐம்புலன்களையும் வென்றவன் இறைவன். அவற்றிற்குக் காரணமானவனே இறைவன். உடலில் ஐம்பொறிகளையும், ஐம்புலன்களையும் பொருத்தி அவற்றுடன் இணைந்தும் இணையாமலும் நிற்பவன் இறைவன். உடலின் தத்துவங்கள் இயங்க ஐம்பொறிகள்

பலவாறாகப் பணியாற்றுகின்றன. இந்த ஐந்து இந்திரியங்களும் மிக்க மதம் கொண்ட யானைகள் போன்றவை. அவற்றை அடக்கச் சாதாரண பாகன் போதாது. உடல் வலிமையும், மனத் தூய்மையும் பெற்ற உயிரே ஐம்பொறிகளை அடக்கும் தகுதி பெற்றுள்ளவை. ஐம்பொறிகளும் பறவைகள் போல வானில் உயர்ந்து பறந்து உணவைத் தேடி வருபவன. திருமூலர் பெருமான் அவற்றை உடம்பாகிய காட்டிலிருக்கும் ஐந்து சிங்கங்களுக்கும் ஒப்பிடுகின்றார். குகையிலிருந்து கிளம்பிய ஐந்து சிங்கங்கள் காட்டில் சென்று இரையுடன் திரும்பி வருவதுபோல ஐம்பொறிகள் வழியாக விஷய அனுபவங்கள் சதா காலமும் மனதைத் தாக்குகின்றன. சிவஞானபோதம் இவைகளை ஐந்து வேடர்களுக்கு ஒப்பிடுகின்றது. இந்த வேடர்கள் எல்லாப் பக்கமும் பார்த்துக் கொண்டு அம்பும் வில்லும் பொருந்தியவர்களாக விலங்குகளைத் தேடி நிற்பதுபோல் உள்ளனர். உடலாகிய அரசுக்கு அமைச்சர்களாகிய ஐந்து இந்திரியங்களும் ஏவலாளர்களாகிய தத்துவங்களும் உள்ளன. இந்த ஐந்து அமைச்சர்களும் நல்ல முறையில் செயல்படுவதற்கு மனமாகிய அரசன் முயலாவிடில் ஐந்து அமைச்சர்களும் தத்துவங்களும் தாம் போன போக்கிலேயே போய் விடுவார்கள். திருமூலநாயனார் இத்துடன் நிற்கவில்லை. இந்திரியங்களை மதயானைகளுக்கு ஒப்பிட்டவர் அந்த மதயானைகள் எவ்வாறு கோட்டையிலிருந்து தப்பி ஓடிக் காடுகளிலே புகுந்து உடம்பாகிய கரும்புப் பயிரினை அழித்து அலைகின்றன என்று அழகாக விவரிக்கின்றார்.

விஷய அறிவு மனதில் பதிந்தவுடன் புத்தி, சித்தம் போன்றவை செயல்பட ஆரம்பிக்கின்றன. அவற்றிற்கு எழுச்சியை அகங்காரம் கொடுக்கின்றது. ஆகவே, இந்த அனுபவங்களைக் குறைப்பதற்காக ஐம்புலன்களைக் கட்டுப்படுத்துவது மிக அவசியமாகின்றது. இதைச் சாதாரணமாகச் சொல்லி விடலாம். ஆனால், நடைமுறைப்படுத்துவது மிகவும் கடினம். தேவர்கள் கூட ஐம்புலன்களை முழுதும் அடக்கக்கூடிய நிலையில் இல்லை. ஆனால், அவற்றை ஒடுக்கி, வென்று ஞானத்தறியினில் பூட்டிச் சிந்தையை ஒரே வழியாக எடுத்துச் செல்லும் மக்கள் இறைவனை உணர்வார்கள். ஏனென்றால், இறைவன் ஐம்புலன்களுக்கும் அப்பாற் பட்டவன். ஐம்புலன்களை வென்ற நீங்களும் இறைத்தன்மையைப் பெறுகிறீர்கள். இறைவன் பொறிகளையும், புலன்களையும் தோற்றுவித்து அவற்றின் மூலமாக மக்களுக்கு நல்லது என்றும் தீயதென்றும் விளக்கி வினையை எடுத்து வைத்து வினையின் மூலமாகத் தன்னுடைய தொழிலை நடத்திக் கடைசியில் சீவராசிகளுக்குத் தனது அருளை அளித்து, தன்னுடன் சேர்த்துக் கொள்ளக்கூடிய ஓர் நிலையை உருவாக்குகின்றான். ஆகவேதான், சகஜ நிலையில் மக்கள் உலகத்தில் பிறந்தவர்கள் விருப்பினாலும் வெறுப்பினாலும் பிணக்கப்படுவர். தங்களுடைய ஆவலைப் பூர்த்தி செய்ய முற்படுகின்றனர். ஆனால், நாம் முக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டியது அந்த ஆவலை நல்ல வழியில் பூர்த்தி செய்து கொள்ள வேண்டியது பற்றித்தான். பிறவிப் பயனைப்பெற வேண்டுமென்கிற அறிவை

அடைவதற்கான தடைகளிலே முக்கியமான ஒன்று இந்த ஐம்புலன்களினால் ஏற்படும் அனுபவங்கள். ஆனால், அந்த அனுபவங்களை இறைவன் அளித்த அனுபவங்களாக எடுத்துக் கொண்டு உலகிலே அற வழியாக நடப்பவர்கள் ஆசையையும், அன்பையும் அறுப்பதற்கான வழிகளைக் கண்டுகொள் கிறார்கள். இந்த ஐம்புலன்களால் வரக்கூடிய வினையை அவ்வாறு தீர்த்துக்கொள்ள முயல வேண்டும். இதைத் திருமந்திரம் விளக்குகின்றது.

**"இன்பம் இடரென் றிரண்டுற வைத்தது**
**முன்பவர் செய்கையி னாலே முடிந்தது**
**இன்பம் அதுகண்டும் ஈகிலாப் பேதைகள்**
**அன்பிலார் சிந்தை அறம் அறி யாரே".** **(திருமந்திரம் - 267)**

அன்பு, அறம், தவம், ஈதல் ஆகிய நெறிகளை மேற்கொண்டு தூய்மையான வாழ்க்கை நடத்தி, ஆசைகளைக் குறைத்துக் கொண்டு வாழ்ந்தோமானால் எது நிலையானது, எது நிலையற்றது என்பது பற்றித் தெளிவு பிறக்கிறது. ஆசைகளை நீக்கிக் கொள்ள வேண்டும் என்கிற உணர்வு வளர்கிறது. அதுவே பக்குவமான நிலை. இதுவே இறை நிலை. உருவன்றியே நிற்கின்ற மாயப்பிரான் ஐம்புலன்களை வென்றவன். செங்கற் சுவரால் கட்டப்பட்ட வீடுகளில் இருப்பவனல்லன். தனியாக மண்டபங்களில் அமர்ந்திருப்பவனும் அல்லன். வீடுகளில் உள்ள அறைகளில் வீற்றிருப்பவனும் அல்லன். அவன் ஆலயங்களில் அமர்ந்து கொண்டிருக்கின்றான் என்று கூட நினைக்கத் தேவையில்லை. சமய இலக்கணங்களைப் பின்பற்றி சமய வழிகளிலே நிற்பவர்களுடைய மனத்தில் தங்குபவனும் அல்லன். ஆனால், வேட்கை விட்டவர் இதயத்தில் நின்று உள்ளிருந்தபடியே அவர்களுடைய உயிரைத் தூய்மை செய்து தன்னுடன் சேர்த்துக் கொள்கின்றான். ஏனென்றால், அதுவே அவனுடைய தன்மையாகும். இந்தத் திருமந்திரத்தைப் பாருங்கள்.

**"மாடத்து ளானலன் மண்டபத் தானலன்**
**கூடத்து ளானலன் கோயிலுள் ளானலன்**
**வேடத்து ளானலன் வேட்கைவிட் டார்நெஞ்சில்**
**மூடத்து ளேநின்று முத்திதந் தானே".** **(திருமந்திரம் - 2614)**

## ஆறு விரிந்தனன்

தவத்திரு சுத்தானந்த பாரதியார் அவர்கள் தனது திருமந்திர விளக்க நூலில் இதற்குப் பொருளாக இறைவன் ஆறுவிதமான சமயங்களிலும் விரிந்து நின்றவன் என்று கூறுகிறார். இந்த ஆறு சமயங்களும், பொதுவாக அகச்சமயம், அகப்புறச்சமயம், புறச்சமயம், புறப்புறச்சமயம் என்கிற நான்கு உட்பிரிவுகளில் தங்குகின்றன என்றும், சமயங்கள் எத்தகைய கொள்கைகளைப் பெற்றிருந்தாலும் அல்லது தெய்வங்களை வணங்கினாலும், ஆழ்ந்து நோக்கினால், இறைவன் ஒருவனே என்கின்ற

அடிப்படையில் இறைவனே ஆறு சமயங்களாக அவற்றிலுள்ள தத்துவங்களாக மக்களுடைய மனத்திற்குத் தக்கபடி காட்சியளிக்கின்றான் என்கிற பொருளைத் தருகின்றார்.

இந்தக் கருத்தைத் தவிர வேறு சில விளக்கங்களையும் அளிப்பதற்கான ஆதாரங்களைத் திருமந்திரத்திலேயே காணலாம். பல ஆயிரமாண்டுகளாக நம்முடைய யோகிகள் இறைவனைத் தம்முள் நன்கு உணர்ந்த நிலையில் உடம்பைப் பற்றியும், உயிரைப் பற்றியும் பலவிதமான நுண்ணிய ஆராய்ச்சிகளைச் செய்திருக்கின்றார்கள். மனித உடம்பிலே தங்கி இயங்கும் ஆற்றல்களைக் கண்டுபிடித்திருக்கின்றார்கள். இந்த ஆற்றல்கள் இயங்கும் தன்மையைப் பற்றி விரிவாக யோக சாஸ்திர நூல்கள் எடுத்துரைக்கின்றன. பரம்பொருளின் ஆற்றலின் ஒரு அம்சமே இவ்வாறு உடலில் நிற்கின்றது என்று யோகிகள் கூறுகிறார்கள். இந்த ஆற்றல்கள் இருக்குமிடங்களை ஆதாரங்கள் என்று அழைப்பார்கள். இவ்வாறு உடம்பில் ஆறு ஆதாரங்கள் இருப்பதாக அறியப்பட்டுள்ளது. இவை முறையே மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பதாகும். இவற்றின் மூலம் என்னும் அடி நிலை முதல் ஆதாரமாகும். இந்த ஆதார சக்திகள் பூவிதழ்களின் அமைப்பைக் கொண்டவை என்றும், பல நிறங்களைக் கொண்டவை என்றும், ஒவ்வொரு ஆதாரத்திற்கும் காரணமாய் உள்ள சக்தியை எழுத்துக்களால் குறிப்பிடலாம் என்றும் யோக நூல்களில் கூறப்பட்டுள்ளது. மூலாதாரம், நான்கு இதழ்களையும், நான்கு எழுத்துக்களையும் கொண்டது. செவ்வொளி நிறமுடையது. நாற்கோணத்தில் முக்கோண வடிவமுடையது. குதத்திற்கும் குய்யத்திற்கும் இடையில் உள்ளதாகக் கூறுவர். இறைவன் பெரும் ஆற்றலாகச் சீவ ராசிகளிடையே சக்தி என்னும் வடிவில் தோன்றி எழும் போது அடிப்படையான குண்டலினி சக்தி என்கின்ற பெயருடன் விளங்கும் இடம் இந்த இடமே. யோகிகள் ''அனைத்து மந்திரங்களுக்கும் மூலமாகிய ஓங்காரமே குண்டலினி சக்தி'' என்பர். இதிலிருந்தே இந்தச் சக்தி இறை சக்தி என்று நன்கு தெரிகின்றது. எனினும், மாயையால் உலகமும், பொருளும் உருவாக்கப்பட்டு அவற்றைப் பற்றிய அனுபவங்களைப் பெறுவதற்கென சீவராசிகளுக்குச் சக்தியை வழங்கும் இறைவன் முதற்கட்டமாகப் பொருளுக்கு முக்கியத்துவம் கொடுத்து மூலாதார நிலையில் சாதாரணமாகத் தூங்கிக் கிடக்கின்ற சக்தியாக வெளிப்படுகிறான். இதைக் குண்டலினி தூங்குகின்றது என்பார்கள். உள்ளுணர்வற்ற அறியாமை நிலையையும் இது குறிக்கின்றது. எவ்வாறாயினும் பிரபஞ்சம் இயங்குவதற்கு அடிப்படையாக உள்ள நிலை மூலாதாரம்.

அடுத்து சுவாதிட்டானம். ஆறு இதழ்களையும், ஆறு எழுத்துக்களையும் கொண்டது. கொப்பூழ் தானத்தில் அமைந்துள்ளது. இந்த இதழ்களும் சிவப்பு நிறம் கொண்டவை. உள்ளெழும் சோதிக்குத் துவக்க இடம் இதுவே. இங்கிருந்தே யோகப் பயிற்சியின் மூலம் மூலாதாரச் சக்தி மேலெழும்புவதாக யோகிகள் கூறுவர்.

மூன்றாவதாக மணிபூரகம் பத்து இதழ்களைக் கொண்டதாய்ப் பத்து எழுத்துக்களைக் கொண்டதாய் இருதயத்தானத்திற்கும் நாபிக்கும் இடையில் அமைந்துள்ளது. மூன்று வட்டங்களையுடையது.

அடுத்து அதாகதம் என்பது பன்னிரண்டு இதழ்களையும், பன்னிரண்டு எழுத்துக்களையும் கொண்டது. இருதய ஸ்தானத்தில் அமைந்துள்ளது. மனத்தின் இடம் இதுவே என்பதும் ஒரு கருத்து.

இந்த நான்கு நிலைகளுக்கும் மேலுள்ளது விசுத்தியாகும். பதினாறு இதழ்களிலும், பதினாறு உயிரெழுத்துக்களிலும் புகை போன்ற நிறமுடன் இது அமைந்துள்ளது. இது கண்டம் அல்லது கழுத்து என்கின்ற இடத்தில் உள்ளதாகக் கூறுவர். இருதயத்திற்கு மேலுள்ள நிலையானதால் சீவராசிகளின் சாதாரண உணர்ச்சிகள் இவ்விடத்தில் குறைக்கப்பட்டு அறிவு தோன்றும் இடமாக உள்ளது. ஆகவேதான், இந்த இடம் ''மிக்க தூய்மையான'' இடமெனக் கருதப்படுகிறது. ஞான நெறியில் செல்லும் ஒருவனுக்கு இது முதல் இடமாக விளங்குகிறது.

அடுத்து இருப்பது ஆக்ஞை. இரண்டு எழுத்துக்களையும் இரண்டு இதழ்களையும் கொண்டுள்ளது. இது புருவத்தின் நடுவில் உள்ள இடம். அறிவிற்கு நிலைக்களமாக அமைந்துள்ளது. **''வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு''** என்பார் திருமூலர். இங்கு உலக அறிவு மங்கி இறை அறிவு தோன்றுகிறது. இங்கிருந்து மேற்செல்லும் நிலையில் இறையுணர்வும், இறையொளியும், மேலும் மேலும் பிரகாசித்து யோக சாதகன் பெருநிலையை அடையக்கூடிய வாய்ப்பினைப் பெறுகின்றான் என்று சொல்லப்படுகிறது.

இந்த விளக்கங்களுக்குச் சான்றாக பின்வரும் திருமந்திரத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

**''நாலும் இருமூன்றும் ஈரைந்தும் ஈராறுங்**
**கோலிமேல் நின்ற குறிகள் பதினாறும்,**
**மூலங்கண் டாங்கே முடிந்து முதல்இரண்டுங்**
**காலங்கண் டானடி காணலு மாமே''.** (திருமந்திரம் - 1704)

ஞானசம்பந்தர் பெருமானும்

**''ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி, ஒண்சுடர்**
**ஞான விளக்கினை ஏற்றி, நன்புலத்(து)**
**ஏனை வழிதிறந்(து) ஏத்துவார்க்(கு) இட**
**ரான கெடுப்பன அஞ்செழுத்துமே''**

என்று அருளிச் செய்கின்றார்.

இந்த ஆறு ஆதாரங்களிலும் இறை சக்தியே பொருந்தியுள்ளது. உயிரின் இயக்கம் நடந்து கொண்டிருக்கும்பொழுது சக்தியின் பெருக்கம் மனிதனின் எல்லாப் பாகங்களிலும் மூலாதாரத்திலிருந்து உச்சியை

நோக்கியும், உச்சியிலிருந்து கீழ்நோக்கியும் மிக நுண்ணியதான நிலையில் நடந்து கொண்டே இருக்கின்றது. அண்டமெல்லாம் வியாபித்திருக்கும் சக்தியின் அணுக்கள் இந்த ஆதாரங்களில் உள்ளிழுக்கப்பட்டு சஞ்சரித்துக்கொண்டே இருக்கின்றன. தங்கள் தன்மைக்கேற்ப இந்த ஆதாரங்கள் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய நிலையில் மனிதனுக்குக் குணங்களையும், குணச்சேர்க்கைகளையும், விருப்புகளையும், வெறுப்பு களையும் அளித்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே, பிரபஞ்சத்தில் உள்ள இறை சக்தியே இவ்வாறு செயல்பட்டு வருகிறது. விசுத்திக்குக்கீழ் உள்ள நான்கு ஆதாரங்களில் தேவர்கள் ஆகிய சதாசிவர், மகேஸ்வரர், உருத்திரர், திருமால் என்பவர் வீற்றிருப்பதாகக் கருதப்படுகிறது. இவர்கள் முறையே ஆகாயம், வாயு, தேயு, அப்பு, அதாவது, ஆகாயம், காற்று, நீர், நிலம் என்னும் பூதங்கட்குத் தலைவர்களென எண்ணப்படுவதால் இந்த நான்கு ஆதார நிலைகளிலும் உள்ள சக்திகள உயிரை உடலுடன் பொருந்திய வகையில் உடலுக்கான இன்பத் துன்பங்களைப் பெறுவதற்கான அமைப்பில் வைக்கப்பட்டிருக்கின்றது எனவும் எடுத்துக் கொள்ளலாம். அந்த நிலையில் உயிர் உலகமயமாக குறைந்த ஒளியுடன் குண மாற்றங்களுக்கு உட்பட்டதாய்ப் பாசங்களுடன் பிணைக்கப்பட்டதாய் நிற்கின்றது. இந்த நிலையிலிருந்து விடுபட்டு ஆதார சக்திகளின் தன்மையைப் படிப்படியாக மாற்றி யோக சாதனைகளின் மூலமாக இறைவனின் திருவடி உணர்வைப் பெறுவது எல்லாச் சீவராசிகளுடைய நோக்கமாக இருக்க வேண்டுமென்பது சித்தர்கள் வாக்காகும். இந்த நிலையை **ஆனந்த யோகம்** என்று பெயரிட்டுள்ளார்கள். இவற்றைப் பற்றிய விவரங்களை நன்கு கற்றுணர்ந்தவர்களிடம் இருந்து தெரிந்து கொள்வது நல்லது. இறைவனை அடையப் பல வழிகள் உண்டு என்பதை யாவரும் உணருகின்றார்கள். அந்த ஆர்வத்தால் இறைவனைக் காணுதல் பொருட்டுக் கடல் சூழ்ந்த உலகம் முழுவதும் கால்கள் நோவ நோவ சுற்றிவரினும் பயன் கிட்டாது என்பது திருமூலர் பெருமானுடைய வாக்கு. தம்முள்ளேயே யோக சாதனை மூலம் இறைவனை அறிந்து கொள்ள வாய்ப்பு உண்டு என்பதைத் திருமந்திரம் பின்வருமாறு தெரிவிக்கின்றது.

**''ஓதம் ஒலிக்கும் உலகை வலம் வந்து**
**பாதங்கள் நோவ நடந்தும் பயனில்லை**
**காதலில் அண்ணலைக் காண இனியவர்**
**நாதன் இருந்த நகரறி வாரே''.** (திருமந்திரம் - 707)

பேரறிவாகிய இறைவன் பேராற்றலாகச் சீவராசிகளிடம் வியாபித்துள்ளபொழுது சக்தி என்னும் பெயருடன் இயங்குகின்றான். இச்சக்தியானவள் சிவனுடைய சொரூபமே. இச்சக்தி உடலிலுள்ள ஆதாரங்களில் பொருந்தி இருப்பதை உணர்ந்தவர்கள் இறைவன் உடலினுள் வியாபித்திருக்கின்றான் என்பதைத் தெரிந்து கொள்கின்றார்கள். இச்சக்தியைத் திருமூலர் பூரண சக்தி என்றழைக்கின்றார்

## ஏழுஉம்பர்ச் சென்றனன்

யோகிகள் உடலைக் கோயிலாகக் கருதுகிறார்கள். உடலில் இறைவன் வீற்றிருக்கின்றான் என்பார்கள். உடலையும் உடலைச் சார்ந்த கருவிகளையும் அன்றாடத் தேவைகளை அடைய நாம் பயன்படுத்தி வரும்பொழுது உடலிலே பொருந்தியுள்ள நுட்பமான சக்திகளை நாம் உணர்ந்து கொள்வதில்லை. ஆனால், இறைவன் உடலின் கூறுகளாகிய அத்துணை அணுக்களிலும் நிரம்பியிருக்கின்றான் என்பது யோகிகளின் அனுபவம். உடலின் கீழ்நோக்கும் சக்திகளில் நாம் கவனத்தைச் செலுத்தும்போது இறை உணர்வைத் தூண்டிவிடும் ஆற்றல்களைக் கண்டு கொள்வதில்லை. கீழ்நோக்கும் சக்திகளின் இயக்கத்தைச் சிறிது சிறிதாகக் குறைத்துப் பொறிவழிச் செல்லாமல் மனத்தைத் தூய்மைப்படுத்தி, மேல்நோக்க வேண்டும் என்பதே உடலிலுள்ள அடிப்படை ஆற்றலை ஆதாரங்கள் வழியாக மேலேற்றுவது என்று சித்தர்களுடைய சித்தாந்தம் நமக்கு எடுத்துச் சொல்லுகிறது. கீழுள்ள சக்திகள் மேலே எழும்போது தலை உச்சியில் பன்னிரண்டு அங்குல அளவு அடைந்து, அங்கே பரவி நிற்கும் நிலையை யோகத்தின் முடிவு என்பார்கள். அப்பொழுது சாதகன் பலவிதமான நுட்பமான அனுபவங்களைப் பெறுகிறான் என்று யோகியர் நமக்கு எடுத்துச் சொல்கின்றனர். யோக நூல்கள் சகஸ்தர தலம் என்று குறிப்பிடும் இந்த இடம் இறைவனின் திருவடி பொருந்திய நிலையாகக் கருதப்படுகிறது. பேரறிவு உள்ளத்திலே தோன்றிச் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் உணர்வினைத் தருவதாகவும் யோகிகள் கூறுகின்றனர். இறைவன் ஏழாவது நிலையில் வீற்றிருக்கும் அனுபவ உண்மையைக் கண்டுள்ள பெரியோர்களைச் ''சிவனார்'' என்று யோகிகள் கூறிக்கொள்வது வழக்கம். இந்த நிலையை அருள் விளக்கம் பெறுகின்ற நிலை. அருள் நலம் கனிந்து எழுகின்ற நிலை என்று சொல்வார்கள். இறைவன் ஏழு உம்பர்ச் சென்றனன் என்றால் உடலின் நுட்பமான பகுதிகளிலும், உடலோடு உடலாகக் கலந்து சாதகர்கள் அடையக்கூடிய ஒரு அனுபவபூர்வமான உண்மையாக இறைவன் வீற்றிருக்கின்றான் என்பது பொருள்.

## தானிருந் தானுணர்ந் தெட்டே

தான் இருந்தான். தானான நிலையில் சக்தியோடு கூடி, எல்லாமாகி ஒன்றானான் என்கிற உண்மை நிலையில், சொரூப நிலையில் இறைவன் இருப்பதைத்தான் இருந்தான் என்று எடுத்துக் கொள்ளலாம். அவனே உணரப்படுவதற்கும், அடையப்படுவதற்கும் உரியவனாவான். மனித உடலில் உள்ள ஏழு நிலைகளையும் கடந்து, எட்டாவது நிலையான பரவெளியில் மனத்திற்கு எட்டாதவாறு வீற்றிருக்கின்றான் என்றும் பொருள் கொள்ளலாம். மும்மலங்களைக் கழிக்க உயிரானது இந்த நிலையை அடையும் பொழுது சிவமாம் தன்மையைப் பெறுகின்றது. இந்த நிலையை உணர்ந்து பார்த்து அனுபவிக்க வேண்டும் என்று அருளாளர்கள் கூறுவார்கள். இதையே திருமூலர்பெருமான் ''உணர்ந்து எட்டே'' என்கிறார்.

இறைவன் தனது சக்தியை வெளிப்படுத்தி, ஐம்பூதங்களைத் தாங்கி, விண்ணாகி, பரவெளியாகி நிற்கின்றான். சுடுகின்ற தீயாகவும், ஒளி வீசும் சூரியனாகவும், சந்திரனாகவும் காட்சி தருகின்றான். கருணை மழை பொழிகின்ற உயிர்த் தெய்வமாக விளங்குகின்றான். நம்முடைய தலையில் அவனுடைய திருவடியை வைத்து வினைப் போகங்களைத் துய்க்கும் ஆற்றலையும் நமக்குத் தந்து, அந்த அனுபவங்களுக்கு முடிவான இடமாகவும் நம்முடைய உள்ளத்திலே வீற்றிருக்கின்றான்.

**''தானே இரு நிலந் தாங்கிவிண் ணாய்நிற்குந்**
**தானே சுடும்அங்கி ஞாயிறுந்திங்களுந்**
**தானே மழைபொழி தையலு மாய்நிற்குந்**
**தானே வடவரைத் தண்கடற் கண்ணே''. (திருமந்திரம் - 1165)**

ஒரு காலத்தில் பிரம்மனும் திருமாலும் தங்களுடைய அறியாத் தன்மையால் இறைவனைத் தங்களுடைய ஆற்றலால் அடைந்துவிட முடியும் என்று கர்வப்பட்டார்கள். அக்கினிப் பிழம்பாய் நின்று கொண்டிருந்த இறைவனை மேலும் கீழும் சென்று காணாது தோல்வியுற்றனர். அண்டங்களுக்கு அப்பால் நிற்கும் இறைவனை ஆணவத்தோடும், கர்வத்தோடும் காண முயல்வது அறியாமையாகும். அதே நேரத்தில் அருளாளர்கள் இறைவனை உடலாயும், உயிராயும், உணர்வாயும், சோதியாயும், எல்லாப் பொருள்களிலும் காண்கின்றார்கள்.

**''ஊனாய் உயிராய் உணர்வங்கி யாய் முன்னஞ்**
**சேனாய்வா னோங்கித் திருவுருவாய் அண்டத்**
**தாணுவும் ஞாயிறுந் தண்மதி யுங்கடந்**
**தான் முழு தண்டமு மாகி நின்றானே''. (திருமந்திரம் - 374)**

அதே நேரத்தில், தூய்மையான மனதில் அன்பும், அடக்கமும் நிறைந்த இதயத்தில் இறைவனை ஓர் இன்பப் பொருளாகவும், அறிவுப் பொருளாகவும், அன்பைப் பொழிகின்ற தயாளனாகவும், உயிர்களை உய்விக்க ஐந்தொழில்களைப் புரிகின்றவனாகவும், காலமாகவும், காலத்திற்கு அப்பாற்பட்டவனாகவும் உணரலாம். இந்த உணர்வினை எட்டுவதற்கும், எட்டிப் பிடிப்பதற்கும் நாம் எல்லோரும் முயற்சி செய்ய வேண்டும்.

**''அன்பும் அறிவும் அடக்கமு மாய் நிற்கும்**
**இன்பமும் இன்பக் கல்வியு மாய்நிற்கும்**
**முன்புறு காலமும் ஊழியு மாய்நிற்கும்**
**அன்புற ஐந்தில் அமர்ந்துநின் றானே''.**

திருமூலதேவ நாயனார் 'ஒன்றவன்தானே' என்று தொடங்கும் மந்திரத்தில் பல நுட்பமான கருத்துக்களை எடுத்துச் சொல்லுகிறார். பரம்பொருள் கல்விக்கும், கேள்விக்கும் அப்பாற்பட்ட நிலையில்

இருக்கின்றது என்பது ஒரு பக்கம். அதே பரம்பொருளை நம்முடைய உள்ளத்திலே அனுபவிக்கலாம். அனுபவித்துப் பேரானந்தத்தை அடையலாம் என்பது மற்றொரு பக்கம். பரம்பொருள் ஒன்றே என்று கூறி, அந்தப் பரம்பொருளை நம் உள்ளத்தில் வீற்றிருக்கக்கூடிய ஒரு பொருளாகப் படிப்படியாகத் தெளிவாக்கி, அந்தப் பரம்பொருளை அடைவதே எல்லாவற்றிற்கும் மேலான இன்பம் என்று திருமூலர் பெருமான் நமக்கெல்லாம் உபதேசிக்கின்றார். திருமந்திரமணிமாலைக்கு ஓர் சிறந்த தொடக்கமாக இந்த முதல் மந்திரம் அமைகின்றது.



# 4. "ஆதியோடு அந்தம் இலாத பராபரம்"

எல்லாம்வல்ல இறைவனைப் பற்றிய அறிவைப் பேரறிவு என்று சொல்கிறோம். மற்றதெல்லாம் சிற்றறிவாகும். இறைவன் மெய்ஞ்ஞானத்திற்கு இருப்பிடம். **"மெய்ஞ்ஞானமாகி, மிளிர்கின்ற மெய்ச்சுடரே"** என்பார் மணிவாசகப் பெருமான். **"அஞ்ஞானம்தன்னை அகல்விக்கும் நல்அறிவே"** என்றும் கூறுவார். இறைவன் உண்மை ஞானமாகப் பிரகாசிக்கின்ற சத்தியமான சுடர். அந்த ஞானமே எங்கும் பரவியும் ஊடுருவியும் நிற்கின்றது. அந்த அறிவே நம்முடைய உள்ளத்தின் அறியாமையைப் போக்குகின்றது. அறியாமை நீங்கிய உயிர் இறைவன் அருளால் மெய்ஞ்ஞானத்தைப் பெற்றதாகிறது. மெய்ஞ்ஞானம் பெற்ற சான்றோர்களின் தன்மை வேறு, சிற்றறிவின் இயக்கத்திலே ஈடுபட்டுள்ள உயிர்களாகிய நம்முடைய தன்மையும் வேறு. நாம் விஞ்ஞானத்தில் கிடக்கின்றோம். விஞ்ஞானமாவது கருவி கரணங்களைப் பயன்படுத்திப் பிரபஞ்சத்தினைப் பற்றிய அறிவினைப் பெறுவதாகும். பல கோடி அண்டங்கள் எவ்வாறு தோன்றுகின்றன, வளர்கின்றன, மறைகின்றன என்பது பற்றிய ஆராய்ச்சியை நமது கருவி கரணங்கள் பலவிதமான இயந்திரங்களைப் பயன்படுத்தி, செய்து நமக்கு அறிவினைச் சேர்த்து வருகின்றன. இந்த அறிவு விஞ்ஞான அறிவாகும்.

விஞ்ஞான அறிவினைப் பயன்படுத்தி இன்று மனிதன் புரிந்துள்ள சாதனைகள் பிரமிக்கத்தக்கவை. ஆயினும், விஞ்ஞான அறிவு மெய்ஞ்ஞான அறிவிலிருந்து வேறுபட்டது. மெய்ஞ்ஞான அறிவு இறைவனுடைய பேரறிவையும், பேராற்றலையும் பற்றியது. விஞ்ஞான அறிவு கருவி, கரணங்களோடு தொடர்புடைய காரணத்தால் அவற்றின் எல்லைக்குள்ளேயேதான் இயங்கவல்லது. மெய்ஞ்ஞான அறிவு கருவி, கரணங்களின் அறிவுக்கு அப்பாற்பட்டது. மெய்ஞ்ஞான அறிவு மனித உள்ளத்தில் ஒரு முழுமையான, அமைதியான, ஐயத்திற்கு இடமில்லாத உணர்வினை உண்டாக்கிப் பேரின்பத்தைத் தருகிறது. கருவி, கரணங்கள் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் இயங்குவதால் அவை அளிக்கும் அறிவு முழுமையாகாது.

முழுமையான அனுபவத்தைப் பெற்ற மெய்ஞ்ஞானிகள் எதிலும், எங்கும், எப்போதும் முழுமையைப் பார்க்கின்றனர். அவர்களே அந்த

முழுமைத் தன்மையையும் பெறுகின்றனர். சிவத்தைப் பராபரமாக அனுபவித்த திருமூலர் போன்ற சிவசித்தர்கள், அறியாமை நீங்கப்பெற்ற காரணத்தினால், அங்கு, இங்கு என்னாது எங்குமாய் இறை உணர்வில் மூழ்கி நிற்பர். அந்த நிலையில் அவர்களுடைய செயல்களெல்லாம் சிவன் செயலாகின்றன. அவர்கள் கால உணர்வைக் கடந்தவர்களாகிறார்கள். காலத்திற்கு அப்பாற்பட்ட மெய்ஞ்ஞானத்தைப் பெற்றமையால் உண்மையைக் காலத்தின் பாகுபாட்டால் மறைக்கப்படாமல், முழுமையாக, நிறைவோடு அனுபவிக்கின்றனர். சிவனுடைய அறிவில், ஆற்றலில் செயலற்று நிற்கின்றனர்.

"இருந்தார் சிவமாகி எங்குந் தாமாகி
இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி
இருந்தார் முக்காலத் தியல்பைக் குறித்தங்
கிருந்தார் இழவுவந் தெய்திய சோம்பே." (திருமந்திரம் - 126)

இன்று விஞ்ஞானம் பிரபஞ்சத்தை நோக்குகின்றது. பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு இந்தப் பிரபஞ்சம் அணுவிற்கும் நுட்பமான நிலையிலிருந்து உருவாகி, காலப்போக்கில் வெப்பம் குறைந்து பல அண்டங்களாக வடிவெடுத்திருக்க வேண்டுமென்று விஞ்ஞானத்தின் ஆய்வுகளால் அனுமானிக்க இடமுண்டு. சூரியன், சந்திரன் மற்றும் பலகோடி அண்டங்கள், கோளங்கள் போன்றவையெல்லாம் ஏறக்குறைய ஒரே மாதிரியான மூலப்பொருள்களின் அணுக்களிலிருந்தே உற்பத்தியாகின்றன எனவும், அந்த அணுக்களே இன்று பூவுலகில் உயிர் பெற்று வாழும் பல்வேறு உயிரினங்களின் உடல்களிலும் காணப்படுகின்றன என்பதையும் நாம் அறிவோம். இந்த அறிவினை விஞ்ஞானத்தின் மகத்தான சாதனை என்று நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், இந்த அறிவு நிறைவு பெற்ற அறிவு என்று சொல்ல இயலவில்லையே!

நம்மைப்போன்ற உயிர்கள் பிறப்பதைப் பார்க்கின்றோம்; இறப்பதைப் பார்க்கின்றோம்; இருப்பதைப் பார்க்கின்றோம். அதுபோலவே விஞ்ஞான ஆராய்ச்சிகள் வானவெளியில் பல கோடி அண்டங்கள் பிறந்து, இருந்து, மறைந்து வருவதை நமக்கு நிரூபிக்கின்றன. இதற்கான காரண, காரியங்களை விஞ்ஞானம் பௌதிக, இரசாயன முறையில் ஆய்வு செய்கின்றதே தவிர ஆய்வின் அடிப்படையை, அளவையை மாற்றத் தயாராக இல்லை. மாற்றுவதும் அதன் நோக்கமில்லை.

விஞ்ஞானம் பருப்பொருட்களை நோக்கி, அவற்றைப் பாகுபடுத்தி, அவற்றின் உட்பிரிவுகளை ஆராய்ச்சி செய்வதன் மூலமாகப் பொருட்களின் தன்மையை அறிய முற்படுகிறது. அவ்வாறு செய்யும்பொழுதும் பொருட்களைப் பொருட்களாகவே பார்க்க விரும்புகிறது. பொருட்களுக்கு அப்பாற்பட்ட தன்மையை, இப்பொழுதுள்ள விஞ்ஞானத்திற்குத் தகுந்தவாறு ஆய்வு செய்ய அளவுகோல்களோ சாதனங்களோ இல்லாத காரணத்தினால்

விஞ்ஞானம் மேலும் ஆய்வு செய்ய முற்படுவதில்லை. ஆகவேதான் மெய்ஞ்ஞானத்திற்கும், விஞ்ஞானத்திற்கும் உள்ள இடைவெளி மிகப்பெரியது. விஞ்ஞான சாதனங்கள் மூலமாக இறைவனை அடைய இயலாது. விஞ்ஞானத்திற்கு அந்த நோக்கமும் இல்லை. இறை அனுபவத்தைப் பெற மெய்ஞ்ஞானிகள் பின்தொடரும் வழிகளும் வேறு.

சிவயோகியர்கள் முற்றும் உணர்ந்த நிலையில் சிவபரம்பொருளோடு ஒன்றி இருந்து, அவனறிவு தனதறிவாகப் பெற்ற அனுபவத்தில், பிரபஞ்சத்தின் படைப்பு, சங்காரம் போன்றவற்றின் அறிவை உள்ளுணர்வாகப் பெறுகிறார்கள். இந்த அறிவு தூலத்திலிருந்து சூக்குமத்திற்குப் பரவுகின்றது. காணாத ஒன்றிலிருந்து காணப்படும் பலவற்றை இந்த அறிவு தன்னுள் அடக்கிக் கொள்கிறது. காரணமின்றிக் காரியமில்லை என்கிற அனுபவம் இந்த அறிவுக்கு அடிப்படையாகிறது. பிரபஞ்சத் தோற்ற ஒடுக்கங்களுக்கு இறைவனே முதல்வனாவான் என்பதே அந்தப் பேரறிவாகும். **''எல்லாம் வருவிப்பான் ஒருவன் வேண்டும்''** என்பது சிவஞான சித்தியார். **''முத்தானே, மூவாத முதலானே!''** என்பது திருவாசகம்.

படைத்தல், காத்தல், மறைத்தல், ஒடுக்குதல் போன்ற பணிகள் ஓயாமல் நடந்து கொண்டே இருக்கின்றன. இவையெல்லாம் ஈசனின்றி நடைபெறாது. மெய்ஞ்ஞானிகள் இவற்றை இறைவனின் விளையாட்டாகக் காண்கின்றார்கள். ''காத்தும், படைத்தும், கரந்தும் விளையாடி'' என்று திருவாசகம் பேசுகிறது. **''அய்யா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டில் உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்''** என்பதும் திருவாசக வாக்காகும். இது என்ன விளையாட்டு! ஈசனுக்கு இந்த விளையாடல் தேவையானதா என்று நினைக்கலாம். சற்று யோசித்தால் உண்மை விளங்கும். ஆக்கமும், ஒடுக்கமும் இறைவனுக்குக் கடினமானவை அல்ல. அவற்றை விளையாட்டாகச் செய்கிறான் என்றால் அத்துணை எளிதாகச் செய்கின்றான் என்பதே பொருள். இந்த விளையாட்டு நாடகம் இறைவனின் ஞான நாடகமாகும்; **''விண்ணின்று இழிந்து வினைக்கீடாய் மெய்கண்டு''** உயிர்கள் அனைத்தும் தம் பேரருளாலும், பெரும் கருணையாலும் உய்வடைய வேண்டும் என்பதே இந்தச் சிறு விளையாட்டின் நோக்கமாகும். இந்த விளையாட்டினால் பிரபஞ்சத்தையும், ஆகாயத்தையும், பூமியையும் உண்டாக்கி, காப்பாற்றி உயிர்களை அவைகளோடு இணைத்து, உயிர்களுக்கு வேண்டிய அனுபவத்தை அருளித் தந்து காலப்போக்கில் அவை சித்தமலம் நீக்கிச்சிவமாம் தன்மையைப் பெறச்செய்வது இந்த விளையாட்டின் நோக்கமாகும். இந்த விளையாட்டை மேற்கொள்வது சிவபரம் பொருளாகும். இதைச் செய்வது பரம்பொருளின் அருட்கூறாகிய சக்தியாகும். இந்த விளையாடல் உயிர்கட்கு எண்ணிலாப் பயன்களை விளைவிக்கும். துன்பம் விளைவிப்பதற்காக என்று கருதக் கூடாது. உயிர்கள் முடிவான உண்மையாகிய வீட்டுப்பேற்றினை அடையச் செய்வதே பரம்பொருளினுடைய திருவுளமாகும். இதுவே இறைவனுடைய படைப்பின் முடிவான முடிவுமாகும்.

**''ஒருவன் ஒருத்தி விளையாடல் உற்றார்**
**இருவர் விளையாட்டும் எல்லாம் விளைக்கும்**
**பருவங்கள் தோறும் பயன்பல வான**
**திருவொன்றிற் செய்கை செகமுற்று மாமே''**

**(திருமந்திரம் - 393)**

**''சொன்னஇத் தொழில்கள் என்ன காரணம் தோற்ற என்னில்,**
**முன்னவன், விளையாட்டு என்று மொழிதலும் ஆம்; உயிர்க்கு**
**மன்னிய புத்தி முத்தி வழங்கவும், அருளான் முன்னே**
**துன்னிய மலங்கள் எல்லாம் துடைப்பதும், சொல்ல லாமே''**

**(சிவஞான சித்தியார் - 56)**

**''உலகம் யாவையும் தாமுள வாக்கலும்**
**நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா**
**அலகிலா விளையாட்டுடையான்''**

என வரும் கம்பர் வாக்கும் ஈண்டு நினைவு கூரலாம்

இறைவனுடைய விளையாட்டுத் தொடங்கும்வரை முழுமுதற் பொருளாகிய கடவுள் ஒன்றேயாய் யாதொரு செயலையும் மேற்கொள்ளாது இயல்பான நிலையில் நிற்கும். அப்போது பரம்பொருள் ஒன்றைத் தொடங்குவது அல்லது முடிப்பது என்கின்ற பணியில் ஈடுபடாத காரணத்தால் அந்த நிலையை ஆதியும் அந்தமும் இல்லாத் நிலை என்று மெய்ஞ்ஞானிகள் கூறுவர். **''ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை''** என்று இந்த நிலையை மணிவாசகப் பெருமான் குறிப்பிடுவார். **''ஆக்கம் அளவு இறுதி இல்லாய்''** என்றும் திருவாசகம் கூறுகிறது. ஆதியும் அந்தமும் இல்லாத கடவுள் பொருள் ஒன்றே சங்கார காலத்தில் பிரபஞ்சங்கள் முழுவதையும் தத்தம் காரணங்களில் ஒடுக்கி, அந்தக் காரணங்களை மாயையிலே ஒடுக்கி, மாயையைச் சக்தியிலே ஒடுக்கி, சக்தியைத்தன்னுளே மறைத்து, தத்துவங்களுக்கு இருப்பிடமாக அமைந்து மீண்டும் உயிர்கள் ஒடுங்கிய நிலையிலிருந்து வெளிப்பட்டுத்தத்தம் வினைகளைப் போக்குவதற்கான தனு, கரண, புவன போகங்களை உருவாக்கத் திருவுளம் கொள்கிறான்.

இந்த நிலை அழகிய தாமரை மலர் ஒன்று இரவிலே குவிந்து நிற்கின்ற ஒன்றைப் போலாகும். சர்வ சங்கார காலத்தில் பிரபஞ்சம் முழுவதும் குவிந்து கிடக்கின்றது. அதைச் செய்வது இறைவனே. குவிந்த தாமரை மலர் பகற்பொழுதில் விரிகின்றது. தாமரை விரியும்பொழுது அதன் இதழ்கள் விரிகின்றன. மலர் முழுவதிலும் அதன் மணம் விரிகின்றது. தாமரையின் இயல்பான நிறமும் குணங்களும் வெளிப்படுகின்றன. தாமரை மலரைப் போல இறைவன் திருவுளம் கொண்ட போது பிரபஞ்சங்களும் விரியத் தொடங்குகின்றன. இறைவனை நோக்கி **''விரிந்தனை குவிந்தனை''** என்று

ஞானசம்பந்தப் பெருமான் பாடுகின்றார். சங்கார காலத்தில் இறைவன் எல்லா உயிர்களையும் தன்னுள் ஒடுக்கிக் கொள்கின்றான். பின்னர் உயிர்களுக்குச் சிறிது ஆற்றல் அளித்துப் பிரபஞ்ச இயக்கத்தில் அவற்றை இணைத்து விடுகின்றான். இதனை ஞானசம்பந்தப்பெருமான் **''விழுங்குயிர் உமிழ்ந்தனை''** என்பார். சிவபெருமான் உலகம் முழுதும் உடையான். பிரபஞ்ச இயக்கத்திற்குக் காரணமானவன். பல்வேறு தலைவர்கள் தத்தம் நிலையில் நின்று தொழில் செய்வதற்கான அதிகாரத்தையும், ஆற்றலையும் அளித்தவன் அவனே. இதனைத் திருமூலர்

**''உண்டுல கேழும் உமிழ்ந்தான் உடனாகி**
**அண்டத் தமரர் தலைவனாம் ஆதியும்**
**கண்டச் சதுமுகக் காரணன் தன்னொடும்**
**பண்டிவ் வுலகம் படைக்கும் பொருளே''** **(திருமந்திரம் - 386)**

என்று கூறுகிறார்.

ஒடுக்க நிலையில் உயிர்கள் செயல்படாது தங்குகின்றன. அவற்றிற்கு இன்ப துன்பங்கள் கிடையாது. இயல்பாய் உள்ள ஆணவ மலம் அவற்றுடன் தொடர்ந்து நிற்கின்றது. ஆணவ மலத்தினால் ஏற்படும் அறியாமை நீங்கினால்தான் உயிர்கள் நிலையான இன்பத்தைப் பெறமுடியும். இது நடக்க வேண்டுமென்றால் மீண்டும் உயிர்கள் வினைக்கடலின் பங்கினைப் பெற்று மாயை, கன்மங்கள் அடிப்படையில் தத்தம் தொழில்களைத் தொடங்க வேண்டும். ஆணவ மலம் குறைந்து உயிர்கள் உயர்ந்து வர வேண்டுமெனில் பிரபஞ்ச இயக்கம் இறைவனுடைய திருவருளால் நடைபெற வேண்டும். இறைவன் மீண்டும் படைப்புத் தொழிலில் ஈடுபட வேண்டும். எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்டு வியாபித்துள்ள அந்தமும் ஆதியும் ஆகிய பராபரன் எனும் பரம்பொருள் தானே பூமியின் கீழ் கிடக்கும் கிழங்கு போல முதல் காரணமாக நின்று மாயையையும் அதனுடைய காரியங்களையும் தோற்றுவித்து, ஐந்தொழில்கள் நடப்பதற்குப் பொறுப்பாகவும் நிற்கின்றான். இவையெல்லாம் கிழங்கிலிருந்து தோன்றும் முனை போலப்பரம்பொருளின் திருவுளமாகிய படைப்பு நெறியின் தோற்றமாக வெளிப்படுகிறது.

**''அந்தமும் ஆதியு மாகிப் பராபரன்**
**வந்த வியாபி யெனலாய வந்நெறி**
**கந்தம தாகிய காரண காரியந்**
**தந்தைங் கருமமுந் தான்செய்யும் வீயமே''.**

**(திருமந்திரம் - 1927)**

பராபரம் இயற்கை நிலையில் ஞானத் தலைவனாக நிற்கின்றது. பராபரத்துடன் பொருந்தியிருக்கும் பராபரையாகிய சத்தியின் இயற்கை நிலையும் ஞானமேயாகும். இதனை **''போதமதாகப் புணரும் பராபரை''** என்று திருமூலர் விளக்குகின்றார். சிவஞானசித்தி **''சத்தியின் வடிவே**

தென்னில் தடையிலா ஞானமாகும்'' என்றது. இவ்வாறு இயற்கை நிலையில் உள்ள பராபரம் உயிர்களை உய்விக்க வேண்டும் என்கிற எண்ணத்தால் பிரபஞ்சத்தை உண்டாக்க நினைக்கும். பராபரத்துடன் இயல்பாகக் கூடியிருக்கும் பராபரையும் இந்த விருப்பமாத்திரத்தில் பிரபஞ்சத்தைத் துவக்கும் ஞானமாகவும், ஆற்றலாகவும் தோன்றி நிற்கும். இந்த நிலையில் இறைவன் அளவிலா ஞானத்தையும் ஆற்றலையும் தன்னிடம் கொண்டுள்ளான். பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்க இவற்றுள் ஒரு சிறிய பகுதியே போதும். பராபரம் இதைச் செய்ய அடுத்த கட்டமாக ஆதி சிவனாக நின்று செயல்படும் காலத்தில் அவனுடைய ஆற்றல் ஆதி சக்தி மூலமாக வெளிப்படுகின்றது. இந்த நிலையிலும் ஆதி சக்தி ஞானமாத்திரமாய் நிற்பாள். இதனைத் திருமூலர் **''சோதி அதனில் பரம் தோன்றத் தோன்றுமாம் தீதில் பரை''** என்பார்.

**''ஆதியோ டந்தம் இலாத பராபரம்**
**போதம தாகப் புணரும் பராபரை;**
**சோதி யதனில் பரந்தோன்றத் தோன்றுமாம்**
**தீதில் பரை; அதன் பால்திகழ் நாதமே''.** **(திருமந்திரம் - 378)**

சிவமும் சக்தியும் இன்னமும் ஞான நிலையிலேயே இருக்கும். விருப்ப நிலை மேலோங்க படைப்பிற்குத் தேவையான இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி என்கின்ற மூன்று சக்திகளும் சிவசக்தியிடத்திலிருந்து தத்தம் தொழில்களைப் புரிய ஆரம்பிக்கும். அதன் விளைவாக நாதமும் விந்தும் தோன்றுகின்றன. நாதனாக நிற்கும் சிவம் எழுத்தோசையை சிறப்பாகத் தோற்றுவிக்கக் காரணமாவான். நாதமும் விந்தும் இச்சா, ஞான, கிரியா சக்திகள் மூலமாகச் சிவமாகவும் சக்தியாகவும் தோன்றி நிற்பர். ஞானமும் ஆற்றலும், படைப்புத் தொழிலில், சேர்ந்தே செல்லுகின்றன. ஒன்று இன்றி மற்றது இல்லை. பிரபஞ்சம் செயல்படுவதற்காகச் சிவம் என்றும், சக்தி என்றும் வேறு வேறாகச் சொல்லப்பட்டாலும் உண்மையில் அவை இரண்டும் ஒன்றியே நிற்கும், தவித்து நிற்பதில்லை. இதையே திருமூலர்,

**''இல்லது சத்தி இடந்தனில் உண்டாகிக்**
**கல்லொளி போலக் கலந்துள் ளிருந்திடும்''**

**(திருமந்திரம் - 380)**

என்பார்.

இவ்வாறு கற்பனைக்கு எட்டாது நின்ற பராபரத்துடன் தொடர்ந்து நின்ற நிலையில் ஞானமயமான சக்தி நாதமாய்ப் பின்னர் விந்துவாய்த் தோன்றியும், பின்னர் அச்சிவத்தோடு கூடிச் சதாசிவம் என்கிற நிலையிலும் நிற்பாள். சதாசிவத்திடமிருந்து மகேசுரர், உத்திரர், மால், அயன் என்பவர்கள் முறையாகத் தோன்றுவர். இந்த ஐவர்கள் முறையே நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகிய பூதங்களுக்குத் தலைவராவார். சதாசிவம் ஆகிய

ஐவர்களுக்கும் உரிய சக்திகள் உண்டு. அவை முறையே மனோன்மணி, மகேசுவரி, உமை, திருமகள், வாணி எனப்படுவர். இவையெல்லாம் சிவம் தானே மேற்கொள்ளும் பல நிலைகளாகும்.

"தூரத்திற் சோதி தொடர்ந்தொரு சத்தியாய்
ஆர்வத்து நாதம் அணைந்தொரு விந்துவாய்ப்
பாரச் சதாசிவம் பார்முதல் ஐந்துக்கும்
சார்வத்துச் சத்திஓர் சாத்து மானாமே". (திருமந்திரம் - 381)

இந்தப் பிரபஞ்சத்தைப் படைப்பவர்கள் ஒருவனாகிய சிவனும் ஒருத்தியாகிய சக்தியுமாவர். அவர்களுள் சதாசிவன், மகேசுரன், உருத்திரன், மால், அயன் ஆகிய புத்திரர்கள் ஐவர். அவர்களைக் கொண்டே சிவன் படைப்பு முதலிய தொழில்களைச் செய்விப்பன். அத்தகைய தொழில்களைப் புரியும் ஐவருமே மிகுந்த புண்ணியம் பெற்றவர்கள்.

"புவனம் படைப்பான் ஒருவன், ஒருத்தி
புவனும் படைப்பார்க்குப் புத்திரர் ஐவர்
புவனம் படைப்பானும் பூமிசை யானாய்ப்
புவனம் படைப்பான்அப் புண்ணியன் தானே"
(திருமந்திரம் - 383)

இதுவரை நாம் கண்டது ஆதியும் அந்தமும் இல்லாத இறைவன் தனது ஞானத்தாலும் ஆற்றலாலும் பல நிலைகளில் நின்று படைப்பு முதலிய தொழில்கள் நடைபெறுவதற்கு ஏற்ப கிரியா, ஞான, இச்சா சக்திகளை உண்டுபண்ணி, அவற்றின் சேர்க்கைகளை வெவ்வேறாகச் செய்து வெகுநுட்பமான தத்துவ நிலையிலிருந்து படிப்படியாக ஐந்து பூதங்களைத் தோற்றுவித்து, அந்தப் பூதங்களுக்குக் காரணமாக தன்மாத்திரைகளைத் தோற்றுவித்தும், பின்னர் உலகம், உயிர் ஆகியவற்றைப் படைத்து உயிர்களுக்கு வினைபோகத் தொழிலுக்கான எல்லாவிதமான கருவி, கரணங்களையும் அருளித் தருகின்றான். இந்தச் செயலெல்லாம் அருவ நிலையிலும், அருவுருவ நிலையிலும், உருவ நிலையிலும் நடைபெறுகின்றன.

உலகப் படைப்புத் தொடங்குகின்றது. அண்டங்களின் சிருஷ்டியும் தொடங்குகின்றது. இதற்கெல்லாம் காரணகர்த்தா ஒருவனே. எல்லா உலகங்களையும் படைத்து, காத்து, அழிப்பவனும், அறிவுப் பொருள்கள், அறிவில்லாப் பொருள்கள் அனைத்திலும் நீக்கமற நிறைந்திருப்பவனும் முழுமுதற் கடவுளாகிய ஒருவனே என்று விளங்கும்.

"ஒருவனு மேஉல கேழும் படைத்தான்
ஒருவனு மேஉல கேழும் அளித்தான்
ஒருவனு மேஉல கேழும் துடைத்தான்
ஒருவனு மேஉல கோடுயிர் தானே". (திருமந்திரம் - 401)

படைப்புத் தொழில் தத்துவங்கள் விரிதல் மூலமாக நடைபெறுகிறது. பலகோடி அண்டங்களும், பலகோடிப் பிண்டங்களும் பரசிவம் உருவாக்கிய தத்துவக் கூட்டங்களின் சேர்க்கையே ஆகும். தத்துவங்களை உருவாக்கிய பரம்பொருள், மேற்படி தத்துவங்களோடு உயிர்கள் பொருந்தி, வினைப்பயன்களை நுகர்ந்து, அறிவையும், அறியாமையையும், பெருக்கி, ஆணவ மல இருளில் வெகுகாலம் மூழ்கியிருந்து பின்னர் அருள்பெற்று, ஒளிபெற்று விடுதலை பெற வேண்டும் என்பதே இறைவனின் திருவுளமாகும். அந்தப் பரஞ்சுடர் தத்துவங்கள் நீங்கிய நிலையில் அன்புடைய அடியார்கள் உள்ளத்தில் ஒளிவீசி நிற்கின்றது. அதை அனுபவித்த அனைவரும் உய்வு பெற்றவர்கள்.

**''விண்ஆகி, நிலன்ஆகி, விசும்பும்ஆகி,**
**வேலை சூழ் ஞாலத்தார் விரும்புகின்ற**
**எண்ஆகி, எழுத்துஆகி, இயல்பும்ஆகி,**
**ஏழ்உலகும் தொழுது ஏத்திக் காண நின்ற**
**கண்ஆகி, மணிஆகி, காட்சிஆகி,**
**காதலித்து அங்கு அடியார்கள் பரவ நின்ற**
**பண்ஆகி, இன்அமுதுஆம் பாசூர் மேய**
**பரஞ்சுடரைக் கண்டு அடியேன் உய்ந்தஆறே!''**

**(திருநாவுக்கரசர் தேவாரம்)**

மெய்ஞ்ஞானம் இறைவனின் படைப்பில் ஓர் நோக்கத்தைக் காண்கின்றது. விஞ்ஞான அறிவு ஒரு பொருளைப் பற்றிய அறிவினை வளர்த்துக் கொண்டே போக வேண்டும் என்கிற அடிப்படையில் இயங்குகின்றது. மெய்ஞ்ஞானத்தின் அறிவு ஓர் முடிவான முடிவாகும். விஞ்ஞானத்தின் அறிவு வளர்ந்து கொண்டு போவதைப் பார்க்கின்றோம். ஆனால் அதனுடைய எல்லையை அறுதியிட்டுக் கூற இயலவில்லை. விஞ்ஞானம் ஒரு திசையிலிருந்து மையத்திற்கு வர முயலுகிறது. மெய்ஞ்ஞானம் எல்லாத் திசைகளையும் தன்னுள் கொண்டு மையத்தின் மையமாக விளங்கும் இறைவனை எல்லாவற்றுக்கும் மூல காரணம் என்றுரைத்து அந்த மையத்தின் நுட்பத்தை, எளிமையை, மேன்மையை உணர்ந்து கொள்ளுவதால் கிடைக்கும் அனுபவம் விஞ்ஞான அறிவிற்கும் மேலானது என்று விளங்குகின்றது. விஞ்ஞான அறிவே ஒருவித அறியாமை என்று மெய்ஞ்ஞானிகள் கூறுவர். அந்த அறிவிற்கும் அறியாமைக்கும் அப்பாற்பட்ட அறிவு ஒன்று உள்ளது. அந்த அறிவே நாம் அடைய வேண்டிய அறிவு என்பது அவர்களுடைய கோட்பாடு. இதனை **''அறிவு அறியாமை அழகியவாறு''** என்பார் திருமூலர்.

படைப்புக்கு ஆதாரம் இறைவனுடைய பேரறிவும் பேராற்றலும் ஆகும் என்று மெய்ஞ்ஞானம் தெளிவாக்குகின்றது. இன்று விஞ்ஞான உலகில் பல

சாதனைகள் புரிந்துள்ள பண்பட்ட விஞ்ஞானிகள் பலர் படைப்பின் நுட்பத்தை ஆராயும்பொழுது அது சுட்டிக்காட்டும் சொல்லொணா ஆற்றலைக் கண்டு ஆழ்ந்த வியப்படைகின்றார்கள். அணுவிலும் சிறிய பகுதிகள் பௌதிக, இரசாயன அடிப்படையில் இயங்குவதைக் காணும் இந்த விஞ்ஞானிகள், அவையெல்லாம் ஓர் அறிவின் தூண்டும் சக்தியால் தாங்களே அறிவு பெற்று இயங்குவது போலுள்ள நிலையைப் பார்க்கின்றார்கள். அடுத்த கட்டமாக அவர்களும் நாம் எல்லோரும் உணர வேண்டியது இவற்றுக்கெல்லாம் மூலகாரணம் அந்தப் பேரறிவு என்பதுதான். அதுவே மெய்ஞ்ஞானம். மெய்ஞ்ஞானமே நம்முடைய குறிக்கோளாக அமைய வேண்டும்.



# 5. "அரன் அங்கி தன்னில் சங்காரம்"

எண்ணற்ற சீவராசிகள் பிறந்து, வாழ்ந்து, இறப்பதை நாம் காண்கின்றோம். இது நமக்கு இயற்கையாகவே தோன்றுகிறது. அதேபோல இந்தப் பிரபஞ்சத்தில் எண்ணற்ற கோளங்களும் அண்டங்களும் மூலப் பொருள்களிலிருந்து உருவாகிப் பல லட்சக்கணக்கான ஆண்டுகள் தத்தம் நிலையில் தங்கி, பின்னர் உருமாறி அழிகின்றன. கடந்த நூற்றாண்டில் விஞ்ஞானம் அண்டம், பிண்டம் ஆகியவற்றின் தோற்றம், மறைவு போன்றவற்றைத் தீவிரமாக ஆராய்ச்சி செய்து நம்மை வியப்படையச் செய்யும் வகையில் பல முடிவுகளை நமக்கு வெளியிட்டுள்ளன. அண்டமாயினும் சரி, பிண்டமாயினும் சரி, இரசாயன, பௌதிக அடிப்படையில் தோற்றம் என்பது பல அணுக்களின் சேர்க்கை என்கிற ஒரு முடிவு விஞ்ஞான ஆராய்ச்சியின் விளைவாக நமக்குக் கிடைத்த முக்கியமான ஒன்றாகும். அதேபோல், மறைவு என்பதும் அந்த அணுக்கள் இயற்கையின் நியதிகளுக்கு ஏற்ப காலகட்டத்தில் ஒன்று சேர்ந்து இருந்த நிலையிலிருந்து பிரிந்து இயங்குவதேயாகும் என்பதும் விஞ்ஞானத்தின் முடிவு. அந்த அணுக்களும் எவ்வாறு உருப்பெறுகின்றன, உருமாறுகின்றன, அவற்றின் மூலப்பொருள்கள் எவை, அவை எங்கிருந்து, எப்பொழுது தோன்றின போன்றவை பற்றி விஞ்ஞானிகள் உலகெங்கிலும் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். இரண்டாவதாக, அணுக்களில் அளவிலா ஆற்றல் அடங்கிக் கிடக்கின்றது என்றும் அந்த ஆற்றலின் தன்மையே அணுக்களின் தன்மையைக் குறிக்கின்றது என்றும், புகழ்பெற்ற ஐன்ஸ்ட்டின் முதற்கொண்டு பல விஞ்ஞானிகள் நமக்கு எடுத்துக்காட்டியுள்ளார்கள். ஒரு பொருள் மறையும் பொழுது அதனுட் கிடக்கும் அணுக்களின் சேர்க்கையின் தன்மை மாறுகிறதே தவிர அணுக்களே அழியவில்லை என்பதும் இன்றைய விஞ்ஞானம் கண்ட ஒரு முடிவாகும். சுருங்கக்கூறின், தோற்றமும் மறைவும் பொருள்களின் தூல, சூக்கும நிலைகளில் ஏற்படும் மாறுதல்கள் என்கிற அளவுக்கு விஞ்ஞான ஆராய்ச்சியிலிருந்து நாம் தெரிந்து கொள்கின்றோம். இந்த முடிவுகளை நமக்கு அளித்த விஞ்ஞானிகளுக்கு நாம் நன்றி கூற வேண்டும்.

ஏன் என்றும் இதற்கும் மெய்ஞ்ஞான அறிவுக்கும் என்ன தொடர்பு என்றும் நீங்கள் கேட்கலாம். தொடர்பு உண்டு என்பதை பல ஆயிரம்

ஆண்டுகளாக நம்முடைய மெய்யுணர்வாளர்கள் தங்களுடைய உள்ளறிவாக உணர்ந்து நமக்குத் தெரிவித்து வருகிறார்கள். விஞ்ஞானிகள் அணுக்களின் இயக்கம் இயற்கையின் நியதியைக் கடைப்பிடிக்கின்றன என்கிறார்கள். மெய்யுணர்வாளர்கள் அந்த நியதிகளுக்கு ஒரு தலைவன் உண்டு என்று நமக்கு அனுபவரீதியாக விளக்குகின்றார்கள். அணுக்கள் சடப்பொருள்களே. அவற்றின் சேர்க்கை நிலமாகவும், நீராகவும், தீயாகவும், காற்றாகவும், ஆகாயமாகவும், நமக்குத் தோன்றலாம். அவற்றின் சேர்க்கையே உலகமாகவும், உடலாகவும் மற்றும் பல்வேறு பொருள்களாகவும் நம்முன் தோன்றி, நிலைபெற்று ஒடுங்கும் தன்மையைப் பெறுகின்றன. அவற்றை இந்த இயக்கத்தில் ஈடுபடுத்த ஓர் முதல்வன் வேண்டும். **''தருபவன் ஒருவன் வேண்டும்''. ''செயல்செய்வான் ஒருவன் வேண்டும்'', ''எல்லாம் வருவிப்பான் ஒருவன் வேண்டும்''** என்பது சிவஞானசித்தியார்.

இப்படியாக பல பொருள்கள் இந்தப் பிரபஞ்சத்தில் தோன்றுகின்றன, நிலைத்து நிற்கின்றன, தன்மை மாறுகின்றன. காணப்படும் பொருள்கள் நாம் காண இயலாதவாறு மறைகின்றன. இவை சடப்பொருள்களே ஆயினும் இறைவன் நீக்கமற நிறைந்த நிலையில் இவற்றுள்ளும் இறைவனுடைய அறிவும், ஆற்றலும் கலந்தே உள்ளன என்பதையும் உணரலாம்.

உயிர்கள் அநாதியானவை. இறைவனுடைய பேரருளால் சிறிது ஆற்றலும் தான் சார்ந்ததை அறிந்து கொள்ளக்கூடிய அறிவும் பெற்றவை. இறைவன் உயிர்களை இயக்க, உயிர்களும் பஞ்சபூதங்களின் சேர்க்கையால் இயங்கத் தொடங்குகின்றன. அநாதியே உயிருடன் சம்பந்தப்பட்டு இருப்பது ஆணவ மலமாகும். இதுவே முதற்குற்றமாகும். இந்தக் குற்றம் அகலும்பொருட்டு இறைவன் உயிர்களுக்கு அனுபவத்தைத் தருகின்றான். அந்த அனுபவத்திற்காகப் பொருள்களும் பொருள்களின் சேர்க்கையும் ஏற்படுகின்றன. ஆணவ மலத்தின் நீக்கத்திற்கு உடலும், பொருள்களும் பயன்படுவது போலவே மாயையும் கன்மமும் பயன்படுகின்றன. இறைவன் இவற்றை உயிருடன் கூட்டுவித்து உயிர்களின் அறியாமையாகிய நிலைமை மாற இயக்கம் நடைபெற காரணமாகின்றான். ஆகவே, படைப்புத் தொழிலுக்கு ஒரு நோக்கம் இருக்கின்றது. **''உயிர்க்கு மன்னிய புத்தி முத்தி வழங்கவும், அருளான் முன்னே துன்னிய மலங்கள் எல்லாம் துடைப்பதும், சொல்லலாமே''** என்பது சிவஞானசித்தியார்.

இறைவன் தனு, கரண, புவன போகங்களை தந்தருளி, உயிர்களுடன் அவற்றைச் சேர்த்து உயிர்கள் தாங்கள் செய்யும் வினைகளுக்கு ஏற்ப, மலங்களை நீக்கிக் கொள்வதற்கான பாதைகளில் உயிர்களைச் செலுத்தி அவற்றை உய்விக்கின்றான். ஆணவமாகிய மலம் நீக்கும்பொருட்டு, மாயையும் கன்மமும் உயிரை வந்தடைகின்றன. ஆணவ அழுக்கை நீக்குவதற்கு மாயையும் கன்மமும் பயன்படுகின்றன. உண்மையில் இந்த மலங்கள் சடமானவையே. இவற்றின் மூலம் உயிருக்கு அனுபவங்கள் ஏற்பட இறைவனே உதவி செய்கின்றான். இந்த இயக்கமே படைப்பு என்று

கூறப்படுகின்றது. படைப்பின் மறுபெயர் தத்துவங்களின் சேர்க்கையாகும். ஐந்து பூதங்கள், ஐந்து தன்மாத்திரைகள், கன்ம, ஞான இந்திரியங்கள், நான்கு உட்கரணங்கள் போன்றவற்றின் சேர்க்கையால் உயிருக்குத் தகுந்த அனுபவம் பெற இடம் கிடைக்கின்றது. இறைவன் தனது சக்தியை இதற்காகப் பயன்படுத்திப் பல தொழில்களுக்கு அதிகாரிகளை நிர்ணயித்து, அவர்களின் மூலமாக இந்த இயக்கத்தை நடத்தினாலும், எங்கும், எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்துள்ளான். இதையே மாணிக்கவாசகப் பெருமான் திருவாசகத்தில்

**"பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி**
**நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி**
**தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி**
**வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி**
**வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி"**

எனக் கூறியுள்ளார்.

இந்த உலகில் நாம் பருப்பொருட்களைப் பார்க்கிறோம். அனுபவிக்கின்றோம். விஞ்ஞானம் பருப்பொருட்களை அணுக்களின் சேர்க்கை என்று கூறுகிறது. மெய்யுணர்வாளர்கள் பிரபஞ்சம் அத்தனையும் தத்துவ வடிவே என்பார்கள். இறைவனுடைய சக்தியாகிய மாயை முதல் நாம் அனுபவிப்பவை எல்லாம் இந்தத் தத்துவக் கூட்டங்களே என்பது மெய்ஞ்ஞானிகளின் அனுபவபூர்வமான கண்டுபிடிப்பு. இதைச் சிவஞானசித்தியார் மிகத் தெளிவாக

**"தத்துவ ரூப மாகும், தரும்அரு உருவம் எல்லாம்;**
**தத்துவம் தூல, சூக்க பரங்களும் ஆகி நிற்கும்;**
**தத்துவம் தன்னில் சாரும் அணுக்கள், சாதாக்கியத்தில்**
**தத்துவம் சத்தம் சாரும்; சகலமும் தத்து வம்காண்".**

என்று உரைக்கின்றது.

உலகத்திலே விளங்கித் தோன்றும் பொருட்கள் நாளடைவிலே மறைவதைப் பார்க்கின்றோம். அவை அழிந்தன என்று சொல்லக்கூடாது. அழிந்தது என்றால் அவை இல்லாமல் போய் விட்டது என்கிற பொருள் வரும். ஆனால், உண்மையில் உலகத்தில் தோன்றிய பொருட்கள் அழிவதுபோல் காணப்பட்டாலும் அவை தன்மை மாறுகின்றன என்று கூறுவதே பொருத்தமாகும். பருப்பொருட்கள் தங்களுடைய காரணமான நுட்பப் பொருள்களிலும் நுட்பப் பொருள்கள் தங்களுக்குக் காரணமான தத்துவங்களிலும், தத்துவங்கள் இறைவனின் தோற்றமான சக்தியிலும் ஒடுங்கிக் கொள்கின்றன. இந்த ஒடுக்கத்தையே நாம் அழிதல் என்று சொல்கிறோம். இதுவே, சங்காரம் எனப்படும். சங்காரத்தைப் பொறுத்தவரை விஞ்ஞானம் அதிக தூரம் செல்லவில்லை. இந்தப் பிரபஞ்சம் எவ்வாறு முடிவுறும் என்பது பற்றி ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள ஒப்பற்ற

விஞ்ஞானிகள் ஒரு கட்டத்திற்குப் பிறகு மேற்கொண்டு செல்லத் தயங்குகின்றார்கள். அதற்குக் காரணம் இயற்கையின் நியதிகள் நமது அறிவுக்கு எட்டாத நிலையில் இப்போது இயங்குவது போலவே தொடர்ந்து இயங்குமா என்கின்ற பலத்த சந்தேகம் எழுகின்றது. இந்தச் சங்தேகத்தை நீக்க விஞ்ஞானிகள் வரப்போகும் நிலைகளைப் பற்றி ஓரளவு யூகித்துத்தான் பதில் சொல்ல வேண்டியுள்ளது. மேலும், சங்காரத்திற்கென ஒரு நோக்கம் இருக்கின்றது என்பதையும் விஞ்ஞானிகள் இதுவரை ஒத்துக்கொள்ளாத காரணத்தினால் பௌதிக இரசாயன அளவுகளால் மட்டும் அவர்களால் ஒரு முடிவான முடிவை அடைய இயலவில்லை.

ஆழ்ந்த இறை அனுபவம் பெற்ற மெய்யுணர்வாளர்களின் கண்ணோக்கில் படைப்பு, ஒடுக்கம் ஆகியவற்றின் தன்மை தெள்ளத்தெளிவாக விளங்குகின்றது. இறைவனே சங்காரநாதன் ஆவான். உயிர்களும், பிரபஞ்சக் கூட்டங்களும், தன்னிடம் ஒடுங்குவதற்குக் காரணமாக இருப்பவனும் அவனே.

**"ஆக்கம், அளவு, இறுதி, இல்லாய், அனைத்து உலகும்**
**ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள்தருவாய்,**
**போக்குவாய், என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்"**

என்கிறார் மணிவாசகப் பெருமான்.

**"அவன் அவள் அதுவெனும் அவை மூவினைமையின்**
**தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்**
**அந்தம் ஆதி என்மனார் புலவர்"**

என்பது சிவஞானபோதத்தின் முதல் சூத்திரம்.

**"ஆக்கி எவையும் அளித்(து)ஆசுடன் அடங்கப்**
**போக்குமவன் போகாப் புகல்"**

என்பது திருவருட்பயன்.

இறை இயக்கத்திற்கு நோக்கம் உண்டு. நோக்கமின்றி நடப்பதில்லை. படைப்புக்குக் காரணம் உண்டு. அதுபோல் சங்காரத்திற்கும் நோக்கம் உண்டு. கோடிக்கணக்கான உயிர்கள் பல பிறவிகளில் வினைநுகர்ச்சியால் அயர்வடைகின்றன, தளர்கின்றன. அவை இளைப்பாற வேண்டும். இளைப்பாறுவதன் மூலம் உயிர்கள் பக்குவம் அடைகின்றன. பல பிறவிகளில் உயிர்கள் தங்களது அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்தி வினைகளைப் புரிகின்றன. அதன்பயனாக இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றன. படிப்படியாக வினைநுகர்விலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டுமென்கிற உணர்வு பிறக்கிறது. இன்ப துன்பங்களைச்சமமாக எண்ணும் மனமுதிர்ச்சி ஏற்படுகிறது. இது இறைவன் அருளாலேயே நிகழ்கிறது. உள்ளம் நடுவு நிலைமையை அடைகிறது. இருவினை ஒப்பு ஏற்படுகிறது. இதற்காக உயிர்கள் பல பிறவிகள் எடுக்க வேண்டும். பல

உடல்களைப் பெற வேண்டும். பெறுவதற்கு முன் களைதல் நடக்க வேண்டும். இந்த மாற்றங்கள் நிகழ்வதற்கு ஒடுக்கம் தேவைப்படுகின்றது. சங்காரத்தினால் கன்ம மலம் பக்குவமடைகின்றது. இதனை நிகழ்த்தும் சங்காரகர்த்தா இறைவனே ஆவன். மூலக்குற்றமான ஆணவமலம் கழிய வேண்டும். கேவல நிலையில் ஆணவத்தோடு நிற்கின்ற உயிர் சகல நிலைக்கு வரும்போது இதைச் சாதிக்க இயலும். இதற்காக இறைவன் பிரபஞ்சத்தைப் படைக்கின்றான். பல பிறவிகளில் சேர்த்த கன்மமலத்தை உயிர்கள் தாங்கி வருகின்றன. இவையும் கழியப்பட வேண்டும். இதற்காகவும் பிரபஞ்சம் தேவை. மாயாமல பரிபாகம் நடப்பதற்காக உயிர்களும் உலகமும் சேர்ந்து தனு, கரண, புவன போகங்கள் நடைபெறுகின்றன. கடைசியில் கன்ம மல பரிபாகமும் நடைபெற வேண்டும். இதற்காகவே இறைவன் சங்காரத் தொழிலை மேற்கொள்கிறான். நாம் சாப்பிடும் உணவு உறங்கும்போது ஜீரணிக்கப்படுவதுபோல உயிரின் ஒடுக்கத்தில் கன்ம மலம் பக்குவமடைகிறது. இதுவே சங்காரமாகும். சங்காரம் என்பதும் இளைப்பாறுதல் என்பதும் ஒன்றேயாகும். இந்த இளைப்பாறுதலின் நோக்கம் இறைவனைக் கண்ணுற்று வீடுபேறு பெறுவதேயாகும்.

**"எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்**
**மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்"**

**(திருவாசகம்)**

இந்தச் சங்காரம் பல வகைப்படும். முதலாவதாக நித்திய சங்காரம். இதுவே தினப்பிரளயம் எனப்படும். உடம்பிற்கும், உள்ளத்திற்கும் ஓய்வு கொடுக்க மனிதன் தினந்தோறும் உறங்குவது நித்தியசங்காரமாகும். இந்த நித்தியசங்காரத்தில் உயிரானது கனவு, ஆழ்ந்த உறக்கம், துரியம், துரியாதீதம் ஆகிய நிலைகளில் சஞ்சரிக்கின்றது. விழிப்பு நிலையில் ஓடி, ஆடி வினைப்போகங்களை அனுபவிக்கும் உயிர் இளைப்பாறுவதற்காகச் சிற்சில கருவிகளை மட்டுமே பயன்படுத்தி இயங்கும் நிலை நித்தியசங்காரமாகும்.

அடுத்து ஆயுட்சங்காரம். ஒவ்வொரு உயிரும் உடலுடன் சேர்ந்து, வாழ்ந்து, வாழ்வை முடித்துக் கொண்டு உடலை விட்டு வெளிக்கிளம்புவது ஆயுட்சங்காரமாகும். இதுவும் ஒருவகை உறக்கமாகும். இது விழித்தல் இல்லாத உறக்கம். இது ஓர் நெடுந்துயில். வாழ்வு விழித்திருப்பதைப் போன்றது. மரணம் உறங்குவதைப் போன்றது.

**"உறங்கு வதுபோலும் சாக்காடு, உறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு"**

என்பது குறள்.

விழித்திருக்கும் நிலை சாக்கிரம். வாழ்வை சாக்கிரத்திற்கு ஒப்பிட்டால் மரணத்தை சாக்கிராதீதம் என்கிற நிலைக்கு ஒப்பிடலாம். ''வைத்த சங்காரமும் சாக்கிராதீதமாம்'' என்பார் திருமூலர்.

நித்தியசங்காரத்தின்போது உயிரானது தூலம், சூக்குமம் என்னும் இரண்டு உடல்களோடு ஒட்டாது நிற்கும். ஆயுட்சங்காரத்தில் உயிரானது தூல உடம்பை விட்டு அகன்று விடும்.

இதற்கும் அப்பாற்பட்டது சர்வசங்காரம். நித்தியசங்காரமும் ஆயுட்சங்காரமும் அந்தந்த உயிர்களுக்கு அவற்றின் வினைக்கேற்ப நிகழ்கின்றன. சர்வசங்காரத்தில் எல்லா உயிர்களும் கூட்டாக ஒடுக்கப் படுகின்றன. அதையே திருமந்திரம் சுத்தசங்காரம் என்கிறது. இந்த சர்வசங்காரத்தில் உயிரானது செயலற்று ஆணவ மலத்தில் அழுந்தி ஒடுங்கி நிற்கும். சர்வசங்காரத்தில் சூக்கும உடம்பும் அகன்றுவிடும். அதாவது எல்லாக் கருவிகளும் கழன்று விடுகின்றன. இந்தச் சங்காரத்தில் உயிர்கள் ஒரு தொழிலும் புரிவதில்லை. எனவே, அதைத் திருமந்திரம் ''தொழிலற்ற கேவலம்'' என்கிறது. இந்தச் சங்காரத்தில் எல்லாக் கருவிகளும் முற்றிலும் அழிந்து ஒழிவதால் தொழில்களுக்கு இடமில்லை.

இதுவரை விளக்கப்பட்ட நிலைகள் உயிர்களுக்குக் காலக்கிரமத்தில் கிடைத்தாலும், இவற்றிற்கு மேலான நிலையும் ஒன்றுண்டு. அதைத் திருமூலர் ''உய்த்தசங்காரம்'' என்று அழைக்கின்றார். இறைவனின் பேரருள் பெற்று அந்த அருளிலே திளைத்து, கருவி கரணங்களை ஒழித்து வீட்டின்பமாகிய பேரின்பத்தின் ஒரு பிறவியிலேயே மூழ்கிக்கிடப்பதை உய்த்தசங்காரம் எனலாம். இந்த நிலையில் உயிர்கள் நீங்கா இன்பத்தில் கிடக்கும். இதுவே திருவருட்சங்காரம். இறைவன் அருளால் திருவடிப்பேறு பெறுதலாகும். இதுவே உயிர்கள் அடைய வேண்டிய உண்மை நிலையாகும். சிவஞானச் செல்வர்கள் ஒரு பிறவியிலேயே பரன் அருளால் பிறத்தல், வாழ்தல், இறத்தல் என்கிற நிலைகளுக்கு அப்பால் உள்ள வீடு பேறு நிலையை அடைதல் உய்த்தசங்காரமாகும். **''உய்த்த சங்காரம் பரன் அருள் உண்மையே''** என்பது திருமந்திரம். **''தூங்கிக் கிடக்கும் நிலை''** என்று சித்தர்கள் இதனைக் கூறுவார்கள். இது மரணமும் அல்ல, செயல் இயக்கமும் அல்ல, இது சிவமாய் நின்று சிவத்துடன் பொருந்தியிருக்கும் நிலையாகும். வெறும் சொற்களால் விளக்க இயலாத நிலை. அனுபவித்தே இந்தப் பேரின்பத்தை அடைய வேண்டும். **''தூங்கிக் கண்டார் நிலை சொல்லுவது எவ்வாறே!''** (திருமந்திரம்). கருவி கரணங்களின் சேட்டைகளிலிருந்து விலகி, தான் என்கிற உணர்வு நீங்கி, 'சிவபோதம்' என்ற பேற்றினைப்பெற்ற காரணத்தால் **''இருந்தார் இழவு வந்து எய்திய சோம்பே''** என்றார் திருமூலர்.

ஆக, நித்தியசங்காரம், ஆயுட்சங்காரம், சர்வசங்காரம் இவற்றின் வழியாக உயிர் பக்குவமடைந்து, மலங்களைக் களைந்து, இன்பத் துன்பங்களில் நடுவுநிலைமை செலுத்திச் சிவானுபவத்தில் தோய்ந்து உய்த்தசங்கார நிலையை அடைவது சங்காரத்தின் மாபெரும் நோக்கமாகும். இவற்றைப் பற்றிய திருமந்திரங்கள் பின்வருமாறு:

"நித்தசங் காரம் உறக்கத்து நீள்முடம்;
வைத்தசங் காரமுஞ் சாக்கிரா தீதமாம்;
சுத்தசங் காரந் தொழிலற்ற கேவலம்;
உய்த்தசங் காரம் பரன்அருள் உண்மையே" (திருமந்திரம் - 421)

"நித்தசங் காரம் இரண்டுடல் நீவுதல்;
வைத்தசங் காரமும் மாயாசங் காரமாம்;
சுத்தசங் காரம் மனாதீதந் தோய்வுறல்;
உய்த்தசங் காரஞ் சிவன் அருள் உண்மையே"
(திருமந்திரம் - 422)

"நித்தசங் காரங் கருவிடர் நீக்கினால்
ஒத்தசங் காரம் உடலுயிர் நீவுதல்;
சுத்தசங் காரம் அதீதத்துள் தோய்வுறல்;
உய்த்தசங் காரம் பரனருள் உண்மையே". (திருமந்திரம் - 423)

"நித்தசங் காரமும் நீடிளைப் பாற்றலின்
வைத்தசங் காரமும் மன்னும் அனாதியில்;
சுத்தசங் காரமுந் தோயாப் பரன்அருள்;
உய்த்தசங் காரமுன் நாலாம் உதிக்கிலே". (திருமந்திரம் - 424)

முருகப் பெருமானுக்கும் சூரபத்மனுக்கும் கடுமையான போர் நடக்கின்றது. சூரபத்மன் ஆணவமலத்திற்கு மறுபெயர். ஆணவச்செருக்கோடு போர் புரிந்தான். பல வடிவங்களை எடுத்து முருகனைப் போரில் அழிக்க முயன்றான். ஆனால் முருகன் எல்லாவற்றையும் அழித்து விடுகின்றான். முடிவில் சூரன் எல்லாம் அழிந்து தனியாக நிற்கின்றான். முருகப் பெருமானுக்குச் சூரபத்மனை அழிக்க வேண்டும் என்கிற விருப்பம் இல்லை. சூரனை அவனது ஆணவமலத்திலிருந்து காப்பாற்றுவதே நோக்கமாகும். இங்கே முருகன் ஒரு நாடகம் நடிக்கின்றான். தனது உண்மையான வடிவத்தைச் சூரன் பார்த்தபிறகாவது பக்குவமடையமாட்டானா என்கிற ஆவல் முருகனுக்கு ஏற்பட்டது. சூரன் முருகப் பெருமானுடைய வடிவைப்பார்க்கப் பார்க்க பெரிய வியப்பு உண்டாகிறது. முருகனுடைய பேரழகும் பெரும் கருணையும் அவனுடைய உள்ளத்தை உருக்குகின்றது. இதுவரை முருகப் பெருமானுடைய அருமையைத் தெரிந்து கொள்ளவில்லையே என்று இரங்குகின்றான். பாதாதிகேசம் வரை இறைவனுடைய அழகைப் பார்த்த சூரபத்மன் உடல் குன்றி, உள்ளம் கரைந்து, அன்பு பொங்க நெஞ்சத்தில் இறை இன்பத்தை நிரப்பி நிற்கின்றான். அந்தக் கண நேரத்தில் அவனுடைய அகங்காரம் அவனை விட்டு அகலுகிறது. வெகுளி முற்றும் தீர்கிறது. இதுவரை ஆணவக்கண்களால் உலகைப் பார்த்த சூரபத்மன் இப்பொழுது பிரபஞ்சம் முழுவதிலும் இறைவனுடைய வடிவைக் காண்கின்றான். நல்ல தவத்தினால் தான் பெற்ற பேறு என்றும் கருதுகின்றான.

"போயின அகந்தை; போதம் புகுந்தன;
வலத்த வான
தூயதோர் தோளும் கண்ணும் துடித்தன;
புவனம் எங்கும்
மேயின பொருள்கள் முற்றும் வெளிப்படு
கின்ற; விண்ணோர்
நாயகன் வடிவம்கண்டேன்; நற்றவப்
பயன்ஈ தன்றோ?" (கந்தபுராணம்)

முருகப்பெருமான் தனது நாடகத்தை முடித்துக் கொள்கின்றான். சூரனுடைய உள்ளத்திலும் பக்குவத்திற்கான வாய்ப்பு வந்துவிடவே சூரனை ஆட்கொள்ள முடிவு செய்கின்றான். மீண்டும் தனது குழந்தைத் திருவடிவத்தை எடுத்துக் கொள்கின்றான். உடனே சூரபத்மனிடம் பழைய ஆணவ மலமும், வெகுளியும், பகை உணர்ச்சியும் சேர்ந்து கொள்கின்றன. போர் தொடருகிறது. பெரிய கடலின் நடுவே சென்று சூரன் மாமர வடிவாக நிற்கின்றான். முருகனின் வேல் மாமரத்தை துண்டாக்குகிறது. சூரன் பழைய உருவத்தோடு முருகனுடன் மீண்டும் போரிடுகின்றான். வேலாயுதம் சூரனின் மார்பைக் கிழித்து இரண்டு கூறாக்க, ஒரு கூறு சேவலாகவும் மற்றொரு கூறு மயிலாகவும் வந்து எதிர்க்கின்றன. அவற்றை முருகப்பெருமான் தன் கருணைபொழியும் விழிகளால் பார்க்க பறவை வடிவத்தில் நின்ற சூரனின் ஆணவமலம் நீங்குகிறது. பகை உணர்வு மறைகிறது. சேவலைக் கொடியாகவும், மயிலை வாகனமாகவும் முருகன் ஏற்றுக் கொள்கின்றான். பொல்லாத சூரனுடைய ஆணவத்தை முருகப்பெருமான் மாற்றினான். சூரனை அடியோடு நாசம் செய்யவில்லை. தன்னுடைய தொண்டனாகவே ஆக்கிக் கொண்டான்

சூரபத்மனின் வரலாறு ஆணவமல சங்காரத்திற்கு எடுத்துக்காட்டாகும். முருகப் பெருமானின் அருளால், அவனை யாசிக்கும் தீயவர்கள்கூடத் தங்கள் தன்மையை மாற்றிக் கொண்டு, அவன் சந்நிதியை அடைந்து பேரின்பம் அடையலாம் என்கிற உயர்ந்த தத்துவத்தைச் சூரசங்காரம் நமக்கு எடுத்துக்காட்டுகிறது என்பார் கச்சியப்பர்.

"தீயவை புரிந்தா ரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவர் ஆகி மேலைத் தொல்கதி அடைவர் என்கை
ஆயவும் வேண்டும் கொல்லோ? அடுசமர் இந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்?"
(கந்தபுராணம்)

சிவபெருமானின் இடக்கையில் தீ இருக்கின்றது. தீ சங்காரத்தைக் குறிக்கும் ஆணவமலமாகிய இருளை நீக்குவது, ஒளிமயமான பேரறிவினைத் தருவது ஆகியவை இறைவன் திருக்கையில் உள்ள தீயின்

உய்த்த சங்காரத்தின் பணிகளாகும். செந்தழல் போல் திருமேனியை உடைய இறைவனே சங்கார காரணனாகின்றான். இந்தச் சங்காரத்தைச் செய்யும் கருவி நெருப்பாகும். அவன் சிரித்தாலும் நெருப்புப்பொறி எழுகிறது. சினந்தாலும் தீப்பொழி பறக்கிறது. அவனுடைய கையில் நெருப்பு எரிகிறது. கண்ணிலும் நெருப்பு. இறைவனே தீப்பிழம்பாக நிற்கின்றான். தீயுமே ஒரு அம்பாக எழுந்து தீப்பிரளயத்தைச் செய்கின்றது.

**''அங்கிசெய் தீசன் அகலிடம் சுட்டது**
**அங்கிசெய் தீசன் அலைகடல் சுட்டது**
**அங்கிசெய் தீசன் அசுரரைச் சுட்டது**
**அங்கியவ் வீசற்குக் கையம்பு தானே''** (திருமந்திரம் - 417)

இதையெல்லாம் நினைத்துப் பார்க்கின்றார் காரைக்கால் அம்மையார். அக்கினிப் பிரளயத்தில் உலகெலாம் தீ மூண்டு நிறைந்து நிற்கின்றது. பிறகு அடங்கி விடுகிறது. பிரபஞ்சம் மீண்டும் தோன்றுகிறது. பிரளய காலத்தில் எரிந்த தீ இப்போது என்னவாயிற்று? காலாக்னியாகிய தீயை மற்ற காலங்களில், ஏழு உலகங்களில் மறைத்து வைத்தாயா அல்லது அந்தத் தீயை உனது திருக்கரத்தில் வைத்து பாதுகாக்கின்றாயோ? எனக்கு இந்த உண்மையைச் சொல்லி அருள வேண்டும் என்று இறைவனிடம் காரைக்கால் அம்மையார் உரிமையோடு கேட்கின்றார்.

**''மறைத்து உலகம் ஏழினிலும்**
**வைத்தாயோ? அன்றேல்**
**உறைப்போடும் உன்கைக்**
**கொண்டாயோ? - நிறைத்திட்டு**
**உளைந்துஎழுந்து நீளரிப்ப**
**மூவுலகும் உள்புக்கு**
**அளைந்துஎழுந்த செந்தீ அழல்''** (அற்புதத் திருவந்தாதி)

காரைக்கால் அம்மையார் மேலும் சிந்திக்கின்றார். இறைவனது உள்ளங்கை சிவந்து இருக்கிறதே ஏன்? ஒரு வேளை தீயை ஏந்துவதால் அந்தக் கரம் சிவந்து விட்டதோ என்கிற எண்ணம் எழுகின்றது. ஆனால், இறைவனே தழல்வண்ணன் ஆயிற்றே. திருக்கையில் வைத்திருப்பது ஒரு சிறிய தீ அல்லவா? பெரிய தீயிடத்தில் இந்தத் திருக்கரத்திலுள்ள சிறிய தீ என்ன செய்யும்? தீயின் நிறம் செந்நிறமாகும். சிவபெருமானுடைய திருக்கர்மும் செம்மையுடையது. தீயே தன் வடிவமாகக் கொண்டிருக்கும் இறைவனுடைய செம்மையே உள்ளங்கையில் சிவப்பை ஏற்றிஇருக்க வேண்டும். காரைக்கால் அம்மையார் தன்னுடைய அன்புக் குழந்தையிடம் வினாவை எழுப்புவதுபோல் கேட்டு இறைவனிடம் உண்மையை வேண்டுகின்றார்.

"அழல்ஆட அங்கை சிவந்ததோ? அங்கை
அழகால் அழல்சிவந்த வாறோ? - கழல்ஆடப்
பேயோடு கானில் பிறங்க அனல்ஏந்தித்
தீஆடு வாய், இதனைச் செப்பு". (அற்புதத் திருவந்தாதி)

சங்காரத் தொழிலைப் புரிந்து இறைவன் எல்லாவற்றையும் தன்னுள் ஒடுக்கிக் கொண்டாலும் தனது பெரும் கருணையால் மீண்டும் உலகத்தைத் தோற்றுவித்து, உயிர்களுக்கு வாழ இடம் கொடுத்து, அறிவையும் கொடுத்து அருளிச் செய்கின்றான். இறைவன் அளித்த பேறுகளை நாம் பயன்படுத்தி, நம்முடைய வினைகளைத் தகர்த்து, தற்போதம் மீண்டும் தலைதூக்காமல் இருக்கச் செய்து இறைவனுடைய திருவடிகளைச் சேர்ந்து இன்புறுவோம் என்கிறார் திருமூலர்.

"தீயவைத் தார்மின்கள் சேரும் வினைதனை;
மாயவைத் தான்வைத்த வன்பதி ஒன்றுண்டு;
காயம்வைத் தான்; கலந் தெங்கும் நினைப்பதோர்
ஆயம்வைத் தாய்உணர் வாரவைத் தானே"

(திருமந்திரம் - 426)

# 6. "இன்னருட் சக்தி"

இறைவன் பேரறிவும், பேராற்றலும், பேரருளும், பெரும் கருணையும் கொண்டவன். உயிர்களாகிய நாம் சிற்றறிவும், சிறு ஆற்றலும் உடையவர்கள். ஆயினும், இறைவன் நம்முள் உயிருக்குயிராய் நிற்கின்றான். அவன் உள்ளத்து ஒருவன், உள்ளுறுசோதி, உள்ளத்தை விட்டு ஒரு அடி நீங்காதவன். உள்நின்ற யோனிகளுக்கு எல்லாம் ஒருவனே. உலகிலும், உயிரிலும் நீரினில் பால் போல் நின்று கொண்டு அவற்றின் இயக்கத்திற்குக் காரணமாக இருக்கின்றான். இறைவன் அன்பிற்கு இருப்பிடம். அவனுடைய சக்தி அருட்சக்தியாகும். திருமந்திரத்தில் பல இடங்களில் இந்த அருட்சக்தியின் அருமையும், பெருமையும் அழகாக விளக்கப்பட்டிருக்கின்றன. இந்த விளக்கத்தை ஓரளவு நாமும் பெற்றுப் பயனடைய முயல்வோம்.

ஒன்றவன்தானே; இரண்டு அவன் இன்னருள் என்கிற இறைவாக்குடன் திருமூலர் திருமந்திரத்தில் பாயிரப் பகுதியைத் தொடங்குகின்றார். முதற்பொருளாகிய கடவுள் ஒன்றே. ஒன்றாகத்தான் இருக்க முடியும். **எல்லா உயிர்க்கும் இறைவனே ஆயின் கல்லார்தார் நெஞ்சத்துக்காண வொண்ணாதே** என்பார் திருமூலர். முழுமுதற் பொருளாகிய கடவுள் பொருளால் ஒன்றேயாயினும், சிவம், சக்தி எனத் தன்மையால் இரண்டாய் நிற்கும். எல்லாவற்றிற்கும் மேலான நிலையில் நிற்கும்பொழுது சிவம் பராபரம் என வழங்கப்படும். சிவம் பராபரமாய் நிற்கும்பொழுது, அதன் சக்தி பராபரை எனப்படும். பராபரமாய் நிற்பதே சிவத்தின் சொரூப நிலையாகும். அதாவது, அதனுடைய இயற்கைத் தன்மையாகும். அதேபோல், பராபரையாய் நிற்பதே சக்தியின் இயற்கைத் தன்மையாகும்.

இயற்கை நிலையிலுள்ள பராபர சிவம், உயிர்களை உய்விக்க வேண்டும் என்கிற விருப்பத்தால், உலகத்தை உண்டாக்க நினைக்கும். அதுவே உலகத் தோற்றத்திற்குத் தொடக்க நிலையாகும். அப்பொழுது சிவம் ஆதி சிவன் என்றும், அதன் சக்தி ஆதி சக்தி என்றும் சொல்லப்படும். ஆதி சக்தி என்றும் திரோதான சக்தியையும் அருட் சக்தியையும் கொண்டுள்ளது.

பரம்பொருள் ஆதிசிவனாய் நின்று உலகத்தைச் செயற்படுத்த வேண்டும் என்று எண்ணும்போது தனது ஆற்றலாகிய ஆதிசக்தியாலே இந்த எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்கின்றது.

இயற்கை நிலையில் ஆதிசக்தி ஞானமாய் நிற்கும். பின்னர், உலகத்தை செயல்படுத்த விரும்பும் நிலையில் இச்சா சக்தியாகவும், அந்தத் தொழில் முறையை அறிந்த நிலையில் ஞான சக்தியாகவும், அறிந்தவற்றைச் செயற்படுத்தும் நிலையில் கிரியா சக்தியாகவும் நிற்கும். அப்போதே ஆதிசிவன் ஆதி சக்தியின் வழியாக எழுத்தோசையை தோற்றுவிக்க விரும்புவான். அந்த நிலையில் அவன் நாதம் எனவும் பெயர் பெறுவான்.

**"ஆதியோ டந்தம் இலாத பராபரம்**
**போதம தாகப் புணரும் பராபரை**
**சோதி யதனிற் பரந்தோன்றத் தோன்றுமாம்**
**தீதில் பரை; அதன் பால்திகழ் நாதமே"** **(திருமந்திரம் - 368)**

இந்த மந்திரம் நாத நிலை வரை படைப்பினை விளக்குகிறது.

உலகத்தைச் செயற்படுதத சக்தி நின்றாலும் சிவத்தை விட்டுத் தனித்து நிற்பதில்லை. மணியில் ஒளிபோல சிவத்தோடு ஒன்றி நிற்கும். **"கல்லொளி போல கலந்து உள்ளிருந்திடும்"** என்பார் திருமூலர்.

சிவத்துடன் தொடர்ந்து நிற்கும் சக்தி பல நிலைகளில் நின்று பின்னர் சதாசிவன், மகேச்சுரன், உருத்திரன், திருமால், அயன் முதலிய ஐவருக்கும் பிருதினி முதலான ஐம்பூதங்களுக்கும் சார்பிடமாக, துணைவியாக, தலைமைப் பொருளாக நிற்பாள்.

**"தூரத்திற் சோதி தொடர்ந்தொரு சத்தியாய்**
**ஆர்வத்து நாதம் அணைந்தொரு விந்துவாய்ப்**
**பாரச் சதாசிவம் பார்முதல் ஐந்துக்கும்**
**சார்வத்துச் சத்திஓர் சார்த்துமா வாமே".** **(திருமந்திரம்)**

இறைவனுடைய பேரருளே படைப்புத் தொழிலாக, சக்தியின் மூலமாகப் பரிணமிக்கின்றது. இதைத் திருமூலர் விளையாடல் என்பார். ஆனால், இது ஒரு பொழுதுபோக்குக்கான விளையாட்டன்று. மாணிக்கவாசகர் இதனையே **"காத்தும், படைத்தும், கரந்தும் விளையாடி"** என்பார். இந்த விளையாடல் எண்ணிலா உயிர்களுக்கும் எண்ணிலாப் பயனை விளைவிப்பதாகும். உயிர்களின் பக்குவ நிலைக்கேற்ப அவற்றிற்கு வேறு வேறு வினைகளையும் தரும். பருவ காலங்களுக்கு ஏற்ப விளையும் பயன்களும் மாறுபட்டிருக்கும். அதேபோல அருட்சக்தியின் இயக்கம் ஒவ்வொரு உயிருக்கும் அதனுடைய பக்குவத்திற்கு ஏற்ப வேறுபட்ட பலன்களைத் தரும். இதை விளக்கும் திருமந்திரம் இதோ!

**"ஒருவன் ஒருத்தி விளையாடல் உற்றார்**
**இருவர் விளையாட்டும் எல்லாம் விளைக்கும்**
**பருவங்கள் தோறும் பயன்பல வான**
**திருவொன்றிற் செய்கை செகமுற்று மாமே".**

**(திருமந்திரம் - 383)**

கருணையுள்ளம் படைத்த சிவசக்தியே சதாசிவமாக நின்று படைப்புப் போன்ற ஐந்தொழில்களைச் செய்வாள். மங்கலப் பொருளாக விளங்குவாள். பிரணவ சொரூபியாக நிற்பாள். வேதப்பொருளாகவும், பூரணமாகவும், திரோதான சக்தியாகவும், சாத்திர ஞானம், அனுபவ ஞானம் போன்றவற்றைப் பெற்றவளாகவும் விளங்குவாள்.

**''வாரணி கொங்கை மனோன்மணி மங்கலி**
**காரணி காரிய மாகக் கலந்தவள்**
**வாரணி ஆரணி வானவர் மோகினி**
**பூரணி போதாதி போதமு மாமே''.** **(திருமந்திரம் - 389)**

இறைவனுடைய திருவருளே சக்தியாக உலகெங்கும் பரவி உயிருக்குயிராய் நின்று, உயிருக்கு அறிவையும், ஆற்றலையும் அளித்து, படிப்படியாக உயிர்களைப் பக்குவமடையச் செய்து, வீட்டுப் பேற்றினையும் வழங்கும். என்னே இந்த விளையாட்டின் அருமை! என்னே இந்த அருட்சக்தியின் பெருமை! உலகின் பிறந்த எல்லாச் சீவராசிகளும் உயர்ந்து, ஒப்பற்ற நன்மையைப் பெறுவதே அம்மையினுடைய குறிக்கோளாக இருக்கின்றதல்லவா? இதனை நாம் உணர்ந்துகொள்ள வேண்டாமா? ''ஐயா, **நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின் உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்**'' என்று மணிவாசகர் பெருமான் மனம் உருகிக் கூறவில்லையா?

அருளுக்கு இருப்பிடமான சக்தி மனத்திற்கும், வாக்கிற்கும், பொறிகளுக்கும், புலன்களுக்கும் அப்பாற்பட்டது. குறியும், குணமும் இல்லாதவளாயினும் விரும்பி, வேண்டி நின்றோர் மனத்தில் நிரப்பி, தனது அருள்மழையைப் பொழிவதற்காகக் காத்துக் கொண்டிருக்கின்றாள். அருளாளர்கள் கண்களுக்குச் சோதியாகத் தோன்றுகின்றாள். அன்பர்களின் உள்ளங்களில் பல வடிவங்களுடன் காட்சி அளிக்கின்றாள். இறைவனுடைய திருவுருவத்தைத் தம்முள் உணர்ந்து கொண்ட பல பக்தர்களை நாம் பார்க்கின்றோம். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த காரைக்கால் அம்மையார் ஓர் சிறந்த இறை உணர்வாளர். தம்முள் இறைவனைக் கண்டவர். அவ்வாறு காண்பதற்கு முன்பு பல நிலைகளைக் கடக்கவும் நேரிட்டது. இறைவனைக் கண்ட பின்னர் தான் முதலில் காணாத வடிவத்தைப் பின்னர் கண்டது பற்றி எவ்வாறு பிறரிடம் உரைப்பது என்று நினைத்து, திகைத்து நிற்கின்றார். ''எம்பெருமானே, உன்னுடைய இறைவன் எந்த உருவத்தை உடையவன் என்று பிறர் கேட்டால் நான் என்ன பதில் சொல்வது? எந்த உருவத்தைச் சொல்லுவது? உன் உருவம் எது?'' என்று அம்மையார் தனக்குத்தானே கேட்டுக் கொள்கின்றார்.

**''அன்றும் திருஉருவம் காணாதே ஆட்பட்டேன்;**
**இன்றும் திருஉருவம் காண்கிலேன்; - 'என்றுந்தான்**
**எவ்வுரு வோன் நும்பிரான்?' என்பார்கட்கு ஏதுஉரைப்பேன்?**
**எவ்வுருவோ நின்உருவம் ஏது?**

அபிராமி பட்டர் ஒருபடி மேலாகவே செல்கின்றார். உலகம் பதினான்கையும் திருவருளால் ஈன்றவள் பராசக்தி. அவற்றைப் பாதுகாத்து வருவதும் அவளே, பின்னர் அவற்றைத் தம்முள் அடக்கி வைத்துக் கொள்ளுவதும் அம்மையே, சிவனுக்கு முன்பு தோன்றிய தத்துவமாய் நிற்பவளும் அவளே. திருமாலுக்குத் தங்கை, பெரிய தவத்திற்கு இருப்பிடமாகவும் உள்ளவள், உன்னைவிட்டு வேறு எந்தத் தெய்வத்தை வழிபடுவது என்று கேட்கின்றார்.

**''பூத்தவளே, புவனம்பதி னான்கையும் பூத்தவண்ணம்**
**காத்தவளே, பின் கரந்தவளே, கறைக் கண்டனுக்கு**
**மூத்தவளே, என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே,**
**மாத்தவளே, உன்னை அன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே?''**

ஒப்பற்ற ஞானியாகிய திருமூலர் அம்மையைப் பல கோணங்களில் காண்கின்றார். பல வடிவங்களில் தரிசிக்கின்றார். அம்மையினுடைய பல நாமங்களைப் பற்றிச் சிந்திக்கின்றார். அம்மைக்குரிய மந்திரங்களை உச்சரித்து அவளைச் சக்கரமாக வழிபடுகின்ற நிலையை நமக்கு உணர்த்தி, அம்மையின் திருவருளை நாம் எல்லோரும் பெற வைக்கின்றார். முதலில் அம்மையின் ஆற்றலைப் பற்றிச் சிந்திக்கின்றார். அம்மையே, ஐம்பூதங்களும் தாங்கி விண்ணாக நிற்பவள். அவளே சுடுகின்ற தீயாகவும், சூரியனாகவும், சந்திரனாகவும் இருப்பவள். அவளே கருணை மழை பொழிகின்ற பெண்ணுருவாகவும் நிற்கின்றாள். வடவரை என்கின்ற வடபாகத்துத் திருமலையாகவும், குளிர்ந்த கடலிடையே வடவாக்கினி என்கின்ற தீயாகவும் உள்ளாள்.

**''தானே இருநிலந் தாங்கிவின் னாய்நிற்குந்**
**தானே சுடும்அங்கி ஞாயிறுந் திங்களுந்**
**தானே மழைபொழி தையலு மாய்நிற்குந்**
**தானே வடவரைத் தண்கடற் கண்ணே''. (திருமந்திரம் - 1165)**

பத்துத் திசைகளையும் முகமாக உடையவள் பராசக்தி. நம்மை என்றென்றும் உய்விக்கக் காத்துக் கொண்டிருப்பாள். வேதங்களையும், ஆகமங்களையும், வேதங்களின் ஆறு அங்கங்களையும், நமது நன்மைக்காக அருளிச் செய்தவள் அல்லவா? பரம்பொருளுடன் ஒன்றி நிற்பவள். எல்லாவற்றிற்கும் ஆதாரமாக விளங்குகின்றாள். ஆதியும், அந்தமும் இல்லாத பராபரை. இதை நாம் அறிந்து கொள்ள வேண்டாமா?

**''பத்து முகமுடை யாள்நம் பராசக்தி**
**வைத்தனள் ஆறங்க நாலுடன் றான்வேதம்**
**ஒத்தனள் ஆதாரம் ஒன்றுடன் ஓங்கியே**
**நித்தமாய் நின்றாளெம் நேரிழை கூறே''. (திருமந்திரம்)**

சிவபெருமான் முப்புரங்களை வென்றவன் என்று புராணங்கள் கூறும். திருமூலர் வேறொரு இடத்தில் இந்த முப்புரங்கள் என்பது உண்மையில் மும்மலக் காரியங்களை எடுத்துக்காட்டும் என்று கூறுகின்றார். ஆணவம், கன்மம், மாயை என்பது மும்மலங்களாகும். இந்த மூன்றுக்கும் மூன்று விதமான தன்மைகள் உண்டு. இவற்றை ஒடுக்கச் சிவபெருமான் இருக்கின்றனன் என்றால் இவற்றை இயக்க ஒருவர் வேண்டாமா? இவற்றை இயக்குபவர் அம்மையே ஆவாள் என்கின்றார் திருமூலர். அவ்வம்மையே ஆன்மாவிற்குக் கல்வி, வாழ்வு, பேறு ஆகிய மூன்றினையும் அருளிச் செய்பவள். முக்திப் பேற்றினை அருளுபவளும் அம்மையே ஆவள் என்பர். இந்த மூன்றையும் நமக்குக் கொடுத்தருளி, நமது உயிர் வினைப்போகங்களை அனுபவிக்க எல்லாத் தத்துவங்களையும் கொடுத்து நிலைக்களமாகவும், ஒப்பற்ற ஒளியாகவும், அம்மை பராசக்தி விளங்குவாள். நமது புலன் உணர்விற்கு எட்டாதவள் ஆயினும், தனது திருவடி உணர்வையும், அருளையும் நமக்கு எப்பொழுதும் தந்து கொண்டிருக் கின்றாள்.

திருவடி உணர்வு கைவந்த உண்மை நெறி கண்டவர் திருமூலர். முழுமுதற்கடவுளாகிய சீவனும், சிவனும் ஒன்றே என்றும் இரண்டல்ல என்றும் கூறுகின்றார். சிவபெருமான் எங்கெலாம் உளனோ, அங்கெலாம் தையல் மாதேவியாகிய பராசக்தி அவனை விட்டுப்பிரியாது நிற்பாள். உடல் எங்கு உள்ளதோ அங்கு உயிருக்குயிராகி, காவலனாக நிற்பாள். ஆகாயம் எங்கெல்லாம் உள்ளதோ அங்கெங்கெல்லாமும் அதற்கப்பாலும், பரவெளியிலும் திகழ்வாள். பராசக்தி என்றும் மாசக்தி என்றும் அவள் பெயருடையவள். உலகுக்கும், உடலுக்கும், உயிர்க்கும், ஆதாரமாக நிற்கக்கூடிய சக்தி உடையவள். உண்மை உணர்வு வடிவமாக இருப்பவளும் அவளே. ஊழிதோறும் ஆருயிர்களைக் காக்கும் ஆற்றல் உடையவளும் அவளே.

**"தானெங் குளனங் குளல்தையல் மாதேவி**
**ஊனெங் குளதுஅங் குளன்உயிர்க் காவலன்**
**வானெங் குளதுஅங் குளமந்த மாருதம்**
**கோனெங்கும் நின்ற குறிபல பாரே".** (திருமந்திரம் - 1055)

**"பராசத்தி மாசத்தி பல்வகை யாலுந்**
**தராசத்தி யாய் நின்ற தன்மை யுணரா**
**உராசத்தி ஊழிகள் தோறும் உடனே**
**புராசத்தி புண்ணிய மாகிய போகமே".** (திருமந்திரம் - 1056)

அம்மையின் திருவருளாற்றலை அறியாத தேவர்களும் இலர். அந்தத் திருவருள் துணையின்றிச் சீரிய தவங்களைச் செய்தலும் இயலாது. அவளுடைய துணையின்றிப் படைத்தல் போன்ற ஐந்தொழில்களைச் செய்வதற்கு ஐங்கடவுள்களும் முயன்றாலும் இயலாது. அவளுடைய அருள்

துணையில்லாமல் திருவடிப் பேற்றினை நமக்குக் கிடைக்கச் செய்யும் திருநெறியும் ஒன்றுமில்லை.

**''அவளை யறியா அமரரும் இல்லை**
**அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை**
**அவளன்றி ஐவரால் ஆவதொன் றில்லை**
**அவளன்றி ஊர்புகு மாறறி யேனே''.** (திருமந்திரம் - 1053)

அன்னையைப் பற்றி இவ்வளவு பேசுகின்றீரே, அவளுடைய உருவம், வடிவம் என்ன என்று கேட்டால் பதில் சொல்வீரா என்று திருமூலரை அவருடைய சீடர்கள் கேட்கின்றார்கள். இங்கே காரைக்கால் அம்மையாருடைய மனத்தில் தோன்றிய எண்ணமொன்று நினைவுக்கு வருகின்றது. அம்மையார் சொல்கின்றார். நூல்களைக் கற்று அதனால் உங்களுக்கு அறிவு கிடைக்கின்றது. அதையே பெரிதாக எண்ணி வீண் பேச்சு பேசித் திரிகின்றீர்கள். உங்களுக்கு என்ன பயன் கிட்டப்போகிறது? இறைவன் எத்தன்மையன் என்று தத்துவ விசாரணை செய்து கொண்டு போவதை நிறுத்துங்கள். அவனை எந்தக் கோலத்தில், எந்த வடிவாக நினைத்து, எத்தகைய தவம் செய்தாலும் அவன் அந்தக் கோலத்தில், அந்த வடிவுடையவனாக வந்து அருள் புரிவான் என்று அருளுகின்றார் அம்மையார்.

**''நூல்அறிவு பேசி நுழைவுஇலா தார்திரிக!**
**நீல மணிமிடற்றான் நீர்மையே - மேல் உவந்து**
**எக்கோலத்து எவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்**
**அக்கோலத்து அவ்வுருவே ஆம்.''**

**(அற்புதத் திருவந்தாதி)**

திருமூலர் பெருமான் இதுபற்றி அன்னையை அனுபவமாக உணர்ந்த பெரியோர்கள் கூறக்கேட்டேன் என்கின்ற வகையில் தனது உணர்வினை நமக்குத் தெரிவிக்கின்றார். அன்னை ஆனந்தமயமாக இருப்பவள் என்று கூறுவர். அருவமாயும், உருவமாயும் விளங்குபவள். அறிவு உருவில் நிற்பவள் என்பர். ஞானம், கிரியை, இச்சை என்னும் வகையில் நிற்பர் என்பர். அறிவு உருவாகிய சிவபெருமானும் அன்னையிடம் எழுந்தருளி இருப்பவர் என்பர்.

**''அறிவார் பராசத்தி ஆனந்தம் என்பர்**
**அறிவா ரறிவுரு வாமவள் என்பர்**
**அறிவார் கரும மவளிச்சை என்பர்**
**அறிவார் பரனு மவளிடத் தானே''.** (திருமந்திரம் - 1054)

திருமூலர் பெருமான் மேலும் தம் அனுபவங்களைப் பற்றிச் சிந்திக்கின்றார். பாமர மக்களுக்கு, இறைவியை அன்புடன் வழிபாடு செய்ய

விரும்பி நிற்போர்க்கு இப்படிச் சொல்லிவிட்டால் போதுமா என்கின்ற கவலை அவருடைய மனத்திலே தோன்றுகின்றது. அன்னையின் உருவம் நம்முடைய உணர்விலே ஊன்றி நிற்கவேண்டுமல்லவா? அதை எடுத்துரைக்க வேண்டும் என்கின்ற ஆவல் தோன்றுகின்றது. அன்னையின் எழில்நிறைந்த திருவுருவத்தை, தியான உருவத்தை விளக்கத் தொடங்குகின்றார். அன்னை திரிபுரையாக விளங்குகின்றாள். நெருப்பு, சூரியன், சந்திரன் என்ற மூன்று மண்டலங்களாக நிற்கிறாள். அவள் ஒரு பேரழகு வாய்ந்தவள். ஆகாய வடிவாகத் திகழ்கின்றாள். உயிர்களைக் காக்கும் செவ்வொளியாக விளங்குகின்றாள். நாரணி, பலவகையாகிய நிறத்தை உடையவள். இருள்போலக் கருநிறத்தவள். அவ்வம்மையே உலகினையும், உயிரினையும், காத்து அருள் புரிவாள். திரிபுரா தேவியே பல சக்திகளாக அமைந்து விளங்குகின்றாள்.

**"திரிபுரை சுந்தரி அந்தரி சிந்துரப்**
**பரிபுரை நாரணி யாம்பல வண்ணத்தி**
**இருள்புரை ஈசி மனோன்மணி என்ன**
**வருபல வாய்நிற்கு மாமாது தானே".** (திருமந்திரம் - 1046)

அன்னை நீருண்ட கரிய மேகம் போன்ற நிறமுடையவள். அவளுடைய திருவடிகளை அழகிய சிலம்பணிகள் அலங்கரிக்கின்றன. செம்மை நிறமுடைய பட்டாடை அணிந்துள்ளாள். மார்பில் கச்சை. தன்னுடைய நான்கு திருக்கரங்களிலும் முறையே கரும்பு வில்லும், அங்குசப்பாசமும், மலர் அம்பும் வைத்துள்ளாள். அழகிய கிரீடம் பொருந்தியவள். சிறந்த மணிகள் பதிக்கப்பட்டுள்ள குண்டலங்கள் அன்னையின் காதுகளை அலங்கரிக்கின்றன.

**"தாளணி நூபுரஞ் செம்பட்டுத் தானுடை**
**வாரணி கொங்கை மலர்க்கன்னல் வாளிவில்**
**ஏரணி அங்குச பாசம் எழில்முடி**
**காரணி மாமணிக் குண்டலக் காதிக்கே."** (திருமந்திரம் - 1049)

"பனிமலர் பூங்கணையும், கருப்பஞ்சிலையும், மென்பாசாங்குசமும், கையில் அணையும் திரிபுரசுந்தரி ஆவது அறிந்தனமே" என்று அபிராமி பட்டர் பாடுகின்றார்.

அன்னையின் உருவம் மேலும் மேலும் தெளிவடைகின்றது. காதுகளில் குண்டலங்கள், கொல்லும் தகுதி வாய்ந்த வில்லைப் போன்ற புருவம், சென்னிறத் திருமேனி, உருத்திராட்ச மாலையைப் பூண்டவள், ஒளி வீசுகின்ற திருமுடியிலே பிற்ற அணிந்தவள், சண்டிகை எனும் பெயர் பெற்றவள், நான்கு திசைகளையும் தாங்கி நிற்கின்றாள். உலகம் உய்ய உயிருடன் கலந்து நிற்கின்றாள். அத்தகைய நிலையிலே திரிபுரை என்கின்ற பெயரைப் பெற்றவள். கால எல்லையைக் கடந்த பழமை பெற்றவள். குறையாத

அழகுடையவள். அழகுமிக்க நீண்ட கூந்தலை உடையவள். நன்கு விளங்குகின்ற சிவமணி மாலையைப் பூண்டவள். நான்கு திசைகளிலும் உயிர்களைத் தன்பால் இழுக்கும் சக்தியுடையவள். வெண்தாமரை மலர் மேல் வீற்றிருக்கும் தூய நிலையை உடையவள். அவளே சுத்த வித்தியா தேவியுமாவாள். மேலும், தூய்மையான கச்சினையும், முத்து மாலையையும் அணிந்தவள். பேரின்பத் தோற்றத்திலே விளங்குபவள். மாயையைப் பொருளாகக் கொண்டு சீவர்களை ஆட்டி வைக்கின்ற பேராற்றலை உடையவள். சக்தி என்றும், மாபரை என்றும் அழைக்கப்படுபவள். வழிபடும் அன்பர் உள்ளத்து உறையும் அழகினள். இத்தகைய கோலங்களோடு கூடிய அன்னை மெய்யுணர்வுடையவள் ஆவாள். தானேயாக படைத்துக் கொண்ட வடிவுடைய ஞானசொரூபியுமாவள்.

**''குண்டலக் காதி கொலைவிற் புருவத்தள்**
**கொண்ட வரத்த நிறமன்னு கோலத்தள்**
**கண்டிகை யாரங் கதிர்முடி மாமதிச்**
**சண்டிகை நாற்றிசை தாங்கிநின் றாளே''.** (திருமந்திரம் - 1050)

**''நின்ற திரிபுரை நீளும் புராதனி**
**குன்றலில் மோகினி மாதிருக் குஞ்சிகை**
**நன்றறி கண்டிகை நாற்காற் கரீடணி**
**துன்றிய நற்சுத்த தாமரைச் சுத்தையே''** (திருமந்திரம் - 1051)

வேதங்கள், ஆகமங்கள் போன்ற நூல்களைக் கையில் வைத்திருப்பாள். திருமூலர் பெருமான் கூறுகின்றார்: எங்களுடைய தலைவியாகிய திரிபுரை, மனோன்மணி மூன்று திருக்கண்களை உடையவள். அந்த நிலையில் அவளுடைய நிறம் பளிங்குபோல் வெண்மையாக இருக்கும். வெண்தாமரையாகிய இருக்கையில் விரும்பி நிற்பவள். திருமுறைகளைப் பாடும் திருவாயினை உடையவள், நாதமயமாய் விளங்குபவள். பேரருள் வாய்ந்தவள். இந்த அழகிய பெருமாட்டியின் திருவடிகளை உங்கள் தலையின்கண் சூடுவீர்களாக. வாயால் அவளைப் புகழ்ந்து துதிப்பீர்களாக என்று திருமூலர் நம்மையெல்லாம் வேண்டுகின்றார்.

**''ஏடங்கை நங்கை இறைஎங்கள் முக்கண்ணி**
**வேடம் படிகம் விரும்பும்வெண் தாமரை**
**பாடுந் திருமுறை பார்ப்பதி பாதங்கள்**
**சூடுமின் சென்னிவாய்த் தோத்திரஞ் சொல்லுமே''.**

(திருமந்திரம் - 1067)

இதே கருத்துடன் அபிராமியின் எழிலை முற்றிலும் உணர்ந்த பட்டர் அவளுடைய திருவுருவத்தைப் பின்வருமாறு மனத்தில் நிறுத்தி துதிக்கின்றார்:

**"தாமம் கடம்பு; படைபஞ்ச பாணம்; தனுக்கரும்பு;**
**யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது; எமக் கென்றுவைத்த**
**சேமம் திருவடி; செங்கைகள் நான்கு; ஒளிசெம்மை; அம்மை**
**நாமம் திரிபுரை; ஒன்றோடு இரண்டு நயனங்களே".**

திரிபுரங்களின் தலைவி என்கின்ற நிலையில் அன்னையைத் திரிபுரை என்று திருமூலர் அழைக்கின்றார். திரிபுரங்கள் என்றால் மும்மலங்கள் என்கின்ற கருத்தையும் சொல்கின்றார். அப்படியென்றால் உயிர்களுக்கு மும்மலங்களைக் கொடுத்தும், பிறகு உயிர்களுக்கு ஞானத்தை அருளி, மும்மலங்களை நீக்குவதும் அன்னையே என்கின்ற வேறொரு கருத்தையும் தருகின்றார். அந்தத் திரிபுரையே சுந்தரி என்றும், அந்தரி என்றும், நாரணி என்றும், மனோன்மனி என்றும், அபிராமி என்றும், அகோசரி என்றும், சண்டிகை என்றும், மோகினி என்றும், மாதேவி என்றும், பராசக்தி என்றும், மாசக்தி என்றும் மங்கலி என்றும், ஆனந்தசுந்தரி என்றும், முக்கன்னி என்றும், ஓங்காரி என்றும் திருமூலரால் அழைக்கப்படுகின்றாள். அன்னைக்கு இன்னும் எத்தனை எத்தனை நாமங்களும் உண்டோ? அன்னையின் புகழை நினைக்க வேண்டுமென்றால், அன்னையின் நாமத்தை எத்தனை முறை நான் சொல்லி இருப்பேன் என்று அபிராமி பட்டர் சொல்லவில்லையா? **கன்னியது உன் புகழ், கற்பது உன் நாமம்** என்று பட்டர் பாடுகின்றார். பக்தர்களுக்கு அன்னையினுடைய திருநாமங்களை அடிக்கடி சொல்லுவதில் ஒரு அலாதி இன்பம் ஏற்படும். அந்த இன்பத்தில் திளைத்தவர் அபிராமி பட்டர். அன்னையை நாயகி, நான்முகி, நாராயணி, பஞ்சநாயகி, சங்கரி, சாம்பவி, சாமளை, வாராகி, மாதங்கி என்றெல்லாம் அழைத்து இன்புறுகின்றார். உயிர்களது துன்பத்தை நீக்குவதற்காக அமைந்த சக்தியின் வடிவங்களில் வாராகி, வைரவி என்ற இரு வடிவங்கள் முதன்மையாகச் சொல்லப்படுவன. சிவகுமாரர்களுள் வீரபத்ரர், வைரவர் என்னும் திருமூர்த்தங்கள் உண்டு. குற்றம் செய்வோரைத் தண்டித்து, சிவன்பால் அன்பு கொண்டவரைக் காத்து, நிற்கும் வைரவ மூர்த்தத்தினுடைய சக்தியே வைரவி ஆவாள். வைரவிக்கு அழகிய கரங்கள் நான்கு. அவைகளில் சூலம், கபாலம், நாகபாசம், அங்குசம் ஆகியவற்றை ஏந்தி நிற்பாள். இவளே சிவனுடைய சிறந்த மேனியாகத் திகழ்வாள். மாலாலும், அயனாலும் அறியப்படாதவன் சிவன் என்று புராணங்கள் கூறும். அந்தச் சிவனுடைய அருட்சக்தியாக வைரவி தோன்றுகின்றாள். அவள் மென்மையான இயல்புடையவள். வஞ்சிக்கொடி போன்ற வடிவினை உடையவள். நெறியினின்று தவறுகிறவர்களைத் தண்டிப்பவள். சினங்கொண்ட மனத்தினள், பல கலைகளைப் பயின்றவள். மாணிக்க மணியொத்த சென்னிறம் வாய்ந்த திருமேனி உடையவள். பல நிறத்தோடு, பல மணிகளோடு கூடிய உடைகளையும் அணிந்தவள். மேலும் இவள் பல வைரங்கள் இழைத்த கோடி சந்திரன் போல அழகிய முடியை அணிந்தவள். பேர்பெற்ற ரத்தின குண்டலத்தை அணிந்த காதினை உடையவள். மான் போன்று மருண்டு பார்க்கும் பார்வையை உடையவள்.

சூரியனையும், சந்திரனையும் கண்களாகக் கொண்டவள். பொன்னாலாகிய மணி போலும் நெருப்புக்கண்ணை உடையவள்.

"சூலங் கபாலங்கை ஏந்திய சூலிக்கு
நாலாங் கரமுளை நாகபா சாங்குச
மாலங் கயனறி யாத வடிவுக்கு
மேலங்க மாய்நின்ற மெல்லிய லாளே". (திருமந்திரம் - 1081)

"மெல்லியல் வஞ்சி விடமி கலைஞானி
சொல்லிய கிஞ்சுக நிறமன்னு சேயிழை
கல்லியல் ஒப்பது காணுந் திருமேனி
பல்லிய லாடையும் பன்மணிதானே". (திருமந்திரம் - 1082)

"பன்மணி சந்திர கோடி திருமுடி
சொன்மணி குண்டலக் காதி யுழைக்கண்ணி
நன்மணி சூரிய சோம நயனத்தள்
பொன்மணி வன்னியும் பூரிக்கின் றாளே".
(திருமந்திரம் - 1083)

அன்பும், அருளும் தன்னுள் கொண்ட அன்னையைப் போற்றியும், புகழ்ந்தும் வணங்கி வழிபடுவதே முதல் தொழில் என்று எப்போதும் நினைத்து வாழ வேண்டும் என்கின்றார் திருமூலர் பெருமான். எனவே, தோத்திரம் செய்து, தொழுது துணையடி வாய்த்திட, ஏத்தி வழிபடும் என்கின்றார் திருமூலர்.

தவத்தின் தலைவியை, மனோன்மனி மங்கையை மெதுவாக நின்று தோத்திரம் செய்து வழிபடுங்கள். அவ்வாறு வழிபட்டால் பிறவியும், பிறவியைச் சார்ந்த பவன்களும், தீமைகளும் உங்களைச் சாராது அகன்றுவிடுமே.

"தையல்நல் லாளைத் தவத்தின் தலைவியை
மையலை நோக்கும் மனோன்மனி மங்கையைப்
பையநின் றேத்திப் பணிமின் பணிந்தபின்
வெய்ய பவமினி மேவகி லாவே". (திருமந்திரம் - 1103)

அன்னையை எவ்வாறு பூசிக்க வேண்டும்? அவளுக்குப் பிடித்த பொருள்கள் சந்தனம், குங்குமம், பனி நீர் முதலிய நறுமணப் பொருள்களாகும். மணம் மிக்க நறுமலர்கள் அவளுக்கு ஏற்றவை. நீண்ட தூரம் கேட்கக்கூடிய மணி, கடல், யானை, வளை, சங்கு ஆகிய ஐந்து ஒலிகளை அவள் மிக்க விரும்புவாள். திருவைந்தெழுத்தாகிய தலைசிறந்த மந்திரம் அவளுக்கு உரியதாகும். இவற்றைக் கொண்டு இறைவியைத் தொழுதல் சாலச் சிறந்ததாகும். இவ்வாறு பொருள்களைக் கூட்டி அம்மையை வழிபடுவதே யோகம் என்று திருமூலர் கூறுகின்றார்.

**"பூசனை கந்தம், புனைமலர் மாகோடி,**
**யோசனை பஞ்சத் தொலி, வந் துரைசெய்யும்**
**வாச மில்லாத மணிமந் திரயோகம்**
**தேசந் திகழும் திரிபுரை காணே".** (திருமந்திரம் - 1069)

எல்லாவற்றிற்கும் மேலாக ஆதிமந்திரமாகிய திருவைந்தெழுத்தை ஓதியே இறைவியினுடைய அருளைப் பெறலாம். அவ்வாறு இடைவிடாது திருவைந்தெழுத்தை ஓதி வருகின்ற அன்பர்களுடைய மனதில், உள்ளத்தில் மூச்சாகவும், மூச்சின் சக்தியாகவும் நின்று அன்னை வேண்டியவற்றை கொடுத்தருள்வாள். அன்னையை வழிபடுவதற்கான மந்திரத்தைத் திருமூலர் பெருமான் இருதய மந்திரம் என்று பெயரிட்டு அதற்கான வழிபாட்டு முறையை ஐந்தாம் தந்திரத்தில் விளக்கிச் சொல்லுகின்றார். இந்த மந்திரங்களை இறைவனுடைய அருளால் தோன்றுகின்ற குருவை ஏற்று அந்தக் குருவினிடமிருந்து மந்திரத்தைக் கற்றுக்கொண்டு பின்னர் மந்திர வழிபாடு செய்து கொள்ள வேண்டும். ஐந்தெழுத்தின் உண்மையை முற்றும் உணர்ந்தவர் திருமூலர். ஐந்தெழுத்தை ஓதி இறைவியின் அருளைப் பெற்றவர். அவள் உயிர்கள் உய்வதற்கான எல்லாவிதமான உபாயங்களையும் அளிக்கின்றாள். எனது ஈரமிலாத நெஞ்சத்தில் உள்ள பல இடர்களைப் போக்குகின்றாள். அந்த நெஞ்சத்தில் அன்பை வித்திடுகிறாள். நிலையிலாப் பொருள்கள் மீது நான் வைத்திருக்கும் பற்றினை அகற்றுகின்றாள். எனக்குத் தஞ்சம் அளிக்கின்றாள். என்னுடைய அவாவினை அடக்குகின்றாள். இனி நீ எதற்கும் அஞ்ச வேண்டாம் என்று என்னுடைய அச்சத்தையும் நீக்கி அருளினாள்.

**"உபாயம் அளிக்கும் ஒருத்தியென் உள்ளத்**
**தபாயம் அறக்கெடுத் தன்பு விளைத்துச்**
**சுவாவை விளக்குஞ் சூழியகத்துள்ளே**
**அவாவை அடக்கிவைத் தஞ்சலென் றாளே".**

(திருமந்திரம் - 1108)

அன்னை பூவுலகிற்கு ஆதாரமானவள். நம்முள் உயிருக்கு உயிராக நிற்கின்றாள். நமது சூக்கும உடம்பில் மூலதாரம் அமைந்துள்ளது. அது நாலிதழ் தாமரை போன்றது. அதன்மேல் ஆறிதழ் கொண்டது கொப்பூழ் ஆகும். மேல் வயிறு இடம் தொண்ணூறு இதழ்களைக் கொண்டது. நெஞ்சகம் என்பது நாற்பது இதழ் கொண்டது. பதினாறு இதழினைக் கொண்டது கழுத்தாகும். புருவ நடுவானது பத்து இதழ்களைக் கொண்டது. இந்த இடங்களில் எல்லாம் நின்று உடலையும், உயிரையும் இயக்குபவள் அன்னையே ஆகும். திருமூலர் பெருமான் சற்றேக்குறைய நூறு மந்திரங்களில் பூரண சக்தி ஆதாரமாகவும், ஆதேயமாகவும் நின்று கொண்டு சீவர்களுக்கு அருள்புரிவதை விளக்குகின்றார்.

அன்னையைச் சக்கரம் மூலமாக வழிபடுதல் என்பது நமது நாட்டின் ஓர் சிறந்த பண்பாடாகும். விதிப்படி சக்கரங்களை வழங்கி, பீஜமந்திரங்களை நிரப்பி, அந்தச் சக்கரத்தில் இறைவியை எழுப்பி வழிப்படுதல் மேலான கல்வியைப் பெற்றதாகும் என்று பெரியோர்கள் எடுத்துரைக்கின்றனர்.

அன்னை பராசக்தி மந்திர உருப்பெற்றவள் என்பதும், மந்திர வடிவங்களை உபாசித்து அன்னையின் பேரருளைப் பெறலாம் என்பதும் இதற்கு அடிப்படையாகும். சிறந்த ஒழுக்கத்துடன், தீவிர கோட்பாடுடன், மந்திர வழிபாட்டில் முழு நம்பிக்கையுடன் சக்கரத்தை வழிபடும்போது பல நன்மைகளைப் பெறலாம். அன்னை பல சக்திகளைத் தருவாள். திருமூலர் திருமந்திரத்தில் திருவம்பலச்சக்கரம், திரிபுரை சக்கரம், வைரவி மந்திரம், ஏரொளிச் சக்கரம், சாம்பவி மண்டல சக்கரம், புவனாவதி சக்கரம், நவாக்கரி சக்கரம் ஆகிய சக்கரங்களை விளக்கி, அவற்றை வழிபடும் முறையை விரிவாக எடுத்துரைக்கின்றார். இவற்றைக் கற்று, தேர்ந்து, நெறியினை மேற்கொண்டு சாதகம் செய்து அன்னையின் அருளைப் பெறுவது சிறந்ததொரு குருவின் மூலமாகவே இயலும் என்பதை நாம் உணர்ந்துகொண்டு அவ்வழியே நடந்தால் மிக்க பயன்பெறலாம் என்பதில் ஐயமில்லை. நவாக்கரி சக்கர வழிபாட்டினால் கிடைக்கும் பயன்களைப் பற்றித் திருமூலர் பெருமான் கூறுவதாவது; அனுபவ ஞானமும், கலை ஞானமும் பெறலாம். வலிய வினைகள் நம்மை விட்டு ஓடி விடும். இறைவனுடைய திருவருள் கைவந்து தீய வினைகள் நீங்கும். உலகில் நன்மைகள் கூடும். எல்லாம் நினைத்தபடியே முடியும். கூற்றுவனுடைய குறியும் தப்பும். உமது பெயர் உலகெங்கும் பரவும். பிரகாசமிக்க உடம்பினைப் பெறலாம். பொன், வெள்ளி, நவமணிகள் குறைவின்றி வந்து சேரும். பல செல்வங்கள் கிட்டும். தேவர்கள் பதவியும் தாமாகவே வரும். இவற்றையெல்லாம் அறிந்து சக்கர வழிபாட்டினைச் செய்ய வேண்டும் என்று திருமூலர் நம்மைக் கேட்டுக் கொள்கின்றார்.

"நலந்தரு ஞானமும் கல்வியும் எல்லாம்;
உரந்தரு வல்வினை உம்மைவிட் டோடிச்
சிரந்தரு தீவினை செய்வ தகற்றி
வரந்தரு சோதியும் வாய்த்திடுங் காணே".

(திருமந்திரம் - 1304)

"நடந்திடும் பாரினில் நன்மைகள் எல்லாம்;
கடந்திடும் காலனும் கண்ணிய நாளும்;
படர்ந்திடும் நாமமும்; பாய்கதிர் போல
அடைந்திடும் வண்ணம்; அடைந்திடு நீயே".

(திருமந்திரம் - 1308)

**"அடைந்திடும் பொன்வெள்ளி கல்லுடன் எல்லாம்;**
**அடைந்திடும் ஆதி அருளும் திருவும்;**
**அடைந்திடும் அண்டத் தமரர்கள் வாழ்வும்;**
**அடைந்திடும் வண்ணம் அறிந்திடு நீயே".**

**(திருமந்திரம் - 1309)**

இவ்வாறு திருமூலர் பெருமான் கூறும் பொழுது பாமர மக்கள் இவ்வுலகில் பெறவிரும்பும் நன்மைகளை இவ்விடத்தில் கருத்திற்கொண்டு பேசுகின்றார். உலக மக்கள் வாழ்வு இன்பமயமாக இருக்க வேண்டிப்பல பொருள்களைச் சேர்த்து வாழ விரும்புகின்றார்கள். பொருட்செல்வம் தேவைப்படுவது உண்மைதான். எனவே, இறைவனை அந்த நோக்கத்துடன் பார்த்து இறைஞ்சும்போது அவனுடைய திருவருள் நாம் வேண்டியவற்றைக் கிடைக்கச் செய்கின்றது. **"இம்மையே தரும்; சோறும் கூறையும் ஏத்தலாம். இடர் கெடலும் ஆம்; அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவில்லையே"** என்பார் சுந்தரமூர்த்தி நாயனார். பராசக்தியின் அருள் பெறும்போது இந்த உலகத்தை ஆளும் மன்னவனாக மாறலாம், பல பதவிகள் பெறலாம், பல இன்பங்களை நுகரலாம். **"அருளே உலகெல்லாம் ஆள்விப்பது"** என்பார் காரைக்கால் அம்மையார். இதுபோன்ற அனுபவங்களை வேண்டுவது மனித இயல்புதான். அதை மறுக்க முடியாது. எனினும் நம்மில் பலர் இருக்கின்றார்கள். அவர்கள் இம்மைக்கும் மறுமைக்குமான இன்பத்தை விரும்பி நிற்பதில்லை. இவைகளுக்கு அப்பாற்பட்ட ஓர் நிலையை வேண்டி நிற்கின்றார்கள். இறப்பும், பிறப்புமற்ற நிலையைப் பெற விரும்புகின்றார்கள். மெய்ப்பொருளைக் கண்டு அனுபவிக்க விரும்புகின்றார்கள். "ஈசன் அருளே பிறப்பறுப்பது; ஆனால் - **அருளாலே மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன்"** என்பார் காரைக்கால் அம்மையார். எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட பரம்பொருளின் உண்மையை மனதிலே உணர்ந்து அந்த நிலையிலேயே இருக்க விரும்புவார்கள் பலர். அவர்கள் இறைவழிபாட்டால் கிடைக்கும் பொருட்செல்வத்தைப் பெரிதாக மதிப்பதில்லை. சேக்கிழார்பெருமான் கூறுவதுபோல, அவர்கள் ஓடும் செம்பொனும், ஒக்கவே நோக்குவார். இவர்கள் இறைவனுடைய திருவடிகளே சரணமென்ற குறிக்கோளுடைய வர்கள். அன்பினைத் தவிர அவர்கள் வேறெதுவும் வேண்டுவதில்லை. ஞானிகள் விரும்பும் வீட்டுப் பேறினையும் அவர்கள் நாடுவதில்லை. பற்றற்ற நிலையில் உயிர்களிடையே அன்பு கொண்டு இறை அருளையே நாடி நிற்பவர்கள் இவர்கள். அந்த அருளை வாரி வழங்குபவள் பராசக்தி. ஆணவம், கன்மம், மாயை போன்ற மலங்களால் உண்மை மறைக்கப்பட்ட நிலையில் உயிர்கள் தாங்கள் செய்த வினைகளின் பயனாகப் பிறப்பையும், இறப்பையும் மாறி மாறிப் பெறுகின்றன. இதற்குக் காரணம் அருட்சக்திதான். இறைவியின் அருளால் ஆணவ மலமானது நாள்தோறும் படிப்படியாகப் பல பிறவிகளில் நின்று கழிக்கப்படுகிறது. மல பரிபாகம் நடைபெறுகின்றது.

இயற்கையாய் அருள் உயிர்களிடத்தில் பதிக்கப்படு கின்றது. மயக்கம் நீங்குகின்றது. வினைகள் வெருண்டோடுகின்றன. அஞ்ஞான இருள் அகலுகின்றது. ஒப்பற்ற அருட்சக்தியின் உணர்வு உள்ளத்தில் பதிகின்றது.

**''மருட்டிப் புணர்ந்து மயக்கமும் நீக்கி**
**வெருட்டி வினைஅறுத் தின்பம் விளைத்துக்**
**குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி**
**அருட்டிகழ் ஞான மதுபுரிந் தாளே''.** **(திருமந்திரம் - 1498)**

திருமூலர் பெருமான் கூறுகின்றார்: இமய மலையில் தோன்றி வளர்ந்த மலைமகள் அருளால் உலகை ஆளுகின்றாள். உயிர்களுடன் மலங்களைச் சேர்த்து, வினைகளைச் செய்வித்து, பின்னர் வினைகளையும், மலங்களையும் நீக்குவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கி உயிர்களுக்குப் பக்குவத்தை அளித்து, உண்ணின்று உருக்கி, ஒப்பிலா கண்ணின்று காட்டி, அருட்கண்ணை விழிக்கச் செய்து உயிர்களுக்குப் பெரும் பேற்றினை அளிக்கின்றாள். அவளுடைய அருட்சக்தி பிறப்பை அறுக்கும். சிறந்த தவமாகிய ஆன்மிகத்தை நல்கும். காரைக்கால் அம்மையார் இறைவனைச் சந்தித்த போது தனக்குப்பிறவாமை வேண்டும் என்றும், பிறப்பு உண்டேல் உன்னை மறவாமை வேண்டும் என்றும் கேட்கிறார். மறவாமல் இருப்பதே ஒரு பெரும் பேறு. அதைச் செய்விப்பதும் அன்னையினுடைய அருட்சக்தியாகும். பரம்பொருளை வழிபடத் தேவையான மனநிலையையும் உயிர்களுக்கு அந்த அருட்சக்தி அளிக்கின்றது. எனவே, இவற்றையெல்லாம் மனதில் வைத்து அந்த அருட்சக்தியை மேலும் மேலும் வழிபட வேண்டும் என்று திருமூலர் கேட்டுக் கொள்கின்றார்.

**''பிறப்பை அறுக்கும்; பெருந்தவம் நல்கும்;**
**மறப்பை அறுக்கும்; வழிபட வைக்கும்;**
**குறப்பெண் குவிமுலை கோமள வல்லி**
**சிறப்பொடு பூசனை செய்யநின் றார்க்கே'' (திருமந்திரம் - 1504)**

இதை ஏற்போம். அதன் வழி நடப்போம். ஊனடைந்த உடம்பின் பிறவி தானடைந்த உறுதியைச் சார, மான் நயனங்கள் கொண்ட அன்னையின் பொற்றாள்கள் என்றென்றும் தொழுவோம்.



# 7. "அன்னம் இரண்டு உள"

விஞ்ஞான அறிவு வெகு வேகமாக வளர்ந்து வருகிறது. பொருட்களின் உற்பத்தியை வளர்ப்பதற்காகவே இந்த விஞ்ஞான அறிவு பயன்படுத்தப்படுகிறது. அறிவு வளர வளர மக்களுடைய தேவைகளும் பெருகி வருகின்றன. வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமென்பது எல்லோருடைய குறிக்கோளுமாய் இருக்கின்றது. தேவைகளைப் பெருக்கி அவற்றை நிறைவேற்றிக் கொள்வதே பொருளாதார வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டு என்கின்ற அளவுக்கு ஒரு தவறான எண்ணம் நம்முடைய உள்ளத்திலே ஆழமாகப் பதிந்து விட்டது. ஒரு நிலையில் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் மன நிறைவு பெறும் வகையில் அமைந்தால் அதுவே போதுமென்று மக்கள் கருதினர். ஆனால், இப்பொழுது தேவைகளின் வளர்ச்சி மனிதனுடைய பொருளாதார நிலையை நிர்ணயிக்கும் அளவுக்கு நம்முடைய பண்புகளும் எண்ணங்களும் மாறிவிட்டன. ஒரு குடும்பத்தை எடுத்துக் கொள்ளலாம். கணவன் வேலை செய்து சம்பாதிக்கின்றான். மனைவி வீட்டைப் பார்த்துக் கொள்கின்றாள். குழந்தைகளின் வளர்ச்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கின்றாள். இருவரும் குடும்பத்தில் ஒரு எளிய வாழ்க்கையை நடத்தி இன்பம் பெறுவதே போதும் என்று நினைக்கும்வரை கவலையில்லாமல் இருக்கின்றார்கள். ஆனால், விஞ்ஞான அறிவின் வளர்ச்சி, தேவையில்லாப் பொருட்களின் உற்பத்திப் பெருக்கம் போன்றவை அவர்களுடைய கவனத்தைக் கவர ஆரம்பிக்கின்றன. முதலில் ஒரு வானொலிப் பெட்டி தேவைப்படுகின்றது. அடுத்து ஒரு தொலைக்காட்சிப் பெட்டி வேண்டும். பின்னர் அது ஒரு நல்ல வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியாக இருக்க வேண்டும் என்கிற ஆசை எழுகின்றது. மேலும் மேலும் புதிய நவீன சாதனங்கள் தேவைப்படுகின்றன. அவற்றைப் பெற முடியவில்லையென்றால் மனக் குறைவு ஏற்படுகின்றது. வசதி படைத்தவர்களைப் பார்க்கும்பொழுது பொறாமை ஏற்படுகிறது. வாழ்க்கையிலே அமைதி குன்றுகிறது. தவறான வழிகளைக் கடைப்பிடித்து நம்முடைய ஆசைகளையெல்லாம் நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமென்று ஒரு வேகம் உள்ளத்திலே தோன்றுகிறது. ஒரு காலத்தில் வசதிகளைப் பெறுவதைவிட அவற்றை எந்த வழியிலே பெறுகின்றோம் என்பது முக்கியமாக இருந்தது. இப்பொழுதெல்லாம் எப்படியாயினும் வசதிகளைப்

பெற வேண்டும் என்கின்ற எண்ணம் ஓங்கி நிற்பதால் நாம் கடைப்பிடிக்கும் நெறிகள் நமக்கு முக்கியமாகத் தோன்றவில்லை. இது ஒரு ஆழ்ந்த வேதனையைக் கொடுக்கும் நிலையாகும். என்னே மாயையின் கீழ்மை!

நாம் படும் பாடெல்லாம் இந்த உடலுக்காகத்தானே. ஆனால் நாம் இதை அறிந்து கொள்வதில்லை. உடலைப் பேணிப்பேணி, உடலின் வனப்பையும் பொலிவையும் கண்டு மற்றவர் வியப்படைய வேண்டுமென்கின்ற ஒரே கொள்கையுடன் வாழ்நாள் முழுவதையும் கழித்து விடுகின்றோம். விஞ்ஞான அறிவு உடலுக்கும் புறப்பொருள்களுக்கும் முதன்மையைக் கொடுக்கின்றது. விஞ்ஞான வளர்ச்சியிலே பங்கு எடுக்கும் நாமும் உடலின் இயக்கத்திலேயே மூழ்கி விடுகின்றோமேயொழிய அந்த இயக்கத்தின் காரணம் எது என்பதைப் பற்றித் தெரிந்து கொள்ள முற்படுவது இல்லை. அத்தகைய காரணம் என்று ஒன்று இருக்கின்றதா என்று விஞ்ஞானம் கேட்கும் கேள்விக்குச் சரியான விடையைக் கண்டு கொள்ளும் முயற்சியிலும் நம்மை ஈடுபடுத்திக் கொள்வதில்லை. **''கெட்டேன் இம்மாயையின் கீழ்மை எவ்வாறே''** என்று திருமூல நாயனார் அன்று சொன்னது இன்றும் பொருந்தும்.

உடலெனும் பை நிலையற்றது. இதைத் திருமூலர் பெருமான் மாயப்பை என்று அழைக்கிறார். அன்னரசம், இரத்தம், ஊன், கொழுப்பு, எலும்பு, மச்சை ஆகியவற்றின் தாதுப்பொருள்களின் கலப்பே உடலாகும். இத்தகைய உடம்பானது தூலம், சூக்குமம் என இரு வகைப்படும் சூட்சும உடலானது ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் எனப்படும் ஐந்து தன்மாத்திரைகளையும், புத்தி, மனம், ஆங்காரம் எனும் உட்கரணங்களையும் கொண்டதாகும். இந்த உடலுக்குள்ளே ஐம்பொறிகள், ஐந்து ஞான இந்திரியங்கள் ஐந்து தன்மாத்திரைகள், பத்து வாயுக்கள், பத்து நாடிகள், மூன்று குணங்கள் போன்றவை தங்கி நிற்கின்றன. மேலும் இவ்வுடலானது ஐந்துவிதக் கூறுகளால் ஆனது. அவற்றைக் கோசங்கள் என்று பெயரிட்டுள்ளனர். உணவால் ஆன கோசம், உயிர்ப்பால் ஆன கோசம், மனத்தால் ஆன கோசம், அறிவால் ஆன கோசம், ஆனந்தத்தால் ஆன கோசம் என்று ஐந்து கோசங்கள் இருக்கின்றன. இவையெல்லாம் சூக்கும உடலின் பகுதிகளேயாகும். ஆயினும், இவைகள் சடப்பொருள்களே. தானாகவே இயங்குவதில்லை. வேறொரு சக்தி இவற்றை இயக்கினால்தான் இவை இயங்கும். ஆனால், நாம் சடமாகிய உடம்பு தானாகவே செயல்படுகிறது என்று நம்புகின்றோம். உண்மையில் உடல் தானாக இயங்காது. இதை நாம் நம்முடைய அன்றாட வாழ்க்கையில் உணர்ந்து கொள்வதில்லை. உடலை இயக்குவது உயிரேயாகும். உயிருக்கே இந்தச் சக்தி உண்டு. ஆனால், உயிரானது தானாக இயங்குவதில்லை. வேறொரு சக்தியால் இயக்கப்படாத வரை உயிர் தானாகவே கிடக்கும் உயிரினுள் நின்று கொண்டு, உயிருக்கு உயிராகக் கலந்து உயிரை நடத்திச் செல்வது இறைவன் ஆகும். எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனே உயிரோடு உயிராகக் கலந்து நின்று உடலுக்குள்

இயங்குகின்றான். உடலை விட்டு உயிர் பிரிந்தால் உடல் மண்ணாகிறது. உயிர் பிரிந்தது என்றால் இறைவன் அந்த உடலிலும் உயிரிலும் குடிகொள்ளவில்லை என்பதே பொருளாகும்.

**"உடம்புக்கும் நாலுக்கும் உயிராய சீவன்**
**ஒடுங்கும் பரனோ டொழியாப் பிரமங்**
**கடந்தொறு நின்ற கணக்கது காட்டி**
**அடங்கியே அற்றது ஆரறி வாரே".** **(திருமந்திரம் - 2128)**

நம்மைச் சுற்றி எண்ணற்ற சீவராசிக்களைக் காண்கின்றோம். இன்று இருப்பவை நாளை இருப்பதில்லை. தோன்றுபவை மறைவது இயற்கையாக இருக்கின்றது. உடல் நிலைப்பதில்லை. உடலைப் பயன்படுத்தி நாம் தேடிப் பெறும் செல்வமும் நிலைப்பதில்லை. உடலின் இளமை நிலைப்பதில்லை. உடலுக்குள் இருக்கும் உயிரும் அங்கு நிலையாகத் தங்குவது இல்லை. உடலிலிருந்து உயிர் பிரிந்தவுடனேயே பிணம் என்று பெயரிட்டு சற்றும் தாமதியாமல் அதற்கு தீ முட்டி விடுகின்றோம். ஒருநாள் அழுது விட்டு மறுநாள் மறந்து விடுகிறோம். இதுதான் உடலின் வரலாறு. பின்வரும் திருமந்திரம் மனத்திலே வைத்துக்கொள்ளத்தக்கது:

**"ஊரெலாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப் பேரினை**
**நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்**
**சூரையங் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு**
**நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே".**

**(திருமந்திரம் - 145)**

உடல் ஒரு குடிசையைப் போன்றது. மூங்கில்களால் கட்டப்பட்டிருக்கின்றது. எலும்பே மூங்கில். அதற்குள்ளே உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. உடலாகிய வீடுதான் நமக்கு முக்கியமாகத் தோன்றுகிறது. உயிரைப் பற்றி நாம் கவலைப்படுவதில்லை. அந்த வீட்டைப் பெரிதாக்க வேண்டுமென்று, அந்த வீட்டின் கூரை வழியாகப் பலவிதப் பண்டங்களைப் பெய்து உடலைப் பேணுகின்றோம், வளர்க்கின்றோம். உயிர்தான் அந்த உடலாகிய வீட்டிற்குச் சொந்தக்காரன். மனைவி, மக்கள், சுற்றம் என்று நிறையப் பேர்கள் உண்டு. அவர்களை அவன் மனதார நேசிக்கின்றான். அவர்களும் அவனை நம்பி வாழ்கின்றார்கள். அவனுடைய செல்வத்தை வைத்துக் கொண்டு அவர்கள் வாழ்கின்றார்கள். ஆனால், இந்த ஆசையும், பாசமும், நேசமும் உடலாகிய வீடு நிற்கும் வரைதான். நாளாக நாளாக அந்த வீடு பழுதடைகின்றது. ஒருநாள் கூரை சரிகின்றது. வீடும் விழுந்து விடுகின்றது. உடனேயே மனைவியும், மக்களும், சுற்றமும் விலகிக் கொள்கின்றனர். அந்த வீட்டுச் சொந்தக்காரன் செல்லுமிடத்திற்கு அவர்கள் செல்லுவது இல்லை. அவனுடன் பின்தொடர்ந்து செல்வது மனைவியும்,

மக்களுமல்லர். அவன் கொண்ட விரதமும், ஞானமுமே அவனுக்கு உறுதுணையாக அவனுடன் பின்செல்லும்.

**''பண்டம் பெய்கூரை பழகி விழுந்தக்கால்**
**உண்டஅப் பெண்டிரும் மக்களும் பின்செலார்**
**கொண்ட விரதமும் ஞானமும் அல்லது**
**மண்டி அவருடன் வழிநட வாதே''.** (திருமந்திரம் - 144)

உயிருள்ள வரை பெண்டிரும், மக்களும், சுற்றமும் இல்லத் தலைவனை நாடி, அவனைப் போற்றி, அவனுடைய நிழலில் வாழ்ந்து, அவனுடைய பெருமையால் தாங்களும் பெருமையடைந்து, அவனுடைய செல்வத்தில் திளைத்து, அவனிடமிருந்து பல்வேறு பலன்களைப் பெற்றும் வாழ்வார்கள். ஒருநாள் உயிர் பிரிகின்றது. அந்த உடலிலிருந்து அவர்கள் மேலும் பயன் ஒன்றும் பெறப்போவதில்லை. படுவிரைவாக அதை எடுத்துக் கொண்டு போய் ஊருக்கு வெளியே உள்ள மயானத்தில் இறக்கி, அதற்குத் தீயினை மூட்டி, உடலைத் தூக்கி வந்த களைப்புத் தீர அருகிலுள்ள ஆற்றில் தலைமுழுகிச் செல்வர். உள்ளளவு நமக்குப் பயனுள்ளவனாக இருந்தானே என்று உண்மையில் வருத்தப்படுகின்றார்களா? இல்லையே! நீதியில்லாத மக்கள்!

**''ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரும் மக்களும்**
**ஊர்த்துறைக் காலே ஒழிவர் ஒழிந்தபின்**
**வேர்த்தலை போக்கி விறகிட் டெரிமூட்டி**
**நீர்த்தலை மூழ்குவர் நீதியி லோரே''.** (திருமந்திரம் - 157)

மண்ணாலாகிய குடம் எல்லோருக்கும் பயன்படுகிறது. பின்னர்க் குடம் உடைந்து விடுகின்றது. உடைந்து விட்டாலும் உடைந்த குடம் மக்களுக்குத் தொடர்ந்து பயன்படுகிறது. எப்படி? உடைந்த குடத்திலிருந்து கிடைக்கும் ஓடு எப்போதாவது தேவைப்படும் என்று மக்கள் சேகரித்து வைப்பார்கள். உடல் ஒரு குடம். உயிர் அதற்குள் வாழ்கிறது. ஒருநாள் உயிர் உடலை விட்டுப் புறப்பட்டு விடுகிறது. உடலால் இனிமேல் ஒரு பயனும் இல்லை. உடலிலிருந்து துர்நாற்றம் வீசத் தொடங்குகிறது. அதற்கு மேலும் நமது உறவினர்கள் நமது உடலைப் பாதுகாக்கப் போகின்றார்களா என்ன? இல்லையே! ஒரு போதும் உடலை வைக்க மாட்டார்கள். இந்த உடலைத்தான் பேணி வளர்ப்பதில் நம் வாழ்நாளையெல்லாம் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். என்ன மடத்தனம்!

''.... .... ...
.... .... ...
**குடமுடைந்தக் கால்அவை ஓடென்று வைப்பர்**
**உடலுடைந் தால் இறைப் போதும் வையாரே''.**
(திருமந்திரம் - 158)

திருமந்திரத்தில் உடலின் நிலையாமையைப் பற்றித் திருமூலர் பெருமான் பல மந்திரங்களில் அழகாகச் சித்திரித்துக் காட்டுகின்றார். நாட்டுக்குத் தலைமகன் ஒருவனைப் பற்றிப் பேசுகின்றார். இவர் நம்ம ஊர் நாயகன். கொடி கட்டிப் பறந்த வாழ்க்கையை நடத்தினவர். ஒரு நாள் உயிர் பிரிகின்றது. ஊர் மக்கள் அவருடைய உடலைச் சிறந்த முறையிலே அடக்கம் செய்கின்றனர். மிகப்பெரிய ஊர்வலம். ஊர்வலத்திற்கு முன்னே பலவிதப் பறைகளைக் கொட்டிக் கொண்டு வாத்தியக்காரர்கள் செல்கின்றார்கள். பின்னே அந்த ஊர் கடைமுறை நாட்டார்கள் வழிநடந்து செல்கின்றார்கள். இவ்வாறு நாட்டுக்கு நம்பியாக இருந்த ஒருவர் சுடுகாடு போகும் காட்சியை மக்கள் பார்த்து அவரைப் பற்றிப் பேசிக் கொள்கின்றனர். ஆனால் எவ்வளவு நாட்கள் இது நீடிக்கும்? அவரைப் பற்றிய நினைப்பானது நொடிப்பொழுதிலே கழிந்து ஓடி விடும். இறந்த தலைவருக்குப் புகழாரம் சூட்டிப் பலர் பேசுகின்றார்கள். அதே நேரத்தில் அவரை வெறுத்தவர்கள் சிலர் இருக்கின்றார்கள். அவரைப் பற்றிக் குறையாகப் பேசுகின்றார்கள். உயிர் உடலை விட்டுப் பிரிந்த பின்னர் உடல் இவற்றையெல்லாம் செவிசாய்த்துக் கேட்கப் போகிறதா? காக்கை கவர்ந்து கொண்டால் என்ன? கண்டவர்கள் பழித்தால் என்ன? உடலின் வாயில் பாலூற்றிப் போற்றினால் என்ன? இவையெல்லாமே தேவையற்றன அல்லவா? அந்தத் தலைவருடைய உள்ளத்திலே வாழ்ந்திருந்த உயிர் தன் பணிகளையெல்லாம் முடித்துக் கொண்டு, புறப்பட்டுப் போன பிறகு எஞ்சியிருப்பது கட்டை ஏற வேண்டிய சடப்பொருள்தானே!

**"காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென்**
**பாற்றுளி பெய்யிலென் பல்லோர் பழிச்சிலென்**
**தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டுங்**
**கூத்தன் புறப்பட்டுப் போனதிக் கூட்டையே".**

**(திருமந்திரம் 167)**

உடலைப் போல செல்வமும் நிலையற்றது. இங்கே குறிக்கப்படுவது பொருட் செல்வமாகும். பதவியும், அந்தஸ்தும், படையும் பொருட் குவியலும் நிலையற்றவை. அவை வரும், சேரும், தேயும், மறையும். எங்கிருந்து வந்தது, எங்கு போகும் என்று சொல்வதிற்கில்லை. பொருட்செல்வம் உடலைப் பற்றி நிற்கும். உடல் இயக்கம் நின்றதும் அதுவும் விலகும். மலர்கள் தோறும் சென்ற தேனீக்கள் தேனை நுகர்ந்து, மரத்தின் கொம்பில் கூடு கட்டிக் கண்ணும் கருத்துமாய்த் தேனைச் சேர்க்கின்றன. பல நூற்றுக்கணக்கான தேனீக்கள் கூட்டைச் சுற்றி ரீங்காரம் செய்து, தாங்கள் ஈட்டிய செல்வத்தைப் பற்றிப் பெருமையடைகின்றன. அந்தோ! ஒருநாள் தேன் கூட்டைத் தேடி வந்த மக்கள் தீ மூட்டி, தேனீக்களை ஓட்டி விடுகின்றனர். கூட்டை உடைத்து, தேனைப் பறித்துக் கொள்கின்றனர். வாழ்நாள் முழுவதும் உழைத்துத் தேடிச் சம்பாதித்த தேனைத் தேனீக்கள்

கைவிட்டவாறு பறந்து செல்ல நேரிடுகின்றது. அது போலவே, ஒருவனுடைய செல்வமானது வாழ்நாள் முழுவதும் அவனைத்தான் சேரும் என்று சொல்வதிற்கில்லை. அதை அவனிடமிருந்து பறித்துக் கொண்டு போகப் பலர் காத்துக் கொண்டிருக்கின்றனர். ஒருவன் உயிருள்ளபோதே தான் ஈட்டிய செல்வத்தை நழுவ விடுவதும் அன்றாட நிகழ்ச்சியாகின்றது. இந்தச் செல்வத்திற்கா நாம் இவ்வளவு பாடுபட வேண்டும்.

**''ஈட்டிய தேன்பூ மணங்கண் டிரதமும்**
**கூட்டிக் கொணர்ந்தொரு கொம்பிடை வைத்திடும்**
**ஓட்டித் துரந்திட் டதுவலி யார்கொளக்**
**காட்டிக் கொடுத்தது கைவிட்ட வாறே''.** **(திருமந்திரம் - 171)**

குழந்தை பிறந்து கால ஓட்டத்தில் இளமைப் பருவத்தை அடைகின்றது. இளமைத் துடிப்பு உள்ளத்தை ஊக்குவிக்கிறது. இதிலும் எல்லாவற்றிலும் இனிமையையும், பசுமையையும் காணும் கண்களை இளமை நிரம்பிய ஆண் மகன் பெறுகின்றான். நம்முடைய ஒரே விருப்பமெல்லாம் என்றும் குன்றாத இளமையோடு இருக்க வேண்டும் என்பதுதான். துடிப்பான பருவமது. ஆற்றல் மிகுந்த காலம். சிந்தனையும், கற்பனையும், உடல் வலிமையும், மற்ற திறன்களும் உச்சக் கட்டத்தில் இருக்கும் நேரம். மெல்லியல் மாதர் கருப்பம் சாற்றைப்போல் விரும்பும் வனப்பு பொருந்திய உடல் எல்லா வகையிலும் விரும்பத்தக்கவாறு அமைந்திருக்கும் காலம். எவ்வளவு ஆண்டுகளானாலும் இளமை நீடித்து இருக்க வேண்டுமென்பதே நம்மில் பலர் பெறும் ஆசையும் ஆகும். ஆனால், பிறந்த குழந்தை பாலகனாகி, இளைஞனாகும் போது சில ஆண்டுகள் கழித்து எிருத்தனும் ஆக வேண்டியதுதானே. காலை எழுகிறது, கழிகிறது. பகல் இரவாகிறது. கிழக்கே உதிக்கும் சூரியன், உலகிற்கெல்லாம் ஒளியூட்டி மாலையில் வானில் மேற்கே சென்று மறைகின்றது. இன்று துள்ளி விளையாடும் இளங்கன்று நாளை எருதாகிச் சில நாளில் முதுமையடைந்து விடுகின்றது. ஒருக்காலும் மக்கள் இதை அறிவதில்லையே. இளமையில் நிலையாமையை உணர மாட்டாரே.

**''கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே**
**விழக்கண்டுந் தேறார் விழியிலா மாந்தர்**
**குழக்கன்று மூத்தெரு தாய்ச்சில நாளில்**
**விழக்கண்டுந் தேறார் வியனுல கோரே''.** **(திருமந்திரம் - 177)**

ஆகவே, தோன்றி மறையும் பொருள்கள் எல்லாம் நிலையற்றவை என்பதை முதலில் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். நிலையற்றவற்றை நிலையானவை என்று நினைத்துத் தவறு செய்யக் கூடாது. உடல் போன்றவையெல்லாம் சடப்பொருள்கள். தோன்றி மறையும் இயல்பைப் பெற்றவை. அந்த இயல்பு அவைகளுக்குத் தானாகவே வந்த இயல்பு அன்று. உடலையும், கருவிகளையும் உயிருக்குக் கொடுத்து உயிரானது எல்லாவிதமான அனுபவங்களையும் வினைக்கேற்பப் பெற்றுக் கொள்ள

வேண்டும் என்பது இறைவனுடைய திருவருள் செய்கையாகும். உடலுக்கும் உயிருக்கும் உள்ள வேற்றுமைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். கட்டிக்காக்க வேண்டியது உயிர் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். உயிர் தானாகவே இயங்குவதில்லை என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். ஆட்டுபவன் ஒருவன் ஆட்டுவதால்தான் உயிர் ஆடுகின்றது என்பதே அடிப்படை உண்மையாகும். பரம்பொருள் இந்தப் பணியை ஐந்தொழில்கள் என்கின்ற வகையில் செய்கின்றது. இதைத் தெரிந்து கொள்ளாமல் நில்லா உடலை நிலை என்று கற்பனை செய்து நமது வாழ்க்கையை நடத்திச் செல்வது அறிவின்மையாகும். முதல்வனே எல்லா உயிர்களிடமும் உயிருக்கு உயிராக நிற்கின்றான் என்பது அறிவாகும். இதை உணராதவர்கள் கல்லாதார் ஆவார்கள். நாம் பல துறைகளிலே அறிவு பெற்றிருக்கலாம். ஆனால், நாம் இந்த அடிப்படைத் துறையிலே கல்வி பெறாதவரை நாம் எல்லோரும் கல்லாத மூடர்கள்தான். கல்லாமை என்பதும், அறியாமை என்பதும் இறைவனுடைய திரோதான சக்தி வழியாக உயிர்களாகிய நம்மையெல்லாம் ஆட்டி வைக்கின்றது. இறைவனைக் காணும் முயற்சியில் நாம் நம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென்றால், முதற்கட்டமாக நிலையாமையைப் பற்றி உணர்ந்து கொள்ள வேண்டும்.

**"நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து**
**நில்லாக்குரம்பை நிலையென் றுணர்வீர்காள்**
**எல்லா வுயிர்க்கும் இறைவனே யாயினுங்**
**கல்லாதார் நெஞ்சத்துக் காணவொண் ணாதே".**

**(திருமந்திரம் - 312)**

அதே நேரத்தில் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது வேறொன்றும் இருக்கிறது. திருவருளால் நமது உயிர் பெற்றிருக்கும் இந்தப் பிறவி நல்ல முறையிலே பயன்படுத்தப்பட வேண்டும். முற்பிறவியிலே நாம் செய்த வினைகளின் பயனை இப்பிறவியிலே நாம் அனுபவிக்க வேண்டியவர்கள் என்பது ஒன்று. அத்துடன் திருவருளால் நாம் பெற்றிருக்கக்கூடிய அறிவினைக் கொண்டு, நல்ல கல்வியைப் பெற்று இறைவனுடைய திருவடிகளைப் போற்றி, வாழ்த்தி ஆன்மிக வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதும் நம்முடைய நேரத்தையும், ஆற்றலையும் பயன்படுத்த வேண்டும் என்பதும் திருவருளின் நியதியாக இருக்க வேண்டும். இதற்கு மாறாகப் பொய்ம்மையிலும், வாது செய்வதிலும், சூதிலும் நேரத்தை வீணடிப்பது இறைவன் நமக்குத் தந்திருக்கின்ற குறிக்கோளுக்கு எதிரே செல்வதாகும. செல்வத்தை அடைய விரும்பிப் பல தவறான வழிகளிலே செல்வதால் நாம் செய்யும் வினைகள் நமக்கு வரப்போகும் பல பிறவிகளில் துன்பத்தையும், வருத்தத்தையும் கொடுக்கப்போகின்றன. பொய்ம்மையைப் பெருக்கி, பொழுதினைச் சுருக்கி, பண்பற்ற வாழ்வினைக் கடைப்பிடித்து அன்பற்ற முறையில், தான் என்ற முனைப்பில் தற்போது மையத்தில் நின்று, அறிவிலாச் செயல்களைப் புரிந்து கொண்டு வருவதன் மூலம் நம்மை

நெருங்கி வரும் திருவருளை உதறித் தள்ளும் ஒரு நிலையை நமக்கு நாமே தொடர்ந்து செய்து வருகின்றோம். காலம் உருண்டோடிச் செல்கின்றது. போது சடக்கென்று போகிறது. இறைவன்தாள் பணிவதே எப்போதும் பயனுள்ளதாக அமையும் என்று நாம் அறிந்து கொள்ளவில்லை.

**"போது சடக்கெனப் போகின் றதுகண்டும்**
**வாதுசெய் தென்னோ மனிதர் பெறுவது**
**நீதியு ளேநின்று நின்மலன் தாள்பணிந்**
**தாதியை அன்பில் அறியகில் லார்களே". (திருமந்திரம் - 2085)**

உடலுக்கும் உயிருக்கும் உள்ள வேற்றுமையை உணர்ந்து கொள்வது முதற்கட்டமாகும். நமது உடலுக்குள் உயிர் என்று ஒன்று இருக்கின்றது என்று தெரிந்து கொள்ளும் அதே நேரத்தில் உயிரைப் பற்றியும் நாம் தெரிந்து கொண்டால்தான் உடலுக்கும் உயிருக்கும் உள்ள வேற்றுமையை நன்கு உணர்ந்து கொள்ள முடியும். உயிர் ஓர் அறிவுப்பொருள். இறைவனும் அறிவுப்பொருள்தான். ஆனால், இறைவன் எல்லையற்ற அறிவுப்பொருள். உயிரின் அறிவுக்கு எல்லை உண்டு. உயிர் தனது அறிவாற்றலையும் உடலையும். உடலைச் சார்ந்த கருவிகளையும் பயன்படுத்தி வெளிப்படுத்துகிறது. இரண்டாவதாக, உயிர் ஓர் பளிங்குபோல. தான் சார்ந்திருக்கும் பொருளின் தன்மையைத் தானும் பெறுகிறது. இறை உணர்வு பெறும் பொழுது இறைத் தன்மையையும், உடலுடைய கருவிகளைப் பயன்படுத்தும்போது அவற்றின் மூலமாகப் பெறும் அறிவின் தன்மையையும் சார்ந்தவண்ணம் பெறுகிறது. உடலுடன் சேர்ந்து, உடலின் தன்மையைப் பெற்று, அவ்வுடலைத் தானெனப் பாவித்து, அவ்வுடல் வழியாக இன்ப துன்பங்களை அனுபவித்து, பிறவித் தொழிலிலே மீண்டும் மீண்டும் உழன்று வரும்போது தனது முன்னம் வினைகளைப் படிப்படியாகத் தீர்த்துக் கொள்கின்றது. இந்த முயற்சியிலே உயிர் சற்று அறிவு விளக்கம் பெறுகின்றது. உயிர் கருவி கரணங்களோடு சேர்ந்து இயங்குகிறது. உயிருக்கு இது சகல நிலையாகும். தன் உண்மையைச் சிறப்பாகக் காணாத நிலையில் உயிர் இயங்குவதால் இது ஒரு மாற்று நிலையாகும். உயிர் இறைவனுடன் சேர்ந்து நிற்பதே அதனுடைய இயல்பான நிலை. தான் செய்த வினைகள் காரணமாக உயிர் ஒரு அறியாமை நிலையில் நின்று உடலின் கருவிகள் மூலமாகக் கிடைக்கும் விளக்கத்தையே முடிவான விளக்கம் என்று நினைத்து, ஒரு அறியாமை நிலையில் வாழ்கின்றது. இந்தவொரு விபரீதமான நிலையிலிருந்து உயிர் தன்னை விலக்கிக் கொள்ள வேண்டும். ஆனால், இது எளிதில் நடப்பதல்ல. உயிர் உடலுடன் பாசத்தால் கட்டுண்ட நிலையில் இறைவனுடைய ஒப்பற்ற அருளும் கருணையும் உயிரின் மீது பொழிந்தாலும், தன்னுள் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் உள்ளொளியை உயிர் இயல்பாகத் தெரிந்து கொள்வதில்லை. இருளில் தன்னைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருப்பது அதனுடைய அறியாமையே ஆகும். இறைவன் தன்னுள் எரியும் அணையா விளக்கினைத் தூண்டிக் கொள்வதற்கு வாய்ப்பினைக்

கொடுக்கும் வகையில் பெரும் கருணையுடன், உடலில் தங்கும் நாட்களின் கணக்கை நீட்டிக் கொடுக்கின்றார். ஆயினும், உயிர் அக்கருணையை உணர்ந்து கொள்வதில்லை.

**"ஆண்டு பலவுங் கழிந்தன அப்பனைப்**
**பூண்டுகொண் டாரும் புகுந்தறி வார்இல்லை**
**நீண்டன காலங்கள் நீண்டு கொடுக்கினுந்**
**தூண்டு விளக்கின் சுடரறி யாரே".** **(திருமந்திரம் - 178)**

ஆகவே, உயிரானது உடலுடன் சேர்ந்து இருக்கும்பொழுதே இப்பிறவியின் பயனைப் பெற முயல வேண்டும். இதைத் தீவிரமாகச் சிந்தித்தால் மனத்திலே தெளிவு ஏற்படும். உயிருக்குயிராக உள்ள இறைவனை நாட வேண்டுமென்கின்ற பற்று ஏற்படும். இறக்கும்போதும் இறைவனைப் பற்றிய எண்ணம் இயற்கையாக மனத்தில் தோன்றி மனத்தில் நிலைத்து நிற்கும். பறந்து செல்லும் உயிரும் பிறவியின் பயனைச் சிறப்பாகவே பெறும். தெளிவு ஏற்பட்ட பின்னர் மனத்தில் கலக்கம் ஏற்படாது. பொருட்செல்வம் வந்தாலும் போனாலும் மனம் பதட்டப்படாது. அச்சமின்றி, கவலையின்றி இறைவனடி சார்ந்து வாழும் வாய்ப்புக் கிட்டும். இயற்கை எய்தும் போது குதித்து மகிழலாம்.

**"பறக்கின்ற வொன்று பயனுற வேண்டின்**
**இறக்கின்ற காலத்தும் ஈசனை யுள்குஞ்**
**சிறப்பொடு சேருஞ் சிவகதி பின்னைப்**
**பிறப்பொன் றிலாமையும் பேருல காமே". (திருமந்திரம் - 2108)**

உடல் என்பது சடப்பொருள். அது உயிராகிய அறிவுப் பொருளின் முயற்சியால் இயங்குகின்றது. அந்த முயற்சிக்குக் காரணமாக இருப்பவன் இறைவன். இறைவன் உயிருக்கு உயிராக, வேறாக, உயிருக்கு அப்பாலாய் நின்று கொண்டு, உயிரை இயக்குகின்றான். இறைவனைப் போலவே உயிரும் அநாதி. உயிர்கள் பல. உடலோடு கூடிய நிலையில் உயிரானது சற்று அறிவு விளக்கம் பெற்றுத் தனது பழைய நிலைகளின் பயனை அனுபவிக்கின்றது. அப்படிச் செய்யும் பொழுது புதிய வினைகளை உருவாக்குகின்றது. அவற்றின் பயன்களை வரப்போகும் பல்வேறு பிறவிகளில் அனுபவிக்கப்போகின்றது. இவ்வாறு இறப்பிலும் பிறப்பிலும் அறியாமையால் உந்தப்பட்டு உயிர் தனது வினைக்கூட்டத்தை அதிகரித்துக்கொண்டே போகிறது. இந்த அறியாமை நிலையில் உயிர் உடலைத் தானென்று பாவிக்கின்றது. இறைவனைத் தெரிந்து கொள்வதில்லை.

இறைவன், உயிர், உயிரைக் கட்டுப்படுத்தும் பாசம் ஆகியவற்றைப் பற்றிச் சுவேதாசுவர உபநிடதம் ஒரு கதையைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

''இணைபிரியா நண்பர்களான அழகிய சிறகுகளையுடைய இரு பறவைகள் ஒரே மரத்தில் வீற்றிருக்கின்றன. அவற்றுள் ஒன்று மரத்தின் பழங்களைச் சுவைத்து உண்கிறது. மற்றொன்று உண்ணாமல் பார்த்துக் கொண்டிருக்கிறது.''

மேலும் இவ்வுபநிடதம் இதனைப் பற்றிக் கூறுவதாவது:

''அந்த மரத்திலேயே அமர்ந்துள்ள ஜீவாத்மப் பறவை தளையுற்றுத் தன் இறைத்தன்மையை மறந்து மயங்கித் துன்புறுகிறது. அனைத்திற்கும் இறைவனாவதும் வணங்கப்படுவதுமான மற்றதைப் பார்த்துப் பெருமையனைத்தும் அதனுடையது என்பதை உணர்ந்தும் துன்பத்தினின்றும் விடுபடுகின்றது.''

திருமூலர் பெருமான் திருமந்திர மாலையில் இதேபோன்ற கதை ஒன்றைச் சொல்லி இறைவன், உயிர் ஆகியவற்றின் இடையேயுள்ள உறவு முறையை அழகாக விளக்குகின்றார்.

இரண்டு அன்னங்கள் இருக்கின்றன. இரண்டும் ஒன்றையொன்று ஆழமாக நேசிக்கின்றன. ஒன்றைவிட்டு ஒன்று பிரியாது. ஒன்று சீவன். மற்றொன்று சிவன். சிவனாகிய அன்னம் தான் வேறுபட்டது என்கிற உணர்வில் இருக்கும்பொழுது சிவத்தின் நிலையை அடையாது. ஆற்றங்கரை என்பது ஆற்று நீர். இரண்டு அன்னங்களும் ஆற்று நீரில் வாழ்கின்றன. சீவனாகிய அன்னம் நீரில் ஆனந்தமாய் நீந்தி அங்கும் இங்கும் சென்று மீண் போன்ற இரைகளைக் கவர்ந்து உண்கிறது. தன் செயலால் இன்பம், துன்பம் இரண்டினையும் நுகர்கிறது. சிவன் என்னும் மீன் நீரில் இருந்தாலும், உப்பு நீரில் வாழும் மீனின் உடலில் உப்பு ஏறாதது போல், தான் தானாய் இருந்து கொண்டு, எதனையும் நுகராமல், சீவ அன்னத்தின் செயல்களை சாட்சி மாத்திரையாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றது. சீவ அன்னத்திற்கு அருளால் பாதுகாப்பாக இருந்து விடுகிறது. சிவ அன்னத்திற்கு ஆற்று நீரின் நிலையாமை தெரியும். சீவ அன்னமோ நிலையற்ற வாழ்வை நிலையானதாகக் கருதிக் கொண்டிருக்கின்றது. தன் போக்கிலேயே போய்க் கொண்டிருந்தால், தனக்குத் துணையாக, தன்னைப் பிரியாதிருக்கும் சிவ அன்னத்திடமிருந்து பெறக்கூடிய பெரும்பயனை இழந்து விடுகிறது. ஒருநாள் சீவனாகிய அன்னம் இந்தக் கலக்கத்திலிருந்து தெளிவடைந்து விடுகிறது. தான் தேடும் இரையைவிடத் தான் வாழும் இடத்தைவிட மேலான இன்பத்தையும், இடத்தையும் வழங்கும் பேராற்றலுடையது தன்னைப் பிரியாதிருக்கும் அன்னம் என்று தெளிந்து அதனை ஆதாரமாகக் கொள்கிறது. அடைதற்கரிய பேரின்பத்தை அடைகிறது. இறைவனுடைய திருவருளாலே இது நடைபெறுகின்றது.

"அன்ன மிரண்டுள ஆற்றங் கரையினில்
துன்னி யிரண்டுந் துணைப்பிரி யாதன்னந்
தன்னிலை யன்னந் தனியொன்ற தென்றக்கால்
பின் மடவன்னம் பேறணு காதே". (திருமந்திரம் - 2006)

நமக்கு இன்பமும் துன்பமும் மாறி மாறி வருகின்றன. சிலர் துன்பம் வரும்பொழுது மட்டும் இறைவனை நினைப்பார்கள். சந்தோஷப்படும் பொழுது இறைவனை நினைப்பதில்லை. உடலைப் பற்றியும், அதைப் பேணுவதைப் பற்றியும், குடும்பத்திற்கு எல்லாவிதமான வசதிகளைச் செய்து கொடுப்பதைப் பற்றியும் சிந்தித்து, செயலாற்றி நாட்களைக் கழித்து விடுகின்றோம். மரணம் வருகின்றது. மரணத்தைப் பற்றியும் நாம் நினைப்பதில்லை. ஒரு நாள் நாம் இறந்து விடுவோம். அதன் பின்னர் நாம் மீண்டும் பிறவி எடுக்க நேரிடும். இந்தப் பிறவியில் செய்த பாவ புண்ணியங்களின் சுமைகளைத் தொடர்ந்து சுமக்க வேண்டும் என்பது பற்றி ஒருபொழுதும் நினைப்பதில்லை. துன்பம் வரும்போது மட்டும் இறைவனை நினைத்தால் போதாது. இறைவனைப் பற்றிய எண்ணம் எப்பொழுதும் மனதிலே நிலைத்து நிற்க வேண்டும். அப்படி மனதில் இறைவனை ஆர்வத்தோடு நிறுத்தினால், உடலும் உள்ளமும், பேச்சும் மூச்சும் அந்த வழியே செயல்படத் தொடங்கும். இறைவனுடைய திருநாமத்தைக் கேட்கும் போதெல்லாம் உள்ளம் இனிக்கும். அன்பெனும் ஊற்றுப் பெருகி ஓடும். உடலிலுள்ள எல்லாப் புலன்களும் கருவிகளும், கரணங்களும் அன்பு மயமாக இயங்கும். தலை பூவைச் சுமக்க, காது இறைவனுடைய புகழையும் நாமத்தையும் கேட்க, நா நாள்தோறும் திருநாமத்தைப் பேசி வாழ்த்த, இவ்வாறு வரும் அன்பினாலே நாம் நல்ல நிலையைப் பெறலாம். புண்ணியம் உண்டாகும். இந்தப் புண்ணியம் சிவபோகத்தைத் தரும். சிவமாம் தன்மையும் பெறலாம். தலையும், செவியும், நாவும் அன்புமயமாக இறைவன்பால் நாட்டம் செலுத்தி இயங்கும்போத இம்மைக்கும் மறுமைக்கும் அப்பாற்பட்ட் ஒரு இன்பத்தையும் பெறலாமே. இதை யார் சொல்கிறார்கள். திருஞானசம்பந்தர் பெருமான் அல்லவா!

"நீநாளும் நன்னெஞ்சே,
நினைகண்டாய்; யார் அறிவார்
சாநாளும் வாழ்நாளும்?
சாய்க்காட்டுஎம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப்
புகழ்நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப்
பெறலாமே நல்வினையே".

* * *

# 8. உறவெனும் பாசம்

எல்லாம்வல்ல இறைவன் வீற்றிருக்கும் கைலையில் எப்போதும் இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கும் நந்தி தேவனிடம் பயின்று அவருடைய திருவருளைப் பெற்ற நான்மறை யோகிகளில் ஒருவர் தென்னாட்டில் பொதிகை மலையில் வாழ்ந்து வந்த அகத்திய முனிவரைத் தரிசித்து அவரோடு சில காலம் தங்கி இருக்க எண்ணம் கொண்டு தெற்கு நோக்கி வந்தார். காவிரிக் கரையில் சாத்தனூர் என்னுமிடத்தில் இந்த யோகியார் ஆடு மேய்க்கும் இடையன் ஒருவனது உடலைச் சுற்றி பசுக்கூட்டங்கள் கண்ணீர் விட்டுப் புலம்புவதைக் கண்டார். அவற்றின் மீது அளவற்ற கருணை கொண்டவராக, அவற்றின் துன்பத்தை நீக்கும்பொருட்டு, சிவ யோகியார் தான் பெற்ற அட்டமா சித்திகளைப் பயன்படுத்தித் தனது உடலை ஒரு இடத்தில் மறைத்து வைத்து, தனது உயிரை இடையனது உடலில் பாய்ச்சித் திருமூலராய் எழுந்தார். பசுக்களும் துன்பம் நீங்கி, அவரைச் சுற்றி களிப்பினால் துள்ளி மகிழ்ந்தன. பின்னர் அந்தி நேரத்தில் பசுக்கள் தத்தம் மனைக்குச் செல்ல சிவயோகியார் அவற்றின் பின்னே சென்று ஊர் எல்லையில் நின்றார். திருமூலருடைய உடம்பினைக் கண்ட அளவில் தனது கணவர் என்று நினைத்துக் கொண்ட இடையனது மனைவியார் அவரைப் பற்றி மனைக்கு கொண்டு செல்ல முயன்றார். இதற்குத் திருமூலநாயனார் இசையார். பயந்து மயங்கிய மனைவியாரும், என்ன செய்தீர் என்று மனம் தளர்ந்து வருந்தினார். அப்போது யோகியார், ''இங்கு உனக்கு என்னுடன் தொடர்பு ஒன்றுமில்லை'' என்று மறுத்து ஒரு பொது மடத்தினுள்ளே போய்ப் புகுந்தார். மறுநாள் தான் மறைத்து வைத்திருந்த தமது உடலைத் தேடினார். அது வைத்த இடத்தில் காணப்படவில்லை. தனது மெய்ஞ்ஞான சிந்தையில் இதனை ஆராய்ந்த சிவயோகியார் இதுவும் இறைவன் அருளே என உணர்ந்தார். இடையனது மனைவியோ யோகியாரின் நுண்ணறிவை உணரவில்லை. பிறரிடம் முறையிட்டார். ஊர்ப் பெருமக்கள் யோகியாரின் முற்றும் உணர்ந்த, தெளிந்த நிலையினைக் கண்டு அதிசயித்து, இவர் சித்த விகற்பம் கலைந்து, தெளிந்து, பற்றறுத்த ஓர் மிகப்பெரிய ஞானியாவார் என அறிவித்தனர்.

திருமூலர் பெருமானும் இறைவனுடைய பெரும் கருணையைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டு திருவாவடுதுறையினைச் சேர்ந்து, அங்குள்ள

திருக்கோயிலில் மேற்குப் பக்கத்தில் இருந்த ஒரு அரச மரத்தின்கீழ் வீற்று யோக நெறி புகுந்தார். இவ்வாறு மூவாயிரம் ஆண்டுகள் யோகத்திலிருந்து ஆண்டிற்கு ஒரு மந்திரமாக மூவாயிரம் திருமந்திரங்களை அருளிச் செய்து பின்னர் திருக்கைலையினை அடைந்து இறைவனது இணையடி சேர்ந்தார். இந்த வரலாற்றுச் செய்தி, முன்னமே கூறியதுபோல, சேக்கிழார் பெருமானின் பெரிய புராணத்தில் காணப்படுகிறது.

மெய்ஞ்ஞானம் பெற்ற திருமூலனார் உலகப் பற்றினை விட்டொழித்தவர். அவர் தென்னாடு வருவதன் நோக்கம் அகத்திய முனிவரைச் சந்திப்பதற்காக என்பது மரபாகும். ஆனால், செல்லும் வழியிலே பசுக்களின் துன்பங்களைக் காண்கின்றார். அவருடைய கருணை உள்ளம், பசுக்களின் துயரத்தை நீக்க முற்படுகிறது. பசுக்கள் தலைவனை இழந்து தன்னிலையற்று தவிக்கின்றன. மாயத்தால் கட்டுண்டு மூலன் என்ற இடையனது உடலிலே நாட்டம் செலுத்துகின்றது. யோகியாரும் அவற்றின் விருப்பத்தை நிறைவேற்றிப் பசுக்களுடைய தலைவனைஉயிர்ப்பிக்கின்றார். இதுபோன்ற அற்புதச் செயல்கள் பற்றிய விவரம் பெரிய புராணத்தில் பல இடங்களில் காணப்படுகின்றன. திருஞானசம்பந்தர் பெருமான் எலும்பைப் பெண்ணாக்கியதும், முயலக நோயைத் தீர்த்ததும், அப்பரடிகள் அப்பூதியடிகளுடைய திருமகனின் உடலில் படர்ந்த பாம்பின் விஷத்தைத் தீர்த்ததும் எல்லோருக்கும் தெரிந்ததே. ஆயினும், இந்த நிகழ்ச்சிகளுக்கு அடிப்படையாக உள்ள தத்துவத்தையும் உணர்ந்து கொள்வது அவசியமாகும். மாதவம் செய்த சிவயோகியார் கூடு விட்டுக்கூடு பாய்ந்து உடலில் நுழைந்திருக்க வேண்டியதில்லை. பசுக்களின் துயரை நீக்கவே இவ்வாறு செய்தார். இங்கே பசுக்கள் என்பது உயிர்கள். பாசத்தில் கட்டுண்டு தலைவனை இழக்கின்றன. யோகியாரின் அருளால் தலைவனை மீண்டும் பெற்று நீங்காத இன்பம் பெறுகின்றன. யோகியாரோ மூலனின் உடலில் புகுந்த பின்னர், சாதாரண மனிதனான மூலனுடைய ஆசாபாசங்களுக்கு இடம் கொடுக்க வேண்டியவர். ஆனால், முன் செய்த தவத்தின் வலிமையின் காரணமாகப்பற்றற்ற நிலையில், தொடர்புகளை நீக்கியவராக, முன்னம் வினைகள் அகன்ற நிலையில் நிற்கிறார். அதாவது இந்த சிவயோகியார் யோகத்தின் தொடக்கக் கட்டத்தில் தன்னுடைய மூலாதாரக் கனலை எழுப்பி மெய்ஞ்ஞானம் பெற்றார். தன்னைச் சுற்றியுள்ள பசுக்களின் தளையை அறுத்துக் கொண்டார். இறைவனுக்கும், உயிருக்கும் இடையே நிற்கும் பாசத்தளை அகன்ற பின்னர், இறைவனின் பூரண அருள் பெற்று வேற்றுமை நீங்கியவராகத் தான் பெற்ற ஞானத்தைப் பிறருக்கு நல்கினார்.

திருமூலர் பெருமானுடைய வரலாறே பற்றற்ற நிலையைத் தெளிவாக்குகிறது. அதே நேரத்தில் முற்றிலும் துறந்தவர்கள் உள்ளங்களிலே அன்பும், கருணையும் நிரம்பி, சகல சீவராசிகளுடைய துன்பங்களை நீக்கும் பணியையே தலையாயதாகக் கொள்வதும் அவர்களுடைய இயல்பாகிறது.

ஆனால், பற்றை, பாசத்தை விட்டுவிடுவது அவ்வளவு எளிதல்லவே!

பாசம் எனும் தளை உயிரைக் கட்டுப்படுத்துகிறது. உயிரைப் போலவே பாசமும் தொடக்கம் முடிவற்றது. பாசத்தளையின் ஒரு கூறான ஆணவ மலம் உயிரை இருள் நிலையில் வைக்கின்றது. அறியாமையைத் தருகின்றது. உயிருக்கு ஒரு எழுச்சியைத் தருகின்றது. வேற்றுமை எண்ணத்தை உருவாக்கி, ஒரு உயிரைப் பிற உயிர்களிடமிருந்து பிரித்து, நிறுத்தி வைப்பதும் ஆணவத்தின் விளைவாகும். இறைவனுடைய நிலையை மறைத்து, தன் நிலையை வளர்க்கச் செய்வதும் ஆணவமாகும். உயிர் ஆணவத்தில் அழுந்தியுள்ள நிலை இருள் நிலை என அழைக்கப்படுகின்றது. இதையே கேவல நிலை என்றும் சொல்வார்கள். பாசமானது ஆணவம், கன்மம், மாயை என்கின்ற மூன்று வகை மலங்களைக் கொண்டதாகும். கன்மமானது உயிர்களை, வினைப்பயன்களைக் கூட்டுவிக்கத் தூண்டுகின்றது. உயிர், தனது மனம், வாக்கு, காயம் ஆகியவற்றைக் கொண்டு பல செயல்களில் ஈடுபடும்போது அவற்றின் பலாபலன்களைப் பல பிறப்புகளில் அனுபவித்து முடிக்க கன்மமானது பயன்படுகிறது. மாயை இறைவனின் பெரும் கருணையால் உருவாக்கப்பட்ட மறைக்கும் சக்தி ஆகும். படைப்பு, காத்தல், மறைத்தல், ஒடுக்குதல் போன்ற இயக்கங்கள் மாயையின் சக்தியால் நடைபெறுகின்றன. இந்த இயக்கத்தில் தன்னைப் பறிகொடுக்கும் உயிரானது, இந்த இயக்கத்தையே உண்மையென்று எண்ணிக் கொள்கின்றது. இது ஒரு மருள் நிலை ஆகும். ஆணவம், கன்மம், மாயை என்கின்ற மூன்று மலங்கள் ஆன பாசம் கால வரம்பின்றி உயிருடன் பொருந்தி உயிரை அறியாமை நிலையில் நிற்க வைக்கின்றது. இறைஞானம் இல்லாதபோது தனக்குத்தான் நிகரில்லை என்ற எண்ணமும், பிறருடன் தொடர்பு கொண்டு உறவினை வளர்ப்பது தனது இயல்பு என்றும் உயிரானது எண்ணிக் கொள்கின்றது. அறிவு பெற்ற நிலையில் உயிர் தன்னை மற்ற தத்துவங்ககளிலிருந்து பிரித்துக் கொண்டு பாசத்தளை அகற்றியதாக இறைவனைச் சேருகின்றது. இறைநிலை அறிவும், ஒளியும் தங்கிய நிலையாகும். படைப்பின் நோக்கமே பதி, பசு, பாசம் என்கிற தத்துவங்களை வேற்றுமை நிலையில் நிறுத்தி, பிறகு அந்த வேற்றுமையையும் அகற்றுவதாகும். பின்வரும் திருமந்திரம் இதை விளக்குகின்றது:

**''பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்**
**பதியினைப் போற்பசு பாசம் அனாதி**
**பதியினைச் சென்றணு காப்பசுபாசம்**
**பதியணு கிற்பசு பாசம் நிலாவே''.** (திருமந்திரம் 115)

இந்தப் பாசம் எல்லா உயிர்களையும் ஆட்டிப் படைக்கின்றது. இதற்கு ஒருவரும் விதிவிலக்கல்லர். இறைவன் படைப்பிலுள்ள உயிர்கள் எண்ணற்றவையாகும். பிரம்மன் முதலிய பெரும் தேவர்களையும் உயிரினத்தில் இந்தப் படைப்பு உள்ளடக்கும். இந்த எல்லா உயிர்களுமே பாசத்தால் கட்டப்பட்டவைதான். ஆணவத்தால் தான் என்கின்ற தவறான உணர்வு பெற்றுக் கன்மத்தின் வாயிலாக பல வினைகளைச் செய்து அவற்றின்

பலனை அனுபவித்து, மாயாசக்தியால் உந்தப்பட்டு, புறத்தோற்றங்களையும், உடலின் ஆற்றலையும் முழுமையானவை எனவும், உண்மையானவை எனவும் நினைத்து உயிர்கள் பல பிறப்புகளில் அவைகளுடைய வினைப்பயனை நுகர வேண்டியுள்ளது. மலங்கள் நீங்கும்போது பாசத்தளைகள் அறுபடுகின்றன. உயிர்களும் இறைவனைப் பற்றி விடாது நிற்கும்.

**''பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப்**
**பசுக்களைக் கட்டிய பாசமூன் றுண்டு**
**பசுத்தன்மை நீக்கியப் பாசம் அறுத்தாற்**
**பசுக்கள் தலைவனைப் பற்றிவிடாவே''.** **(திருமந்திரம் - 2406)**

இவ்வுலகில் பிறக்கும் ஒவ்வொருவரும் பாசத்தால் கட்டுண்டு உறவினை வளர்ப்பது இயல்பாகவே அமைகின்றது. பெற்றோர், மனைவி மக்கள், சுற்றம், உலகம் இவை யாவையுமே நமக்கு உறவெனும் தொடர்பைக் கொடுத்து, பாசத்தை வலுப்படுத்துகின்றன. அன்றாட வாழ்விற்கு இந்த உறவு அத்தியாவசியமாகின்றது. இதைத் தவிர்த்து உலக நெறியில் நம்மை வெற்றியுடன் ஈடுபடுத்திக் கொள்வது மிகவும் கடினம். ஆகவே, உறவினை வளர்த்துக் கொண்டுதான் நம்முடைய பணிகளையும், பொறுப்புகளையும் நிறைவேற்ற வேண்டியுள்ளது. இதைத் தவறு என்று சொல்ல முடியாதல்லவா? அதே நேரத்தில், உறவு என்னும் தத்துவத்தின் அடிப்படை நோக்கத்தை நாம் உணர்ந்து கொண்டாக வேண்டும். உறவின் வழியாக உயிரானது தனது வினைப்பயனை அனுபவிக்கின்றது. அதே நேரத்தில் மேலும் வினைப் பயன்களைச் சேர்த்துக் கொள்கிறது. இது ஒரு அறியாமை நிலையில் நடக்கின்றது. ஆணவ மலமே இதற்குக் காரணமாகும். ஆணவத்தின் வலியால் அறியாமை என்னும் இருள் நம்மைச் சூழ்ந்து படர்ந்து கிடக்கின்றது. நமது அகக்கண்கள் மூடப்பட்டுள்ளன. இந்த நிலையை மாயக்குழி என்பார் திருமூலர். மாயக்குழியில் விழுந்த மக்கள், பாசத்தில் உற்றுப் பதைக்கின்றனர். உண்மைக்கு முன்னே ஓர் திரை விரிந்து கிடக்கும் போது உயிர் இறைவனைக் காணுவதில்லை. புறத்தே நோக்கிச் செல்லும் ஐம்பொறிகளும், ஐம்புலன்களும் பரத்தை மறைக்கின்றன. உலக இயலே உண்மை என்று வாழ்நாளைச் செலவழிப்பது இயல்பாகி விட்டது. அறியாமையால் ஏதோ ஒரு பிரமையில் நம்மை நாம் நடத்திச் செல்லுகின்றோம். குயில் தனது முட்டையைக் காக்கைக் கூட்டினில் விடுகின்றது. காக்கை தனது அறியாமையால் குயிலின் முட்டையையும் பேணிக்குஞ்சு பொரித்துக் குயிற்குஞ்சைக் காத்து வருகின்றது. என்னே இந்த மாயையின் விந்தை! காக்கைக்குத் தன் குஞ்சு என்றும், குயிற்குஞ்சென்றும் பாராட்டிப் பாகுபடுத்துகின்ற அறிவில்லையே! ஏதோ ஒரு மயக்கத்தினால் அல்லவா காக்கை அந்தக் குயிற்குஞ்சைத் தன் கூட்டிலேயே வளர்த்து வருகின்றது!

"குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைக்கூட் டிட்டால்
அயிர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின் றதுபோல்
இயக்கில்லைப் போக்கில்லை யேனென்ப தில்லை
மயக்கத்தால் காக்கை வளர்க்கின்ற வாறே". (திருமந்திரம் - 488)

பாசத்தில் அழுந்திய உயிர் அந்த வட்டத்திலேயே தனது பணிகளைச் செய்து முடிக்கின்றது. வட்டத்தைச் சுற்றியுள்ள மாயத்திரை வட்டத்திற்கப்பாற்பட்ட ஒன்றை உயிரிடமிருந்து மறைக்கின்றது. அதுமட்டுமல்ல, உயிரானது வட்டத்திற்குள்ளே இருந்து கொண்டு தான் என்றும், தனது என்றும், ஆணவத்தின் காரணமாக வினைகளைத் தொடர்ந்து புரிந்து கொண்டே வருகின்றது. உயிருக்கு இருப்பது சிற்றறிவு. அது அந்த வட்டத்திற்கப்பால் எட்டுவது இல்லை. அந்தச் சிற்றறிவும் ஆட்டிச் செல்வார் வழி நின்று ஆடுகின்றது. இந்தச் சிற்றறிவே மாயையின் கருவியாக இருக்கும் நிலையில் தன்னைப் பற்றியும், இறைவனைப் பற்றியும் அறிந்து கொள்வதற்கான ஊக்கத்தை இழந்து விடுகின்றது. நாம் எங்கிருந்து வருகின்றோம், நாம் எங்குச் செல்கின்றோம் என்பதைப் பற்றிச் சிந்திக்கக்கூட நாம் வாய்ப்புப் பெறுவதில்லை, அல்லது கிடைத்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்வதில்லை. கிளம்பி வந்த இடத்தையும், போய்ச் சேரும் இடத்தையும் பற்றிச் சற்றும் கவலைப்படாமல் இருந்த இடத்தைப் பற்றியே நினைத்துக் கொண்டு இருப்பதும், செய்கைகளைப் புரிந்து வருவதும் அறியாமை என்று கூட நம்மால் உணர இயலவில்லை. எல்லாவற்றிற்கும் நாம்தான் காரணம் என்ற இந்த அறியாமையிலும் இறுமாப்புக் கொள்கின்றோம். இது நமது கீழ்மையையே சுட்டிக்காட்டுகிறது:

"இட்டான் அறிந்திலன் ஏற்றவன் கண்டிலன்
தட்டான் அறிந்தும் ஒருவர்க் குரைத்திலன்
பட்டாங்கு சொல்லும் பரமனும் அங்குளன்
கெட்டேன் இம்மாயையின் கீழ்மையெவ் வாறே".
(திருமந்திரம் - 486)

பாசத்தில் இடப்பட்ட உயிர் பொறி வழியே செல்வதில் முழுநாட்டத்தையும் செலுத்துகிறது. மலப்பிணைப்பால் உயிரின் உண்மை விளக்கம் தடைப்படுகிறது. ஆனால், இதில் விந்தை என்னவென்றால் இந்தப் பாசத்தை உயிருடன் பிணைத்து வைப்பதே இறைவன்தான். ஆணவம், மாயை, கன்மம் போன்ற நமக்குக் கொடுக்கும் அனுபவம் இறையருளால்தான். உயிர்கள் மீதுள்ள எல்லையற்ற கருணையால் இறைவன் உயிர்களுக்குத் தனு, கரணம், புவனம், போகம் ஆகியவற்றை அளிக்கின்றான். இவற்றின் சேர்க்கையுடன் சிற்றறிவு பெற்ற உயிரானது ஐம்பொறிகளைப் பயன்படுத்தி மனம், புத்தி, சித்தம் என்பவற்றைப் பின்பற்றி தான், தனது என்கிற நிலையை உருவாக்கிக் கொண்டு உலகத்தில் மாயை என்கின்ற வட்டத்திற்குள் பல சாதனைகளை புரிகிறது. பிறகு அவற்றின்

மூலமாக அடையக்கூடிய வினைப்பயனைப்பல பிறவிகளில் வெவ்வேறு உடல் கொண்டு அனுபவிக்கின்றது. உயிர்களைப் பாசத்தில் பொருத்தி அனுபவிக்கச் செய்வது திரு அருளாகும். பல காலம் உடலில் தங்கி உடலில் பல்வேறு வினைகளை அனுபவித்துப்பின்னர் அந்தப் பாசத்திலிருந்து உயிர்களை வேறுபடுத்திச் செய்வதும் இறைவனுடைய அருளாகும். வேறுபட்ட உயிர்கள் சீவன் என்றும், சிவன் என்றும், அதுவரை மனதின்கண் வைத்திருந்த மருள் நிறைந்த நிலையை நீக்கி உண்மை ஞான ஒளி பெறச் செய்வதும் இறைவனுடைய அருளாகும். அறிவானும், அறியப்படும் பொருளும், உள்ளத்திலே ஒன்றாக இணைவதும் திரு அருளால்தான். இந்த அருளினை சீவராசிகள் அடையும்பொருட்டு பரம்பொருள் தன்னையே சிவமாகவும், சக்தியாகவும் பிரித்துக் கொள்கின்றது. எல்லாவற்றிற்கும் இந்த அருளே காரணமாய் இருப்பதால் மாணிக்கவாசகர் **''அவனருளாலே அவன்தாள் வணங்கி''** என்று வாழ்த்துகின்றார்.

**''பாசத்தி லிட்ட தருளந்தப் பாசத்தின்**
**நேசத்தை விட்ட தருளந்த நேசத்திற்**
**கூசற்ற முத்தி யருளந்தக் கூட்டத்தின்**
**நேசத்துத் தோன்றா நிலையரு ளாமே''.** **(திருமந்திரம் - 1802)**

மருள் நிலையிலிருந்து அருள் நிலைக்குச் செல்வதே உயிரினுடைய கோட்பாடாக அமைய வேண்டும். இறைவன் நமக்குக் கொடுத்துள்ள அறிவாற்றலை உள்நோக்கித் திருப்பி, உண்மை நிலையை ஆராய முற்பட வேண்டும். நமது பொறிகளையும், புலன்களையும் புறத்தே உள்ளவற்றை எதிர்நோக்கிச் செலுத்தாது அகத்தே உள்ளவற்றை அனுபவிக்கச் செய்ய வேண்டும். உயிரானது சூர்யகாந்தக் கல்லைப் போல. உயிரைச் சுற்றியுள்ள பாசம் சூர்யகாந்தத்தைச் சுற்றியுள்ள பஞ்சைப் போல ஆகும். சூர்யகாந்தக்கல் தானாகவே பஞ்சைச் சுட்டுவிடாது. ஆனால், சூர்யகாந்தக் கல்லைச் சூரியன் முன்பு எடுத்து வைத்தால் சூரிய வெப்பம் சூர்யகாந்தக் கல் வழியாக பாய்ந்து அதைச் சுற்றியுள்ள பஞ்சினை எரித்துவிடுமல்லவா? அதேபோல உயிரைச் சுற்றியுள்ள பாசமானது இறைவனுடைய தோற்றம் முன் நீங்கி விடும். திருவருளால் அறிவாற்றலின் தன்மை மாறும். குணங்கள் சீரடையும். இதைத் திருமூலர் பெருமான் ''மனத்து விளக்கினை மாண்பட ஏற்றி'' என்பார்.

**''சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே**
**சூரிய காந்தஞ் சூழ்பஞ்சைச் சுட்டிடா**
**சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்**
**சூரியன் தோற்றமும் அற்ற மலங்களே''.** **(திருமந்திரம் - 117)**

ஆணவம், கன்மம், மாயை என்கிற மூன்று மலங்களும் உயிருக்கு ஒருவிதமான எழுச்சியை அளித்து, உயிரை மாயா காரியங்களைச் செய்யத் தூண்டி, வினை அனுபவங்களைத் தொடர் கதையாக்கி விடுகின்றன. சிற்றறிவுள்ள உயிர் இதைத் தெரிந்து கொள்வதில்லை. அறிவிக்கக்கூடியவன்

இறைவன் ஒருவனே. இறைவன் அறிவித்தாலேயன்றி உயிருக்கு தன்னுடைய உண்மைத் தன்மையினைப் பற்றிய ஞானம் தோன்றுவதில்லை. மலங்களை உடலுடன் கூட்டி உயிரைச் சார்ந்த நிலையில் வைத்திருப்பதும் இறைவனுடைய பெரும் கருணையாகும். அந்தப் பெரும் கருணையைப் பற்றிய அறிவும் உயிருக்குப் புலப்படுவதில்லை. பாசம் உடலுக்கே என்கிற வகையில், உடலுடன் சேர்ந்த ஐம்பொறிகளுக்கும், ஐம்புலன்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வரும் வரை உள்ளத்தின் உணர்வுகள் தோன்றா. காரணம், நமது அறிவிற்கெட்டியவரை ஐம்புலன்களால் கிடைக்கப்பெறும் அனுபவத்திலேயே வாழ்வு அமைகின்றது. இன்ப, துன்பங்கள் பெறப்படுகின்றன. வினையினுடைய விளைவுகள் கிடைக்கப்பெறுகின்றன. மானுடரும், தேவர்களும் இந்த அனுபவத்தையே நாடுகின்றார்கள். இந்த அனுபவம் உறவினை, பாசத்தை மேலும் மேலும் வலுப்படுத்துகின்றது. ஆகவே, பாச வழியிலிருந்து உயிரை மாற்ற வேண்டுமானால் ஐம்பொறிகளையும், உட்கருவிகளையும் ஒடுக்கி மனதினை இறைவனிடம் தங்கச் செய்ய வேண்டும். ஐம்புலன்களின் தன்மை பெருக்கின் பெருகும். சுருக்கின் சுருங்கும். ஆகவே, ஐம்புலன்களை ஞானத்தறியில் பூட்டி வைக்க வேண்டும். அவ்வாறு செய்வது பிளிறிக்கொண்டு எழும்பி வரும் யானையைக் கோட்டைக்குள் வைப்பது போலாகும். ஐம்புலன்கள் செல்லும் வழியில் மனதைச் செலுத்தவிடாமல், மனத்தின் தன்மையை உயர்த்தி **"குறிகொண்ட சிந்தை குறிவழி"** நோக்குதல் வேண்டும். ஆகவேதான்,

**"வென்று புலன்கள் விரைந்து விடுமின்கள்**
**குன்று விழவதில் தாங்கலு மாமே".** (திருமந்திரம் - 2040)

ஐம்பொறிகளின் இயக்கம் காரணமாக மனதிலே ஆசை பிறக்கும். ஆசைகள் பாசத்திற்கு வித்திடும். ஆசையைக் குறைக்க வேண்டும். ஆசையை முழுவதும் ஒடுக்கி விடுவது என்பது தேவர்களாலும் இயலாத காரியம். ஆசைமேல் ஆசைப்படாது வாழ முயல வேண்டும். ஆசைகள் உயிருக்குத்துன்பம் தருகின்றன என்பதை உணர்ந்து கொண்டால் அவற்றை நீக்கிக் கொள்ளும் ஆற்றலைப் பெறலாம். அவ்வாறு செய்யும்போது உள்ளத்திலே ஒரு நடுநிலைமை தோன்றும். அதே நேரத்தில் ஒன்றின் மீது பற்றுக்குறையும் போது மற்றதின் மீது பற்றை வளர்ப்பது உயிரின் இயல்பாகும். உலகப் பொருட்கள் மீது ஆசையை விட்ட உயிர் இறைவன் மீது மிகுந்த ஆசை வைக்கத் தொடங்கும். அதுவும் நமக்கு ஒருவகைத் துன்பத்தை அளிக்கும் என்பது திருமந்திரக் கருத்தாகும். ஆசைப்படுவது துன்பம். ஆசை விடுவது இன்பம்.

**"ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்**
**ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்**
**ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்**
**ஆசை விடவிட ஆனந்த மாமே".** (திருமந்திரம் - 2615)

ஆசைகள் அறுபடுவதும் இறைவனின் சித்தமே. அவனருளின்றி ஆவது ஒன்றுமில்லை. அவனருள் பெற்ற மாத்திரத்திலேயே உடலின் மீது உயிர் வைத்திருக்கும் மதிப்பு மாறிவிடும். உள்ளம் பெருங்கோவிலாகவும், ஊனுடம்பு ஆலயமாகவும், வாய் கோபுர வாசலாகவும், ஐம்புலன்கள் காளாமணிவிளக்காகவும், தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கமாகவும், அமைந்து விடும். தில்லையம்பதியில் நடராசப் பெருமானின் திருக்கூத்தினைக் கண்ணாரக் கண்ட சுந்தரமூர்த்தி நாயனார், தனது உடலிலும், உள்ளத்திலும் பெற்ற ஈடு இணையற்ற இன்ப அனுபவம் புலன்களின் தன்மை மாற்றத்திற்கு ஒரு ஒப்பற்ற விளக்கமாக நிற்கின்றது. அதே உணர்வும் சேக்கிழார் பெருமானுடைய உள்ளத்திலே எழுந்ததால்தான் பெரிய புராணத்தில் மெய்சிலிர்க்கும் ஒரு பாடலை அருளிச் செய்து நம் எல்லோருடைய உள்ளத்திற்கும் மட்டிலா மகிழ்ச்சியைத் தந்து விடுகின்றார்.

**"ஐந்து பே ரறிவுங் கண்களே கொள்ள**
**வளப்பருங் கரணங்க ணான்குஞ்**
**சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்**
**திருந்துசாத் துவிகமே யாக**
**இந்துவாழ் சடையா னாடு மானந்த**
**வெல்லையி றனிப்பெருங் கூத்தின்**
**வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து**
**மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்".**

**(பெரியபுராணம் - தடுத் - 106)**

காரைக்கால் அம்மையார் ஓர் சிறந்த அருளாளர் ஆவார். அவருடைய கணவரால், இவர் ஒரு மானுடப் பிறவி அல்லர், நற்பெரும் தெய்வமே ஆவார் என்று போற்றப்படுகின்றார். ஆயினும், கணவரான பரமதத்தன் அம்மையாரிடமிருந்து விலகி வேறொருவரை மணம் புரிகின்றாரேயொழிய அம்மையார் போல் அருள் பெற்றவரல்லர். வினைப்பயன்கள் அவரைத் தொடருகின்றன. உடல் உறவுகளை முடித்துக் கொள்ள இயலவில்லை. ஆனால், காரைக்கால் அம்மையாரோ கணவன் அவ்வாறு முடிவு செய்து விட்டான் என நினைத்த மாத்திரத்திலேயே அவனுக்காகத் தாங்கி வந்த அழகிற்கிடமாகிய தசைப்பொதியைக் கழித்து விட்டுப் பேய் உருவம் பெற்று, இறைவனுக்குப் பணி செய்ய வேண்டுகின்றார். இறைவனின் அருள் மிக்கவராக அங்கேயே, அப்போதே உறவினைத்துறக்கின்றார். என்னே இறைவனின் கருணை!

**"ஈங்கிவன் குறித்த கொள்கை யிது; வினி யிவனுக் காகத்**
**தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்திங், குன்பால்**
**ஆங்குநின் றாள்கள் போற்றும் பேய்வடி வடியே னுக்குப்**
**பாங்குற வேண்டு" மென்று பரமர்தாள் பரவி நின்றார்".**

**(பெரியபுராணம் - காரைக் - 49)**

மக்கள் அன்றாட வாழ்வில் உலகத்தோடு இணைந்து வாழ முற்படுகின்றார்கள். அவ்வழியாக இன்பம் அடையப் பார்க்கின்றார்கள். பிறப்பின் நோக்கம் நிறைவேறுவதற்கு இது தேவைப்படுகின்றது. ஆனால், இந்த வழியில் இன்பத்தை நாம் தொடர்ந்து பெற்றுவர முடியாது. இதை அறிந்தும் கூட மக்கள் **''இச்சையுளே வைப்பர்''**. சற்று சிந்தித்துப் பார்க்கும்போது இவையெல்லாம் தேவையற்றது எனப் புரிந்து கொள்ள முடிந்தாலும், வலுவான பாசத்தால் கட்டப்பட்டு நிலையான இறை நாட்டத்தால் பெரும் இன்பத்தை அடைய முடிவதில்லை. ஆனால், ஒரு நாள் இறைவன் தகுந்த வழியைக் காட்டுகின்றான். அவனருளால் அந்த நேரம் கிட்டும்போது, உலக அனுபவங்களை முடித்துக் கொள்ளலாம் என்கின்ற உணர்வு தோன்றுகின்றது. மனச்சேட்டைகள் அடங்குகின்றன. பிறவித் துயரைக் கொடுத்து வரும் அறிவு மாறி வாழ்க்கையின் உண்மையான நோக்கம் அகக்கண்களுக்குப் பளிச்சென விளங்கத் துவங்குகின்றது. **''ஊன் கெட்டு, உயிர் கெட்டு, உணர்வு கெட்டு, என் உள்ளமும் போய் நான் கெட்டவா''** என மணிவாசகர் பெருமான் உருகுகின்றார். நிலையான நெறி ஒன்றினை மனம் பற்றிய பிறகு விவரிக்கவொண்ணா அமைதியைக் காண்கின்றது. தம்முள் இருக்கும் இந்த நிலையான அறிவை அறிந்தவர்களுக்கு மலமில்லை, மாசில்லை, மான அபிமானமில்லை, குலமில்லை, உயிர்களைப்பற்றி நிற்கும் குண விசேஷங்களும் இல்லை, நலன் இல்லை, கேடில்லை, பிரம்மன் போன்ற கோடிக்கணக்கான தேவர்கள் முதல் மனிதன் வரை உள்ள பாசத்தால் கட்டப்பட்ட நிலையுமில்லை. இதுவே இறைவனுடன் பொருந்திய நிலையாகும். திருமூலரைப் போன்ற சித்த புருடர்கள் அந்த நிலையை அடைந்தவர்கள். அவர்கள் காட்டும் வழியினை நாமும் பின்பற்ற வேண்டாமா?

**''ஒழிந்தேன் பிறவி யுறவென்னும் பாசங்**
**கழிந்தேன் கடவுளும் நானுமொன் றானேன்**
**அழிந்தாங் கினிவரு மாக்கமும் வேண்டேன்**
**செழுஞ்சார் புடைய சிவனைக் கண்டேனே''.**

**(திருமந்திரம் - 2958)**

உறவு என்னும் பாசத்தைக் கழிக்க வேண்டும். அதுவே மிகப்பெரும் சாதனையாகும். பிறப்பறுப்பதற்கு அதுவே ஒப்பற்ற சாதகமாகும். பாசம் நீங்கிய உயிர் சிவத்தில் ஆழ்ந்து நிற்கின்றது. திருவருள் அதனுடைய சென்னியில் படிகிறது. திருவருள் வீழ்ச்சி தீவிரதர நிலையை அடைகிறது. மனிதன் மாறுகிறான். கடவுளாகிறான். எத்தனை பிறவிகள் எடுக்க நேர்ந்தாலும் இந்தக் குறிக்கோளே பின்பற்றத் தகுந்த குறிக்கோளாகும்.

❋ ❋ ❋

# 9. "அன்பும் சிவமும்"

இறைவன் அளப்பதற்கு அரியன். புலன்களுக்கும் தத்துவங்களுக்கும் அப்பாற்பட்டவன். விண்ணுலகிலும் அதற்கு அப்பாலும் உள்ள தேவர்களும் மற்றவர்களும் தேடித் தேடி அலைந்து, திரிந்து காண முயன்றாலும் அவர்களுடைய கண்களுக்குத் தென்படாதவன். பூவுலகில் மக்கள் செல்வத்தாலும் கல்வியாலும் இறைவனை அடைந்து விடலாம் என்று எண்ணுகிறார்கள். ஆனால், செல்வத்தாலும் கல்வியாலும் இறைவனை அடைந்து விட முடியாது. ஏன், இவற்றிற்கு மேலே பல படிகளுக்கு அப்பாலுள்ள அறிவு எனும் ஆற்றலாலும் இறைவனைத் தெரிந்து கொள்ள முடியாது. செல்வம், கல்வி, அறிவு என்கிற சாதனைப் படிகளிலிருந்து இறைவனைக் காண முயல்பவர்கள் தோல்வி அடைவார்கள். செல்வமும், கல்வியும் ஆணவமலத்தை வலுப்படுத்துகின்றன, அகங்காரத்தை வளர்க்கின்றன. இவற்றின் வழியாக இறைவன் என்கின்ற உண்மையை அடைய முடியாது. ஆனால், இறைவனைக் காண்பது எளிது என்பார்கள் அருளாளர்கள். அதற்குத் தேவை அருட்கண்கள் என்பார்கள். திருவருட்சக்தி உள்ளத்தில் பதிந்தமாத்திரத்தில், இறை உணர்வு தோன்றத் தொடங்கும் என்பார்கள். சிந்தனைகள் மாற்றம் பெறுகின்றன. உடலும், மனமும், மற்ற கருவிகளும், இருள் நீங்கியது போன்ற உணர்வினைப் பெறுகின்றன. அகக்கண்கள் திறக்கின்றன. அறிவாலான சோதி ஒன்று, உள்ளத்தில் தோன்றி, விவரிக்க முடியாத அனுபவத்தைக் கொடுக்கின்றது.

**"அருளால் எவையும்பார் என்றான் - அத்தை**
**அறியாதே சுட்டிஎன் அறிவாலே பார்த்தேன்**
**இருளான பொருள்கண்ட தல்லால் - கண்ட**
**என்னையும் கண்டிலன் என்னேடி தோழி"**

என்பார் தாயுமானவர்.

இறைவனின் அருளை முழுமையாகப் பெற்றவர் திருநாவுக்கரசர். இறைவன் அவரைப் பல துன்பங்களுக்கு ஆளாக்குகின்றான். திருநாவுக்கரசர் பரம்பொருளிடம் பற்றுக்கொண்டவராக மாறாத குறிக்கோளுடன் நீங்காத

அன்புடையவராக இருப்பதன் காரணமாகத் திருமாலும், நான்முகனும் காணாத சோதியைத் தம்முள்ளேயே கண்டு கொள்கின்றார்.

**''தேடிக் கண்டு கொண்டேன் - திரு**
**மாலொடு நான்முகனும்**
**தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே**
**தேடிக் கண்டுகொண்டேன்''.**

என்று திருநாவுக்கரசர் தான் பெற்ற பேரின்பத்தில் மிகுந்த பெருமை கொள்கின்றார்.

காரைக்கால் அம்மையாரும் அதே நிலையில் இருப்பவர். இறைவனுடைய அருளின் தன்மையை முற்றிலும் அறிந்தவர் அவர். அவனுடைய அருளால் திருமாலும், நான்முகனும் காணாத ஒருவனைத் தான் கண்டு கொண்டதை நினைத்து நினைத்துப் பரவசப்படுகின்றார். பிறருக்கு அரியதாக உள்ள ஒன்று தனக்கு எளிதாகக் கிடைத்து விட்டதே என்று எண்ணி எண்ணி வியப்படைகின்றார்.

**''இன்று நமக்குஎளிதே; மாலுக்கும் நான்முகற்கும்**
**அன்றும் அளப்பரியன் ஆனானை - என்றும் ஓர்**
**மூவா மதியானை மூவே முலகங்கள்**
**ஆவானைக் காணும் அறிவு''. (அற்புதத் திருவந்தாதி)**

அருளாளர்கள் இறைவனுடைய அருளை எளிதாகப் பெறக்கூடிய முழுமையான தகுதி பெற்றவர்கள். இறைவன் அள்ளித் தருவது அருள். அந்த அருள் இன்பத்திலே திளைப்பதே நம்முடைய கோட்பாடாக அமைய வேண்டும். அருள் நமக்கு வெறுமனே கிடைத்துவிடுமா? நாம் அதற்கு ஏதாவது செய்ய வேண்டுமா என்கிற கேள்விகள் எழலாமல்லவா? காரைக்கால் அம்மையார் இதை எண்ணிப் பார்க்கின்றார். தனது நெஞ்சை நோக்கிப் பேசுகின்றார். ''நெஞ்சே இதுவரை நீ அறியாமல் இருந்தாய், இன்று உனக்கு ஈசன் அருள் கிட்டி விட்டது. அதற்குக் காரணம் என்ன தெரியுமா? நீ என்ன தவறு செய்திருந்தாலும் இறைவனிடம் உன்னுடைய அன்பைப் பெருக்கினாய். அவனுடைய அருளாகிய பெரும் சேமம், நன்மை, பாதுகாப்பு எல்லாம் உனக்குக் கிட்டிவிட்டன. ஆகவே, நீ பெருமகிழ்ச்சி பெற்ற நிலையில் இருக்கின்றாய். ஆனால், இத்துடன் போதும் என்று நிறுத்தி விடாதே. ஊரெல்லாம் பிச்சைக் கோலத்துடன் திரிந்து வருபவன் இறைவன். பிறர் தொடாத எலும்பினை மாலையாகக் கோர்த்து அணிந்து வருகின்றான். அவனைச் சாதாரணம் என்று நினைத்து விடாதே. அவன் மீது மேலும் மேலும் உனது அன்பைப் பெருகச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமாகத்தான் இறைவனுடைய அருளை நீ தொடர்ந்து பெறுவாய்'' என்று காரைக்கால் அம்மையார் தனது நெஞ்சத்திற்கு அறிவுரை கூறுகின்றார்.

**"மகிழ்தி மடநெஞ்சே! மானிடரின் நீயும்**
**திகழ்தி; பெருஞ்சேமம் சேர்ந்தாய்; - இகழாதே**
**யாரென்பே யேனும் அணிந்துழல்வார்க் காட்பட்ட**
**பேரன்பே இன்னும் பெருக்கு".** **(அற்புதத் திருவந்தாதி)**

இந்த அன்பைப் பற்றி நாம் சற்று சிந்திக்க வேண்டும். நாம் நமது குடும்பத்தில் உள்ளவர்களிடம் அன்பை வைக்கின்றோம். நமக்குத் தெரிந்தவர்களிடம் பாசத்தைக் கொட்டுகின்றோம். மனைவி, மக்கள், நண்பர்கள் என்றவாறு கூறிக்கொண்டு அவர்கள்மீது உயிரேயே வைத்திருக்கிறோமென்று பேசிக்கொள்கின்றோம். இந்த உணர்வினால் வரக்கூடிய அனுபவம் அன்பாகுமா? சற்று ஆழ்ந்து நோக்கினால் அது அன்பாகாது என்று புலப்படும். இந்த உறவிலே ஆசை இருக்கும், வேட்கை இருக்கும், நமக்குத் தெரியாமலேயே பிரதிபலன்களை எதிர்பார்க்கும், நோக்கமும் பொதிந்து கிடக்கும். எல்லாவற்றிற்கும் மேலாகத் தான் என்றும், தனது என்றும் வைத்துப் பார்க்கும் தன்மை இருக்கும். ஆகவே, சுயநலம் இருக்கும். **"மனிதர்கள் இச்சையுளே வைப்பர்"** என்கிறார் திருமூலர். புணர்ச்சிக் காலத்தில் இல்லாளுடன் ஒருவன் அன்பு கொண்டு உணர்ச்சி நிரம்பி இருக்கும் நிலை அன்பு என்று கூறப்பட்டாலும் அது சுயநலத்திலே தோன்றிய அன்பாகுமேயொழிய உண்மையான அன்பாகாது. உண்மையான அன்பில் தியாகம் இருக்கும்; ஆசை இருக்காது, பலாபலன்களை எதிர்பார்க்கும், குறிக்கோள் இருக்காது. பயன்கருதாமல் அன்பு செய்வதே ஒப்பற்றதாகும். மனைவி, மக்கள், உறவினர், நண்பர்கள் மீது வைப்பது மட்டும் அன்பன்று. தன்னுடன் தொடர்பு இல்லாதவர்கள் மீதும் வைக்கும் அன்பே உண்மையான அன்பாகும். இந்த அன்பு தெய்வீகத் தன்மையுடையது. மனிதனை மனிதனாக்குவது. இத்தகைய அன்பு உயிர்களிடையே இயல்பாகவே இருக்கின்றது.

ஆனால், மும்மலங்களாகிய திரை உண்மையை மறைக்கும்போது இந்த அன்பானது ஆசையாக மாறி விடுகின்றது. உண்மையில் எவ்வாறு அருள் இறைவனுடைய இயல்பாகின்றதோ, அவ்வாறே உயிருடைய இயல்பாக அன்பும் அமைந்துள்ளது. இதைத் தெரிந்து கொள்ளாதவர்கள் அன்புக் கண்களால் உலகினைப் பார்க்க மாட்டார்கள். இவர்கள் எலும்பின் மீது தோல் போர்த்தப்பட்ட உயிரற்ற, பயனற்ற, வெற்றுடம்பு மட்டுமே என்கிறார் திருவள்ளுவர்.

**"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு".**

உயிர்களிடையே தன்னலமற்ற அன்பு வைப்பது இறைவனுடைய அருளுக்குச் சமானமாகும். அத்தகைய அன்பு மனிதர்களை இறைவனுக்கு அருகிலேயே அழைத்துச் செல்லும். அன்பு வளர வளர இறைத் தன்மையும்

வளரும். இறைவன் உயிர்கள் உய்யும் பொருட்டு உடலையும், உடலால் பெறக்கூடிய அனுபவங்களையும், இன்ப, துன்பங்களையும் அளிக்கின்றான். உயிர்கள் வினைப்பயன்களை அனுபவிக்க வேண்டி, இறப்பையும், பிறப்பையும் அமைத்துக் கொடுத்துள்ளான். இறப்பு, பிறப்பு எனும் சூழலில் உயிர்கள் சிக்கித் தூண்டப்பட்டாலும், அவைகளை உய்விக்கும் நியதியாகவே இது அமைகிறது. அது எப்படி இருந்தாலும் அன்பு வழியில் வாழ்க்கை அனுபவங்களைப் பெற்றும், ஏற்றும் வாழ்ந்து வரும் உயிர்கள் தங்களுடைய பிறவிப் பயனை அன்பின் வழியே அடையலாம் என்கின்றார் திருமூலர். இறைவன் அன்புள்ளம் கொண்ட உயிர்களிடையேதான் புகுந்து, கலந்து நின்று பிறவித் துன்பத்தை நீக்குகின்றான்.

இதைக் கோடிட்டுக் காட்டும் திருமந்திரம் பின்வருமாறு:

**"இன்பப் பிறவிக் கியல்வது செய்தவன்**
**துன்பப் பிறவித் தொழில்பல எண்ணினும்**
**அன்பிற் கலவிசெய் தாதிப் பிரான்வைத்த**
**முன்பப் பிறவி முடிவது தானே".** **(திருமந்திரம் - 281)**

இறைவனிடத்தில் வைக்கும் அன்பு எல்லாவற்றையும் விட மேலானது. ஆனால், இந்த அன்பும் தன்னலமற்றதாக இருக்க வேண்டும். மாசற்றதாகவும், தூய்மையானதாகவும், உண்மையானதாகவும் இருக்க வேண்டும். இத்தகைய அன்பு உயிர்கள் மீதெல்லாம் பொருந்தி இறைவனை நாடிச் செல்கின்றது. உலகத்தில் ஆசா பாசங்களின் அடிப்படையில் தோன்றும் அன்பானது ஐம்புலன்களின் சக்திக்குக்கட்டுப்பட்டு இயங்குகின்றது. ஆசை வடிவிலே நிற்கின்றது. இறைவனின் மறைப்புச் சக்திக்கு உட்பட்டது. ஆனால், ஐம்பொறிகளின் தொடர்பு அறுபட்ட நிலையில் எழும் அன்பானது இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமானது. அத்தகைய அன்பு உள்ளத்தில் இறைவன் தனது திருவடியைப் பதிக்கின்றான். அவனுடைய அருட்சக்தி அந்த உள்ளத்தை ஏற்றுக் கொள்ளுகின்றது. அந்த அருட்சக்தியே அவ்வுள்ளத்தை ஒளிமயமாக்குகின்றது. அதுவே அந்த உள்ளத்தோடு பரம்பொருளையும் சேர்க்கும். அவ்வுள்ளங்களில் சிவபெருமான் **"அன்பினில் விளையும் ஆரமுதாய்"** விளங்கி அருள் புரிவான்.

**"அன்புறு சிந்தையின் மேலெழும் அவ்வொளி**
**இன்புறு கண்ணியொ டேற்க இசைந்தன**
**துன்புறு கண்ணியைந் தாடுந் துடக்கற்று**
**நன்புறு சிந்தையை நாடுமின் நீரே".** **(திருமந்திரம் - 282)**

அன்பை யாரிடம் வைப்பது? சிவபரம்பொருள் மீது வையுங்கள் என்கிறார் திருமூலர். அவன் பொன்னிலும் பிரகாசமானவன். செக்கர் மேனியன். அவனுடைய திருமேனி செக்கர் வானத்தைப் போலச் சிவந்திருக்கும் **"சிவனெனும் பெயர் தனக்கே உடைய செம்மேனி**

எம்மான்'' என்கிறார் அப்பர் சுவாமிகள். உடலெலாம் திருநீறு பூசிக் கொண்டவன். செக்கர் வானாகிய செஞ்சடையிலே இறைவன் பிறையை அணிந்திருக்கின்றான். அது மிகவும் இளம்பிறை. ஆயினும், பளிச்சென்று பிரகாசிக்கின்றது. முதலில் பிறைக்கு இறைவன் தண்டனை வழங்கியிருந்தான். பின்னர்ப் பெருங்கருணையுடன் பிறையைத் தனது சடையிலே சூடிக்கொண்டான். வெண்ணீறு சுடுகாட்டுப் பொடியாகும். எல்லாம் முடிந்த பிறகு எஞ்சி நிற்கும் ''அந்தம் ஆதி''யை சுட்டிக் காட்டுகின்றது. இந்த வெண்ணீற்று ஒளியில் விளங்கும் சிவபெருமானுடன் பிரியாது பின்னிக் கிடக்கும் அன்பே எல்லாவற்றிற்கும் மேலானதாகும். அன்பே உருவான சிவபிரானை நாடுங்கள், அவனிடம் அன்பை வையுங்கள், அவனருளைப் பெறுங்கள் என்கிறார் திருமூலர்.

**''பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன்**
**மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை**
**துள்ளிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப்**
**பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே''. (திருமந்திரம் - 271)**

இறைவனை அடையப் பல வழிகள் உண்டென்பர் பெரியோர். இவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று முறைப்படுத்தப்பட்டுள்ளது. திருமூலரே வேறொரு இடத்தில் தவமும், அறமும் மேற்றுணையாமே என்கின்றார். வாழ்க்கையிலே கடைப்பிடிக்க வேண்டிய அன்பும், அறமும் மனிதனைப் பக்குவப்படுத்துகின்றன. புலனடக்கம் செய்து மனதைக் கட்டுப்படுத்தி உடலால் அடையப்பெறும் இன்பங்களைக் குறைத்து அல்லது தவிர்த்து, கடுமையான துறவறம் பூண்டு யோக சாதனை மூலமாகவே இறைவனை அடைதல் சாலச் சிறந்தது என்னும் கொள்கையுடையவர்கள் உண்டு. திருமூலர் அருளிச் செய்துள்ள திருமந்திரத்தில் முக்கியமான பகுதியான மூன்றாம் தந்திரம் யோக நெறிகளை விரிவாக எடுத்துச் சொல்லுகின்றது. திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் கடுமையான யோகம் புரிந்து வாழ்ந்த யோகியானதால் அட்டாங்க யோகம் என்கின்ற நெறிக்கு முக்கியமான இடத்தைத் தருகின்றார். அதே நேரத்தில் அவர் அன்பைப் புறக்கணிக்கவில்லை. அன்பு இன்றியமையாதது என்று சொல்லுகின்றார். கடுமையான தவம் செய்துதான் இறைவனை அடைய முடியும் என்பதன்று.

எலும்பை விறகாக்கும் வகையிலும், ஊனுடலைத் தவக்கனலில் வாட்டும் வகையிலும் இறைவனை நாடினாலும் அந்த முயற்சிக்கு அடிப்படையாக உள்ளத்திலே அன்பு இல்லையெனில் ஒரு பயனும் இல்லை. எல்லாவற்றிற்கும் மேலாக இறைவன் விரும்புவது அன்பு. அந்த அன்பினால் இறைவன் தொண்டரை உருக்கவல்லவன். அன்பினால் உருகி உருகி மாணிக்கவாசகர் சிவமானார். இறைவனைப் அடைய அன்பில் உருகி அழ வேண்டும். அரற்ற வேண்டும். இராப்பகல் இறைவனை பணிந்தேத்த வேண்டும். அகமுருகி இறை நினைவை நிரப்பி இறைவன்பால் தன்னை

முழுதும் அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். ''நானும் அப்படிச் செய்துள்ளேன். அதையும் நீங்கள் செய்யுங்கள். என்போல நீங்களும் அன்பால் உருகி இறைவனை ஏற்றினால் ஞானத்தை அடையலாம். இல்லாவிட்டால் இறைவனை அடைய முடியாது'' என்கிறார் திருமூலர்.

**''என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்**
**பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்**
**அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி**
**என்போல் மணியினை யெய்தஒண் ணாதே''.**

**(திருமந்திரம் - 272)**

ஆதியும், அந்தமும் இல்லாதவன் இறைவன். ஊழிதோறும் ஊழி ஐந்தொழில்களை விடாது புரிந்து கொண்டு வருகின்றான். சிவபெருமான் கொன்றை மலரைச்சூடி இருக்கின்றான். அவனுக்கு அது மிகவும் பிடித்தமான மலர். தன்னுடைய அருளினால் தேனையும் மிக்க இன்பம் தரும் சக்தியை ஒரு பக்கத்தில் உடையவனாக இருக்கின்றான். அவனுடைய ஒளி பொன்னைப் போல இருக்கின்றது. ஆனால், இத்தகைய இறைவன் அடைய முடியாதவன் என்று ஐயுற வேண்டாம். அவனிடம் அன்பு வைப்பவர்கள் மீது அருள் மழை பொழிகின்றான். **''ஆர்வம் உடையவர் காண்பார் அறந்தன்னை''** என்கிறார் திருமூலர். இறைவன் அவ்வாறு தன்னிடம் அன்பு செய்பவர்களுக்கு வேண்டியவற்றைத் தருகின்றான். ஏனென்றால், அவன் அன்பு வடிவமாக இருக்கின்றான். அவனிடம் யார் அன்பு கொள்கின்றார்களோ அவர்களிடம் நிலையாக நின்று கொண்டு அருள்பாலிக்கின்றான். அவர்களுக்கு வழித்துணையாகவும் இருக்கின்றான். **''தானொறு வண்ணம் என் அன்பில் நின்றானே''** என்கிறார் திருமூலர். இறைவனுடைய நினைப்பில் தங்களுடைய முழுச் சிந்தனையை வைப்பவர்களுக்குச் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் சோதியாக தோற்றமளிக்கின்றான்.

**''அன்பினுள் ளான்புறத் தானுட லாயுள்ளான்**
**முன்பினுள் வான்முனி வர்க்கும் பிரானவன்**
**அன்பினுள் ளாகிஅமரும் அரும்பொருள்**
**அன்பினுள் ளார்க்கே அணைதுணை யாமே''.**

**(திருமந்திரம் - 279)**

இறைவன் பேரின்ப வடிவானவன். சீவர்களுடைய இன்பத்தில் பொருந்தி மகிழ்கின்ற அன்பு வடிவானவன். இராப்பகல் தன்னைப் பாசத்துள் வைத்துப் பரிவு செய்வார்களை நன்கு அறிவன். அவர்களிடையே வந்து அவர்கள் உள்ளத்திலேயே உறைந்து கொள்வான். ஆனால், இதை யாரும் அறிந்து கொள்வதில்லையே! அவனை விட்டு விட்டு நினைப்பதில் பயனில்லை. கிடைப்பதற்கரிய ஒளி வடிவாகிய இறைவனை சிக்கெனப் பற்றிக் கொண்டு அவன் வழியே செல்ல வேண்டாமா? அவ்வாறு செல்வதன்

மூலம் எல்லையில்லாப் பெருமையை அடைய வேண்டாமா? அவ்வாறு நீக்கமற நினைந்து அவனுடன் ஒன்றி இருப்பதே இனிமையான நீராடல் ஆகுமல்லவா? இவ்வாறு தான் செய்தவாறு மற்றவரையும் இறைவனைச் சிக்கெனப்பிடித்துக் கொள்ளுங்கள் என்று அழைக்கின்றார் திருமூலர்.

**"விட்டுப் பிடிப்பதென் மேதகு சோதியைத்**
**தொட்டுத் தொடர்வன் தொலையாப் பெருமையை**
**எட்டுமென் னாருயி ராய்நின்ற ஈசனை**
**மட்டுக் கலப்பது மஞ்சன மாமே".** **(திருமந்திரம் - 289)**

மாணிக்கவாசகர் இறைவனைச்சிக்கெனப் பிடித்துக் கொண்டவர். தன் எண்ணங்களையெல்லாம் இறைவனிடம் அர்ப்பணித்துத்தன் கண்களை அழகிய திருவடிகளாகிய மலர்களுக்கு அடிமையாக்கித்தனது வாக்கை இறைவனுடைய நாமத்திற்கு நிழலாக்கி மாணிக்கவாசகர் இறைவனைச் சிக்கெனப் பிடித்துக் கொள்கின்றார். அம்மையப்பன் ஓர் ஒப்பிலாத மணி, அன்பினில் விளைந்த ஆரமுது. நானோ புழுவிற்கும் கீழானவன். அஞ்ஞானத்தில் மூழ்கி நிற்பவன். ஆயினும் இறைவன் எனக்குச் சிவபதத்தை அளித்தான். செல்வன் சிவபெருமான். அவனை சிக்கெனப் பிடித்துக் கொண்டு விட்டேன் என்கின்றார்.

**"அம்மையே அப்பா ஒப்பு இலா மணியே**
**அன்பினில் விளைந்த ஆர் அமுதே**
**பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்**
**புழுத்து அலைப் புலையனேன் தனக்குச்**
**செம்மையே ஆய சிவ பதம் அளித்த**
**செல்வமே சிவபெருமானே**
**இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்**
**எங்கு எழுந்தருளுவது இனியே".** **(திருவாசகம்)**

இறைவனை ஒருவர் சிக்கெனப் பற்றிக் கொண்டால் அவர் வேண்டியவற்றையெல்லாம் இறைவன் வாரி வழங்குகின்றான். மும்மலங்களை அழிக்கின்றான். அருட்கண்ணை விழிப்பிக்கின்றான். அன்பர்களுடைய உள்ளத்தில் சிவ ஒளியை பெருகச் செய்வான்.

**"அருத்தியுள் ஈசனை யாரருள் வேண்டில்**
**விருத்தி கொடுத்திடும் விண்ணவர் கோனே".**
**(திருமந்திரம் - 277)**

இறைவனிடம் மக்கள் பலவிதங்களில் அன்பு வைக்கின்றனர். இம்மையிலும் மறுமையிலும் இறைவனருளால் பலவிதமான நன்மைகளைப் பெறுகின்றனர். ஆனால், உண்மையான அன்பர்கள் இறைவனிடமிருந்து இத்தகைய நன்மைகளை நாடுவதில்லை. அவற்றை அவர்கள் வெறுப்பார்கள். அன்பிலே ஊறி நிற்கின்ற அடியவர்கள் இறைவனிடமிருந்து

ஒன்றுமே வேண்டுவதில்லை. அவர்கள் வீட்டுப் பேறினைக் கூடப் பெரிதாக நினைப்பதில்லை. அத்தகைய பேற்றினை அடைய வேண்டும் என்கின்ற ஆசையும் அவர்களிடம் இருப்பதில்லை. உலகில் மக்கள் பல பொருள்களைச் சேர்த்து வாழ வேண்டுமென்று விரும்புகின்றார்கள். ஆனால், இறைவனுடைய உண்மை அன்பர்கள் பொருட்செல்வத்தை நாடுவதில்லை. அதனால் கிடைக்கும் இன்பத்தை விரும்புவதில்லை. இன்பத்திற்குப்பிறகு துன்பமும் வரும் என்று அவர்கள் நன்கு உணர்ந்தவர்கள். அவர்கள் இன்ப துன்பங்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. எல்லாவற்றையும் சமதிருஷ்டியோடு பார்ப்பார்கள். இவர்கள் வேண்டுவது இறைவனுடைய அன்பு. இறைவன் மீது அன்பு வைப்பதையே பேரின்பமாகக் கருதுவார்கள். இவர்கள் பற்றற்றவர்கள். அவர்கள் இறைவனை வேண்டி வணங்குவது உயர்ந்த அன்பின் அடிப்படையில் அமைகின்றது. சேக்கிழார் பெருமான் இத்தகைய திருத்தொண்டர்களின் அன்பினை வெகுவாகப் புகழ்ந்து பாடுகின்றார்.

**"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்,**
**ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்,**
**கூடும் அன்பினிற் கும்பிட லேஅன்றி**
**வீடும் வேண்டா விறவின் விளங்கினார்".**

**(பெரிய புராணம், திருக்கூட்டச் சிறப்பு, 8)**

ஆகவே, அன்பு மிகப் பெரிது. தவம், யோகம் போன்றவைகளைவிடப் பெரிது. அன்பினால் உருகினால் சிவத்தை அடையலாம். அவ்வாறு முதல்வனை நாடுங்கள். நானும் சிவத்தை அன்பினாலேயே நாடினேன். பெரும் கருணையோடு சிவபெருமான் என் அன்பை ஏற்று உருக்கித்தன் அன்பையே தலையாக நிற்கச் செய்தான். மீண்டும் மீண்டும் பிறவிக் கடலிலே மூழ்கக்கூடிய நிலையை நீக்கி வினைகளைச் சிறிது சிறிதாகக் குறைத்துக் கொண்டு சாவை நோக்கிச் செல்வதைவிட இறவாமையை நாடுவதே மேலாகும். அதை அன்பினால் செய்வதே சாலச் சிறந்தது. அன்பு அறிவைத் தருகின்றது. ஒளியைத் தருகின்றது, மும்மலங்களை அழிக்கின்றது. அன்புள்ளம் படைத்தவர்கள் சிவமாம் தன்மையைப் பெறுகின்றனர். அன்பிற்கும், சிவத்திற்கும் இடைவெளி இல்லை. அன்பே சிவம்.

**"அன்பு சிவம்இரண் டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.".** **(திருமந்திரம் - 270)**

# 10. "உள்நின்ற சோதி"

ஒரு காலத்தில் பிரம்மனும் திருமாலும் தங்களுடைய வலிமையால் செருக்கடைந்தார்கள். பிரம்மனும், திருமாலும் மற்ற தேவர்களும் ஆணவப் போக்கில் நிற்கும் தன்மையை நீக்கியவர்கள் அல்லர் என்று புராணங்கள் கூறுகின்றன. அவர்களிடையே யார் பெரியவர் என்கின்ற போட்டி உண்டாயிற்று. விவாதம் தொடங்கியது. விவாதம் முற்றிப் போரில் முடிந்தது. இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பரம்பொருளாகிய சிவபெருமான் அவர்கள் முன் ஓர் அனல் பிழம்பாய்க் காட்சியளித்தார். அந்தத் தீப்பிழம்பு ஆகாயத்திலும் எல்லா அண்டங்களிலும் பரவி நின்றது. ''நானே கடவுள், நானே கடவுள்'' என்று போர் புரிந்த பிரம்மனும் திருமாலும் அந்தச் சோதிப் பிழம்பைப் பார்த்து அதனுடைய அடியையும், முடியையும் காண்பவர்களே அவர்களில் முதல்வராவர் என்று ஒப்பந்தம் செய்து கொண்டனர். ஆணவ மிகுதியால் தங்களை முழுமுதற் கடவுள் என்று நினைத்திருந்ததைத் திருமூலர் பேதைமை என்று விளக்குகின்றார். திருமால் வராக வடிவம் கொண்டு, நிலத்தைப் பிளந்து பல்லாயிரம் ஆண்டுகளாகப் பாதாளத்தில் பல பாகங்களுக்குச் சென்று அந்தச் சோதிப் பிழம்பின் அடியைக் காண முற்பட்டான். கடைசியில் திருமாலுக்குத் தோல்வியே கிட்டியது. தான் தோற்றதாகத் திருமாலும் ஒப்புக் கொண்டான். திருமால் செல்வத்திற்கு இருப்பிடம். ஆகவே, செல்வத்தால் மட்டும் இறை அனுபவத்தை அடைய முடியாது. இறைவனைப் பெற முடியாது. பிரம்மனோ அன்னப்பறவை உருவம் எடுத்துப்பல்லாயிரம் ஆண்டுகள் அந்தச் சோதிப் பிழம்பின் முடியைக் காண வேண்டும் என்கிற நோக்கத்துடன் முடியை நோக்கிப் பறந்து கொண்டே இருந்தான். ஆயினும் அந்த முடியைக் காணவில்லை. முடியைக் காணாதவன் தனது இயலாமையை ஒப்புக் கொண்டிருக்கலாமே? ஆணவமலத்தால் கட்டுப்பட்டு, உண்மை அறிவு மறைக்கப்பட்ட நிலையில் அவன் இதைச் செய்யவில்லை. அவனுடைய மனத்தில் இருந்த ஒரே ஆசை திருமாலுக்கு முன் தான் சாதித்துவிட வேண்டும் என்பதே. எனவே, தான் முடியைக் கண்டுவிட்டதாகப் பிரம்மனே பொய் கூறினான். பிரம்மன் கல்விக்கும், நூல் அறிவுக்கும் இருப்பிடம். மிகுந்த கல்வி கற்றவர்கள், நூல் அறிவினால் ஓங்கியவர்கள் தத்துவங்களைக் கரைத்துக் குடித்து விட்டுச் சில நேரங்களில் தாங்கள் சொன்னதுதான் சரி என்று பொய்யாகக்கூடச் சாதிப்பது

உண்டு. ஆனால், இறைவனை இப்படியெல்லாம் பொய் சொல்லி அடைந்து விட முடியுமா?

**''அடிமுடி காண்பார் அயன்மால் இருவர்**
**படிகண் டிலர்; மீண்டும் பார்மிசைக் கூடி**
**அடிகண் டிலேன்என் றச்சுதன் சொல்ல**
**முடிகண்டேன் என்றயன் பொய்மொழிந் தானே''**

**(திருமந்திரம் - 88)**

பிரம்மன் பொய் கூறியது சிவபெருமானுக்குப் பொறுக்கவில்லை. அக்னி தம்பத்தைப் பிளந்து கொண்டு சிவபெருமான் உக்கிர ரூபத்துடன் காட்சியளித்தான். பிரம்மனுக்கு எங்கும் கோயில் உண்டாகாதவாறு சபித்தான். பிரம்மதேவன் பதைபதைத்து, அஞ்சி மன்னிப்புக் கேட்டான். திருமாலும் பிரம்மனும் மீண்டும் மீண்டும் சிவபெருமானுடைய பெருமையைப்பாடித் துதித்து, பூசித்து வழிபட்டார்கள். அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று இறைவன் மக்கள் வழிபாட்டுக்குரிய இலிங்க வடிவமாகக் காட்சியளித்தான். இதுவே இலிங்கத் தோற்றத்திற்கு மூலமென்று இலிங்க புராணம் விளக்கிக் கூறுகின்றது. இதைத்தான் **''திருமாலும் பன்றியாய்ச் சென்று உணராத் திருவடி''** என்று மாணிக்கவாசகர் பாடுகின்றார்.

**''அரனார் அழலுருவாய் அங்கே அளவிறந்து**
**பரமாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ''**

என்பதும் திருவாசகமாகும்.

சேக்கிழாரும் இந்த இலிங்க புராண வரலாற்று உண்மையைத்

**''தொழுவார்க்கே அருளுவது சிவபெருமான் எனத்தொழார்**
**வழுவான மனத்தாலே மாலாய மாலயனும்**
**இழிவாய கருவிலங்கும் பறவையுமாய் எய்தாமை**
**விழுவார்கள் அஞ்செழுத்தும் துதித்துய்ந்த படிவிரித்தார்''**

என்று விளக்கியுள்ளார்.

இறைவன் எங்கும் நிறைந்தவன். சர்வ வியாபி. அணுவிற்கு அணுவாயும், அப்பாலுக்கு அப்பாலாயும் நிற்பவன். அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பார் தாயுமானவர். ''அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி, அருளொடு நிறைந்தது எது?'' என்பதும் அவருடைய திருவாக்காகும்.

எண்ணிய எல்லாவற்றையும், விரும்பியது எல்லாவற்றையும் அளிக்கத்தக்க அருள்நிறைந்த ஒளியே அருட்பெரும் சோதியாகும் என்று வள்ளலார் பாடுகின்றார்.

**"எனைத்தும் துன்பிலா இயல்பளித்து எண்ணிய**
**அனைத்தும் தரும்சபை அருட்பெருஞ் சோதி".**

ஆயினும், வெறும் செல்வத்தாலும், கல்வி அறிவாலும் இறைவனைப் புரிந்து கொள்ள இயலாது. நூல்களைப் படித்து, சாத்திரங்களைப் பேசி இறைவனைக் கண்டுகொள்ளுதலும் கடினம். தர்க்கவாதங்களும், ஆராய்ச்சிகளும் நம்மை இறைவனிடம் சேர்த்துவிடா. இறை அனுபவம் என்பது இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டது. இறைவன் எப்பொழுதும் சுடர்விட்டுக் கொண்டே உள்ளான். அவனைப் புரிந்து கொள்ள வேறுவிதமான வழிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும் என்பார் திருஞானசம்பந்தர்.

**"ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்**
**சோதிக்க வேண்டா; சுடர்விட்டுளன் எங்கள் சோதி;**
**மாதுக்கம் நீங்க லுறுவீர், மனம்பற்றி வாழ்மின்"**

திருநாவுக்கரசர் இறைவனைச் ''சொற்றுணை வேதியன் சோதி வானவன்'' என்று குறிப்பிடுகின்றார்.

எனவே, புராணங்களிலிருந்தும் அருளர்ளர்களுடைய திருவாக்கிலிருந்தும் இறைவன் சோதிமயமானவன் என்று நன்கு தெரிந்து கொள்ளலாம். இந்தச் சோதியை நாம் எப்படிக்கண்டு அனுபவிப்பது? நமது உடலானது பூதங்கள், இந்திரியங்கள், புலன்கள், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்கிற நான்கு அந்தக் கரணங்கள் ஆகியவற்றின் சேர்க்கையாகும். இவற்றைக்கொண்டே நாம் அனுபவத்தைப் பெறுகின்றோம். அறிவை வளர்க்கின்றோம், இன்பத்துன்பங்களைப் பெறுகின்றோம். இந்தக் கருவிகள் தூல நிலையிலும், சூக்கும நிலையிலும் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. இந்தக் கருவிகளோடு நமது உயிரானது ஒன்றிப் போயிருப்பதால், இந்தக் கருவிகளால் கிடைக்கும் அனுபவம்தான் நமது உயிரைத் தாக்குகின்றது என்பதை நாம் உணர்ந்து கொள்ளவில்லை. உயிரையும், உடலையும் ஒன்றாக நிலைத்தே வாழுகின்றோம். உண்மையில் உடலும் அதனைச் சார்ந்த கருவிகளும் சடப்பொருள்களாகும், எல்லா அனுபவங்களையும் உயிரே பெறுகிறது. அந்த அனுபவங்கள் வாயிலாக உயிரே மீண்டும் மீண்டும் பிறவிகளை எடுத்து வினைக்கடலை வளர்த்துக் கொள்கின்றது. புறக்காட்சிகளைச் சதா அனுபவித்துக் கொண்டிருக்கும் உயிரானது அகக்காட்சிகளை அறிந்து கொள்ள பொதுவாக முற்படுவது இல்லை. உயிரினுடைய வினைக் கூட்டங்களின் அழுத்தமே இதற்குக் காரணமாகும். புறக்கருவிகள் எப்பொழுதும் புறத்தே சென்று கொண்டிருக்கின்றன. **''கண்ணொன்று பல காணும்; தனைக்காணா''** என்பார் திருமூலர். இது உயிருடைய இயல்பாகும். தான் சார்ந்திருக்கும் பொருளையே பற்றி நிற்கும். அந்த நிலையில் பிரபஞ்சம் எங்கும் பரவி நிற்கும் பரம் சுடரைப் பார்ப்பதற்கான தகுதி பெறாததன் காரணத்தால் அந்தப்

பரம்சுடரை உயிரானது காண்பதில்லை. ஆனால், உண்மையில் இறைவன் எப்படி இருக்கின்றான்? அவன் **''நிலமுழு தண்டத்துள் நீளியன்''**. மண்ணும் விண்ணும் பரந்து நிற்பவன். பல உடம்புகளாக நிற்கின்றான். அவற்றில் உள்ள உயிர்களுக்குள் உயிராய் நிற்கின்றான். அந்த உயிர்களின் அறிவு ஒளியாக நிற்கின்றான். தனது எல்லையற்ற பேராற்றலால் சூரிய, சந்திர மண்டலங்களைக் கடந்து, அண்டங்கள் முழுவதும் ஊடுருவ நிற்கின்றான். பிரம்மன், திருமால் போன்றவர்கள் கண்களுக்கு அழல் பிழம்பாகக் காட்சியளிக்கின்றான்.

**''ஊனாய் உயிராய் உணர்வங்கி யாய்முன்னஞ்**
**சேணாய்வா னோங்குந் திருவுரு வேஅண்டத்**
**தாணுவும் ஞாயிறுந் தண்மதி யுங்கடந்**
**தாண்முழு தண்டமு மாகிநின் றானே''** (திருமந்திரம் - 374)

அதாவது, உடலும் உடலைச் சார்ந்த கருவிகளும் பிற பொருள்களை அறிகின்றன. தம்மை அறிந்து கொள்வதில்லை. உயிரானது உடலையும், கருவிகளையும் பயன்படுத்திப் பிற பொருள்களைப் பற்றித் தெரிந்து கொள்கின்றது. தன்னைப் பற்றித் தெரிந்து கொள்வதில்லை. இறைவன் அண்டமெல்லாம் பரந்து உயிருக்கு உயிராயும் நிற்கின்றான். ஆனால், உயிர்கள் தம்முள் இருக்கும் இறைவனைப் பற்றித் தெரிந்து கொள்வதில்லை. இதற்குக் காரணம் இறைவனுடைய மறைப்புச் சக்தியாகிய திரோபவமாகும். இதுவும் அறியாமையும் ஆகும். இந்த அறியாமையின் சேர்க்கை காரணமாக உயிருக்குயிராய் நிற்கும் இறைவனைப் பற்றி நாம் உணர்ந்து கொள்ள முற்படுவது இல்லை. உண்மையில் இறைவன் உள்ளத்தினுள்ளேயே நிற்கின்றான். உயிரினிடத்தே சோதியாகப் பிரகாசிக்கின்றான். உயிருக்கும் அவனுக்கும் இடையே சிறிது இடைவெளி கூடக் கிடையாது. இதை உயிர் உணர்ந்து கொள்வதில்லை. இதற்குக் காரணம் உயிரானது வெளிப்புறப் பொருட்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதுதான். தன்னுள் இருக்கும் இறை உண்மையை அறிந்து கொள்ளாத நிலை அறியாமை எனப்படும்.

**''உள்ளத் தொருவனை உள்ளுறு சோதியை**
**உள்ளம்விட் டோரடி நீங்கா ஒருவனை**
**உள்ளமுந் தானும் உடனே இருக்கினும்**
**உள்ளம் அவனை உருவறி யாதே''** (திருமந்திரம் - 431)

இதுவே உயிர் அனுபவிக்கும் மருள் நிலையுமாகும். இந்த நிலையும் ஓர் இருண்ட நிலைதான். வெளிச்சம் சற்று காணப்படுகின்றது ஆனால் இந்த வெளிச்சம் விஷய அனுபவங்களுக்கே பயன்படுத்தப்படுகின்றது. இந்த நிலை நீங்கி உயிர் தூய ஒளியிலே தன்னை நிறுத்திக் கொள்ள வேண்டும். இதற்கான அருளைப் புரிவதும் இறைவனே ஆவான். பல பிறவிகளைப் பெற்று, பல இன்பத்துன்பங்களை அனுபவித்து இறைவனுடைய பேரருளால் உயிர் தன்னுடைய வினைக்கூட்டங்களைக் குறைத்துக் கொள்கின்றது.

மலங்களுடைய தன்மை குறைகின்றது. அறிவுதயம் ஏற்படுகின்றது. அப்பொழுது உயிரானது தனது உண்மை நிலையை அறிந்து கொள்கின்றது. தனக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பைப் பற்றித் தெரிந்து கொள்கின்றது. அப்பொழுது உயிர் தன்னுள் இறை எனும் சோதியை உணர்ந்து கொள்கின்றது. இதுவே உள்ளத்து இருள் நீங்கிய நிலையாகும். பகலில் சூரியனும், இரவில் சந்திரனும் தோன்றிப் பிரகாசிப்பதன் மூலமாக நாம் பெறும் ஒளியானது புறத்தே உள்ள ஒளியாகும். இந்த ஒளி உள்ளத்தைச் சூழ்ந்துள்ள இருளை நீக்கும் ஆற்றலைப் பெற்றதில்லை. திருவருளே உள்ளத்திற்கான விளக்கத்தைத் தரும்.

**"தெருளும் உலகிற்குந் தேவர்க்கும் இன்பம்**
**அருளும் வகைசெய்யும் ஆதிப் பிரானும்**
**சுருளுஞ் சுடருறு தூவெண் சுடரும்**
**இருளும் அறநின் றிருட்டறை யாமே"** **(திருமந்திரம் - 435)**

திருமூலர் பெருமான் திருவருளை முழுமையாகப் பெற்றவர். உள்நின்ற சோதியை உணர்ந்தவர். விண்ணில் அமரர்கள் இறைவனை இன்பப் பொருளாக விரும்புகின்றனர். மண்ணில் மக்கள் இறைவனைப் புகழ்ந்து திருக்கோலத்தைக் காண ஆவல் கொள்கின்றார்கள். ஆனால், திருமூலரோ இறைவனை உயிருக்குள் கண்ணிலுள்ள கருமணியைப் போல் காண்கின்றார். இறைவன் மண்முதலாகிய ஐம்பூதக் கூட்டங்களிலே பரந்து நிற்கின்றான். அதேநேரத்தில், உயிரின்கண் நிற்கின்றான். உயிரை ஆட்டுவிக்கின்றான். இந்த நிலைமை திருமூலர் உள்ளத்தில் எப்படி விளங்குகின்றது தெரியுமா? இறைவன் உயிருடன் கலந்து நிற்கும் தன்மை, நீரில் கலந்த பால்போல் இருக்கின்றது என்று திருமூலர் கூறுகின்றார். அத்துடன் அவர் நிற்கவில்லை. நீரில் பால்போல் கலந்து நிற்பது ஓர் நுட்பமான நிலையாகும். உயிருக்குயிராக இறைவனும் கலந்து நிற்பது அதிநுட்பமான நிலை ஆகும். இந்த உண்மையைக் கண்டு கொண்டால் உள்ளத்திலே எழும் பேரின்பத்தைப் பற்றி விவரிக்க இயலுமா? அந்த உணர்வினைத் திருமூலர் ''சோராமற்காணும் சுகம்'' என்கின்றார். இதை ''அறிந்தேனே'' என்று அவர் கூறுவது அவர் பெற்ற அனுபவத்தைக் குறிக்கும். இந்த அனுபவம் நூலறிவால் ஏற்பட்ட அனுபவம் அன்று. இந்த அனுபவம் இறைவனுடைய பேரருளால் உள்ளத்தே தோன்றி, எழுந்து, நிரம்பி நிற்கும் அனுபவமாகும்.

**"ஆரும் அறியாத அண்டத் திருவுருப்**
**பார்முத லாகப் பயிலுங் கடத்திலே**
**நீரினிற் பால்போல நிற்கின்ற நேர்மையைச்**
**சோராமற் காணுஞ் சுகம்அறிந் தேனே"**

**(திருமந்திரம் - 450)**

காரைக்கால் அம்மையாரும் இத்தகைய அனுபவம் பெற்றார்கள். ஒன்று இறைவனைத் திருமூர்த்தமாகத் தரிசிக்கலாம். மற்றொன்று அன்பினால் இறைவனை நமக்குள் எண்ணி, அனுபவித்து இன்பமடையலாம். ஆனால், அகக்கண் கொண்டு பார்ப்பவருக்கு இறைவன் அவர்களுடைய சித்தத்தில் சோதிமயமாகக் காட்சியளிப்பான் என்று கூறுகின்றார்.

**''நாண்பார்க்கும் காணலாம் தன்மையனே; கைதொழுது**
**காண்பார்க்கும் காணல்ஆம்; காதலால் - காண்பார்க்குச்**
**சோதியாய்ச் சிந்தையுனே தோன்றுமே, தொல்உலகுக்கு**
**ஆதியாய் நின்ற அரன்.'' (அற்புதத் திருவந்தாதி)**

**''இது அன்றே**

**மின்னும் சுடர் உருவாய் மீண்டு ஆய்என் சிந்தனைக்கே**
**இன்னும் சுடர்கின்றது இங்கு''. (அற்புதத் திருவந்தாதி)**

இறைவனாகிய திருவிளக்கு உள்ளத்தின் நின்று, சுடர்விட்டுப் பிரகாசித்துப்பல ஆற்றல்களைப்புரிவதை நமச்சிவாயமாகிய ஐந்தெழுத்தென உணர்ந்த திருநாவுக்கரசர் இவ்விளக்கின் அருமையைப் பற்றிப்பின்வருமாறு பாடுகின்றார்:

**''இல்லக விளக்கது விருள்கெ டுப்பது**
**சொல்லக விளக்கது சோதியுள்ளது**
**பல்லக விளக்கது பலருங் காண்பது**
**நல்லக விளக்கது நமச்சி வாயவே''. (நமச்சிவாயத்திருப்பதிகம்)**

இறைவனை **''உள்ளத்து ஒடுங்கும் புறத்துளும் கள்ளத் தலைவன் கமழ்சடை நந்தி''** என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். இதே கருத்தை **''உள்ளத்தினுள்ளே உளப்பல தீர்த்தங்கள்''**, **''தெள்ளத்தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்''**, **''தேயமும் நாடும் திரிந்து எங்கள் செல்வனைக் காயம் இந்நாட்டிடைக் கண்டு கொண்டேனே''** போன்ற திருமந்திர அடிகள் நமது உள்ளத்தில் மேலும் பதிய வைக்கின்றன.

இந்தக் கருத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய கட்டம் நமக்கு இப்பொழுது வந்து விட்டது. நமக்கு முகம் இருக்கின்றது. முகத்தில் இரு கண்கள் இருக்கின்றன. இந்த முகத்தின் கண்களால் நாம் பார்க்கின்றோம். காணும் வெளிப்புறக் காட்சிகள் நமது மனதை வந்தடைந்து உள்ளத்தில் அனுபவங்களை வாரி வழங்குகின்றன, அறிவைத் தருகின்றன. இந்த அறிவு முடிவான அறிவு அல்ல. நிலையான அறிவை, பேரறிவை நாம் பெற வேண்டும். அதற்கு முகத்தின் கண்களால் மட்டும் பார்த்தால் போதாது. நமக்கு உள்ளும் புறமும் உண்டு. உள்ளமாகிய அகத்திற்கும் காணும் சக்தி உண்டு. அந்தச் சக்தி நம்மிடமிருந்து மறைக்கப்பட்டிருக்கிறது. அதுவும் இறைவனுடைய அருளே. அவனுடைய அருளாலேயேதான் இந்த

மறைப்புத்திரை நீக்கப்பட வேண்டும். புறத்திலுள்ள கண்கள் அறிவு பெறுவது புறத்தே உள்ள ஒளியால், அகத்திலுள்ள கண்கள் இப்பொழுது இறைவனுடைய அருளால் ஒளிபெற வேண்டும். எனவேதான் திருமூலர்

**"முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்**
**அகத்திற் கண்கொண்யடு காண்பதே ஆனந்தம்"**

**(திருமந்திரம் - 2944)**

என்கிறார்.

இந்த அகவழி என்பது என்ன? முதலில் இந்திரியங்களையும், புலன்களையும் அவை வழி போகாது தடுத்து நிறுத்த வேண்டும். மனத்தை ஒடுக்கி, சித்தத்தை அடக்கி, புத்தியை நெறிப்படுத்தி, உலகப் பொருள்கள் மீது உள்ள பற்றினைக் குறைத்துக் கொண்டு சரியை, கிரியை, யோகம் போன்ற பாதைகளால் இறை சிந்தனையையும், நாட்டத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். இறைவனை அன்புற நாட வேண்டும். இறைவனுடைய பேரறிவு, பேராற்றல் இவற்றின் முன்பு உயிரினுடைய சிற்றறிவிற்கும், சிறு ஆற்றலுக்கும் இடமில்லை என்கின்ற அடக்க உணர்வை வளர்க்க வேண்டும். சகல சீவராசிகளின்பால் ஆழ்ந்த அன்பினைச் செலுத்தித்தற்போதம் என்கின்ற தன் நினைப்பு வலிமை இழக்கும் வகையில் நம்முடைய வாழ்வினை அமைத்துக் கொள்ள வேண்டும். இவையே அறம் என்றும், தவம் என்றும் சொல்லப்படும். இந்தப் பாதைகளிலே தீவிரமாகச் சாதகம் செய்யச் செய்ய உடல் தான் என்கின்ற நினைப்புக் குறைந்து உயிரைப் பற்றிய அறிவு மிகும். ஆனால் அத்துடன் நின்றால் போதாது. உயிர் இறைவனாகாது. இறைவன் உயிருக்குயிராய் இருந்தாலும் உயிர் என்றும், எக்காலும் இறை ஆகமாட்டாது. தன்னையே உடல் என்று நினைக்கும் பொழுதும் உயிரையே இறைவன் என்றும் கருதும் போதும் நம்மை அறியாமை என்கின்ற இருள் மூடிக்கிடக்கின்றது. இறைவனுடைய அருளால் நம்முடைய வினைகளின் வலிமை நீங்கி மலபரிபாகம் ஏற்படும் போது உள்ளத்தில் ஒளி தோன்ற ஆரம்பிக்கின்றது. உடலைப் பற்றிய நினைவுகள் அகன்று விடுகின்றன. ஞாயிறு எழும்பொழுது இருள் நீங்குவது போல உண்மை புலரத் தொடங்குகின்றது. இதைத்தான் **"ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி"** என்பார் மாணிக்கவாசகர் பெருமான். உலகை நோக்காது நிற்கும் நிலை உண்மை நிலையாகும். இந்த உண்மை நிலையில் இறைவனுடைய பொன்னடிகள் காணப்படுகின்றன. திருவருள் மலங்களின் செயலாற்றலை ஒடுக்குகின்றது. இந்த இயக்கமும் உள்நின்றே நடக்கின்றது. இவ்வாறு நடைபெறுவதை ஆனந்தக்கண் என்கின்றார் திருமூலர். இதுவே அருட்கண் எனப்படும். ஞானக்கண்ணும் இதுவே. இதையே அறிவால் பார்க்காமல் அருளால் பார்க்கும் நிலை என்றும் அருளாளர்கள் கூறுவார்கள். இந்த அருமையான இயக்கத்திற்கு மூலகாரணமாக இருப்பது இறைவனுடைய அருட்சக்தி. உயிர்களை உய்விக்கும்பொருட்டு, பல பிறவிகளில் உடல்களைச் சேர்த்து அவற்றை நடத்திச் சென்று பின்னர் அருள்பாவித்து

அவையோடு ஒட்டியிருக்கும் மலங்களைத் தனது அருளால் நீக்கி, தனது திருவடியை என்றும் சிந்தையுள்ளே நிலைக்கச் செய்வதும் இறைவனுடைய அருட்செயலே ஆகும். உயிர் பளிங்கு போன்றது. இதுவரை விஷய அனுபவங்களைச் சார்ந்து இருந்தது. இனிமேல் இறை அனுபவத்தைச் சாரும். இதை **"பளிங்கில் பவளம் பதித்தான் பதியே"** என்கிறார் திருமூலர்.

**"விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு**
**தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து**
**உண்ணின் றுருக்கியொ ரொப்பிலா ஆனந்தக்**
**கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே". (திருமந்திரம் - 113)**

இதுவே அருள்நிலை, அறிவுநிலை, இருள் நீங்கி உள்ளொளி பரவிய நிலை. இந்த நிலையில் உடல் நினைவு மறையும். பிறப்பு அறுக்கப்படும். அருளொளியில் இறைவனுடைய உண்மை உணரப்படுகிறது. இறைவனுடைய ஆற்றலால் தீயும், சூரியனும், சந்திரனும் ஒளி பெறுவது உண்மைதான். அதேபோல இறைவனுடைய அருளால் உயிரும் மலம் நீங்கச் சிவ ஒளியைப் பெற்று விளங்குகின்றது.

**"விளங்கொளி யங்கி விரிகதிர் சோமன்**
**துளங்கொளி பெற்றன சோதி யருள**
**வளங்கொளி பெற்றதே பேரொளி வேறு**
**களங்கொளி செய்து கலந்துநின் றானே" (திருமந்திரம் - 2683)**

இதுவே தெளிந்த நிலையுமாகும். சித்தம் என்றும் சிவன் என்றும் வெவ்வேறு நிலைகள் இல்லை என்று திருமூலர் கூறி, மனத்திலே தெளிந்த நிலை அடைந்தவர்களுக்குச் சித்தத்திலே சிவனும் வெளிப்படும் என்று திருமூலர் கூறுகின்றார் (திருமந்திரம் - 2853). இந்தத் தெளிந்த சித்தத்தில் மெய்யுணர்வு ஏற்படும். இந்த மெய்யுணர்வைப் பெறும் உயிரானது மலம் நீங்கியதாக ஒளி நிலையைப் பெறும். தன்னுள் இறைவன் உள்ளான் என்கின்ற நிலையும் மறையும். சிவத்தை உள்ளத்தில் கொள்ளுதல் ஒரு கட்டம். சிவத்தில் தான் அழுந்துவது அடுத்த கட்டம். மெய்யுணர்வு பெற்று எல்லாமும் இறைவன் என்கின்ற உணர்வால் அழுந்தப்பட்டு, அந்த உணர்வையே தங்களது அடக்க நிலை என்று கருதிச் சிவன் செயல் யாவையும் நோக்கி நின்று, சிவமாய் எங்கும் தாமாகி இருப்பதே ஓர் ஒப்பற்ற பேறாகும் என்பார் திருமூலர். **"உய்யவல்லார்கட்கு ஒடுக்கம் பிரணவம்"** என்பது திருமந்திரம். இதுவே **"இழவு வந்து எய்திய சோம்பா"**கும். சிவமாகிய பேரொளியில் உயிராகிய சிற்றொளி சேர்ந்து விடும். **"சுத்த வெளியில் சுடரில் சுடர் சேரும்"** (திருமந்திரம் - 134). குற்றமற்ற பாலினில் நெய் கலந்து நிற்பதுபோல் எல்லையற்ற அகண்ட இறை வியாபகத்தில் உயிர் கலந்து நிற்கும். பிரம்மனும் திருமாலும் அகண்ட சோதியைக் கண்டு அதன் முடியையும், அடியையும் காணாமல் தோல்வியுற்றார்கள். அந்தச் சோதிக்குள்ளே அவர்களால் புக இயலவில்லை அவர்களுடைய ஆணவச்

செருக்கின் காரணமாக் அந்தச் சோதியும் அவர்களைத் தன்னுள் சேர்க்கவில்லை. ஆனால் எங்கும் வியாபகமாக நின்று, அறியாமை இருளைப் போக்கவல்ல இறைவனாகிய ஒப்பற்ற அகண்ட சோதியில் தன் வாழ்நாளிலேயே சேர்ந்த பேர் பெற்றவர் சீர்காழிப் பிள்ளையார் திருஞானசம்பந்தர் ஆவார். அவருடைய திருமணத்தன்று திருஞானசம்பந்தர் **''நல்லூரில் மேவும் நம்பனே உன் பாதம் சேரும் பருவமிது''** என்று நெஞ்சுருகப் பாடி சிவபெருமான் அருள்பெற்று, அங்கே எழுந்த மாபெரும் சோதியில் கூடியிருந்த தொண்டர்கள் அனைவருடன் உட்புகுந்தார். சோதியும் அடங்கியது. மீண்டும் பழைய திருமணக் கோவில் அந்த இடத்தில் தோன்றியது. மக்கள் பிறவிப் பிணி தீரவும், உலகம் உய்யும் பொருட்டும், தீந்தமிழில் திருஞானசம்பந்தர் பாடி அருளிச் செய்துள்ள திருப்பதிகங்கள் இன்றும் நமக்கு அந்த அகண்ட் சோதியை உள்ளத்திலும், புறத்திலும் கண்டு, கலந்து பேரின்பம் அடைய வழிவகை செய்ய நம்மிடையே கிடக்கின்றன. அவற்றைப் படித்து, தெளிந்து, உணர்ந்து உய்வோமாக.

# 11. "அறம் அறியாரே!"

நான் பள்ளிச் சிறுவனாக இருந்த காலம். எனது ஆசிரியர் ஒருவர் திருவாரூர் மனுநீதிச் சோழனுடைய வரலாற்றை அறவாழ்விற்கு உதாரணமாக அடிக்கடி எடுத்துக்காட்டுவார். அந்த ஆசிரியர் வறுமை நிலையிலே எளிய வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார். ஆனால், அவர் உயர்ந்த எண்ணங்களைக் கொண்டிருந்தார். எளிமையும், தூய்மையும் நிறைந்த அவர் மனுநீதிச் சோழனின் வரலாற்றைக் கேட்போர் மனம் உருகும் வகையில் எடுத்துச் சொல்லுவார். எனது உள்ளத்தில் நீங்காத இடத்தைப் பெற்ற அந்த வரலாற்றைப் பல ஆண்டுகளுக்குப் பின்னர் சேக்கிழார் பெருமானின் பெரியபுராணத்தில் மனுநீதிச் சோழன் தனது எண்ணத்தால், வாக்கால், செய்கையால் ஒரு மிகப் பெரிய புரட்சியைச் செய்திருந்தான் என்று என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. அந்தப் புரட்சியின் விளைவாக அறத்திற்கு இலக்கணம் வகுத்துத் தந்த மாபெரும் மன்னனாக மனுநீதிச் சோழன் எனது சிந்தையில் திகழ்ந்தான்.

அது என்ன புரட்சி? மனுநீதிச் சோழனின் அருமை மகன் ஒரு நாள் தேரிலேறி அரசுலாத் தெருவில் நகர்வலஞ் சென்றான். ஒரு இளைய பசுக்கன்று திடீரென்று தேர்க்காலின் இடைப் புகுந்து இறந்து விட்டது. தாய்ப்பசு கண்ணீர் வடிய அரசனுடைய மாளிகைக்கு முன் வந்து ஆராய்ச்சி மணியை அடித்தது. அரசனுடைய அமைச்சர்கள் அவனுக்கு ஆறுதல் தரும் நோக்கத்துடன், பசுவதைக்குப் பிராயச்சித்தம் செய்யும் வகையில் வழி வழியாக வந்த முறைகளைக் கையாளலாமென அறிவுரை வழங்கினார்கள். உலகியல் வழக்கிலே இதுபோன்ற குற்றம் முன்பும் நிகழ்ந்திருக்கிறது என்றும், தொன்று தொட்டு நடைமுறையில் இருந்து வரும் பிராயச்சித்த முறைகளைச் செயல்படுத்துவதன் மூலம் அரசன் தனக்கு நேர்ந்த குற்றத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்றும் கூறினார்கள். இதைக் கேட்ட மன்னன் சினம் கொண்டான். தன்னுடைய கடமைகளையும், பொறுப்புகளையும் முற்றிலும் உணர்ந்தவன் அவன். ஓர் அரசனுக்குரிய அறம், நிலத்தில் வாழும் பல உயிர்களைத் தன்னாலும், தனது பரிசனங்களாலும், பகைவர்களாலும், கள்வராலும், ஏனைய உயிர்களாலும் இடையூறு நேராமல், தருமம் தவறாமல் பாதுகாப்பதே ஆகும். இதை மனுநீதிச் சோழன் நன்கு உணர்ந்திருந்தான். **"மெய்வண்ணந் தெரிந்துணர்ந்த மனுவென்னும் விறல்வேந்தன்"**

என்கிறார் சேக்கிழார் பெருமான். அமைச்சர்கள், தொன்றுதொட்டு வரும் பழக்கத்தை அறமாகக் கொண்டு, அதன் அடிப்படையில் அரசன் தனக்கு ஏற்பட்ட இழுக்கை நீக்கிக் கொள்வதற்காகப் பிராயச்சித்த வழிகளை எடுத்துக் கூறும்போது மன்னன் அவர்களுக்கு அளித்த பதில் சிந்திக்கத்தக்கது. ''அமைச்சர்களே, நீங்கள் சொல்லும் விதிகள் ஒருபுறம் இருக்கட்டும். ஆனால், அறத்தின் சிறந்த உண்மைத் தன்மையை நீங்கள் புரிந்து கொள்ளாமல் பேசுகின்றீர்கள். அந்த உண்மைத் தன்மை தான் என்ன? எந்த உலகில், எந்த ஒரு பசு துன்பத்தால் கதறி வந்து அரண்மனையின் ஆராய்ச்சி மணியை அசைத்து, வீழ்ந்து பதறிற்று? அத்தகைய பசுவினுடைய துன்பத்தை நான் நீக்கக் கடமைப்பட்டவன் அல்லவா? அதுவும் அந்தப் பெரும் துன்பம் என்னால், என் மகனால் அப்பசுவிற்கு நேரிட்டதென்றால் அந்தத் துன்பத்தை நானே தாங்கிக் கொள்வது தான் அறம் அல்லவா?'' என்று அரசன் சொல்லியது அறத்தின் உண்மைப் பெருமையை நிலை நாட்டுகிறது. **''அறநெறியின் செவ்விய உண்மைத் திறம்''** அதுவே.

**''அவ்வுரையில் வருநெறிகள் அவை, நிற்க, அறநெறியின்**
**செவ்விய உண்மைத்திறம் ஓர் சிந்தைசெயாது உரைக்கின்றீர்**
**எவ்வுலகில் எப்பெற்றம் இப்பெற்றித்தாம் இடரால்**
**வெவ்வுயிர்த்துக் கதறிமணி எறிந்து விழுந்தது.**

**''எனமொழிந்து மற்றிதனுக்கு இனி இதுவே செயல் இன்ஆன்**
**மனம் அழியும் துயர் அகற்ற மாட்டாதேன் வருந்தும் இது**
**தனதுறுபேர் இடர்யானும் தாங்குவதே தருமம் என**
**அனகன்அரும் பொருள் துணிந்தான் அமைச்சரும்**
**அஞ்சினார் அகன்றார்''.**

**(பெரியபுராணம்-திருநகரச் சிறப்பு)**

எவ்வுரையும் தனது உயிராக உணர்ந்து கொள்வதே அறத்திற்கு அடிப்படையாக அமைகிறது. அந்த உணர்வே அன்பிற்கு அடிப்படையாகும். ஆகவே, அன்பும், அறமும் இணைந்து நிற்பன. உள்ளத்தில் அன்பு பெருக்கெடுக்கும் போது, அந்த உள்ளம் அறவழியில் இயல்பாகவே செல்லும், ''தருமம் தன் வழிச் செல்கை'' என்கிறார் சேக்கிழார் பெருமான். ஆனால், புறத்தோற்றங்களின் மாயப்பொலிவில் நாம் ஈடுபடும்போது, அறமானது நமது உள்ளத்தின் இயல்பான தன்மையாகும் என்கிற உண்மை நம்மிடமிருந்து மறைக்கப்படுகின்றது. திருவருளே அந்த மறைக்கும் சக்திக்குக் காரணமும் ஆகும். இந்த மறைப்புச் சக்தியால் உந்தப்பட்டு, உயிரானது ஐம்புலன்கள் வழி ஓடி, இன்ப துன்பங்களை மாறி மாறிப் பெற்று, கடல் போன்று வினைகளைக் கூட்டிக் கொண்டு, இறப்பு, பிறப்பு என்கிற மாயச் சூழலுக்குச்சதா வித்திட்டு வருகிறது. இது உண்மை. இந்த நிலையில் நாம் அறத்தை நாடுவதில்லை. பொய்ம்மையைப் பெருக்கி, பொழுதினைச் சுருக்கிப் பயனற்று வாழ்ந்து, செத்து மறைகின்றோம்.

ஆகவே, அறத்தின் ஆழ்ந்த தன்மையைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால், முதலில் நாம் யார் என்று தெரிந்துகொள்ள வேண்டும். இறைவனுடைய அருளால் நம்மைப் பற்றித் தெரிந்து கொண்டவர்கள், இறைவனுடைய திருவடியைச் சார்ந்து இயல்பாகவே அறம் செய்யும் நெறியிலும் நிற்பார்கள். இறைவனைப் பற்றி உண்மையையும் அவர்கள் அறிந்துகொள்கின்றார்கள். அவ்வாறு தம்மை முற்றிலும் அறிந்து கொள்வோர் இறைவனுக்குச் சமமாகவும் உள்ளனர்.

**''தாம் அறிவார் அண்ணல்தாள் பணிவார் அவர்**
**தாம் அறிவார் அறந்தாங்கி நின்றார் அவர்**
**தாம் அறிவார் சில தத்துவராவர்கள்**
**தாம் அறிவார்க்குத் தமர்ப்பர னாமே''.** (திருமந்திரம் - 251)

தன்னைப் பற்றி அறிந்து கொள்வது மிகவும் முக்கியமாகிறது. எல்லா உயிர்க்கும் இறைவன் ஒருவனே என்ற உணர்வு மனதில் வலுவாகப் பதிய வேண்டும். அந்த அறிவே மனிதர்கள் அறவழி நடத்தும். ஏனெனில், அந்த அறிவினால் அன்பு பெருகும், தீயது மறையும், அறம் வளரும், மறம் அழியும். இதை உணராத மனிதர்கள் சுயநலக் குப்பையிலே உழன்று, உடலைப் பேணி, மனதைச் சுருக்கி, பிறரை மதியாமல் தனது நலத்தைப் பெருக்கி, உள்ளத்தை மாயையிலே தள்ளி, பிறவிக் கடலிலே மீண்டும் மீண்டும் மூழ்கி அழிவர்.

**''தாம் தவம் செய்தான் செய்தவத்து அவ்வழி**
**மான்தெய்வமாக மதிக்கும் மனிதர்கள்**
**ஊன்தெய்வமாக உயிர்க்கின்ற பல்லுயிர்**
**நான்தெய்வமென்று நமன் வருவானே''.**

அறம் இறைவனுடன் சம்பந்தப்பட்டதாகும். சிவபெருமானுக்கு அறவன் என்ற ஒரு திருநாமமும் உண்டு. இறைவன் அறத்திற்கு இருப்பிடமாவான். காரைக்கால் அம்மையார் கைலாயத்திற்குச் சென்று இறைவனைக் கண்டு, களித்து, தனக்குப் பிறவாமை வேண்டுமென்றும், பிறப்புண்டேல் இறைவனை மறவாமை வேண்டுமென்றும், இறைவனுடைய திருநடனத்தை என்றும் தரிசித்துக் கொண்டிருக்க வேண்டும் என்றும்கேட்டு **''அறவா நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க''** என்றார்.

சிவபெருமானுடைய வாகனமாகிய இடபம் அறத்தின் வடிவாகும். அறமே இடபமாக இறைவனைத் தாங்குகின்றது. இறைவனை வழிபடும் போது, அறத்தையும் வழிபட வேண்டும். ஏனென்றால், அறமே அன்பர்களையும் பாதுகாக்கின்றது. அறமே எல்லா நலன்களையும் தந்து, இறைவன் திருவடியில் சேர்க்கும். இறைவனுக்கு வாகனமாக இருக்கும் அறனே அன்பர்களையும் தாங்கும். **''தன் கடன் அடியேனையும் தாங்குதல்''** என்பார் திருநாவுக்கரசர். **''தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்''** என்று

அறிவிக்கின்றது கந்தபுராணம். எனவேதான், நீதிநூல் கூற வந்த ஔவைப் பிராட்டியார் முதலாவதாக **"அறம் செய விரும்பு"** என்றார்.

நான் பேசும் அறமானது தெளிந்த சிந்தையும், தூய்மையான உள்ளமும் கொண்டவர்களுடைய அறிவிலிருந்து தோன்றக்கூடிய பண்பாடாகும். அத்தகைய அறம் ஓர் குறிப்பிட்ட காலத்தையோ, இடத்தையோ, மக்களையோ சார்ந்ததல்ல. திருக்குறள் மனதில் மாசுபடாது இருத்தலே அறம் என்பதை ''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்'' என்று கூறுகின்றது. அந்த அறநெறி எல்லாக் காலத்திற்கும், எல்லா இடத்திற்கும், எல்லா மக்களுக்கும் பொருந்தும். மனிதனுடைய மனம், வாக்கு, காயம், ஆகியவற்றை அடிப்படையில் ஒழுங்குபடுத்துவது அறமாகும். ஆகவே, அறம் வாழ்வுடன் கலந்ததாக இருக்கின்றது. மனம் ஒன்று நினைத்து, வாய் வேறொன்று பேசி, உடல் மற்றொன்றைச் செய்வது அறமாகாது. அந்தச் செய்கையால் இன்பமும் பயக்காது. அறத்தின் உண்மை நிலையை அறிந்தவர்கள் அறவழியில் செல்வதைத் தமது இயல்பாகக் கொள்வர். அவ்வாறு சென்று இறைவனுடைய திருவடியை அடையும் திறத்தையும் பெற்றவராவர். இதற்கு மாறாகப் பொய்ம்மொழி கேட்டு மறத்தை அறிந்து, விரும்பத்தகாத செயல்களிலே ஈடுபடுபவர்கள் பிறவிக் கடலிலே மூழ்குகிறார்கள்.

**''அறம் அறியார் அண்ணல் பாதம் நினையும்**
**திறம் அறியார் சிவலோக நகர்க்குப்**
**புறம் அறியார் பலர் பொய்மொழி கேட்டு**
**மறம் அறிவார் பகை மன்னி நின்றாரே''** **(திருமந்திரம் - 262)**

திருமூலர்பெருமான் மேலும் சொல்வதைக் கேளுங்கள். ''நீங்கள் பெரிய செல்வர்களாக இருக்கலாம். மாடமாளிகைகளும் கூட கோபுரங்களும், பணியாளர்களும், வாகனங்களும் உங்களுடைய சொத்தாக இருக்கலாம். மக்கள் உங்களது செல்வத்திற்காக உங்களைப் போற்றிப் புகழுவார்கள். நல்ல உடற் கட்டுடன் இளமை பொங்கி எழும் வயதில் நீங்கள் செல்வத்தையும், இளமையையும், அதனால் கிடைக்கக்கூடிய இன்பத்தையும் நுகரத் துடித்துக் கொண்டிருப்பீர்கள். ஏன், நீங்கள் நல்லவர் என்று கூடப் பேரும் பெற்று இருக்கலாம். ஆனால், சர்வ வல்லமை படைத்த காலன் இவற்றை எல்லாம் பொருட்படுத்தப் போகின்றானா? உங்களுக்கு வேளை வரும் போது உங்களுடைய உயிரை உடலிலிருந்து பிரித்துச் செல்லப் போகின்றான். பறக்கின்ற ஒன்று, கண் சிமிட்டுவதற்கு முன்பு எங்கோ பறந்து சென்று விடும். அது பயன் அடைய வேண்டுமென்றால் உங்களுடைய உயிர் உடலில் இருக்கும்போதே நல்ல தவத்தைச் செய்யுங்கள். நல்ல அறத்தைச் செய்யுங்கள்''.

**''தன்னை அறியாது தான் நலன் என்னாது**
**இங்கு இன்மை அறியாது இளையர் என்று ஓராது**
**பன்மையில் வந்திடும் கூற்றம் படுமுன்னம்**
**தன்மையின் நல்ல தவஞ் செய்யும் நீரே''.** (திருமந்திரம் - 255)

திருமூலர் பெருமான் மேலும் கூறுவார்:

''அவ்வாறு செய்யாமல் நமது வாழ்நாள் முழுவதிலும் காமம், வெகுளி, மயக்கம் போன்ற அழுக்கினை உள்ளத்துடன் சேர்த்துக் கொண்டே போகின்றோம். அதை அகற்றுவதற்கான அறிவையும் பெருக்குவதில்லை. செல்வமும் செழிப்பும் உங்களுக்கு உதவும் போது நீங்கள் பிறருக்குத் தருமம் செய்ய வேண்டுமென்கிற ஒரு எளிய சிந்தனைக்குச் சிறிது இடம் கூடக் கொடுப்பதில்லை. காலத்தை வீணாகக் கழித்து என்ன செய்யப் போகின்றீர்கள்? எல்லாம் முடிந்து இவ்வுடல் எரிந்து அழியும்போது உங்களை எது காக்கும் என்கிற அறிவின்றி நிற்கின்றீர்களே! என்ன செய்யப் போகின்றீர்கள்? ஒன்றினை நாம் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். நமது செய்கைகள் எல்லாம் நம்முடைய வினைக் கடலின் அளவைக் கூட்டிக் கொண்டே போகின்றன. பல பிறப்புகளைப் பெற்றுப்பாவம், புண்ணியம் இரண்டையும் செய்து அதனால் ஏற்படும் இன்பத்துன்பங்களைத் தாங்கி, இளைத்துக் கொண்டே போவதில் பயனில்லை. இந்த வினைக் கடலை விரைவில் தாண்டுவதற்கு வேண்டிய முயற்சிகளில் நாம் உடனடியாக ஈடுபட வேண்டும். அந்த வினைக்கடலில் இருந்து நம்மைக் கரையேற்றுவதற்கான தோணி ஒன்று உள்ளது. அதற்கு இரண்டே அம்சங்கள் உண்டு. ஒன்று, அழியாப் புகழினை உடைய பரம்பொருளைப் பற்றி நின்று செய்யும் தவம், இரண்டு, இல்வாழ்க்கையில் நின்று பற்றற்ற நிலையில் மேற்கொள்ளும் அறம். இவற்றை விட்டால் வேறு வழி இல்லை''.

**''அழுக்கிளை ஓட்டி அறிவை நிறையீர்**
**தழுக்கிய நாளில் தருமமுஞ் செய்யீர்**
**விழித்திருந் தென்செய்வீர் வெம்மை பரந்து**
**விழிக்கவன் றென்செய்வீர் ஏழைநெஞ் சீரே''.**

(திருமந்திரம் - 254)

**''திளைக்கும் வினைக்கடல் தீர்வுறு தோணி**
**இளைப்பினை நீக்கும் இருவழி உண்டு**
**கிளைக்குந் தனக்கும்அக் கேடில் புகழோன்**
**விளைக்குந் தவம் அறம் மேற்றுணை யாமே''.**

(திருமந்திரம் - 258)

திருமந்திரம் அன்பையும், அறத்தையும் இறை சிந்தனைக்கு அடிப்படையாக வைக்கின்றது. சிறந்த இல்வாழ்க்கைக்கு அன்பும், அறமும் இன்றியமையாதது. அத்தகைய இல்வாழ்க்கையை நடத்துபவர்கள், அரும்

தவம் செய்த பேற்றினைப் பெறுவார்கள். ''மனையுள் இருந்தவர் மாதவர் ஒப்பர்'' என்கிறார் திருமூலர். அத்தகைய இல்வாழ்க்கையில் நின்று எல்லா உயிர்களிடத்தும் கருணை காட்டும் மக்கள் இறைவனுடைய திருவடியைக் காண்பர். தம் செல்வத்தைப் பிறருக்குப் பங்கிட்டு, அதனால் அடையும் இன்பத்தையும் மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்து வாழ்பவர் இம்மையிலும் மறுமையிலும் ஓங்கி நிற்பார்கள்.

உலகிலுள்ள எல்லா அறங்களையும் தன்னகத்தே கொண்டு சுருங்கச் சொல்லி விளங்க வைப்பது திருக்குறள். அறத்திற்கு இலக்கணம் தருவது திருக்குறள். திருவள்ளுவர் பெருந்தகை அறத்தைப் பல துறைகளாகப் பிரித்து பல அதிகாரங்களில் விளக்கிக் கூறுகின்றார். திருமூலர் பெருமானும் திருமந்திர மாலையின் முதல் தந்திரத்திலேயே அறத்தின் பல துறைகளையும் விளக்கி விடுகின்றார். உடல் நிலைப்பதில்லை, பொருட் செல்வம் ஒரு வெறும் மாயை. இளமை போன்ற உடல் நிலைகள் நாம் அறியாமலேயே மாறி விடுகின்றன. உயிரை நம்மால் உடலுக்குள் செலுத்த இயலாது. உடலில் இருந்து அது எப்போது வெளிப்படும் என்றும் தெரியாது. இந்த நிலையில் வஞ்சனை பேசிப்பிறருடைய பொருளைக் கவர்ந்து கொடிய வாழ்வை வாழ்ந்து நம்முடைய அழிவை நாமே தேடிக் கொள்ளாமல் அறம்பட வாழ வேண்டும் என்பதே திருமந்திரத்தின் சிறந்த உபதேசமாகும்.

**''அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்**
**வெவ்விய னாப் பிறர்பொருள் வவ்வன்மின்''**

**(திருமந்திரம் - 196)**

கொல்லாமை வேண்டும். பிற உயிர்களை நமது உயிர்களாக நினைக்கும் பாங்கினில் கொலை என்கின்ற எண்ணம் தோன்றுவதற்கே இடமில்லை.

புலாலைத் தவிர்க்க வேண்டும். மற்ற உயிரினங்கள் பால் நாம் செலுத்த வேண்டிய அன்பே இதற்குத் தத்துவமாக உள்ளது. தூய இல்வாழ்க்கை நடத்த வேண்டும். ஒருவன் ஒருத்தி என்கின்ற உணர்வைப் பேணுதலே தூய இல்வாழ்க்கை ஆகும். அறவழியில் மட்டுமே கணவனும் மனைவியும் இன்பத்தைப் பெற முயல வேண்டும். மனம் போகிய போக்கில் சென்று இந்த இன்பத்தின் நோக்கத்தை நழுவ விடக்கூடாது. பிறருடைய பொருளைக்களவு செய்யும் மனப்பான்மையை அகற்ற வேண்டும். களவு பொல்லாது, ஆன்மிகத்தை அழித்து விடும். காமம் அதைவிடக் கொடியது. காமத்தின் வழி ஒருவனுக்கு இழிவினைத் தேடித் தரும். காமம் உடல் இன்பத்தைச் சார்ந்தது. அதை வளர்க்க வளர்க்க தீ போல் வளர்ந்து தன்னையே எரித்து விடும். உள் ஒன்று வைத்துப்புறமொன்று பேசுதல் அறத்திற்கு மாறுபட்டதாகும். தன்னை அறியாதவர்கள் பொய் பேசுவர். பொய் பேசுவதன் மூலம் சுய நலத்தை வளர்த்து, ஆன்மிகத்திற்குத் தேவையான அன்பினை மறப்பர். திருமூலர்பெருமான் கொலை களவு, கள்காமம், பொய்கூறல் ஆகியவற்றை

மலையான பாதகம் என்று கூறுகின்றார். அவற்றை நீக்கி இறைவனுடைய திருவடியிலேயே எப்போதும் தனது சிந்தனையை வைத்துக் கொண்டிருந்தால் துன்பங்கள் கழிந்து விடும். அத்தகையவர்களுக்குப் பேரின்பம் தானாகவே கிட்டும்.

**''கொலையே களவுகட் காமம் பொய்கூறல்**
**மலையான பாதக மாம் அவை நீக்கித்**
**தலையாஞ் சிவனடி சார்ந்தோர்க்**
**கிலையாம் இவைஞானா னந்தத் திருத்தலே''.**

**(திருமந்திரம் - 200)**

குறிப்பாகத் திருமூலர் கள்ளுண்போரை வன்மையாகக் கண்டிக்கின்றார். **''கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறியாரே''** என்பார். **''காமமு கள்ளும் கலரி (கீழ் மக்கள்) கட்கேயாகும்''** என்பார். கள் உண்பவர்கள் ஒழுக்கத்திலிருந்து நீங்கி விடுவார்கள். கள் வாய்மையை அழிக்கும். மது உண்பர் தம்மை மறந்து தமது அறிவுச் சக்தியை இழப்பார்கள். மோகமுற்று, மூடனாகித் தன் நிலையறியாது கலங்குவர். இதற்கு மாறாக, சிவானந்தத் தேனை உண்பதே பேரின்ப நிலையை அளிக்கும் என்பார் திருமூலர். தினந்தோறும் பசு மாட்டிற்கு அரிசி கழுவிய நீரை அளித்தால் பிற குளங்கள் நீர் நிலைகள் ஆகியவற்றை நாடி நீர் அருந்தப் பசுமாடு செல்லாது. அதேபோல வாழ்விற்கு வளமை தரும் நீர் இறைவனுடைய சிந்தனையாகிய தேனாகும். அந்தத் தேனினை உண்டு திளைத்திருப்பவர்கள் நீர்மயமான கள்ளின் அருகில் செல்ல மாட்டார்கள். சிவானந்தத் தேன் தத்துவங்களுக்கு அப்பாற்பட்டு இருக்கக்கூடிய இறை நிலைக்கு நம்மை அழைத்துச் செல்லும். மருளைப் போக்கும். பொய்த்தவ வேடத்தைக் கலைத்து விடும். சிந்தனையை உண்மையான இறை அனுபவத்தில் புகுத்தும். உலக வாழ்க்கையின் மாய நிலையை மாறச் செய்யும். எல்லாவற்றிற்கும் மேலான இறை உணர்வை அடைய வழிகாட்டும்.

**''தத்துவம் நீக்கி மருள்நீக்கித் தானாகிப்**
**பொய்த்தவம் நீக்கிமெய்ப் போகத்துட் போக்கியே**
**மெய்த்த சகமுண்டு விட்டுப் பரானந்தச்**
**சித்திய தாக்குஞ் சிவானந்தத் தேறலே''.** **(திருமந்திரம் - 334)**

செய்யத் தகாதவற்றை எடுத்துக்கூறிய திருமூலர், பின்னர் எது செய்யத் தக்கவை என்று விரித்துக் கூறுகின்றார். அறத்திற்குச் சிகரமாக விளங்குவது தானம் செய்யும் பண்பு. உடம்பை வருத்தும் பசியைப் போக்குவது உயிர் கொடுத்தது போலாகும். **''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே''** என்று புறநானூறு கூறுகிறது பசி யாருக்கும் பொதுவானது. பசிக்கு அன்னமிடும் போது வேறுபாடு செய்வது அறமாகாது. விருந்தினர்கள் வருகிறார்களா என்று பார்த்து அவர்களுடன் சேர்ந்து உண்பதே மேலான

தருமமாகும். செல்வம் பல காலமாகச் சேர்க்கப்பட்டிருந்தாலும் அதைத் தான் சேர்த்தது என்று எதையும் பங்கிட்டுக் கொடாமல் இருப்பது பண்பாகாது. அவ்வாறு நினைப்பவர்களுடைய செல்வமானது நொடிப்பொழுதில் மறைந்துவிடும். ஏனென்றால், செல்வம் நாமாகச் சேர்த்ததன்று. இறைவன் திருவருளால் பெறப்பட்டது. இறைவன் இந்தச் செல்வத்தைப் பலருக்கும் பயன்படும்படி ஓரிடத்தில் வைத்திருக்கின்றான். ஏழைக்குத் தானம் செய்யும்பொருட்டு அதைச் செல்வர்களிடம் விட்டு வைத்திருக்கின்றான். ''இரப்பவர்க்கு ஈய வைத்தார்'' இதை உணர்ந்து கொள்ளாமலும், பிறருக்குக் கொடுக்காமலும் மறைத்து வைத்திருப்பவர்களுக்காகவே இறைவன் கடுநரகங்களை வைத்ததாக அப்பர் பெருமான் கூறுகின்றார்.

**கரப்பவர் தங்கட்கு எல்லாம்**
**கடு நரகங்கள் வைத்தார்**

எனவே, தான் பெற்ற செல்வத்தைப் பிறருடன் சேர்ந்து அனுபவிப்பதே அறமாகும். இறைவனுடைய படைப்பில் காக்கை போன்ற ஒரு எளிய பறவை கூட இதைச் செய்கின்றதே! காக்கை தன் இனத்தைக் கூவி அழைத்துக் கூட்டமாகச் சேர்ந்து உண்பதைப் பார்க்கின்றோமல்லவா? இதை ஆறறிவு மனிதன் செய்யக்கூடாதா?

**''ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்-**
**பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்**
**வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்**
**காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே''.**

**(திருமந்திரம் - 250)**

அறம் செய்யும் மனப்பான்மையை எப்போதும் வளர்த்துக் கொண்டே இருக்க வேண்டும். இது கடினமானதன்று. பிறர்பால் அன்பு கொள்ளும் உள்ளம் தான் தேவைப்படுகிறது. அதுவே அறத்திற்கு மையமாகவும் அமைகிறது. இறைவன் நம்மிடம் உள்ள செல்வத்தைக் கேட்கவில்லை. நமது மனதிலுள்ள தூய்மையையும், உண்மை அன்பையுமே கேட்கிறான். அத்தகைய நிலையில் ஒரு பச்சிலையைக் கொண்டு பூசித்தாலே அந்த அன்பை மெச்சுவான். நாம் உண்ணும்போது வாயில்லாத சீவராசிகளையும் கருத்திற் கொள்ள வேண்டும். நாமும் பல பிறப்புகளில் இதுபோன்ற நிலைகளில் இருந்து இருக்கலாம். மனிதர்கள் தங்களுடைய வேட்கைகளையும், ஆசைகளையும் அறிந்து வார்த்தைகளால் நமக்கு எடுத்துச் சொல்லித் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர் ஆனால், பேசாத நிலையில் உள்ள உயிர்களுக்கு நாம் அளிக்கும் உதவியானது உண்மையிலேயே இறைவனுடைய நெஞ்சத்தையும் தொடக்கூடிய ஒன்றாகும். அதேபோல, உண்ணும்பொழுது ஒரு கைப்பிடி உணவைப் பிறருக்குத் தந்துவிட்டுப் பிறகு உண்பது மிகவும் எளிதல்லவா? இத்தனைக்கும் மேலாக, பிறருடன் பேசும்பொழுது இனிமையாகப்

பேசக்கூடாதா? பிறருக்குத் துன்பம் பயக்காத வகையில் பேசலாமே. அன்புடன் பேசும்பொழுது பகைவர்களும் நண்பர்களாவர். இன்சொல் கூறுபவர்களைக் கண்டு காலனுடைய தூதர்களும் அஞ்சுவர் என்று ஞானசம்பந்தப் பெருமான் கூறுகின்றார். மனத்தூய்மையுடன் வாழும்பொழுது இறைவனுடைய அருளால் மாசில்லாத சொற்களைக் கூறுவது எளிதாகும். இந்த எளிய அறங்களை யாவரும் மேற்கொள்ளலாமே!

**"யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை**
**யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை**
**யாவர்க்கு மாம் உண்ணும் போதோரு கைப்பிடி**
**யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே".** (திருமந்திரம் - 252)

தானத்தில் சிறந்தது அடியார்களுக்கும் தொண்டர்களுக்கும் செய்யும் தானம் என்று திருமந்திரம் கூறுகின்றது. இதுவே மகேசுவர பூசை ஆகும். திருக்கோவிலிலுள்ள இறைவனுக்கு நைவேத்தியம் முதலியன செய்யலாம். இறைவன் அதை ஏற்றுக்கொள்ளுவான். அதே நேரத்தில் இறை அடியார்களுக்கும் நாம் ஏதேனும் கொடுக்கும்பொழுது இறைவன் பதின்மடங்கு திருப்தி அடைகின்றான். காரணம், அடியார்கள் நடமாடும் கோவிலாகத் திகழ்கிறார்கள். படமாடும் கோவில்களை விட உயர்ந்தவர்கள் இறை நிலையில் நிற்பவர்கள். அவர்களுக்கு உணவளிக்கும்போது எல்லாப் புவனங்களும் தாங்கள் உணவருந்திய மகிழ்ச்சியைப் பெறுகின்றன என்று இறைவனே கூறியதாகத் திருமூலர் எடுத்துக் காட்டுகின்றார். செல்வராகிய நீங்கள் உங்கள் பெயர் வரலாற்றில் நிலைக்கும்பொருட்டுப் பலவிதமான தானங்களைச் செய்து வருகின்றீர்கள். அந்தணர்களுக்கும், கற்றோர்களுக்கும் கிராமங்களை எழுதி வைக்கின்றீர்கள். நிலங்களைத் தருகின்றீர்கள். இறைவனைத் திருப்தி செய்யும் நோக்குடன் பல திருக்கோவில்களைக் கட்டுகின்றீர்கள். குடமுழுக்கு விழா நடத்துகின்றீர்கள். இவையெல்லாம் போற்றத்தக்கவைதான். ஆனால், சொல்லப்போனால், நீங்கள் அன்புடன், ஈகை உணர்வுடன் தெய்வ சிந்தனை மிக்க ஞானி ஒருவருக்கு ஒரு வேளையாகினும் அளிக்கும் உணவினால் கிடைக்கக்கூடிய பயனுக்கு வேறு எந்தக் காரியங்கள் செய்தாலும் ஒப்பாகாது என்பதே உண்மை. இந்தத் தெளிவை அளிப்பது கீழ்க்கண்ட மந்திரங்கள்:

**"படமாடக் கோயில் பகவற்கொன் றீயில்**
**நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா**
**நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்**
**படமாடக் கோயில் பகவற்க தாமே".** (திருமந்திரம் - 1957)

திருமூலர் அருளிய

# திருமந்திரம்

அனுபவ உரை


ஆசிரியர்

திருமந்திரச் செம்மல்

**டி.வி. வெங்கட்டராமன்** இ.ஆ.ப. (ஓய்வு)

*முன்னாள் தலைமைச்செயலர், தமிழக அரசு*



பாரதி பதிப்பகம்

108, உஸ்மான் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
த.பெ.எண். 4984, போன் : 4340205

விலை ரூ.140.00

❒ THIRUMOOLAR ARULIYA THIRUMANTHIRAM – ANUBAVA OURAI ❒ BY : T.V. VENKATTARAMAN, I.A.S. ❒ FIRST EDITION : NOVEMBER 1996 ❒ PRICE: Rs.140.00 ❒ DESIGNED AND PUBLISHED BY: BHARATHI PATHIPPAGAM, 108, USMAN ROAD, T.NAGAR, CHENNAI - 17. PH : 4340205 ❒ LASER TYPESET BY : GRAPHIC ACCESS, CHENNAI - 94. ❒ PRINTED AT : MANI OFFSET, CHENNAI - 600 005. ❒

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம் 26வது குரு மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
வழங்கியருளிய

# அருளாசி

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே".

திருமந் திரமே சிவகதிக்கு வித்தாம்
திருமந் திரமே சிவமாம் அருமந்த
புந்திக்கு ளேநின்று போற்றும்அடி யார்தமக்குச்
சந்திக்கும் தற்பரமே தான் – அபியுக்தர் வாக்கு

வடமொழியில் பதஞ்சலி யோக சூத்திரம் போலத் தமிழில் அமைந்து விளங்கும் யோக நூல் திருமந்திரம் இதனைத் திருமுறை வரிசையில் பத்தாவதாக அமைத்துப் போற்றினர் நம் முன்னோர்.

''அறம்பொருள் இன்பம்வீடு அடைதல்நூற் பயனே'' என்பது இலக்கண நூற்பா. ஒரு நூல் இம்மை வாழ்வுக்குரிய அறம் பொருள் இன்பங்களை உணர்த்துவதோடு மறுமையில் வீடு அடைவதற்குரிய நெறியையும் மக்கட்குத் தெரிவிக்க வேண்டும் என்பது இதன் பொருள். இதன் அடிப்படையில் திருவள்ளுவர் முப்பாலில் நாற்பாலை மொழிந்துள்ளது போலத் திருமூலர் வீட்டுப் பாலில் ஏனையே மூன்றையும் இணைத்து இந்நூலைத் தமிழ் உலகிற்குத் தந்துள்ளார்.

திருமந்திரம் வேதோநிடதம் – சிவாகமங்களின் முடிந்த பயனை உணர்த்தும் உயரிய நூல். இந்நூலின் பாடற் பொருள் அரிதின் முயன்று ஒருவர் உணர்த்த உணரும் நிலையில் இருப்பதால் பலரும் இந்நூலைப் படித்தப் பயன்பெறத் தவறி வந்தனர்.

இந்நூல் மக்கள் அரிதிற் கிடைத்த இம்மானுடப் பிறப்பின் கால அளவினை யோக முயற்சியால் நீட்டிக்கச் செய்து வாழ்வின் பயனை இவ்வொரு பிறப்பிலேயே அடைய வழிகாட்டுகிறது.

''உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டா
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே.''

என்பதொரு திருமந்திரம் உடம்பைப் பேணுதலின் அவசியத்தை வலியுறுத்துகிறது.

இந்நூலில் கூறப்பெறும் அட்டாங்க யோகம் ஆறாதார யோகத்திற்கு அடிப்படையாக விளங்குவது. வாழ்க்கையில் மக்கள் அறிந்து கடைப்பிடிக்கத்தக்கது. இதனை உணர்ந்த பின்னரே இராஜ யோகம் எனப்படும் ஆறாதார யோக பயிற்சியை ஆசிரியன் வாயிலாக மக்கள் மேற்கொள்ள வேண்டும். அனுபூதிமான்களோடு பழகியும் உணர்ந்தும் கடைப்பிடிக்கத் தக்க யோகம் இது.

இவை போன்ற பல நுண் பொருள்கள் அடங்கிய இந்நூலைக் கற்று அத்தனை மக்கட்குத் தெளிவாக எளிய நடையில் எடுத்துரைக்கும் முயற்சியில் நம் அன்பர் திருமந்திரமணி திரு டி.வி.வெங்கட்டராமன் அவர்கள் வெற்றி கண்டுள்ளார். இவர் எழுதியுள்ள இந்நூலில் ''ஒன்றவன்தானே'' என்ற பாடலுக்கு எழுதிய உரைவிளக்கம் மிகச் சிறப்புடையதாய் விளங்குகிறது. இவ்வாறே தான் எடுத்துக்கொண்ட ஒவ்வொரு தலைப்புகளையும் விரிவாகவும் விளக்கமாகவும் தோத்திர சாத்திர இலக்கிய மேற்கோள்களோடு இவர் எழுதியுள்ள திறன் மிகவும் பாராட்டத்தக்கதாயுள்ளது.

பல்லாண்டுகளாகத் திருமந்திரத்தை முறையாகக் கற்றும் அனுபூதிச் செல்வர்களோடு பழகியும் இந்நூலைத் தெளிவாக உணர்ந்தும் பல இதழ்களில் கட்டுரை வடிவில் வெளியிட்டு வந்துள்ளதை திருமுறைகள் சித்தாந்த சாத்திரங்கள், வடமொழி நூல்கள் முதலானவற்றை மேற்கோள் காட்டி விரிவு செய்தும் அழகுறுத்தியும் இவற்றை நூல் வடிவில் இவர் தமிழ் மக்களுக்கு அளிக்கின்றார். பாரதி பதிப்பகத்தார். இந்நூலினை ஒளியச்சில் செம்மையுற அச்சிட்டுள்ளனர்.

அன்பர் திருமந்திரமணி திரு டி.வி.வெங்கட்டராமன் அவர்கள் எல்லா நலங்களோடும் இனிது வாழ்ந்து,தொடர்ந்து தன் திருமந்திர அனுபவ உரைகளை மக்கட்கு வழங்கி வரவும் அன்பர்கள் இந்நூலைக் கற்றுப் பயன் பெறவும் ஸ்ரீ செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

★★★★★

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரை

**சீர்வளர்சீர் சிவப்பிரகாச பண்டாரச்சந்நிதி**

குருமகாசந்நிதானம், திருவாவடுதுறை ஆதீனம்

அவர்கள் வழங்கியருளிய

# அருளாசி

சமயத்துறையில், தமிழ் மொழியிலே தோத்திர சாத்திர நூல்களுக்கு மூலமாக இருப்பது திருமூலர் திருமந்திரம். பன்னிரு திருமுறையில் திருமந்திரம் பத்தாந் திருமுறையாக விளங்குகிறது. தமிழகத்துச் சித்த பரம்பரைக்கு மூலமாகவும் மிகச் சிறந்த யோகியாகவும் ஞானியாகவும் விளங்கியவர் திருமூலர். திருவாவடுதுறையில் மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத்து வீற்றிருந்து இந்தச் சித்தநாதர் அருளிய திருமந்திரம் ஆகிய தமிழ் மூவாயிரம் அறிவால் விளைந்த பயன் அன்று. சிவானந்த அனுபவத்தால் விளைந்த பேறு ஆகும். உலக மக்கள் அனைவரையுமே உய்விக்கத் தமிழகத்தில் மலர்ந்து மணம் பரப்புகின்ற அனுபவ ஞானத் திருநூல்.

உலகத்து யாவருடைய உள்ளத்திலும் எஞ்ஞான்றும் நின்று நலம் பயக்க வல்லதான இத்திருநூலின் அரிய பொருளையெல்லாம் அன்பர்கள் எளிதில் தெளிவாகத் தெரிந்து பயன்கொள்ளும் வண்ணம் தமிழக அரசு முன்னாள் தலைமைச் செயலாளரும் நமது ஆதீன அன்பிற்கும் பாராட்டுதலுக்கும் உரியவர்களுமாகிய திரு. டி.வி.வெங்கட்டராமன் அவர்கள் கலைமகள், திருக்கோயில் ஆகிய திங்கள் இதழ்களில் கட்டுரை அமைப்பில் எழுதி வெளியிட்டு வந்தார்கள். அவற்றில், வேண்டும் மாற்றங்களையும் சேர்க்கைகளையும் சிறக்கச் செய்து ஒரு தனி நூலாக இப்பொழுது வெளியிடுவது மகிழ்ச்சியளிக்கிறது.

புகழ் பெருக அரசுப்பணிகளைச் சிறப்பாக ஆற்றி வந்ததற்கு இடையேயும் இவர்களது உள்ளத்தைக் கவர்ந்து பற்றிக் கொண்டது திருமந்திரம். அருள் நலச்சிறப்பால், இவர்கள் திருமந்திரக் கடலில் முகந்து கொண்ட நன்முத்துக்களை நமது ஆதீனத்திலும் தமிழக நற்சபைகளிலும் வாரி வழங்கி மகிழ்வித்தவர்கள். இவர்களது திருமந்திர உள்ளம் இப்பொழுது நூல் வடிவு கொண்டு தமிழக உலா கொள்ள வருகிறது. திருமந்திரச் செல்வரின் இனிய இந்நூல் தமிழ் மக்கள் அனைவரிடத்தும் திகழ்ந்து மேன்மைமிகு வாழ்வினை அருளவும், அன்பர் அவர்களது திருமந்திரப் பணிநலம் உலகு அனைத்தும் பயன் கொளும் வண்ணம் சிறக்க இவர்கள் நலம்மிக்க நீடுவாழ்வில் திகழவும் அருள நம் வழிபடுமூர்த்தி அருள்தரு ஞானமா நடராசப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

திருவாவடுதுறை
13-08-1996

★★★

# டாக்டர் பா. இராமன் அவர்களின் அணிந்துரை

திருக்கயிலாயத்தில் நந்தியானவர் திருமூலருக்கு ஒன்பது ஆகமங்களை விளக்கியுரைத்தனர். திருமூலர் மண்ணுலகிற்கு வந்து மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகம் புரிந்தார். தாம் முன்பு கேட்ட சிவாகமங்களின் சாரத்தை மூவாயிரம் பாடல்களாகப் பாடியருளினார். இப்பாடல்களின் தொகுப்பே திருமந்திரம் என வழங்குகிறது. இதனைத் தனித்தமிழ் ஆகமம் என்பர். மந்திரம் என்பதற்கு 'நினைப்பவரைக் காப்பது' என்று பொருள். திருமந்திரம் எக்காலத்தும் நினைப்பவரைக் காக்க வல்லது. ''ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க'' என்றதால், திருமந்திரம் சிவசொரூபம் என்க. பத்தாம் திருமுறையான திருமந்திரம் தாய் எனவும், ஏனைய திருமுறைகள் அதன் சேய் எனவும் கூறுவர். சமயகுரவர் நால்வர்தம் திருப்பாடல்களைப் புகழ் நூல்கள் எனவும் திருமந்திரத்தைப் பொருள் நூல் எனவும் இயம்புவர். இதன் பெருமை அளவிடற்கரிது.

காண்பான், காட்சி, காணப்படு பொருள் என்னும் திரிபுடி, சுத்தமாயை, அசுத்தமாயை, சத்திகள், பரசிவம் ஆகியோரைத் திருமூலர் 'விளங்கக் கண்டேன்' என்றார். இந்நூல் நுதலிய பொருள் இதுதான். பதியின் இயல்பையறிந்து பாசத்தை நீக்கிப் பசுவானது பதியை எவ்வாறு அடைதல் வேண்டும் என்னும் நெறிகளைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என வகுத்துரைக்கின்றார். சிவயோகத்தின் சிறப்பினை எடுத்துரைத்தாலும் அன்பே சிவம் எனும் அன்பு நெறியையே யாவற்றினும் மேலானது என்று கூறுகின்றார். முதன்மையான சித்தாந்த சாத்திரங்கள் கூறுவதுபோல் பதிபசுபாச இயல்பினை விளக்கிப் பதியை அடையும் நெறியையும் இந்நூல் தெளிவாகக் காட்டுவதால் இது சாத்திரமும் தோத்திரமும் பொதிந்த பொன்னூல் எனலாம்.

திருமந்திரச் செம்மல் சான்றோர் திரு. டி.வி.வெங்கட்டராமன், இ.ஆ.ப., (ஓய்வு), அவர்கள் நுண்மாண் நுழைபுலம்மிக்கவர். திருமூலரின் திருவருளுக்குப் பாத்திரமானவர். மூலன் செய்த மூவாயிரத்தையும் முற்றக்கற்றவர். சைவச்சான்றோர் வரைந்த திருமந்திர உரைகளைப் படித்துச் சுவைத்தவர். சித்தாந்த சாத்திரங்களிலும் திருமுறைகளிலும் புலமை பெற்றவர். பல்லாண்டுகளாகத் தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று எண்ணித் திருமந்திர மாநாடு நடத்துவதும், திருமந்திரச் சொற்பொழிவு ஆற்றுவதும், மாத இதழ்களில் கட்டுரை எழுதுவதுமான அரிய தொண்டினைச் சிறிதும் அயராது செய்து வருகின்றார். இன்று திருமந்திரத்தைப் படித்து உணர வேண்டும் என்ற அவா நூற்றுக்கணக்கானவருக்கு ஏற்பட்டதற்கு இப்பெரியாரே காரணமாவார் மிகையன்று.

பல்லாண்டுகளாகத் தாம் பேசியும் எழுதியும் வந்த திருமந்திரச் செம்பொருளை நூல் வடிவாக ஆக்கியுள்ளார். எளிதில் புரிந்து கொள்ள முடியாத பாடல்களுக்குத் தெளிவான விளக்கம் அளித்துள்ளார். அதனால் மூலநூலைப் படித்து அறிய முடியாதவர்கள் இந்த உரைநடை நூலைப் படித்து அறிந்து சுவைக்கலாம்

பதி பசு பாசம் ஆகிய முப்பொருளையும் பதியை அடைவதற்குரிய நெறியையும் எத்தனை வகையில் விளக்கினாலும் புரியாது என்பதால்,

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர், காரைக்காலம்மையார், திருநீலக்கண்டக்குயவனார், சேக்கிழார், தாயுமானவர், பட்டினத்தார் போன்ற அருளாளர் தம் முக்கிய வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் அவர்தம் அமுத மொழிகளையும் காட்டிக்கூற வந்த பொருளை கல்மேல் எழுத்துப்போல் நெஞ்சத்தில் பதித்து விடுகிறார்.

திருமுறைகளை மேற்கோளாகக் காட்டியதுபோல் சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம், திருவருட்பயன் ஆகிய சித்தாந்த சாத்திரங்களையும் காட்டி விளக்கியுள்ளார். இவர் தம் நூல் கற்கண்டு எனலாம், மாணிக்கம் எனலாம். எப்பக்கத்திலும் இனிக்கின்றது. எப்பக்கத்திலும் ஒளி வீசுகின்றது. இவர் தம் செவ்விய மொழிநடையும் செறிவான பொருளுரையும் ஆதியோடந்தமாய்ப் பரந்து மிளிர்கின்றன. என்னால் எப்பொருளைச் சான்றாகக் காட்டுவது எனத் தேர்ந்து சொல்ல இயலவில்லை. இருப்பினும் சிலவற்றை மட்டும் சான்றாகக் காட்டுவல்.

''குடம் உடைந்தால் ஓடு, உடல் உடைந்தால் பயன் உண்டா? விஞ்ஞானம் குறை அறிவு; மெய்ஞ்ஞானம் நிறை அறிவு. அறிவால் பார்க்காதே அருளால் பார். இரசவாதத்தால் இரும்பு பொன்னாதல்போல் குருவின் திருவடித் தீக்கையால் சீடன் சிவசமத்துவம் அடைவான். அலை ஓய்ந்த ஆழ்கடல்போல் தெளிந்த சிந்தையர்.

செல்வமும், கல்வியும் சிவனைக் காணமாட்டா. மாணிக்கத்துள்ளே மரகதம் காண முடியுமா? முடியும். சிவனுள்ளே சக்தி. பிறப்புக்கெட ஞானமலர் கொண்டு அருச்சிக்க. தூல தேகம் போய்ச் சூக்கும தேகமாகிப் பொன்னுடல் உண்டாகி ஈனமில் காயமாகிச் சத்திவடிவாய் நிலை பெறுவர் தூய அடியார். ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள், ஆசை மனத்தின் செயல். அது பற்றே. மனம் இறந்த ஞானிகட்கு ஆசை தோன்றாது. இதுவே ஞானியின் உச்ச நிலை. தான் சிவத்தை விழுங்க நினைப்பது பற்று; தன்னைச் சிவம் விழுங்குவது தன்னை இழந்த நிலை''.

இவ்வாறு எத்தனை எத்தனையோ நன்முத்துக்களைக் கண்டுகளிக்கலாம். ஞானத்தை விளக்க குரு சீடர் வினா விடையாக அமைத்திருப்பதும், கிருத்துவப் பெரியார், அடைக்கலப்பத்தில், 'மலரடிக்கே கூவிடுவாய். அடியேன் நின் அடைக்கலமே' என்ற வரிகளை ஒரு தாளில் எழுதி வைக்கச் சொல்லிப் பின் காலவயப்பட்டதும், இந்நூலாசிரியருக்கு அடைக்கலப்பத்தே துன்பக்காலத்தில் உற்றதுணையாக அமைந்ததும் ஆகிய செய்திகளைக் கற்போர் எவரும் சிவனுக்கே அன்பராகுவர் என்பது திண்ணம்.

நூலறிவும் நுண்ணறிவும் மிக்க சான்றோர் திரு டி.வி.வெங்கட்டராமன், இ.ஆ.ப. (ஓய்வு), அவர்கள் தெய்வத் தமிழன்னைக்குச் சூட்டும் மணம் கமழ் மலரே இந்நூலாகும். இவர் எல்லா நலத்துடனும் பல்லாண்டு வாழ்ந்து இத்தகு அரிய நூல்கள் பலவும் ஆக்க வேண்டும் என்பதே என் விழைவு.

இவண்

**ப. இராமன்**

# ஆசிரியர் முன்னுரை

பல ஆண்டுகளுக்கு முன்பு இது நடந்தது. ஒரு நாள் மாலை வழக்கம்போல் நான் சென்னையில், மயிலாப்பூரில் உள்ள அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோவிலுக்குச் சென்றிருந்தேன். திருக்கோவிலில் அருள்மிகு கற்பகாம்பிகை சன்னிதி நுழைவு வாயிலுக்கு வெளியே இடது பக்கத்தில் மாட்டப்பட்டிருந்த ஒரு பலகை என் கண்களுக்குத் தென்பட்டது. அதில்,

**''உடம்பார் அழியில் உயிரார் அழிவார்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவுமாட்டார்''** **(திருமந்திரம்)**

என்று எழுதப்பட்டிருந்தது. இப்போது அந்தப் பலகை அங்கு இல்லை.

அதுவரை நான் திருமந்திரத்தைப் படித்திருக்கவில்லை. உண்மையில் அப்போது நான் சமய நூல்களைப் பொதுவாகப் படித்தது கிடையாது. தமிழ் மொழியில் சமய, தோத்திர, சாத்திர நூல்களைப் படிக்கும் வாய்ப்பினையும் பெற்றிருக்கவில்லை. அதற்குக் காரணம் நான் தமிழ் மொழியை முறையாகக் கற்காததுதான். பள்ளியிலும், கல்லூரியிலும் வடமொழியைக் கற்ற காரணத்தினால் தமிழ் மொழியைப் படிப்பதற்கு இடமே இல்லாமல் போய்விட்டது. திருமுறைகளைப் பற்றியும், சைவ சாத்திர நூல்களைப் பற்றியும் ஒன்றும் தெரிந்து கொள்ள இயலாத நிலையில் இருந்தேன். சித்தர்கள் இலக்கியம் என்றால் அது என்ன என்று கேட்கும் அளவுக்கு ஓர் அறியாமை நிலையில் இருந்தேன். சொல்லப்போனால், சமயத்தின் மீது அதிகப் பற்றில்லாததும் இதற்கு ஒரு விளக்கமாக இருக்கலாம் என்றும் நினைக்கிறேன்.

அருள்மிகு கற்பகாம்பாள் சன்னிதியில் நான் கண்ட திருமந்திரக் குறிப்பு என் உள்ளத்தில் ஒரு வித்தியாசமான உணர்வினை உருவாக்கியிருக்க வேண்டும். திருமந்திர நூலைப் படிக்க வேண்டும் என்கிற ஆர்வம் ஏற்பட்டது. அந்த நாட்களில் சென்னையில் அப்போதிருந்த மூர்அங்காடிக்கு நான் பழைய நூல்களைக் குறைந்த விலைக்கு வாங்குவதற்காக அடிக்கடி சென்று வருவது வழக்கம். மூர்அங்காடி தீக்கு இரையான பின்னர் பழைய நூல்களைக் காண்பதே அரிதாகி விட்டது. ஒரு பெரிய பொக்கிஷத்தை நாம்

இழந்து விட்டோம். ஒருமுறை நான் மூர் அங்காடிக்குச் சென்றிருந்தபோது திருமந்திர நூல் ஒன்று கிடைக்குமா என்று ஒரு கடையில் கேட்டேன். அந்த கடைக்காரர் வயதானவர். உடனே திருமந்திரத்தைப் பற்றி ஒரு சிறு நூலை எனக்கு எடுத்துக் கொடுத்தார்கள். ராஜாஜி அவர்களும் சோமு அவர்களும் சேர்ந்து எழுதியிருந்த கட்டுரைகளின் தொகுப்பு அது. கல்கியில் வெளிவந்த கட்டுரைகளைச் சேர்த்து ஒரு நூலாகப் பிரசுரித்திருந்தார்கள். நம்ப முடியாத மலிவு விலைக்கு அந்த நூலை வாங்கி, வீட்டிற்குச் சென்று படிக்கத் தொடங்கினேன். இன்னும் படித்துக் கொண்டிருக்கின்றேன். திருமந்திரத்தில் என்னை ஈடுபடுத்திய இறைவனுடைய பெரும் கருணையைப் பற்றி வேறு என்ன சொல்வது?

திருமூலர் பெருமான் அருளிச் செய்துள்ள திருமந்திர மணிமாலை விளக்க நூல்கள் போதிய அளவில் வெளிவரவில்லை என்றே கருதுகிறேன். வெளிவரும் நூல்களையெல்லாம் அவ்வப்பொழுதே வாங்கி விடுவேன். அவற்றையெல்லாம் படித்து, மனநிறைவு பெறும் வகையில் விளக்கம் பெறுவதில் என்னைப் போன்றவர்களுக்குப் பல இடர்கள் இருந்தன. பல நூல் ஆசிரியர்கள் தமிழ் மொழியிலே வல்லுநர்களாக இருந்த காரணத்தினால், அவர்கள் கொடுத்த தமிழ் மொழி விளக்கங்கள் பல நேரங்களில் எனது அறிவுக்கு எட்டுவதில்லை. வேறுசில நூல் ஆசிரியர்கள் தாங்கள் பெற்றிருந்த சாத்திர அறிவின் அடிப்படையில் சிறந்த விளக்கங்களைக் கொடுத்திருந்தாலும், எனக்குப் போதிய சாத்திர அறிவு கிடையாது என்பதால் அந்த விளக்கங்களை என்னால் முழுமையாகப் புரிந்து கொள்ள இயலவில்லை. சாத்திர நூல்கள் படிக்காத என்னைப்போன்ற பல அன்பர்கள் இந்த இக்கட்டான நிலைமையில் இருக்கின்றார்கள் என்பதை நான் அனுபவத்தின் அடிப்படையில் தெரிந்து கொண்டேன்.

எப்படியிருந்தாலும் திருமந்திர மணிமாலையை நன்கு கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற விருப்பம் வளர்ந்து கொண்டே வந்தது. மூவாயிரம் மந்திரங்களில் முன்னூறுக்கும் மேற்பட்ட மந்திரங்களைப் படித்துத் தெரிந்து கொள்வதில் அதிகப் பிரச்சினை தோன்றவில்லை. ஆனால், மற்ற மந்திரங்கள் வெகு கடினமாக இருந்தன. இந்த நிலை இரண்டு வகையில் ஏற்பட்டது. ஒன்று, மந்திரங்களில் பயன்படுத்தப்பட்ட தமிழ்ச் சொற்கள் இயல்பாகவே கடினமாக இருந்தன. இரண்டாவது, பல மந்திரங்களில் சொற்கள் எளிதாக இருந்தாலும் அவற்றின் பொருள் ஆழமாக இருந்தது. அவற்றைப் பற்றிய விளக்கங்களைப் பெறுவதற்கு, ஆழ்ந்த அறிவு தேவைப்பட்டது. அதைவிட முக்கியமானது ஒன்று, அந்தச் சொற்கள் உணர்வு நிலையில்தான் போதுமான பொருளைத் தரும் என்கிற எண்ணமும் எனக்கு ஏற்பட்டது. சாத்திர அறிவோ அல்லது ஆன்மிக அனுபவமோ இல்லாத எனக்கு இந்த நிலையில், திருமந்திரத்தை முழுமையாகப் படித்துச் சுவைப்பதற்குத் தேவையான ஆற்றல் என்றுமே கிடைக்காது என்கிற எண்ணமே மேலிட்டது.

மீண்டும் ஒருமுறை திருவருளின் பெருங்கருணையைக் காண முடிகின்றது. கொடைக்கானல் மலைப்பகுதியில் பெருமாள்மலை எனும் இடத்தில் பல ஆண்டு காலம் வாழ்ந்து வந்த ஒரு பெரியவரின் நட்புக் கிடைத்தது. அவரை ''பெருமாள்மலை ஐயப்ப சுவாமிகள்'' என்றும், ''ராமுடு சிவா சுவாமிகள்'' என்றும் அவருடைய சீடர்கள் பெயரிட்டிருந்தார்கள். என்னுடைய உறவினர் ஒருவருடைய உதவியோடு இந்தப் பெரியாரைச் சந்திக்கும் பேறு பெற்றேன். அடிக்கடி எங்கள் வீட்டுக்கு அவர்கள் வரத் தொடங்கினார்கள். திருமந்திரத்தில் ஆழ்ந்த அனுபவம் பெற்ற பெரியார் ஒருவரைச் சந்திக்கின்றோம் என்கின்ற உணர்வு ஏற்பட்டது. இரவு நேரங்களில் அவர் என்னுடன் தங்கும்பொழுதெல்லாம் திருமந்திரத்தில் காணப்படும் கருத்துக்களின் நுட்பத்தை அனுபவரீதியாக எனக்கு வழங்குவார்கள். மிகக் கடினமான மந்திரங்களைச் சில விநாடிகளிலேயே தெள்ளத்தெளிவாகப் புரிய வைத்துவிடுவார்கள். வாசி யோகத்தை அவர்கள் முழுமையாகப் பயின்றிருந்தார்கள். அவர்கள் விரும்பியிருந்தால் வாசியோக சாதனைகள் பலவற்றைச் செய்திருக்கக்கூடும் என்றும் நான் கருதுவதற்கு இடமுண்டு. குறிப்பாக எட்டாவது, ஒன்பதாவது தந்திரங்களில் காணப்படும் அனுபவ மந்திரங்கள் பலவற்றிற்கு எனக்குத் தெளிவாக விளக்கம் கொடுத்து உதவினார்கள். அவர்கள்தான் என்னைப் பேசச் சொன்னார்கள். கட்டுரைகளை எழுதச் சொன்னார்கள். அவர்கள் எனக்குச் செய்த உதவி அளவிடற்கப்பாற்பட்டது. அவருக்கு நான் என்றென்றும் கடமைப்பட்டவன். அந்தப் பெரியார் இப்பொழுது நம்மிடையே இல்லை.

திருமந்திர மணிமாலை சைவப்பெருமக்களால் பன்னிரு திருமுறைகளில் பத்தாம் திருமுறையாகப் போற்றப்படுகின்றது. சைவ சாத்திர நூல்களிலே இது ஒரு சிறந்த நூலாகவும் கருதப்படுகிறது. எனவே, சைவ சாத்திர நூல்களைக் கற்றறிந்து கொள்ள வேண்டும் என்கின்ற ஆவலும் ஏற்பட்டது. ஸ்ரீலஸ்ரீ தர்மபுர ஆதின மகாசன்னிதானம் அவர்கள் இதில் எனக்குப் பெருத்த துணையாக இருந்தார்கள். சாத்திர நுட்பங்களையெல்லாம் அவ்வப்போது எடுத்துக்காட்டி எனது சிந்தனையைத் தூண்டி விடுவார்கள். மேலும் மேலும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற ஆவலையும் உண்டாக்கினார்கள். ஸ்ரீலஸ்ரீ திருவாவடுதுறை ஆதின மகாசன்னிதானம் அவர்களும் என்னை இவ்வாறே ஊக்கப்படுத்தினார்கள். இந்த இரண்டு பெரியார்களுக்கும் எத்துணை நன்றி கூறினாலும் தகும். தருமை மகாசன்னிதானம் அடியேனுக்குத் ''திருமந்திர மணி'' என்கிற பட்டம் கொடுத்ததும், திருவாவடுதுறை மகாசன்னிதானம் ''திருமந்திரச் செம்மல்'' என்கிற பட்டம் கொடுத்ததும் என் வாழ்க்கையில் நடந்த இரண்டு பொன்னான நிகழ்ச்சிகளாகும். இந்த இரண்டு பெரியார்களும் இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கியிருப்பது நான் பெற்ற பேறாகும்.

திருமந்திரம் ஒரு அனுபவ நூல் என்றும், இங்கே கிடைக்கும் அனுபவ உண்மைகள் நம்மைச் சாத்திரங்களுக்கும் அப்பால் அழைத்துச் செல்கின்றன

என்றும், அதை அருள் அனுபவம் என்றும் கூறலாம். அந்த அருள் அனுபவம் நமக்கு முத்திப் பேற்றினை அளித்து நம்மைப் பேரின்பத்தில் ஆழ்த்தும் ஆற்றல் பெற்றது என்றும், திருமந்திரக் கல்வி அனுபவக் கல்வியாக அமைய வேண்டும் என்றும் சைவப் பெரியார்கள், திரு அ.ச.ஞானசம்பந்தம், முனைவர் வை.ரத்தினசபாபதி ஆகியோர் அடியேனுக்கு அடிக்கடி எடுத்துச்சொல்லி, ஊக்கமளித்து என் உள்ளத்திலே பல கருத்துக்களை ஆழமாகப் பதிய வைத்துச் செய்த ஒரு பெரும் தொண்டிற்கு நான் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

என்னோடு பேசாமலே பேசி, அருள் பாலித்து, அன்பு உபதேசம் செய்து திருமந்திர மணிமாலையை வாழ்க்கை நூலென எடுத்துக்காட்டி ஆன்மிகச் சாதனைக்கான நெறிகளை உள்ளத்திலே உணர்த்திய தவத்திரு தேமொழியார் சுவாமிகள் அவர்களை நான் என்றென்றும் போற்றி வணங்குவன்.

இறைவன் திருவருளால் பல மாதங்களாகக் 'கலைமகள்' மாத இதழிலே, திருக்கோயில் இதழிலும் நான் எழுதி வந்த திருமந்திரக் கட்டுரைகள் என்னுடைய எண்ணங்களைத் தெளிவாக்கிக் கொள்ளப் பெரிதும் பயன்பட்டன. எனக்கு ஏற்பட்ட தெளிவினை மற்றவர்களும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்கிற ஒரே நோக்கத்துடன் இந்த நூலை எழுதத் தொடங்கினேன். நான் எழுதியிருந்த கட்டுரைகளை இதற்காகப் பயன்படுத்திக் கொண்டுள்ளேன். அந்தக் கட்டுரைகளைப் பிரசுரித்து என்னை கௌரவித்த ''கலைமகள்'' ஆசிரியர் அவர்களுக்கும், ''திருக்கோயில்'' ஆசிரியர் அவர்களுக்கும் என்னுடைய நன்றி உரித்தாகுக. காலப்போக்கில் என்னுடைய கருத்துகளில், எண்ணங்களில் தோன்றிய மாறுதல்கள் அடிப்படையில் இந்தக் கட்டுரைகளைப்பல இடங்களில் மாற்றி எழுதியிருக்கின்றேன்.

சென்னை விவேகானந்தா கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பல ஆண்டுகள் பணியாற்றி, மாணவர்களிடையே நன்மதிப்பைப் பெற்று ஓய்வடைந்துள்ள டாக்டர் ப.ராமன் அவர்கள் ஒரு சிறந்த இறை உணர்வாளர். அன்பும், அடக்கமும் நிரம்பக் கொண்டவர். பாம்பன் சுவாமிகளுடைய தத்துவங்களை நன்கு கற்றுணர்ந்தவர். தமிழில் பல நூல்களை வெளியிட்டவர். என்னுடைய ஆன்மிகப் பணிகளுக்குப் பெரிதும் துணையாக இருப்பவர். அவர்கள் நான் எழுதிய கட்டுரைகளைப்படித்து, தமிழ் இலக்கண விதிகளுக்கு ஏற்ப அங்கங்கே திருத்தங்களைச் செய்து எனக்கு உதவியுள்ளது அவர்கள் என் மீது வைத்துள்ள பேரன்பிற்குச் சான்றாகும். மேலும் அவர்கள் அச்சுப் பிழைகளைத் திருத்தி, சரிபார்த்து இந்த நூல் நன்கு வெளிவருவதற்குப் பெரும் பங்கை ஏற்றுள்ளார்கள். அத்துடன் சிறந்ததொரு அணிந்துரையையும் வழங்கி இருக்கின்றார்கள். இப்பெரியாருக்கு நான் எவ்வாறு நன்றி சொல்வது என்று தெரியவில்லை.

எட்டாண்டுகளுக்கு மேலாக எனக்கு எழுத வேண்டும் என்கிற எண்ணம் ஏற்படும்பொழுதெல்லாம் சற்றும் யோசியாமல் உடனே என்னிடம்

வந்து தட்டச்சுப் பணியை மேற்கொண்டு அழகுழறச் செய்து முடிக்கும் சிறந்த ஆற்றலைப் பெற்றிருப்பவர் எனது இனிய நண்பர் திரு அ.கமலக்கண்ணன் அவர்கள், நான் சொல்லுவதை முதலில் சுருக்கெழுத்தில் எடுத்துப்பிறகு தட்டச்சில் ஏற்றும் வழக்கம் இவருக்குக் கிடையாது. நான் சொல்லச் சொல்ல ஒரு பிழையுமின்றி நேரிடையாகவே தட்டச்சில் ஏற்றும் மெச்சத் தகுந்த திறனை அவர்கள் பெற்றிருக்கிற காரணத்தினால் என்னுடைய எண்ணங்கள் எழுத்து வடிவம் பெற அதிகம் நேரம் எடுத்துக்கொண்டதே இல்லை. இந்த நூல் முழுவதையும் அவ்வாறே செய்து முடித்துக்கொடுத்த திரு.அ. கமலக்கண்ணன் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றி உரித்தாகுக. இந்நூலில் மந்திர எண்கள் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் பதிப்பித்த திருமந்திரம் என்ற நூலில் உள்ளபடி கையாளப்பட்டிருக்கின்றன. திருப்பனந்தாள் சன்னிதானம் அவர்களுக்கு என்னுடைய நன்றியும் வணக்கமும் உரித்தாகுக. எனது வாழ்க்கையின் ஒளி விளக்காகத் திகழ்ந்து என்னை வழி நடத்தி வரும் திருவேற்காடு அன்னதான சிவம் தவத்திரு ஐயப்ப சுவாமிகள் அவர்களுடைய திருவடிகளைத் திருவருளின் திருவுருவம் எனப் போற்றிப் பணிந்து அகமகிழ்கின்றேன்.

**''எவ்வாறு காண்பான் அறிவு தனக்கு எல்லை**
**அவ்வாறு அருட்செவன் ஆதியரன் தானும்''**

என்பார் திருமூலர் பெருமான்.

எனது அறிவுக்கெட்டியவரை நான் எழுதியுள்ள இந்த நூலில் கருத்துப் பிழைகள் ஏதேனும் இருந்தால் அவற்றைப் பொறுத்து, என்னைத் திருத்தியருள வேண்டுகிறேன்.

இவண்

**டி.வி. வெங்கட்டராமன்**

## காணிக்கை

இருபது ஆண்டுகளுக்குக் கூடுதலாக நான் நெருங்கிப் பழகி வந்த அருமை நண்பர், **திரு. பழ. சிதம்பரம்** பதிப்புத் துறையில் பல சாதனைகளைப் படைத்தவர்; இயல்பாகவே ஆன்மீகத்தில் ஊறி நின்றவர். அவர்களின் நினைவுக்கு ஓர் காணிக்கையாக இந்த நூலை வைப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

**- டி.வி.வெங்கட்டராமன்.**

# பொருளடக்கம்

## முதற் பகுதி


| | | |
|---|---|---|
| 1. | திருமூலர் - நான்மறை யோகிகளில் ஒருவர் | 17 |
| 2. | வேதமும் ஆமமும் | 31 |
| 3. | ஒன்றவன் தானே | 44 |
| 4. | ஆதியோடு அந்தம் இலாத பராபரம் | 82 |
| 5. | அரன் அங்கி தன்னில் சங்காரம் | 91 |
| 6. | இன்னருட் சக்தி | 101 |
| 7. | அன்னம் இரண்டு உள | 114 |
| 8. | உறவெனும் பாசம் | 126 |
| 9. | அன்பும் சிவமும் | 135 |
| 10. | உள் நின்ற சோதி | 143 |
| 11. | அறம் அறியாரே | 152 |
| 12. | சூடுவன் நெஞ்சிடை வைப்பன் | 162 |
| 13. | குருவே சிவம் | 171 |
| 14. | ஐந்தெழுத்து மந்திரம் | 181 |
| 15. | யோக வழியில் | 190 |
| 16. | சிவன் உறை சிந்தை | 200 |
| 17. | வென்ற ஐம்புலனால் மிக்கீர் | 206 |
| 18. | மன வாலயம் | 215 |
| 19. | ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் | 224 |
| 20. | காணாத கண்கள் | 234 |
| 21. | திருக்கூத்து தரிசனம் | 242 |
| 22. | அறிவுதயம் | 252 |
| 23. | நமன்வரின் | 262 |

## இரண்டாம் பகுதி


| | | |
|---|---|---|
| 24. | ஆசை அறுமின்கள், ஆசை அறுமின்கள் | 269 |
| 25. | தூங்கிக் கண்டார் சிவயோகம் | 278 |
| 26. | பேச்சற்ற பேரின்பம் | 286 |
| 27. | அடியார் பெருமை | 295 |
| 28. | அடியார் உள்ளம் | 299 |
| 29. | அருளால் அமுதப் பெருங்கடல் ஆட்டி | 308 |
| 30. | அருளாளர்களின் அருள் உணர்வுகள் | 318 |
| 31. | அருளாளர் பெற்ற அறிவு | 326 |
| 32. | ஆனந்த உணர்வு | 335 |
| 33. | அருள் அனுபவம் | 340 |
| 34. | அருளாளர்களின் மந்திர மொழி | 349 |
| 35. | என்னை ஆண்டு கொண்டான் | 357 |
| 36. | நின் பெருமையினால் பொறுப்பவனே | 363 |
| 37. | தத்துவமசி மகாவாக்கியம் | 371 |
| 38. | மறை பொருளும் மறை மொழியும் | 380 |
| 39. | திருமந்திரச் செம்பொருள் | 390 |
| 40. | உபதேசம் | 403 |
| 41. | நான் பெற்ற இன்பம் | 413 |
| 42. | திருமூலர் ஒரு சித்தர் | 424 |

டி.வி. வெங்கட்டராமனின்

# திருமூலர் அருளிய திருமந்திரம்

— அனுபவ உரை —

"அகரம் ஆயிரம் அந்தணர்க் கீயிலென்
சிகரம் ஆயிரஞ் செய்து முடிக்கிலென்
பகரு ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரிலை என்பது நிச்சயந் தானே". (திருமந்திரம் - 1860)

நாயன்மார்கள் பலர் மக்கள் தொண்டினைச் செய்தே இறைவனின் அன்பினைப் பெற்றார்கள். தன்னலமற்ற தொண்டு அறத்திற்கு முத்தாய்ப்பு வைத்தது போலாகும். இளையான்குடி மாறன் நாயனார், அமர்நீதி நாயனார், அப்பூதி அடிகள் போன்றவர்கள் மக்கட்குப் பசியைத் தீர்ப்பதே பெரிய தொண்டாகக் கருதினார்கள். பசியால் வருந்தின அனைவர்க்கும் சோறிட்டார்கள். ''மெய்யடியார்கட்கு ஆன பணி செய்யும் விருப்பில் நின்றார்'' என்று சேக்கிழார் பெருமான் திருநீலகண்டரைப் போற்றுகின்றார். ''வேண்டும் யாவையும் இல்லை என்னாது கொடுக்கும் இயல்பில் நின்றவர்'' என்று இயற்பகையாரின் பெருமையை விளக்குகின்றார். திருவீழிமிழலையில் பஞ்சம் தீர்க்கும் பணியில் திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டனர். திருநாவுக்கரசரின் உழவாரப் பணியின் மேன்மையை உலகுக்கு எடுத்துக் காட்டும் வண்ணம் இறைவன் ஞானசம்பந்தருக்கு மாற்றுக்குறையும் பொற்காசை வழங்குகின்றார். இதை உணர்ந்த திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசரின் தொண்டைப் பாராட்டி இறைவனிடம் வாசி தீரக் காசு நல்கும்படிக் கேட்டுக்கொள்கின்றார். இத்தகைய பெருமை வாய்ந்த அடியார்கள் வாழ்ந்த வாழ்வு முற்றிலும் அற வாழ்வு ஆகும். அதை நாம் அறிந்து நாமும் அவ்வழியிலேயே செல்ல வேண்டும். நமக்கு இருக்கக்கூடிய நாட்கள் மிகக் குறைவு. நமது உடலில் இருக்கும் சத்து மெல்ல மெல்லக் குறைந்து வருகிறது. விரைவில் பயனற்று விடும். செல்வம் சுருங்கினும் உள்ளம் சுருங்காது இருக்க அறப்பணியை மேற்கொள்ள வேண்டும். இதற்காகவே இறைவன் நம்முடைய வாழ்நாட்களை நீட்டித் தருகின்றான். இருப்பினும், அறத்தின் மேன்மையை நாம் அறியவில்லையே!

"ஒழிந்தன காலங்கள் ஊழியும் போயின
கழிந்தன கற்பனை நாளுங் குறுகிப்
பிழிந்தன போலத்தம் பேரிடர் ஆக்கை
அழிந்தது கண்டும் அறம்அறி யாரே". (திருமந்திரம் - 281)

# 12. ''சூடுவன் நெஞ்சிடை வைப்பன்''

இறைவன் நமக்கு உடலை அளித்து, உடலுடன் பொறிகளையும் பொருத்தி, மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அந்தக் கரணங்களையும் சேர்த்து, உயிரையும் இணைத்து வாழ்வெனும் பாதையில் நடக்க விடுகின்றான். நாம் செய்யும் நல்வினை, தீவினைகளுக்கு ஏற்ப மேலும் இன்ப துன்பங்களை அனுபவிக்கவும் நமக்கு வழிவகை செய்கின்றான். இதனுடைய நோக்கம் என்ன? உயிரானது பல பிறவிகளில் பல்வேறு அனுபவங்களைப் பெற்று, சிறிது சிறிதாக, மெல்ல மெல்ல முதிர்வடைந்து ஆன்மிகப் பேறு அடைந்து இறைவனுடைய திருவடிகளைச் சேர்வதே இந்த இயக்கத்தின் நோக்கமாக இருக்க முடியும். அவரவர்களுடைய வினைப்பயன் படி, ஆன்மிக முதிர்வினை மக்கள் அடைவார்கள். இதில் சந்தேகம் இல்லை. இதை உணர்ந்து கொள்ளாத மனிதர்கள் உடலும், உடலைச் சார்ந்த கருவிகளையும் புறத்தில் கிடைக்கும் இன்பத்தை அடைவதற்கு மட்டுமே பயன்படுத்த முற்படுவார்கள். ஐங்கருவிகளும், ஐம்புலன்களும் அந்தக்கரணங்களும் தன்னிச்சையாகச் செயல்படத் தொடங்குகின்றன. இதற்காகவா இறைவன் நமக்கு இவற்றையெல்லாம் அளித்தான்? இல்லை என்கிறார் நாவுக்கரசர் பெருமான். இறைவனை என்றும் வாழ்த்தவே நாம் வாய் என்னும் கருவியைப் பெற்றிருக்கிறோம். நமது நெஞ்சு அவனைப் பற்றி நினைக்கவே அளிக்கப்பட்டிருக்கின்றது. நமது தலை நன்றியுடன் அவனை வணங்குவதற்காகவே உடலில் பொருத்தப்பட்டுள்ளது.

**''வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்**
**தாழ்த்த சென்னியும் தந்த தலைவன்''**

என்கிறார் அப்பர்பெருமான்.

இறைவன் காண்பதற்கு அரியவன் என்று மக்கள் கருதுகின்றனர். ஆனால், அவன் நினைத்தோர் மனத்தில் தன்னைத் தொழுது அன்பு செய்வோர் நெஞ்சத்தில் என்றும் நுகரவல்ல இன்பப் பொருளாக இருக்கின்றான். எல்லோர்க்கும் எளிதாகக் கிடைக்கும் பொருளாக, தேனைப்போல, பாலைப் போல இனிக்கின்றான். அத்தகைய அனுபவப் பொருளைப் பற்றிப் பேசுவதற்காகத் தானே இந்த வாய் இருக்கிறது!

நமக்கென கிடைத்திருக்கும் வாழ்நாட்களும் இறைவனைப் பற்றிப் பேசிப் பயனடைவதற்காகத் தானே நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது! அவ்வாறு பேசாத நாளெல்லாம் வாழாத நாளல்லவா? பிறவாத நாளல்லவா? இந்தச் சிந்தனைகளை அப்பர்பெருமான் சிதம்பரத்திற்குச் சென்று நடராசப் பெருமானைத் தரிசிக்கும்போது தனது உள்ளத்தில் பெறுகின்றார். சிறந்த அருளாளர் அவர். ஆகவேதான், அத்தகைய உயர்ந்த எண்ணங்கள் அவருடைய மனத்திலே தோன்றுகின்றன.

**"அரியானை அந்தணர்தம் சிந்தை யானை**
**அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்**
**தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்**
**திகழ் ஒளியைத் தேவர்கள்தம் கோனை மற்றைக்**
**கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்**
**கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற**
**பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்**
**பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே".**

இறைவனுடைய திருவடிப் பேற்றினைப் பெறுவதே நமது தலையாய நோக்கமாக இருக்க வேண்டும். இந்த நோக்கத்தை அடைவதற்காக நமது மனம், வாக்கு, காயம் ஆகியவற்றை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்து வரும்போது நமது உடலுக்குள் உயிருக்குயிராய் நின்று அறிவிக்கும் இறைவன் நமது உணர்வு நிலைகளுக்கு ஏற்ப அவ்வப்போது நமக்கு நன்நெறியை உணர்த்தி வருவான். அந்த நன்நெறியைக் கடைப்பிடிப்பதன் மூலம் மேலும் நம்முடைய குறிக்கோள், இறையுணர்வில் நாட்டம் போன்றவை வலுவடைகின்றன. இத்தகைய நிலையை அடைய நீண்ட காலம் ஆகலாம். பல ஜன்மங்கள் மாறலாம். பல பிறப்புகள் எடுக்க நேரிடலாம். ஆயினும் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் இறைவனைத் தொழுது, சிந்தனையிலே வைக்கும்போது இறைவன் அச்சிந்தனையில் வெளிப்பட்டு அருளுவான். எனவே, "நான் நின்று தொழுவேன், எனது அழகிய பெருமானைக்கிடந்து தொழுவேன், எழில்மிக்க பரஞ்சோதியாகிய பெருமானைப்பொருத்தமான மலர்கொண்டு என்னைப் போல நீங்களும் தொழுது வழிபடுங்கள். அவ்வாறு செய்யும்போது இயல்பாகவே, இறைவன் உங்களுடைய சிந்தையில் வெளிப்பட்டு அருள்புரிவான்" என்கிறார் திருமூலர்.

**"நின்று தொழுவள் கிடந்தெம் பிரான்தன்னை**
**என்றுந் தொழுவன் எழிற்பரஞ் சோதியைத்**
**துன்று மலர்தூவித் தொழுமின் தொழுந்தோறுஞ்**
**சென்று வெளிப்படுந் தேவர் பிரானே".** **(திருமந்திரம் - 1500)**

இறைவனை எவ்வாறாயினும் தொழலாமே! உலகத்தில் நமக்கு ஏற்படும் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளப் பலரை அண்டி,

பலவிதமாகப் புகழ்ந்தும், போற்றியும், பணிந்தும் அவர்களிடமிருந்து உலகியலுக்கான பயன்களைப் பெற முயல்கின்றோம். அப்படி நமக்கு உதவுபவர்கள் நம்மிடமிருந்து எதையாவது பிரதிபலனாக எதிர்பார்த்துக் கொண்டுதான் இருப்பார்கள். ஒன்றைக் கொடுத்து ஒன்றைப் பெற்றுக் கொள்கின்றோம். ஆனால், இறைவனுடைய வழிபாடு அத்தகையதன்று. அவன் நமக்கெல்லாம் தந்தையானவன். அப்பா என்று அழைத்தாலே போதும், நமக்கு அப்பனாகி விடுவான். **''தன்னை அப்பா எனில் அப்பனுமாய் உளன்''** என்பார் திருமூலர். அவன் தெவிட்டாத அமுதம் போன்றவன். ஒப்பற்றவன். நாம் வேண்டுவது யாது என்று நமக்கு அறிவித்து, நாம் வேண்டுவதையும் நமக்கு அருளிச் செய்வான். ஊழிகளுக்கும், காலங்களுக்கும் அப்பாற்பட்டவன். ஆனால், நினைப்பதற்கு எளியவன். அவனை நாம் எவ்வழியிலும் தொழலாம். அவ்வாறு தொழும்போது அவனுடைய அருளையும் பெறலாம்.

**''அப்பனை நந்தியை ஆரா அமுதினை**
**ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை**
**எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்**
**அப்பரி சீசன் அருள்பெற லாமே''.** **(திருமந்திரம் - 36)**

இறைவன், மனிதர்கள் தன்னை அனுபவித்து இன்புறும் பொருட்டு மூவகைத் திருமேனிகளைக் கொள்கின்றான். அவை உருவம், அருஉருவம், அருவம் எனப்படும். நாம் கண்டு மகிழக்கூடியது இனிது விளங்கும் உருவத் திருமேனியேயாகும். உருவத் திருமேனியை வாழ்த்தலும், வணங்கலும், தொழலும் புறவழிபாடுகளாகும். உருவத் திருமேனியை வழிபடுவதன் மூலமாகவே இறைவனையே வழிபடுகின்றோம். வழிபாட்டு நேரத்தில் எங்கும், எதிலும் நிறைந்துள்ள பரம்பொருளை உருவத் திருமேனியில், நம்முடைய இன்பத்திற்காக, சிறிது நேரமாவது தங்கியிருக்க வேண்டிக் கேட்டுக்கொள்கின்றோம். அவ்வாறு வேண்டிக் கொண்டு உருவத் திருமேனியில் வீற்றிருக்கும் இறைவனைப் பல வழிகளிலே போற்றி வணங்குகின்றோம். அத்தகைய வழிபாட்டினைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப் பெரியவர்கள் முறைப்படுத்தியுள்ளார்கள். இந்த நெறிகளுக்குள் நாம் ஆழமாகப் போக வேண்டியதில்லை. முதலிலே, இறைவனுடைய திருமேனி எந்தத் திருக்கோவிலில் வீற்றிருந்தாலும் அந்தக் கோவிலுக்குச் சென்று, இறைவனைப் பாடிப் பணிந்து வணங்க வேண்டும். அவ்வாறு வணங்கு பவர்களுடைய உள்ளத்தையே இறைவன் கோவிலாகக் கொள்வான்.

**''நாடு நகரமும் நற்றிருக் கோயிலுந்**
**தேடித் திரிந்து சிவபெரு மான்என்று**
**பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்**
**கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே''.**

**(திருமந்திரம் - 1445)**

திருக்கோவிலுக்குச் சென்று இறைவனை வணங்கும்போது முதலாவதாக நமது சித்தமெல்லாம் அவன்பால் நிற்க வேண்டும். உள்ளத்திலே அன்பு நிரம்பி இருக்க வேண்டும். நமது பேச்சிலே இறைவனுடைய பெருமை வெளிப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு வழிபடுவர்களே புண்ணியம் செய்தவர்கள். அவர்களுடைய பூசைக்கு நிதியோ, பொருளோ, விளம்பரமோ தேவையில்லை. அவர்களுக்குத் தேவைப்படுவது பூவும், நீரும்தான். பச்சிலை கிடைத்தாலே போதும். **"யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை"** என்பார் திருமூலர். இவ்வாறு அன்பும், ஆர்வமும் கொண்ட மனத்துடன் இறைவனை வணங்குவார்களுக்கு அவனுடைய அருள் என்றும் தங்கி நிற்கும். இதை அறியாத மக்கள் தங்களுடைய காலத்தை வீணே கழித்து, தம்மை உய்வித்துக் கொள்ளக் கிடைக்கும் வாய்ப்புக்களை நழுவ விடுகின்றனரே என்று திருமூலர் அங்கலாய்க்கின்றார்.

**"புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு**
**அண்ணல் அதுகண் டருள்புரி யாநிற்கும்**
**எண்ணிலி பாவிகள் எம்மிறை யீசனை**
**நண்ணறி யாமல் நழுவுகின் றாரே"** **(திருமந்திரம் - 1828)**

இறைவனுடன் ஒன்றிப் போனவர் சுந்தரமூர்த்தி நாயனார். திருமூலர் பெருமான் எடுத்துக் காட்டிய அத்தனை அடையாளங்களும் அவரிடம் இருந்தன. சிதம்பரத்தில் தில்லைப் பெருமானின் திருக்காட்சியில் அவர் தன்னை முழுமையும் பறிகொடுத்து நின்ற ஓர் ஒப்பற்ற நிலையைச் சேக்கிழார் பெருமான் நெஞ்சுருகும் வகையில் விளக்குகின்றார். சுந்தரருடைய கண்கள் இறைவனைப் பற்றி இருந்தன. மற்ற பொறிகள் வேலை செய்யவில்லை. அவருடைய சிந்தனை இறைவனைச் சார்ந்து இருந்தது. மற்றக் கரணங்கள் சக்தி இழந்து இருந்தன. சத்துவ குணம் மேலோங்கி நின்றது. மற்ற தாமத, இராசதக் குணங்கள் ஒடுக்கி நின்றன. இறைவனை அவர் புறக்கண்கள் கொண்டு மட்டும் பார்க்கவில்லை. அகக்கண்களாலேயே பார்த்தார். அவற்றின் வாயிலாக தில்லைப் பெருமான் அவருடைய உள்ளத்தில் புகுந்தான். அவ்வாறு அவன் புகுந்ததன் காரணமாகச் சுந்தரமூர்த்தி நாயனார் சொல்லொணா மகிழ்ச்சியில் திளைத்து நின்றார்.

**"ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள**
**அளப்பரும் கரணங்கள் நான்கும்**
**சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்**
**திருந்துசாத் துவிகமே ஆக**
**இந்துவாழ் சடையான் ஆடும்ஆனந்த**
**எல்லையில் தனிப்பெருங் கூத்தின்**
**வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து**
**மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்".** **(பெரியபுராணம்)**

இத்தகைய வழிபாடு உயர்ந்த யோகமாகும். ஏனென்றால், இது ஒரு தன்னலமற்ற நிலை. தன்னிலை மறந்த ஓர் சாதனை. அன்போடு இறைவனுடன் கலந்திருக்கும் ஓர் உணர்வு. உடலும். உள்ளமும் தூய்மை பெற்று மெய்ப்பொருள் அவற்றுள் பரவி இருக்கக்கூடிய ஒரு அனுபவம். அதுவே சமாதி நிலை. அந்த நிலையையே சன்மார்க்கம் என்று திருமூலர் அழைக்கின்றார்.

**''பசுபாச நீக்கிப் பதியுடன் கூட்டிக்**
**கசியாத நெஞ்சங் கசியக் கசிவித்**
**தொசியாத வுண்மைச் சொருபோ தயத்துற்**
**றசைவான தில்லாமை யானசன் மார்க்கமே''.**

**(திருமந்திரம் - 1486)**

திருக்கோவிலுக்குச் சென்று திருவலகிடுதல், மெழுக்கிடுதல், விளக்கிடுதல், நந்தவனம் வைத்துப் பராமரித்தல், மாலை தொடுத்துக் கொடுத்தல், திருப்பாடல்களைப் பண்ணோடும் பாடி போற்றுதல், திருமுறை நாள்தோறும் ஓதுதல், அடியார்களை அன்போடு வணங்கி, உண்ண உணவும், இருக்க இடமும் தந்து வழிபடுதல், இறைவனருள் பெற்ற ஆசிரியர்களுக்குத் தன்னாலான எல்லா உதவியையும் செய்தல் போன்றவை வழிபாட்டு முறைகளாகும். இவற்றிற்கு முன்னோடியாகப் புறத்தூய்மையையும், அகத்தூய்மையையும் கொள்ள வேண்டும். இந்திரிய சுகங்களில் நாட்டத்தைக் குறைத்துத் தனது மனம், வாக்கு, காயம் போன்றவைகள் வழியாகத் தன்னை இறைவனுக்கு அர்ப்பணம் செய்ய முயல வேண்டும். இறைவழிபாட்டினை உள்ளன்புடன் செய்ய வேண்டும். இறைவனை முறைப்படி அர்ச்சிக்க வேண்டும். இறைவனுடைய நாமத்தைக் குற்றமறச்செபிக்க வேண்டும். வாய்மையுடன் வாழ்வை நடத்திச் செல்ல வேண்டும். இறைவனுக்குச் செய்யப்படும் நைவேத்தியம் அன்பு மிகுந்து இருக்க வேண்டும். வண்டானது எப்போதும் தேனைச் சேகரிப்பதை ஒரே நோக்கமாகக் கொண்டு பல மலர்களை நாடி அலைகின்றது. வெள்ளை அன்னமானது குளத்தில் பல இடங்களுக்குச் சென்று வந்தாலும் தாமரையை விட்டு அகலுவது இல்லை. அதே போல உள்ளன்புடன் இறைவனை வழிபாடு செய்யும் ஒரே மனத்துடன் நறுமலர்களைக் கொய்து அவனுக்கு அளிக்க முற்பட வேண்டும். இது எத்தகைய சிறந்த அறநெறியாகும். ஆனால், மக்கள் இதைச் சாராது பிற வழியில் சென்று கெடுகின்றனரே!

**''அறுகாற் பறவை அலர்தேர்ந் துழலும்**
**மறுகா நரையன்னந் தாமரை நீலங்**
**குறுகா நறுமலர் கொய்வன கண்டுஞ்**
**சிறுகால் அறநெறி சேரகி லாரே''.** **(திருமந்திரம் - 1497)**

பொய்ம்மையே பேசி, வஞ்சகத்தில் நின்று, மனத்திலே கருப்பு வைத்துப், பிறரை ஏமாற்றுபவர் தூய்மையான இறை வழிபாட்டிற்குத் தகுதி

பெறமாட்டார்கள். **''வஞ்சம் இன்றி வணங்குமின் வைகலும்; வெஞ்சொல் இன்றி விலகுமின் வீடுற''** என்று திருநாவுக்கரசர் கேட்டுக்கொள்கின்றார். வழிபாடு செய்யாவிட்டாலும் பரவாயில்லை, வஞ்சகத்துடன் இறைவனை வணங்க முற்படுவது பயனற்றதாகும். வினைகளைக் கூட்டிக் கொள்ளத்தான் உதவும். முழு நம்பிக்கை இல்லாவிடில் பூசை செய்யத் தேவையில்லை. இந்த வஞ்சக நாடகத்தைப் பற்றி பட்டினத்தார் அழகாகப் பாடுகின்றார்.

**''கைஒன்று செய்ய விழிஒன்று நாடக்**
**கருத்தொன்று எண்ணப்**
**பொய்ஒன்று வஞ்சக நாஒன்று பேசப்**
**புலால்கமழும்**
**மெய்யொன்று சாரச் செவியொன்று**
**கேட்க விரும்புமியான்**
**செய்கின்ற பூசைஎவ் வாறுகொள்**
**வாய்வினை தீர்த்தவனே''.**

காரைக்கால் அம்மையார் ஓர் ஒப்பற்ற உணர்வாளர் ஆவார். இறைவன் அவரை **''அம்மையே''** என்று அழைத்து அருளிய பெருமை பெற்றவர். தேவர்களும் மக்களும் இறைவனைப் பலவாறு வழிபடுவதை அம்மையார் பார்க்கின்றார். எல்லோரும் ஒரே நோக்கத்துடன் இறைவனை வழிபடுவதில்லை. சிலர் தங்கள் குறைகள் நீங்க வேண்டுமென்று இறைவனை வழிபடுகின்றனர். வேறுசிலர் இறைவழிபாட்டால் உலகில் தங்களுக்குப் பல வசதிகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றனர். மற்றும் சிலர் தங்களுடைய பதவிக்கும், பெயருக்கும், பெருமைக்கும், பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்க இறைவனை வேண்டுகின்றனர். பக்தர்கள் பலவிதம். தங்கள் எண்ணம் நிறைவேற எவ்வாறாயினும் இறைவனைத் தங்கள் வலைக்குள் கொண்டுவர நினைக்கின்றனர். காரைக்கால் அம்மையார் யோசிக்கின்றார். அவருக்கு மக்களைப் பற்றி மட்டுமல்ல, வானவர்களைப் பற்றியும் நன்கு தெரியும். தேவலோகத்திலும் இதேநிலை தான். பணக்காரர்கள் பயனை வேண்டி ஆடம்பரமாக இறைவனுக்குப் பூசை செய்வதை அவர் பார்த்திருக்க வேண்டும். அதேபோல, தேவலோகத்தில் தேவர்கள் தங்கள் நலனைக் கருதி இறைவனுடைய திருவடிகளை நீண்ட மாலைகளால் அலங்காரம் செய்கின்றனர். ஆயினும், அவர்களுடைய நெஞ்சம் இறைவனுடைய திருவடிகளில் பொருந்தவில்லை. தயங்கித் தயங்கித் தேவர்கள் இறைவனைப் பூசை செய்கிறார்கள். முழுமையான ஈடுபாடு அங்கு இல்லை. பூசையின் நோக்கம் சுயநலமே. ஆனாலும் காரைக்கால் அம்மையாருக்கு ஐயம் ஏற்படுகிறது. இவ்வாறு தேவர்கள் பெரிய மலர் மாலைகளைப் புனைந்து உன்னை வழிபடுகின்றனரே. நான் அவ்வாறு செய்யவில்லை எனது மனத்தை மட்டும் உன்னிடம் வைத்திருக்கின்றேன். எனக்கு நீ என்ன செய்யப் போகின்றாயோ என்பது போலப் பேசுகின்றார். அம்மையாருக்கு

இத்தகைய ஏக்கம் ஏற்படத் தேவையில்லை. கட்டாயம் இறைவன் அம்மையாருக்கு அருள்புரிவான். எத்தகைய வழிபாடாயினும் அதற்கு அன்பாகிய அடிக்கல் வேண்டுமென்பதே அம்மையாருடைய பாட்டின் பொருளாகும். அந்தப் பாட்டைக் கேளுங்கள்:

**''நினைந்திருந்த வானவர்கள் நீள்மலரால் பாதம்**
**புனைந்தும் அடிபொருந்த மாட்டார்-நினைந்திருந்து**
**மின்செய்வார் செஞ்சடையாய், வேதியனே, என்கின்றேற்கு**
**என்செய்வான் கொல்லோ இனி?''**

**(அற்புதத் திருவந்தாதி 15)**

அன்போடு உருகி இறைவனை வழிபடுதல் தொண்டுநெறி எனவும் அழைக்கப்படும். அதைத் தாச மார்க்கம் என்று கூறுவார்கள். தாச மார்க்கமாவது அடிமை நெறியாகும். இறைவன் விரும்பும் எளிய காரியங்களை மனநிறைவுடனும், ஈடுபாடுடனும் செய்வது தொண்டு நெறியாகும். திருக்கோவில்களில் விளக்கேற்றல், பூக்கொய்தல், அன்போடு மெழுகுதல், திருக்கோவில்களில் உள்ள இடங்களில் அசுத்தங்களைப் போக்கல், இறைவனை வாயார வாழ்த்துதல், கோவிலின் பூசை நேரங்களில் மணியைப் பற்றி அடித்தல், திருமஞ்சனம் போன்ற தொழில் செய்தல் போன்றவை தொண்டு நெறியாகும். இவற்றை முழுமனதுடன் செய்து வாழ்பவர்கள் இறைவன் அருள் பெறுவர் என்பதில் ஐயமில்லை.

**''எளியனல் தீப மிடல்மலர் கொய்தல்**
**அளிதின் மெழுக லதுதூ ர்த்தல் வாழ்த்தல்**
**பளிமணி பற்றல் பன்மஞ் சனமாதி**
**தளிதொழில் செய்வது தான்தாச மார்க்கமே''.**

**(திருமந்திரம் - 1502)**

இறைவழிபாட்டில் பாடலுக்கு முக்கியமான இடமுண்டு. இறைவனுக்கு வேள்வி செய்யலாம். நிவேதனம் அளிக்கலாம். இறைவன் அவற்றை ஏற்றுக்கொள்வான். ஆனால், நம்மில் பலருக்கு வேள்விகளையும், யாகங்களையும் நடத்தவோ பலவிதமான நிவேதனங்களை அளிக்கவோ வசதி இல்லாமல் போகலாம். அந்த நேரத்தில் நமக்குள் இறைவனைத் துதித்துப்பாடிக்கொண்டிருந்தாலே போதும். அது அவனை மகிழச் செய்யும். அதுவே அவனுக்குச் சிறந்த உணவுமாகும். அன்புடன் தன்னைப் பாடுபவர்களுக்கு இறைவன் எப்போதும் அருள் புரிவான். ஆகவே, திருமுறைகளைப் படித்து மனப்பாடம் செய்து அவற்றைப் பாடிக்கொண்டிருப்பதன் மூலமாகவே இறைவன் வேண்டும் வழிபாட்டினைச் செய்யலாம். இவ்வாறு செய்து இறைவனுடைய திருவடிப் பேற்றினைப் பெற்றவர் ஆனாய நாயனார் ஆவார். அவர் தனது குலத்தொழிலாகிய பசுக் காத்தலைச் செய்யும் பொழுது தனது சூழலில் சிவபெருமானைப் பற்றி அன்பு பொருந்திய இசையை வாசித்து மகிழ்வார். விலங்குகளும் அவருடைய

இசையில் மெய்மறந்தன. அவருடைய இசையில் இனிமைக்கு இறைவன் விலக்கல்லன். இறைவனை **"இசை விரும்பும் கூத்தனார்"** எனச் சேக்கிழார் அழைக்கின்றார். ஆனாய நாயனாருக்கு இறைவன் எதிர்நின்று காட்சி அளிக்கின்றான். குழலோசை கேட்டு மகிழ்ந்து, நாயனாருடைய மெய்மறந்த நிலையைக் கண்டு பாராட்டும் வகையில் அந்த நிலையிலேயே தன்னிடம் வந்து நாயனார் அணைந்து நிற்க வேண்டும் என்கின்ற கருத்துடன் **"இந்நின்ற நிலையேநம் பாலணைவாய்"** என்று அருள்புரிவார். இந்த வகையிலேயே திருமந்திரம் இறைவனை மகிழச் செய்யும் பாடல்கள் அவனுக்குத் தொண்டர்கள் அளிக்கும் பால் நிவேதனம் ஆகும் என்று வலியுறுத்துகின்றது.

**"வேட்டவி யுண்ணும் விரிசடை நந்திக்குக்**
**காட்டவும் நாமிலம் காலையும் மாலையும்**
**ஊட்டு அவியாவன உள்ளங் குளிர்விக்கும்**
**பாட்டவி காட்டுதும் பால் அவியாமே". (திருமந்திரம் - 1824)**

நாயன்மார்கள் இறைவழிபாட்டினை உள்ளும் புறமும் அன்போடு உருகிச் செய்து இறைப் பேற்றினைப் பெற்றவர்கள். அவர்களுடைய வரலாறு இறைவழிபாட்டிற்குச் சான்றாக, எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. இறைவழிபாட்டினை உயிரைவிட அருமையாகப் போற்றியவர்கள் அவர்கள். கருவூர் நகரத்தில் வாழ்ந்த எறிபத்த நாயனார் ஒரு ஒப்பற்ற சிவனடியார் ஆவார். ஒரு நாள் அவ்வூரில் வாழ்ந்த சிவகாமி ஆண்டார் என்னும் பெரியவர் தான் மிக்க அன்புடன் விதிப்படி பூக்களைப் பறித்து, கட்டிய மாலையை இறைவனுக்குச் சாத்துவதற்காக எடுத்துக்கொண்டு போனபோது, அவ்வழியே வந்த பட்டத்து யானை அந்த மாலையைப் பிடுங்கி கீழே சிந்த, சிவகாமி ஆண்டார் மிகுந்த வருத்தம் கொண்டவராக இருந்த நிலையில், வெகுண்ட எறிபத்த நாயனார் அந்தப் பட்டத்து யானையையும், பாகர்களையும் கொன்று விடுகின்றார். இந்த வரலாற்றைக் கூற வரும் சேக்கிழார் பெருமான் மூன்று பாடல்களில் சிவகாமி ஆண்டாரின் தூய வழிபாட்டு முறையினை அழகாக விளக்குகின்றார். அந்தப் பெரியவர் விடியற்காலையில் எழுந்து வெளியில் போய், குளிர்ந்த நீரில் மூழ்கி, வாயையும் கட்டிக்கொண்டு, பூப்பறிப்பாராம். நல்ல மனமுள்ள மலர்களை அவர் கைகளால் தெரிந்துகொண்டு அவற்றைப் பறிப்பார். இறைவனுக்காகப் பூப்பறிக்கும்போது வாயைக் கட்டிக்கொள்வது ஒரு சிறந்த மரபாக இருந்தது. பூக்களைத் தரையிலிருந்து எடுக்கக்கூடாது. செடிகொடிகளிலிருந்து எடுக்க வேண்டும். புதிதாக மலர்ந்திருக்க வேண்டும். அவை வீசும் மணம் முழுமையும் இறைவன் திருமுடியிலே கமழ்வதாக இருக்க வேண்டும். இவ்வாறு அவரும் பருவமுடைய அரும்புகளைக் கொய்து பூக்கூடையில் வைத்து அப்பூக்கூடையைத் தண்டில் தொங்கவிட்டு, அந்தத் தண்டைத் தாங்கிக் செல்ல வேண்டும். இந்தத் தண்டிலிருந்து தொங்கும் கூடையானது தாங்கிச் செல்வோருடைய இடைக்கு மேலே இருக்க வேண்டும். இத்துணை

செய்கைகளையும் சிறந்த அன்புடன் சிவகாமி ஆண்டார் செய்து வந்தார் என்று சேக்கிழார் எடுத்துக்காட்டுகின்றார். இவையெல்லாம் நாம் இன்றும் கடைப்பிடிக்க வேண்டிய வழிபாட்டு முறைகளாகும்.

முருக நாயனார் என்னும் அடியார் மேற்படி பூசையினை ஒருநாளும் வழுவாது செய்து இறைவன் திருவடியைச் சேர்ந்தார். அவர் செய்த பணி நந்தவனங்களில் பூக்கொய்து, மாலை கட்டி, அன்போடு சார்த்தி, அர்ச்சனையை முறைப்படி செய்து வந்ததுதான். அவருடைய வழிபாட்டை **''ஆளான மெய்ம்மைத் தவத்தால்''** என்று சேக்கிழார் பெருமான் புகழ்கின்றார். அத்தகைய பெரியார் திருஞானசம்பந்தருக்கு நண்பராகும். பெருமையையும் பெற்றவர். திருஞானசம்பந்தருடைய திருமண நாளில் அவருடன் சிவபெருமானது திருவடியைச் சாரும் பேற்றினையும் அடைந்தார்.

இறைவழிபாடு உள்ளத்தில் தோன்றும் அன்பின் வெளிக்காட்டாக இருக்கும்போது உள்ளத்தை உய்விக்கின்றது. இறைவனடியை நெருங்கச் செய்கின்றது. திருமூலர் இதை உணர்ந்துகொண்டவர். ''நான் எப்பொழுதும் இறைவனுடைய திருவடியை எனது தலையில் சூடிக்கொள்வேன், மனதில் வைத்து போற்றி வணங்குவேன், இறைவா என்று உள்ளம் உருகப் பாடுவேன், பல சிறந்த மணமுள்ள மலர் கொண்டு பூசை செய்து, இறைவனுக்கு அழகு செய்து, அந்த அழகிலே நிலைத்து நிற்பேன். அன்பெனும் உணர்வினால் உந்தப்பட்டு, இறைவனைப் போற்றி வணங்கி ஆடுவேன். அவனன்றி வேறொன்றுமில்லை என்று என் மனதை அவனிடம் பறிகொடுப்பேன். இன்று நான் செய்வதும், நாளை செய்யப் போவதும் இவை மட்டும்தான்'' என்று கூறுகின்றார்.

**''குடுவன் நெஞ்சிடை வைப்பன் பிரான் என்று**
**பாடுவன் பன்மலர் தூவிப் பணிந்துநின்**
**றாடுவன் ஆடி அமரர்பி ரான்என்று**
**நாடுவன் நானின் றறிவது தானே''.** (திருமந்திரம் - 50)



# 13. "குருவே சிவம்"

தண்ணீரில் ஒரு கல்லைப் போட்டால் ஒன்றன்பின் ஒன்றாய் ஓயாத அலைகளை அது உண்டாக்குவதைப் பார்க்கலாம். முதலில் சிறிய அலைகள், பின்னர் பெரிய அலைக்கூட்டம், மேலும் காற்றினால் உந்தப்பட்டுத் தண்ணீர் பரப்பு முழுவதையும் நிரப்பி விடுகின்றது. இதேபோல இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு உயிரும் எண்ணுகிற எண்ணங்கள் எல்லாம், செய்கின்ற செயல்கள் எல்லாம் வினைகளை உருவாக்கி விடுகின்றன. அந்த வினைக்கடலிலே சிக்கி மலைப்புண்டு, துவண்டு பல பிறப்புகளை எடுத்து உயிரானது பல அனுபவங்களில் மூழ்கி இளைத்து நிற்கின்றது.

பாண்டிய மன்னனிடம் மாணிக்கவாசகர் முதன்மந்திரியாகப் பெரும் புகழுடன் பணியாற்றி வந்தபோதும் தனக்குக் கிடைத்திருந்த பெரும் பேற்றினை இறைவனுடைய ஆணையாகத் தலைமேல் கொண்டு, உலக இன்பங்கள் யாவும் அழியும் தன்மை உடையவை என்று உணர்ந்தவராக, எல்லாவற்றிற்கும் மேலான பேரறிவையும், பேரின்பத்தையும் தனது உள்ளத்தின் ஆழத்திலே நாடியவராக உல்கப் பொருள்கள் மீது எல்லாப் பற்றினையும் நீக்கி, இறைவனைக் காண் வேண்டும் என்கிற ஒரே கருத்துடன் தனது பொறுப்புகளை நிறைவேற்றி வந்தார். அரசன் கட்டளைப்படி திருப்பெருந்துறைக்குச் சென்று குதிரைகளை வாங்கப்பயணத்தை மேற்கொண்டார். திருப்பெருந்துறையை அடைந்தார். அந்தத் தலத்தை அடைந்தபொழுது அவருடைய மனதிலே ஒரு பெரிய சுமை குறைந்ததுபோன்ற இன்ப உணர்வு ஏற்பட்டது. அருகிலே குருந்த மரம் ஒன்றைக் கண்டார். அதனடியில் சிவாகாமத்தை ஓதும் மாணாக்கர்கள் பலர் அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு நடுவே சிவபெருமானைப் போன்ற திவ்விய ஒளி வடிவம் பெற்ற மாமுனிவர் ஒருவர் வீற்றிருந்தார். அவருடைய திருமேனி மாசற்ற சோதியாக மலர்ந்த மலர்ச்சுடராய் விளங்கியது. அவர் திருக்கையிலே சிவஞானபோதம் என்ற மெய்ந்நூல் காணப்பட்டது. அவரைக் கண்ட மாத்திரத்திலேயே மாணிக்கவாசகர் அதிதீவிர பக்குவமடைந்த காரணத்தில் இறைவனே குரு வடிவமாகி இந்தத் திருமேனி தாங்கிக்கொண்டு வந்தார் என்று உணர்ந்து கொண்டார். அவருடைய கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்கிற்று. முனிவருடைய திருவடிகளிலே வீழ்ந்தார். தன்னை ஆட்கொள்ளவேண்டும் என்று விண்ணப்பித்துக் கொண்டார் தனது உடல்,

பொருள், ஆவி மூன்றையும் அவருக்கே அர்ப்பணித்தார். அவற்றையெல்லாம் புன்முறுவலுடன் ஏற்றுக்கொண்ட மாமுனிவர் மாணிக்கவாசகருக்கு பதி, பசு, பாசம் என்பன பற்றியும், சரியை, கிரியை யோகம் ஆகியவற்றையும் விளக்கிச் சொன்னார். உள்ளக்கண்ணாகிய தனது திருநோக்கினால் மாமுனிவர் மாணிக்கவாசகருடைய மல இருளைச் சிதைக்கும் வகையில் சட்சுஷ தீட்சை செய்தார். அவருடைய தலையின் மீது தமது திருக்கரத்தை வைத்து ஸ்பரிச தீட்சை செய்தார். பின்னர் அவருக்கு திருவைந்தெழுத்தைப் பற்றிய உபதேசம் செய்தார். அந்தக் கணமே மாணிக்கவாசகர் மலம் நீங்கி, பாசம் நீங்கி, பசு கரணங்கள் கெட்டு, முன்னம் அறிவினை இழந்து, தன்னுடைய கரணங்களெல்லாம் சிவமயமாகத்தனது உள்ளத்தைச் சார்ந்திருந்த எல்லா மாயையையும் உதறித் தள்ளி சீவன் முத்தரானார். மாணிக்கவாசகருடைய கண்களிலே ஆனந்தக் கண்ணீர் பெருகிற்று. உடம்பெல்லாம் மயிர்க்கூச்செறிந்தது. அவருடைய முன்னை வினைகள் ஒழிந்தன. பின்னம் வினையைப்பிடித்துப் பிசையும் தகுதியைப் பெற்றார். இறைவன் குருந்த மரத்தடியில் குரு உருவமாக வந்து எளியனான தன்னை ஏற்றுக்கொண்ட அருமையைப் பற்றி எண்ணி எண்ணி வியந்தார்.

**''.....வல்வினையேன் றன்னை**
**மறைந்திட மூடிய மாய இருளை**
**அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்**
**புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி**
**மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை**
**மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய**
**விலங்கு மனத்தால் விமலா உனக்குக்**
**கலந்தவன் பாகிக் கசிந்துள் குருகும்**
**நலந்தா னிலாத சிறியேற்கு நல்க**
**நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி**
**நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்**
**தாயிற் சிறந்த தயாவான தத்துவனே**
**மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே**
**தேசனே தேனார் அமுதே சிவபுரனே**
**பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே''.**

**-- திருவாசகம் சிவபுராணம்**

மாணிக்கவாசகருடைய வரலாற்றில் அவர் உபதேசம் பெறும் பகுதி மிகவும் முக்கியமானது. அவர் பல பிறவிகளில் செய்த புண்ணியங்களின் காரணமாகச் சிவனெறியிலும, சிவயோகத்திலும் சிறந்த முன்னேற்றம் அடைந்திருந்ததை அந்தப் பகுதி சுட்டிக் காண்பிக்கின்றது. உலகத்தில் ஏற்படும் இன்பங்கள், துன்பங்கள் ஆகியவற்றை ஒரே கண்ணோடு பார்க்கும் தகுதியை அவர் பெற்றிருந்தார். விருப்புகள், வெறுப்புகள் போன்றவை

அவரை விட்டு அகன்றன. தொன்றுதொட்டு அவருடைய உயிரைத் தழுவி நின்ற ஆணவ மலத்தின் தன்மை குறைந்து, மாயை அகன்ற நிலையில் இறைவனுடைய அருட்சக்தி அவர்மீது பதிந்து அவர் பேரறிவு பெறும் நிலையில் இருந்தார். அவர் அப்பொழுது இருந்த நிலை இருவினை ஒப்பு எனப்படும். அதாவது நல்வினை, தீவினை என்னும் இரண்டு வகை வினைகளும் இரண்டுவிதமான விலங்குகளைப் போலவேதான் என்கிற உணர்வு ஏற்படுகிறது. அப்பொழுது கெட்ட குணங்கள் உயிரைவிட்டு நீங்கி விடுகின்றன. இவையெல்லாம் உயிரின் முயற்சியினால் ஏற்பட்டாலும் அந்த நிலையும் இறைவனுடைய அருட்சக்தியாலேதான் ஏற்படுகிறது. உள்ளத்தில் ஞான விளக்கம் ஏற்படுவதும் இறைவனுடைய அருளாலேதான். ஆனால், அந்த இறைவனுடைய அருள் நமக்கு வந்து சேருவதும் குருவின் மூலமாகத்தான் என்பதையும் உணர வேண்டும். தகுந்த நேரத்தில் சிவபெருமான் குருவாக வந்து குற்றங்கள் யாவற்றையும் நீக்கி ஞானத்தை வழங்க அந்த உயிரானது பற்றற்ற நிலையை அடைகிறது. இதைச் செய்வதும் சிவபெருமானே.

**"இருவி னைநேரொப்பில் இன்னருட் சக்தி**
**குருவென வந்து குணம்பல நீக்கித்**
**தருமெனு ஞானத்தால் தன்செய லற்றால்**
**திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே". (திருமந்திரம் - 1527)**

மலபரிபாகம் ஏற்படும்போது, இறைவனுடைய அருட்சக்தி பக்குவமடைந்த உயிரைப் பற்றும்பொழுது அந்த உயிரானது ஞானத்தை உணரும் தகுதி பெறுகிறது. பல பிறவிகளாக நடந்து வரும் இந்த இயக்கத்திற்குக் காரணமாக நிற்பவன் இறைவன். ஒரு பளிங்குக் கல்லிலே மாசு படிந்திருந்தால் தனது ஒளியை அது முழுவதும் வெளிக்காட்டாது. அதேபோல், மலங்கள் கூடியிருக்கும் உயிருக்குள் இருக்கும் உள்ளொளி வெளிப்படாது. ஆயினும் இறைவன் அந்த உயிருக்குயிராய், பாலினில் நெய் போல மறைந்து நின்று, அந்த உயிர் நாளடைவில் பக்குவம் பெறுவதற்காகத் தனது அருளை வழங்கிக் கொண்டே இருப்பான். பின்னர் நமது பக்குவ நிலைக்கேற்ப சிவபெருமான் குருமூர்த்தமாக எழுந்தருளி நமது மலங்களைப் போக்கி அருளுகின்றான். நமது உயிருக்குயிராக நின்ற இறைவன் இப்பொழுது குருவின் உருவத்தில் வந்து நமது ஞானக்கண்ணைத்திறக்கச் செய்கின்றான். இதற்குக் குருவின் உதவி மிகவும் அவசியம். ஒரு நோயாளிக்கு நோய் வரும்பொழுது உணவின் மீது விருப்பம் இல்லை. நோய் அகன்ற பிறகு பசி உண்டாகிறது. ஆனால், உணவு உடனே வந்துவிடாது. உணவை ஒருவர் ஆக்கி அளிக்க வேண்டும். அதன் பின்னரே அவர் அந்த உணவை உண்டு பசியைப்போக்கிக் கொள்ளவேண்டும். இவ்வாறேதான் நம்முடைய ஞானப்பசியைத் தீர்க்க இறைவன் குரு உருவமாக நம்மிடையே தோன்றவேண்டி உள்ளது.

நமது வீட்டில் உள்ள இளம் குழந்தைக்குக்கல்வி தொடங்கும் பருவம் வருகின்றது. அதாவது கல்வி கற்கும் பருவம் வருகின்றது. ஆனால், அது உடனே கல்வியைப் பயிலும் ஆற்றலைப் பெறுவதில்லை. ஆசிரியர் ஒருவர் கற்பிக்க அந்தச் சிறு குழந்தை கல்வியைப் பெறுகிறது.

ஒரு அரசனுடைய மகன் ஒருவன் குழந்தைப் பருவத்தில் காட்டில் செல்லும்பொழுது வேடர்கள் கையில் அகப்பட்டுக் கொண்டான். வேடர்களுடன் சேர்ந்து, வாழ்ந்து, வளர்ந்து வந்தவன் அவர்களுடைய பழக்க வழக்கங்களைத்தனதாக்கிக் கொண்டான். அரச குலப் பழக்க வழக்கங்களையும், பண்பாடுகளையும் மறந்தான். இவ்வாறு மயக்கமுற்ற நிலையில் பல ஆண்டுகள் அவன் வேடர்களுடன் வாழ்ந்து வந்தான். அரசனும் பல ஆண்டுகள் தனது மகனைத் தேடி, அவன் வேடர்களுடன் வாழ்வதைப் பற்றிக் கேட்டறிந்து காட்டிற்குப் போய் அரசிளங் குமாரனைச் சந்தித்து ''நீ என் மகன்'' என்று அவனுக்கு அறிவுறுத்தி அவனைத் தன்னுடன் அழைத்துச் சென்றான். அரச குடும்பத்தில் சேர்ந்து, அரசனின் மகன் வேடர்களின் தீய பழக்கங்களை மறந்து அரசனின் பண்பாடுகளை மீண்டும் பெற்றான். அரசனின் மகனுக்குத் தனது உண்மையான நிலையைப் பற்றிய அறிவு பெறுவதற்கு அரசனின் உதவி தேவைப்பட்டது.

அரசிளங் குமாரனைப் போலவே உயிரானது ஐம்புலன்களின் ஆதிக்கத்தில் வளரும்பொழுது அவற்றால் மயங்கி அறியாமையில் மூழ்கி நிற்கின்றது. மும்மலங்கள் உயிரினுடைய உண்மைத் தன்மையை மறைக்கின்றன. சரியான நேரத்தில் உண்மையை அறிவிக்க இறைவனே குருவடிவாய் எழுந்தருளுகிறான். அக்கணமே உயிரானது ஐம்புல வேடர்களைவிட்டு நீங்கி இறைவனோடு வேறற்ற தன்மையில் நிலைபெற்று, இறைவனின் திருவடிகளை அடைகின்றது. ''குருவன்றியே இறை வனைக்கூடவொண்ணாது'' என்கிற கருத்தைச் சிவஞானபோதம் எட்டாம் சூத்திரம் அழகாக விளக்குகின்றது.

**''ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்**
**தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு**
**அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே''.**

இறைவனே குருவாக எழுந்தருளி, சித்தத்தைத் தெளிவித்து, சிவமாக்கி ஆட்கொண்ட நிலையினை மாணிக்கவாசகர் பின்வருமாறு விவரிக்கின்றார்:-

**''இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய்**
**அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்கு**
**சிந்தைதனைத் தெளிவித்து, சிவமாக்கி யெனையாண்ட**
**அந்தமிலா ஆனந்த மணிகொள்தில்லை கண்டேனே''.**

**(திருவாசகம்)**

சிவகுருவாக எழுந்தருளி வருபவர் சிவபிரானே ஆவர். உயிர்களது தளையாகிய பாசத்தைக் குருவானவர் தனது உபதேசத்தால் மாற்றி அருளுவர். மலங்களைப் போக்கி உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவர். உயிரை ஐம்புலன்களாகிய வேடர்களிடமிருந்து காப்பாற்றுவர். திருவடி தீட்சையினைச் செய்தருள்வர். அதனால் உயிரானது திருவடிப் பேரின்பம் பெறும். குருவினால் நமக்கு ஏற்படும் இந்தப் பேற்றினை ஞானக்கண்ணால் உணர வேண்டும். அப்படியின்றி ஊனக்கண்ணால் மட்டும் பார்க்கும்பொழுது அந்தக் குருவும் நம் போல ஒருவராகத் தோன்றுவர். மூடர்கள் குருவை நம்மில் ஒருவராகவே எண்ணுவர். ஆனால், மெய்யுணர்வு பெற்ற புண்ணியர் குருவைச்சிவனே என்று அறிந்து அவரது திருவடிகளை வணங்கி நிற்பர்.

**"சுத்த சிவன்குரு வாய்வந்து தூய்மைசெய்**
**தத்தனை நல்கருள் காணா அதிமூடர்**
**பொய்த்தகு கண்ணால் நமர்என்பர்; புண்ணியர்**
**அத்தன் இவனென் றடிபணி வாரே".** **(திருமந்திரம் - 1578)**

உயிர்களுக்குக் குருவானவன் செய்வதென்ன? அவன் உயிர்களிடையே மெய்ப்பொருளின் மீது அன்பை உண்டாக்குகின்றான். எல்லோராலும் போற்றி வணங்கப்படும் இறைவனுடைய திருவடியைப் பற்றிக் கொள்ளும் சாதனங்களைக் கற்பிக்கின்றான். அவனுடைய மொழியே வாய்மை. தூய்மை நிறைந்ததும்கூட. குற்றம் அற்றதாக இருக்கும். குருவின் சொல்லைக் கேட்டாலே சந்தேகங்கள் தீர்ந்துவிடும். சத்து, அசத்து, சதசத்து ஆகிய மூன்று பொருள்களின் இயல்பையும் நன்கு உணர்ந்தவன். சீடர்களுக்குச் சந்தேகமின்றி உணர்த்தும் ஆற்றலைப் பெற்றவன். அத்தகைய செயலைச் செய்யும் ஒரு சிவத்தன்மை பெற்றிருப்பதால் அவரையே சிவமென்றும் அழைப்பது பொருந்தும்.

**"பத்தி பணித்து பரவும் அடிநல்கிச்**
**சுத்த உரையால் துரிசறச் சோதித்துச்**
**சத்தும் அசத்தும் சதசத்தும் காட்டலால்**
**சித்தம் இறையே சிவகுரு வாமே".** **(திருமந்திரம் - 1573)**

மேலும், குரு சீடனுக்கு ஆணவம், கன்மம்,மாயை ஆகியவற்றின் உண்மையான இயல்புகளைச் சுட்டிக் காட்டுவார். அவற்றிலிருந்து விடுவித்துக்கொள்ளும் வழிகளையும் சொல்லிக் கொடுப்பார். உடலானது உயிரன்று என்னும் உண்மையை விளக்கி, உடல் மீது நமக்குள்ள ஆசையை மாற்றுவார். நமது அறியாமையைக் குறைத்து, பொய்ம்மையைக் காண்பித்து, நம்முடைய உள்ளத்திலே உண்மைக்கு வித்திடுவார். இத்தனையும் நமக்காகச் செய்யும் ஞானாசிரியன் உண்மையில் மக்களோடு மக்களாக வாழ்ந்துகொண்டிருப்பான். ஆனால், அவனை நமக்கு அருள்புரிந்து நிற்கும் சிவமாகவே நாம் உள்ளத்தில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**''பாசத்தைக் காட்டியே கட்டுப் பறித்திட்டு**
**நேசத்த காயம் விடுவித்து நேர்நேரே**
**கூசற்ற முத்தியிற் கட்டலால் நாட்டகத்**
**தாசற்ற சற்குரு அப்பர மாமே''** (திருமந்திரம் - 1574)

சிவகுரு சீடனுக்குச் சிவஞானத்தைப் போதிப்பது மட்டுமன்று. குருவின் அருளால் சீடனுக்குப்பிற பயன்கள் பலவும் கிடைக்கின்றன. இறை அன்பு அவனுடைய உள்ளத்திலே பொங்கி எழுகின்றது. பலவகை மந்திரங்களை ஓதுவதற்குரிய வல்லமையைச் சாதகன் பெறுகின்றான். அதோடுகூட மந்திரங்களின் சக்தியால் பல்வேறு சித்திகளும் கைகூடுகின்றன. சாதகனுக்கு மேற்படி சித்திகள் முக்கியமன்று. சித்திகள் அவனுடைய ஆன்மீகப் பலத்தைச் சுட்டிக் காட்டும். அதே நேரத்தில் சாதகன் இறைவனுடைய திருவடியைப்பெறுவதே குறிக்கோளாகக் கொண்டிருப்பதால் அவன் சித்திகளில் நேரம் செலுத்தாது மனத்தை அடக்கி, ஐம்புலன்களை வென்று மேலும் செல்ல வேண்டும். குரு உபதேசத்தால் சீடன் யோகத்தில் நின்று உறுதிப்பாட்டுடன் மாயையை அகற்ற இயலும். இவ்வழியாக அருட்சக்தியாக நின்று அருளுகின்ற சிவஞானமும் சீடனுக்குக் கிடைக்கும். அந்த ஞானமே சிவம் என்று ஆன்மா உணரும்பொழுது கிடைக்கும் முத்தியும் குருவாக நின்ற இறைவனுடைய அருள் என்று எடுத்துக் கொள்ள வேண்டும்.

**''சித்திகள் எட்டொடும் திண்சிவ மாக்கிய**
**சுத்தியும் எண்சத்தித் தூய்மையும் யோகத்துச்**
**சத்தியும் மந்திர சாதக போதமும்**
**பத்தியும் நாதன் அருளிற் பயிலுமே''.** (திருமந்திரம் - 1575)

குருவாய் நின்று அருள்புரியும் சிவபெருமான் சீடனிடம் மிகுந்த அன்பு கொள்கின்றான். உலகிலுள்ள எல்லாவற்றையும் பதி, பசு, பாசம் ஆகிய மூன்று பொருள்களில் அடக்கி அவற்றின் உண்மையை உணர வைக்கின்றான். அந்த உணர்வு உள்ளத்திலே பாயும்பொழுது பாசத்தை நீக்க உயிர் முற்படுகின்றது. இதற்குக் காரணகர்த்தாவும் இறைவனேயாகும்.

இதனால் மெய்ப்பொருள் இன்னது என்று விளங்குகின்றது. இதுவரை மெய்ப்பொருளை உணரவிடாது உயிரை மாயையில் அடக்கி வைத்திருக்கும் பொய்ப்பொருள்களின் தன்மை நீங்குகின்றது. மெய்ப்பொருள் நிலைபெற்று நிற்கின்றது. பேரறிவான சிவம் உயிருக்குயிராய் இருந்து, அருளினைப் புரிந்து, பலவிதமான மயக்கங்களையும் நீக்கும் ஆற்றலும் குருவினால் சீடனுக்கு உணர்த்தப்படுகின்றது. குரு அருளின்றி இவற்றையெல்லாம் ஒருவராலும் அறிய இயலாது. **''நானார் என் உள்ளம் ஆர் ஞானங்கள் ஆர் என்னை யார் அறிவார்; வானோர்பிரான் என்னை ஆண்டிலனேல்''** என்பார் மாணிக்கவாசகர்.

"உண்மையிற் பொய்ம்மை ஒழித்தலும் உண்மைப்பார்
திண்மையும் ஒண்மைச் சிவமாய அவ்வரன்
வண்மையும் எட்டெட்டுச் சித்தி மயக்கமும்
அண்ணல் அருளன்றி யாரறி வாரே". (திருமந்திரம் - 1579)

குருவின் ஆசியுடன் சீடன் மேலும் பெறுவது ஞானம் எனப்படும் பேறும் முக்தியாகிய பயனும், மெய்ப்பொருளை என்றும் உணர்வில் கொண்ட அருளின் நிலையும், மாயையின் தன்மை நீக்கமும், வேதத்தில் கண்டுள்ள உண்மைப் பொருளின் விளக்கமும், இறைவன் மீது அன்பும், அந்த அன்பினால் இறைவனுக்குச் செய்ய வேண்டிய சரியை, கிரியை நியதிகளும், ஞான உணர்வும், அதனால் தோன்றும் வைராக்கியமாகிய இருவினை ஒப்பும் ஆகும்.

குருவினுடைய திருக்கரங்கள் சீடனின் தலையில் பட்டாலே போதும் சீடன் சிவமயமான உணர்வைப் பெறுகின்றான். தனது உண்மையான நிலையை அறிகின்றான். ஞானம் பெறுகின்றான். பாசங்களின் வேகத்தைக்கெடுத்து ஆளுகின்றான். உடலும், உடலால் கிடைக்கும் அனுபவங்களும் தாண்டப்பட்டு சீடன் சிவனேயத் தன்மை பெறுகின்றான்.

குருவின் அருளால் சீடனின் வினைகள் நீங்குகின்றன. ஏற்கனவே செய்யப்பட்ட வினைகளால் வரும் தீமையும் சீடனை அணுகுவதில்லை. ஏன் எமனும் அவன் தூதரும் சீடனை அணுகாமல் இருக்கவும் குருவானவன் அருளவல்லவன். ஆதலின் சீடனுடைய பிறவித் துயரையும் போக்கவல்லவன்.

"தவிரவைத்தான் வினை தன்னடி யார்கோள்
தவிரவைத்தான் சிரத்தோடு தன் பாதந்
தவிரவைத்தான் நமன் தூ துவர் கூட்டந்
தவிரவைத்தான் பிறவித் துயர் தானே". (திருமந்திரம் - 2050)

குருவின் அருள் இறைவன் அருளுக்குச் சமானமானது, ஆற்றலைக் கொண்டது. குருவின் திருக்கரங்கள் பட்ட சீடன் மும்மலங்களும் நீங்கிச் சிவகதி பெறுவான். அது எப்படியென்றால், பழைய காலத்தில் யோகிகள் இரும்பையும் மற்ற உலோகங்களையும் பொன்னாக்கும் இரசவாத முறையை அறிந்திருந்தனர். இரும்பில் மருந்து பட்ட இடமெல்லாம் பொன்னாகுமாம்! அதேபோல குருவின் திருவடி பட்ட சீடன் மலம் நீங்கி உயர்ந்த தன்மையைப் பெறுவான். இரும்பு பொன்னான பிறகு மீண்டும் இரும்பாகாது. அதேபோல் பக்குவம் வந்தபின் குரு அருள் பெற்ற சீடன் மீண்டும் பிறவிக் கடலை வந்து சேரமாட்டான்.

"கறுத்த இரும்பே கனம தானான்
மறித்திரும் பாகா வகையது போலக்
குறித்த அப்போதே குருவருள் பெற்றான்
மறித்துப் பிறவியில் வந்தணு கானே" (திருமந்திரம் - 2051)

**''பரிசன வேதி பரிசித்த தெல்லாம்**
**வரிசை தரும்பொன் வகையாகு மாபோற்**
**குருபரி சித்த குவலயம் எல்லாந்**
**திரிமலந் தீர்ந்து சிவகதி யாமே''.** (திருமந்திரம் - 2054)

மெய்ப்பொருளை உணர விரும்பும் சாதகன் சிறந்த குருவின் அருளாலும், தன்னுடைய பயிற்சியாலும் இறை அனுபவத்தைப் பெற்று அதிலே திளைத்து நிற்கின்றான். ஆனால், குரு என்று தம்மைப் பற்றிக் கூறிக் கொள்ளும் பலரும் சற்குரு ஆகமாட்டார்கள். சாதகனின் நோக்கம் தனது உள்ளத்திலே படிந்துகிடக்கும் அறியாமை என்னும் இருளைப் போக்குவதாகும். குரு என்றாலே இருளைப் போக்குபவர் என்று பொருள். சமுதாயத்தில் பல பேர்கள் தங்களைக்குரு என்று கூறிக்கொண்டு இருளை வளர்க்கும் பணியில் ஈடுபட்டிருப்பதையும் காண்கின்றோம். அவர்களை நாடினால் நம்முடைய அறியாமை அதிகரிக்கும். ''குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்'' **என்பார் திருமூலர்**. அஞ்ஞான இருளை நீக்கும் முறைகளைத் தெரிந்துகொள்ளாத **ஒருவரைக்** குருவாக ஏற்றுக்கொண்டால் எப்படியிருக்கும்? ஒரு குருடனை மற்றொரு குருடன் அழைத்துச் செல்வது போலல்லவா இருக்கும். **அந்த இரண்டு** குருடர்களும் தங்களுடைய அறியாமையைப் போக்கிக் கொள்ளாமல் மாயக்குழியில் விழுந்தே மடிவர். ஆகவே, பக்குவமடைந்த சாதகன் **உண்மையான** குருவினையே நாடுவான்.

**''குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்;**
**குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்;**
**குருடுங் குருடும் குருட்டாட்டம் ஆடிக்**
**குருடுங் குருடும் குழிவிழு மாறே''.** (திருமந்திரம் - 1680)

போலிக்குருவை எவ்வாறு அறிந்துகொள்வது? திருமூலர் தெளிவாகப்பதில் அளிக்கின்றார். அத்தகையவர்கள் இறை உணர்வு இல்லாதவர்களாக இருப்பார்கள். மெய்ப்பொருளை ஆராய்ந்து இருக்கமாட்டார்கள். வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள் ஆகியவற்றின் உண்மைகளை உணர்ந்து, சிக்கலின்றிப்பிறருக்கு உணர்த்தும் ஆற்றலைப்பெற்றிருக்க மாட்டார்கள். அடக்கமின்றி இருப்பார்கள். பிறரை நிந்திப்பார்கள். தான் என்கின்ற நிலையில் மூழ்கிக் கிடப்பார்கள். பேரின்பத்தை அடைவதற்கான உபாயங்களை அறியாதவர்களாக இருப்பார்கள். அறிவில்லாமலும், அறிவில்லாத செயல்களில் ஈடுபட்டவர்களாகவும் இருப்பார்கள். காமம் முதலிய உணர்ச்சிகளிலிருந்து விடுதலை பெறாத நிலையில் கீழ்த்தன்மை பொருந்திக் கற்பிப்பார்கள். உலக போகங்களை உணர்த்தும் இத்தகையவர்களுக்குச் சிவத்தியானம் விளையாது. மந்திரங்களிலும், தந்திரங்களிலும் யோகத்திலும் ஞானத்திலும் ஆற்றல் படைத்தவர்களாக இருக்கலாம். ஆனால், அவர்கள் அவற்றை உபதேசம் செய்தலை வயிற்றுப்பாட்டுக்காக ஒரு தொழிலாக

வைத்துக்கொண்டிருப்பர். இத்தகையவர்கள் அசற்குரு ஆவர். இவர்களை நாம் நீக்க வேண்டும்.

**"உணர்வொன் றிலாமூடன் உண்மையோ ராதோன்**
**கணுவின்றி வேதா கமநெறி காணான்**
**பணிவொன் றிலாதோன் பரநிந்தை செய்வோன்**
**அணுவின் குணத்தோன் அசற்குரு வாமே".**

**(திருமந்திரம் - 2044)**

இறைவன் அருளால்தான் உண்மையான குருவைப் பெற இயலும். நம்முடைய மனப்பக்குவமே இறைவனுடைய அருளுக்கு எடுத்துக் காட்டாகும், நமது மனமானது மாயையாகிய கண்ணாடி போன்றது. பக்குவம் பெறாதபோது அந்தக் கண்ணாடியானது ஆணவ மலத்தால் பொருள்களைப் பெரிதாகக் காட்டி நம்மை ஏமாற்றும் வஞ்சனைக் கண்ணாடியாக உள்ளது. கல்வி, கேள்வி இவற்றால் நமது அறிவை வளர்த்துக்கொண்டு இந்த வஞ்சனையைப் பற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டும். பக்குவ உள்ளங்கள் இதை உணர்ந்துகொள்ளும். பக்குவமில்லாத உள்ளங்கள் பிறர் விளக்கிச் சொன்னாலும் இதை ஏற்றுக்கொள்ளா. அந்த நிலையில் உண்மைக் குரு இவர்களுடைய வாழ்வில் திருவடி எடுத்து வைக்க மாட்டார். இவர்கள் இன்னும் வினைப்பயனை அனுபவிக்க வேண்டி உள்ளது.

**"மனத்தில் எழுந்ததோர் மாயக்கண் ணாடி;**
**நினைப்பின் அதனில் நிழலையும் காணார்**
**வினைப்பயன் போக விளக்கியும் கொள்ளார்;**
**புறக்கடை இச்சித்துப் போகின்ற வாறே"** **(திருமந்திரம் - 1681)**

பக்குவமில்லாத உள்ளம் எப்படியிருக்கும் என்றும் திருமூலர் விளக்குகின்றார். பக்குவமற்றவர்களுடைய வாய் ஒன்று சொல்லும், மனம் ஒன்று சிந்திக்கும், உடல் ஒன்று செய்யும். இவை மூன்றும் ஒரேவழிப்பட நில்லாது வெவ்வேறு வழிகளில் செயல்படும். இதைத் திருமூலர் "பஞ்சத் துரோகம்" என்கிறார். மேலும் இவர்கள் மலங்களின் தன்மையை உணர்ந்து அவற்றை மாற்றும் வழிகளில் ஈடுபட மாட்டார்கள். காமம் போன்ற மயக்கங்களில் தங்களை ஈடுபடுத்திக்கொள்வார்கள்.

இதற்கு மாறாகப் பக்குவ நிலையில் உள்ளவர் நல்ல குருவைத் தேடி அவரிடமிருந்து அறிவினைப் பெறத் துடிப்பர். சத்துவ குணம் மிக்கவராய் இருப்பர். பரம்பொருளை அடையும் எண்ணம் மனதிலே நிறைந்து நிற்பர். அறநெறியில் தளரமாட்டார். அவர்களுக்கு ஞானத்தின்கண் விருப்பம் நாளுக்கு நாள் வளரும். அவர்களுடைய உள்ளமாகி நிலத்தில் நல்ல விதைகளை விதைக்கின்றார். ஐம்புல ஆசைகள் அந்த நிலத்தில் வாழும் கிருமிகளைப் போன்றவை. அவைகளை விட்டால் விதைகளை வளரவிடாது அழித்துவிடும். ஆனால் நல்ல சாதகர் அந்தக் கிருமிகளை யோக

முயற்சியாலும், மெய்யுணர்வாகிய வெப்பத்தாலும் அழித்துவிடுவர். எனவே, சிவஞானம் என்னும் விதை அவர்களுடைய உள்ளத்திலே ஆழ்ந்து, ஊன்றி வளர்ந்து பேரின்பத்தைக் கொடுக்கும்.

**''பதைக்கின்ற போதே பரமென்னும் வித்தை**
**விதைக்கின்ற வித்தினை மேல்நின்று நோக்கிச்**
**சிதைக்கின்ற சிந்தையைச் செவ்வே நிறுத்தி**
**இசைக்கின்ற அன்பருக் கீயலு மாமே''.** (திருமந்திரம் - 1692)

கடைசியில் திருமூலர் நமக்கெல்லாம் உபதேசிப்பது, ''சிறந்த குருவினைக் கொள்ளுங்கள்; அவருக்கு உடல், பொருள், ஆவியை அர்ப்பணியுங்கள்; அவருடன் ஒன்றி நின்று அவர் கூறும் உபதேச மொழியினை ஆழ்ந்து சிந்தித்து, தெளிந்து அதனால் சிவபதம் என்னும் பயனைப் பெறுங்கள்'' என்பதாகும்.

**''கொள்ளினும் நல்ல குருவினைக் கொள்ளுக;**
**உள்ள பொருள்உடல், ஆவி யுடன் ஈக;**
**எள்ளத் தனையும் இடைவிடா தேநின்று**
**தெள்ளி அறியச் சிவபதந் தானே''.** (திருமந்திரம் - 1693)



# 14. "ஐந்தெழுத்து மந்திரம்"

**"நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க"**

மாணிக்கவாசகப் பெருமான் திருப்பெருந்துறையில் அருளிச் செய்த சிவபுராணத்தில் இந்த மந்திரம் முதலாவது அடியாக வருகின்றது. பாடுவோர் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும் மந்திரம், கேட்போர் மனதை உருகச் செய்யும் மந்திரம். இந்த மந்திரத்தை மனத்திற்குள் தியானிக்கலாம். பிறர் காதில் கேளாதபடி மெல்ல மெல்ல உச்சரித்துச் சொல்லலாம். வெளிப்படையாகவும் சொல்லலாம். இறைவனுடைய திருநாமம் ஓதினாலே நன்னெறியைத் தரும் சிறப்புடையதாகும். மந்திரம் இறைவனுடைய சொரூபமாகும். எனவே, மந்திரச் சொற்கள் அருட்தன்மை பெற்றவை. இறைவனை அடைவதற்கு இறைவனால் அருளிச் செய்யப்பட்ட சொற்களே மந்திரங்களாகும். அவற்றை இறைவனுடைய அடியார்கள், இறையுணர் வாளர்கள் ஆகியோர்கள் வாயிலாகப் பெறுகின்றோம். இவர்கள் நிறை மொழி மாந்தர் எனப்படுவார்கள். அவர்களுடைய ஆணையில் கிளர்ந்தவை மந்திரங்கள். மந்திரங்களைத் தொல்காப்பியர் மறைமொழி என்பார். மந்திரங்கள் இம்மைக்கும் மறுமைக்கும் நாம் விரும்பும் பயனைக் கொடுக்க வல்லவை என்பது மட்டுமன்று. சிந்தையிலே இறைவனுடைய நாமமாகிய மந்திரத்தை நிலையாக நிறுத்தி வைக்கப் பழகிக் கொண்டோமானால் இறப்பு, பிறப்பு நிலைகளிலிருந்து விடுபட்டு, இறைவனடியைப் பற்றி என்றும் மாறாத இன்பத்தில் திளைத்து நிற்கலாம் என்பது அருள் அனுபவம்.

நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்து வேதங்களுக்கு இருதயம் போன்றது. ருக், யஜுர், சாம வேதங்களில் நடுவாக நிற்பது யஜுர் வேதமாகும். யஜுர் வேதத்தில் நடுவாக இருப்பது நான்காம் சம்ஹிதையாகும். இதற்கு நடுநாயகமாக நிற்பது ஸ்ரீருத்திரம் ஆகும். இதன் நடுவில் வருவது நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தாகும். திருவைந்தெழுத்தை வேதங்களின் சாரம் என்றும் பெரியோர்கள் கூறுகின்றனர். இந்த மந்திரத்தை இடையறாது உச்சரிப்பவர்கள் சிவமாம் தன்மையைப் பெறுகின்றனர் என்று ஸ்ரீருத்திரத்திலிருந்தே உணரலாம். உடலுக்கும், உயிருக்கும் ஆழ்ந்த தூய்மையையும், வற்றாத இன்பத்தையும் இம்மந்திரம் கொடுத்தருளும்.

திருஞானசம்பந்தர் பெருமானுக்கு உபநயனப் பருவம் வருகின்றது. வேத விதிகளின்படி சடங்குகள் சிறப்பாக நடைபெறுகின்றன. அந்தணர்கள் வேதம் ஓதினர். மந்திர உபதேசம் செய்தனர். தமக்கு மந்திரம் உணர்த்த வந்த அந்தணர்களுக்கே, அவர்களுடைய ஐயங்களைத் தீர்த்து வேதமந்திரங்களின் உட்பொருளை எடுத்துச் சொல்லி, மனம் தெளியும் வகையில், எல்லா மந்திரங்களும் தோன்றுவதற்கு முதற்காரணமாய் இருப்பது சிவபெருமானுடைய திருவைத்தெழுத்தேயாகும் என்று திருஞானசம்பந்தப் பெருமான் கூறி ஸ்ரீ பஞ்சாக்ர திருப்பதிகம் என்கிற ஒப்பற்ற திருப்பதிகத்தை அருளிச் செய்ததாகச் சேக்கிழார் பெருமான் கூறுகின்றார்.

**"மந்திரங் களான வெலாம் அருளிச் செய்து மற்றவற்றின்**
**வைதிக நூற் சடங்கின் வந்த**
**சிந்தை மயக் குறும்ஐயம் தெளிய எல்லாம்**
**செழுமறையோர்க் கருளியவர் தெளியும் ஆற்றால்**
**முந்தை முதல் மந்திரங்கள் எல்லாம் தோன்றும் முதலாகும்**
**முதல்வனார் எழுத்தஞ் சென்பார்**
**அந்தியினுள் மந்திரம் அஞ் செழுத்து மேயென்று**
**அஞ்செழுத்தின் திருப்பதிகம் அருளிச் செய்தார்"**

**(பெரியபுராணம் - 2164)**

நான்மறைகளின் முடிவான மந்திரமாக திருவைந்தெழுத்து நிற்கின்றது என்றும் தேவர்களுடைய சிந்தனையில் நின்று அவர்களை ஆளுகின்றது என்றும், தூய்மை மனம் பொருந்திய அந்தணர்கள் என்றும் ஓதுவது ஐந்தெழுத்தே என்றும் திருஞானசம்பந்தப் பெருமான் கூறுகின்றார்.

**"மந்திரம் நான்மறை யாகி, வானவர்**
**சிந்தையுள் நின்று அவர் தம்மை ஆள்வன**
**செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு**
**அந்தியுள் மந்திரம் அஞ்செ முத்தும்மே"**

திருஞானசம்பந்தப் பெருமானுக்குத் திருப்பெருமணநல்லூரில் திருமண நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. "எம்பெருமானே! இந்த இல்வாழ்க்கை வந்து சூழ்ந்து விட்டதே! மணப்பெண்ணுடன் சிவனடி சேருவேன்" என்கின்ற ஆசை பொங்கி அங்குள்ள திருக்கோவிலை அடைந்து இறைவன் மீது மனம் உருகப்பாடியபொழுது, சிவபெருமான் அவர்களுக்கு அருள் செய்து தனது சோதியில் வந்து கலந்துகொள்ள அருளினான். அந்த நிலையில் உண்மையான நெறி சிவநெறியாகும் என்றும், அந்த நெறியே ஐந்தெழுத்தாகும் என்றும், அந்த ஐந்தெழுத்தே நான்கு வேதங்களின் மெய்ப்பொருளாகும் என்றும், பொருள்படும் வகையில் நமச்சிவாயத் திருப்பதிகத்தை அவ்விடத்திலேயே அருளிச் செய்து,

இறைவனுடைய சோதியிலே உறவினருடனும், சுற்றத்தாருடனும் புகுந்தார். இறைவனுடைய திருமந்திரமான நமச்சிவாய என்கிற மந்திரத்தைப் பெரும் ஆவலுடன், உள்ளம் உருகியும் ஓதுவார்கள் இறைவனடி சேருவார்கள் எனகிற கருத்துடன் ஞானசம்பந்தப் பெருமான் இந்தப் பதிகத்தைப் பாடுகின்றார்.

**"காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி**
**ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது**
**வேத நான்கினும் மெய்ப்பொருள் ஆவது**
**நாதன் நாமம் நமச்சி வாயவே"**

திருவைந்தெழுத்து ஐந்து வகைப்பட்டது எனப்பெரியோர்கள் வைத்துள்ளனர். அவை முறையே ஸ்தூல ஐந்தெழுத்து, சூக்கும ஐந்தெழுத்து, காரண ஐந்தெழுத்து, மகாகாரண ஐந்தெழுத்து, மகாமனு ஐந்தெழுத்து எனப்படுவன. நமச்சிவாய என்பது தூல ஐந்தெழுத்து. சிவாயநம என்பது சூக்கும ஐந்தெழுத்து. சிவாயசிவ என்பது காரண ஐந்தெழுத்து. சிவ என்பது மகாகாரண ஐந்தெழுத்து. சி என்பது மகாமனுவுமாகும்

பொதுவாக நமசிவாய என்கிற மந்திரத்திற்கு "சிவனுக்கு நமஸ்காரம்" என்று சொல்லுக்குப் பொருளாகக் கூறலாம். ஆனால், இம்மந்திரத்தில் பல அரிய பொருள்கள் பொதிந்து கிடக்கின்றன. ஒவ்வொரு எழுத்திற்குள் ஆழ்ந்த தத்துவங்கள் உண்டு. இவற்றை மிக நுட்பமாக ஆகமங்களும், சித்தாந்தங்களும் எடுத்துக் கூறுகின்றன. அவற்றின் சாரத்தை திருமந்திரம் நமக்கு விரிவாகத் தந்துள்ளது. திருமூலர்பெருமானின் விளக்கங்களில் சிலவற்றைப் பார்ப்போம்.

உயிர்களுடைய் நன்மைக்காக இறைவன் இடையறாது திருக்கூத்தினை நிகழ்த்தி வருகின்றான். இந்தத் தாண்டவம், அற்புதத்தாண்டவம், ஆனந்தத் தாண்டவம், அனவரதத் தாண்டவம், பிரளயத் தாண்டவம், சங்காரத் தாண்டவம் என்று ஐவகைப்படும். இந்தத் தாண்டவங்கள் அனைத்தும் திருவைந்தெழுத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும். இறைவனுடைய அருட்சக்தி படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்கிற ஐந்து தொழில்களுக்கு மூலகாரணமாக இருக்கின்றது. இந்த அருட்சக்தியின் அடையாளமே பிரணவமாக நிற்கின்றது. ஓம் எனும் எழுத்தே பிரணவமாகும். இந்த ஒப்பற்ற பிரணவமாகிய எழுத்தே இறைவனுடைய தாண்டவமும் ஆகும் என்பார் திருமூலர். அத்தாண்டவம் அனுக்கிரகத்தையே முதல் தொழிலாகக் கொண்டு இயங்குகின்றது. அதுவே சிவத்தினுடைய நிலையுமாகும். அந்தக் கூத்து நடைபெறும் இடம் பொன்னம்பலமாகும் என்பார் திருமூலர்.

**''தாண்டவ மான தனியெழுத் தோரெழுத்**
**தாண்டவ மான தனுக்கிர கத்தொழில்**
**தாண்டவக் கூத்துத் தனிநின்ற தற்பரந்**
**தாண்டவக் கூத்துத் தமனியந் தானே''** **(திருமந்திரம் - 888)**

ஓம் என்கின்ற பிரணவமும், திருவைந்தெழுத்தும் ஒரே பொருளை விளக்கும். அடுத்துத் திருவைந்தெழுத்தே இறைவனுடைய திருவடிவம் என்று திருமூலர் கூறுகின்றார். ஆனந்தமயமாகிய இறைவனுடைய திருக்கூத்தை ஐந்தெழுத்து நிலையிலிருந்தே காணலாம். ஆ, ஊ, இம் என்கின்ற எழுத்துக்களின் சேர்க்கை பிரணவ ஒலியாகும். இம்மூன்று எழுத்துக்களையும் நமச்சிவாய என்கிற ஐந்து எழுத்துக்களுடன் சேர்த்தால் எட்டெழுத்தாகும். இவையே இறைவனுடைய திருவடிகள் என்று திருமூலர் விளக்குகின்றார். இப்பரம்பொருளே ஐந்தெழுத்திலுள்ள யகரமாகிய ஆன்மாவில் விளங்கும் என்றும் அவையே ஐம்பத்தோரு எழுத்துக்களாகவும் நிற்கும் என்றும் கூறுகின்றார். பண்டைக் காலத்தில் தமிழ் எழுத்துக்கள் ஐம்பத்தொன்றாக வழங்கி வந்திருக்கலாம் என்று இதனால் நினைக்கத் தோன்றுகின்றது. மேலும், திருமூலர் இறைவனுடைய திருவடிகள் ஏழாயிரம் என்கின்றார். இறைவனுடைய அருட்சக்திக்கான ஏழு வகை ஆற்றல்களை இது குறிக்கலாம் என்றும் தோன்றுகின்றது. ஆகமொத்தம் இறைவனே ஓரெழுத்தாகவும், ஐந்தெழுத்தாகவும், ஐம்பத்தொரு எழுத்தாகவும், பலவித மான ஆற்றல்களாகவும், இயங்குகின்றான் என்று எடுத்துக்கொள்ளலாம்.

**''இணையார் திருவடி எட்டெழுத் தாகும்**
**இணையார் கழலிணை யீரைஞ்ச தாகும்**
**இணையார் கழலிணை ஐம்பத்தொன் றாகும்**
**இணையார் கழலிண்ணை ஏழாயிரமே''** **(திருமந்திரம் - 898)**

வேதங்களும், ஆகமங்களும் இந்த ஐம்பத்தோரு எழுத்தில் அடங்கும். இவற்றைப் பற்றி மேலும் ஆழ்ந்து சிந்தித்தால் அவ்வனைத்தும் திருவைந்தெழுத்தில் அடங்கும் என்கிறார் திருமூலர். இவ்வைந்தெழுத்தே தூல ஐந்தெழுத்து எனப்படும். இதனையே மாணிக்கவாசகர் **''நமச்சிவாய வாழ்க''** என்று அருளிச் செய்தார். **''நாதன் நாமம் நமச்சிவாயவே''** என்றார் திருஞானசம்பந்தர். ''நற்றுணையாவது நமச்சிவாயவே'' என்றார் திருநாவுக்கரசர். **''நந்திநாமம்நமச்சிவாயவே''** என்றார் திருஞானசம்பந்தர். திருவைந்தெழுத்தாவது உலகிலும், உயிரிலும், உடலிலும் பரவி நிற்கும். உள்ளத்தோடு தோய்ந்திருப்பது ஐந்தெழுத்தாகும். உடலிலுள்ள ஆதாரங்களில் நிலைத்து நிற்பதும் ஐந்தெழுத்தாகும். இவற்றை நாம் முழுமையாக உணர்ந்துகொள்ள வேண்டுமென்றால் மந்திரங்களை உணர்ந்த பெரியார்களிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

"ஐம்ப தெழுத்து அனைத்து வேதங்களும்
ஐம்ப தெழுத்து அனைத்து ஆகமங்களும்
ஐம்ப தெழுத்தின் அடைவை யறிந்தபின்
ஐம்ப தெழுத்தே அஞ்செழுத் தாமே" (திருமந்திரம் - 2698)

நாம் எழுப்பும் ஒலி பேச்சின் வடிவாக வெளிவருகின்கிறது. சாதாரணமாக அது தொண்டையிலிருந்து கிளம்புகின்றது என்று நினைக்கின்றோம். உடல்கூறு வல்லுநர்கள் அவ்வாறே நமக்குத் தெரிவிக்கின்றனர். நம்முடைய முன்னோர்கள் இவ்வாறு கருதவில்லை. நமது காதுகளுக்குப் புலனாகாத ஒலி நமது உடலிலேயே பரவி நிற்கின்றது என்று கூறினார்கள். மூலாதாரம் முதல் வயிறு வரை இந்த ஒலி சூக்கும நிலையில் நிற்கின்றது. வயிறு முதல் நெஞ்சு வரை சற்று கேட்கக்கூடிய வகையில், ஆனால் உள்ளத்தோடு கலந்ததாய், நிற்கின்றது. நெஞ்சு முதல் கழுத்து வரை இருக்கின்ற இடத்தில் எழுத்துடன் கலக்க ஆரம்பிக்கின்றது. பின்னர் கழுத்துக்கு மேல் அது பேச்சொலியாக எழும்புகின்றது. இவ்வாறேதான் நமது வாயினால் உச்சரிக்கப்படும் ஐந்தெழுத்தும் உடலின் அடிப்பாகத்திலிருந்து கிளம்புகின்றது. செவிப்புலனுக்கு அப்பாற்றபட்ட ஒலியாக நம் உடலிலேயே பிறந்து, பின்னர் முடிவாக நமச்சிவாய என்கின்ற ஒலியுடன் வாயிலிருந்து எழும்பும். இதிலிருந்து, இறையுணர்வின் அடிப்படையிலேயே இறைவனுடைய திருநாமம் நம்முள் தோன்றி பேச்சொலியாக எழும்பும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். ஓசை, ஒலி ஆகிவற்றின் நுட்பமான நிலைகளைப் பற்றி அனுபவம் பெற்ற சாதகர்களிடமிருந்து கேட்டு, அறிந்து, பயிற்சி செய்து, பலன்களைப் பெற்றுக்கொள்ளுதல் சிறந்ததாகும்.

"வாயொடு கண்டம் இதயம் மருவு உந்தி
ஆய இலிங்கம் அவற்றின்மேல் அவ்வாய்த்
தூயதோர் துண்டம் இருமத்தகம் செல்லல்
ஆயது ஈறாம் ஐந்தோடு ஆம் எழுத்து அஞ்சுமே"
(திருமந்திரம் - 2701)

இந்த நுட்பமான ஐந்தெழுத்து ஒலியானது நம்முடைய சுவாசத்திலேயே சேர்ந்து நிற்கின்றது என்பதையும் உணர்ந்துகொள்ள வேண்டும் என்பார் திருமூலர். நம்து உடலில் வலது, நடு, இடது பக்கங்களில் மூன்று நாடிகள் உள்ளன. சாதாரணமாகச் சுவாசமானது வலது, இடது, நாடிகளில் உட்சென்று வெளிவருவதே திருவைந்தெழுத்தின் நிலையுமாகும். இதை உணர்ந்து நமது சுவாசப் பயிற்சியையே திருவைந்தெழுத்தை ஓதும் மார்க்கமாகச் செய்யவேண்டும் என்கிறார் திருமூலர்.

"ஞாயிறு திங்கள் நவின்றெழு காலத்தில்
ஆயுறு மந்திர மாரும் அறிகிலர்
சேயுறு கண்ணி திருவெழுத் தஞ்சையும்
வாயுற வோதி வழுத்தலு மாமே" (திருமந்திரம் - 2703)

சிவாயநம என்பது சூக்கும ஐந்தெழுத்தாகும். அதில் சி என்பது சிவன், வ என்பது சக்தி ய என்பது உயிர், ந என்பது மலம், ம என்பது மாயை ஆகும். சூக்கும திருவைந்தெழுத்து இறைவனுடைய அருட்சக்தியாகும் என்பார் திருமூலர். ஐந்தெழுத்தை ஓதுவதால் துன்பத்தைக் கொடுக்கும் ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி ஆகிய ஐந்து மலங்களும் நீங்கும். நம்முடைய வினைகள் ஒழியும். நமது இறப்புக்கும், பிறப்புக்கும் காரணமாக இருந்துவரும் பாசம் உயிரைப் பற்றாது. பாசம் நீங்கியபொழுது உயிரானது சிவத்தின் தன்மையையும் பெறுகின்றது.

ஆகவே, இந்த மந்திரத்தை முறைப்படி ஓத வேண்டும். தூல ஐந்தெழுத்தை ஓதி ஓதிப்பக்குவம் பெற்றதன் அடிப்படையில் சூக்கும ஐந்தெழுத்தை ஓதும் தகுதியைப் பெறலாம் எனச் சைவ நூல்கள் கூறுகின்றன. நமச்சிவாய என்னும் நாமத்தை நாள்தோறும் எண்ணி எண்ணித் தீக்கை பெறுபவர்கள் அடுத்த கட்டமாக சூக்கும ஐந்தெழுத்தை ஓதும் பெருமையைப் பெறுகின்றார்கள் என்றும் சைவ நூல்கள் கூறுகின்றன. இதையே மாணிக்கவாசகர்பெருமான்

**''நானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்**
**தேனாய்இன் அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்**
**தானேவந்து எனதுள்ளம் புகுந்துஅடியேற்கு அருள்செய்தான்**
**ஊனாரும் உயிர் வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே''**

என்று பாடுகின்றார்.

சிவாயநம என்னும் சூக்கும ஐந்தெழுத்து சக்தியின் அடையாளம் என்கின்ற நிலையில் ஐம்மலங்களைத் தன்னுள் கொண்டிருந்தாலும், ஓதுவார்களுடைய பக்குவத்திற்கு ஏற்ப பலன்களைத் தரும். பாசத்தை அழிக்க, பிறப்புக்கு முடிவுகட்ட இது ஒரு முக்கிய பாதையாகும் என்று திருமூலர் கூறுகின்றார்.

**''சிவன்சக்தி சீவன் செறுமல மாயை**
**அவஞ்சேர்த்த பாச மலம் ஐந்தகலச்**
**சிவன்சத்தி தன்னுடன் சீவனார் சேர**
**அவம்சேர்த்த பாசம் அணுககி லாவே''** **(திருமந்திரம்...2710)**

**''சிவனரு ளாய சிவன்திரு நாமஞ்**
**சிவனரு ளான்மாத் திரோத மலமாயை**
**சிவன்முத லாகச் சிறந்து நிரோதம்**
**பவம தகன்று பரசிவ னாமே''** **(திருமந்திரம்...2711)**

சிவாயநம என்னும் திருவைந்தெழுத்தை எவ்வாறு ஓத வேண்டும்? நம என்ற எழுத்துக்களை நாவினுள் கழுத்துப் பிரதேசத்தில் நிறுத்தி வைக்கவேண்டும் என்கின்றார் திருமூலர். நம என்னும் எழுத்துக்கள்

மலத்தைக் குறிக்கின்றன. சிவ என்னும் எழுத்தைச்சிந்தையுள் நிறுத்தி வைக்க வேண்டும். சிவ என்னும் எழுத்துக்கள் சிவத்தையும், சக்தியையும் குறிக்கும். ஆகவே, இந்த எழுத்து நிலையாகச் சிந்தையில் வைக்கப்பட வேண்டும். அதாவது, நம்முடைய நான்கு அந்தக்கரணங்களில் சிந்தையானது உயிருக்கு உயிராக நிற்கும் இறைவனுடைய திருவடிகளை அடையும் தகுதியைப் பெற்றது. அந்தச் சிந்தையில் வெவ்வேறு எண்ணங்களை அடைத்து, நிரப்பி வைக்காமல் சிவ என்னும் நாமத்தையே பரவச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால் தானாகவே சிந்தையானது சிவனிடத்தில் ஒடுங்கும். நமது வினைக்கடன்கள் தீரும். இறைவனுடைய திருவருள் கிடைக்கும். அதனால் இறை உண்மையைப் பற்றித் தெளிவு தோன்றும். மனத்திலே அறிவு ஒளி சுடர்விட்டுப் பிரகாசிக்கும். இறப்பு, பிறப்பு என்கின்ற சூழலை விட்டு அகலலாம்.

**"நமவென்று நாமத்தை நாவில் ஒடுக்கிச்**
**சிவவென்று நாமத்தைச் சிந்தையு ளேற்றப்**
**பவமது தீரும் பரிசும தற்றால்**
**அவமதி தீரும் அறும்பிறப் பன்றோ"** (திருமந்திரம் - 2717)

சிவாயநம என்று எப்பொழுதும் எண்ணிக்கொண்டு மனதை ஒருமைப்படுத்தி, வெளிப்புறப்பொருட்கள் மீது மனத்தைச் செலுத்தாது சாதகம் செய்தால் எத்தனை தீங்குகளும் வராதபடி, இடையூறுகள் ஒன்றும் ஏற்படாதவாறு, இறைவனுடைய திருவடிப்பேற்றினை அடையலாம். பேரின்பப் பெருவாழ்வு பெறலாம். மலத்தால் ஆகிய துன்பம் நீங்கும். கரணங்கள் இறைவனையே நாடிச் செல்லும். அச்சம் நீங்கும் உள்ளத்தில் நிலைபெற்ற ஆனந்த உணர்வு தங்கும். இத்தகைய அனுபவத்தைச்சிவாயநம என்றும், சிவாயசிவசிவ என்றும் ஓதிப் பெறலாம் என்பார் திருமூலர்.

**" சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி**
**அவாயம் அறவே யடிமைய தாக்கிச்**
**சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை**
**அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே"** (திருமந்திரம் - 2718)

வேதங்களும், ஆகமங்களும் பரம்பொருளை விளக்குகின்றன. அவற்றை ஓதி உணர்வதன் மூலமாக இறைவனை உணரமுடியும் உண்மைதான். ஆனால், வேதங்களும், ஆகமங்களும் முடிவான பொருளல்ல. முடிவான பொருள் பரம்பொருளே ஆகும். அந்தப் பரம்பொருளான சிவத்தைக் குறிப்பது ஒரே எழுத்து. அதுவே சிகாரம் ஆகும். நமச்சிவாய என்று முதலில் ஓதிப் பின்னர்ச் சிவாயநம என்று செபித்து பின்னர்ச் சிவாயசிவ என்று சிந்தையுள்ளே வைத்து, பின்னர்ச்சிவசிவ என நினைத்து, ஓதி கடைசியாகப் பரம்பொருளைக் குறிக்கும் ஒரே எழுத்தான சிகாரத்தை மனதிலே நிறுத்தி வைப்பது பரம்பொருளோடு ஒன்றி, உடனாய்

இருக்கும் நிலையைத் தரும். ஆகவே, சந்தேகத்தை நீக்கி விடுங்கள். அவ்வெழுத்தின் உண்மையை உணர்ந்துகொள்ளக் குருவினை அணுகி, குருவின் திருவருள் பெற்று முயற்சியை மேற்கொண்டு, சாதனையைப் புரியுங்கள். பரந்த பிறவிக்கடல், இறப்பு, பிறப்பு என்று மாறி மாறி நிலை பெற்று மூழ்கித் தவிக்கின்றோம். நம்முடைய குறிக்கோள் அக்கடலினுடைய கரையைச் சேர வேண்டும். அதற்கான ஒரு தோணி வேண்டும். அத்தோணி வலுவானதாக அமைந்திருக்க வேண்டும். திருவைந்தெழுத்தின் உண்மையை உணர்ந்து அதை ஓதுவதே பிறவிக்கடலைக் கடக்கும் அருமையான தோணியாகும் என்கின்றார் திருமூலர். **"அஞ்செழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேனை"** என்பார் மாணிக்கவாசகர்.

**"அங்கமும் ஆகம வேதம தோதினும்**
**எங்கள் பிரானெழுத் தொன்றில் இருப்பது**
**சங்கைகெட் டவ்வெழுத் தொன்றையுஞ் சாதித்தால்**
**அங்கரை சேர்ந்த அருங்கல மாமே"** **(திருமந்திரம் - 2720)**

அருமையான ஐந்தெழுத்து மந்திரத்தைப் ''பொன்னான மந்திரம்'' என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். இதைத்தொடர ஓதிப்பயின்றால் இறப்பும், பிறப்பும் கூடாது. இறைவனுடைய திருநடனத்தைக் காணலாம். சிவமாம் தன்மை பெற்ற பெருவாழ்வு கிடைக்கும். உடலும், உயிரும் அருள்மயமானதாகும். உயிரானது உடலை விட்டுப் பிரியும்பொழுது ஐந்தெழுத்து மந்திரம் பாதுகாவலாக நிற்கும். **"அரணம் கைகூட்டுவது அஞ்செழுத்தாமே"** என்பது திருமந்திரம். ஆனால், இந்தப் பலன்களை நாம் பெறுவதில்லை. அதற்குக் காரணம், முற்பிறவியில் நாம் செய்த தீவினையே ஆகும். தீவினைகளை நாம் அடுக்கிக் கொண்டே போகும்பொழுது, ஐந்தெழுத்தின் அருமை நமக்குப்புலப்படுவதில்லை. ஆனால், இறைவனுடைய அருள் நமக்குக் கிட்டும்பொழுது வாய் தானாகவே சிவசிவ எனத்தோத்திரம் செய்யும். அவ்வாறு செய்யும்பொழுது நின்ற தீவினைகள் கெட்டு ஒழியும். ஒளிபெற்ற உடல் கிடைக்கும். ஓதுவோர் சிவமாம் தன்மை பெறுவர். சிவயோகம், சிவபோகம் என்கின்ற பெரும் பேறுகள் கிட்டும்.

**"சிவசிவ என்கிலர் தீவினை யாளர்**
**சிவசிவ என்றிடத் தீவினை மாளும்**
**சிவசிவ என்றிடத் தேவரு மாவர்**
**சிவசிவ என்னச் சிவகதி தானே"** **(திருமந்திரம் - 2716)**

திருநாவுக்கரசரின் பெருமையைப் பல்லவ மன்னன் அறிந்து கொள்ளவில்லை. அவருக்குப் பல துன்பங்களை விளைவிக்கின்றான். அவரைக் கல்லில் கட்டி கடலில் பாய்ச்ச ஆணையிடுகின்றான். அது எவ்வாறாயினும் ஆகுக! என்று இறையுணர்வு மிக்கவராக திருநாவுக்கரசர்

திருவைந்தெழுத்தை மனதில் வைத்து ''சொற்றுணை வேதியன்'' என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடி அருளுகின்றார்.

**''சொற்றுணை வேதியன் சோதி வானவன்**
**பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்**
**கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்**
**நற்றுணை யாவது நமச்சி வாயவே''**

**(நமச்சிவாயத் திருப்பதிகம் - 1)**

கல் கடலில் மிதந்தது. கட்டிய பாசக்கயிறுகள் அறுபட்டன. நாவுக்கரசர் பெருமான் கல்லாகிய தெப்பத்தின் மீது விளங்கினார். கல்லே தெப்பமாயிற்று. எல்லாவற்றையும் அருளவல்லது திருவைந்தெழுத்து. அந்தத்திருவைந்தெழுத்தின் ஆதரவினால் நாவுக்கரசருக்குக் கல்லும் துணையாயிற்று என்றால் அதில் ஒன்றும் விந்தை இல்லையே என்கின்றார் சேக்கிழார் பெருமான்.

**''இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்**
**வருபவக் கடலின்வீழ் மாக்கள் ஏறிட**
**அருளும் மெய் அஞ்செழுத்து அரசை இக்கடல்**
**ஒருகல் மேல் ஏற்றிட உரைக்க வேண்டுமோ!''**

**(பெரிய புராணம் - 1394)**

# 15. "யோக வழியில்"

அன்றாட வாழ்க்கையில் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்புகள், சமாளிக்க வேண்டிய பிரச்சனைகள், நம்முடைய முழு நேரத்தையும், ஆற்றலையும் எடுத்துக் கொள்கின்றன. நாம் யார், நம்முடைய நிலை என்ன என்று சிந்திக்க வாய்ப்பும், நேரமும் கிட்டாமல் வாழ்க்கை முடிந்து விடுகிறது. நம்மைப் பற்றியே கவலைப்பட்டுக் கொள்ளாத நிலையில் எல்லாவற்றிற்கும் மேலான பரம்பொருளைப் பற்றி எங்கே சிந்திக்கப் போகிறோம்? நமக்கெல்லாம் உலகம்தான் கடவுள். இந்த உலகத்தில் வாழ்ந்து வருவதையே குறிக்கோளாக வைத்து இறக்கும் வரை காலத்தை வீணடிப்பதில் நிபுணர்கள் ஆகிவிடுகிறோம். நம்மில் சிலர் இருக்கின்றார்கள். அவர்கள் தங்களுடைய உடம்பினையே கடவுள் என்று கருதி, அதைப் பேணுவதையே முக்கியமான எண்ணமாக வைத்து, வாழ்வை நடத்திப் பின்னர் மறைந்து விடுகின்றார்கள். சற்றுத் தீவிரமாகச் சிந்திப்பவர்கள் மனம் ஒன்று உள்ளது என்பதை உணர்ந்து கொண்டு, அதையே கடவுளாக நினைத்து, அதைக் கட்டுப்படுத்த இயலாமையால் மிக்கத் துன்பத்துடன் வாழ்வைக் கழித்து விடுகின்றார்கள். இன்னும் சிறிது பக்குவம் பெற்ற சிலர் உடலைத் தவிர உயிர் ஒன்று வேறாக உள்ளது என்பதை அறிந்து கொள்கின்றார்கள். உயிரையே கடவுள் என்றும் சொல்லிக் கொள்வார்கள். இத்தகைய வேறுபாடுகள் நிறைந்து கிடக்கும்பொழுது உண்மையான நிலை என்ன என்பதை மக்கள் சரியாக உணர்ந்து கொள்ளவில்லையென்றால் அதில் வியப்பு ஒன்றுமில்லை.

திருமூலர்பெருமானைப் போன்ற ஒப்பற்ற யோகிகள் மெய்ப்பொருளையும், அத்துடன் நமக்கு இருக்கக்கூடிய தொடர்பையும் தம்முள்ளேயே உணர்ந்து யோக நெறி மூலமாக இந்த உண்மையை எல்லோரும் உணரமுடியும் என்று விளக்குகின்றார்கள். அவர்கள் மரண மில்லாப் பெருவாழ்வு பெற்றவர்கள். பூதவுடலைக் கருவியாகக் கொண்டு அவர்கள் யோகத்தின் சிகரத்தை எட்டி, தெளிந்த அறிவு பெற்றவர்களாக, தாம் பெற்ற அனுபவத்தை மக்களுடன் பகிர்ந்துகொள்கின்றார்கள்.

இந்த உடம்பானது கருவிக் கூட்டங்களால் ஆனது. உடம்பில் ஐம்பொறிகள் உள்ளன. இவை வழியாக ஐம்புலன்கள் ஓயாமல் மனத்தை

உலக வழியில் பாயுமாறு இழுத்துக் கொண்டே இருக்கின்றன. இந்த ஐம்புலன்களின் வழியே சென்றால் பரம்பொருளைப் பற்றிச் சிந்தனை செய்யவோ, நாட்டம் செலுத்தவோ இயலாது. ஐம்பொறிகளுடன் சேர்ந்து இருப்பது மனமாகும். இந்த மனம் ஓடிக்கொண்டே இருக்கும். ஐம்பொறிகள் மனத்தை ஓயமால் சஞ்சலமடையச் செய்கின்றன. மனமானது காமம், வெகுளி, மயக்கம் ஆகியவற்றால் சதா உந்தப்பட்டு வருகின்றது. அதன் காரணமாக அறியாமை என்கின்ற திரை நம்மிடமிருந்து மெய்ப்பொருளை மறைத்து வைக்கின்றது. இச்சை நிறைவேறாவிடில் கோபம் வருகிறது. கோபம் புத்தியை மயக்குகிறது. விருப்பும் வெறுப்பும் வளருகின்றன. ஆகவே, காமத்தீயினைக் கட்டுப்படுத்தி, மனதை இறைவன்பால் செல்லும்படி மாற்ற வேண்டும். ஐம்புலன்களையும் ஒரு முகமாக்கி உறுதிப்பாட்டுடன் அவற்றைப் பயன்படுத்த வேண்டும். கோபமே தீவினைகளுக்கெல்லாம் வித்தாகும். கோபத்தைத் தணித்து மனத்திலே இறை அன்பை நிரப்பிக் கொள்ள வேண்டும். ஐம்புலன்கள் வழி மனம் செல்வதற்குப் பதிலாக, ஐம்புலன்களை மனத்தின்வழி செலுத்த வேண்டும். அறுபத்திமூன்று நாயன்மார்களில் ஒருவரான சண்டேசுவர நாயனார் **''தம்மை ஐந்துபுலனும் பின்செல்லும் தகையார்''** என்று சிறப்பிக்கப்படுகின்றார். ஐம்புலன்கள் மதம்மிக்க யானைகளைப் போன்றவை. அவற்றைக் கட்டுப்படுத்த அறிவு எனும் விளக்கினைத் தூண்டி வைக்க வேண்டும். திருநாவுக்கரசர் சுவாமிகள் **''உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக - மடம்படும் உணர்நெய்யட்டி உயிரேனும் திரிமயக்கி- இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில் - கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே''** என்பார்.

ஆழ்வார்களில் ஒருவரான பூதத்தாழ்வார் இதே கருத்துடன் ''அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி - ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன்'' என்று மொழிகின்றார். இறைவனுடைய அருளே இந்த அறிவாக மிளிர்கிறது. இந்த அறிவே மாயா விளக்காக உள்ளத்தில் பிரகாசிக்கிறது. அதாவது ஆதி அந்தம் இல்லாத சோதியே அருளொளி விளக்காக, அறிவொளியாக மனத்தில் கொழுந்துவிட்டு எரிகின்றது.

**''மனத்து விளக்கினை மாண்பட ஏற்றிச்**
**சினத்து விளக்கிணைச் செல்ல நெருக்கி**
**அனைத்து விளக்குந் திரியொக்கத் தூண்ட**
**மனத்து விளக்கது மாயா விளக்கே''** **(திருமந்திரம் - 602)**

யோகநெறி பாசப்பற்றை நீக்கி, சிற்றுணர்வைக் கட்டுப்படுத்தி ஐயம் நீங்கப்பெற்றுத் தெளிவான காட்சியைப் பெற பயன்படுகின்றது. ஆகவே, மனத்தைக் கட்டுப்படுத்துவதே யோகமாகும். மனத்தைக் கட்டுப்படுத்த எல்லாம் வல்ல பரம்பொருளாகிய சிவத்தின் மீது அன்பு வைத்துப் பல

ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். யோக நெறி என்றால் பொதுவாக மக்கள் அட்டாங்க யோகம் என்று சொல்லப்படும் உடலைப் பற்றிய அப்பியாசங்கள் தொகுக்கப்பட்டுள்ள யோக முறைகளைத்தான் நினைத்துக்கொள்வார்கள். பண்டைக்காலம் முதற்கொண்டே நமது நாட்டில் அட்டாங்க யோகம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருந்து வருகின்றது. ஆனால், திருமூலருடைய உபதேசம் அட்டாங்க யோக சாதனையால் மட்டும் சிவ தரிசனத்தை அடைதல் இயலாது என்பதாகும். ஐம்பொறிகளையும், அந்தக்கரணங்களையும் அடக்கி இறைஞான ஒளியைத் தூண்டச் செய்வதே யோக நெறி என திருமூலர் கூறுவார். திருமூலர் ஓர் சிறந்த யோகியாவார். மூவாயிரம் ஆண்டுகள் தவம் இருந்து தனது உடலையும், மனதையும் கட்டுப்படுத்தி உள்ளொளியைப் பெருக்கி, இறைவனுடைய திருநடனத்தைத் தம்முள் கண்டு, அதை அனுபவித்து ஆண்டிற்கு ஒரு மந்திரமாக மூவாயிரம் மந்திரங்களை அருளிச் செய்துள்ளார். நீண்ட நெடுங்காலம் அவர் வாழ்ந்திருந்தார் என்றால் சிறந்ததொரு யோக நெறியில் அவர் முற்றிலும் தேர்ச்சி பெற்றவராக இருந்திருந்தார். ஆகவே, திருமந்திரமாலையில் அவர் விளக்கும் யோக நெறி ஓர் மிக முக்கியமான பகுதியாகும்.

திருமந்திரத்தில் கூறப்படும் நெறி அட்டாங்க யோகம் எனப்படும். அதாவது இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்கிற எட்டுப் பகுதிகளை இந்த யோக நெறி கொண்டுள்ளது. இந்த எட்டு வழிகளையும் தனக்கு இறைவனே போதித்தான் என்று திருமூலர்பிரான் கூறியுள்ளதால் அவை மிக முக்கியமாகும். இந்த நெறியில் பொருந்தி நின்றவர்களுக்குப் பிறவியில்லை என்று திருமூலர் எடுத்துரைக்கின்றார். இவையெல்லாம் பலவித ஒழுக்க நிலைகளாகும். யோக நெறிக்கு ஒழுக்கச் சூழ்நிலை இன்றியமையாதது. **''ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்''** என்பது குறளின் அறிவுரையாகும். ஆன்மீகப் பற்று பெற விரும்பும் ஒவ்வொருவரும் தன் உள்ளத்திற்கு மாறான ஒழுக்கம் கெட்ட பாதையில் செல்லாமல் காத்துக்கொள்வது மிகவும் முக்கியம். இயமமாவது தீயவைகளைச செய்யாதிருத்தல் ஆகும். கொல்லாதிருத்தல், பொய் கூறாமை, திருடாமை, ஆராய்ச்சி செய்யும் மனப்பான்மையுடைமை, நல்ல அடக்கமும், பண்பும் உடைமை, நீதி வழுவாத நெறியில் செல்லுதல், குற்றங்கள் புரியாமை, கள்ளையும், காமத்தையும் அகற்றுதல், மற்றும் பிறருக்குப்பகிர்ந்துண்ணும் தன்மை முதலியவை இயமமாகும். நிமயத்தில் நிற்பவர் தூய்மை, கருணை, பொறுமை, நேர்மை, வாய்மை போன்ற கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பர். மிதமான உணவு உண்பர். தவம், செபம், போதும் என்கின்ற மனம், கடவுளிடம் நம்பிக்கை, விரதங்களை அனுசரித்தல், உண்மை கேட்டு உணர்தல், தெய்வ பூசை செய்தல் போன்றவற்றைக் கொண்டவர்களாவர். நல்ல பழக்கங்கள் கடவுள் மீது நம்பிக்கையை வளர்க்கும். தீயொழுக்கம் கடவுள் நம்பிக்கைக்கு உலை வைத்துவிடும். ஆகவே, ஆன்மீக நெறியில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள விரும்புபவர்கள் இயமங்களைக் கட்டுப்பாட்டுடன் அனுசரிக்க வேண்டும்.

அடுத்து யோக முயற்சிகளுக்கு முன்பு ஓர் நல்ல இடத்தில் அமைதியான சூழ்நிலையில் அமர்ந்து கொண்டு இறைவனை மனத்தில் வைப்பது ஆசனத்தில் பொருந்துவாகும். நெடுநேரம் ஓரிடத்தில் இருந்து கொண்டு இறைவனைப் பற்றிச் சிந்திக்க வேண்டுமென்றால் அதற்குத் தகுந்தவாறு கை,கால்,உடல் உறுப்புகளை லகுவான முறையில் வைத்துக் கொள்வதே சிறந்த ஆசனமாகும்.

அடுத்து வருவது பிராணாயமப் பயிற்சியாகும். இது மனத்தைக் கட்டுப்படுத்துபவர்களுக்கு இன்றியமையாததாகும். பிராணவாயுவும் மனமும் ஒன்றோடு ஒன்று இணைந்தது. பிராணவாயுவை வசம் செய்யாமல் மனமானது வசமாகாது. பிராணவாயுவை வீண்படாமல் தடுத்தலே பிராணாயாமமாகும். முதலில் பிராணவாயுவை கட்டுப்படுத்திப் பின்னர் மனத்தைத் தன்வசம் ஆக்கிக் கொள்ள வேண்டும். சுவாசமானது இடகலை, பிங்கலை என்று கூறப்படும் இரண்டு நாடிகள் வழியாக மாறி மாறி உட்சென்று வெளிச் செல்கின்றது. இவற்றை ஒன்றுபடுத்த வேண்டும். குதிரையைக் கடிவாளத்தால் அடக்கலாம் என்றாலும் கடிவாளமே குதிரையை அடக்கிவிடாது. வகையாகக் கடிவாளத்தைக் குதிரையின் வாயிலிட்டு அதை மாறி மாறி இழுத்தும், நிறுத்தியும், ஓட்டியும் முயன்றால் குதிரை அடங்கும். இவ்வாறே பிராணாயாமத்தால் மனத்தை வேகம் கெடுத்து ஆளலாம். இதைத் திருஞானசம்பந்தர் **"ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி"** என்பார். பிராணாயாமப் பயிற்சியை முறைப்படி குருவிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுதல் நல்லது. அவ்வாறு செய்தால் சுவாச கதிகள் முறைப்படுத்தப்பட்டு மனத்துடன் ஒன்றி நிற்கும். இதைத் திருமூலர் **"மனம் எங்குண்டு வாயுவும் அங்கு உண்டு"** என்பார். மனமும் வாயுவும் லயப்படுவதன் மூலமாகத்தான் மேற்கொண்டு தியான சாதனை புரிய இயலும்.

**"ஆரிய னல்லன் குதிரை இரண்டுள**
**வீசிப் பிடிக்கும் விரகறி வாரில்லை**
**கூரிய நாதன் குருவின் அருள்பெற்றால்**
**வாரிப் பிடிக்க வசப்படும் தானே"** **(திருமந்திரம் - 565)**

பிராணாயாமப் பயிற்சியால் உடலிலுள்ள எல்லா நாடிகளும் தூய்மை அடையும். மனம் தெளிவடைந்து புறக்கண்கள் வழியாகச் செல்வதை விட்டுவிட்டு அகக்கண்கள் வழியாகப் பார்க்கத் தொடங்கும். ஐம்புல உணர்வுகள் நீங்கிப் போகும், வெளி உலக விஷயங்களைப் பற்றிய நாட்டமும், அறிவும் குறைந்துவிடும். ஐம்புலன்களின் நாட்டம் புறப்பொருள்களை விட்டுப் பரம்பொருளின் மீது செல்லும். சோர்வு தவிர்க்கப்படும். பிராணவாயுவைக் கட்டுப்படுத்துவதால் உடலாகிய வீட்டிற்கு விரைந்து அழிவில்லை என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். இறைசிந்தனையும் வலுவடையும். அப்பொழுது நான் என்கிற நினைவு

குறையும். மனமானது இறைவனைத் தவிர வேறொன்றையும் நாடாத நிலையில் அமரும். இந்த நிலையை மாணிக்கவாசகப் பெருமான் **''ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு என் உள்ளமும் போய்-நான் கெட்டவா''** என்று திருத்தெள்ளேணத்தில் பாடுகின்றார்.

**''நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்**
**வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை**
**ஓட்டமும் இல்லை உணர்வில்லை தானில்லை**
**தேட்டமும் இல்லை சிவனவ னாமே''** **(திருமந்திரம் - 604)**

பிராணன் என்கிற குதிரையைக் கட்டுப்படுத்துவதால் நமக்குக் கிடைக்கும் புத்துணர்வைத் திருமந்திரம் அழகாகப் பின்வருமாறு விளக்குகின்றது:-

**''புள்ளினும் மிக்க புரவியை மேற்கொண்டாற்**
**கள்ளுண்ண வேண்டாந் தானே களிதருந்**
**துள்ளி நடப்பிக்குஞ் சோம்பு தவிர்ப்பிக்கும்**
**உள்ளது சொன்னோம் உணர்வுடை யோருக்கே''**
**(திருமந்திரம் - 566)**

உள்ளத்தைச் சொல்லிவிட்டோம் என்று திருமூலர் கூறுகின்றார். இன்பம் வேண்டும் இன்பம் வேண்டும் என்று ஆசையை வளர்த்துக்கொண்டு பல தீய வழிகளை மேற்கொள்ளும் நாம் இதைக் கேட்டாவது உடலுக்கும் உள்ளத்திற்கும் வலிவு கொடுக்கும் ஓர் நெறியை மேற்கொள்ள இன்னும் தயங்க வேண்டுமா?

யோக நெறியில் செல்ல விரும்புபவர்கள் தன்னை அறியவும், இறைவனை அறியவும் முற்படுகிறார்கள். தனக்கும் இறைவனுக்கும் விளக்கமாக நமது உடல் இயங்குகின்றது என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். நமது உடலிலே பல ஆற்றல்கள் இருக்கின்றன. உண்மையில் இந்த ஆற்றல்கள் இறைவனுடைய அம்சமாகிய தேவர்களுடைய இருப்பிடமாக விளங்குகின்றன என்று யோகிகள் கூறுகின்றார்கள். இந்த ஆற்றல்கள் இருக்குமிடங்கள் ஆதாரங்கள் எனப்படும். உடம்பில் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்று ஆறு ஆதாரங்கள் உண்டு. இவற்றிற்கும் மேலானது சகஸ்ரதளம். மூலாதாரம் என்பது அடிநிலை ஆதாரமாகும். இந்த ஆதாரச் சக்திகள் பூவிதழ்களின் அமைப்பைக் கொண்டவை என்றும், பல நிறங்களைக் கொண்டவை என்றும் யோக நூல்களில் கூறப்படுகிறது. மூலாதாரம் நான்கு இதழ்களையும் நான்கு எழுத்துக்களையும் கொண்டது. செவ்வொளி நிறமுடையது. நாற்கோணத்தில் முக்கோண வடிவமுடையது. குதத்திற்கும் குய்யத்திற்கும் இடையில் உள்ளதாகக் கருதப்படுகிறது. இறைவன் பெரும் ஆற்றலாகச் சீவராசிகளிடையே சக்தி எனும் வடிவில் தோன்றி எழும்புவது.

குண்டலினி சக்தி என்கின்ற பேருடன் விளங்கும் இடம் இதுவே. பிரபஞ்சம் இயங்குவதற்கு அடிப்படையாக உள்ள நிலை மூலாதாரமாகும். விஷய அனுபவங்களைப் பெறுவதற்குப் புலன்களைத் தூண்டிவிடும் இடம் இதுவே.

சுவாதிட்டானம் சிவப்பு நிறம் கொண்ட ஆறு இதழ்களையும், ஆறு எழுத்துக்களையும் கொண்டது. இங்கிருந்தே யோகப் பயிற்சியின் மூலம் மூலாதாரச் சக்தி மேலெழும்புவதாக யோகிகள் கூறுவர்.

மணிபூரகம் பத்து இதழ்கள், பத்து எழுத்துக்களைக் கொண்டு மூன்று வட்டங்களுடன் நாபித் தானத்தில் அமைந்துள்ளது.

அனாகதம் இருதய ஸ்தானத்தில் பன்னிரண்டு இதழ்களையும், பன்னிரண்டு எழுத்துக்களையும் கொண்டுள்ளது.

அடுத்து கழுத்துப் பகுதியில் இருப்பது பதினாறு இதழ்களையும், பதினாறு உயிரெழுத்துக்களையும் கொண்ட விசுத்தியாகும். உயிர்களுடைய சாதாரண உணர்ச்சிகள் குறைந்தும், அறிவு உதிக்கும் இடமாகவும் இது உள்ளது.

இரண்டு இதழ்களையும் இரண்டு எழுத்துக்களையும் கொண்ட ஆக்ஞை என்கின்ற இடம் புருவத்தின் நடுவில் உள்ளது. அறிவின் நிலைக்களமாக அமைந்துள்ளது. **''வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு''** என்பார் திருமூலர். இங்கு உலக அறிவு மங்கி, இறைவனைப் பற்றிய அறிவு பிரகாசமடைகின்றது.

மனமானது உலக விஷயங்களைப் பற்றிச் சிந்திக்கும்போது முதல் மூன்று தானங்களில் சஞ்சரிக்கின்றது. உயர்ந்த மனோபாவங்கள் ஏற்படுவதில்லை. அலை அலையாக ஆசைகள் தோன்றிக் கொண்டே இருக்கும். அந்த நிலையில் உயிரானது உலக மயமாக குறைந்த ஒளியுடன் குணமாற்றங்களுக்கு உட்பட்டதாய், பாசங்களுடன் பிணைக்கப்பட்டதாய் நிற்கின்றது. இந்த மூன்று தானங்களிலும் மனத்தை அடக்கி ஒருமுகப்படுத்திப் பழக வேண்டும். அப்படிச் செய்யாவிடில் மனமானது பாசத்தில் உழலும். ஆனால் இந்தச் சாதனை எளிதன்று. மணிபூரகத்தானம் வரை எழும் உணர்ச்சிகளை அடக்குவது மிகுந்த அவசியமாகிறது. இதுவே அகப்பூசையில் முதலாவது கட்டமாகும்.

அடுத்து நாபிக்கு நால்விரல் மேலே உள்ள இதயத் தானத்தில் மனதை லயிக்கச் செய்ய வேண்டுமென்று யோகிகள் கூறுவர். ஆன்ம எழுச்சி ஏற்படும் முதல் ஸ்தானம் என்று இதயம் கருதப்படுகின்றது.

கழுத்துப் பகுதியிலுள்ள விசுத்தித் தானத்திற்கு ஓர் சிறப்பு உண்டு. இது சொற்கள் உருவாகும் இடம். இங்கிருந்து சொல்லை வெளிப்படுத்தும் ஆற்றலுக்கு வாணி என்ற பெயர் உண்டு. தியானத்திற்குச் சிறந்த இடமாகும்.

இருதயத்தில் இறைவனைப் பூசிக்க வேண்டுமென்று திருமூலர் கூறுவார். அப்படிச் சாதகர்கள் இறைவனை ஞானத்தால் சிந்திக்கச் சிந்திக்க உயிரிடத்திலிருந்து பாசங்கள் நீக்கப்படுகின்றன. மனத்திலே அமைதி கலந்த இன்பம் ஏற்படும். **''சடலத் தலைவனைத் தாமறிந்தாரே''** என்பார் திருமூலர்.

**''நடலித்த நாபிக்கு நால்விரன் மேலே**
**மடலித்த வாணிக் கிருவிரல் உள்ளே**
**கடலித் திருந்து கருதவல் லார்கள்**
**சடலத் தலைவனைத் தாமறிந் தாரே''** **(திருமந்திரம் - 616)**

பிரத்தியாகாரத்தில் மனம் புலன்வழிச் செல்லாமல் தடுத்து நிறுத்தப்படுகின்றது. கீழ்நோக்கிச் செல்லாமல் மேல்நோக்கிச் செல்ல உதவுவது தாரணையாகும். இவ்வாறு செய்தால் பல காலம் வாழலாம் என்கின்றார் திருமூலர். ஒரு பொருளைப் பற்றி மாறி மாறி, விட்டு விட்டு மனமானது சிந்திக்கும் தன்மையை உடையது. தியான சாதனை வெற்றி பெறவேண்டுமென்றால் மனம் இந்த நிலையிலிருந்து விடுபட்டு வெளி வர வேண்டும். ஒரு குறிக்கோளை எண்ணி எண்ணி நீண்ட நேரம் அதிலேயே நிலைத்து இருக்க வேண்டும். இவ்வாறு செய்யும்பொழுது தான் மனம் புலன்களைப் பற்றிய சிந்தனைகளை விட்டு இறைவனுடைய அருளைப் பற்றி நினைக்கத் தொடங்கும். இந்தப் பயிற்சியில் ஈடுபட ஈடுபட மனம் தூய்மை அடைகிறது, சத்துவமயமாகிறது. மனம் நினைக்கப்படும் பொருளின் மீது நிலைபெற்று விடுகிறது, ஒன்றி விடுகிறது.

தாரணையின் முதிர்ச்சி தியானத்தில் கொண்டு விடுகின்றது.

தியானமாவது உள்முகப் பயிற்சியாகும் மனமும் சித்தமும் வெளிச் செல்லாமல் இருக்க வேண்டும். பழைய பழக்கங்கள் நீங்கி விட வேண்டும். ஐம்பூதங்கள், ஐம்புலன்கள், நான்கு அந்தக்கரணங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துவதைக் குறைத்துக்கொண்டு உள்முகமாகத் திருப்பிக் கொள்ள வேண்டும். அது மட்டும் போதாது. இந்தத் தியானம் இறைவனைப் பற்றிய தியானமாக இருக்க வேண்டும். அதற்கு இறைவனுடைய அருளும் தேவை. உயிர்களுக்கு எப்பொழுதுமே துணையாக இருந்துவரும் சிவபரம்பொருள் தன்னையே தியானித்துக் கிடக்கும் பக்குவ நிலையை உண்டாக்கும், மேலும் அந்தத் தியானத்திற்கான ஆற்றலையும் வழங்கும். இறைவனுடைய திருமேனி குருவின் கண் தங்கும் என்பது திருமூலருடைய உபதேசம் குருவின் உருவைத் தியானத்தின் இதயத்தில் வைத்துச் செய்ய வேண்டும் என்று திருமூலர் கூறுவார்.

**''உருவாய சக்தி பரத்தியான மூன்னுங்**
**குருவார் சிவத்தியானம் யோகத்தின் கூறே''** **(திருமந்திரம் - 598)**

தியானத்தில் ஆழ்ந்து செல்லச் செல்ல பரம்பொருளைப் பற்றிய அறிவும் வளரும். ஆகவே, தியானமானது அகப்பூசையில் முக்கிய

கட்டமாகும். முகக்கண்களையே பயன்படுத்தி வெளிப்பொருட்கள் காட்சியை அனுபவிக்க வேண்டும் என்கிற ஆவல் குறைந்து, அகக்கண்கள் வழியாக இறைவனின் அருளைப் பற்ற வேண்டும் என்கின்ற விருப்பம் எழும். இதுவே அகக்கண் பார்வை எனப்படும். திருமூலர் இதனை **"ஒண்ணா நயனம்"** என்பார். அதன்மூலமாகக் காணப்படுவது பரம் பொருளின் சோதியாகும். பரம்பொருளின் சோதியைத் தன்னுள் உணர்வதே தியானத்தின் முடிவாகும். கண்ணப்ப நாயனார் வரலாற்றைக் கூறும் சேக்கிழார் பெருமான். கண்ணப்பர்பெருமான் யோக நிலையில் முடிவை அடைந்தபொழுது **"அங்கணர் கருணைகூர்ந்த அருள்திரு நோக்க மெய்தித்-தங்கியபவத்தின் முன்னைச் சார்பு விட்டகல நீங்கிப்-பொங்கிய ஒளியின் நிழல் பொருவு இல் அன்பு உருவம் ஆனார்"** என்றார்.

**"ஒண்ணா நயனத்தில் உற்ற ஒளிதன்னைக்**
**கண்ணாரப் பார்த்துக் கலந்தங் கிருந்திடில்**
**விண்ணாறு வந்து வெளிகண் டிடவோடிப்**
**பண்ணாமல் நின்றது பார்க்கலு மாமே"** **(திருமந்திரம் - 600)**

யோக மார்க்கத்தின் முடிவான அங்கமே சமாதி எனப்படும். தியானத்தின் முதிர்ச்சி சமாதியாகும். காய் முற்றினால் சுவைமிக்க கனியாவது போல இந்த நிலைமை இருக்கும். வெள்ளரிக்கொடி தரையில் படருகிறது, கொடியுடன் சேர்ந்திருக்கும் வெள்ளரிக்காய் முற்றிப் பழுக்கும்பொழுது கொடியை விட்டு விடுகிறது. கொடிக்கு ஆதாரமாக உள்ள தரையையே தானும் பற்றிக்கொள்கிறது. புளியங்காய் முற்ற முற்றப் பழமாகித்தான் பற்றிக் கொண்டிருக்கும் ஓட்டினைவிட்டு ஒட்டாமல் நின்றுவிடுகின்றது. சமாதியில் நிலைத்து நிற்கும் யோகியானவன் சிற்றுணர்வுகளிடமிருந்து தன்னை விடு படுத்திக் கொள்கிறான், ஆதாரத்தோடு லயித்துவிடுகின்றான். பாண்டவர்கள் எவ்வளவு துன்பங்களை அனுபவித்தபோதும் கண்ணனை ஒருபோதும் மறவாது, அவனிடமே எல்லாவற்றையும் ஒப்படைத்து நிம்மதியாக வாழ்ந்தனர். இதுவே சமாதி நிலையாகும். சிவத்தை நாடி சிவத்துடன் கூடும் நிலையே சமாதி நிலை என்பார் திருமூலர். **"பாடுறச் சீவன் பரமாகப் பற்றறக் கூடும் உபசாந்தம் யோகாந்தக் கொள்கையே"** என்பது திருமூலரின் திருவாக்கு. யோகியர் புறப்பற்றினை முதலில் நீக்குவர். பிறகு சிவபெரு மானுடைய உருவத் திருமேனியை நெஞ்சிலே தியானிப்பர், பிறகு நாபி, இரு தயம், புருவ மத்தி ஆகிய இடங்களில் பரம்பொருளுக்கு அகப்பூசை செய் வர். இவ்வாறு அகப்பூசை செய்து பேறு பெற்றவர் திருமயிலாப்பூர் வாயிலார் நாயனார் ஆவார். இவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். அவர் யோக நிலையில் பெற்ற அனுபவத்தைச் சேக்கிழார் பெருமான்.

**"மறவாமை யானமைத்த மனக்கோயி லுள்ளிருத்தி**
**உறவாதிதனை யுணரும் ஒளிவிளக்குச் சுடரேற்றி**
**இறவாத ஆனந்தம் எனும் திருமஞ் சனமாட்டி**
**அறவாணர்க் கன்பென்னும் அமுதமைந்தர்ச் சனைசெய்தார்"**

என்று கூறுவார்.

மனிதனை ஆசாபாசங்கள் ஆட்டி வைக்கின்றன. உடலின் நிலையற்ற தன்மை தெரிவதில்லை. ஐம்பொறிகள் காட்டும் அனுபவமே பிரதானமாகத் தெரிகிறது. உடலும், உடலைச் சார்ந்த இயக்கங்களும், எண்ணங்களும் மனிதனுக்குத் தான் என்கிற எழுச்சியைக் கொடுத்து தன்னுள் இயங்கும் உண்மைச் சக்தியை மறைத்து விடுகின்றன. ஆனால் இறைவன் உடலில் இயங்கும் எல்லா அணுக்களிலும் படர்ந்துள்ளான். இதைப் பற்றிய அறிவே மேலான அறிவாகும். சமாதி நிலை இந்த அறிவினை அடையச் செய்கின்றது. இந்த அறிவு பெற்ற உயிரானது பொறி வழி செல்லாது நின்று விடுகின்றது. யோகியர் மனத்தை ஒவ்வொரு ஆதாரமாக ஏற்றிக் கீழுள்ள சக்திகளின் தன்மையைக் குறைக்கின்றார்கள். சீவபோதம் குறைந்து சிவபோதம் வெளிப்படுகின்றது. மனமானது புருவ நடுவில் நின்று விடுகின்றது. இதுவே சந்திர மண்டலம் எனப்படும். இத்துடன் மனமானது நின்றுவிடக் கூடாது. இதையும் கடக்க வேண்டும். ஆதியும் அந்தமும் இல்லாத பேரொளியை நாட வேண்டும். அப்போது பேரறிவு உதயமாகிறது. இந்த நிலையை அடைந்தவர்கள் **சிவனார்** என்று அழைக்கப்படுவர். இவர்களைத் திருமூலர் **''ஏழும்பர் சென்றனர்''** என்பார்''

தோட்டத்தில் ஓர் நல்ல மாமரம் இருக்கின்றது. அதன் உச்சியில் தேமாங்கனிகள் பழுத்துத் தொங்குகின்றன. அந்த மாமரத்தின் உச்சியில் சென்று, பழுதுபடாவண்ணம், தித்திக்கும் மாம்பழத்தைப் பறித்துச் சுவைத்து உண்பதே ஆனந்தமாகும். இதைவிடுத்துச் சந்தையிலே ஈ மொய்த்துக் கிடக்கும் மாம்பழத்தை நாடிச் செல்வது பேதமையாகும். **''ஒன்று கண்டீர் உலகுக்கு ஓர் கனி; நன்று கண்டீர் நல் நமச்சிவாயக் கனி''** என்பார் திருமூலர். இந்தக் கனியைக் கவரவேண்டும். காயைக் கவரக்கூடாது. **''கனியிருப்பக்காய் கவர்ந்தற்று''**. நமது உடம்பே தோட்டம். மூலாதாரம் முதல் சகஸ்ரதளம் வரை சென்று நிற்பது மாமரமாகும். இந்த மாமரத்தைப் பற்றி மேற்சென்று பரவெளியிலே காட்சி அளிக்கும் சிவம் எனும் மாம்பழத்தைப் பறிக்க வேண்டும். பறித்து உண்பதே யோகத்தின் தலையாய அனுபவமாகும். அப்பொழுது சிவம் வெளிப்படும். இத்தகைய நிலையைத் திருமூலர் ''தூங்கலும்'' என்பார். **''தூங்கிக் கண்டார் நிலை சொல்லுவதும் எவ்வாறே''** என்றும் சொல்லுவார்.

**''பூட்டொத்து மெய்யிற் பொறிப்பட்ட வாயுவைத்**
**தேட்டற்ற வந்நிலஞ் சேரும் படிவைத்து**
**நாட்டத்தை மீட்டு நயனத் திருப்பார்க்குத்**
**தோட்டத்து மாம்பழந் தூங்கலு மாமே''** **(திருமந்திரம்...624)**

மாணிக்கவாசகப் பெருமான் யோகத்தில் சிறந்த சாதனை புரிந்தவர், யோகத்தால் இறைஞானம் பெற்றவர், சிறந்த அமைச்சர் பதவியைத் துறந்து ஓப்பிலாத் தொண்டர் பதவியைப் பெற்றவர். திருப்பெருந்துறையிலே இறைவனே இவரை ஆட்கொள்ளும் நோக்கத்துடன் குருந்த மரத்தடியில் குருவாக அமர்ந்து மெய்ஞ்ஞான போதத்தை விளக்குகின்றார். இவர் பெற்ற

சிவஞானம் இறைவனிடத்திலிருந்து குரு வழியாக வந்த மாசிலா ஞானமாகும். ஞானகுருவானவர் மாணிக்கவாசகருக்கு யோகத்தை விளக்குகின்றார். மூன்று குணங்களையும், ஐம்புலன்களையும் அடக்க வேண்டும். மூலாதாரத்திலிருந்து பிராணவாயுவை எழுப்பி, கட்டுப்பாட்டுடன் சுழுமுனை வழியாக மேலும் மேலும் உயர்த்த வேண்டும். இறைவனின் திருநடனச் சிலம்பொலியுடன் போய்ச் சேர வேண்டும். அவ்விடத்தில் ஐந்து எழுத்துக்களும், ஒரே எழுத்தாகின்ற தன்மையைக் கண்டு, இறைவனுடைய அருளைப் பெற்று இறைவனுடைய உருவத்தையும் பெற வேண்டும். எவ்வாறு என்றால் புழுவானது குளவி உரு ஆவது போல. திருப்பெருந்துறை குருவானவர் மாணிக்கவாசகருக்கு இவ்வாறு விளக்கியதாகக் கடவுள் மாமுனிவர் திருவாதவூரர்புராணத்தில் பின்வருமாறு அருளிச் செய்கின்றார்:-

**"முக்கு ணம்புலம் ஐந்துடன் அடக்கி**
**மூல வாயுவை யெழுப்பிஇரு வழியைச்**
**சிக்கெ னும்படி யடைத்தொரு வழியைத்**
**திறந்து தாண்டவச் சிலம்பொலி யுடன்போய்த்**
**தக்க வஞ்செழுத் தோரெழுத் துருவாந்**
**தன்மை கண்டரு டரும்பெறு வெளிக்கே**
**புக்க அழுந்தினர் எமதுறுப் பெறுவார்**
**புவியில் வேட்டுவன் எடுத்தமென் புழுப்போல்".**

திருமந்திர மணிமாலையில் மூன்றாம் தந்திரத்தில் யோகம் முழுமையாக விளக்கப்படுகிறது.யோக நெறியைக் கடைப்பிடிப்பதால் கிடைக்கும் பலன்கள் கூறப்படுகின்றன. உடம்பை வளர்க்கும் உபாயத்தைப் பெற்றவர் உடம்பை வளர்ப்பர். உயிரை வளர்ப்பர், அதன் விளைவாக இறை அனுபவத்தைப் பெறுவர் என்னும் கருத்துடன் திருமூலர்பெருமான் யோக நெறிக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துள்ளார். அனுபவம் பெற்ற பெரியோர்கள் தரும் உபதேசத்தின் துணைக்கொண்டு, இந்த நெறியை மேற்கொள்ள வேண்டும்.



# 16. ''சிவன் உறை சிந்தை''

சித்தம் சிவன்பால் உறைவதும், சிவம் சித்தத்தை விழுங்குவதும் யோகம் எனப்படும். யோகம் எனும் சொல் ஒரு வடமொழிச் சொல். அதற்கு இணைதல், சேருதல் என்று பொருள். பல ஆயிரம் ஆண்டுகளாக நமது ஞானிகளும், அருளாளர்களும் யோக மார்க்கத்தின் உண்மைகளைக் கண்டறிந்து தங்களுடைய அனுபவங்களை உலக ஆன்மீக வாழ்க்கைக்கு ஒப்பற்ற பரிசாக வழங்கியுள்ளனர். யோகம் ஓர் சிறந்த அருள் நிலை ஆகும். அருள் நிலை என்பது ''சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற'' நிலையாகும் சிவபரம்பொருள் சிந்தையுள்ளே நின்ற நிலையை உணர்ந்து, அகமகிழ்ந்து, பேரானந்தத்தில் திளைத்து நிற்கும் நிலையே யோக நிலையாகும். இதுவே சிவயோகம் எனப்படும். சுந்தரமூர்த்தி நாயனார் தில்லையில் இறைவனைத் தரிசித்தபொழுது பெற்ற பேரின்பத்தைப் பேரின்ப வெள்ளம் என்றும், மாறிலா மகிழ்ச்சி என்றும் சேக்கிழார் பெருமான் விவரித்து மகிழ்கின்றார். வன்தொண்டர் தில்லையில் நடராஜப் பெருமானின் பெரும் கூத்தினைக் காண்கின்றார். அதாவது அந்த நிலையில் அவருடைய பொறிகள் அனைத்தும் கண்ணாகிய ஒரு பொறி வழியே மட்டும் செயல்படுகின்றன. அவருடைய உணர்வுகளெல்லாம் ஒருமுகப்படுத்தப்பட்டன. அவருடைய மனம், புத்தி, சித்தம் ஆகிய உட்கருவிகள் தனித்தனியே செயல்படாது அவருடைய சிந்தை வழியே செயல்பட்டன. இறைவனின் திருக்கூத்து அவருடைய சிந்தையை நிரப்பி நின்றது. அவருடைய குணங்களைப் பொறுத்தவரை, எல்லாக் குணங்களும் சாத்துவிகத்துள் அடங்கி நின்றன. ஆகவே, பிறப்பினைச் சேர்க்கும் எல்லாக் கருவிகளும் சிவன்பால் நின்று, தங்களுடைய இயல்பான போக்கினை அடக்கிக்கொண்டு, சிவத்தின்பால் அமைந்திருந்தன. கருவிகள் தங்கள் இயல்புப்படி தத்தம் வழியே செல்லும் நிலை இங்கு இல்லை. ''தானே புலனைந்தும் தன்னில் மடைமாறும்'' என்பார் திருமூலர்.

**''மாறி நின்று என்னை மயக்கிடும் வஞ்சப் புலன் ஐந்தின்**
**வழி அடைத்த அமுதே**
**ஊறி நின்று என்னுள் எழும் பரஞ்சோதி....''**

என்னும் திருவாசகப் பாடலும் இந்தப் பொருளையே உணர்த்துகின்றது.

சுந்தரமூர்த்தி நாயனார் பெற்ற சிவானந்த அனுபவம் சிவ யோகத்தின் முடிவு என்றும், எல்லை என்றும் கருதலாம். இதைப் பற்றித் தத்துவங்கள் பல பேசலாம். விளக்கங்கள் கொடுக்கலாம், நூல்கள் பல எழுதலாம். ஆனால், சிவயோக நிலை ஓர் அனுபவ நிலையாகும். சொற்களுக்கு அப்பாற்பட்டது. இதில் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது ஒன்றே. சாதாரணமாக உடலோடு சேர்ந்து இயங்கும் புறக்கருவிகளும், அகக்கருவிகளும் புறத்தோற்றத்தை நாடிச் செயல்படுகின்றன. அவ்வாறு செயல்படும் வரை அவை உயிரின் உண்மை நிலையை அறிந்து கொள்ள தகுதியற்ற நிலையில் உள்ளன. திருவருளால் இதிலே ஒரு மாற்றம் ஏற்படுகிறது. கருவி, கரணங்கள் தத்தம் தொழிலிலே தொடர்ந்து ஈடுபடுகின்றன. ஆனாலும், உள்ளுணர்வு சிவானுபவத்தில் திளைக்கத் தொடங்குகின்றது. இந்த ஒரு மகத்தான மாற்றம் என்றாவது ஒரு நாள் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் நடந்தே தீரும். இறைவன் நமக்கு அருளிச் செய்துள்ள சுதந்திரத்தை, உரிமையை, ஆற்றலை, அறிவைப் பயன்படுத்திச் சிவானுபவத்தை அடைவதற்கான வழிகளிலே ஈடுபடுவதே நமது தலையாய குறிக்கோளாகும்.

இந்தக் குறிக்கோள் நம்முடைய கண்களுக்குத் தென்படுவதில்லை. ஆணவம் நமது கண்களை மறைக்கின்றது. ஒரு வகை இருள் நிலையிலேயே வாழ்ந்து வருகிறோம். எப்பொழுதும் நமது உயிருடன் சேர்ந்து கிடக்கும் ஆணவ மலம் உயிரை அதன் உண்மை நிலையைத் தெரிந்து கொள்ளா வண்ணம் மறைத்தலாகிய தொழிலைச் செய்கிறது. ஆகவே, உயிருக்குத்தான் யார், தனது இருப்பிடம் எது, தனது நோக்கம் என்ன என்ற ஒரு அறியாத நிலையே படர்ந்து கிடக்கின்றது. உயிர் என்று ஒன்றுண்டு. இறைவன் தனது பெருங் கருணையால் உயிரானது அருள் நிலையைப் பெற வேண்டுவதன் பொருட்டு, அதற்கு உடலையும் கருவிகளையும் வழங்குகின்றான். **வினைக்கீடாய் மெய்கண்டு** - என்றது திருமந்திரம்.

உயிர் ஆணவ மல மறைப்பிலிருந்து தன்னை விலக்கிக்கொள்ள வேண்டும். இதற்காகவே இறைவன் அருளால் பொறி, புலன்கள் உயிருக்கு அளிக்கப்படுகின்றன. உயிரானது சகல நிலையைப் பெறுகிறது. இது புணர்ச்சிக்கு ஏதுவான நிலை. உயிருக்கு அறிவு உண்டு. ஆனால், இது முழுமையான அறிவன்று. இறைவனுக்கு மட்டுமே பேரறிவும், பேராற்றலும் உண்டு. உயிர் பெற்றுள்ளது வெறும் சுட்டறிவு, சிற்றறிவு மட்டுமே. அந்த அறிவும் உடலுடன் கூடிய பொறி, புலன்கள் செலுத்தும் வழியிலேயே செல்கின்றது. அதனால், வினை வளருகிறது. வினை வளர்ந்தாலும் உயிருக்குச் சற்று விளக்கம் கிடைக்கின்றது. உயிர் இப்பொழுது தனது கருவிளைச் சார்ந்து நிற்கின்றது. உயிருடைய அறிவானது கருவிகள் மூலமாகக் கிடைக்கும் புறத்தேயுள்ள அனுபவங்களை மட்டுமே பெறுகின்றது. இதனால் உயிரானது தன்னிலை உணராது தான் உடலென்றே, உடலைச் சார்ந்த கருவிகள் என்றே கருதிக் கொள்ளுகின்றது. இருந்தாலும்,

இந்தக் கருவிகள் தேவைப்படுகின்றன, தத்துவங்கள் தேவைப்படுகின்றன. அவற்றின் வழியாகவே சிறிது சிறிதாக உயிருக்குத் தனது அறிவு, ஆற்றல் ஆகியவற்றின் விளக்கம் கிடைக்கின்றது. திருவருள் சேர்க்கையால் தத்துவங்கள் யாவும் நம்முடைய வளர்ச்சிக்குப் பயன்பட்டு நல்லுணர்வையும், நல் விருப்பத்தையும், நற்செயலையும், நல்ல பண்பாட்டையும் வழங்குவதற்கு ஆதாரமாகவும் உள்ளன.

உலகில் தோன்றிய ஒவ்வொருவரும் தமது கருமங்களை முடிக்க வேண்டும். அதற்கு மாயையின் சேர்க்கை தேவை.மாயையாலே மாயையை வெல்ல வேண்டும். மாயையை வெல்வது என்றால், உயிரானது தன்னிலை விளக்கம் பெற வேண்டும். தான் உடம்பல்ல, உடம்பின் கருவிகள் அல்ல என்று தெரிந்துகொள்ள வேண்டும். உயிரற்ற உடம்பு ஏதும் செய்யலாகாது. உயிரோடு கூடிய உடம்புதான் உயிரின் அறிவு, ஆற்றல் ஆகியவற்றால் செயல்படுகிறது. உயிரில்லாவிடில் உடலும், கருவிகளும் வெறும் சடமே. இவ்வுயிரானது உடம்புக்கு வெளியே இருப்பதன்று. அகத்தே இருப்பது என்றும் தெரிந்துகொள்ள வேண்டும். இதையே திருமூலர் **"உடலோடு உயிரை ஒருபொழுது உன்னார்"** என்றார்.

உயிர் எப்பொழுதும் ஒன்றைச் சார்ந்தே நிற்பது. அறிவு குன்றிய நிலையில் புறத்தேயுள்ள பொருள்களைச் சார்ந்து நிற்கின்றது. இன்பம் அடைகின்றது, துன்பமும் அடைகின்றது. உயிரின் அனுபவங்கள் உடலுடைய அனுபவங்களாகத் தவறாகக் கருதப்படுகின்றன. உண்மையில் இவையெல்லாம் உயிரின் அனுபவங்களே. இவ்வாறு உயிர்க்கு இந்த அனுபவங்களைச் சேர்க்கின்றவன் வேறொருவன். உடம்பு சடப்பொருள். உடம்பினால் மட்டும் அனுபவம் கிடைக்காது. உயிர் சத்துப்பொருள். அறியும் தன்மையுடையது. ஆனால் உயிரின் அறிவு வியாபகமுடையது அன்று. இதன் விளைவாக உயிர் தன்னை உடலுடன் சேர்த்துத் தனது இயக்கத்திற்குக் காரணமாக உள்ள இறைவனுடன் தனக்குள்ள தொடர்பினை அறிந்து கொள்ளாமல் உலக அனுபவங்களுக்குத் தன்னை அடிமையாக்கி அறியாமையில் கிடக்கின்றது. உயிரின் அறிவுக்குள் அறிவாய் அமர்ந்து, உயிரினை அதனுடைய விருப்பம்போலே நடத்திப் பல அனுபவங்களுக்கு உயிரை உள்ளாக்கி, முடிவில் உண்மை உணர்வு பெறச் செய்கின்ற பேரறிவுப் பொருளாகிய பரம்பொருள் ஒன்று உண்டு. அந்தப் பொருள் எங்கும் நிறைந்துள்ளது. அந்தப் பெரும்பொருளே உடலுக்குள், உயிருக்குள் அந்தர்யாமியாக விளங்குகின்றது. அந்தப் பொருளே உயிரை நடத்திச் செல்லுகின்றது. இதுவே சிவம் எனப்படுவதாகும். இந்தச் சிவமானது உயிருக்கு ஒன்றாய், வேறாய், உடனாகவும் செயல்பட்டு வருகின்றது. இதை நாம் அறிவதில்லை. **"உயிருள் சிவனை ஒருபொழுதும் உன்னார்"** என்றார் திருமூலர்.

உயிர் உடலுக்கு மாறுபட்டது என்று உணர்வது முதல் கட்டம். உயிருக்கு உயிராக நிற்பது பேரறிவாகிய சிவபரம்பொருள் என்று

எண்ணிக்கொள்வது இரண்டாவது கட்டம். சிவபரம்பொருள் நமது சிந்தனைக்குள் வீற்றிருக்கின்றான். ஊனாகி, உயிராகி நிற்கின்றான். **"நினைப்பவர்கள் மனம் தன்னுள் நினைவேதானாய் நிற்கின்றான்".** நமது கருவி, கரணங்களை இயக்குவிக்கும் ஆற்றலை உயிருக்குக் கொடுக்கின்றான். கரணமெல்லாம் நீ என்று அருளாளர்கள் கூறுகின்றனர். உண்மையில் நான் என்றும், எனது என்றும் ஒன்றுமில்லை. எல்லாம் அவன் தன் விருப்பம் அன்றே. சிந்தையிலே வீற்றிருக்கும் பேரறிவுப் பொருள் அவன். மனம் போன போக்கே சிந்தை செயல்படாது, தன்னுள் அறிவுக்கு அறிவாய் வீற்றிருக்கும் பரம்பொருளை உணர்ந்துகொள்வது மூன்றாவது கட்டம். தான் உடலில்லை என்றும், அறிவுப்பொருள் என்றும், பேரறிவாகிய இறைவனால் இயக்கப்படுபவன் என்றும் நினைந்து, சிந்தையிலே தெளிவுபடுவது உயிர்களின் கடமையாகும். இதை அறியாத நிலையில் **"ஒருபொழுது உன்னார் சிவன் உறை சிந்தையை"** என்றார் திருமூலர். நற்கதி பெறுவதற்குத் தனக்கு நிலைத்த ஆதாரம் கடவுள் தான் என்கிற நினைப்பு வர வேண்டும். தன்னுள் வீற்றிருக்கும் சிவத்தை விட்டு உயிரானது தனித்து நிற்க முடியாது என்கிற உறுதியும் எழ வேண்டும். இந்த உறுதியில் சிறிதளவும் தளர்வு கூடாது. திருவடி ஞானமே நாம் பெறத்தக்க ஒன்று என்று அதைப் பெறும் முழு முயற்சியிலேயே தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். தன்னைத் தான் உணர்ந்து கொள்வது அறிவு நிலையில் ஒரு முன்னேற்றம் தான். ஆனால், அத்துடன் நின்று விடக்கூடாது. அதையும் கடக்க வேண்டும்.

எல்லாம் திருவருட் செயல் என்று எண்ணி நின்றிடல் வேண்டும். அருளைப் பற்ற வேண்டும். அருளிலே அழுந்திவிட வேண்டும். ஊஞ்சல் விட்டத்தைச் சங்கிலியால் பற்றியுள்ளது. ஊஞ்சல் ஆடுகின்றோம். கயிறு அறுந்தால் ஊஞ்சல் தரையில் விழுந்து விடுகின்றது. முதலில் ஊஞ்சல் சங்கிலியால் விட்டத்தைப் பற்றியிருந்தது. இப்பொழுது நிலையாகத் தரையில் அமர்ந்துவிடுகின்றது. கருவி கரணங்களைச் சார்ந்து உயிரானது உலக மேடையில் நடை போடுகின்றது. கருவி கரணங்கள் புறப் பற்றினை நீக்கி இறை நாட்டம் செலுத்தும்பொழுது சிவமாகிய பரம்பொருள் உயிருக்கு ஆதாரமாகி விடுகின்றது. இதைத் திருவுந்தியார் **"நம் செயலற்று இந்த நாம் அற்ற பின் நாதன் செயல் தானே"** என்கிறது. இவ்வாறு உயிரின் சிற்சக்தியை, சிற்றறிவை இறையருட் சக்தியுடன் இணைத்துக்கொள்ள வேண்டும். இதுவே யோகம் எனப்படும். இயல்பாகப் பாசத்தை வளர்க்கும் கருவி, கரணங்கள் இயக்கம் உடலின் கீழ்ப்பகுதியில் அறிவையும், ஆற்றலையும் திருப்புகிறது. இதைச் செய்யாமல் கருவிகளின் இயக்கம் உயிரின் இயல்பை மேல்நிலைக்கு எடுத்துச் செல்வது யோகமாகும். இதை யோக நூல்கள் பலவாறாக விளக்குகின்றன. மூலாதாரத்திலே அடங்கிக் கிடக்கும் உயிரின் சிற்சக்தியை தியான சாதனை அடிப்படையில் மேலெழுப்பி அருட் சக்தியோடு கலக்கச் செய்வது யோகமாகும். இதனை அறிந்து முயற்சிகளை மேற்கொள்ளுதல் நான்காம் கட்டமாகும். இதனை **"ஒருபொழுது உன்னார் சந்திரப் பூவையே"** என்றார் திருமூலர். தியான சாதனையின் நான்கு கட்டங்களையும் தெளிவாக விளக்கி விடுகின்றது பின்வரும் திருமந்திரம்:

"ஒருபொழுது உன்னார் உடலோ (டு) உயிரை;
ஒருபொழுது உன்னார் உயிருள் சிவனை;
ஒருபொழுது உன்னார் சிவன்உறை சிந்தையை;
ஒருபொழுது உன்னார் சந்திரப் பூவையே". (திருமந்திரம் - 601)

ஆகவே, உண்மை யோகம் நன்குணர்ந்த உயிரானது சிவானுபவத்தில் திளைத்து நிற்பதே ஆகும். மனம் செல்லும் போக்கே போகாது மனதை அடக்கப் பயில வேண்டும். மனம் புறத்தே போகாது அடங்கி, ஒரு குறியில் நின்று சிவத்தின் தோற்றத்தையும் சிந்திக்க வேண்டும். அந்தச் சிந்தனை இடைவிடாமல் இருக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். பழைய வினைகளின் வலிமை காரணமாக மனம் அவ்வப்பொழுது செம்பொருளைப் பற்றிய சீரிய சிந்தனையிலிருந்து விலகி, உலகத்தின் மீது தனது நாட்டத்தைச் செலுத்தும். அவ்வாறு இல்லாமல் அதற்குத் தடை போட வேண்டும். மேலும் மேலும் தியான மூர்த்தத்தின் பால் மனதைச் செலுத்த முயல வேண்டும். இது நினைத்தமாத்திரத்திலேயே நடந்து விடாது. திருவருளே மனத்திற்கு பக்குவத்தையும், வலிமையையும் கொடுக்கும். உலகப் பொருட்களின் மீது பற்றினைப் படிப்படியாகக் குறைத்து, அவற்றின் மீது சாராமல் தான் வணங்கும் உருவத் திருமேனியைத் தியானத்தில் வைத்து நிற்பது ஒரு படியாகும். கடவுளை உணரவொட்டாமல் தடுக்கும் கவலைகள் தியானத்திற்கு ஊறு விளைவிக்கும். ஆனால், அதற்காகத் தளர்ந்து விடாமல் ஒரே குறிப்பாக நிற்க வேண்டும. திருவடி ஞானத்தையே தலையாய கோட்பாடாக உள்ளத்தில் வைத்து இடைவிடாமல் நிற்கும்பொழுது கருவி, கரணங்கள் உலகப் பற்றினை நீக்கிக் கொண்டு, தியான மூர்த்தியின் திருவுருவில் அழுந்தும் என்று அருளாளர்கள் கூறுகின்றார்கள். இயமம் முதல் எல்லாவித வாழ்க்கைக் கோட்பாடுகளையும் அனுசரிக்க வேண்டும். திருவடி ஞானத்தையே தலையாய கோட்பாடாக உள்ளத்தில் வைத்து இடைவிடாமல் நிற்கும்பொழுது கருவி, கரணங்கள் உலகப் பற்றினை நீக்கிக் கொண்டு, தியான மூர்த்தியின் திருவுருவில் அழுந்தும் என்று அருளாளர்கள் கூறுகின்றார்கள். இயமம் முதல் எல்லாவித வாழ்க்கைக் கோட்பாடுகளையும் அனுசரிக்க வேண்டும். தொடர்ந்து சிவபரம்பொருள் மீது அசையாத, மாறாத பற்றினைக் கொள்ளும்பொழுது உயிர் சமாதி நிலைக்குச் செல்லுகின்றது. பல தடைகளைத் தூக்கி எறிந்து, தொடர்ந்து உயிரானது பரம்பொருளை நாடும் நிலை ஆதார யோகம் என்று கூறப்படுகிறது.

"சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் என்றமையால்
சார்புணர்தல் தானே தியானமுமாம்-சார்பு
தொடஒழுகின் நல்ல சமாதியுமாம் கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று".

(திருக்களிற்றுப்படியார் - 34)

ஆதார யோகமாவது சிறு குழந்தையின் தாயார் குழந்தையின் கையைத் தூக்கி, அந்தக் கையாலேயே வானத்தில் உளள சந்திரனைக் காட்டுவது

போலாகும். கண்ணிற்கு உடனடியாகப் படாத ஒரு நட்சத்திரத்தைக் கிட்டத்தில் தெரியும் மரக்கிளை ஒன்றைக் காட்டி அதன் வழியே தெரிவிப்பது போலாகும். ஆதார யோகத்தில் உயிரின் அறிவு பயன்படுகின்றது. கருவிகளை நீக்கிக் கரணங்களோடு நின்று செல்வது. ஆனால், அந்த உயிரைப் பற்றிய நினைப்பும் நீங்க வேண்டும். சிவத்தைப் பற்றிய எண்ணம் உயிருக்குள் நிரம்பி நிற்க வேண்டும். எங்கும் வியாபகமாய் உள்ள சிவத்தினுள் உயிர் அடங்கி நிற்க வேண்டும். உயிரை ஆதாரமாகக் கொள்ளாமல், அல்லது உயிரினுடைய நினைப்பை நிலைப்படுத்தும் தியானமூர்த்தத்தின் ஆதாரமில்லாமல், சிவமாகிய பரம்பொருளைக் கொண்டு, ஆதாரமாக வைத்து, அந்த அறிவினைத் தான் மறைத்துவிடுவது நிராதார யோகமாகும். கருவி, கரணங்கள் அனைத்தும் நீங்கித் திருவருட் குணத்தால் செய்வது. யாதொருவிதமான ஆதாரத்தையும் பற்றாமல் சிவாதாரமாய், சிவஞானத்தால் ஒன்றுபட்டு நிற்கும் முறை நிராதார யோகமாகும். **"நிற்கும் பொருளுடனே நிற்கும் பொருளுடனாய் நிற்கை நிராதாரமாம்"** என்பது திருக்களிற்றுப்படியார்.

சீவன் முக்தர்களான அவர்கள் வாழ்நாள் முழுவதும் இறைவன்தாள் பற்றி, சிந்தையை அவ்வாறே நிரப்பி, வீடு பேறு பெற்ற செல்வர்கள் என்று திருத்தொண்டர் திருவந்தாதி கூறுகின்றது. **"நாதாந்த தாரணையால் சிவத்தடைந்த சித்தத்தார்"** என்கிறார் சேக்கிழார் பெருமான். இவர்கள் அடைந்திருப்பது ஞான யோக நெறியாகும். அதாவது தங்களுடைய சிந்தையிலே சிவத்தை உணர்ந்து, கலந்து, தன்னை மறந்திருக்கும் நிலையாகும். இத்தகைய சிவ யோகமே மெய்ம்மை என்கிறது திருக்களிற்றுப்படியார். அவர்களே போற்றுதலுக்குரியவர்கள்.

**"காரணபங் கயமைந்தின் கடவுளர்த்தம் பதங்கடந்து**
**பூரணமெய்ப் பரஞ்சோதி பொலிந்திலங்கு நாதாந்தத்**
**தாரணையாற் சிவத்தடைந்த சித்தத்தார் தனிமன்றுள்**
**ஆரணகா ரணக்கூத்த ரடித்தொண்டின் வழியடைந்தார்".**

(பெரியபுராணம் - 4157)



# 17. "வென்ற ஐம்புலனால் மிக்கீர்"

பல பிறவிகளை எடுத்து, இன்பத் துன்பங்களை நுகர்ந்து, பல அனுபவங்களைப் பெற்று, வினைகளுக்கு ஏற்ப உயிர் படிப்படியாகப் பக்குவ நிலையை அடைந்து, காலப்போக்கில் மலங்களின் வலிமை குறைந்து, இறைவனை நாடி, தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ளத் தொடங்குகின்றது. **"எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்"** என்கிறார் மாணிக்கவாசகப் பெருமான். ஏதோவொரு காலக்கட்டத்தில் உயிரானது உலக அனுபவங்களை அறவே வெறுத்து, உள்ளத்தின் அனுபவங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறது. மாயத்திரை விலகுகிறது. அருள் வீழ்ச்சி தொடங்குகிறது. இதுவரை கருவி கரணங்களே எல்லாமும் என்றும், அவற்றைத் தவிர வேறொன்றும் இல்லை என்றும் கருதி வந்த உயிரானது இன்று அவற்றிற்கு அப்பால் இருக்கக்கூடிய அகக்காட்சியை உற்றுநோக்க ஆயத்தமாகிறது. இறைவனுடைய மறைப்புச் சக்தி அருட்சக்திக்கு இடம் கொடுக்கிறது. அருட் சக்தியானவள் உயிருக்குத் தெளிவினைப் பிறப்பித்து, தன்னை நாடி இன்பமடையும் பாதையின் முதற்படியில் ஏற்றி வைக்கிறாள்.

இதெல்லாம் என்ன அவ்வளவு எளிதாக நடந்து விடுகின்றதா? நம்மைப் பொறுத்தவரை மேலே கூறப்பட்ட உணர்வுகள் ஏதோ புராணக்கதையில் படிப்பது போல் தோன்றுகின்றதேயொழிய இயலாத நிலையில் நாம் எல்லோரும் இருக்கின்றோம். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் உயிரைத் தொன்றுதொட்டு கட்டுப்படுத்தி வருகின்ற மூலமலமாகிய ஆணவ மலம் என்று அருளாளர்கள் நமக்கு விளக்குகின்றார்கள். ஆணவ மலம் தான், தனது என்கிற உணர்வை உருவாக்கி உண்மையை மறைக்கச் செய்கின்றது. உயிரை இறைவனிடமிருந்து பிரித்து வைக்கின்றது. உயிருக்கு முன்னே ஒரு மாயத் திரையைப் போட்டு, உயிரை இறை அனுபவத்திலிருந்து நீக்கி விடுகின்றது. உயிரானது, உடல், உடலைச் சார்ந்த கருவிகள் ஆகியவற்றுடன் சேர்ந்து சகல நிலை பெற்றிருக்கும்போது ஆணவ மலம் உடலும், உடலைச் சார்ந்த கருவிகள் தவிர வேறில்லை என்கிற விபரீத உணர்வை ஏற்படுத்தி விடுகின்றது. பொறிகளும், புலன்களும் செல்லும் வழியே உண்மை, மற்றவையெல்லாம் பொய் என்கின்ற ஒரு தவறான கருத்தை ஆணவ மலம் உள்ளத்திலே பதித்து விடுகிறது. பொறிகளும் புலன்களும் ஏதோ தானே இயங்கும் ஆற்றல் பெற்றவை என்கிற ஒரு

மயக்கம் உயிரைச் சூழ்ந்து கொள்கிறது. உயிருக்கு இருப்பதோ சிற்றறிவு. தானே அறிந்து கொள்ளும் நிலையில் இல்லை. இறைவன் அறிவித்தால் தான் அறிந்து கொள்ளும் ஆற்றல் பெற்ற நிலையில் உள்ளது. மேலும், எல்லாவற்றையும் அறிந்து கொள்ளும் ஆற்றலும் கிடையாது. தான் சார்ந்த பொருட்களைப் பற்றி மட்டுமே தெரிந்து கொள்ளும் ஆற்றல் கொண்டது. இத்துடன் ஆணவ மலத்தால் அறியாமை என்கிற ஒரு இருள் உயிரைச் சூழ்ந்து, படர்ந்து கிடக்கின்றது. உயிரின் சிற்றறிவு ஆட்டிச் செல்வார் வழி நின்று ஆடுகிறது. ஐம்பொறிகளும், ஐம்புலன்களும் புறப்பொருள்களோடு ஒன்றிக்கொள்ளும்பொழுது அந்த அனுபவத்தால் உயிர்க்குக் கிடைக்கும் பொருள் ஞானம் பரம்பொருள் ஒன்று இருப்பதை மறைத்து விடுகின்றது. இந்த நிலையில் உலக இயக்கமே உண்மை. மற்றதெல்லாம் பொய் என்கிற தவறான கருத்து நமது மனதில் புகுந்து அந்த உலக இயக்கத்தை வலுப்படுத்தும் எல்லா முயற்சிகளையும் எடுக்கத் தோன்றுகிறது. நாம் பொறி, புலன்களை நடத்திச் செல்வதற்குப் பதிலாக அவை நம்மை நடத்திச் செல்வதே நம்முடைய வாழ்நாள் அனுபவமாகின்றது. இதை நாம் தவறாக எடுத்துக் கொள்வதில்லை. இவ்வாறு செய்வது தான் உலக நாகரிகம் என்றும், உலக வளர்ச்சி என்றும் தவறாகப் புரிந்து கொள்ளும் தன்மை நம்மை ஆட்டிப் படைக்கின்றது. புலன்களை வெல்லும் ஆற்றலைத் தானே பெறவில்லை என்கிறார் திருமூலர் பெருமான். **"வெல்ல கில்லேன் புலன் ஐந்துடன் தன்னையும்." 'என்னே இம்மாயையின் கீழ்மை'** என்பார் திருமூலர் பெருமான். குயிலொன்று தனது முட்டையைக் காக்கைக் கூட்டினில் இட்டது. காக்கைக்குத் தன் முட்டை என்றும், குயிலின் முட்டை என்றும் வேற்றுமை பார்க்கத் தெரியவில்லை. அதனுடைய அறியாமையே அதற்குக் காரணம். குயில் முட்டையையும் பேணிக் குஞ்சு பொரித்து குயிற் குஞ்சைக் காத்து வருகிறது. அறியாமையே இந்த மயக்கத்திற்குக் காரணம்.

**"குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைக் கூட்டிட்டால்**
**அயிர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின் றதுபோல்**
**இயக்கில்லை போக்கில்லை ஏனென்ப தில்லை**
**மயக்கத்தால் காக்கை வளர்க்கின்ற வாறே".**

**(திருமந்திரம் - 488)**

ஆழ்ந்து பார்த்தால் நமது கல்வி, கலை, நாகரிகம், வளர்ச்சி போன்றவையெல்லாம் உடலையும், உடல் அனுபவங்களையும் மையமாக வைத்தே உயிருக்கு விஷய அனுபவங்களை அள்ளித் தருகின்றன. இது தேவைதானா என்று நாம் ஒரு போதும் சிந்தித்துப் பார்ப்பது இல்லை. ஆணவ மலம் தனது வலிமையால் அது போன்ற சிந்தனை எழுவதற்கே இடமில்லாமல் செய்து விடுகின்றது. இவற்றைப் பற்றி நினைத்துப் பார்க்க வேண்டுமென்றால் அருள் உணர்வு பிறந்தால் தான் முடியும். தாயின் உடலில் கருவாகி, இந்தப் பூமியிலே பிறந்தது முதல் இந்த உடலை விடும் வரை எத்தகைய ஆபத்துக்களிலிருந்து தப்பிப் பிழைத்து வர வேண்டியிருக்கிறது

என்று மாணிக்கவாசகர் போன்ற அருளாளர்கள் தான் நமக்கு நயம்படத் தெரிவிக்க முடியும். **"கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும், செல்வம் என்னும் அல்லலில் பிழைத்தும், நல்குரவு என்னும் தொல்லிடம் பிழைத்தும், புல் வரம்பு ஆய பல்துறை பிழைத்தும்"** என்பார் மாணிக்கவாசகப் பெருமான். நம்மைப் போன்றவர்கள் பிறப்பையே ஒரு பேறு என்று கருதும் பொழுது மணிவாசகப் பெருமான் பிழைத்தலையே திருவருளின் பரிசு என்று கருதுகின்றார். ஆணவத்தால் கட்டுப்பட்ட உயிருக்கும், மலம் நீங்கிய உயிருக்கும் உள்ள வேற்றுமையை இங்கே நாம் தெள்ளத் தெளிவாகப் பார்க்கின்றோம். ஆணவத்தால் கட்டுண்ட உயிருக்கு அதன் வினைக்கேற்ப இறைவன் உடலையும், உடலைச் சார்ந்த கருவிகளையும் கொடுக்கின்றான். உயிருக்கு உடல் அனுபவமே பிரதானமாகத் தென்படுகிறது. ஆணவ மலம் தான் என்ற எழுச்சியைக் கொடுத்து விடுகிறது. மாயா சக்தி பிரபஞ்சத்தைத் தோற்றுவித்து, அந்தத் தோற்றத்தை உயிருக்குச் சுட்டிக் காட்டுகின்றது. இப்பிறவியில் அனுபவிக்க வேண்டிய வினைப்பயன்களும் சேர்ந்துகொள்கின்றன. உயிரின் குணாதிசயங்கள் நிர்ணயிக்கப்பட்டு விடுகின்றன. உடலின் ஆதிக்கம் கருவிகளின் இயக்கத்தை வலுப்படுத்துகிறது. புறப்பொருள்களும், இந்திரியங்களும், புலன்களும் ஒன்றையொன்று முந்திக்கொண்டு உயிரைத் தங்கள் பக்கம் இழுத்துக் கொள்கின்றன; விளைவு, பொருள்கள் மீது ஆசை வளருகின்றது. உள்ளத்திலே ஒரு பொருளின் மீது ஆசை பிறக்கும்பொழுது அந்தப் பொருளை எவ்வாறாயினும் அடைந்துவிட வேண்டும் என்கிற எண்ணம் தோன்றுகின்றது. எண்ணம் நிறைவேறாத பொழுது சினம் பிறக்கின்றது. மனிதனை ஆட்டிப் படைக்கின்றது. சினம் அறிவினை அழிக்கின்றது. மயக்கத்தைக் கொடுத்து உண்மையை மறைக்கின்றது. அதனால் உயிர்கள் உண்மை நிலையை அறியாது மருளில் ஆழ்ந்து துன்பப்பட்டு நிற்கின்றன. காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்று குற்றங்கள் உயிரை மருளில் ஆழ்த்தி மீண்டும் மீண்டும் பிறப்புக்குக் காரணமாகின்றன. ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டிய நியதிக்கு ஆட்படுகின்றன. மனத்திலிருந்து வெளிப்படும் ஆசைகள் நமது உடலில் இயக்கத்தைக் கட்டுப்படுத்துகின்றன. மனத்தில் ஆசைகள், வாக்கில் இன்னாத சொல், பொய், புறங்கூறல், உடலின் செயல் அழுக்கு ஆகியவை உயிருக்கு வினைக்கடலைச் சேர்த்து, இறப்பையும், பிறப்பையும் மாறித் மாறித் தருகின்றன. ஆகவே, பிறவிக் கடலைத் தாண்ட வேண்டுமானால் காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்று குற்றங்களிலிருந்தும் தன்னை விடுபடுத்திக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் துன்பம்தான்.

**"மூன்றுள குற்ற முழுது நலிவன**
**மான்றிருள் தூங்கி மயங்கிக் கிடந்தன**
**மூன்றினை நீங்கினர் நீக்கினர் நீங்காதார்**
**மூன்றினுட் பட்டு முடிகின்ற வாறே".**

ஆணவ மலத்தின் வலிமையைக் குறைத்திட இறைவன் நம்மை வினைப்பயன்களை அனுபவிக்க வைக்கின்றான். மாயாகாரியமாகிய பிரபஞ்சத்தைச் சேர்த்து வைக்கின்றான். ஆணவ இருளிலிருந்து தப்பி வருவதற்கு வினையும், மாயையும் ஓரளவு பயன்பட வேண்டுமென்று விரும்புகின்றான். உண்மைதான். ஆணவ இருளில் மூழ்கித் தன்னைத் தவிர வேறொன்றும் இல்லை என்று எண்ணியும், தனக்காகத்தான் உலகமும், மற்ற பொருள்களும் அமைந்திருக்கின்றன என்று நினைத்தும் நிற்கிற உயிருக்கு, வினைகளும் மாயா காரியமும் ஒரு சிறிய விளக்கினை ஏற்றியது போல இருக்கும். கலையும், கல்வியும், மனமும், உணர்ச்சிகளும் உயிர்க்கு ஒருவித அறிவைக் கொடுத்து, அந்த அறிவின் அடிப்படையில் பலவித சிந்தனைகளைத் தொடக்கி, அந்தச் சிந்தனைகள் சித்தத்தைத் தூண்டி, சித்தமும் நல்லது இது, கெட்டது இது என்று பாகுபடுத்தி, தன்னைத்தானே நன்கு தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற அவாவை உள்ளத்தில் வைப்பதற்கு உதவுகின்றன. அந்த அளவுக்கு கலைகளோடு கூடிய உயிர் ஆண்வ மலத்தின் தளையைத் தளர்த்திக்கொள்ள ஒரு வாய்ப்பினைப் பெறுகிறது.

இருந்தாலும், ஆணவ மலம் அவ்வளவு எளிதாக இறங்கி விடுவதில்லை. மேலும், கலைகளோடு கூடிய நிலையில் ஆசைகள் வளருகின்றன. உடலும், உடலைச் சார்ந்த கருவிகளும் ஆசைத்தீக்கு நெய்யிட்டு, அத்தீயை வளர்க்கின்றன. புலன்களை அடக்கிக்கொண்டால் ஆசைகளை அடக்கிவிடலாம் என்று நினைக்கலாம். இந்திரியங்களை அடக்கி வைப்பது அவ்வளவு எளிதன்று. தேவர்களுக்கும் ஆசை உண்டு. அவர்கள் தேவர்களாக இருக்கின்றார்கள் என்கிற காரணத்தால், அவர்கள் புலன்களை அடக்கி விடுவார்கள் என்று நினைப்பது சரியன்று. அத்தகைய தேவர்களைக் காண்பதும் அரிது என்று திருமூலர் கூறுகிறார். புலன் இயக்கத்தை முழுமையாக நிறுத்தி விட்டால், புலன்கள் உடலோடு சேர்ந்திருப்பதன் நோக்கம் நிறைவேறாது. அவற்றை இறைபணியில் ஈடுபடுத்த முடியாது. ஆகவே, புலன்களைக் கட்டுப்படுத்த ஒரு **"அஞ்சு அடக்கா அறிவு"** தேவை என்கிறார் திருமூலர் பெருமான்.

**"அஞ்சு மடக்கடக் கென்பர் அறிவிலார்**
**அஞ்சு மடக்கும் அமரரும் அங்கிலை**
**அஞ்சு மடக்கில் அசேதன மாமென்றிட்**
**டஞ்சு மடக்கா அறிவறிந் தேனே".** **(திருமந்திரம் - 2033)**

புலன்களை அழிக்க முடியாது. இல்லாமல் செய்ய முடியாது. ஆனால், அவற்றை அடக்க முடியும் அல்லது பக்குவப்படுத்த முடியும். **"என் புலன் ஐந்தும் வென்றானை"** என்கிறார் திருஞானசம்பந்தப் பெருமான். புலன்களை மாற்றி, அவற்றைப் பயன்படுத்திக்கொண்டே அடைய வேண்டிய நோக்கத்தை அடைய வேண்டும். அதற்காகத் தான் இறைவன் நமக்குப்

புலன்களைக் கொடுத்துள்ளான். உலக நலன்களைக் கொடுத்துள்ளான். அவற்றை அனுபவிக்க வேண்டிய வாய்ப்பையும் நமக்குக் கொடுத்தான். அவ்வாறு அனுபவிப்பதால் நமக்கு என்ன பயன் என்று அறிந்து கொள்ளும் அறிவையும் கொடுத்திருக்கின்றான். இந்த ஆராயும் அறிவைப் பயன்படுத்தாமல் புலன் வழியிலேயே போய்க்கொண்டிருப்பது வாழ்க்கையின் பயனை நமக்குச் சேர்க்காது.

உயிரானது உடலுடன் சம்பந்தப்பட்ட நிலையில் இந்திரியங்களால் தூண்டப்பட்டு உடலில் வேட்கைகள் தோன்றுகின்றன. அவை மனத்திலே பரவுகின்றன. அவற்றை நாம் தீர்த்துக் கொள்ள முயற்சிக்கின்றோம். சில ஆசைகளை நிறைவேற்றிக் கொள்கின்றோம். அப்பொழுது நமக்கு இன்பம் கிடைக்கின்றது. பல ஆசைகளை நம்மால் நிறைவேற்ற முடிவதில்லை. துன்பப்படுகின்றோம். துன்பங்களாகிய பேரலைகளும் நடுநடுவே சிற்றலைகளைப் போலத் தோன்றி மறையும் இன்பங்களும் உயிர்களை அங்குமிங்கும் தள்ளிச் செல்கின்றன. ஆழ்கடலில் துணை ஒன்றுமின்றி, பற்றுவதற்கு ஒன்றுமின்றித் தனியாக நின்று நாம் நம்மைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியுள்ளது. அப்பொழுதாவது ஆசைகள் நம்மை விடுமா என்றால் அதுவுமில்லை.

மாணிக்கவாசகர் போன்ற அருளாளர்கள்கூட இந்த உட்போராட்டத்தை அனுபவித்திருக்கின்றார்கள். அவர்களுடைய உள்ளங்களிலே பல சஞ்சலங்கள் தோன்றி இருக்கின்றன. மாணிக்கவாசகர் பெருமான் புலன்கள் தம்மைத் துன்புறுத்திய அனுபவத்தைப் பல பாடல்களில் பாடுகின்றார். புலன்களுடைய தாக்குதல் காரணமாக உடலும், உள்ளமும் அடைந்த கீழ்மை நிலையைப் பற்றி எடுத்துக்கூறி வருந்துகின்றார். புலன்களைப் பின்பற்றும் மனதின் போக்கைப் பற்றித் துயரப்படுகின்றார். அதனால் தனக்கு இறை அனுபவம் கிடைக்காமல் போய்விடுமோ என்றும் அச்சப்படுகிறார். புலன்கள் தன்னுடைய அறியாமையை வலுப்படுத்தின என்பதை ''வஞ்சனை செய்தன'' என்கிற சொற்கள் தெளிவுபடுத்துகின்றன.

**''மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை**
**மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய**
**விலங்கு மனத்தால் விமலா உனக்குக்**
**கலந்தஅன் பாகிக் கசிந்துள் உருகும்**
**நலந்தான் இலாத சிறியேன்''.** **(திருவாசகம்)**

திருவாசகப் பாடல்கள் பல காமத்தின் வலிமையை நன்கு எடுத்துக்காட்டுகின்றன. மாதர் மீதுள்ள மயக்கம் ஒரு சூறாவளிக் காற்றைப் போல் தாக்குகின்றது. மனம் தடுமாற்றம் அடைகின்றது. கொந்தளிக்கும் கடலிலே தத்தளிக்கின்றது. காமமாகிய சுறா மீன்கள் நம்மை நோக்கி வந்தடைகின்றன. நம்மைக் கவ்விச் செல்லப் பார்க்கின்றன. இவற்றால் நமக்குக் கிடைப்பதெல்லாம் துன்பமேயன்றி வேறில்லை. காமத்தின் வலிமை

முன் உயிரானது செயலிழந்து அழிய நிற்கிறது. இந்த அழிவிலிருந்து தப்பி வர வேண்டுமே, தன்னைக் காப்பாற்ற ஒருவரும் வர மாட்டாரா என்றெல்லாம் மாணிக்கவாசகப் பெருந்தகை வருந்தி நிற்கின்றார். ஐந்தெழுத்தைப் பற்றிக்கொண்டு தன்னைக் காப்பாற்றிக் கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை என்று உணருகிறார்.

**"தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்து எவ்வத்**
**தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றிக்**
**கனியையேர் துவர்வாயார் என்னும் காலால்**
**கலக்குண்டு காமவான் சுறாவின் வாய்ப்பட்டு**
**இனிஎன்னே உய்யுமாறு என்றென்று எண்ணி**
**அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை....."**

**(திருவாசகம்)**

ஆசைகளின் வலிமையைக் குறைக்க முடியுமா? முடியும் என்கிறார்கள் அருளாளர்கள். கருணை மிக்க இறைவன் அதற்காக நமக்கு வழியைக் காட்டுகின்றான். நமது மனம், வாக்கு, காயம் ஆகியவற்றை அவை போகும் போக்கில் உபயோகித்தால் வினைகள் மூளும். அதே மனமும், வாக்கும், காயமும் உலகத்தைப் பற்றாது இறைவனைப் பற்றி நின்றால் வினைகள் நம்மை வந்தடையா. மெய்யுணர்வாளர்கள் தங்களது மனம், வாக்கு, காயம் ஆகியவற்றை இறைவனிடம் செலுத்தி தங்களை வினைகள் பற்றாது பார்த்துக் கொள்வர்.

**"மனவாக்குக் காயத்தால் வல்வினை மூளும்**
**மனவாக்கு நேர்நிற்கில் வல்லினை மன்னா**
**மனவாக்குக் கெட்டவர் வாதனை தன்னால்**
**தனைமாற்றி யாற்றத் தகுஞானி தானே". (திருமந்திரம் - 2612)**

உலகத்தின் மீது பற்றை வளர்த்தால் உலகத்தைப் பற்றிச் சிந்தனையும் அவாவுமே அதிகமாகும. அதற்கு மாறாகப் பரம்பொருளைச், சிவபிரானை மனதில் வைத்தால் உலகப் பொருள்கள் மீது உள்ள நாட்டம் குறைந்துவிடும். இதை நாம் தீவிரமாகச் சிந்தித்துப் பார்த்தால் நமது சித்தம் தெளிவாகும். நம்மையெல்லாம் ஆளும் சிவபெருமான் தெளிவான சிந்தையில் புகுந்து சித்தத்தை தனதாக்கிக் கொள்வான்.

**"பெருக்கப் பிதற்றிலென் பேய்த்தேர் நினைந்தென்**
**விரித்த பொருட்கெல்லாம் வித்தாவ துள்ளம்**
**பெருக்கிற் பெருக்குஞ் சுருக்கிற் சுருக்கும்**
**அருத்தமும் அத்தனை ஆய்ந்துகொள் வார்க்கே"**

**(திருமந்திரம் - 2036)**

இறைவன் ஒருவனே நமக்கு உள்ள ஒரு பற்றுக்கோடு என்கிற சிந்தனையை வளர்க்க வேண்டும். மனம், வாக்கு, காயம் ஆகியவற்றை இறைவனோடு பொருத்தி இயக்குகின்ற வகையில் நம்முடைய தியானத்தைச் செலுத்த வேண்டும். பிற பொருள்கள் மீது உள்ள பற்றினை மெதுவாக ஒடுக்க வேண்டும். நம்முள்ளேயே இருக்கும் இறைவன் மீது நம்முடைய நாட்டத்தைச் செலுத்த வேண்டும். அப்பொழுது சிந்தை தெளிந்து இறைவனை நாம் மனக்கோவிலிலேயே நிறுத்தலாம்.

**''நடக்கின்ற நந்தியை நாடோறு முன்னில்**
**படர்க்கின்ற சிந்தையைப் பைய வொடுக்கிக்**
**குறிக்கொண்ட சிந்தை குறிவழி நோக்கில்**
**வடக்கொடு தெற்கு மனக்கோயி லாமே''**

**(திருமந்திரம்....2039)**

சிவபெருமான் உலகப் பற்றுக்களை விட்ட ஞானிகள் யாவரும் பற்றி நின்ற பரம்பொருள் ஆவான். ஞானிகளுக்கு அவன் மீது தான் எல்லா நாட்டமும் செல்லும்.

மெய்ஞ்ஞானத்தைப் பெற்றவர்கள் சிவபெருமானை விரும்பி நிற்பர். எல்லாக் கல்விகளின் முடிவுகளை உணர்ந்தவர்கள் சிவசோதியைத் தன்னுள் பெற்று நிற்பர். அந்த நிலையில் பேச்சற்று நிற்பர். ஆகவே, நாம் விரும்ப வேண்டியது இறைவனுடைய **திருவடிகள்**. அறுக்க வேண்டியது நமக்கு மயக்கத்தைத் தரும் ஐம்புல பாசங்கள். தொடர வேண்டியது மனக்கலக்கத்தைப் போக்கக் கூடிய சிவபரம்பொருள். அவ்வாறு செய்தால் நமது சிந்தை சிவத்துடன் கலந்துவிடும்.

**''மயக்கிய ஐம்புல பாசம் அறுத்துத்**
**துயக்கறுத் தானைத் தொடர்மின் தொடர்ந்தால்**
**தியக்கஞ்செய் யாதே சிவனெம் பெருமான்**
**உயப்போ எனமனம் ஒன்றுவித் தானே''. (திருமந்திரம்....2608)**

**பற்றற் றவர்பற்றி நின்ற பரம்பொருள்**
**கற்றற் றவர்கற்றுக் கருதிய கண்ணுதல்**
**கற்றற் றவர்சுற்றி நின்றஎன் சோதியைப்**
**பெற்றுற் றவர்கள் பிதற்றொழிந் தாரே''. (திருமந்திரம்...2865)**

புலன்களை வென்ற அடியார்களில் தலைசிறந்து நின்றார் திருநீலகண்ட நாயனார். குயவர் குலத்திலே பிறந்து, தமது குலத்தொழிலை விடாது செய்து வந்தாலும் அறவழியிலே வாழ்ந்து சிவனடியார்களுக்காகப் பணிவிடை செய்து, எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டு, தூய அன்பிலே அவர் நின்றார். பருவம் காரணமாக அவர் சிற்றின்பத் துறையிலே ஒரே ஒரு முறை தவறிவிட்டதன் காரணத்தினால் அடியார்தம் மனைவியார் ஆண்டவன் மீது

இட்ட ஆணையை ஏற்றுக்கொண்டு, வயதில் சிறியவராக இருந்தாலும், ஒழுக்கத்தில் பெரியவர் என்கின்ற நிலையில் மாதர் ஒருவரையும் மனத்தினும் தீண்டேன் என்று விரதம் பூண்டார். அந்த விரதப்படியே தன் வாழ்க்கையை அமைத்துக்கொண்டார். வெளி உலக மக்கள் அறிந்துகொள்ளாவண்ணம் ஒரே வீட்டிலேயே உடன் வாழ்ந்து நாயனாரும் அவரது மனைவியாரும் இல்லறம் நடத்திக் கொண்டு வந்தனர். இந்த நிலையைச் சேக்கிழார் பெருமான் உள்ளன்போடு விளக்குகின்றார்.

**''கற்புறு மனைவி யாரும்**
**கணவனார்க் கான எல்லாம்**
**பொற்புற மெய்யு றாமல்**
**பொருந்துவ போற்றிச் செய்ய**
**இற்புறம் பொழியாத் தங்கண்**
**இருவரும் வேறு வைகி**
**அற்புறு புணர்ச்சி இன்மை**
**அயலறி யாமை வாழ்ந்தார்.''** **(பெரிய புராணம்)**

இவ்வாறு பல ஆண்டுகள் கழிந்தன. இருவருக்கும் மூப்பு வந்தடைந்தது. அவர்களுடைய உடல் தளர்ந்தது. ஆயினும் அவர்களுடைய இறை அன்பு வளர்ந்தது. அவர்களுடைய பெருமையை இறைவன் உலகுக்கு உணர்த்த விரும்பினான். திருநீலகண்டரோ தமக்கும் தமது மனைவியாருக்கும் உள்ள உறவினை உலகிற்கு அறிவிக்க விரும்பவில்லை. எல்லாம் இறைவன் செயல். சிவபெருமான் சிவயோகியாக உலகிற்கு வந்து திருவிளையாடல் புரிகின்றார். என்ன நாடகம்! திருநீலகண்டரின் பெருமை வெளிவருகின்றது. நாயனாருக்கும் அவருடைய மனைவியாருக்கும் காட்சி தந்தருளி **''ஐம்புலனும் வென்று மிக்கீர்களே! இன்மையோடு என்றும் என்னுடன் இருப்பீர்களாக!''** என்று அருள் புரிகின்றார். நாயனாரும் அவர்தம் மனைவியாரும் ஐம்புலன்களை அடிமைப்படுத்தி, அவற்றை தம்வழி நிறுத்தி வாழ்க்கை நடத்திய காரணத்தால் அத்தகைய பெருமையைப் பெற்றனர்.

**''மன்றுளே திருக்கூத் தாடி யடியவர் மனைக டோறுஞ்**
**சென்றவர் நிலைமை காட்டுந் தேவர்க டேவர் தாமும்**
**'வென்றவைம் புலனான் மீக்கீர்! விருப்புட னிருக்க நம்பா**
**லென்றுமிவ் விளமை நீங்கா' தென்றெழுந் தருளினாரே''**
**(பெரிய புராணம்.....401)**

ஐம்புலன்களுடைய அதிகாரம் தம்மிடம் செல்லாது என்று உறுதிப்பாட்டோடும், நம்பிக்கையோடும் கூறுபவர் திருநாவுக்கரசர் ஆவார். புலன்களை அவர் தன் வழி கொண்டு வந்ததன் காரணத்தால் தைரியத்துடன் பேசுகின்றார். ''இறைவன் வானவர்களைத் தாங்கும் தூணாக இருக்கலாம்.

பாதாளத்தின் மூலமான பொருளாக இருக்கலாம். நான் நேரில் பார்த்ததில்லை. இப்பிரபஞ்சம் முழுமையும் அவனுடைய ஆட்சியில் இருப்பதை அறிந்துகொண்டேன். அவனுடைய அருளாணையைத் தெரிந்து கொண்ட பிறகு வேறொன்றையும் பற்ற மாட்டேன். அவனை அடைந்துகொண்ட நிலையில் உங்களுடைய அதிகாரத்திற்கு அடிமையாக மாட்டேன். என்னை நீங்கள் அலைக்க முடியாது. இனி நீங்கள் என் பக்கம் வராதீர்கள்.'' என்று உயிர்களிடம் சென்று, பொருந்தி தங்கள் வஞ்சகத் தொழிலை நடத்த முயலும் ஐந்து இந்திரியங்களை நோக்கிக் கூறுகின்றார் அப்பர் பெருமான்.

''மூள்வாய தொழிற்பஞ்சேந் திரிய வஞ்ச
முகரிகாள்! முழுதும்இவ் வுலகை ஓடி
நாள்வாயும் நும்முடைய மம்மர் ஆணை
நடாத்துகின்றீர்க்கு அமையாதே; யானேல், வானோர்
நீள்வான முகடதனைத் தாங்கி நின்ற
நெடுந்தூணைப் பாதாளக் கருவை ஆரூர்
ஆள்வானைக் கடுகச்சென்று அடைவேன்; நும்மால்
ஆட்டுணேன்; ஓட்டந்தீங்கு அலையேன் மின்னே''.

# 18. "மனவாலயம்"

இறைவன் திருவருளால் பிரபஞ்ச இயக்கம் நடைபெறுகிறது. உயிர்கள் உடலோடு சேர்ந்து, வாழ்க்கை அனுபவம் பெற்று வினைப்பயன்களை நுகர்கின்றன. பல பிறவிகள் எடுத்த பின்னர் உயிர்கள் தங்களைக் கட்டி நிற்கும் பாசத் தளைகளைத் தளர்த்திக் கொள்கின்றன. இவற்றிற்கெல்லாம் மூல காரணம் இறைவனது அருளே. இறைவன் உயிர்களுக்கு அப்பாற்பட்டு இருப்பதோடு, அவற்றை நடாத்தியும் செல்கின்றான். உயிருக்கு உயிராக நின்று அதற்கு இயங்கும் தன்மையினை வழங்குகின்றான். இறைவனுடைய அருளால் உயிருடைய அறிவாற்றல் செயல்படுகின்றது. இந்த உண்மை நிலையினைத் திருவருளால் கண்டு உணர்வதே அகப் பூசையாகும். இதைக் கண்டு உணர்தல் மனவாலயத்தில் நடைபெறுகின்றது. அந்த உணர்வினால் உள்ளொளி பெறுகின்ற அறிவானது தன் நிலையைப் புரிந்துகொள்கிறது. இறைவனுக்கும் தனக்கும் உள்ள தொடர்பினைத் தெரிந்து கொள்கின்றது. இறைவன் திருவடிகளிலே தன்னை அர்ப்பணித்துக்கொள்வதையே பெரிய பேறாகக் கருதுகின்றது. இறைஅருள் நிரம்பிய உள்ளம் அன்புமயமாகின்றது. அந்த அன்பு ஈசனுக்கு மட்டுமல்லாது, எல்லா உயிர்களையும் தொட்டுத் தன்னுள் அடக்கிக் கொள்கின்றது. இந்த ஒப்பற்ற நிலையே ஞான நிலையாகும். பக்குவமடைந்த உயிரானது இந்த நிலையிலே ஊன்றி நிற்பது ஞான பூசையாகும். திருவருளைத் தவிர வேறொன்றுமில்லை என்கிற அறிவு உள்ளத்திலே ஆழமாகப் பதிந்து, அதைப்பற்றிச் சிந்திக்கச் சிந்திக்க உள்ளத்திலே தேனினும், பாலினும், கரும்பினும் மிக்க இன்பம் நிரம்பி வழிந்தோடுகிறது. அரன் மீது அன்பு வைக்கும் பண்பு தானாகவே, இயல்பாக உள்ளத்தில் எழுந்து, உயிரினை அருளுடைய பொருளாக்குகின்றது.

உயிரானது உள்ளொளி பெற்றுத் திருவருளை உணர்ந்துகொண்டு, திருவருளோடு தன்னை இணைத்துக் கொள்வது ஞான வழிபாடாகும். இதனைத் திருஞானசம்பந்தப் பெருமான் "ஞான மாமலர்" என்பார். அவர் பாண்டி நாட்டில் உள்ள தலங்களுக்குச் சென்று வழிபட்டபோது திருக்கானப்பேர் என்கிற திருத்தலத்திற்கு வந்தார். இப்பொழுது இந்தத் தலம் காளையார்கோவில் எனப் பெயர் பெற்றுள்ளது. இந்த இடத்தைப் பற்றிய புராணச் செய்தி ஒன்று உண்டு. இந்திரனுடைய யானைஐராவதமாகும். ஒரு காலத்தில் ஐராவதம் சாபம் பெற்று, காட்டு யானையாகி இத்தலத்திற்கு வந்து,

சிவபூசை செய்து முன்னிலை பெற்றது. திருஞானசம்பந்தப் பெருமான் இந்தச் செய்தியைக் கேள்வியுற்றார். காட்டு யானை ஒரு பெண் யானையுடன் வந்து, இறைவனுக்குத் தலைவணங்கிய இடம் என்பதை அவருடைய கற்பனையில் வைத்தார். பெரிய யானை இடத்தைச் சுத்தம் செய்கின்றது, பெருக்குகின்றது. இரண்டு யானைகளும் இறைவனை மலர்களால் பூசிக்கும் ஒரு காட்சி அவருடைய மனத்திலே மேலும் சிந்தனையைப் பெருக்குகின்றது. யானையை ஆணவத்திற்கு அறிகுறியாகச் சொல்லுவது வழக்கும். மதம்மிக்க யானைகளை உடலிலே இயங்குகின்ற இந்திரியங்களுக்கு ஒப்பாகவும் சொல்லுவதுண்டு. **''ஆக மதத்தன ஐந்து களிறுள''** என்பார் திருமூலர். இந்த ஐந்து யானைகளை அடக்கி, ஞானத் திரியைத் தூண்டுவது உயிரின் நோக்கமாகும்.

**''ஆனைகள் ஐந்தும் அடக்கி அறிவென்னும்**
**ஞானத் திரியைக் கொளுவி''**

இந்திர லோகத்தில் ஆணவத்தால் செருக்குற்ற ஐராவதம், சாபக்கேட்டினால் திருக்கானப்பேருக்கு வந்து, இறைவனை அர்ச்சித்துத் தலைகுனிந்து நடந்து, தனது சாபத்தைப் போக்கிக் கொள்கிறது. திருக்கானப்பேருக்கு வந்து இறைவனைத் தொழும் ஒவ்வொரு மனிதனும், பிறப்பின் குறிக்கோளை அடையலாம், உடம்பிலுள்ள குறைகளை நீக்கிக் கொள்ளலாம், நோய்களைத் தீர்த்துக் கொள்ளலாம், உள்ளத் தூய்மையைப் பெறலாம். பாசத் தளைகளிலிருந்து விடுபடலாம். எப்போது? இறைவனை ஞான மாமலர் கொண்டு வழிபடும்பொழுது என்றார் திருஞானசம்பந்தர். மலர்களில் சிறந்தது ஞான மாமலர். புறப்பூசைக்கு இயற்கையிலே கிடைக்கும் பலவகையான பூக்கள் பயன்படும். அகப்பூசைக்குப் பயன்படுவது உள்ளொளி. **''உணரும் ஒளிவிளக்கு''**. அதுவே **''வீறாமலர்''**.

**''மானமா மடப்பிடி வன்கையால் அலகிடக்**
**கானமார் கடகரி வழிபடும் கானப்பேர்**
**ஊனமாம் உடம்பினில் உறுபிணி கெடஎண்ணின்**
**ஞானமா மலர்கொடு நணுகுதல் நன்மையே''**

**(திருஞானசம்பந்தர் தேவாரம்)**

ஞான மலர் அர்ச்சனைக்கு அன்பல்லவா அடிப்படை! அப்பர் பெருமான் வேகமாகப் பேசுகின்றார். புறத்தூய்மை மட்டும் போதாது. அகத்தூய்மையும் வேண்டும் என்பார்கள். பல திருத்தலங்களுக்குச் சென்று தீர்த்தங்களிலே நீராடி, புறத்தூய்மை பெறலாம். ஆனால், அவற்றால் மட்டும் அகத்தூய்மை கிடைக்காது. அகத்தூய்மைக்கு அன்பு மிகத் தேவை. இறைவனிடத்தில் அன்பு செலுத்தாவிடில், அகத்தூய்மை கிட்டாது. அன்பின்றிச்செய்யும் பணிகளெல்லாம், தண்ணீரை ஓட்டைக் குடத்தில் சேமித்து வைப்பது போலாகும் என்கிறார் திருமூலர். ஞானத்தினால் அன்பும், அன்பால் ஞானமும் உள்ளத்தில் தோன்றுகின்றன. அன்பும் ஞானமும் இரண்டல்ல, ஞானம்

பெற்றார் அன்புடையவராவர். அன்பெனும் பண்பை உடையவர்கள் ஞானம் பெற்றவர்களும் ஆவார்கள்.

**"கோடி தீர்த்தம் கலந்து குளித்து, அவை**
**ஆடினாலும், அரனுக்கு அன்பு இல்லையேல்,**
**ஓடும் நீரினை ஓட்டைக் குடத்துஅட்டி**
**மூடி வைத்திட்ட மூர்க்கனோடு ஒக்குமே"** **(அப்பர் தேவாரம்)**

தொன்மைமிக்க திருமைலாப்புரியில் வாழ்ந்தவர் வாயிலார் நாயனார். அகப்பூசை செய்து சிவனருள் பெற்றார். உயர்ந்த தபோதனர். சிவபெருமானுடைய திருத்தொண்டிலேயே பெருவிருப்பத்துடன் விளங்கினார்.

**"நாயனார் திருத்தொண்டில் நயப்புறு**
**மேய காதல் விருப்பின் விளங்குவார்"**
**(பெரியபுராணம் - வாயிலார் நாயனார் 7)**

அவரும் இறைவனுக்கு அர்ச்சனை செய்வார். அவருடைய மனமே கோயிலாக அமைந்தது. இறைவன் அவருடைய மனத்திலே நிலையாக நின்றான். வாயிலார் நாயனாருடைய உணர்வெல்லாம் சிவபெருமானைப் பற்றியதே. மனக்கோவிலில் ஒளிவீசும் சுடர் விளக்கு ஏற்றி வைக்கப்பட்டுள்ளது. சிவபெருமானை உணரும் ஞானமே அந்தச் சுடர் விளக்காகும்.

**"சிந்தையி னுள்ளே எந்தை திருவடி**
**சிந்தையும் எந்தை திருவடிக் கீழது**
... ... ... ...
... ... ... ..." **(திருமந்திரம் - 2428)**

இறை அன்பினால் நாயனாருடைய உள்ளம் பேரானந்த நிலையில் நின்றது. அந்தப் பேரானந்தமே வாயிலார் மனத்திலே வீற்றிருக்கும் சிவனுக்கு ஆட்டிய திருமஞ்சனம். வாயிலாருடைய பேரன்பே இறைவனுக்கு விரும்பிய திருவமுதாகவும் அமைந்தது.

இவ்வாறு வாயிலார் நாயனார் சிவபெருமானை மனக்கோவிலில் இடையறாது நாள்தோறும் வழிபாடு செய்தார். அவருடைய வழிபாட்டிற்கு அன்பே மையமாக விளங்கியது. அந்த அன்பினால் தூய்மையடைந்த உள்ளத்தில், ஞானமாகிய விளக்கு இறைவன் திருவருளால் பிரகாசித்தது. கிடைத்த சிவானுபவம் பேரானந்தத்தை அளித்தது. **"இறவாத இன்ப அன்பு"** பெற்றார் வாயிலார் நாயனார். இறைவனுக்கான தொண்டினை அவர் மனக்கோவிலிலேயே செய்தார். அகத்தே இறைவன் மீது மறவாத அன்பு கொண்டு பலவழிகளிலும் அர்ச்சனை புரிந்தார். பூசைக்குரிய

சாதனங்களெல்லாம் அவருடைய மனத்திலேயே கிடைத்தன. அவருடைய புலன்களும் பொறிகளும் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டன. வாயிலார் நாயனாருடைய வாழ்க்கை அகப்பூசையின் விளக்கமாகும்.

**''மறவாமை யானமைத்த மனக்கோயி லுள்ளிருத்தி**
**யுறவாதி தனையுணரு மொளிவிளக்குச் சுடரேற்றி**
**இறவாத வானந்த மெனுந்திருமஞ் சனமாட்டி**
**யறவாணர்க் கன்பென்னு மமுதமைத்தர்ச் சனைசெய்வார்.''**

**(பெரியபுராணம் - 8)**

**''அகமலர்ந்த வர்ச்சனையி லண்ணலார் தமைநாளு**
**நிகழவரு மன்பினா னிறைவழிபா டொழியாமே**
**திகழநெடு நாள்செய்து சிவபெருமா னடிநிழற்கீழ்ப்**
**புகலமைத்துத் தொழுதிருந்தார் புண்ணியமெய்த் தொண்டனார்''.**

**(பெரியபுராணம்- 9)**

சிவனடியார்களுக்கே உரித்தானது அன்பும் தொண்டும். இந்த அன்பும் தொண்டும் பற்றற்ற நிலையில், நெருப்பிலிட்ட தங்கத்தைப் போல், பிரகாசிக்கின்றன. உலகப் பொருட்கள் மீது பற்றுள்ளவரை இறைவன்பால் அன்பு செலுத்துவதும், இறைவனுக்குத் தொண்டு செய்வதும் மனத்திற்கு இயல்பாக அமையாது. ஒரு தெய்வத்தை வணங்குவது, அர்ச்சிப்பது, வழிபடுவது போன்றவை சடங்காகவே இருக்கும்; அல்லது பலனை எதிர்பார்த்தே நடக்கும். புலன், பொறிகளிடமிருந்து விடுபட்ட உள்ளம் இயல்பாகவே இறைவனிடம் அமைதி அடையும். ஊனினை நீக்கி உணர வேண்டும் என்பார் திருமூலர்.

**''கானுறு கோடி கடிகமழ் சந்தனம்**
**வானுற மாமல ரிட்டு வணங்கினும்**
**ஊனினை நீக்கி யுணர்பவர்க் கல்லது**
**தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே''.**

**(திருமந்திரம் - 1848)**

அடியார்கள் இறைவனோடு பின்னிப்பிணைந்து கிடப்பார்கள். அவன் அடியையே பற்றிக்கொண்டிருப்பார்கள். **''நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகனே''** என்றிருப்பார்கள். **''பாசம் பரஞ்சோதிக்கு என்பாய்''** என்று திருவெம்பாவையில் காண்கிறோம். காரைக்கால் அம்மையாரும் **''மனக்கு இனிய வைப்பாக வைத்தேன்''** என்றார். காரைக்கால் அம்மையார் தேவர்களைப் பார்க்கிறார், மனிதர்களைப் பார்க்கிறார். ஒன்றை எதிர்பார்த்து அவர்கள் இறைவனுக்குச் செய்யும் பூசையைக் காண்கிறார். அபிடேகமும் அர்ச்சனையும் ஆண்டவனுக்கு ஆடம்பரமாக நடக்கின்றன. இறைவன் அவற்றை ஏற்றுக்கொள்வானா?

ஏற்றுக்கொள்ள மாட்டான் என்று நினைக்கிறார் காரைக்கால் அம்மையார். ஆனால், அதை அவ்வாறு சொல்லவில்லை. ''இனி என்ன செய்வானோ?'' சந்தேகப்படுபவர் போல கவிதை எழுதுகிறார். வெறும் விளம்பரத்திற்காகச் செய்யும் பூசையை ஆண்டவன் ஏற்றுக்கொள்ள மாட்டான் என்று அவருக்கு நன்கு தெரியும். இறைவனுடைய திருவடிகளில் பொருந்தாத மனம் வெளித்தோற்றத்திற்காகச் செய்யும் பூசை இறைவனைச் சேராது. உள்ளத்தை இறைவனுடைய திருவடிகளில் பொருந்தி இடைவிடாமல் அவற்றையே நினைந்திருக்கும் மனமே இறைவனுடைய திருவருளைப் பெறும்.

**''நினைந்திருந்து வானவர்கள் நீள்மலரால் பாதம்**
**புனைந்தும் அடிபொருந்த மாட்டார்-நினைந்திருந்து**
**மின்செய்வார் செஞ்சடையாய், வேதியனே, என்கின்றேற்கு**
**என்செய்வான் கொல்லோ இனி?'' (அற்புதத் திருவந்தாதி)**

கருவூர்த் தேவர் ஓர் சிறந்த இறையுணர்வாளர். ஒரு சிறந்த சித்தரும் கூட. சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர். இறைவனிடம் தனது சிந்தையைப் பறிகொடுத்தவர். அந்த நிலையில் சிந்தையால் நினைப்பதற்குச் சிந்தையும் காணோமே என்கிறார். இறைவனுடைய திருவுருவத்தை மனத்திலே நினைத்துக் கொள்கின்றார். நான் நினைக்கிறேன் என்கிற உணர்ச்சியையும் இழக்கிறார். இறைவன்வயம் ஆகின்றார். இனிச்செய்வது என்ன இருக்கின்றது? திருமூலரைப் போல **''நான் அவன் ஆன பின் யாரை நினைவது?''** என்கிறார்.

**''அந்திபோல் உருவும் அந்தியிற் பிறைசேர்**
**அழகிய சடையும்வெண் ணீறும்**
**சிந்தையால் நினையிற் சிந்தையுங் காணேன்;**
**செய்வ (து) என்?'' (கருவூர்த் தேவர் திருவிசைப்பா)**

இறைவன் திருவருளில் மனத்தைப் பறிகொடுத்து இறை சிந்தனையில் தன்னையும், தனது மனத்தையும் மறந்துவிடுவது அடியார்களுடைய தன்மையாகும். அதே நேரத்தில் எல்லாவற்றையும் மறந்துவிட்டு, மனமாகிய கருவியைப் பயன்படுத்தி இறைசிந்தனையைத் தம்முள் நிறுத்தி ஒன்றிப்போவதும் அடியார்களுடைய குணமாகும். திருநாவுக்கரசர் பெருமான் சூலை நோயினால் வருந்துகின்றார். தமக்கையாரிடம் திருநீறு வாங்கி இட்டுக் கொண்டு சிவன் கோவிலில் நுழைகின்றார். அதற்கு முன் சமணராக இருந்த நாவுக்கரசர் பெருமான் சைவத்திற்கு மீண்டார். உடனே பாடும் திருப்பதிகத்தில் பல்லாண்டுகளாகச் சமணராக இருந்தபோதிலும் தான் சிவபெருமானை ஒரு விநாடிகூட மறக்கவில்லை என்று சொல்கின்றார். உள்ளத்திலே சிவபெருமானை ஒரு விநாடிகூட வணங்காமல் இருந்ததில்லை என்றும் அறிவிக்கின்றார். தனது பொறிகள், புலன்கள் சிவசிந்தனையிலேயே ஈடுபட்டிருந்தன என்பதையும் குறிப்பிடுகின்றார். வேறொரு சமயத்திலே அவர் இருந்தாலும், அவருடைய உள்ளம்

உண்மையையே நாடிய காரணத்தால் மனத்திலே சிவார்ச்சனை விடாமல் நடைபெற்று வந்தது.

**''சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்**
**தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்**
**நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்**
**உன்னாமம் என் நாவில் மறந்தறியேன்''.** **(அப்பர் தேவாரம்)**

பூசலார் நாயனார் சிவபெருமானுக்கு ஒரு கோயில் எடுக்க விரும்பி, பகலும் இரவும் அதையே நினைத்து, அந்த நினைப்பினாலேயே கோவில் எடுத்துத் திருவருளைப் பெறுகின்றார்.

பூசலார் நாயனார் திருநின்றவூரில் வாழ்ந்தார். பூசலார் நாயனார் சிவன்பால் அன்பு வைத்து, அதனை மேன்மேலும் வளர்த்து, சிவ பரம்பொருளைப் பெறுவதற்காக வேத நீதிக் கலைகளை உணருகின்ற பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். சிவபெருமானுக்குக் கோவில் அமைப்பதற்கான செல்வம் அவரிடம் இல்லை. எனினும், சிவனுக்கு ஒரு கோவிலைக் கட்டி முடிக்க எண்ணினார். மனத்தில் முதலில் நிதி திரட்ட வேண்டிய பணிகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். தேவையான நிதி கிடைக்கவில்லை. எனவே, நினைவினாலேயே கோவில் கட்ட முடிவு செய்து, அதற்குத் தேவையான நிதியை மனத்தினால் திரட்டிக் கொண்டார். பின்னர், கோவில் கட்டப்பல்வேறு சாதனங்களைத் தேடி மனத்தினால் சேகரித்துக்கொண்டார். தச்சர்களையும், மற்ற பணியாளர்களையும் திருப்பணிக்காகச் சேர்த்து அவர்களுக்குப் பல்வேறு பணிகளை நிறைவேற்ற மனத்திலே கட்டளையிட்டார் இறைவன் மீது உள்ள அன்பினாலே, ஆசை மிகுந்து, ஆகம விதிப்படி, மனத்தினாலேயே பணியாற்றி இரவும் பகலும் கோவில் எடுத்தார். பல சித்திர வேலைப்பாடுகளை மனத்தினாலே செய்து முடித்தார். சிவாகம விதிப்படி விமானமும் சிகரமும் இருக்க வேண்டிய அளவுகளை நிர்ணயித்து அவற்றிற்கேற்ப நினைவிலேயே கட்டி முடித்தார். பின்னர், தூபியை நாட்டி, தீர்த்தக் கிணறுகளைக் கட்டி, கோவிலைச் சுற்றி மதில்களைக் கட்டி, தடாகம் அமைத்து, பலவித சிற்ப அலங்காரங்களைச் செய்து கோவிலைக் கட்டி முடித்தார். இவையெல்லாமே பூசலார் நாயனாருடைய மனதிலே நடக்கின்றன. வேறொன்றையும் சிந்தியாமல் பூசலார் நாயனார் இவற்றையெல்லாம் மனத்திலேயே செய்தார் என்றால் இறைவன்பால் அவருக்கிருந்த ஆழ்ந்த அன்பு அவருடைய பணிக்கு உறுதுணையாக இருந்தது என்பது விளங்கும். நாயனாரும் கும்பாபிடேகம் செய்வதற்கான நாளையும் முடிவு செய்தார்.

இந்த நிலையில் அப்போதிருந்த பல்லவ அரசன், காஞ்சியிலே ஏராளமான செலவில் கற்கோவில் எடுத்து இறைவனைப் பிரதிட்டை செய்ய நாளும் குறித்தான். அதற்கு முதல் நாள் இரவில், இறைவன் அவனது கனவில் தோன்றித் திருநின்றவூரில் பூசலார் என்கிற அன்பன் நீண்ட நாட்களாக

நினைந்து நினைந்து ஒரு கோவிலைக் கட்டியமையால், அங்குத் தாம் புக வேண்டுமென்றும் பல்லவ அரசன் தனது கோவில் பிரதிட்டைக்கு வேறொரு நாளை நியமித்துக் கொள்ளலாம் என்றும் பணித்தான். இறைவன் தொண்டராகிய பூசலார் நாயனாருடைய **அன்புப் பணியை உலகம்** அறியும்பொருட்டே இவ்வாறு செய்தான் என்று சேக்கிழார் பெருமான் கருதுகின்றார். அத்தகையதொரு திருப்பணியைத் தானும் கண்டு மகிழ வேண்டும் என்கிற எண்ணத்துடன் அரசன் திருநின்றவூருக்கு வந்தடைந்தான். அங்கே பூசலார் நாயனார் கட்டிய கோவிலைப் பற்றி ஊர் மக்களைக் கேட்டான். அவர்கள் அவ்வாறு செய்யப்பட்ட கோவில் ஒன்றும் இல்லை என்றார்கள். அரசன் மறையோர்களை அழைத்து மீண்டும் கேட்க அவர்கள் பூசலார் ஓர் குற்றமற்ற வேதியர் என்று தெரிவித்தனர். அரசன் பூசலார் இருந்த இடத்திற்குச் சென்றான். அவர் எடுத்த கோயிலைப் பற்றிக் கேட்டான். பூசலாரும் மருண்டு அரசனைப் பார்த்துத்தனக்கு நிதி கிட்டாமையால் கற்கோவில் கட்ட இயலாத நிலையில், மனத்தினாலே முயன்று, நினைந்து நினைந்து சிந்தனையின் செயலாகத் தான் கட்டிய கோவிலைப் பற்றி விளக்கிக் கூறினார். இதைக் கேட்ட அரசன் மிக்க வியந்து **"என்னே! புரையறு சிந்தை அன்பர் பெருமை!"** என்று அவரைப் போற்றி, அவர் முன் விழுந்து வணங்கி, அவரை விட்டுப் பிரிந்தான்.

பூசலார் நாயனாரும் தாம் மனத்தினால் அமைத்த ஆலயத்தில் இறைவனை நல்ல வேளையில் தாபித்து, எல்லாவிதமான பூசனைகளையும் மனத்தினாலேயே பல நாட்கள் செய்து இறைவன் திருவடி சேர்ந்தார்.

**"அன்பரு மமைத்த சிந்தை யாலயத் தரனார் தம்மை**
**நன்பெரும் பொழுது சாரத் தாபித்து நலத்தி னோடும்**
**பின்புபூ சனைக ளெல்லாம் பெருமையிற் பலநாட் பேணிப்**
**பொன்புனை மன்று ளாடும் பொற்கழ னீழல் புக்கார்"**

**(பெரியபுராணம்-பூசலார் நாயனார் புராணம் - 17)**

இறைவன் எங்கும், எதிலும் நீக்கமற நிறைந்து நிற்பன். ஒவ்வொருவர் உள்ளத்தையும் தனது உறைவிடமாகக் கொள்பவன். எனவே, ஞானிகள் இறைவனை நெஞ்சினுள்ளேயே வணங்குவர்; வணங்கி இன்பத்தைப் பெறுவர்.

**"நினைப்போர் நெஞ்சமன்றாக**
**இன்பக்கூத் தாடவல்ல மணியே"**

என்பார் தாயுமானார்.

இறைவன் உயிர்கள் மீது அருளினை வாரி வழங்குகின்றான். உயிர்கள் விக்குகின்றன. அருளை விழுங்கித் தன்னை அருள் மயமாக்கிக் கொள்ள முயல்வதில்லை. அதற்கு அன்பின்மை தான் காரணம். இறைவனை வணங்கி, அருளினைப் பெற்றிட அன்பெனும் மலரே போதுமானது. அதுவே மனத்து

விளக்கினை ஏற்றி வைக்கும். ஆணவ மலத்தைப் போக்கும். தான் என்கிற நினைப்பினை அழிக்கும். அதுவே ஞானமாக மலர்ந்து, உள்ளத்திலே ஞான ஒளியைத் தூண்டி எங்கும் பரவி நிற்கும் பரம்பொருளை நமக்குக் காட்டும். பரம்பொருளோடு ஒன்றிப் போகும் பாதையினை நம்முடைய அகக்கண் முன் நிறுத்தும். ஆகவே, உயிர்கள் மீதும், இறைவன் மீதும் அயரா அன்பைச் செலுத்துவதே ஒப்பற்ற சிவார்ச்சனையாகும். **''அயரா அன்பின் அரன் கழல் செலுமே''.** மாணிக்கவாசகரும் **''அன்பினால் அடியேன் ஆவியோடு ஆக்கை ஆனந்தமாய்க் கசிந்துருக என் பரம் அல்லா இன்னருள் தந்தாய்''** என்பார். திருமூலரும்'' **அன்போடு உருகி அகங்குழைவார்க்கன்றி என் பொன் மணியினை எய்தவொண்ணாதே''** என்றார்.

உள்ளத்திலே அன்பெனும் மலரால் இறைவனைப்பூசை செய்தால் மட்டும் போதாது. அன்புருவம் ஆகிவிட வேண்டும். கண்ணப்ப நாயனார் காளத்தி இறைவனைக் கண்டவுனேயே அன்பு உருவமானார். தத்துவங்கள் எல்லாம் நீங்கப் பெற்றவராக சிவப்பேரொளியில் கலந்தார். புண்ணியமென்றும் பாவமென்றும் தெரியாது வேட்டுவர் தொழிலில் ஈடுபட்டிருந்த கண்ணப்பனார் சிவத்தோடு கலந்து ஒப்பற்ற அன்பரானார். அவர் உள்ளமும் உணர்வுகளும் அன்பில் திளைத்து அவருடைய உயிரே இறைவனுக்கு அர்ப்பணம் ஆயிற்று. இறைவனே சிவகோசாரியருக்கு விளக்குகின்றார்.

**''அவனுடைய வடிவெல்லா நம்பக்கல் அன்பென்றும்**
**அவனுடைய அறிவெல்லா நமை அறியும் அறிவென்றும்**
**அவனுடைய செலயலெல்லா நமக்கு இனியவா என்றும்**
**அவனுடைய நிலை இவ்வாறு அறி நீ'' என்று அருள் செய்வார்**
**(பெரியபுராணம் கண்ணப்ப நாயனார் புராணம்-157)**

இறைவனுடைய அன்பினை முழுமையாகச் சுவைத்தவர் மாணிக்கவாசகர். அவருடைய சித்தம் தெய்வத்தின் இருப்பிடம். அவரே கண்ணப்பனாரின் ஒப்பற்ற அன்பினை நினைந்து நினைந்து வியக்கின்றார். அன்புக்கு இலக்கணமாகிய கண்ணப்பருக்குப் பிறகு வேறொருவர் அத்தகைய அன்புக்கு உதாரணமாக முடியாதே என்று நினைத்து, தகுதியற்ற தனக்கும் இறைவன் புரிந்த கருணையை நினைந்து இன்புறுகிறார்.

**''கண்ணப்பன் ஒப்பது ஓர் அன்பு இன்மை கண்டபின்,**
**என் அப்பன், என் ஒப்புஇல் என்னையும் ஆட்கொண்டருளி''**
**(திருவாசகம்)**

மணிவாசகப் பெருமான், கண்ணப்ப நாயனார்போல் அன்பு தனக்கில்லை என்று சுட்டிக்காட்டுவது அன்பின் ஆழம் அறியவொண்ணாத நிலையை எடுத்துக்காட்டுகிறது.

ஆனால், அந்த அன்பு நிலையை அறிந்துகொள்ளும் ஆற்றல் கண்ணப்பர் ஒருவருக்குத் தான் உள்ளது என்று திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார் திருக்களிற்றுப்படியாரில் கூறுகிறார். இந்த அன்பிற்கு நிலைக்களமானவன் சிவபெருமானே. ஆகவே, அன்பின் இயல்பைச் சிவபெருமானும் அறியக்கூடும்; காளத்தியாரும் சிவபெருமானும் அன்றி வேறொருவராலும் இந்த அன்பின் ஆழத்தை அறிதல் இயலாது என்கிறது திருக்களிற்றுப்படியார்.

"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை என்றமையால்
கண்ணப்பன் ஒப்பதோர் அன்பதனைக்-கண்ணப்பர்
தாமறிதல் காளத்தி யாரறிதல் அல்லதுமற்
றாரறியும் அன்பன் றது".

இறைவன் பெருமை அளவற்றது. எனினும், அவனுடைய அன்பர்கள் அதனைத் தம்முள் உணர்வர்; உணர்ந்து தம்மையே அவனுடைய திருவடிகளில் பூசனை மலர்களாக வைப்பர். கிடைக்கும் பேரின்பத்தில் தம்மை மறப்பர். நினைவை இழப்பர். எந்த மனம் கொண்டு இறைவனைப்பூசிப்பரோ அதே மனத்தை அகண்டமாகிய பெருவெளியிலே வைத்து, பெரும் சுடராகிய பரமனிடம் தமது மனமாகிய சுடரையும் சேர்ப்பர். தானும் தனது மனமும் அழிந்த அறிவின்றி நிற்பர். அவர்களுடைய சாதனையைச் சொற்களால் விளக்க இயலாதே!

"தானும் அழிந்து தனமும் அழிந்துநீ
டேனும் அழிந்து உயிரும் அழிந்துடன்
வானும் அழிந்து மனமும் அழிந்தபின்
நானும் அழிந்தமை நானறி யேன்றே." (திருமந்திரம் - 2951)



# 19. ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்''

சைவ சம்யத்தின் மறுபெயர் திருத்தொண்டுநெறி எனலாம். கைம்மாறு கருதாது மக்களுக்குப் பணிசெய்து கிடப்பதே தொண்டுநெறியாகும். எறும்பு முதல் யானை ஈறாக எல்லா உயிர்கட்கும் உதவி செய்தலும் தொண்டாகும். ஒரு பயனைக் கருதிச் செய்யும் பணி தொண்டாகாது. தொண்டெனும் உணர்வு அன்பு நிறைந்த உள்ளத்தின் வெளிக்காட்டாகும். இறைவனின் திருவடிகளிலே தன்னை அர்ப்பணித்து, எல்லாம் அவன் செயல் என்கின்ற நினைப்பில் வேற்றுமை மறந்து உயிர்களையெல்லாம் ஒன்றாகக் கருதித் தன் அறிவையும் ஆற்றலையும் பிறருக்கு எந்த வகையிலும் பயன்படுத்தலே தொண்டாகும்.

திருநாவுக்கரசர் பெருமான் தொண்டுநெறிக்கு ஓர் இலக்கணமாக வாழ்ந்தார். **''தன்கடன் அடியேனையும் தாங்குதல்; என்கடன் பணிசெய்து கிடப்பதே''** என்கிற ஒலியை எழுப்பினவர் அப்பர்பெருமான் ஆவார். அடிகள் கையில் உழவாரப்படை ஏந்தித் திருக்கோயில்களிலும், திருவீதிகளிலும் துப்புரவுப் பணிகள் செய்தார். மக்கள் உய்வடைய பல அருள்வாக்குகள் வழங்கினார். பதிகங்கள் பாடினார். ஞானசம்பந்தப் பெருமானுக்குப் பல்லக்குத் தாங்கினார். பாம்பால் மாண்ட அப்பூதியடிகளின் சிறுவனை எழுப்பினார். திருவீழிமிழலையில் மழையின்றி வறுமையால் வாடிய மக்களுக்குச் சிவனருள் துணைகொண்டு உணவு அளித்தார். இப்பூவுலகில் எண்ணில் கோடி மக்கள் பெரும்பாலும் தன்னலத்திற்கே அரும்பாடுபட்டுத் தங்களது அறிவையும், ஆற்றலையும் வீணாக்குகின்றனர். பயனற்ற வாழ்வை நடத்தி வரும் மக்களிடையே இறை எண்ணத்தை வித்திட்டு, அந்த வித்தானது தன்னலமற்ற உள்ளமாக வளர்வதற்காக அருள்மழையை என்றும் பொழிந்து கொண்டிருக்கும் இறைவன் வழியைத்தொண்டுநெறி மூலமாகத் தெளிவாக எடுத்துக்காட்டித் தன்னையே தொண்டுமயமாக்கிக் கொண்டவர் அப்பர்பெருமான்.

தொண்டுநெறிக்கு அடிப்படை தன்னலமற்ற உள்ளமாகும். நான், எனது என்கிற நினைப்பு மாற வேண்டும். இந்த உடலை, அதனுடன் சேர்ந்துள்ள கருவிகளை, நான், எனது என்று கருதிக்கொண்டிருக்கும் வரை தன்னலமற்ற தன்மை நமது உள்ளத்திலே புகாது. இந்த அறியாமையைப் போக்க இறைவன் அருள் வேண்டும். நமது எண்ணங்களும் உணர்வுகளும் புறப்பொருள்கள் மீது உள்ள பற்றினை நீக்கி, நம்முள்ளேயே குடிகொண்டுள்ள பேரறிவுப் பிழம்பை நெருங்க முயல வேண்டும். நெருங்க நெருங்க அறியாமைத்திரை அகலும். இப்போது நாம் பெற்றிருக்கும் அறிவே இந்த அறியாமைத் திரையாக இயங்கி வருகின்றது என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மனித உள்ளம் இரண்டு நிலைகளில் இயங்குகின்றது. ஒன்று அறிவுநிலை. மற்றது உணர்வு நிலை. அறிவுநிலையில் நின்று ஒன்றை ஆராய நாம் முற்படும்போது அதன் தன்மையைப்பாகுபடுத்தி, பல பிரிவுகளாக்கி அவற்றுள் உட்புகுந்து அப்பொருளின் அடிப்படையில் உண்மையைப் பெற முயலுகின்றோம். அதேபொருளை உணர்வுநிலையிலிருந்து பார்க்கும் பொழுது அது இது என்று பாகுபடுத்திப்பேசாமல் அப்பொருளின் முழுமைத் தன்மையைக் காண விழைகின்றோம். அறிவு பாகுபடுத்தும். உணர்வு சேர்த்துத் தரும். அறிவு ஒரு பொருளின் பகுதித் தன்மையைக் காண்பது. உணர்வு அப்பொருளின் முழுமைத் தன்மையை அடைய முற்படுவது.

தமிழகத்தின் சான்றோர்கள், வாழ்வின் உண்மையில் இந்த முழுமையைக் கண்டார்கள். சீவராசிகளின் ஒருமைப்பாட்டை இந்த முழுமையின் விளக்கமாகக் கண்டார்கள். சங்கத்தமிழ் காலம் முதற்கொண்டே தமிழர்களின் வாழ்வும் நெறியும் இந்த முழுமையின் அடிப்படையில் அமைந்துள்ளது. **"யாதும் ஊரே; யாவரும் கேளிர்"** என்றார் சங்கத்தமிழ்ப் புலவர் கணியன் பூங்குன்றனார். எல்லா ஊரும் எமது ஊரே, எல்லா மனிதரும் எமது உறவே என்கிற எண்ணம் அன்பு நிறைந்த நெஞ்சத்திற்குத்தான் வரும். அறநெறியில் நிற்கும் நெஞ்சம் தான் இதன் உண்மையை உணரும். அப்போது நன்மை செய்தவர் நண்பர் தீமை செய்தவர் பகைவர் என்ற மனப்பாங்கிற்கு இடமில்லை. பூவுலகில் பிறந்த ஒவ்வொரு உயிரும் இறப்பது இயற்கையே. இன்பம் வந்திடினும், துன்பம் நேர்ந்தபொழுதும் ஆற்றொடு போகும் தெப்பம்போல ஊழ்வினை உயிரைச் செலுத்துவதால் நடுநிலைமை கொண்டு, விவேகத்துடனும், பக்குவத்துடனும் தம் பணிகளைத் தொடர்ந்து செய்து வரும் மக்களின் வாழ்க்கையே அமைதி பெற்று முழுமையுடன் விளங்கும். இதுவல்லவோ முறை! ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் சான்றோர் மேற்கொண்ட செந்நெறிக்குப் பெயரே மெய்யறிவு என்றும் அந்த மெய்யறிவினால் நாம் பெறும் நிலைமை நடுவு நிலைமை என்றும் தமிழர் உள்ளத்தில் ஊறிக்கிடந்த உயர்ந்ததோர் உண்மையை ஓர் சிறந்த பாடலின் மூலம் கணியன் பூங்குன்றனார் விளக்கும் அழகே அழகு.

**"யாதும் ஊரே; யாவரும் கேளிர்;**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா;**
**நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன;**
**சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்**
**இனிது என மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்,**
**இன்னாது என்றலும் இலமே; 'மின்னொடு**
**வானம் தண்துளி தலைஇ, ஆனாது**
**கல்பொருது இரங்கும் மல்லற் பேர்யாற்று**
**நீர்வழிப் படூஉம் புணைபோல், ஆருயிர்**
**முறைவழிப் படூஉம்' என்பது திறவோர்**

**காட்சியின் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்**
**பெரியோரை வியத்தலும் இலமே**
**சிறியோரை வியத்தல் அதனினும் இலமே.''**

(புறநானூறு - பாடல்: 192)

நடுவு நிலைமை அடைவது எளிதன்று. இறைவன் அருளாலேயே அது நடக்கும். **''நடுவு நின்றார் சிலர் ஞானிகளாவர்; நடுவு நின்றார் சிலர் தேவருமாவர்''** என்பார் திருமூலர். இறை அன்பின்றி நடுவு நிலைமை கைகூடல் கடினமாகும். இறை அன்பு உள்ளத்திலே நிரம்ப வழிந்து மற்றுமுள்ள எல்லாச் சீவராசிகளையும் தன்னுள் அழுத்திக் கொள்ளும்போது ஒருமைப்பாட்டு உணர்வு உள்ளத்திலே வியாபமாக நிற்கும். பிற்படும் துன்பம் நமது துன்பமே என்னும் நினைப்பு அத்தகைய உள்ளத்திற்கே தோன்றுகிறது. மனிதர்கள் என்ன, விலங்குகளும் பறவைகளும் இறையின்ப வெள்ளத்தில் மூழ்கிப்பிறர்பால் தம் அன்பினைச் செலுத்திய நிகழ்ச்சிகள் பலவற்றைத் திருவிளையாடல் புராணத்தில் காணலாமே! அத்தகைய அன்பிற்கு ஈடாக ஈசன் அருளும் கிட்டும் என்பதும் தெளிவாகிறது. நாரைக்கு முக்தி கொடுத்த வரலாற்றில் அன்பின் அடிப்படையில் அமைந்த பறவைகளின் ஒருமைப்பாட்டு உணர்வு வியக்கத்தக்கதல்லவோ!

**''தன்கிளை யன்றி வேற்றுப் பறவைகள் தாமும் தன்போல்**
**நன்கதி அடைய வேண்டிற் றேகொல் இந்நாரை செய்த**
**அன்பினில் வியப்போ? ஈசன் அருளினில் வியப்போ? அன்பர்க்கு**
**இன்புருவான ஈசன் அருள் அன்பர்க்கு எளிதே ஐய''**

விலங்குகளும் பறவைகளும் ஒன்றையொன்று நேசித்து உதவி செய்துகொள்வது கற்பனை அன்று. அன்றாட நிகழ்ச்சியாகவும் இதைப் பல இடங்களில் காணலாம். அவற்றை ஒன்றுசேர வைக்கும் உணர்வு நம்மால் புரிந்து கொள்ள முடியாமல் போகலாம். ஆனால், மனுநீதிச் சோழன் உள்ளத்திலே பிறந்த அந்த ஒப்பற்ற தியாக உணர்ச்சியை ஒருவரும் மறுக்க முடியாது. ஏதோ ஒரு சூழ்நிலையில் ஒரு கன்று தனது அரசு இளங்குமாரன் ஏறிச் சென்ற தேர்க்காலில் பட்டு இறந்ததால் ஏற்பட்ட தாங்கவொணாத துன்பத்தைத் தாய்ப்பசு திருவாரூரை ஆண்ட சோழ மன்னனிடம் தெரிவித்தபொழுது அந்தத்துன்பத்தைப் போக்க வெறுமனே அந்தணர்கள் விதித்த முறை வழியில் நிற்பது மட்டுமே போதாது என்கிற எண்ணம் மன்னனின் உள்ளத்திலே தோன்றியது. அவன் எல்லா உயிர்களையும் ஒன்றாகவே கருதினான் என்கிற உண்மை நன்கு விளங்கும். பசுவின் துன்பத்தைத் தான் நீக்க இயலாதவன் ஆயினும் அதைத் தானும் தாங்குவதே பொருத்தமாகும், அதுவே தருமம் என்று கூறி மன்னவன் தேர்க்காலில் தனது மகனைக் கிடத்தி அவன்மேல் தேரைச் செலுத்தினான்.

**"எனமொழிந்து மற்றதனுக்கு இனி இதுவே செயல் இவ்ஆன்**
**மனம்அழியும் துயர் அகற்ற மாட்டாதேன் வருந்தும்இது**
**தனதுறுபேர் இடர்யானும் தாங்குவதே தருமம்என**
**அனகன்அரும் பொருள் துணிந்தான் அமைச்சரும்**
**அஞ்சினர் அகன்றார்".**

**(பெரியபுராணம்)**

இவ்வாறு செய்து அறநெறிக்கு ஓர் புதிய விளக்கத்தை மனுநீதிச் சோழன் உலகத்திற்கு அளித்துள்ளான். பிற உயிர்கள் படும் துன்பத்தைப் போக்க முயலுதலும், அது இயலாதபொழுது அந்தத் துன்பத்தைத் தானே ஏற்று அனுபவித்தலும் அறநெறியின் உயர்ந்த படியாகும். பசுங்கன்றாயினும், வேறு எந்த விலங்காயினும் அது இறைவன் உறையும் இம் என்கிற மனப்பான்மை, தனக்கும் மற்ற உயிர்களுக்கு மிடையே அடிப்படையான வேற்றுமை ஒன்றுமில்லை என்கிற உணர்வு, அசையும் பொருட்கள், அசையாப் பொருட்கள் எல்லாம் இறைவனுடைய பேரறிவும் பேராற்றலும் இயங்கும் மாபெரும் மேடை என்கிற கொள்கையில் தீவிர நம்பிக்கை ஆகியவை மெய்யுணர்வு பெற்ற வர்களுடைய அனுபவச் சின்னங்களாகும்.

**"உறை சேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனி பேதம்**
**நிறை சேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே**
**நின்றான்"**

என்று ஞானசம்பந்தப் பெருமான் அருளுகின்றார்.

இந்தக் காட்சி அனுபவத்தை நேரில் பெற்றுப்பேரானந்த வெள்ளத்தில் திளைத்து நின்றவர் திருநாவுக்கரசு நாயனாராவார். கைலை மலையில் இறைவனுடைய திருக்கோலத்தைக் காண ஆவலுடையவராகச் சென்ற அப்பர் பெருமான் இறைவனுடைய அருள் ஆணையின்படி பொய்கையுள் மூழ்கித்திருவையாற்றில் ஒரு வாவியின்மேல் வந்து எழுந்த னர்.கரையேறித்திருக்கோவிலை அடையுமுன்னர் நாயனார் **"காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன"** கண்டார். சரம், அசரம் ஆகிய எல்லாப் பொருட்களும் ஆண், பெண் என்கிற பகுப்பில் கண்டு அவற்றில் "சத்தியும் சிவமும் சரிதை" கண்டு, அப்பர்பெருமான் இறைவனுடைய திருப்பாதம் காண்கின்றார், கண்டு அறியாதன காண்கின்றார்

**"மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்**
**போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்**
**யாதுஞ் சுவடுப டாம லையா றடைகின்ற போது**
**காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்;**
**கண்டே னவர்திருப் பாதங்; கண்டறி யாதன கண்டேன்".**

நாவுக்கரசர் பெருமான் அகில சராசரமும் சிவமும் சத்தியுமாக நிற்கக் கண்டார். முதலில் கண்ட வேற்றுமைகள் மறைகின்றன. காண்பிப்பானும் காணப்படும் பொருளும் இணைந்து நிற்கும் நிலை காண்பான் தனித்து நின்று பார்க்கும் நிலையாகும். பரம்பொருளின் திருப்பாதங்களின் காட்சி பெறும்பொழுது அந்தக் காட்சியின் ஐக்கிய நிலை மேலான சிவதரிசன அனுபவத்தைக் காண்பானுக்கு அளிக்கும்பொழுது உள்ளம் முழுமை பெறுகிறது. **''கண்ட ஆனந்தக் கடலினைக் கண்களால் முகந்துகொண்டு''** என்று அப்பர்பெருமானுடைய நிலையைச் சேக்கிழார் விளக்குவார்.

உள்ளத்தில் இறை உணர்வு நிரம்பி நிற்கும்பொழுது, சித்தம் சிவமாகி இருக்கும்பொழுது, ''தெய்வம் என்பதோர் சித்தமுண்டாகி'' உயிரானது சிவமாம் தன்மை பெறும்பொழுது வேற்றுமைக்கு இடமில்லை. இவ்வுலகத்தின் இயக்கம் பரம்பொருளின் அருட்சக்தியால் நடைபெறு கின்றது. அந்தச் சக்தியை அனுபவித்து அருள் கடலில் மூழ்கி, அருளானந்தத்தை அனுபவித்து வரும் எல்லா உயிரினங்களும், உயிரற்றவையும் ஒரே குலத்தைச் சேர்ந்தவை, அங்குப் பல குலங்களுக்கு, பிரிவுகளுக்கு இடம் கிடையாது. நமது முதிர்ச்சிக்கேற்ப இறைவனைப் பல வழிகளில் வழிபாடு செய்கின்றோம். பல உருவங்களில் பரம்பொருளைக் காண விழைகின்றோம். நூறாயிரம் உருவங்கள் படைத்து நாமங்கள் சாற்றி அவனை நாம் போற்றிச் செய்தாலும் இறைவன் ஒருவனே, அவனைச் சார்ந்த உயிர்க் கூட்டங்கள் ஒன்றே. அவனுடைய அருள் சாதி, குலம் என்று எண்ணாது மக்களுடைய வினைக்கேற்ப அவைகளை அழைத்துச் செல்லும்.

**''பலவுருவுந் தன்னுருவே யாய பெருமான்'**
**''தாயுந்தந்தை பல்லுயிர்க்குந் தாமே யாய தலைவன்'**
**''எல்லார்க்கும் இல்லை என்னாது அருள் செய்வார்'**

என்பது சுந்தரமூர்த்தி நாயனார் திருவாக்கு.

காணும் இடமெல்லாம் சிவபெருமானைப் பார்க்கின்றார் திருமூலர். யாரைப் பார்க்கினும், எதனைப் பார்க்கினும் பரம்பொருளாகிய சிவபெருமான் வியாபித்துள்ளதைத் திருமூலர் காண்கின்றார். அவனுடன் சேர்ந்து சிவசக்தியும் தன் இயக்கத்தை அகண்டமாய் நடத்தி வருவதைக் காண்கிறார். இறைவனுடைய திருக்கூத்து அகில சராசரங்களிலும் அணுவுக்கு அணுவாக உயிருக்குயிராக நடைபெறுவது அவருடைய மெய்யுணர்வின் தலையாய அனுபவமாக நிற்கின்றது. சிவனும் சக்தியும் எங்கெங்கும் தங்கித் தங்களுடைய விளையாட்டை நடத்தி வருகின்றனர். பிரபஞ்ச இயக்கத்திற்கு அவர்களுடைய விளையாடல் காரணமாக இருக்கின்றது. **''ஒருவன் ஒருத்தி விளையாடல் உற்றார்; இருவர் விளையாட்டும் எல்லாம் விளைக்கும்''** (திருமந்திரம்...396) பரம்பொருள் யாவற்றிலும் பொருந்தி ஐம்பெரும் தொழில்களைத் தனது சக்தியாலே செய்து உயிர்களுக்கு அருள் பாலிக்கின்றான்.

**"எங்குந் திருமேனி எங்குஞ் சிவசத்தி**
**எங்குஞ் சிதம்பரம் எங்குந் திருநட்டம்**
**எங்குஞ் சிவமா யிருத்தலால் எங்கெங்குந்**
**தங்குஞ் சிவனருட் டன்விளை யாட்டதே".**

**(திருமந்திரம் - 2722)**

இறைநிலை எங்கும் ஊடுருவி நிற்கின்றது. மக்கள் அவரவர்களுடைய உணர்வுக்கேற்ப வெவ்வேறு உருவங்களில் இறைவனை வழிபட்டாலும் இறைவன் அவர்களுக்கு அந்தந்த உருவங்களில் நின்று அருள்பாலித்தாலும் இறை என்பது ஒன்றே. அந்த நிலையை மெய்யுணர்வு பெற்றவர்கள் முழுதும் அறிந்து கொள்வார்கள். அவர்களுடைய திருவாக்கு உண்மையின் முழுமையை நமக்குத் தெள்ளத் தெளிவாக்குகின்றது.

காரைக்கால் அம்மையார் இந்த உண்மையை,
**"எக்கோலத் (து) எவ்வுருவாய் எத்தவங்கள்**
**அக்கோலத்து அவ்வுருவே ஆம்"**

**(அற்புதத்திருவந்தாதி)**

என்று விளக்குகின்றார்.

இந்த ஒருமைப்பாட்டு அனுபவத்தை உள்ளத்திலே கொண்ட வள்ளலார்.

**"பொங்கும் சமயமெனும் நதிகளெலாம்**
**புகுந்து கலந்திட, நிறைவாய்ப்**
**பொங்கி ஓங்கும் கங்குகரை காணாத கடலே"**

என்று இறைவனைப் புகழ்கின்றார்.

சிவனடியார்கள் சிவானுபவத்தை எங்கும் பெறுகிறார்கள், எதிலும் பெறுகிறார்கள். காவிரி பாயும் நாட்டின் பெருமையை அருமையாகப் பாடி வரும் சேக்கிழார் அடிகள் வளம் மிக்க நெல் வயல்களைக் காண்கின்றார். மணி நிறைந்த முதிர்ந்த கதிர்கள் வரிசை வரிசையாக, நெருக்கமாக நின்று வளைந்துகொடுக்கும் காட்சி சேக்கிழார் பெருமானுடைய பார்வைக்கு, அன்பின் வசப்பட்டு இறைவனுக்கு ஆட்செய்யும் அன்பர்கள் கூடி நின்று ஒருவருக்கொருவர் தலைவணங்கி இருப்பதைப் போல் தோன்றுகின்றது. மெய்ஞ்ஞானம் நிரம்பிய அன்பர்கள் அடக்கமே உடைமையாகக் கொள்வர். அப்பொழுது அவர்கள் தலைவணங்கியே நிற்பர். நெற்கதிர்கள் நின்ற காட்சி, சேக்கிழார் அடிகளுக்கு இறை அன்பர்கள் இறைவனுக்கு வணங்கி நின்று அன்பு செய்வதை நினைவூட்டுகின்றது. அடிகளுடைய உள்ளமெல்லாம் சிவமயமாக இருப்பதே இதற்குக் காரணம்.

தில்லைத் திருக்கோவில். அதற்கு வெளிப்பக்கத்தே மலைபோல் உயர்ந்த மதில்கள். அவற்றைச் சுற்றி ஆழ்ந்த அகழி. அகழியிலே தாமரை மலர்ந்துநின்ற ஒரு காட்சி தாமரை மலர்களில் தேன் உண்ணும் வண்டுகள் மகரந்தத் தூள்களின் படுக்கையில் புரண்டு விளையாடும்பொழுது அந்த மகரந்தத் தூள் வண்டுகளுடைய உடல்களை வெண்மையாக்குகின்றது. இதை நாம் காணும்பொழுது ஓர் இயற்கைக் காட்சி என்று மட்டும் நினைத்து விட்டுவிடுவோம் அல்லது கவனிக்கவும் மாட்டோம். ஆனால் தில்லை நகரை அடைந்து இந்தக் காட்சியைக் கண்ணுற்ற சுந்தரமூர்த்தி நாயனாருக்கு வேறுவிதமான எண்ணம் தோன்றுகிறது. மகரந்தத் தூளிலே படிந்து, உடல் முழுவதும் வெண்மை நிறத்தோடு தேன்வண்டுகள் இருந்த தோற்றம் புனிதமான திருநீறு பூசிய சிவனடியார்களைப் போன்ற தோற்றமாக ஆளுடை நம்பிகள் மனத்திலே நிறைந்த அன்பினைத் தருகின்றது. இதைக் கவிதை வடிவாக்கும் சேக்கிழார் பெருமானுடைய உயர்ந்த உள்ளத்தைப் பற்றியும் நம்மால் சொல்ல இயலுமா?

**''மன்று ளாடுமது வின்னசை யாலே**
**மறைச்சு ரும்பறை புறத்தின் மருங்கே**
**குன்று போலுமணி மாமதில் சூழுங்**
**குண்ட கழ்க்கமல வண்டலர் கைதைத்**
**துன்று நீறுபுனை மேனிய வாகித்**
**தூய நீறுபுனை தொண்டர்க ளென்னச்**
**சென்று சென்றுமுரல் கின்றன கண்டு**
**சிந்தை யன்பொடு திளைத்தெதிர் சென்றார்''**

(பெரியபுராணம் .....242)

**''எவ்வுருவில் யாரொருவர் உள்குவார் உள்ளத்துள்**
**அவ்வுருவாய்த் தோன்றி அருள்கொடுப்பான்' -- எவ்வுருவும்**
**தானேயாய் நின்றளிப்பான் தன்னில் பிறிதுருவம்**
**ஏனோர்க்கும் காண்பரிய எம்பெருமான்''**

என்று சேரமான் பெருமான் திருக்கைலாய ஞானஉலாவில் பாடுகின்றார்.

சேரமான்பெருமான் அரச மரபில் உதித்தவர். ஆயினும் அரசாளும் உரிமை நேரில் பெற்றவர் அல்லர். ஆட்சி செய்து வந்த மன்னன் துறவு மேற்கொண்ட காரணத்தால் அமைச்சர்கள் இவரை அரசு பொறுப்பு ஏற்கச் சொன்னார்கள். திருத்தொண்டுக்கு ஆட்சிப்பொறுப்பு இடையூறாகும் என்று பெருமான் கலங்கினார். இறைவனுடைய திருவருட்குறிப்பை நாடினார். இறைவன் அவரைப் பதவி ஏற்கச் சொன்னது மட்டுமன்று வேறொரு சிறந்த சக்தியையும் அவருக்கு அளித்தான். பல உயிர்கள் தமக்குள் செய்து கொள்கின்ற உரையாடலை உணர்ந்து கொள்ளும் ஆற்றலையும் இறைவன் அவருக்கு அளித்தான். இதையெல்லாம் சேரமான் பெருமான் பெரிதாக

நினைக்கவில்லை. அரச பதவியேற்றுப்பட்டத்து யானையில் ஒருநாள் அவர் வந்து கொண்டிருக்கும்போது எதிரே வந்து கொண்டிருந்த வண்ணான் ஒருவனைக் காண்கின்றார். அவனுடைய உடலெல்லாம் உவர்மண் கரைந்து படிந்து வெண்மையாக இருந்தது. யானையிலிருந்து இறங்கிச் சேரமான் பெருமான் வண்ணானை வணங்குகின்றார். பதட்டப்பட்ட வண்ணான், சிந்தை கலங்கி, அரசனை வணங்கி **"யார் என்று அடியேனைக் கொண்டது? அடியேன் அடிவண்ணான்"** என்கிறான். அதற்குச் சேரமான் பெருமான் அளித்த பதில் உள்ளத்தை உருக்கும்.

**"அடிச் சேரன் அடியேன்! என்றும் திருநீற்றின்**
**வாரவேடம் நினைப்பித்தீர் வருந்தாது ஏகும்"**

சேரமான் பெருமான் தன்னை வண்ணானிடமிருந்து பிரித்துப் பேசவில்லை. அவருடைய பண்புள்ளம் வண்ணானின் தோற்றத்தில் இறையடியாரின் நெஞ்சத்தைக் காண்கின்றது.

இத்தகைய மன்னர்களை மீண்டும் காண்போமா?

சமய, சாதி, குல பிரிவுகளை மெய்யுணர்வாளர்கள் ஏற்கவில்லை. ஒரு சமயம் நன்று மற்றது தீது என்கிற வாதத்தை ''மாய மனிதர் மயக்க மதுமொழி'' என்பார் திருமூலர். அறிவு வளர வளர உணர்வு குறைகின்றது. சமயங்களின் அடிப்படையில் பேசுபவர்கள் இறைவனை உள்ளவாறு உணர்ந்தவர் அல்லர். இறைவன் சமயங்களுக்கு அப்பாற்பட்டவன். ஆகவே அறுசமயங்களால் முடிவான பொருள் என்று கூறப்படும் தன்மை இல்லாதவன். இதைப்பற்றி நாம் ஆராயும்பொழுது கிடைக்கும் தெளிவு நமக்கு நிலையான வீட்டின்பத்தை அளிக்கும்.

**"ஆறு சமயமுங் கண்டவர் கண்டிலர்**
**ஆறு சமயப் பொருளும் அவனலன்**
**தேறுமின் தேறித் தெளிமின் தெளிந்தபின்**
**மாறுதல் இன்றி மனைபுக லாமே"**

**(திருமந்திரம் - 1533)**

சமயங்களின் நோக்கம் முடிவான பரம்பொருளை அடையும் வழியைத் தொட்டுக் காட்டுவதுதான். அதற்கு மாறாக சமயவாதிகள் தத்தம் சமயங்களே சிறந்தது என்றும் மற்றவை தாழ்ந்தது என்றும் கூறுவார்களேயானால் அவர்கள் குன்றைப் பார்த்துக் குரைக்கும் நாயைப்போல் இருப்பர் என்பது திருமந்திர உண்மை.

**''ஒன்றது பேரூர் வழியா றதற்குள**
**என்றது போல இருமுச் சமயமும்**
**நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்**
**குன்று குரைத்தெழு நாயையொத் தார்களே''.**

**(திருமந்திரம் - 1558)**

சாதி, குலம், பிறப்பு ஆகிய பிரிவினைகள் மனிதனால் ஏற்படுத்தப் பட்டவை. அந்தப் பேதங்களில் சிக்குண்டு தடுமாறி அழிந்துபோவதை விட சிவபரம்பொருளின் முன்னிலையில் சுடர்விடும் சோதியைக் கண்டுகொண்டு, நாம் காண்பவையெல்லாம் இறைவனுடைய செல்வங்கள் என்று உணர்ந்து, நான், எனது என்கிற சொற்களை நமது அகராதியிலிருந்து நீக்கிவிட்டால் இறைவனாகிய பேரழகினைக் காணலாம் என்று வழியைக் காண்பிக்கின்றார் மாணிக்கவாசகப் பெருமான்.

**''சாதி, குலம், பிறப்பு என்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்**
**ஆதமிலி நாயேனை, அல்லல் அறுத்து, ஆட்கொண்டு**
**பேதை குணம், பிறர் உருவம், யான் எனது என் உரை மாய்த்துக்**
**கோது இல் அமுது ஆனானைக் குலாவு தில்லை கண்டேனே''.**

ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்பது உயர்ந்ததோர் உணர்வு நிலை. ஓர் அருள் அனுபவமும் ஆகும். சீவராசிகள் பல வடிவங்களில் தோன்றி மறைகின்றன. நாடக மேடையில் நடிகன் ஒருவன் பல வேடங்களைத் தாங்கி நடிப்பது போல் சீவராசிகள் பிறவிதோறும் பல உடல்களையும், அனுபவங்களையும் தாங்கி நிற்கின்றன. ஆனால், அவற்றிற்கு அடிப்படை எங்கும் பரவி ஒளி வீசும் பரம்பொருளேயாகும். **''எல்லாம் உடைய ஈசனே இறைவன்''** என்பார் சேக்கிழார்பெருமான். இந்த உண்மையை உணர்ந்த சாக்கிய நாயனார் தொடக்கத்தில் பௌத்த மதத்தைச் சார்ந்தவராயினும் அந்த வேடத்தை நீக்காமலேயே சிவ பரம்பொருளைத் தன் உள்ளத்தில் வைத்துச் சங்கரனுடைய திருவடியை மறவாதிருத்தலே உண்மையாகிய உறுதிப்பொருள் என்று துணிந்தவராய் இருந்தார். இதனைச் சேக்கிழார் பெருமான்

**''எந்நிலையி னின்றாலு மெக்கோலங் கொ ண்டாலும்**
**மன்னியசீர்ச் சங்கரன்றாள் மறவாமை பொரு''ளென்றே**
**துன்னியவே டந்தன்னைத் துறவாதே தூயசிவந்**
**தன்னைமிகு மன்பினான் மறவாமை தலைநிற்பார்**

**(பெரியபுராணம்)**

இறை இன்பத்தில் திளைத்து நிற்கும் உயிர் பிரபஞ்சத்தில் முழுமையைக் காண்கின்றது. ஒளிமயமான உணர்வுநிலையில் பேதங்கள் மறைகின்றன. புல், செடி, கொடிகளிலிருந்து தேவர் வரை இறைவனின் அருளுக்கு எடுத்துக்காட்டாகவே தோன்றுகின்றன. இந்த நிலையில் நான், எனது என்கின்ற நினைப்பு நீங்கி நம்மை பிறப்பு, இறப்புச் சூழலில் அழுத்தும். வினைப்பயன்களின் தன்மை ஆற்றல் அற்றதாக மாறுகிறது. நாம் காலனுக்கு அச்சப்படவேண்டியதில்லை. ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்கிற உணர்வு தானாகவே நம்முள் புகுந்துகொள்கின்றது. இதையே நினைந்து உய்வடையுங்கள்.

**"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்**
**நன்றே நினைமின் நமனில்லை நாணாமே**
**சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து**
**நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே"**

**(திருமந்திரம் - 2104)**

# 20. ''காணாத கண்கள்''

நமது உடலிலுள்ள உறுப்புகளில் கண்கள் மிக முக்கியமானவை. கண்ணின்றி ஒன்றுமில்லை. கண்ணற்றவர்களின் வாழ்க்கை எவ்வளவு கடினமானது என்று அனுபவித்தால்தான் தெரியும். சிலர் பிறவியிலிருந்தே, சில குறைபாடுகளின் காரணத்தால், கண்களால் பார்க்கும் ஆற்றலை இழந்து விடுகின்றனர். சிலருக்கு வயோதிகத்தில் கண் பார்வை தானாகவே குன்றி விடுகிறது. படலத்தினால் கண்ணொளி மறைக்கப்படுகிறது. அறுவைச் சிகிச்சை செய்த பிறகு, மீண்டும் கண்ணொளி பெற்றுப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்த பொழுதும் கண்களின் ஆற்றல் முழுமையாக இருக்காது. குறைந்தே இருக்கும். இவற்றையெல்லாம் இயல்பாகவே கண்ணொளி அற்ற நிலை என்று எடுத்துக் கொள்ளலாம்.

கண்கள் இருந்தும் அவற்றைப் பயன்படுத்தாமல் இருப்பதையும் நாம் காணலாம். சில நேரங்களில் நம்முடைய கண்கள் ஏதோ ஒன்றைப் பார்த்துக் கொண்டிருக்கும். ஆனால், மனமானது வேறொன்றில் ஊன்றிக் கிடக்கும். கண்கள் திறந்திருந்த நேரத்திலும் அவற்றின் காணும் ஆற்றல் செயல்படுவதில்லை. தெருவிலே நடந்து போய்க் கொண்டிருப்போம். எதிரே ஒரு நண்பர் வருவார். ஆனால், நாம் வேறு எதையோ தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டு போய்க் கொண்டிருப்போம். நண்பரைக் கண்கள் பார்க்கின்றன. ஆனால், பார்க்கின்ற இடத்தில் மனம் இல்லை. கண்ணோடு சேர்ந்து மனம் பாராத காரணத்தினால் நாம் அந்த நண்பரைப் பார்க்கவில்லை. நமது ஆழ்ந்த சிந்தனை நாம் பார்க்கும் பொருளுக்கு எதிரே ஒரு மறைப்பாக நின்று விடுகின்றது. அதுபோலவே நம்முடைய கேட்கும் சக்தியும், மனத்துடன் ஒன்றிப் போகாத நிலையில், நிலை நிறுத்தம் செய்வதும், புலன்களும் மனம், புத்தி, சித்தம் போன்ற உட்கருவிகளும் சேர்ந்து தொழிற்படாத பொழுது நாம் முழுமையான அறிவைப் பெறுவதில்லை.

உடலைச் சார்ந்த கருவிகள் நமக்கு ஒருவித அறிவையும் அனுபவத்தையும் கொடுக்கின்றன. வெளிப்புறத்தை நோக்கி நம்முடைய கருவிகள் செயல்படும்போது நமக்கு வெளிப்புறத்திலுள்ள பொருள்களின் மீதான அறிவு கிடைக்கின்றது. இதை விஷயானுபவம் என்பார்கள். நமது பொறிகளும், புலன்களும் சதா வெளிப்புறத்தை நோக்கிச் சென்று விவரங்களைச் சேகரித்து, நமது உட்கரணங்களுக்குத் தருகின்றன. நாம் நம்முடைய கருவிகளின் இயக்கத்தில் ஊறிப்போய் விடுகிற காரணத்தால், அதையே இயல்பான நிலை எனக் கருதுகிறோம்.

வெளிப்புற விஷயங்களையே நாம் நமது கருவிகள் மூலம் பற்றிக் கொள்வதால், நமக்கென்று ஒரு உட்புறம் இருப்பதை நாம் அறிந்து கொள்வதில்லை. நாம் கனவு காணும்பொழுது நமக்குக் கிடைப்பது உட்புற அனுபவம். உட்புற அனுபவம் பெறுவதற்கு நாம் உள்நோக்கிப் பார்க்க

வேண்டும். உள்நோக்கி பார்த்தலாவது நம்மை நாமே விசாரித்துக் கொள்ளுதலாகும். நம்மைப் பற்றியும், நமது உடலைப் பற்றியும், கருவி கரணங்களைப் பற்றியும், நாம் பெற்றிருக்கும் அறிவின் தன்மையைப் பற்றியும் சிந்திக்கும் நோக்கத்துடன் நமது அறிவாற்றலை அவற்றின் மீது செலுத்துவதே உட்புறத்தை நோக்குவதாகும். விஷய அனுபவங்களின் தாக்குதல் இருக்கும்வரை, நம்முடைய கருவி கரணங்கள் உட்புறத்தை நோக்கா. அந்த நிலையில் நாம் நமது உடலையும் கருவிகளையும் பயன்படுத்தி வினைப்பொதியை வளர்த்துக் கொண்டே போகிறோம். இவ்வாறு நாம் செய்வதன் நோக்கம் இன்பத்தைப் பெறுவது, துன்பத்தைத் தவிர்ப்பது. இந்த நோக்கத்துடன் உலகத்தின் சுகதுக்கங்களில் நாம் நம்முடைய உடலையும் அதன் கருவிகளையும் முழுமையாகச் செலுத்தும்பொழுது நாம் வேறு, நமது உடலும் அதன் கருவிகளும் வேறு என்கிற உணர்வைப் பெறுவதில்லை. நாம்தான் அவை, அவைதான் நாம் என்கிற நினைப்பே தலைதூக்கி நிற்கின்றது. உலக விஷய அனுபவங்கள் நமக்கு ஒரு மலைப்பை, மயக்கத்தைத் தந்து, உண்மையை மறைத்து விடுகின்றன. நமது உடலின் கருவிகள் தத்தம் வேலையைச் செய்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், அவற்றின் இயக்கம் மயக்கம் என்கிற சூழலில் நடைபெறுகின்றது. இதை அறியாமை என்கிறோம். நமது உயிரோடு அனாதியே கலந்து வரும் ஆணவ மலத்தின் மறைப்புத் தன்மையே இதற்கு காரணமாக இருக்கிறது. அதே நேரத்தில் நாம் ஒன்று தெரிந்து கொள்ள வேண்டும். இறைவன் படைத்த படைப்பிற்கு நோக்கம் இல்லாமல் இருக்க முடியாது. இறைவன் எல்லா உயிர்களுக்கும் உடலைக் கொடுத்து, பொறி, புலன்களைக் கொடுத்து, நமக்கு எல்லாவிதமான அனுபவத்தையும் கொடுக்கின்றான். கருவிகள் மூலமாக மயக்கத்தைக் கொடுப்பவனும் அவனே. மயக்கம் தீர மருந்தைக் கொடுப்பவனும் அவனே. அதுவே அவனுடைய பெரும் கருணையாகும். ''பெருமானே! எத்தனைவிதமான அனுபவங்களைப் பெற்று நான் உன்னை அடைகின்றேன்; அதுவல்லவா உன்னுடைய பெரும் கருணை!'' என்று பட்டினத்து அடிகள் நினைக்கின்றார். நாம் பெறும் அனுபவங்கள் பல்வேறானவை. சில இன்பத்தைத் தருகின்றன. பல துன்பத்தைத் தருகின்றன. சில இறைவனை அடையும் வழிகளைக் காட்டுகின்றன. பல நம்மை இறைவனிடமிருந்து வெகுதூரத்திற்குக் கொண்டு செல்லுகின்றன. ஆனால், இவையெல்லாம் இறைவனுடைய கருணையால் நேருகின்றன என்றால் அதை ஏற்றுக்கொள்ளலாமா?

இந்தக் கேள்விக்கே இடமில்லை என்கிறார் காரைக்கால் அம்மையார். அறிவைப் பயன்படுத்தி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வரும் நிலையைக் கடந்தவர் அம்மையார். அறிவு எனும் திரை அவரது கண்களை மறைக்கவில்லை. இறைவனுடைய அருளையே துணை கொண்டு மெய்ப்பொருளை ஆராயும் பண்பினைப் பெற்றவர். ஆகவே, அவருடைய உள்ளத்தில் வேறுவகையான அனுபவம் தோன்றுகிறது. நாம் காணும் காட்சியெல்லாம் இறைவனுடைய வடிவம் என்றும், நாம் புரியும்

செயல்களெல்லாம் இறைவனுடைய அருட்பிரசாதம் என்றும் மகிழக் கூடியவர் காரைக்கால் அம்மையார். அவருடைய உள்ளம் தெளிந்த நிலையில், உடலாலும் கருவிகளாலும் கிடைக்கக்கூடிய அனுபவங்களின் தன்மை குறைந்து அவை தரும் மயக்கத்திற்கு அப்பாற்பட்டவர். எனவே,

**''அருளே உலகெலாம் ஆள்விப்ப(து), ஈசன்**
**அருளே பிறப்பறுப்பது; ஆனால் - அருளாலே**
**மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன், எஞ்ஞான்றும்**
**எப்பொருளும் ஆவ(து) எனக்கு''.**

**(அற்புதத் திருவந்தாதி)**

என்று கூறுகின்றார்.

எங்கும், எதிலும், எப்பொழுதும் இறைவனது அருள் தோய்ந்து நிற்கும். இதை நாம் உணர்ந்து கொள்வதில்லை. இதற்குக் காரணம் நமது உயிருடன் அநாதியே கலந்து வரக்கூடிய ஆணவ மலம்தான். இது உயிர்களைச் சேர்ந்த குற்றமாகும். ஆணவ மலம் மெய்ப்பொருளை உயிரிடமிருந்து மறைக்கின்றது. நமது கண்களை மறைக்கும் இருளைப் போன்ற தன்மையுடையது. **''இருள் ஒளிர இருண்ட மோகம் ஆய்''** என்கிறது சிவப்பிரகாசம். நாம் இருண்ட இடத்தில் இருக்கும்பொழுது இருளைப் பற்றிய நிலையை உணர்ந்து கொள்கிறோம். ஆனால், ஆணவ மலம் தன்னையும் காட்டிக் கொள்வதில்லை, மெய்ப்பொருளைப் பற்றிய உண்மையையும் மறைக்கின்றது. ஆகவே, ஆணவமலம் இருளினும் கொடியது என்கிற பொருளுடன் சிவப்பிரகாசம் பேசுகிறது. ஆணவ மலம் மூல மலம் என்பது சித்தாந்தக் கோட்பாடாகும். இது அநாதி முதல் உயிருடன் சேர்ந்து இருப்பதன் காரணத்தினால் இது சகஜமலம் என்றும் சொல்லப்படுகிறது. ஆணவ மலம் உயிரின் அறிவு முழுதினையும் மறைக்கும் என்று கூறுகிறது சிவப்பிரகாசம். அதேநேரத்தில் ஆணவ மலம் உயிரினுடைய குணமாகாது. உயிரினுடைய குணம் அறிவேயாகும். ஆணவ மலம் ஒரு சடப்பொருள். உயிரின் குணம் சடமாக ஒருபொழுதும் இராது. உயிரின் தன்மையான அறிவை எவராலும் அழிக்க இயலாது. அநாதியிலே உயிர்களை அணுத்தன்மைப்படுத்தி நிற்பதனால் இம்மலம் ஆணவமலம் எனப்படலாயிற்று. அதன்விளைவாக உயிரானது தன் நிலையிலேயே நின்று பிறவற்றை வேறுபடுத்திப் பார்த்து உயிருக்கு உயிராக நிற்கும் இறைவனைப் பார்க்காது பார்முதல் பூதங்களின் சேர்க்கையினால் கிடைக்கும் அவத்தைகளில் மூழ்கிப் பரத்தை மறந்து நிற்கும்.

இங்கேதான் இறைவனுடைய கருணை தெரிகின்றது. உயிர்களுடைய அறிவு முழுவதும் ஆணவத்தால் கட்டுண்டு செயலற்றுக்கிடக்குமாயின் அவைகளுடைய அறிவு என்றுமே விளக்கம் பெறாமல் போய்விடும். உய்தி பெறுவதற்கும், இறைவனுடைய திருவடிகளை உணருவதற்கும் வாய்ப்புகள்

கிட்டாமலும் போய்விடும். உயிர்களுக்கோ ஆணவமலத்தின் தன்மையைக் குறைப்பதற்கு ஆற்றல் இல்லை. உயிர்களுடைய அறிவாற்றல் செயல்பட வேண்டுமென்றால், அதற்காக உயிர்கள் இச்சைப்பட வேண்டும். செய்வதற்கான செயல்களைப் பற்றி அறிவு கிட்ட வேண்டும். செயல்களைப் புரியும் ஆற்றலும் வர வேண்டும். இந்த ஆற்றல்களைத் தானே இயக்கிக் கொள்ளக்கூடிய திறமையும் உயிர்களுக்குச் சொந்தமாகக் கிடையாது. இந்த நிலையில்தான் செயலற்றுக்கிடக்கும் உயிர்களிடம் இறைவன் தனக்கான முழு இரக்கத் தன்மையினால் கருணை காட்டத் தொடங்குகின்றான். அதுவே இறைவனின் அருள் இயல்பு ஆகும்.

இறைவன் உயிர்களுக்கு மாயையாகிய உடலையும், கருவி கரணங்களையும் கொடுத்து அருளுகின்றான். உயிர்களை அவற்றுடன் சேர்த்து இயக்கச் செய்கின்றான். இன்பம் பெறுவதற்குரிய பிறவியைத் தந்தருளுகின்றான். அந்தப் பிறவியிலேயே இன்பத்தோடு துன்பங்களைத் தரக்கூடிய பந்த பாசங்களை உயிர்களுக்கு அமைத்து அருளுகின்றான். வினைகளைச் செய்ய வைக்கின்றான். உடலின் கூறுகளெல்லாம் வினைகளைப் புரிவதற்காகவே அமைக்கப்பட்டி ருக்கின்றன. இவ்வாறாக உயிர்கள் பல பிறவிகள் பெற்றெடுத்து, மலபரிபாகம் நிகழ்த்த, தூய்மைப்பட்டு முக்தி நிலையை அடையச் செய்வதும் இறைவனுடைய பேரருளாகும்.

**"இன்பப் பிறவி படைத்த இறைவனுந்**
**துன்பஞ்செய் பாசத் துயருள் அடைத்தனன்**
**என்பிற் கொளுவி இசைந்தறு தோற்றசை**
**முன்பிற் கொளுவி முடிகுவ தாக்குமே"**

**(திருமந்திரம் - 432)**

உயிர்கள் பக்குவம் பெற மாயையும் கன்மமும் தேவைப்படுகின்றன. உயிரின் அறிவை மறைத்து நிற்பது ஆணவம். ஆகவே, இது இருளாகும். அந்த இருளைச் சிறிது சிறிதாகப் போக்கி உயிரானது உடல் கருவிகள் மூலமாக சுயானுபவம் பெற உதவுவது மாயையாகும். மாயை உயிருக்கு விளக்கம் தருகின்றது. எனவே, சிவப்பிரகாசம் மாயையை ஒளி எனவும் குறிப்பிடுகிறது. மாயையுடன் கலந்த உயிர் ஒருவித மயக்கத்தால் வினைகளைப் புரிகின்றது. இந்த மயக்கத்தைத் தெளியவைப்பது இறைவனுடைய அருட்சக்தியாகும். பாம்பு தீண்டிய ஒருவனுடைய உடலில் பாம்பின் விஷம் முழுவதும் பரவ அவன் மயக்கம் அடைகின்றான். மந்திரவாதி கருட மந்திரத்தைக் கூறி மயக்கத்தைச் சிறிது சிறிதாக நீங்கச் செய்து விஷத்தை முறிவு செய்யும் மருந்தினையும் பிரயோகிக்கின்றான். மயக்கம் தெளிந்த பின்னர் அவன் மருத்துவமிருத்துவனைத் தெரிந்து கொள்கின்றான். பாராட்டுகின்றான். அதுபோலவே இறைவன் மாயை,

கன்மரீதியான மயக்கத்தை உயிர்களுக்கு அளித்து தனது அருளினால் உயிர்களை அவற்றிடமிருந்து மீளவும் செய்கின்றான்.

இவையெல்லாம் இறைவன் செயல் என்று கூட நாம் உணராத அளவுக்கு ஆணவமலத்தின் மறைப்புத்திறன் செயல்புரிகின்றது. இதையும் செய்பவன் இறைவன் அல்லவா! இறைவனுடைய சக்தி இவ்வகையில் திரோதான சக்தி எனப்படும். ஒரு குழந்தைக்கு நோய் வருகின்றது. நோயைத் தீர்ப்பது தாயின் பொறுப்பாக அமைகின்றது. இந்தப் பொறுப்பினைத் தாயானவள் இயல்பாகவே நிறைவேற்றுகின்றாள். குழந்தையின்மேல் அன்பு கொண்ட காரணத்தினால் குழந்தை நோய் நீங்கிச்சுகம் பெற வேண்டும் என்கிற எண்ணத்துடனேயே குழந்தை அழுதாலும், குழந்தையைச் சற்றுக் கட்டுப்படுத்திச் சில வேளைகளில் கொடுமையான நடத்தையுடன் குழந்தைக்குக் கசப்பான மருந்தை ஊட்டிச் சிகிச்சை அளிக்கிறாள். குழந்தை குணமடைந்ததும் அதைத் தூக்கி வைத்துக் கொஞ்சிக் குலாவுகின்றாள். முதலில் கொடுமையான நடத்தையால் பாதிக்கப்பட்ட குழந்தைக்குத்தாயின் செய்கைகள் புரியாமல் இருக்கலாம். அவ்வாறே இறைவன் திரோதான சக்தி வழியாய் ஆணவமலத்தை இயக்கி உயிர்களை அவத்தைகளுக்கு உட்படுத்தி, மலபரிபாகம் அடையச் செய்து, பேரருள் காட்டி கட்டிக்கொள்கின்றான். ஆணவமலத்தின் மறைக்கும் சக்தியாக இயங்கிய திரோதான சக்தி மலபரிபாக நிலையில் ஒளிநிலையாக விளங்குகின்றது. திரோதான சக்தியும் அருட்சக்தியே ஆகும். திரோதான சக்தி வேறு அருட்சக்தி வேறு என்பதில்லை. திரோபவத்தை மறக்கருணை என்றும் கூறுவதுண்டு. திருமூலர் இதை **''அரைக்கின்ற அருள்''** என்று குறிப்பிடுகின்றார். இதை **''அரிக்கின்ற அருள்''** என்று அழைத்தாலும் சிறக்கும். இறைவனின் திரோதான சக்தி உயிரைச் சார்ந்த ஆணவ மலத்தின் மறைத்தல் தன்மையை இயக்கி உயிரைக் கன்மம், மாயை ஆகிய மலங்களில் ஈடுபடச் செய்கின்றது. இவ்வாறு உயிரை ஈடுபடுத்தியே இறைவன் அது உய்வதற்கான பாதையை விளக்குகின்றான்.

இறைவனுடைய மறக்கருணை திரோதான சக்தியாக நின்று இருவினைப் பயனை ஊட்டுவிக்கின்றது. உயிரைப் பேதிக்கின்றது. உலக வழியிலே போகச் செய்கின்றது. ஆயினும் கடைசியில் இறைவனுடைய திருவடி தரிசனத்திற்கு வித்திடுகிறது. **''பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளையாள் பாதத்திறம் பாடி ஆடேலோர் எம்பாவாய்''** என்கிறார் மணிவாசகப்பெருமான்.

இதே திரோதான சக்தியை அருட்சக்தியாக்கி நமக்கு உதவுவதும் இறைவனாகும். ஆணவ மலம் உயிர் மெய்யறிவைப் பெற முடியாதவாறு ஒரு மறைப்பினைச் செய்கிறது. உயிர் இறைவனருள் பெற்றவுடன் இந்த மயக்கமானது நீங்குகிறது. மறக்கருணை இறைவன் திருவருளால் அறக் கருணையாக மாறுகிறது. இதைக் **''கருணைகூர்ந்த அருள்திரு நோக்கம்''**

என்பார் சேக்கிழார்பெருமான். கண்ணப்பநாயனார் வரலாற்றில் நாயனார் காளத்திநாதரைக் காணும் நேரத்திலேயே மறக்கருணை அறக்கருணையாக மாறும் ஒரு ஒப்பற்ற நிகழ்ச்சியைக் காண்கின்றோம். காளத்திநாதரின் கருணைகூர்ந்த அருள்திரு நோக்கம் கண்ணப்பநாயனார் மீது பதிந்தமாத்திரத்திலேயே தத்துவங்கள் என்னும் பெருகுசோபானத்தை நாயனார் கடந்தவரானார். அநாதியே தொடர்ந்துவந்த, நாயனாரைச் சார்ந்து நின்ற மலங்கள் அவரைவிட்டு நீங்குகின்றன என்கிறார் சேக்கிழார் பெருமான். கண்ணப்பநாயனார் ஒப்பற்ற அன்பு உருவமாயினார். அன்பே சிவமாதலால் நாயனாருடைய தவத்தினால் தூய்மை பெற்ற உயிரானது சிவமாம் தன்மையைப் பெற்றது.

**" திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர்காணா முன்னே**
**அங்கணர் கருணை கூர்ந்த அருட்டிரு நோக்க மெய்த்**
**தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட்டகல நீங்கிப்**
**பொங்கிய வொளியின் நீழற் பொருவில் அன்புருவ மானார்"**

**(திருத்தொண்டர் புராணம் - 753)**

திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகப் பெருமான் ஞானகுருவைக் கண்டு சரணடைந்த மாத்திரமே அளுணர்வினைப் பெறுகின்றார். உயிர் வாழ்க்கை வெறுத்தது. தனது சொந்த முயற்சியின்றி இறைவன் தன் உள்ளத்தின் இருளை மாற்றி ஒளியினைத் தந்த பாங்கினைக் கண்டு வியக்கின்றார்.

**"நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்**
**தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்**
**தானேவந் தென துள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்**
**ஊனாரு முயிர்வாழ்க்கை யொறுத்தன்றே வெறுத்திடவே"**

**(திருவாசகம் - 553)**

திரோபவம் நீங்குவதும் அருளுணர்வு பிறப்பதும் இறைவனின் செயல்களாகும். ஒன்று மறைந்து மற்றது தோன்றப் பிறக்கும் தெளிவில், உலக மெனும் நாடக மேடையில், நாம் நடிக்கும் நாடகம் உயிர் உய்வதற்கு உத வாது என்னும் அறிவு உருவாகிறது. சித்தவிகாரக் கலக்கம் திரோபவ நிலை.

இறையருளே அதைத் தெளிவிக்கவும் செய்யும்.

**"வைத்த நிதி, பெண்டிர், மக்கள், குலம், கல்வி, என்னும்**
**பித்த உலகில், பிறப்போடு இறப்பு, என்னும்**
**சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த**
**வித்தகத் தேவர்க்கே-சென்று-ஊதாய்; கோத்தும்பீ"**

**(திருவாசகம் - 220)**

அருளாளர்கள் **உள்ளொளி** பெற்றவர்கள். ஆணவமலத்தின் மறைத்தலாகிய சக்தியின் வலிமை குன்றி, அகத்தே சிவ ஒளி விளங்கி நிற்கும் தன்மையைப் பெற்றவர்கள். ஞானப்பால் உண்டு சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் பெற்றவர் திருஞானசம்பந்தர். அவர் இப்பிறவியில்தான் சிவஞானம் பெற்றார் என்பதில்லை. ஆளுடைய பிள்ளையார் சீர்காழியில் பிறக்கும் முன்னரும் இறையடி வழுவாத பண்பினராக இருந்தார். ஆயினும், இறைவன் ஒருவகை மயக்கத்தைச் செய்தவன் என்றும் அவனே பிள்ளையாரை இப்பிறவியில் மண்ணின்மேல் பிறக்குமாறு காட்டினான் என்றும் ஞானசம்பந்தப் பெருமான் அருளுகிறார். இந்தக் கருத்துடன் திருத்துருத்தியில் ஆளுடைய பிள்ளையார் பாடிய திருப்பதிகம் சிந்தனைக்குரியது.

**''துறக்குமா சொலப்படாய் துருத்தியாய் நின்னடி**
**மறக்கிலாத என்னை மையல் செய்திம் மண்ணின்மேல்**
**பிறக்குமாறு காட்டினாய் பிணிப்படும் உடம்பு விட்டு**
**இறக்குமாறு காட்டினாய்க்கு இழுக்குகின்றது என்னையே''**

''என்னை மையல் செய்து இம்மண்ணின்மேல் பிறக்குமாறு காட்டினாய்'' என்கிறார் திருஞானசம்பந்தர். ''ஏன் இவ்வாறு செய்தாய்?'' என்று இறைவனைக் கேட்பது போலவே இது அமைந்துள்ளது. திருஞானசம்பந்தப் பெருமானுக்கு முற்பிறவியிலும் இப்பிறவியிலும் இறைவனைப் பற்றி மயக்கமில்லை. ஆயினும், இறைவன் தன்னை மையல் செய்தான் என்கிறார். பெருமானின் வியப்பினை இது காட்டுகின்றது. இறைவன் தனது மறைப்புச் சக்தியில் சிறிதைக் காட்டியுள்ளான். ஆனால், ஞானசம்பந்தர் தமக்கு இவ்வாறு செய்ததை ஒரு குற்றமாகக் கொள்ள வில்லை. இம்மண்ணில் பெருமானுக்குத் திருநெறியாகிய திருத்தொண் டினைப் புரிய வேண்டிய பொறுப்பு இருந்த காரணத்தால் பெருமானை இவ்வுலகிற்கு வரவழைத்து அவர் அப்பணியை மேற்கொள்ளுமாறு அருள்புரிகின்றான் என்பதே சான்றோர்களின் கருத்தாகும்.

திருவருள் வரப்பெற்று இறையுணர்விலே திளைக்கும் அடியார் களுடைய உள்ளம் முழுமையும் இறைஞானம் நிரம்பப்பெற்றிருக்கும் காரணத்தினால், அவர்களுடைய கருவி கரணங்கள் இறைவனுடைய சித்தத்தின்படியே செல்கின்றன. மலங்கள் நீங்கிய நிலையில் உயிரானது கருவி கரணங்களை இறைவன்பால் இயல்பாகவே செலுத்துகின்றன.

**''தானே புலன்ஐந்துந் தன்வச மாயிடும்;**
**தானே புலன்ஐந்துந் தன்வசம் போயிடும்;**
**தானே புலன்ஐந்துந் தன்னில் மடைமாறும்;**
**தானே தனித்தெம் பிரான்தனைச் சந்தித்தே''**

**(திருமந்திரம் - 139)**

சிவமாம் தன்மை பெற்ற உயிரானது எங்கும் எதிலும் சிவ பரம்பொருளையே காண்கிறது. இறைவனுடைய மறைப்புச் சக்தி ஆணவமலத்தின் மூலமாக செயல்படும்பொழுது ஊனக்கண்ணானது பலவற்றைக் கண்டாலும் தன்னையும் தனது தலைவனையும் தெரிந்து கொள்வதில்லை. **"காட்டிய கண்ணே தனைக்காணா; கண்ணுக்கு காட்டிய உள்ளத்தை கண்காணா - காட்டிய உள்ளம் தனைக்காணா"** என்பது மெய்கண்டதேவரின் திருவாக்கு. உள்ளத்தில் இருள் நீங்கி ஒளிபெற்ற பின் கண்ணானது அகத்திலும் புறத்திலும் பரம்பொருளின் பேரியக்கத்தைக் காணும் ஆற்றலைப் பெறுகிறது. "மறைத்தலைச் செய்கின்ற இறைவன் என்னோடு உடனாய் நிற்கின்ற அருள் தொடர்பினை என் உள்ளத்திலே உணர்ந்து கொண்டேன். எனவே, அவன் எனது உள்ளும் புறமும் நிரம்பி அருள்செய்து கொண்டே இருப்பான். அதை நீங்கள் தெரிந்து கொண்டீர்களானால் நீங்களும் இறைவனை உள்ளத்தில் வைத்து வெளியே புறப்பட்டு ஓடாது நிறுத்திக் கொள்ளலாம்" என்று கூறுவார் திருமூலர்.

**"ஒளித்துவைத் தேன்உள்ளுற உணர்ந்து ஈசனை**
**வெளிப்பட்டு நின்று அருள் செய்திடு மீண்டே**
**களிப்பொடுங் காதன்மை என்னும் பெருமை**
**வெளிப்பட் டிறைஞ்சினும் வேட்சியு மாமே"**

**(திருமந்திரம் - 437)**



# 21. ''திருக்கூத்து தரிசனம்''

நாம் பொறிகள், மனம், புத்தி, சித்தம் போன்ற கருவிகளைக் கொண்டு உலகத்தைப் பார்க்கின்றோம். விஷயங்களை அனுபவிக்கின்றோம். அறிவைப் பெற்று அகங்காரத்தை வளர்க்கின்றோம். இன்பத் துன்பங்களில் ஈடுபட்டு பெற்ற அறிவே முடிவானது என்று கருதி வாழ்க்கையை நடத்தி வருகின்றோம். இந்த அறிவினால் நமக்குக் கிடைக்கும் சாதனைகள் நமக்கும், நம்முடைய உள்ளத்துக்கும் இடையில் ஓர் திரையைப் போட்டு உண்மையை மறைத்து விடுகின்றது. அறிவுக் கண்களால் நாம் பார்க்க முயல்வது இந்த விளைவை நமக்குத் தருகின்றது. ''இவ்வளவு காலம் அறிவுக் கண்களால் பார்த்தேன், அருட்கண்களால் பார்க்கவில்லையே!'' என்கிறார் வள்ளலார். ''நூல் அறிவு பேசி நுழைவு இலாதார் திரிக!'' என்கிறார் காரைக்கால் அம்மையார். திருஞானசம்பந்தப் பெருமானோ,

**''ஏதுக்க ளாலும் எடுத்தமொழி யாலும் மிக்குச்**
**சோதிக்க வேண்டா; சுடர்விட்டுளன் எங்கள் சோதி;''**

என்பார். அருட்கண்கள் என்று உண்டு. அவற்றைத் திறக்க நாம் பயில வேண்டும். அருட்கண்கள் திறக்கும்பொழுது பேரறிவினை நம்முள்ளேயே உணர்வுமயமாக அனுபவிக்க இயலும். இந்த உணர்வானது சொல்லுக்கும், இலக்கியத்திற்கும், இலக்கணத்திற்கும் அப்பாற்பட்டது. நாயன்மார்கள், ஆழ்வார்கள் போன்ற அருவாளர்கள், தெய்வச் சான்றோர்கள் இந்த ஒப்பற்ற உணர்விலே மூழ்கித் திளைத்தவர்கள். சுந்தரமூர்த்தி நாயனார் தில்லைப்பெரும் கோயிலில் நடராசப் பெருமானின் ஆனந்த நடனத்தைத் தரிசித்து **''பேரின்ப வெள்ளத்தில் திளைத்து மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்''** என்று சேக்கிழார் பிரான் கூறுகின்றார்.

அருளாளர்களுடைய உணர்வில் இறைவன் ஆடவல்லானாகக் காட்சியளிக்கிறான். அவர்களுடைய கண்களுக்கு அண்டங்களின், பிரபஞ்சங்களின், பிண்டங்களின் அசைவுகள் இறைவனுடைய தனிப்பெரும் கூத்தாக, ஆனந்தக் கூத்தாகத் திகழ்கின்றன. என்னே இறைவனுடைய அருள் என்று வியக்கின்றார்கள். ஆனந்த எல்லைக்குச் சென்றுவிடுகின்றார்கள். நடப்பதும் நிற்பதும் எல்லாமுமே இறைவனுடைய அருள் என்கின்ற உண்மை அவர்களுடைய உள்ளத்தில் நிரம்பி நிற்கின்றது. எங்கும், எதிலும்

இறைவனுடைய பேரறிவு, பேராற்றல் ஆகியவற்றின் இயக்கத்தை உணர்ந்து மகிழ்கின்றார்கள். எங்கும் தங்கும் இறைவன் தனது அருட்சக்தியுடன் உயிர்கள் உய்ய இயக்கத்தை நடத்தி வருவது அவர்களுடைய அருட்கண்களுக்கு இறைவனுடைய ஒப்பற்ற திருக்கூத்தாக, விளையாட்டாகப் படுகின்றது.

**"எங்குந் திருமேனி எங்குஞ் சிவசத்தி**
**எங்குஞ் சிதம்பரம் எங்குந் திருநட்டம்**
**எங்குஞ் சிவமா யிருத்தலால் எங்கெங்குந்**
**தங்குஞ் சிவனருட் டன்விளை யாட்டதே"**

**(திருமந்திரம் - 2722)**

நம் போன்றவர்களுக்கு இந்த உணர்வு ஏற்படுவதில்லை. எனவே, இதன் உண்மையை நம்மால் புரிந்து கொள்ள முடிவதில்லை. எல்லா இயக்கங்களும் இறைவனின் பேராற்றலை வெளிப்படுத்துகின்றது என்று நாம் நினைத்துப் பார்ப்பதில்லை. ஆனால், இன்றைய விஞ்ஞானம் இந்த விஷயத்தில் சற்று முன்னேறி உள்ளது. இப்பிரபஞ்சத்தில் உள்ள அசையும் பொருள், அசையாப் பொருள் எல்லாவற்றிலும் நிரம்பியுள்ள அணுக்களைக் கூறிட்டுக் கொண்டே போனால் அவற்றின் உட்பகுதிகளில் நுண்ணிய் பொருள்கள் வெகுவேகமாக, நினைக்க முடியாத அளவுக்குத் தோன்றி மறைகின்றன என்றும், அவையெல்லாம் ஒரு பெரும் இயக்கத்தில் ஈடுபட்டுள்ளன என்றும், அந்த இயக்கத்திற்கு அடிப்படையாக இருப்பது ஒரு பெரும் ஆற்றல் என்றும் இன்றைய விஞ்ஞானம் கூறுகின்றது. இந்த ஆற்றலை, அதன் அடிப்படையில் நடக்கும் இயக்கத்தைப் பேரருளாளர்கள் அன்றே உணர்ந்தனர். தம்முள் கண்டு கொண்டனர். வெளியில் அனுபவித்தனர். தாங்கள் கண்டதைத் திருக்கூத்தென்று பெயரிட்டனர். இந்த அரும்பெரும் தாண்டவம் உயிர்கள் உய்வதற்காக நடக்கின்றது என்பதை மக்களுக்குப் போதிக்கவும், இந்தத் தாண்டவத்தின், அருட்சக்தியின் பெருமையை நாம் நமது மனத்தில் வைத்துப் போற்றி வழிபாடு செய்வதற்கு அருளாளர்கள் நமக்கு வழங்கியுள்ளது எல்லையில்லாத இன்பத்தை என்றும் அளிக்கவல்ல் நடராச திருவடிவமாகும்.

கைலாயத்தில் இறைவனைக் கண்ட காரைக்கால் அம்மையார் ''நீ ஆடுகின்ற போது தான் மகிழ்ந்து பாடிக்கொண்டு உன் திருவடியின் கீழ் இருத்தல் வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார். இறைவனும் அவரை திருவாலங்காட்டிற்கு அழைத்து அவனுடைய பெரு நடனத்தை அவர் கண்டு ஆனந்தித்து எப்பொழுதும் பாடிக் கொண்டிருக்கலாம் என்று அருள்புரிந்தான்.

திருவாலங்காட்டு இரத்தின சபையில் இறைவன் புரிவது ஊர்த்துவ தாண்டவம். சிதம்பரத்தில் இருப்பது கனகசபை. ஆடுவது ஆனந்தத்

தாண்டவம். மதுரையில் வெள்ளியம்பலம். இங்கே இறைவன் பாண்டிய மன்னன் விருப்பத்திற்கேற்ப கால் மாறி ஆடுகின்றான். திருநெல்வேலியில் இறைவன் நடனமிடும் இடம் தாமிர சபையாகும். திருக்குற்றாலத்தில் இறைவனுடைய திருக்கூத்து சித்திர சபையில் நடைபெறுகிறது.

ஊர்த்துவ தாண்டவம் புரிந்தருளும் இறைவனைக் காரைக்கால் அம்மையார் பார்க்கின்றார். அவன் ஆடும் ஆட்டம் உலகத்தையே கிடுகிடுக்க வைக்கின்றது. ''இறைவனே நீர் வேகமாக ஆடினால் பாதாளம் பெயர்ந்து போகும். உனது திருமுடி அசைந்து ஆடும் போது வானத்து உச்சி தகர்ந்து விடும். நீ எட்டுத் தோள்களையும் வீசி நின்று ஆடும் போது எல்லாத் திசைகளும் பெயர்ந்து மாறி விடும். பிரபஞ்சமாகிய இந்த அரங்கு உனது ஆட்டத்தைத் தாங்காது. இதை அறிந்து ஆடும். மெல்ல ஆடும்.'' என்கிற வகையில் சுவை படக் காரைக்கால் அம்மையார் அற்புதத் திருவந்தாதியில் பாடுகின்றார்.

**''அடிபேரின் பாதாளம் பேரும்; அடிகள்**
**முடிபேரின் வான்முகடு பேரும்; - கடகம்**
**மறிந்தாடும் கைபேரில் வான்திசைகள் பேரும்;**
**அறிந்தாடும் ஆற்றாது அரங்கு.''**

திருநாவுக்கரசர் நடராசப் பெருமானைத் தரிசிக்க வேண்டி திருத்தில்லை நகர் வந்தடைந்தார். திருக்கோயிலைச் சேர்ந்து, கோபுரத்தின் கீழ் விழுந்து, பணிந்து, கனகசபையினைக் கண்டு இறைவனுடைய திருநடனக் காட்சியின் எழிலில் மூழ்கினார். அப்போது அவருடைய கைகள் தலையின்மீது அஞ்சலிக்காகக் குவிந்தன. கண்கள் மழை பொழிந்தன. உட்கரணங்கள் உருகின. அன்பு பெருகிற்று. திருமேனி நிலத்தில் பல முறைகள் வீழ்ந்து எழுந்தது. இறைவனுடைய நடனத்தைக் கும்பிடும் அவருடைய ஆர்வம் அளவிடக் கூடாததாயிற்று. ''இறைவனை ஒன்றியிருந்து நினைமின்கள், கரணங்களை ஒருமுகப்படுத்துங்கள், அழுந்தி அறியுங்கள், காலனைக் கடிந்தவனை என்றும் தொழுமின்கள், இறைவனுடைய ஒப்பற்ற உருவத்தைக் கண்டு இன்பமடையுங்கள். இந்த மனிதப் பிறவியில் இதைவிட வேண்டுவதற்கு வேறொன்றுமில்லை. மீண்டும் இறைவனுடைய திருவுருவைக் காண வாய்ப்புக் கிடைக்குமாயின் இம்மண்ணுலகில் மற்றொரு முறை பிறந்தாலும் குறைவில்லை'' என்று பாடுகின்றார்.

திருத்தில்லையில் நடராசப் பெருமானைத் தரிசித்த சுந்தரமூர்த்தி நாயனாரின் அனுபவமும் அப்போற்பட்டதே. அவருடைய ஐந்து பேரறிவுகளில் கண்களே செயல்பட்டன. கரணங்கள் எல்லாம் சிந்தையில் குவிந்தன. அகங்காரம் மறைந்தது. குணங்களில் சாத்துவிக குணமே முன் நின்றது. கைகளைக் குவித்துக் கண்களில் ஆனந்தமாரி பெருக அவர்

இறைவனைப் பாடினார், பரவினார், பணிந்தார். அவரது மனம் பேரின்ப வெள்ளத்தில் மூழ்கியது. இதுபோன்ற ஒப்பற்ற அனுபவங்களை அன்பர்களுக்கு நடராசப் பெருமான் வாரி வழங்குகின்றான். அவனுடைய மலர்ப் பொற்பாதத்தில் அன்பு வைப்பவர்களுக்குக் காதலால் மிக்க மகிழ்ச்சி ஏற்படும். உடனே தம்மை அறியாமலேயே அவர்கள் மனத்தில் இறைவனுடைய அபார சக்தி பயத்தை உண்டாக்கும். அன்பு மிகுதியால் அவர்கள் விழுவார்கள் பின்னர் எழுவார்கள். உடல் தளர்ச்சி பெறும். அவர்களுடைய ஐம்பொறிகளின் அறிவு கெட்டுத் தன் நினைவும் அறும். அவர்களுடைய திறமையும் குறைந்துபோகும். இறைவனுடைய நடனத்தை அனுபவித்த உடனேயே புறப்பொருள்கள் மீது பற்று அறுந்து விடும். சித்தமானது புறப்பொருள்களைச் சீர்தூக்கிப் பார்க்கும் செயலை விட்டு விட்டுச் சும்மா நிற்கும். உடனேயே சோர்ந்த உடலானது மீண்டும் புத்துயிர் பெற்று நிற்கும். ஆசை உண்டாகாது. உள்ளத்தில் ஆனந்தம் பெருகும். இறைவனுடைய நடனத்தை மேலும் மேலும் பார்க்க வேண்டும் என்று ஆசை பொங்கி எழும்.

**"விம்மும் வெருவும் விழும்எழும் மெய்சோருந்**
**தம்மையுந் தாமறி யார்கள் சதுர்கெடுஞ்**
**செம்மை சிறந்த திருஅம் பலக்கூத்துள்**
**அம்மலர்ப் பொற்பாதத் தன்புவைப் பார்கட்கே"**

**(திருமந்திரம் - 2744)**

**"தேட்டறுஞ் சிந்தை திகைப்பறும் பிண்டத்துள்**
**வாட்டறும் கால்புந்தி யாகி வரும்புலன்**
**ஓட்டறும் ஆசை அறும் உளத்தானந்த**
**நாட்ட முறுக்குறு நாடகங் காணவே"**

**(திருமந்திரம் - 2745)**

திருக்கயிலையில் திருநந்திதேவரது அருள் பெற்றுப்பல ஆண்டுகள் யோகம் புரிந்து திருமூலர் என்று பின்னர் பெயர் பெற்ற யோகியார் தன்னுடைய நண்பரான அகத்திய முனிவருடன் சில நாட்கள் இருப்பதற்கெண்ணித் தென்னாட்டிற்கு வந்த போது பல திருத்தலங்களில் இறைவனைத்தரிசித்து, வழிபட்டு சிதம்பரத்தை வந்தடைந்தார். அங்கே தூக்கிய திருவடிகளை உடைய கூத்தபிராானை அன்பு பொருந்தி வணங்கினார். மனத்தில் மகிழ்ச்சி பொங்கியது. இவ்வானந்த அனுபவத்தில் அழுந்தி தன்வசமற்று நின்றார். ஐந்தொழில்களுக்கும், பிரபஞ்ச இயக்கத்திற்கும் காரணமாக இருக்கின்ற அருட்கூத்தினைக் கண்டு தற்போதம் இழந்து, இறைவனுடைய மெய்யுணர்வுடன் கூடி இருந்தார். அந்த இடத்தைவிட்டு நீங்க மனம் வராமல் அங்கேயே சிறிது காலம் விரும்பித் தங்கியிருந்தார் என்றும் சேக்கிழார் பெருமான் கூறுகின்றார்.

''எவ்வுலகும் உய்ய எடுத்தருளிய சேவடியாரைச்
செவ்வியவன் புறவணங்கிச் சிந்தை களிவரத் திளைத்து
வவ்வியமெய் யுணர்வின்கண் வரும் ஆனந்தக் கூத்தை
அவ்வியல்பிற் கும்பிட்டு அங்கு ஆராமை அமர்ந்திருந்தார்''.

(பெரிய புராணம் - 3570)

திருமூலர் ஓர் சிறந்த யோகியார் ஆவார். இறைவனுடைய அருளால் மெய்யுணர்வைத் தம்முள்ளேயே பெறுகிறார். உலக இயக்கமாகிய தனிப்பெரும் கூத்தைச் சிதம்பரத்தில் கண்டது மட்டுமின்றித் தன் உள்ளத்திலும் காண்கின்றார். கண்டபின்னர், பல காலம் யோக நிலையில் இருந்து மக்கள் உய்ய திருமந்திரம் அருளிச் செய்தார். அவருடைய உயிரானது உடம்பில் இருந்தாலும், உடம்போடு ஒட்டாத நிலையில் பன்னெடு நாள் இருந்தார்.

''தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகம்இருந் தேனே''

(திருமந்திரம் - 74)

இது எத்தகைய திருக்கூத்து? அது நிகரற்ற அருள்வெளியில் நடக்கும் திருக்கூத்து என்கிறார் திருமூலர். அந்தத் திருக்கூத்தைப் புரிபவன் மாணிக்கம் போன்ற ஒப்புயர்வற்ற தன்மையைப் பெற்றவன். அவனே சிவன் எனும் செம்மேனி அம்மான். அந்தப் பேரின்ப நடனத்தைப் பார்த்து இரசிப்பவர் அருட்சக்தியாகிய உமையாவாள். சீவராசிகளுடைய வினைக்கேற்ப அவர்களுக்கு அருளைப் புரிந்து வரும் ஆதிபரன் தனது திருக்கூத்தாகிய பேரியக்கத்தின் மூலம் பல்வேறான செயல்களைப் புரிந்து வருகின்றான். சிவமும் சக்தியும் சேர்ந்தே இந்தத் தொழில் நடைபெறுகிறது. மாணிக்க மணிக்குள்ளே மரகதம் ஒளி வீசுவதுபோல் இருக்கின்றது இந்தக் காட்சி. மற்றும் மரகத மண்டபத்தில் செவ்வொளி பொருந்திய மாணிக்கம் வீற்றிருப்பது போலவும் இருக்கின்றது, இந்தச் சிவன், சக்தி சேர்க்கையால் ஆகிய இயக்கம், திருக்கூத்து மாற்றுக் குறையாத பசும்பொன்னாலாகிய திருவம்பலத்தில் நடைபெறுவதைக்காண, அனுபவிக்க எவ்வளவு கொடுத்து வைக்க வேண்டும்? அத்தகைய பேற்றினை அன்பர்கள் பெறுகிறார்கள். திருமூலர் இந்தப் பெருமையைப் பெற்றவர். அவருடைய உணர்வுகள் ஊற்றுப் பெருக்கெடுத்து ஓடுகின்றன.

''எவ்வாறு காண்பான் அறிவு தனக்கெல்லை
அவ்வா றருட்செய்வன் ஆதியரன் தானும்
ஒவ்வாத மன்றுள் உமைகான ஆடிடுஞ்
செவ்வானிற் செய்ய செழுஞ்சுடர் மாணிக்கமே''

(திருமந்திரம் - 130)

"மாணிக்கத் துள்ளே மரகதச் சோதியாய்
மாணிக்கத் துள்ளே மரகத மாடமாய்
ஆணிப்பொன் மன்றில் ஆடுந் திருக்கூத்தைப்
பேணித் தொழுதென்ன பேறுபெற் றாரே" (திருமந்திரம் - 131)

நடராசப் பெருமானைத் தன் மனக்கண்களால் பார்க்கின்றார். உடுக்கை பொருந்தியது வலக்கை. உடுக்கையிலிருந்து எழும் ஒலி உற்பத்திக்கு ஆதாரமாக அமைகின்றது. இடக்கை வீசிய நிலையில் உள்ளது. அவற்றின் நடுவே அபயமளிக்கும் கை காத்தல் தொழிலைச் சுட்டிக் காட்டுகிறது. மற்றொரு இடக்கை அனலை ஏந்தி உள்ளது. சங்காரத் தொழிலைக் காண்பிக்கின்றது. முயலகன் ஆணவத்தின் வடிவம். அவனை மிதித்த திருவடி மறைத்தல் தொழிலைக் காட்டுகிறது. தூக்கிய திருவடி அனுக்கிரகத்தைச் செய்கின்றது. இந்த அற்புதமான திருக்கூத்து இறைவன் பேரானந்தத்துடன் நடத்தி வரும் ஐந்தொழில்களை எடுத்துக்காட்டும். இது உயிர்களுடைய மேம்பாட்டிற்கே நடைபெறுகிறது என்பதையும் உணருதல் வேண்டும். திருவைந்தெழுத்தும் இந்த ஆனந்தக் கூத்தையே எடுத்துக் காட்டும். உடுக்கையைப் பற்றிய கை ''சி'' என்ற எழுத்தைக் குறிக்கும். எடுத்து வீசிய கரம் ''வா'' ஆகும். அஞ்சல் அளிக்கும் அபயக் கரம் ''ய'' ஆகும். தீ ஏந்தி நிற்கும் இடக்கரம் ''ந''காரமாகும். முயலகன் மீது ஊன்றிய திருவடி ''ம'' காரமாகும். சகல தத்துவங்களையும் தன்னுள் அடக்கி நிற்கும் இறைவன் உடுக்கையால் தோற்றத்தையும் அபயக் கரத்தால் காத்தலையும், நீ ஏந்திய இடக்கையால் அழிப்பினையும், ஊன்றிய திருவடிகளால் மறைப்பையும், தூக்கிய திருவடியால் அனுக்கிரகத்தையும் செய்தருளுகின்றான்.

"மருவுந் துடியுடன் மன்னிய வீச்சு
மருவிய அப்பும் அனலுடன் கையுங்
கருவின் மிதித்த கமலப் பதமும்
உருவில் சிவாய நமவென வோதே" (திருமந்திரம் - 2798)

"அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரன் அங்கி தன்னில் அறையிற்சங் காரம்
அரனூற் றணைப்பில் அமருந் திரோதாயி
அரனடி யென்றும் அனுக்கிரகம் என்னே" (திருமந்திரம் - 2799)

இறைவனுடைய நடனம் உயிர்களைப் பல வகைகளில் ஆனந்தத்தில் அழுத்தி வைக்கும் செயல் உடையது. ஆகவே, அது ஆனந்தக் கூத்தாயிற்று. திருவருள் நிலையே ஆனந்தக் கூத்தாகும். இறைவன் பேரின்ப உருவினன். அவனுடைய பேரறிவும், பேராற்றலும் உயிர்களுக்குச் சதா இன்பமளிப்பதற்கே பயன்படுகின்றன. இதுவே சிவானந்தக் கூத்தாகும். அன்பர்களுக்குப் பேரின்பம் விளைவிக்கும் நடனமாகும். பரம்பொருள்

ஞானத்திற்கு இருப்பிடம். உயிர்களுக்கு அன்பு செய்யும் சக்தி ஆற்றலுக்கு இருப்பிடம். இவை இரண்டும் சேர்ந்து புரியும் ஆனந்த நடனம் உயிர்களுக்குப் பேரின்பத்தைத் தருகின்றது. உருவமில்லாத பெருமான் உயிர்கள் பொருட்டு ஐந்தொழில்களை நடத்துவதற்காக உமையுடன் சேர்ந்து புரியும் இந்தத் திருக்கூத்து இறைவனின் ஒப்பற்ற அருட்தன்மையை விளக்கிக் காட்டுகிறது. இந்தத் திருக்கூத்தே வேதங்களின் மெய்யுண்மைகளிலும், ஆகம அறிவிலும், கீதங்களின் உணர்வுகளிலும், அண்டங்கள் பலவற்றிலும், ஐம்பூதங்களின் சேர்க்கையிலும், எல்லாவிதமான புவனங்களிலும் விரிந்து நடந்து இறைவனின் மெய்யுண்மையைப் புலப்படுத்தும்.

**''வேதங்க ளாட மிகுஆ கமமாடக்**
**கீதங்க வாடக் கிளரண்டம் ஏழாடப்**
**பூதங்க ளாடப் புவன முழுதாட**
**நாதங்கொண் டாடினான் ஞானானந்தக் கூத்தே''**

**(திருமந்திரம் - 2729)**

அவ்வாறே ஐம்பூதங்கள், ஐம்பொறிகள், ஐம்புலன்கள், பல கலைகள், காலம், பல ஊழிகள், அண்டங்கள், பலவகைப்பட்ட அறிவுகள் ஆகிய எல்லாவற்றிலும் இறைவன் கலந்திருப்பதால், அவைகளுடைய இயக்கம் இறைவனுடைய திருக்கூத்தினை வெளிப்படுத்துவதாகும்.

இறைவன் ஆடும் திருநடனத்தைத் திருமூலர் சிவானந்தக் கூத்து, சுந்தரக் கூத்து, பொற்பதிக்கூத்து, பொற்றில்லைக் கூத்து, அற்புதக் கூத்து என்று வகைப்படுத்துகின்றார். அண்டங்கள், பிண்டங்கள், உயிர்களின் உள்ளங்கள், உடல்களின் பல நிலைகள் ஆகியவற்றின் இயக்கங்களையே இவ்வகைக் கூத்துக்களாகத் திருமூலர் விளக்குகின்றார்.

இறைவனுடைய நடனம் எல்லாத் திசைகளிலும் பரவி நிற்கின்றது. அருவ நிலையில் இருக்கக்கூடிய இறைவன் அருவுருவ நிலையிலும் பொருந்தி ஐந்தொழிலை நடத்துவான். இந்த அருவுருவ நிலையில் தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு, உச்சி ஆகிய அற்புதமான ஐம்முகங்கள் அமைந்துள்ளன. அவையே அகோரம், வாமதேவம், தற்புருடம், சத்தியோஜாதம், ஈசானம் எனப்படும். இந்த எல்லாப் பகுதிகளிலும் இறைவன் பொருந்தி ஒப்பற்ற நடனத்தைப் புரிந்து அருளுகின்றான். அதாவது ஐந்தொழில் இயக்கத்தை நடத்துகின்றான்.

**''தெற்கு வடக்குக் கிழக்குமேற்கு உச்சியில்**
**அற்புத மானதோர் அஞ்சு முகத்திலும்**
**ஒப்பில்பே ரின்பத்து உபய உபயத்துள்**
**தற்பரன் நின்று தனிநடஞ் செய்யுமே''** **(திருமந்திரம் - 2739)**

இறைவன் ஆகாயத்தில் நடனம் புரிகின்றான். அன்புகலந்த அடியார்களாகிய உத்தமர்களிடையே நடனம் புரிகின்றான். சீவராசிகளைக் காக்கும்பொருட்டு அவர்களுடைய மனவெளிகளில் தங்கி ஆடிக்கொண்டிருக்கின்றான். உயிர்களோடு நெருங்கிக் கலந்துள்ளான். அவைகளின் உணர்வில் உள்ளான். அவைகளின் உணர்விற்கு அப்பால் தன்னந்தனி நிலையிலும் இருப்பான். இவ்வாறெல்லாம் பல வகைகளில் திருக்கூத்துப்புரியும் சிவபெருமானைத்தான் இன்புற நாடித்தனது உள்ளத்தில் வைத்ததாகத் திருமூலர் கூறுகின்றார்.

**"உம்பரிற் கூத்தனை உத்தமக் கூத்தனைச்**
**செம்பொற் றிருமன்றுட் சேவகக் கூத்தனைச்**
**சம்பந்தக் கூத்தனைத் தற்பரக் கூத்தனை**
**இன்புற நாடிஎன் அன்பில்வைத் தேனே' (திருமந்திரம் - 2742)**

சிவன் நடனம் செய்தமையால் பிரிவின்றி நிற்கும் சக்தியும் ஆட, அதனால் சகல தத்துவங்களும் ஆட, சதாசிவம் ஆட, உயிர்களுடன் ஒட்டி நிற்கும் சித்தமும் ஆட, அசைவன, அசையாதன ஆகிய எல்லாம் ஆட, உடலிலே உள்ள ஆதாரங்கள் ஆட, நான்மறைகளும் ஆட சிவபெருமான் ஆனந்தக் கூத்து ஆடி அருளுகின்றான்.

**"தத்துவம் ஆடச் சதாசிவந் தானாடச்**
**சித்தமும் ஆடச் சிவசத்தி தானாட**
**வைத்த சராசரம் ஆட முறையாட**
**அத்தனும் ஆடினான் ஆனந்தக் கூத்தே" (திருமந்திரம் - 2789)**

இந்த ஆனந்த நடனத்தைத் தம்முள் கண்டவர்கள் திருமூலரைப் போன்ற யோகிகள். உயிர்களுக்கு உலக அனுபவங்களைக் கொடுத்து, மலங்களை நீக்கி, ஞானத்தைக் கொடுத்து முக்தி இன்பத்தை வழங்குவதே இறைவனுடைய அருட்சக்தியாகும். இதையே நடனமாகக்கண்டு, இந்த நடனத்தைத் தம்முள் சூக்கும நிலையில் யோகிகள் உணர்ந்து கொள்வார்கள். இந்த ஞான நடனம் நம்முடைய உடலிலேயே ஏழு ஆதாரங்களில் நடைபெறுகின்றது என்று நம்நாட்டுச் சித்தர்கள் கண்டறிந்தார்கள். நம்முடைய உயிர்ப்பின் அசைவிலே இந்த உண்மையை அவர்கள் தெரிந்து கொண்டார்கள். பிராணாயாமம், யோகம், தியானம், சமாதி போன்றவைகளைக் கடைப்பிடித்து, உயிர்ப்பினை ஒடுக்கி, ஐம்புலன்களைக் கட்டுப்படுத்தி, உள்ளத்தைத் தெளிய வைத்து, களிம்புகள் நீங்கிய நிலையில் அருளாளர்கள் மெய்ப்பொருளின் அற்புத ஆற்றலைத் தம்முள் கண்டு கொண்டார்கள். சிவபெருமானுடைய ஆடும் திருவடியையும், அந்த ஆட்டத்திலிருந்து உதிக்கும் நாதத்தையும், அந்த நாதத்திலிருந்து வெளிப்படும் ஓசைகளையும், ஒலிகளையும், பற்பல அசைவுகளையும் தனது உள்ளத்தில் கண்டதாகத் திருமூலர் கூறுகின்றார். அதேமாத்திரத்தில்,

வினையும், வினையால் வரும் பிறவித் துன்பமும் தன்னை நீங்கி நிற்பதையும் திருமூலர் கண்டறிந்தார்.

**''ஆடிய காலும் அதிற்சிலம் போசையும்**
**பாடிய பாட்டும் பலவான நட்டமுங்**
**கூடிய கோலங் குரூபரன் கொண்டாடத்**
**தேடியு ளேகண்டு தீர்ந்தற்ற வாறே''.** (திருமந்திரம் - 2760)

இறைவன் ஆடும் நடன அரங்கை வெளியே போய்த்தேட வேண்டியதில்லை. இந்த உடலிலேயே இருக்கின்றது என்பார் திருமூலர். இறைவனை நம்முள் தியானிக்கும் இடம் நெற்றிக்கு முன் புருவத்தின் மையமாகும். அங்கே மனத்தைப் பொருத்தி, தியானம் செய்து இறைவனை நாட வேண்டும். அந்த இடமே உயிரானது பற்றுவதற்குரிய இடமாக விளங்குகின்றது என்றால் அது இறைவன் வீற்றிருக்கும் இடமாகும். அதுவே திருச்சிற்றம்பலம். அவ்விடத்தைத் தீவிரமாகத் தியானிப்பவர்களுக்கு, உற்று உற்றுப் பார்ப்பவர்களுக்கு அது ஒளி விடும் மந்திரமாக விளங்கும். இதை அனுபவித்தவர் திருமூலர்.

**''நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி**
**உற்றுற்றுப் பார்க்க வொளிவிடு மந்திரம்**
**பற்றுக்குப் பற்றாய்ப் பரம னிருந்திடஞ்**
**சிற்றம் பலமென்று சேர்ந்துகொண் டேனே''**

(திருமந்திரம் - 2770)

சாதகர்களுக்கு இந்த அனுபவம் ஒப்பற்ற அறிவைத் தருகின்றது. சிவபிரானும், சக்தியும் உயிர்களோடு கலந்து, உயிருக்குயிராய் நின்று, இயங்கிக் கொண்டிருக்கும் உண்மை வெளிப்படுகின்றது. சீவகோடிகளுக்கு இறைவனே ஆதாரம். அவனாலேதான் அவையெல்லாம் ஆட்டி வைக்கப்படுகின்றன. எண்ணற்ற உயிர்கள் இறைவனுடைய அருளால் படம் போன்று மடிந்தும், ஒடுக்கப்பட்டும், விரிக்கப்பட்டும் இருக்கின்ற நிலைமை தெள்ளத்தெளிவாகின்றது. சிவபெருமானும் சக்தியும் உயிர்களையெல்லாம் இவ்வாறு அவைகளுடைய வினைக்கேற்ப ஆட்டுவிக்கும் அருட்சக்தியின் திறமையையும் தான் அறிந்து கொண்டதாகத் திருமூலர் கூறுகின்றார். இந்த நிலையே பேரறிவுமாகும்.

**''இடங்கொண்ட சத்தியும் எந்தை பிரானும்**
**நடங்கொண்டு நின்றமை நானும் அறிந்தேன்**
**படங்கொடு நின்றஇப் பல்லுயிர்க் கெல்லாம்**
**அடங்கலுந் தாமாய்நின் றாடுகின் றாரே''**

(திருமந்திரம் - 2768)

இவ்வாறு திருக்கூத்தின் உண்மைப் பொருளைத் தமக்குள் உணர்ந்தவர்கள் பேறு பெற்றவர்கள். தம்முள்ளேயே சுரக்கும் சிவானந்தத் தேனினைப்பருகி இன்புற்றவர்கள். இன்பம் மேலிட்டு அவர்களுடைய கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் நிரம்பி வழியும். நெஞ்சு உருகி நிற்கும். மேலும் மேலும் திருக்கூத்தைத் தரிசிக்கத் தோன்றும். சுவையுள்ள உணவுப் பொருளை நினைத்தபொழுதே நாவில் நீர் சுரப்பதுபோல, அன்பர்களுடைய உள்ளம் திருக்கூத்தின் காட்சியால் மெய்மறந்து நிற்கும்.

**"புளிக்கண் டவர்க்குப் புனலூறு மாபோற்**
**களிக்கும் திருக்கூத்துக் கண்டவர்க் கெல்லாம்**
**துளிக்கும் அருட்கண்ணீர் சோர்நெஞ் சுருக்கும்**
**ஒளிக்குள் ஆனந்தத்து அமுதூ றும் உள்ளத்தே"**

**(திருமந்திரம் - 2778)**

சான்றோர்கள் தங்கள் அனுபவத்தில் கண்ட இந்த மகத்தான உண்மையை நாம் காண விரும்பினால் அந்த விருப்பம் நிறைவேறுவதற்கு இப்பூவுலகில் தில்லைத் திருத்தலத்தைத் தவிர வேறு இடத்தைக் காண முடியாது. ஏனென்றால் அங்கேதான் ஆதியாய், நடுவாய், அளவிலா அளவுமாகிச், சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகி, ஏகம் ஆகி, ஆனாகிப் பெண்ணுமாகி இறைவன் திருநடனம் புரிகின்றான். அவன் கற்பனை கடந்த சோதி, கருணையே உருவமானவன். மனத்தாலும் வாக்கினாலும் இன்னதென்று சொல்ல இயலா அனுபவத்தைத் தருபவன். ஞானத்திற்கு இருப்பிடம். தில்லைத் திருச்சிற்றம்பலத்திலே எழிலுடன் திருக்கூத்துப் புரிகின்ற அந்த இறைவனுடைய திருவடிகளைப்பேணி, திருமூலர் போன்ற ஞானிகள் பெற்ற பேரின்பத்தை நாமும் பெறலாம். சேக்கிழார் பெருமானுடைய அற்புதமான திருப்பாடல் இதோ:-

**"கற்பனை கடந்த சோதி கருணையே யுருவ மாகி**
**அற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்**
**சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்து ணின்று**
**பொற்புட னடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி".**

**(பெரியபுராணம் - 351)**



# 22. ''அறிவுதயம்''

என்னுடைய சொந்த ஊர் ஒரு சிறு கிராமம். அந்தக் கிராமத்தின் நடுவில் ஓர் அழகிய குளம் இருந்தது. அந்தக் குளத்தில் எப்பொழுதும் நீர் நிரம்பி நிற்கும். தாமரை மலர்கள் பூக்கும் தடாகம் அது. அக்குளத்தில் மீன்களும் தவளைகளும் சேர்ந்து வாழ்ந்தன. குளத்தின் கரையில் ஒரு பெரிய அரச மரம் இருந்தது. அந்த அரச மரத்தின் நிழலில் பல ஆண்டுகளாக ஒரு பிள்ளையார் அமர்ந்திருந்தார். குளத்தில் குளிக்க வந்தவர்கள் எல்லோரும் குளித்து விட்டு அந்தப் பிள்ளையாரைத் தரிசித்து வலம் வந்து வணங்கிப் போவது வழக்கம். குளத்திற்குச் சற்று தூரத்தில் காவிரி ஆறு பரந்த மணற்பரப்பில் ஓடியது.

அந்தக் குளத்தில் பல நாட்களாக ஓர் தவளை தனது குடும்பத்துடன் வாழ்ந்து வந்தது. குளத்திலுள்ள எல்லா உயிரினங்களையும் நன்கு தெரிந்திருந்தது. குளத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் சென்று பார்த்து, அந்தக் குளத்தைப் பற்றிய முழுமையான அறிவைப் பெற்றிருந்தது. வயதான தவளையாதலால் அதற்கு அந்தக் குளத்தில் நடந்த எல்லா நிகழ்ச்சிகளும் நன்கு தெரியும். சொல்லப்போனால் குளத்தைப் பற்றிய எல்லா அறிவும் இந்தத் தவளை பெற்றதாக இருந்தது. தானுண்டு, தனது குடும்பம் உண்டு. அந்தக் குளமும் உண்டு என்கிற உணர்வின் அடிப்படையில் அந்தத் தவளை வாழ்ந்து வந்தது. அந்தத் தவளையிடம் போய் ''தவளையே, இந்த மாயையான வாழ்க்கையை இன்னும் எவ்வளவு நாட்கள் வாழ்ந்து காட்டப்போகின்றாய்?'' என்று கேட்டால் அந்தத் தவளைக்குப் புரியுமா?

குளக்கரையில் இருந்த அரச மரத்தில் ஒரு காக்கை ஒரு நல்ல கூட்டைக்கட்டி வைத்திருந்தது. அந்தக் கூட்டில் காக்கை முட்டையிட்டு, குஞ்சுகளைப் பொரித்து, குஞ்சுகளுக்குப் பறக்கும் சக்தி வரும் வரை அவற்றிற்கு உணவைச் சேகரித்துக் கொண்டு போய் கொடுக்கும். ஒரு நாள் அந்தக் கூட்டில் காக்கையின் குஞ்சுகள் இல்லாத போது ஒரு குயில் தன்னுடைய முட்டையை அங்கே விட்டுச் சென்றது. காக்கை திரும்பி வந்து அந்த முட்டையைப் பார்த்தது. ஆனால், அது குயிலினுடைய முட்டை என்று அடையாளம்க் கண்டுகொள்ள காக்கைக்குப் போதிய அறிவு இல்லை. காக்கையும் அந்தக் குயிலினுடைய முட்டையை அடைகாத்துக் குஞ்சு

பொரித்தது. குயிற் குஞ்சு முட்டையிலிருந்து வெளிவந்த பிறகு கூடக் காக்கைக்கு வேற்றுமையை அறிந்து கொள்ள இயலவில்லை. தன்னுடைய குஞ்சைப்போல குயிற்குஞ்சையும் வளர்த்தது. ஏன் என்று கேட்கவில்லை. தனதில்லை என்று உணர்ந்து கொள்ளவில்லை. மயக்கத்தால் காக்கை அக்குயிற்குஞ்சை வளர்த்தது.

**''குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைக்கூட் டிட்டால்**
**அயிர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின் றதுபோல்**
**இயக்கில்லைப் போக்கில்லை யேனென்ப தில்லை**
**மயக்கத்தால் காக்கை வளர்க்கின்ற வாறே''**

**(திருமந்திரம 488)**

குளக்கரையில் வீற்றிருந்த பிள்ளையார் ஒரு நாள் அந்தக் குளத்தைப் பறறி எல்லாம் அறிந்திருந்த தவளையிடம் பேச்சுக் கொடுத்தார். ''உனக்கு இந்தக் குளத்தைப் பற்றி எல்லாம் தெரியும் அல்லவா?''

''தெரியும் சுவாமி''

''இந்த குளத்தைவிடப் பதின்மடங்கு நீர்ப்பரப்பைக் கொண்ட ஒன்று இருக்கின்றது. அது உனக்குத் தெரியுமா?'' பிள்ளையார் வினாவினார்.

''அது எப்படி இருக்க முடியும்? சுவாமி. நான் இருக்கும் குளத்தை விடப் பெரியதாக ஒன்று இருக்கும் என்று நான் நம்பவில்லை'' என்று தவளை பதில் கூறியது.

''அப்படி ஒன்று இருக்கின்றது என்பதை நான் காண்பிக்கின்றேன், பார்'' என்று பிள்ளையார் சொல்லி அந்தத் தவளையைத் தன்னுடைய ஆற்றலினால் குளத்தில் இருந்து தூக்கி விண்வழியாகக் காவிரி ஆற்றைப் பார்க்கச் செய்தார். கடலைப் பார்க்கச் செய்தார். திருப்பித் தவளையைக் கொண்டு வந்து குளத்திலேயே விட்டு விட்டார்.

''என்ன இப்போதாவது நம்புகிறாயா?'' என்று பிள்ளையார் கேட்டார். தவளைக்கு நா எழவில்லை. பயத்திலும், வியப்பிலும், ஆச்சரியத்திலும் தவளை மூழ்கி இருந்தது. குளம் குளம்தான். கடல் கடல்தான் என்கிற உணர்வில் தவளையின் எண்ணம் அழுந்தியிருந்தது. கிணற்றைப் பற்றிய அறிவு சிற்றறிவாகும். கடலைப் பற்றிய அறிவு பேரறிவாகும். சிற்றறிவிலே ஈடுபட்டுத்தன்னைப் பற்றிப் பெரிதாக நினைத்துக் கொண்டிருந்த தவளை பேரறிவை எதிர்நோக்கியவுடன் அடித்துக் கொண்டு வரும் ஆற்று வெள்ளத்தில் அகப்பட்டது போல நின்றது. அதனுடைய சிற்றறிவு பேரறிவில் அடங்கியது. அதற்கான வழியை அந்தப் பிள்ளையாராகிய குருவே தவளைக்குக் காட்டி, பேரறிவின் உண்மை இயல்பை விளக்கினார்.

உயிர்களுடைய நிலையும் இப்படியேதான். இறைவனுடைய அருளால் உயிர்கள் ஐம்பூதங்களால் ஆன உடல்களைப் பற்றுகின்றன. இது

அவைகளுடைய வினைக்கேற்ப நடைபெறுகிறது. ஐம்பொறிகளும், ஐம்புலன்களும், மனம், புத்தி, அகங்காரம் ஆகிய அந்தக்கரணங்களும் சேருகின்றன. தான் என்கின்ற நினைப்பு உயிர்களிடையே தோன்றுகின்றது. ஐம்புலன்களுடைய சேர்க்கையால் விஷய வாசனைகள் உயிரை வந்து அடைகின்றன. அறிவு பிறக்கின்றது. குழந்தை முதலில் தாயை அறிந்து கொள்கின்றது. பின்னர் தந்தையைத் தெரிந்து கொள்கின்றது. பின்னர் உலகத்தைத் தெரிந்து கொள்கின்றது. மனிதன் வளர வளர அறிவும் வளருகின்றது. இந்த அறிவின் வளர்ச்சி மனிதனைப் பல சாதனைகள் செய்ய தூண்டுகின்றது. பிரமிக்கத்தக்க முறையில் விஞ்ஞான சாதனைகள் பெருகுகின்றன. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு காணாத விஞ்ஞான அதிசயங்களை இப்பொழுது நாம் கண்டு வியக்கின்றோம். மனிதனால் முடியாத காரியமே இல்லையென்று சொல்லுமளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்து வருகின்றது.

ஆனாலும் மனிதன் எவ்வளவு சாதித்தாலும் அவனுக்கு இருப்ப்து சிற்றறிவுதான். அவன் அறியாதவைகளே அதிகம். **''கற்றது கைம்மண் அளவு; கல்லாதது உலகளவு''**. உயிரினுடைய அறிவின் தன்மையைப் பற்றி மேலும் சற்று சிந்திக்க வேண்டும். உயிர் அறிவுத் தன்மையை உடையது. அதே நேரத்தில் அநாதியானது. ''அறிவு அறிவு என்ற அறிவு அநாதி'' என்பார் திருமூலர். ஆனால், அறிவாகிய உயிர் எப்போதும் ஒன்றைச் சார்ந்தே இருக்கும் இயல்பைக் கொண்டது. இப்போது நமது உயிரானது உடம்பைச் சார்ந்துள்ளது. ஆகவே, நம்முடைய உம்பின் வழியாகக் கருமங்கள் நிறைவேறுகின்றன. இச்சைகள் செயல்படுகின்றன, செயல்கள் நடந்தேறுகின்றன. இதனால் சிறிதளவு நமக்கு அறிவு விளக்கம் கிடைக்கின்றது. உயிரினுடைய அறிவானது பற்றப் பற்றப் பொருள்களில் அழுந்தும் இயல்பு உடையது. பளிங்கின் முன்னால் மாணிக்கத்தை வைத்தால் பளிங்கு மாணிக்கத்தின் நிறத்தைப் பெற்று விளங்குகின்றது. வேறொரு நிறம் கொண்ட பொருளை அதன் முன்பு வைத்தால் அந்தப் பொருளின் நிறத்தினைக் கொண்டு விளங்குகின்றது. ஆகவே, உயிரினுடைய அறிவின் தன்மையானது தான் சார்ந்த பொருளின் தன்மையைப் பின்பற்றி இருக்கும். நாம் கண்களால் பார்க்கின்றோம். ஆனால் இருளில் பார்க்க முடிவதில்லை. கண்ணினுடைய காணும் இயல்பு இருளில் அழுந்தி இருள்மயமாகி விடுகிறது. கண்ணாடிக்குப் பிரதிபலிக்கும் தன்மை உண்டு. ஆனால், கண்ணாடி முழுவதிலும் மாசு படிந்திருந்தால் கண்ணாடி பிரதிபலிப்பதில்லை. ஆகாயம் பகலில் சூரியனோடு கூடி இருக்கும் பொழுது ஒளி பெற்று விளங்குகின்றது. இரவு இருளில் தானும் இருள்மயமாகக் கிடக்கின்றது. அதேபோல உயிரின் அறிவும் சார்ந்த பொருளின் தன்மையைப் பெற்றிருக்கும். உமாபதி தேவநாயனார் இதனை **''இருளில் இருளாகி எல்லிடத்தில் எல்லாம் பொருள்கள் இலதோ புவி''** என்று திருவருட்பயனில் கூறுகின்றார்.

பொறிகளும், புலன்களும் உடலுக்கு வெளியேயுள்ள பொருள்களை அந்தக் கரணங்களுக்குச் சுட்டிக் காட்டுகின்றன. அந்தக் கரணங்கள் வழியாக உயிரானது வெளிப்பொருள்களைப் பற்றிய அறிவினைப் பெறுகிறது. ஆனால், பொறிகள், அந்தக்கரணங்கள் போன்றவை சடப் பொருள்களாகும். தாமாக மற்றவைகளை அறியும் திறனை அவை பெறவில்லை. அறியும் திறமை உயிரிடம் மட்டுமே உள்ளது. ஆனால், உயிரோ சார்ந்த பொருள்களையே அறிந்து கொள்கிறது. இதன் காரணமாக உயிர் விஷய அறிவிலேயே அழுந்திக் கிடக்கிறது. விஷய அனுபவங்கள் உயிருக்கு இன்பத்தையும் துன்பத்தையும் மாறி மாறித் தருகின்றன. நல்வினையும், தீவினையும் சேர்ந்து கொண்டு வருகிறது. வினைக்கூட்டங்களின் விளைவாக இறப்பும், பிறப்பும் மாறி மாறி வருகின்றன. ஒவ்வொரு பிறப்பிலும் உயிர்கள் எத்தனையோ துன்பங்களை அனுபவிக்கின்றன. **"எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்"** என்பார் மாணிக்கவாசகர். ஆயினும், போகங்களைத் தவிர்த்து இறைவனைப் பற்ற வேண்டும் என்கின்ற நாட்டம் உடனுக்குடன் ஏற்படுவதில்லை.

இதுவும் இறைவன் அருளன்றோ! **"அருளே எல்லாம்"** என்பது சிவஞானசித்தியார் வாக்கு. போகத்தை நுகர்வதற்கான சக்தியையும், சூழ்நிலையையும் கொடுத்து உதவுவதே அந்த அருள்தான். அந்த இறையருள் இன்றி ஒன்றும் நடக்காது. அநாதியே உயிருடன் சேர்ந்து நிற்பது ஆணவமலமாகும். அந்த நிலையில் உயிர்களுடைய அறிவு மறைப்புண்டு கிடக்கின்றது. உயிருடன் உடல் சேர்ந்தபொழுது உயிரின் அறிவு விரிவடைகின்றது. எனினும், அந்த அறிவு சிற்றறிவே ஆகும். சிற்றறிவின் மூலமாக நாம் அடைய வேண்டியது முற்றறிவாகும். முற்றறிவு என்பது தன்னைப் பற்றிய, தன்னைக் கட்டி நிற்கின்ற பாசங்களைப் பற்றிய, இறைவனைப் பற்றிய உணர்வு நெறியிலுள்ள அறிவாகும். ஐம்புலன்களின் சேர்க்கையில் கிடைக்கும் அறிவு ஆராய்ச்சி அறிவாகும். ஆனால் முற்றறிவானது அனுபவத்தின் அடிப்படையில் கிடைக்கின்றது. அது இறைவனுடைய அருளாலே கிடைக்கின்றது. சிற்றறிவைப் பயன்படுத்தும் பொழுது உயிரானது அறிவினாலே, ஆராய்ச்சியாலே பார்க்கிறது. **"முகத்தின் கண்கொண்டு பார்க்கும் மூடர்காள்"** என்பார் திருமூலர். முற்றறி வினாலே செயல்படும்பொழுது அருளாலே எதையும் பார்க்கும் தன்மை வெளிக்கிளம்புகிறது. **"அகத்தின் கண்களால் காண்பதே ஆனந்தம்"** என்பார் திருமூலர். முற்றறிவும் அருளும் ஒன்றே. அருள் தோன்றத் தொடங்கும் பொழுது முற்றறிவு உயிர்களிடத்தில் விளங்கத் தொடங்குகின்றது. தாயுமானவர் இந்தக் கருத்தை வெகு அழகாகச் சொல்லுகின்றார்:

**"அருளால் எவையும்பார் என்றான் - அதை**
**அறியாம லேஎன்றன் அறிவாலே பார்த்தேன்;**
**இருளான பொருள்கண்ட தல்லால்-கண்ட**
**என்னையும் கண்டிலன் என்னேடி தோழி"**

**''அருட்கண்ணால் நோக்காதார் அல்லாதாரே''** என்பதும் அப்பர் திருவாக்காகும்.

காரைக்கால் அம்மையார் விஷய அனுபவங்களால் கிடைக்கும் அறிவால் ஆராயும் நிலையைக் கடந்தவர். அருளே உலகுக்குக் காரணமானது என்று அவருக்கு நன்கு தெரியும். அதைவிட முக்கியமானது தான் மெய்ப்பொருளைக் கண்டு கொண்டது இறைவனுடைய அருளாலே என்றும் உணர்ந்து கொண்டவர். சிற்றறிவைவிட்டு முற்றறிவைப் பெற்றவர். உயிரின் அறிவுத் திறமை இறைவனைச் சார்ந்துவிட்டதன் காரணமாக, உயிரின் அறிவு முழுமையும் அருளாக அவர் கண்களுக்குத் தென்படுகின்றது.

**''அருளே உலகெலாம் ஆள்விப்ப(து), ஈசன்**
**அருளே பிறப்பறுப்பது; ஆனால் - அருளாலே**
**மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன், எஞ்ஞான்றும்**
**எப்பொருளும் ஆவ(து) எனக்கு''.**

உயிருக்கு அறியும் திறமை இருந்தும் அதைத் தானாக அறிந்து கொள்வதில்லை. **''கண்ணொன்று பல காணும், தனைக் காணா''** என்னும் திருமந்திர அடி இந்தக் கருத்தை விளக்குகின்றது. உயிர் குடிபுகுந்துள்ள உடலும், அதைச் சார்ந்த கருவிகளும் ஜடப்பொருளாகும். உயிரானது இந்தத் தத்துவங்களுடன் பொருந்தாதபொழுது அவை அறிவில்லாதவை என்பது புலப்படும். அவ்வாறு இருந்தும் உயிரின் கண்களுக்கு இது புலப்படுவதில்லை. உயிரின் உண்மை நிலையை அறிவித்து உயிருக்குள்ள அறியும் தன்மையை உணர்த்துவதும் இறைவனுடைய அருளாகும். அருளானது உயிரின் மீது பதியும்பொழுது உயிருக்குத் தன்னுடைய உண்மை அறிவுத் தன்மை வெளிப்படுகின்றது. அறிகின்றவன் உயிர் என்பது அப்பொழுது தெளிவடைகின்றது. அதாவது தன்னைப் பற்றியே அறியாமை நிலையில் இருந்த உயிருக்குள்ள அறியும் சக்தி இறைவனுடைய அருளால் வெளிக்கொணரப்படுகிறது. **''பளிங்கில் பவளம் பதித்தான் பதியே''** என்பது திருமந்திரம்.

**''அறிவொன் றிலாதன ஐயேழும் ஒன்றும்**
**அறிகின்ற என்னை அறியா திருந்தேன்**
**அறிகின்றாய் நீயென் றருள்செய்தார் நந்தி**
**அறிகின்ற நானென்று அறிந்துகொண் டேனே''**

**(திருமந்திரம் - 2181)**

ஒவ்வொரு பிறவியிலும் உயிர் ஓரளவு பக்குவத்தைப் பெறுகின்றது. ஒவ்வொரு பிறவியிலும் இறைவன் உயிரின்பால் கருணை கொண்டு, அதை நன்னெறியில் செலுத்துதல் வேண்டி அந்த உயிரின் மீது இரக்கம்

வைக்கின்றான். இறை இரக்கமே சத்திநிபாதம் எனப்படும். முகத்தின் கண்களுக்குப் பதிலாக அகத்தின் கண்களை விழிப்படையச் செய்வது அந்தச் சத்திநிபாதமாகும். அருள், அகக்கண் விழிப்படைதல், அறிவு பெறுதல் போன்றவை ஒரே நிலையைக் குறிக்கின்றன. இந்த நிலையை அடைவதற்கு முன்னோடியாக இருப்பது சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலியவையாகும். உடலையும், உள்ளத்தையும் தூய்மைப்படுத்துவது சரியை, கிரியை, யோக வழிகளாகும். ஐம்புலன்களுடைய சேர்க்கையால் கூடிக்கிடக்கும் வெளிப்புற அனுபவங்களை வலுவற்றவைகளாகச் செய்து, உடலையும் உள்ளத்தையும் இறையுணர்வு பெறுவதற்குத் தயாராக்கிக் கொள்வதே சரியை, கிரியை, யோகம் போன்றவற்றின் முக்கிய கொள்கையாகும். இவற்றுடன் நிற்பது ஞானம். ஞானம் என்பது ஒரு பாதையாகவும், அந்தப் பாதையின் முடிவுமாகவும் உள்ளது. ஞான சாதனைகளைச் செய்வதன் மூலமாகவும் உள்ளத்தில் தூய்மையைப் பெறலாம். அந்தத் தூய்மையின் அடிப்படையில் சிற்றறிவு நீங்கி, முற்றறிவைக் காண வாய்ப்பும் நிகழலாம்.

உயிர் தங்கும் உடலானது ஐம்பூதங்களால் ஆனது. புலன்களும், இந்திரியங்களும் உடலுடன் சேர்ந்து நிற்கின்றன. அத்துடன் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கு அந்தக்கரணங்களும் சேர்ந்தே உள்ளன. மனம் புலன்கள் வழிச் சென்று விஷய வாசனைகளில் ஈடுபடுகிறது. அதற்குப்புத்தியும் அகங்காரமும் உதவுகின்றன. இவற்றால் நமக்குக் கிடைக்கக்கூடிய அறிவு சிற்றறிவாகும். இந்தச் சிற்றறிவிற்கு மேல் நமக்குக் கிடைக்கக்கூடிய பேரறிவு ஒன்று இருக்கின்றது. இது நமக்கு இறைவன் அருளால் கிடைக்கின்றது. ஆகவே, அருளே முதலாகும். அதை உணர்ந்தவுடன், எவற்றாலும் விவரிக்க முடியாத அடக்கம் ஒன்று உயிருக்குக் கிடைக்கின்றது. அகங்காரம் அல்லது நான் என்று வலியுறுத்தும் நிலைமை வலிவு இழக்கத் தொடங்குகின்றது. மனத்திற்கு ஒரு அடக்கமும் அமைதியும் வந்து சேருகிறது. அப்பொழுது உள்ளத்திலே சொல்லொணா அன்பு பெருகுகின்றது. இந்த அறிவையும், அடக்கத்தையும், அன்பையும் ஒன்றுசேரக் கூடி நீங்காதிருக்கின்ற நிலைமையை உள்ளம் பெறுகின்றது. உள்ளமானது இறைவன் வீற்றிருக்கக்கூடிய கோவிலாகின்றது. எப்பொழுதும் இறைவனுடைய ஒலிக்கின்ற கழல்களை அணிந்து கொண்டிருக்கும் திருவடிகளை என்றுமே மறவாத ஓர் ஒப்பற்ற ஞானத்தினை உயிரும் பெறுகின்றது.

**"அறிவும் அடக்கமும் அன்பும் உடனே**
**பிறியா நகர்மன்னும் பேரரு ளாளன்**
**குறியுங் குணமுங் குரைகழல் நீங்கா**
**நெறியறி வார்க்கிது நீர்த்தொனி யாமே"**

**(திருமந்திரம் - 1471)**

சரியை, கிரியை, யோகம் இம்மூன்றும் நம்மை பேரறிவுப் பாதையில் அழைத்துச் செல்லுகின்றன. அதாவது நாம் உடலும் உடலைச் சார்ந்த கருவிகள் மட்டுமே என்கின்ற நினைப்பு நீங்குகின்றது. ஆணவம், கன்மம், மாயை என்கின்ற மலங்கள் நம்மைக் கட்டுப்படுத்துகின்றன என்கிற உணர்வும், அதுவும் இறைவனுடைய அருள் என்பதும், அவற்றை அவிழ்ப்பதே நம்முடைய நோக்கமாக இருக்க வேண்டும் என்பதும், அவைகளின் உண்மையான தன்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதும் நம்முடைய உள்ளத்திலே தோன்றத் தொடங்கிய பின்னர் மெய்ப்பொருளைப் பற்றிய அறிவு உதயமாகிறது. மெய்ப்பொருளை உணர்வதே ஞானமாகும். **''சன்மார்க்க சாதனம்தான் ஞானம், ஞேயமாம்''** என்பார் திருமூலர். அந்த நிலையில் எல்லாமே மெய்ப்பொருள் என்கின்ற உணர்வு உள்ளத்தில் பெருக்கெடுத்து ஓடுகின்றது. மாணிக்கவாசகப் பெருமான் இதையே **''ஒன்று நீ அல்லை அன்றி ஒன்று இல்லை''** என்று பாடுகின்றார். **''மற்று ஒருபொருளும் இன்றி நீ நின்றமையால்''** என்ற திருவாய்மொழியின் கருத்தும் இதுவே. எல்லாமே சிவனுடைய உடைமை, அடிமை என்கிற உணர்வும் தோன்றுகின்றது. எல்லாமே அவனுக்கே உரித்தாதல் என்கிற எண்ணமும் தலைநிமிர்ந்து நிற்கின்றது. **''என் தாயோடு என் அப்பன் ஏழேழு பிறவியும் அன்றே சிவனுக்கு எழுதிய ஆவணம்''** என்று திருமூலர் எடுத்துக் காட்டுகின்றார். இத்தகைய ஞானம் பெற்ற ஞானிகள் இறைவனிடத்தில் நீங்காத அன்பு வைக்கின்றார்கள். அவனுடைய திருவருளின் தன்மையைப் பற்றி வியக்கின்றார்கள். அவனுடைய திருவடிகளைப் பெறுதலையே சிவபாவனையாகக் கிடைக்கப் பெறுவர். அந்த ஞானமாவது உள்ளத்திலே ஆழப்புகும் போது இறைவன் என்கிற பேரறிவை முற்றிலும் அறிந்து அதிலேயே அழுந்தி விடுவார்கள்.

**''தன்பால் உலகும் தனக்கு அருகாவதும்**
**அன்பால் எனக்கு அருளாவதும் ஆவன**
**என்பார்கள் ஞானமும் எய்துஞ் சிவோகமும்**
**பின்பாலின் நேயமும் பெற்றிடுந் தானே''**

**(திருமந்திரம் - 1469)**

உயிர் அறிவுமயமானது. ஆனால் ஆணவத்தின் வலிமையால் உயிருடைய தன்மை உயிரிடமிருந்து மறைப்புண்டு கிடக்கின்றது. சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவை உயிருக்கு அதனுடைய உண்மைத் தன்மையை இறைவனுடைய அருளால் சுட்டிக் காட்ட உதவுகின்றன. முக்கியமாக ஐம்புலன்களை நமது கைவசம் வைத்துக் கொள்ள வேண்டும். அவை போகும் வழியே மனமும் செல்லக்கூடாது. ஐம்புலன்களும் மதம் கொண்ட ஐந்து யானைகளைப் போன்றவை. அவற்றை அடக்கி உள்ளத்தில் ஞானத்திரியைத் தூண்டி அகக்கண்களால் அறிவைக் காண முயல வேண்டும். அவ்வாறு செய்பவர்களுக்கு உயிரானது சோதி வடிவாகத் தோன்றும்.

உள்ளத்தில் வியாபித்துக் கொண்டிருக்கக் கூடிய பேரறிவின் தன்மை புலப்படும். இறைவனுடைய திருவடிகளைச் சேருதலும் சுலபமாகி விடுகிறது.

**"ஆனைகள் ஐந்தும் அடக்கி அறிவென்னும்**
**ஞானத் திரியைக் கொளுவி அதனுட்புக்**
**கூனை இருளற நோக்கும் ஒருவற்கு**
**வானக மேற வழியெளி தாமே"** (திருமந்திரம் - 2316)

உயிர் பொறிகள், கரணங்கள் இவற்றுடன் சேர்ந்திருக்கும்பொழுது உயிரினுடைய அறிவு விஷய அனுபவங்களைச் சார்ந்து நிற்கின்றது. பின்னர் இறைவனுடைய அருளால் உயிர் தன்னை முழுமையும் அறிந்து கொண்ட பின்னர் தானும் அறிவுமயம் என்று உணர்ந்து கொள்கின்றது. இதனை திருமூலர் **"தன்னை அறியும் அறிவு"** என்று கூறுகின்றார். உயிர் அறிவு வடிவமே என்கின்ற உண்மையும் புலப்படுகின்றது. அதாவது, பொறிகள், கருவிகள் இல்லாமல், இறைவனைச் சார்ந்திருந்தபொழுது எதையும் தன்னாலே அறிந்து கொள்ளக்கூடிய ஆற்றல் உண்டு என்பது தெளிவடைகின்றது. உயிர் அறிவுவடிவம் என்கின்ற உண்மை இறைவனுடைய கருணையால் உணர்த்தப்படுகின்றது. அந்த உண்மை உள்ளத்திலே பதியும் பொழுது உயிரும் தன்னை அறிவுவடிவம் என்று தெரிந்து கொள்கின்றது. இதையெல்லாம் உணர்த்துவது திருவருளேயாகும். அத்தகைய அறிவுக்கு அழிவில்லை, ஆக்கமும் இல்லை. அந்த அறிவுக்குப் பேரறிவான சிவமே ஆதாரப் பொருளாகும். உயிராகிய அறிவு தனது அறிவினாலே சிவமாகிய பேரறிவை அறிந்து கொள்ள முற்படுகிறது. அறிவு உதயமாகிறது. இதுவே வேதங்களின் முடிவான உபநிடதங்கள் கூறும் உண்மையும் ஆகும்.

**"அறிவு வடிவென்று அறியாத என்னை**
**அறிவு வடிவென் றருள்செய்தான் நந்தி**
**அறிவு வடிவென் றருளால் அறிந்தே**
**அறிவு வடிவென்று அறிந்திருந் தேனே"**

(திருமந்திரம் - 2357)

**"அறிவுக் கழிவில்லை ஆக்கமும் இல்லை**
**அறிவுக் கறிவல்லது ஆதாரம் இல்லை**
**அறிவே யறிவை யறிகின்றது என்றிட்டு**
**அறைகின் றனமறை யீறுகள் தாமே"** (திருமந்திரம் - 2358)

அத்தகைய அறிவைப் பெறுவதே அறிவென்றும் மற்றவை அறியாமை என்றும் திருமூலர் கூறுகின்றார். விஷய வாசனைகளும், விஞ்ஞான அறிவும் வளர வளர அவற்றின் சாதனைகளை அறிவின் சாதனைகள் என்று பெருமிதம் கொள்கின்றோம். இறுமாப்பு அடைகின்றோம். ஆனால், அது உண்மையான அறிவல்ல. மெய்ப்பொருளை அறிவதே உண்மையான அறிவாகும், மற்றதெல்லாம் அறியாமையாகும். ஆனால், இதை நம்முடைய

சாதனைகளுடைய பெருமையில் அழுந்தியிருக்கும்பொழுது அதைத் தவிர வேறொன்றும் இல்லை என்கின்ற தவறான எண்ணத்தில் மூழ்கிக் கிடக்கின்றோம். இந்த அறிவு என்னும் அறியாமையை ஒருவன் கடக்கும்பொழுது, உண்மையான அறிவினைப் பெறும்பொழுது, உலகத்தைப் பற்றிய அறிவைவிட அறியாமையே அழகிய தன்மையுடையது என்பதையும் உணருகின்றான்.

**''அறிவறி வென்றங் கரற்றும் உலகம்**
**அறிவறி யாமை யாரும் அறியார்**
**அறிவறி யாமை கடந்தறி வான்றால்**
**அறிவறி யாமை யழகிய வாறே''** **(திருமந்திரம் - 2362)**

திருமூலர் கூறுகின்றார்: ''ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றால் கட்டுண்டு வெகுகாலம் நான் என்னை அறிந்து கொள்ளவில்லை. உனது அருளால் நான் என்னை அறிந்துகொண்ட பின்னர் என்னைச் சுற்றியிருந்த இருள் அகன்றது. ஆனால், உன்னையே அறிந்த பிறகு வேறொன்றின் மீதும் மனம் செல்லவில்லை. அவ்வாறு என்னை அறியச் செய்வதும், தொடர்ந்து கைவிடாது எனக்குப் பேரின்ப அறிவினைப் புகட்டி வருவதும் எனது உயிருக்குயிராய் நிற்கும் இறைவனே.''

**''என்னை யறிந்திலேன் இத்தனை காலமும்**
**என்னை யறிந்தபின் ஏதும் அறிந்திலேன்**
**என்னை அறிந்திட்டு இருத்தலுங் கைவிடாது**
**என்னையிட் டென்னை உசாவுகின் றானே''**

**(திருமந்திரம் - 2366)**

இந்த அறிவு **''எல்லாம் அறியும் அறிவு''** எனப்படும். இந்த அறிவைப் பெற முயற்சி செய்யாமல் மற்றவைகளையெல்லாம் அறிந்தும் பயன் இல்லை. ஆனால், நம்முடைய அறத்தினாலும், அன்பினாலும், தவத்தினாலும், இறைவனுடைய அருளாலும் பேரறிவினைப் பெறக்கூடிய தெளிவினை நம்முடைய உள்ளத்திலே பெற்றால், அந்த அறிவு நம்முடைய உயிருக்குயிராக நிற்கின்ற இறைவனாகிய பேரறிவினுடைய தன்மையைப் பெற்றது என்றும் உணர்ந்து கொள்ளலாம்.

**''எல்லாம் அறியும் அறிவு தனைவிட்டு**
**எல்லாம் அறிந்தும் இலாபமங் கில்லை**
**எல்லாம் அறிந்த அறிவினை நானென்னில்**
**எல்லாம் அறிந்த இறையென லாமே''** **(திருமந்திரம் - 2596)**

இதே கருத்தை வைத்துத் திருநாவுக்கரசர் பெருமான் பின்வருமாறு பாடுகின்றார்.

**"என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான்**
**தன்னை நானும்முன் ஏதும் அறிந்திலேன்**
**என்னைத் தன்னடி யானென் றறிதலும்**
**தன்னை நானும் பிரானென் றறிந்தெனே"**

**(தனித்திருக்குறுந்தொகை)**

ஞானத்தின் சிகரமாக விளங்குபவர் மாணிக்கவாசகப் பெருமான் ஆவார். அவர் ஞானத்தின் திருவுரு. இறைவனின் பேரின்ப அருளை முழுவதும் பெற்றவர். தன்னிலை மறந்தவர். சீவ கரணங்கள் முழுவதும் சிவகரணங்களாக்கிக் கொண்டவர். அவருடைய உள்ளத்திலே பிரபஞ்சம் அத்துணையும் இறைவன் மயமாகத் தோன்றுகின்றது. **"யானேபொய், என் நெஞ்சும் பொய், என் அன்பும் பொய்"** என்று உடம்பு புளகித்து, நடுநடுங்கி, கண்களிலே ஆனந்தக் கண்ணீர் ததும்பக் கூறிக் கொள்கின்றார். "இறைவா! உனது அருளால் என் உயிரைச் சுற்றி மூடிக் கொண்டிருந்த மலங்களாகிய இருள் நீங்கி விட்டது. அறியாமை அகன்றது. அறிவு உதயம் ஆகிவிட்டது. என் உள்ளத்திலே ஞாயிறே போன்று நீ பிரகாசிக்கத் தொடங்கிவிட்டாய். உனது உண்மைத் தன்மையினை உணர்ந்து கொண்டேன். அந்த நினைப்பு என்றும் என்னை விட்டு நீங்காமல் நிற்கின்றேன். இன்னுமென்ன தெரியுமா? உன்னையன்றி வேறு பொருள் ஏதுமில்லை என்றும் கண்டுகொண்டேன். எல்லாப் பொருள்களும் அணுஅணுவாய் தேய்ந்து உன்னுடன் எப்பொழுதும் ஒன்றிக் கொண்டுள்ள தன்மையைப் பார்த்தேன். திருப்பெருந்துறையிலே வீற்றிருக்கும் சிவனே! என்னுடைய இருள் நீங்கியதன் காரணமாக நீ அல்லாமல் வேறு எதுவும் இல்லை என்கின்ற ஒப்பற்ற அறிவினைப் பெற்றேன். என்னே உன்னுடைய கருணை!".

**"இன்று எனக்கு அருளி இருள் கடிந்து உள்ளத்து**
**எழுகின்ற ஞாயிறே போன்று**
**நின்ற நின் தன்மை நினைப்பு அற நினைந்தேன்**
**நீ அலால் பிறிது மற்று இன்மை**
**சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்று ஆம்**
**திருப்பெருந்துறை உறை சிவனே**
**ஒன்றும் நீ அல்லை அன்றி ஒன்று இல்லை**
**யார் உன்னை அறியகிற்பாரே"**

மாணிக்கவாசகர் வியந்து நின்று இவ்வாறு தனது உள்ளக்கிடக்கையை வெளியிடும் பாடல் திருவாசகத்தில் **"கோயில் திருப்பதிகத்தில்"** வருகின்றது.

❋ ❋ ❋

# 23. ''நமன்வரின்''

ஒரு பெரியவர் சிறந்த சிவபக்தர் என்று ஊர்ப் பொதுமக்களால் போற்றப்பட்டார். தினந்தோறும் காலையிலும் மாலையிலும் அவர் ஊரிலிருந்த சிவன் கோயிலுக்குச் சென்று சிவலிங்கத்தின் எதிரே நின்று கொண்டு இறைவனைப் போற்றிப் பாடுவார், கண்ணீர் சொரிவார், தியானத்தில் நிற்பார். பல மணி நேரம் மெய் மறந்து இருப்பார். ''இறைவா! என்னை ஏன் இந்தப் பூமியில் விட்டு வைத்திருக்கின்றாய்? என்னை உடனே அழைத்துக் கொண்டு போ. உனது திருவடியைச் சேர நான் காத்துக் கொண்டிருக்கின்றேன். என்னைச் சோதிக்காதே!'' என்றெல்லாம் தனக்குத்தானே பேசிக் கொள்வார். ஒருநாள் அந்தக் கோயில் அர்ச்சகர் அந்தச் சிவபக்தருடைய உண்மை அன்பினைச் சோதிக்க விரும்பினார். சிவலிங்கத்தின் பின்னால் ஒளிந்து கொண்டார். வழக்கம்போல சிவபக்தர் கோயிலுக்குள் வந்து இறைவனைத் துதித்துப் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தார். ''அப்பனே! என்னை எப்பொழுது உனது திருவடிகளில் இணைத்துக் கொள்ளப் போகிறாய்?'' என்று கேட்டார்.

''பக்தா, உன்னுடைய அன்பை மெச்சினோம். உன்னை அழைத்துக் கொண்டு போகத் தயாராக இருக்கின்றோம். எமது தூதன் சில நிமிடங்களில் உன்னை வந்து அடைவான் நீ அவனுடன் புறப்பட்டு வந்து விடுவாயாக'' என்று ஒரு குரல் சிவலிங்கத்தின் பின்புறமிருந்து எழுந்தது. நமது பக்தரைப் பார்க்க வேண்டுமே! அவர் உடல் நடுங்கிற்று. அவரது உள்ளத்தைப் பெருத்த அச்சம் பற்றிக் கொண்டது. தவித்தார் அந்தச் சிவபக்தர். ஓடி ஒளிந்து கொள்ள இடம் தேடினார். 'இறைவா! இன்னும் சிறிது காலமாவது விட்டு வையப்பா!'' என்று வேண்டத் தொடங்கினார். வெறும் அர்ச்சகருடைய குரல் அவருடைய மனநிலையையே மாற்றி விட்டது. அவர் உருவத்தில்தான் சிவபக்தர். உள்ளத்தில் அன்று. உள்ளம் உலகத்தில் ஊன்றி நின்றது. உலகப்பற்று இருக்கும்வரை இறப்பைப் பற்றிய அச்சம் தொடரும். இது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று ஆயினும் நாம் பற்று அற்றவர்கள் போல் நடிக்கின்றோம். இந்தப் பொய்யுலகில் வாழ்க்கை என்னும் மேடையில் சதா நடந்து கொண்டிருக்கும் நாடகத்தில் இறைவனுடைய அடியார்கள்போல நடிப்பது மிகவும் வெறுக்கத்தக்கது. தானே இதைச் செய்து வருவதாகத் தன்னையே நொந்து கொள்கின்றார் மாணிக்கவாசகப் பெருமான்.

**"நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து, நான் நடுவே வீடு**
**அகந்தே புகுந்திடுவான், மிகப்பெரிதும் விரைகின்றேன்;"**
**(திருச்சதகம் - அறிவுறுத்தல்)**

அச்சம் பல வகை. சிலர் விலங்குகளைக் கண்டு பயப்படுகின்றார்கள். வேறு சிலர் மனிதர்களைக் கண்டு பயப்படுகின்றார்கள். மற்றும் சிலர் தங்களைப் பற்றியே பயந்து கொள்கின்றார்கள். தங்களுக்கு, உடலுக்கு, பதவி, பட்டம், அந்தஸ்து போன்றவற்றிற்கு முடிவு வந்து விடுமே என்கிற பயம் அரித்துத் தின்கிறது. எதையெடுத்தாலும் பயந்து, ஒவ்வொரு விநாடியும் சாகும் மனிதர்களையும் நாம் பார்க்கின்றோம். உயிர் போனால் எல்லாம் போய் விடும்.

**"குடமுடைந்தால் அவை ஓடு என்று வைப்பர்;**
**உடல் உடைந்தால் இறைப்போதும் வையாரே!"**

என்பார் திருமூலர். எனவே, இறப்பைப் பற்றிய பெரும் அச்சம் மனிதனைச்சதா வாட்டுகிறது.

நமது வாழ்க்கை, உடல், உடலைச் சார்ந்த கருவிகள், உட்கருவிகள் போன்றவற்றை மையமாக வைத்து இயங்கி வருகின்றது. நமது உடலைப் பற்றிய சிந்தனைகளே நமது மனதை நிரப்பி, நமது எண்ணங்களையும் கருத்துக்களையும் பொறிகள் வழியே கொண்டு செல்கின்றன. நாம் பெறும் அறிவும் அனுபவமும் இவற்றின் அடிப்படையிலேயே அமைகின்றன. பொறிகளுக்கும் புலன்களுக்கும் அப்பாலுள்ளவை நமக்குத் தெரிவதில்லை. மனிதர்கள், தேவர்கள், வானவர்கள் எல்லாருமே இந்தக் குறைபாட்டிற்கு ஆளானவர்கள். மரணமற்ற வாழ்வு வாழ வேண்டுமென்று தேவர்கள் விரும்பினார்கள். ஆனால், அவர்கள் முன் தோன்றியது அமிர்தமன்று. ஆலகால விஷம். தேவர்கள் பயந்து மூலைக்கொருவராக ஓடினார்கள். இறைவன் அந்த விஷத்தைக் கண்டத்தில் அடக்கி அவர்களுடைய பயத்தைப் போக்கினான். உடல் இன்பமே பெரிதென்று நினைத்து ஆசைகளை வளர்த்ததனால் வந்த விளைவு இது.

கிழக்கே எழுந்த சூரியன் மேற்கே மறைகின்றது. கன்று சில மாதங்களில் பெரிதாகி, எருதாகி, மூத்து பின்னர் விழக்கண்டும் நாம் நமது உண்மை நிலையை அறிந்து கொள்வதில்லை. நம்முடைய தாய் தந்தையரை இயற்கையாகவே வயோதிகத்தில் இழக்கின்றோம். சிறிது காலம் மிக வருந்துவோம். பின்னர் அந்த நினைவுகள் போய் நாம் மீண்டும் வாழ்க்கைச் சூழலில் புகும் நாளை எதிர்பார்த்து நிற்கின்றோம். பிறருக்கு எது வந்தாலும் அது நம்மைப்பாதிப்பதில்லை. ஆனால், நமக்கு மிகச் சிறிய துன்பம் வந்தாலும் நமது கண்களுக்கு அது ஒரு பெரிய மலை போல் தென்படுகிறது. அதே நேரத்தில் உடலின் அடிப்படையில் எத்தனை இன்பங்கள் பெற்றாலும் அவை நமக்குப் போதவில்லை. ஆசைத் தீயை மேலும் மேலும் வளர்த்து

வருகின்றோம். செல்வத்தை நாடி வாழ்க்கையை மையமாக வைத்து நாம் பெற்ற ஆற்றல் அனைத்தையும் இம்மைச் சுகங்களுக்கே செலவழித்து வருகின்றோம். ஆகவே, நாம் இறக்க விரும்பவில்லை. இறக்க அச்சப்படுகின்றோம். ஆனால், கூற்றுவனார் தனது பணியைச் செய்யத்தான் போகின்றார். சூலத்தைக் கையில் வைத்துக் கொண்டு காலத்தை எதிர்பார்த்து நிற்கின்றார். ஞானசம்பந்தப் பெருமான் மனத்தைப் பார்த்துக் கேட்கின்றார் ''ஏழை நெஞ்சே, எந்த நாளில் வாழ்வதற்காக இவ்வாறு மனத்தை வைத்துக் கொண்டிருக்கின்றாய்''.

..... ..... .....
..... ..... .....

**கொந்தவேல் கொண்டு ஒரு கூற்றத்தார் பார்க்கின்றார்;**
**கொண்டு போவார்;**
**எந்த நாள் வாழ்வதற் கேமனம் வைத்தியால்?**
**ஏழை நெஞ்சே!**

..... ..... .....
..... ..... .....

நமக்கு வாழ்நாள் போவதும் தெரிவதில்லை. சாகும் நாள் வருவதும் தெரிவதில்லை. நாம் செய்யும் வினைகள், அவற்றால் வரக்கூடிய விளைவுகள், தொடர்ந்து வரும் பாசங்கள், நம்மைப் பிடித்து ஆட்டும் பந்தங்கள் இவற்றைப் பற்றியும் நினைப்பதில்லை;

**''நீ நாளும் நன்னெஞ்சே,**
**நினைகண்டாய்; யார்அறிவார்**
**சாநாளும் வாழ்நாளும்?''**

ஆனால், மரணம் வருவது உறுதி. ஒரு நாள் புலன் ஐந்தும் கலங்குகின்றன. பொறிகள் நிலை கெட்டு விடுகின்றன. அறிவு அழிகின்றது. நெறி மயங்குகின்றது. கபம் தொண்டையை அடைக்கின்றது. நமது மனம் நம் வசமின்றிச் சுழலுகின்றது. உயிர் போகும் நேரம் நெருங்கி விடுகின்றதே! அப்போதும் நம்முடைய மனத்திலே இருக்கும் எண்ணமெல்லாம் நம்மைப் பற்றியே. அஞ்சாதே என்று அருள் செய்யும் இறைவனைப் பற்றியா நாம் நினைக்கப் போகின்றோம்?

**''புலன்ஐந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி**
**அறிவுஅழிந்திட்டு ஐம்மேல் உந்தி**
**அலமந்த போதாக, அஞ்சேல்என்று**
**அருள்செய்வான் அமரும் கோயில்**

தன்னிலை கெட்டு, கதிகலங்கி மயங்கிக் கிடக்கும்பொழுது நம்மைப் பாதுகாப்புச் செய்யும் அரண் ஒன்றேதான். அது இறைவனைப் பற்றிய

நினைவாகும். அவனுடைய அருளாலேயே இறைவனை நினைக்க வேண்டும் என்கின்ற எண்ணம் மனத்திலே உதிக்கின்றது. அது ஒரு நீண்டகாலப் பயிற்சி. மரணம் நெருங்கும்போது மட்டும் இறைவனை நினைக்க வேண்டும் என்று ஓர் ஆவல் எழுந்தாலும் அது நிலைக்காது. ஆயிரத்தில் ஒருவர் இறைவனை நினைத்துக் கொண்டே உடலை விட்டு நீங்குவார். அவர் அருள் பெற்றவர். இறைவனுடைய அருள் அவருக்கு முழுமையாக இருப்பதால் அவர் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை. தனது மனத்தைப் பக்குவப்படுத்தி மரணம் வரும் காலத்தை எதிர்நோக்கி, தனது பந்த பாசங்களையெல்லாம் களைந்து, இறைவன் நடமாடும் திருவீதியில் அவர்களும் நடக்கத் தொடங்கிய பிறகு அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை. இது ஞானசம்பந்தப் பெருமானுடைய திருவாக்காகும்.

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்கள் உயிருக்கு வினைக்கடலைச் சேர்க்கின்றன. இறப்புக்கும் பிறப்புக்கும் வித்திடுகின்றன. எல்லாவிதச் செல்வங்களையும் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் தலைப்பட்டு நிற்கின்றன. ஆனால், செல்வம் நிலையற்றது. செல்வத்தை நீக்கி இல்லத்தை அடைய வேண்டும் என்கிற உணர்வு இறைவன் அருளால் உள்ளத்திலே எழத்தொடங்கிய போது, செல்வத்தின் மீது உள்ள பற்றினால் நமது மனத்திலே எழும்பும் பய உணர்வும் நீங்குகின்றது. நமது நோக்கத்தைப் பற்றி நம்முள் தெளிவு ஏற்படும்பொழுது புலன்களின் தன்மை மாறுகிறது. புறப்பொருள்களின் ஆதிக்கம் குறைகின்றது. அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை. எமன் வந்தாலும் புறப்படத் தயாராக இருக்கின்றோம். திருமந்திரத்தின் தெளிவு மனத்தில் அமைதியைத் தோற்றுவிக்கின்றது.

**"தேற்றித் தெளிமின் தெளிந்தீர் கலங்கன்மின்**
**ஆற்றுப் பெருக்கிற் கலக்கி மலக்காதே**
**மாற்றிக் களைவீர் மறுத்துங்கள் செல்வத்தைக்**
**கூற்றன் வருங்கால் குதிக்கலு மாமே.** **(திருமந்திரம் - 172)**

இறவாத இன்ப அன்பினால் இந்த அமைதியைப் பெற்றவர் காரைக்கால் அம்மையார். இறைவனிடம் பிறவாமை வேண்டுகின்றார். அதே நேரத்தில் இறப்பும் பிறப்பும் தான் செய்த வினைப்பயனையொட்டி உள்ளது என்பதை அறிந்து கொண்டவர். இற்றவனிடமிருந்து எத்தகைய வரம் பெற வேண்டும் என்றும் நன்கு உணர்ந்து கொண்டவர். ஆகவே, ஒருவேளை மீண்டும் பிறக்க வேண்டியிருந்தால் **"இறைவா உன்னை நான் என்றும் மறக்காமல் இருக்க வேண்டும்"** என்று வேண்டுகிறார். காரைக்கால் அம்மையார் புத்திசாலி. அவர் உள்ளத்திலே தெளிவான குறிக்கோளை உடையவர். இறைவனிடம் என்ன கேட்க வேண்டுமென்று தெளிவாகத் தெரியும். மேலும் கேட்கின்றார்.

''இறைவா! நீ ஆடும்பொழுதெல்லாம் நான் உன் திருவடிக் கீழ் மகிழ்ந்து பாடி இருக்க வேண்டும்'' என்று வேண்டுகின்றார். ஆதியும்

அந்தமும் இல்லாத இறைவன் உயிர்கள் உய்வடைவதற்காக ஆதியும் அந்தமும் இல்லாமல் திருநடனம் புரிகின்றான். அம்மையாரும் ஆதியும் அந்தமும் இல்லாமல் அ வன் திருவடிகளின் கீழ் அமர்ந்து அந்த இன்பத்தைப் பருகிக் கொண்டிருக்கின்றார். யாருக்காக அவர் அச்சப்பட வேண்டும்?

அடியார்களுடைய இயல்பு இதுவே. இறைவனுடைய ஆணைவழியே இயங்கி வரும் ஐம்பெரும் பூதங்களும் ஒருவேளை தன் நிலையில் கலங்கினாலும் சிவபெருமானுடைய மலர்த் தாளினைத் தம் மனத்திலிருந்து ஒருபோதும் மறத்தல் இல்லாதவர்கள். இறைவன் மீது உள்ள ஒப்பற்ற காதலால் அந்த நிலையை அவர்கள் அடைந்தவர்கள். குற்றமற்ற குணமலை போன்றவர்கள். சேக்கிழார் பெருமான் திருக்கூட்டத்தினரின் சிறப்பை எடுத்துரைக்கும் சொற்கள் அச்சமின்மைக்கு ஒரு விளக்கமாகும்.

**''பூத மைந்து நிலையிற் கலங்கினும்**
**மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்**
**ஓது காத லுறைப்பி னெறிநின்றார்**
**கோதி லாத குணப்பெருங் குன்றனார்''**

**(பெரிய புராணம் - 142)**

இறைவனுடைய பேரருள் வெள்ளத்தில் ஊறித் திளைத்தார் திருநாவுக்கரசர். இறைவன் அவருக்குச் சூலை நோயைக் கொடுத்து ஆட்கொண்டான். நாவுக்கரசரும் இறைவனது பெரும் கருணைக்கடலுள் மூழ்கித் திளைத்தார். ஆனாலும், பல்லவ அரசனுடைய உதவியுடன் வஞ்சகர் நாவுக்கரசரை வருத்த வேண்டி அவர் மீது பல கொடிய செயல்களைப் புரிந்தவர். அவரைப் பல்வேறு சோதனைகளுக்கு ஆளாக்கினர். நாவுக்கரசர் தளர்ந்தாரில்லை. சிவபிரானுக்கு ஆளாவர் வேறொருவருக்கும் ஆளாகமாட்டார். இன்பத்திற்கும் துன்பத்திற்கும் அப்பாற்பட்ட ஒரு அரும்பொருளை உடலிடம் கொண்டபின் வேறொருவருக்கும் பணிசெய்து கிடக்க வேண்டியதில்லை. அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை. நமனைக் காலால் உதைத்த இறைவனை அடைந்த பின்னர் நமனை அஞ்ச வேண்டியது இல்லை; ஒருவருக்கும் பணிவதில்லை. நாவுக்கரசரின் திருத்தாண்டகத்தைப் படித்தாலே இயமபயம் பறந்தோடிவிடும்.

**''நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்;**
**நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்;**
**ஏமாப்போம் பிணியறிவோம் பணிவோ மல்லோம்;**
**இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை;**
**தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான**
**சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற்**
**கோமாற்கே நாமென்று மீளா ஆளாய்க்,**
**கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே''**

இறைவனுடைய அருளால் இவ்வுலகில் பிறவி எடுக்கின்றோம். இது நம்முடைய வினைக்கேற்ப நடக்கின்றது. **"வினைக்கு ஈடாய் மெய்கண்டு"** என்பார் திருமூலர். ஆனால், நாம் இவ்வுலகில் பிறந்ததன் நோக்கம் இறைவனுடைய பேரருளைப் பெற்று அவனுடைய திருவடிகளைச் சேருவதேயாகும். அவரவர் வினைக்கேற்ப இந்த முயற்சி ஒரு பிறவியில் முடியலாம் அல்லது பல பிறவிகள் தேவைப்படலாம். ஆனால், நம்முடைய குறிக்கோள் தெளிவாக இருக்க வேண்டும். **"வில்லி இலக்கு எய்த விற்குறிபோல்"** என்கிறது திருமந்திரம். நமது நோக்கம் நிறைவேற இந்தப் பிறவியைப் பயன்படுத்த வேண்டும். இது முள்ளை முள்ளாலே எடுப்பது போலாகும். ஆனால், நம்முடைய வினைகளின் காரணமாக அவ்வாறு செய்யாமல் மீண்டும் மீண்டும் பிறவிகள் தொடர்ந்து வரும் முயற்சிகளிலே ஈடுபட்டிருக்கின்றோம். ஆனால், அடியார்கள் இறைவனுடைய திருவடிகளைச் சதா மனத்தால் நினைத்தும், வாயினால் புகழ்ந்தும், உடம்பினால் வணங்கியும், தங்கள் உடல், பொருள், ஆவி மூன்றையும் இறைவனுக்கு அர்ப்பணித்தும் அவனுடைய திருத்தாள் சேர்ந்தவர்கள். காரைக்கால் அம்மையார் அத்தகையவர். "இறைவனுடைய திருத்தாளினை அடைந்தோம், நமக்கு இனி ஒரு துன்பமும் இல்லை. கர்மங்களுக்கு வலிமையைச் சேர்க்கும் பிறவிக் கடலை நீந்தி விட்டோம்" என்று தன் நெஞ்சிடம் சொல்லிக் கொள்கின்றார்.

**"இனியோநாம் உய்ந்தோம் இறைவன்தாள் சேர்ந்தோம்;**
**இனிஓர் இடர்இலோம் நெஞ்சே! - இனிஓர்**
**வினைக்கு உடலை ஆக்குவிக்கும் மீளாக்**
**கனைக்கடலை நீந்தினோம் காண்"**

**(அற்புதத் திருவந்தாதி)**

திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகருக்கு இறைவன் ஞானகுரு வடிவில் வந்து சிவஞான உபதேசம் செய்கின்றான். சிவதரிசனம் பெற்றார் மணிவாசகப் பெருமான். இறைவனுடைய பேரருள் அவருக்குக் கிட்டியது. சித்தமலம் நீங்கிச் சிவமாம் தன்மை பெற்றார். பேரறிவான சோதியைத் தமது சிந்தையிலே உணர்ந்தார். தெய்வம் என்பதோர் சித்தம் அவருடைய உள்ளம் புகுந்தது. இறைவன் அவருக்காகப்பல அற்புதங்களை நிகழ்த்தினான். எல்லாவற்றிற்கும் மேலாக ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் திருப்பாடல்களைப்பாடும் ஓர் அருமையான ஆற்றலைச் சிவபெருமான் அவருக்கு அருளித் தந்தான். இத்தகைய பேறு பெற்ற மணிவாசகப் பெருமான் ஏதற்கு அஞ்ச வேண்டும்? இறப்புக்கா பிறப்புக்கா? வேட்கை இருந்தால்தானே இறப்பும் பிறப்பும்? மணிவாசகப் பெருமானா இம்மையிலும் மறுமையிலும், வானிலும் மண்ணிலும் கிடைக்கும் நிலையற்ற இன்பங்கள் மீது தனது நாட்டத்தைச் செலுத்தப் போகின்றார்.

**"தான் வரைவு அற்றபின் யாரை வரைவது?**

**தான் அவன் ஆனபின் யாரை நினைவது?**
**காமனை வென்ற கண்கள் யாரை உகப்பது?''** **(திருமந்திரம்)**

ஆனாலும் அத்தகைய பெரியார் வேண்டுவது ஒன்றே. சிவபெருமானின் அருளில் மூழ்கித் திளைத்தவர் மீண்டும் மீண்டும் அந்த அருள் என்று வரும் என்று வருந்துவார்.

**''யான் ஏதும் பிறப்பு அஞ்சேன் இறப்பு அதனுக்கு என் கடவேன்?**
**வானேயும் பெறில் வேண்டேன் மண் ஆள்வான் மதித்தும் இரேன்**
**தேன் ஏயும் மலர்க் கொன்றைச் சிவனே! எம்பெருமான்! எம்**
**மானே! 'உன் அருள்பெறும்நாள் என்று? என்றே, வருந்துவனே.''**
**(திருவாசகம் - திருச்சதகம்)**

திருமூலர் ஓர் தவராஜ யோகியார். மூவாயிரம் ஆண்டுகள் யோகத்தில் அமர்ந்து மூவாயிரம் திருமந்திரங்களை உலகிற்கு அருளிச் செய்தார் என்பது தெய்வச் சேக்கிழார் நமக்குத் தந்த செய்தியாகும். பிறப்பிற்கும் இறப்பிற்கும் காரணமானவற்றை வென்றவர். எனவே, **''இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி; இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே''** என்று அருளிச் செய்கிறார். பரம்பொருளாகிய சிவபெருமானைக் கண்டார். பேரருள் பெற்றார். அதனால் பிறப்பு நீங்கப் பெற்றார். பாசங்கள் அவரை அகன்று நின்றன. சீவ கரணங்கள் சிவகரணங்களாகிக் கடவுளுடன் ஒன்றி நின்றார். **''மீண்டும் இப்பிறப்பை வேண்டேன்''** என்றும் சொல்லுவார்.

**''ஒழிந்தேன் பிறவி யுறவென்னும் பாசங்**
**கழிந்தேன் கடவுளும் நானுமொன் றானேன்**
**அழிந்தாங் கினிவரு மாக்கமும் வேண்டேன்**
**செழுஞ்சார் புடைய சிவனைக்கண் டேனே''**

**(திருமந்திரம் - 2958)**

தவத்தால், யோகத்தால் என்றும் மாறாத அன்பினால் கிடைக்கப்பெறும் பேரறிவு அனுபவம் ஞானியர்களின் உள்ளத்திற்கு தளராத உறுதியைத் தருகின்றது. அந்த உறுதி பிறவிக்கடலைத் தாண்டத் தோணி போன்று உதவுகிறது. பழைய வினைகள் அகலுகின்றன. வெளியில் வெளி போய் அடங்குகின்றது. அச்சம் நீங்குகிறது. ஞான வாளுக்கு நிகராக வேறு எந்த ஆயுதமும் இல்லையே!

**''நமன்வரின் ஞானவாள் கொண்டே எறிவன்**
**சிவன்வரின் நானுடன் போவது திண்ணம்**
**பவம்வரும் வல்வினை பண்டே யறுத்தேன்**
**தவம்வருஞ் சிந்தைக்குத் தானெதி ராரே''.**

**(திருமந்திரம் - 2968)**

* * *

இரண்டாம் பகுதி

## 24. ஆசை அறுமின்கள்! ஆசை அறுமின்கள்!

**மாணாக்கன்:** ஐயா, இதுவரை பலவற்றைக் கூறினீர்கள். இப்பொழுது மனிதனுடைய ஆசா பாசங்களைப் பற்றி விளக்குவீர்கள் என்று நம்புகின்றேன். மிக்க மகிழ்ச்சி. ஆனால், ''ஆசை அறுமின்கள், ஆசை அறுமின்கள்'' என்கிற தலைப்பைப் பார்த்தாலேயே பயமாக இருக்கின்றதே! இது என்ன சாத்தியமா?

**ஆசிரியர்:** நல்ல கேள்வி ஒன்றைக் கேட்டுள்ளாய். உண்மையில் உனக்கு இருக்கின்ற ஐயப்பாட்டை நான் நீக்க முயல வேண்டும். முயலுகின்றேன். பொதுவாக ஒரு பொருளைப் பற்றி நாம் நன்கு தெரிந்து கொள்ளாத நிலையில் அதைப் பற்றிய பல சந்தேகங்கள் நம்முடைய மனத்தில் தானாகவே எழுகின்றன. உதாரணமாக இருட்டில் பாம்பைப் போன்ற ஒன்றை நாம் பார்க்கின்றோம். பல சந்தேகங்கள் நம்முடைய மனத்திலே எழுகின்றன. உடனே அங்கே விளக்கைப் போட்டுப் பார்க்கும்பொழுது அது கயிறு என்று தெரிகிறது. எல்லா ஐயங்களும் உடனே நம்மை விட்டுச் செல்கின்றன. ஆகவே, ஒரு பொருளைப் பற்றி நாம் ஆழமாகத் தெரிந்து கொண்டால்தான் அந்தப் பொருளினுடைய உண்மைகள் நமக்கு நன்கு புலப்படும். இதை மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இப்பொழுது ஆசை என்கின்ற ஒன்றைப் பற்றி நாம் ஆராயலாம்.

**மாணாக்கன்:** ஆசை என்பது நமக்குத் தெரிந்த ஒன்றுதானே! நாம் பிற பொருள்கள் மீது ஆசை வைக்கின்றோம். அவற்றை விரும்புகின்றோம். எப்படியாவது அடைய முயற்சிக்கின்றோம். முயற்சியில் தோல்வி அடைந்தால் வேதனைப்படுகின்றோம். துன்பப்படுகின்றோம். துன்பம் வரும் என்று தெரிந்து கொண்டும் பொருள்களைப் பற்றி நிற்கின்றோம். இந்த உலகத்தில் பிறந்த எல்லா உயிர்களுடைய இயல்பும் அதுவாகத்தானே இருக்க முடியும்?

**ஆசிரியர்:** நன்கு சொன்னாய். பிற பொருள்கள் மீது நாம் ஆசைப்படுவது நமக்கு இயற்கையாகவே தோன்றுகிறது. ஏன்? சற்று ஆராய்ந்து பார்த்தால் நாம் நம் மீது வைக்கும் ஆசையின் காரணமாகத்தான் பிற பொருள்களை நாடுகிறேம் என்று சொல்வது சரியல்லவா?

**மாணாக்கன்:** தாங்கள் சொல்லுவது புரிகின்றது. ஆனால், அதை மேலும் விளக்க வேண்டுகின்றேன்.

**ஆசிரியர்:** முதலில் நம்முடைய உடலை நாம் என்று நினைத்துக் கொள்கின்றோம். அது தவறு. அதைப் பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கின்றேன். நமது உடல் ஒரு ஜடப்பொருள். உடல் ஐந்து பூதங்களால் ஆனது. பல கருவிகளைக் கொண்டது. ஆனால், அவற்றையெல்லாம் இயக்குவது உடலை இருப்பிடமாகக் கொண்ட உயிராகும். புலன்கள் ஐந்து. பூதங்கள் ஐந்து. ஞானேந்திரியங்கள் ஐந்து. கன்மேந்திரியங்கள் ஐந்து. அவற்றையெல்லாம் மேய்த்துச் செல்லுகின்ற உயிர் ஒன்று. இந்த உடலுக்குப் போக்குவரத்தும் செய்ய ஒன்பது வழிகள் உண்டு. உயிர் உடலின் மீது ஆட்சி செலுத்தும் தன்மை புரிகிறதல்லவா? இதைத்தான் திருமந்திரமும் பின்வருமாறு சொல்லுகிறது:

**''புலம் ஐந்து புள் ஐந்து புட்சென்று மேயும்**
**நிலம் ஐந்து நீர் ஐந்து நீர்மையும் ஐந்து**
**குலமொன்று கோல்கொண்டு மேய்ப்பான் ஒருவன்**
**உலம்வந்து போம்வழி யொன்பது தானே''.**

**(திருமந்திரம் - 2025)**

உடம்பாகிய காட்டில் இந்திரியங்களாகிய ஐந்து சிங்கங்கள் வாழ்கின்றன என்று திருமூலர் கூறுகின்றார். அவை சதா புறத்தே சென்று புறப்பொருள்களைப் பற்றிய விஷய ஞானத்தைச் சேகரித்து உடலிடம் வைப்பதாகக் கூறுகின்றார். **''அஞ்சுள சிங்கம் அடவியில் வாழ்வன அஞ்சும் போய் மேய்ந்தும் அஞ்சக மேபுகும்''.** உடலைச் சார்ந்த கருவிகளை மதம் பிடித்த யானைகளுக்குத் திருமூலர் பெருமான் ஒப்பிடுகின்றார். யானைகளுக்கு மதம் பிடிக்கும்பொழுது அவைகளை ஊருக்கு வெளியே உள்ள, மக்கள் நடமாட்டம் இல்லாத, கோட்டைப் பகுதியிலே விட்டுவிடுவார்கள். அதேபோல நமது இந்திரியங்கள் பொருள்கள் மீது நாட்டம் கொண்டு செல்ல முயலும்போது, அவற்றை நமது அறிவால் அடக்கி வைக்க முயலுகின்றோம். ஆனால், அவை தப்பி ஓடி வெளியே வந்து விடுகின்றன. உடம்பையே அழித்துத் திமிர் கொண்டு அலைகின்றன என்றும் திருமூலர் பெருமான் கூறுகின்றார்.

**''முழக்கி யெழுவன மும்மத வேழம்**
**அடக்க அறிவென்னுங் கோட்டையை வைத்தேன்**
**பிழைத்தன ஓடிப் பெருங்கேடு மண்டிக்**
**கொழுத்தன வேழங் குலைக்கின்ற வாறே''.**

**(திருமந்திரம் - 2034)**

**மாணாக்கன்:** எவ்வளவு அழகாக அந்த யோகியார் படம் பிடித்துக் காட்டுகின்றார்! எனினும், அதற்கும் இப்பொழுது தாங்கள் விளக்கப் போகும் ஆசைகள் என்னும் பொருளுக்கும் என்ன தொடர்பு என்று தெரிய வில்லையே?

**ஆசிரியர்:** கூறுகின்றேன் கேள். இந்திரியங்கள் சேகரிக்கும் விஷய அறிவு நமது மனத்தை வந்து சேர்கிறது. அங்கே அது ஆசைக்கு வித்திடுகின்றது. மனமாகிய நிலத்தில் பல பிறவிகள் தோறும் எண்ணங்கள் வளர்ந்து கொண்டே இருக்கின்றன. அவை ஆசைகளைத் தூண்டி விடுகின்றன. மனமானது ஓர் அழுக்குத் துணியைப் போல. பிறவிதோறும் அழுக்குச் சேர்ந்து கொண்டே வருகின்றது. ஆசைகள் அழுக்கைப் போலவே உண்மையை, தூய்மையை மறைத்து விடுகின்றன. ஆசைகள் வலிமை பொருந்தியவை. இந்திரியங்களின் வயப்பட்டு ஆசைகளை வளர்த்து வரும் மனம் அங்கும் இங்கும் அலைந்து சுற்றி வருகின்றது. அதை வெல்லும் ஆற்றலைத்தான் பெறவில்லை என்கின்றார் திருமூலர். **"வெல்ல கில்லேன் புலன் ஐந்துடன் தன்னையும்"**. ஆசைகள் காமத் தீயை வளர்க்கின்றன. காமம் என்பது பொருள்கள் மீது நாம் சதா வைக்கும் பற்றாகும். காமம் நிறைவேறாதபொழுது சினம் பிறந்து மனிதனை ஆட்டி வைக்கின்றது. சினம் அறிவை அழிக்கின்றது. மயக்கத்தைக் கொடுத்து உண்மையை மறைக்கின்றது. அதனால் உயிர்கள் உண்மை நிலையை அறியாது மாயையாகிய இருளில் ஆழ்ந்து துன்பப்பட்டு நிற்கின்றன. காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்று குற்றங்களும் உயிரை இருளில் ஆழ்த்திப் பிறப்புக்குக் காரணமாகின்றன. ஆசைகள் வளர வளர உயிரானது பல பிறப்புகள் எடுத்து அவற்றை நிறைவேற்றிக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் தம்மை வைத்துக் கொள்கின்றன. மனத்திலிருந்து நிரம்பி வழியும் ஆசைகள் நமது வாக்கிலும் உடலிலும் வெளிப்படுகின்றன. மனத்தில் ஆசைகள், வாக்கில் இன்னாச் சொல், பொய், புறம் கூறல், உடலில் செயல் அழுக்கு ஆகியவை உயிருக்கு வினைக்கடலைச் சேர்த்து இறப்பையும் பிறப்பையும் மாறி மாறித் தருகின்றன. காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்று குற்றங்களிலிருந்து விடுபட்டவர் பிறவிக் கடலைத் தாண்டுவர். மற்றவர் துன்பத்தில் மூழ்கி அழிவர்.

**"மூன்றுள குற்ற முழுது நலிவன**
**மான்றிருள் தூங்கி மயங்கிக் கிடந்தன**
**மூன்றினை நீங்கினர் நீக்கினர் நீங்காதார்**
**மூன்றினுட் பட்டு முடிகின்ற வாறே".** **(திருமந்திரம் - 2435)**

**மாணாக்கன்:** ஆசைக்கு அத்தனை வலிமையா?

**ஆசிரியர்:** ஆம். தேவர்களும் ஆசைகளுக்குக் கட்டுப்பட்டவர்கள். ஆசைகள் இந்திரிய அனுபவத்துடன் சேர்ந்து வருவன என்பது மட்டுமன்று. ஆசைகளுக்கு மூல காரணம் அநாதியே உயிர்களின் அறிவாற்றலை விபரீதமாகக் கொண்டு செல்வது பாச வேலை. பாசத்தின் கூறுகளே ஆணவம், கன்மம், மாயை ஆகியவை, ஆசைகள் வழியாக உயிர்களை அறியாமையாகிய மருள் நிலையில் வைக்கின்றன. **"பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப் பசுக்களைக் கட்டிய பாசம் மூன்றுண்டு"** என்பார் திருமூலர்.

இந்திரியங்களின் சேட்டைகளை அடக்கிவிட்டால் ஆசைகளை அடக்கி விடலாம் என்று நினைக்கலாம். ஆனால், இந்திரியங்களை அடக்கி வைப்பது அவ்வளவு எளிதன்று. இந்திரியங்களை முழுமையாக அடக்கி ஆளும் தேவர்களைக் காண்பதும் அரிது என்று திருமூலர் கூறுவார். இந்திரிய ஓட்டத்தை முழுமையாக நிறுத்தி விட்டால் அவை அறிவற்ற சடப்பொருள் ஆகிவிடும். அவற்றை வேறு பணிகளில் ஈடுபடுத்த முடியாது. எனவேதான்,

**"அஞ்சும் அடக்கு அடக்கு என்பர் அறிவிலார்**
**அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கிலை"** (திருமந்திரம் - 2033)

என்கிறார் திருமூலர்.

**மாணாக்கன்:** தாங்கள் சொல்வதிலிருந்து மனத்தில் தோன்றும் ஆசைகளுக்கு அடிப்படைக் காரணம் அநாதியாக நின்று உயிர்களைக் கட்டுப்படுத்தும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்கள் என்று ஓரளவு உணர்ந்து கொள்கின்றேன். அப்படியென்றால் ஆசைகள் உயிரின் இயற்கைத் தன்மைக்கு ஒப்பவே தோன்றி வருகின்றன என்றும் அதில் ஒரு குற்றமும் இல்லை என்றும் ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது?

**ஆசிரியர்:** இது நல்ல கேள்வி. நன்கு சிந்தித்திருக்கின்றாய். அதற்கு விடையளிக்கும் முன்னர் ஆசையைப் பற்றி நாம் மேலும் புரிந்து கொள்ள வேண்டும். உயிரானது உடலுடன் சம்பந்தப்பட்ட நிலையில் இந்திரியங்களால் தூண்டப்பட்டு உடலின் வேட்கைகளைத் தீர்த்துக்கொள்ள ஆசைகள் நம் மனத்திலே தோன்றுகின்றன. அவற்றை நாம் தீர்த்துக் கொள்ள முயலுகின்றோம். சில ஆசைகள் நிறைவேற்றப்படுகின்றன. அப்பொழுது நமக்கு இன்பம் ஏற்படுகின்றது. பல ஆசைகளை நம்மால் நிறைவேற்ற முடிவதில்லை. துன்பப்படுகிறோம். துன்பங்களாகிய பேரலைகளும், நடுநடுவே சிற்றலைகளைப் போல தோன்றி மறையும் இன்பங்களும் உயிர்களை அங்கும் இங்கும் தள்ளிச் செல்கின்றன. வாழ்க்கை என்னும் ஆழ்கடலில் துணை ஒன்றுமின்றி, பற்றுக் கோடின்றித் தனியாக நின்று நாம் நம்மைச் சும்மா விடுமா என்றால் அதுவும் இல்லை. மாதர் மீதுள்ள மயக்கம் ஒரு சூறாவளிக் காற்றைப் போல் நம்மைத் தாக்க, நமது மனம் தடுமாற்றம் அடைந்து கொந்தளிக்கும் கடலிலே தத்தளிக்கின்றது. அது மட்டுமா, பெரிய சுறா மீன்கள் நம்மை நோக்கி வந்தடைகின்றன. காமமாகிய இந்தச் சுறா மீன்கள் நம்மைக் கவ்விச் செல்லப் பார்க்கின்றன. இவற்றால் நமக்குக் கடைசியில் கிடைப்பதெல்லாம் துன்பமேயன்றி வேறில்லை. இவ்வாறு கூறுவது நமது மாணிக்கவாசகப் பெருமான். அந்தப் பெருந்தகை ஆசைச் சுழலின் வலிமையைப் பற்றித் திருச்சதகத்தில் கூறும் திருவாக்கை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

"தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையால் ஏற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியையேர் துவர்வாயார் என்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணி (திருவாசகம்)

தாயுமான சுவாமிகள் இன்னும் அழுத்தமாகவே இதுபற்றிப் பாடுகின்றார். ஆசை என்னும் பெரும் காற்றில் சுற்றி அலையும் இலவம் பஞ்சு போல் தனது மனம் திரிவதாகக் கூறுகின்றார்.

"ஆசைஎனும் பெருங்காற்றூடு இலவம்பஞ்சு
எனவும்மனது அலையும் காலம்
மோசம்வரும்; இதனாலே கற்றதும்கேட்
டதும்தூர்ந்து, முக்திக்கு ஆன
நேசமும்நல் வாசமும் போய்ப் புலனாய் இல்
கொடுமைபற்றி நிற்பர்; அந்தோ
தேசுபழுத்து அருள்பழுத்த பராபரமே!
நிராசை இன்றேல் தெய்வம் உண்டோ?".

**மாணாக்கன்:** சுவாமி, தாங்கள் சொல்வதைக் கேட்கக் கேட்க எனது மனத்தில் புரியாத ஓர் பயம் தோன்றுகின்றது. அழியும் பொருட்கள் மீது ஆசை வைத்து நம்மையும் அழித்துக் கொள்வது தேவைதானா என்கிற எண்ணம் ஏற்படுகின்றதே! ஒன்றும் புரியாத நிலையில் நிற்கின்றேன் தாங்கள் மேலும் அருள்புரிய வேண்டும்.

**ஆசிரியர்:** உனது நிலையைப் புரிந்து கொண்டேன். உடலை விட்டு உயிர் பிரியும் பொழுது இதுபோன்ற நிலையும் ஏற்படுவதுண்டு. பொறிகளும், புலன்களும் கலங்கி, மயங்கி நிற்கும். செல்லும் நெறி இன்னது என்று தெரியாது. அறிவானது மங்கிக் கிடக்கும். பற்றுக்கோடு ஒன்றும் இல்லாத நிலையில் உயிர் எந்த இடத்திற்குச் செல்வது என்று அறியாமல், திசை தெரியாமல் நிற்கும். அதேபோலத்தான் நமது மனமும். உண்மையில் நமது மனம் ஒரு குரங்கைப்போல, குரங்கு மழையைக் கண்டு அஞ்சும். மழை வராத போதே மழையைப் பற்றி நினைத்துக் கொண்டு பயப்படும்.

திருக்கோவிலில் பெண்கள் நடனமாடி வருகின்றார்கள். மிருதங்கம் ஒலிக்கின்றது. மிருதங்கச் சத்தத்தைக் கேட்டுக் குரங்கு இடியை நினைத்து மழை என்று அஞ்சி மனம் கலங்கி மரத்தின் மீது ஏறி மேகத்தைப் பார்த்து நிற்கின்றது. இந்த இடம் திருவையாறு. திருவையாற்றில் வீற்றிருக்கும் இறைவன் ஒருவனே. குரங்கைப்போல் கலங்கி நிற்கும் உயிரின் முடிவான பற்றுக்கோடு ஆவான். எதற்கும் பயப்படாதே என்று அருள் புரிபவனும் அவனே ஆவான் என்று திருஞானசம்பந்தர் வெகு அழகாகப் பாடுகின்றார்.

"புலன்ஐந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவுஅழிந்திட்டு ஐம்மேல் உந்தி
அலமந்த போதாக, அஞ்சேல்என்று
அருள்செய்வான் அமரும் கோயில்;
வலம்வந்த மடவார்கள் நடம்ஆட
முழவுஅதிர மழை என்று அஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரம்ஏறி
முகில்பார்க்கும் திருஐ யாறே".

இப்பொழுது நீ முதலில் கேட்ட கேள்விக்கு விடை கூற விழைகின்றேன். உடலுக்கென்று சில தேவைகள் உண்டு. அவற்றைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டியதுதான். ஆனால், ஆசைகளை நாம் துரத்தித் துரத்திச் செல்வதும், நம்மை ஆசைகள் துரத்தித் துரத்தி வருவதும் அறியாமையால் ஏற்படும் நிகழ்ச்சிகளாகும். இந்த அறியாமையை நாம் முதலில் நீக்க வேண்டும். ஆனால், அந்த அறியாமையோ நம்மோடு தொன்றுதொட்டு நிற்கும் ஆணவ மலத்தின் முதல் தன்மையாக இருக்கின்றது. ஆகவே, ஆசைகளின் வலிவைக் குறைக்க வேண்டுமென்றால் ஆணவ மலத்தின் சக்தியைக் குறைக்க வேண்டும். கருணைமிக்க இறைவன் அதற்கான வழியை நமக்குக் காட்டுகின்றான். நமது மனம், வாக்கு, காயம் ஆகியவற்றை அவை போகும் போக்கில் உபயோகித்தால் வினைகள் மூளும். அதே மனமும், வாக்கும், காயமும் உலகத்தைப் பற்றாது இறைவனைப் பற்றி நின்றால், வினைகள் நம்மை வந்து அடையா. இதுவே ஒரு பெரும் சாதனையாகும். மெய்யுணர்வாளர்கள் தங்களது மனம், வாக்கு, காயம் ஆகியவற்றை இறைவனிடம் செலுத்தித்தங்களை வினைகள் பற்றாது பார்த்துக் கொள்வர்.

**"மனவாக்குக் காயத்தால் வல்வினை மூளும்
மனவாக்கு நேர்நிற்கில் வல்வினை மன்னா
மனவாக்குக் கெட்டனர் வாதனை தன்னால்
தனைமாற்றி யாற்றத் தகுஞானி தானே". (திருமந்திரம் - 2612)**

இதைப்பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் பேசிக் கொண்டு போகலாம். கானல் நீரைப் போன்று தோன்றி மறையும் உலகை நினைந்து என்ன பயன்? உலகத்தின் மீது பற்றை வளர்த்தால் உலகத்தைப் பற்றிய சிந்தனையும் அவாவுமே அதிகமாகும். அதற்கு மாறாகப் பரம்பொருளை, சிவத்தை மனத்தில் வைத்தால் உலகப் பொருள்கள் மீது உள்ள நாட்டம் குறைந்து விடும். இதை நாம் தீவிரமாகச் சிந்தித்துப் பார்த்தால் நமது சித்தம் தெளிவாகும். நம்மையெல்லாம் ஆளும் இறைவனும் தெளிவான சிந்தைகளில் புகுந்து சித்தத்தைச் சிவமாக்குவான்.

"பெருக்கப் பிதற்றிலென் பேய்த்தேர் நினைந்தென்
விரித்த பொருட்கெல்லாம் வித்தாவது உள்ளம்
பெருக்கில் பெருக்கும் சுருக்கில் சுருக்கும்
அருத்தமும் அத்தனை ஆய்ந்துகொள் வார்க்கே".

(திருமந்திரம் - 2036)

இறைவன் ஒருவனே நமக்கு உள்ள ஒரு பற்றுக்கோடு என்கிற சிந்தனையை வளர்க்க வேண்டும். மனம், வாக்கு, காய்ம் ஆகியவற்றை இறைவனோடு பொருத்தி இயக்குகின்ற வகையில் நம்முடைய தியானத்தைச் செலுத்த வேண்டும். பிற பொருள்கள் மீது உள்ள பற்றினை மெதுவாக ஒடுக்க வேண்டும். நம்முள்ளேயே இருக்கும் இறைவன் மீது நம்முடைய நாட்டத்தைத் திருப்ப வேண்டும். அப்பொழுது சிந்தை தெளிந்து இறைவனை நாம் மனக்கோவிலிலேயே நிறுத்தலாம்.

"நடக்கின்ற நந்தியை நாடோறு முன்னில்
படர்க்கின்ற சிந்தையைப் பைய வொடுக்கிக்
குறிக்கொண்ட சிந்தை குறிவழி நோக்கில்
வடக்கொடு தெற்கு மனக்கோயி லாமே".

சிவபெருமான் உலகப் பற்றுக்களை விட்ட ஞானிகள் யாவரும் பற்றி நின்ற பரம்பொருள் ஆவான். ஞானிகளுக்கு அவன் மீதுதான் எல்லா நாட்டமும் செல்லும். மெய்ஞ்ஞானத்தைப் பெற்றவர்கள் சிவபெருமானை விரும்பி நிற்பர். எல்லாக் கல்விகளின் முடிவுகளை உணர்ந்தவர்கள் சிவசோதியைத் தன்னுள் பெற்று நிற்பர். அந்த நிலையில் பேச்சற்று நிற்பர். ஆகவே, நாம் விரும்ப வேண்டியது இறைவனுடைய திருவடிகள். அறுக்க வேண்டியது நமக்கு மயக்கத்தைத் தரும் ஐம்புல பாசங்கள். தொடர வேண்டியது மனக்கலக்கத்தைப் போக்கக்கூடிய சிவபரம் பொருள். அவ்வாறு செய்தால் நமது சிந்தை சிவத்துடன் கலந்து விடும்.

"மயக்கிய ஐம்புலப் பாசம் அறுத்துத்
துயக்கறுத் தானைத் தொடர்மின் தொடர்ந்தால்
தியக்கஞ்செய் யாதே சிவனெம் பெருமான்
உயப்போ எனமனம் ஒன்றுவித் தானே". (திருமந்திரம் - 2608)

"பற்றற் றவர்பற்றி நின்ற பரம்பொருள்
கற்றற் றவர்கற்றுக் கருதிய கண்ணுதல்
சுற்றற் றவர்சுற்றி நின்றஎன் சோதியைப்
பெற்றுற் றவர்கள் பிதற்றொழிந் தாரன்றே". (திருமந்திரம் - 2865)

**மாணாக்கன்:** சுவாமி, தெய்வீகப் பெரியார்களுடைய மேற்கோள்களைக் காட்டித் தெளிவடையச் செய்தீர்கள். இந்தப் புலன்களை மடைமாற்றம் செய்ய மேலும் என்ன செய்ய வேண்டும்?

**ஆசிரியர்:** உலகப் பொருள்கள் மீது உள்ள ஆசையைக் குறைத்துக் கொள்ள வேண்டும். பாசத்தின் உண்மைத் தன்மையை அறிந்து கொண்ட பின்னர் பாசத்தை வளர்க்கும் பொருள்களுக்கு மதிப்புக் கொடுக்கக்கூடாது. இறைவனுக்கு உள்ளும் புறமும் சதா பூசை செய்ய வேண்டும். ஐந்தெழுத்தாகிய நமச்சிவாயத்தை ஒப்பற்ற காதலுடன் மனத்தில் என்றும் நினைத்து வர வேண்டும். காமம், வெகுளி, மயக்கம் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். ஆன்மிக உணர்வினை வளர்த்து இம்மைக்கும் மறுமைக்கும் நலன்களை அளித்து, வீடு பேற்றினை அளிக்கவல்ல திருமறைகளை என்றுமே ஓதி வர வேண்டும். அவ்வாறு செய்யவில்லை என்றால் உன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்ள உனக்கு ஒரு தகுதியும் இல்லை. இதை நமக்குத் தெளிவாக எடுத்துரைப்பது குருஞானசம்பந்தர் என்கிற அருளாளர்.

**"ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்**
**நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் - சீ சீ**
**சிவமே தவிராய் திருமுறைகள் ஓதாய்**
**மனமே உனக்கென்ன் வாய்".**

**மாணாக்கன்:** நன்கு உணர்த்தினீர்கள் சுவாமி. **"ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்"** என்கிறாரே திருமூலர். அதன் கருத்து என்ன?

**ஆசிரியர்:** மெய்யுணர்வாளர்களுடைய சாதனையின் சிகரமாக ஏற்படும் மனநிலையைத் திருமூலர் பிரான் இவ்வாறு விளக்குகின்றார். அவர்கள் வேட்கையை விட்டவர்கள். அதன் காரணமாக இறைவன் அவர்கள் உள்ளிலிருந்து கொண்டே அவர்களை இயக்கி முக்தியைத் தந்தருளுகின்றான். **"வேட்கை விட்டார் நெஞ்சில் முடத்துளே நின்று முத்தி தந்தானே"** (திருமந்திரம் - 2614). அவர்கள் வேதங்களின் முடிவை உணர்ந்தவர்கள். **"வேதாந்தம் ஆவது வேட்கை ஒழிந்திடம்". வேட்கை விட்டவரே உண்மையான வேதாந்திகள்** (திருமந்திரம் - 229). ஞானிகள் ஈசனை வேண்டுவது அவர்களுடைய உயர்வுக்காக அன்று. உலகத்தாரின் நன்மைக்கே. அவர்கள் வீடுபேற்றைக் கூட வேண்டுவது இல்லை. அன்பு செய்வதையே தங்கள் நெறியாகக் கருதுகின்றார்கள். ஏனெனில், அவர்கள் அன்பினில் சிவத்தைக் காண்கின்றார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனுடைய திருவருள் இன்றி ஒரு அணுவும் அசைவதில்லை என்று உணர்ந்தவர்கள். தமக்கென்று ஒரு விருப்பம் இருந்தால் அதுவும் இறைவனுடைய விருப்பமே என்கின்ற உணர்வில் நிற்பவர்கள்.

**"வேண்டும் பொருள் ஒன்று உண்டென்னின்**
**அதுவும் உன்றன் விருப்பன்றே"**

என்றார் மணிவாசகப் பெருமான். நம்மால் இவ்வாறு சொல்லிக் கொள்ள முடியுமா?

ஆசைகளை அறுப்பது பற்றி பாமர மக்களுக்கு ஞானிகள் தங்கள் உணர்வினைத் தெரிவிக்கலாம். ஆனால், ஞானிகளே ஆசைப்படக் கூடாது அல்லவா? அவர்கள் உலகப் பொருட்கள் மீது ஆசை வைக்க மாட்டார்கள். ஆனால், இறைவன் மீது அவர்கள் தங்கள் பக்தியினை வளர்க்கின்றார்களே! அதுவும் கூடாது என்பார் திருமூலர் பிரான். தான் சிவத்தை விழுங்குவது ஒருவிதமான அனுபவம். ஆனால், சிவம் தன்னை விழுங்குவது, ஆன்மிகத்தின் உச்சக்கட்டம். இதை அடைய ஞானிகள் முயலுகிறார்கள். அவர்களுடைய ஆன்மிக முயற்சியில் தான் என்னும் முனைப்பு ஒருபோதும் தலைதூக்காமலிருக்க இறைவன் மீதுள்ள பற்றையும் குறைத்துக் கொள்ள வேண்டும். ''புத்தரை வழியில் கண்டால் அவரைக் கொலை செய்து விடு'' என்பது புத்த சமயப் பழமொழி. அந்த அளவுக்கு நமது அகங்காரத்தைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள வேண்டும்.

மாணாக்கன்: சுவாமி, எனக்குத் தெரியாதவைகளைத் தெரிவித்துத் தெளிவடையச் செய்தீர்கள். ஆசைப்படுவதற்கு ஒன்றுமில்லை என்பதல்லவோ உண்மை!



# 25. ''தூங்கிக் கண்டார் சிவயோகம்''

அருளாளர்கள் அனைவருமே ஒப்பற்ற யோகிகள் ஆவர். பாச நீக்கம் பெற்றுச் சிவப்பேறு அடைந்தவர்கள். உயிர் இயல்பாகவே பின்தொடரும் பற்று எனும் தன்மையைக் கைவிட்டவர்கள். இன்பத் துன்பங்களை ஒன்றாகக் கருதுபவர்கள். எப்போதும் மனக்கலக்கம் அடையாமல் நிற்பர். வறுமையில் சோர்வடைய மாட்டார்கள். செல்வத்துள் அழுந்தவும் மாட்டார்கள். நோய்கள் அவர்களை வாட்டாது. குன்றைப்போல மனவலிமை பெற்றவர்கள். சுகங்களில் தங்கள் கருவிகளைப்பறிகொடுக்க மாட்டார்கள். ஒன்றிலும் பற்றுதல் அற்றவர்களாக இருப்பார்கள். என்றும் சிவானுபவத்தில் ஆழ்ந்து நிற்பார்கள். சிவமாம் தன்மையை அவர்கள் பெற்ற காரணத்தினால், அவர்கள் சிவத்தைத் தேடி அலைய வேண்டியதில்லை. **''வணங்க வேண்டா, இனி வடிவை அறிந்தபின்''** என்பார் திருமூலர்.

உயிரானது கருவி கரணங்களைச் சதா பயன்படுத்துகின்றது. இந்தக் கருவி கரணங்கள் யாவும் எப்பொழுதும் புறத்தே சென்று உயிருக்கு அறிவைக் கொடுக்கும். அந்த அறிவினைச் சார்ந்து, அறிவினைக் கொடுக்கும் பொருள்களில் ஒன்றிப் பொருந்தி நின்று அந்த உணர்விலே உண்மையைக் காண முயல்வது உயிரின் இயல்பாகும்.

**''பற்றிடும் கருவி யாவும் படர்ந்துஉணர்வு அளிக்குங் காலை**
**உற்று அறிந் திடுவது ஒன்றின் உணர்வினின் உண்மையாகும்''**

என்கிறது சிவப்பிரகாசம்.

இந்த நிலையில் உயிருக்குத்தன்னை அறியும் வாய்ப்பு இல்லை. பகலில் எரியும் விளக்கின் ஒளி போலத் தன்மை கெட்டு அடங்கி நிற்கும். இது பிறப்பின் சூழ்ச்சியால் ஏற்படுகிறது. பிறப்பின் சூழ்ச்சிக்கு முன்னம் வினைகளே காரணமாகும். வினைகளை ஈட்டியும், ஈட்டிய வினைகளின் பயன்களை நுகர்ந்தும், மீண்டும் மீண்டும் வினைகளைச் சேர்த்துக் கொள்ளுவதும் ஒருவித மயக்கத்தால் நடைபெறுகின்றது. இதனை மாயப்பிறப்பு என்பார் மணிவாசகப் பெருமான். **''மாயக்குழியில் விழுவர் மனைமக்கள்''** என்றார் திருமூலர்.

மயக்க நிலையாயினும் இந்த நிலை பயனற்ற நிலையாகாது. பயனுள்ள நிலையே ஆகும். கருவி கரணங்களின் சேர்க்கை இல்லாத உயிரானது கேவல நிலையில் இருளில் மூழ்கிக் கிடக்கும். தன்னுள் வீற்றிருக்கும் பரம்பொருளின் ஒளியை அறியாது, அறிய வாய்ப்பின்றி, அறிவதற்கான கருவி கரணங் களின்றி செயலற்ற நிலையில் கிடக்கும். இது விரும்பத்தகும் நிலையும் இல்லை. ஆகவே, தன்னைப் பற்றி உணர்ந்து தன் நிலையைத் தெரிந்து கொண்டு, தன்னுள் உயிருக்கு உயிராய் நிற்கும் பரம்பொருளின் தன்மையையும் உணர்ந்துகொண்டு, சிவ பரம்பொருளின் திருவடிகளில் தன்னைச் சேர்த்துக் கொள்ளுதலே உயிரின் இயல்பான நோக்கமாகும். பிறந்த குழந்தை தாயின் அரவணைப்பு இல்லையென்றால் வளராது போய் விடும். அதே போன்று இருளில் மாய்ந்து கிடக்கும் உயிரானது இறை அருளின் துணையின்றித் தன்னை உயர்த்திக் கொள்ள முடியாது. அந்த இறை அருளால் உயிருக்கு உடல் கிடைக்கின்றது. உடலைச் சார்ந்த கருவிகள் கிடைக்கின்றன. கருவிகள் மூலமாக உயிரினுடைய அறிவும் ஆற்றலும் சற்றுச்செயல் வடிவம் பெறுகின்றன.

அறிவும் ஆற்றலும் கருவி கரணங்களின் வாயிலாகப் புறத்தேயுள்ள அனுபவங்களில் செலுத்தப்படுவதால், அந்த அனுபவங்களே முழுமையான தென உயிர் கருதும் தன்மையைப் பெறுகின்றன. இந்த நுகர்ச்சிகள் பல்வேறு நிலைகளில் நடைபெறுகின்றன.

முதலில் விழிப்பு நிலை. விழிப்பு நிலையில் எல்லாக் கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன. விழிப்பு நிலையில் நூற்றுக்கணக்கான புறக்காட்சிகள் நம்மைத் தாக்குகின்றன. ஆனாலும், எல்லாக் காட்சிகளிலும் மனமானது தன்னை ஈடுபடுத்திக் கொள்வதில்லை. எந்த ஒரு பொருளின் மீது மனம் தீவிரப் பற்றினைக் கொள்கிறதோ அந்தப் பொருளின் மீது முழுமையான நாட்டத்தைச் செலுத்துகிறது. மற்றவைகளைத் தனது கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. இது நம்முடைய அன்றாட அனுபவமாகும். இசை நிகழ்ச்சியில் மூழ்கி இருப்பவர்களுக்கு வேறு எந்த எண்ணங்களும் தோன்றுவதில்லை. பரம்பொருளைப் பற்றித் தீவிரமாகச் சிந்திக்கும் யோகிகளுக்கு வேறொரு பொருளும் மனத்தில் எழுவதில்லை. விழிப்பு நிலையில் இருபத்தைந்து கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. என்கிறார் திருமூலர். அவை ஞானேந்திரியங்கள் ஐந்து, கன்மேந்திரியங்கள் ஐந்து, வாயுக்கள் பத்து, மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அந்தக்கரணங்கள் நான்கு, புருடன் என்னும் கருவிகளை நடத்திச் செல்லும் ஆன்மா ஒன்று, ஆக இருபத்தைந்து ஆகும். அதாவது உயிரானது உடலை முழுமையாகப் பற்றி எல்லாவிதமான கருவி கரணங்களைப் பயன்படுத்திக் கொள்வது விழிப்பு நிலையில் ஏற்படுகிறது. தான் சார்ந்த பொருள்களின் தன்மையைப் பற்றிக் கொள்ளும் இயல்பினை உயிரானது பெற்றிருப்பதால், கருவி கரணங்கள் புறத்தே நோக்கிச் செல்லும் போது உயிரும் புறத்தே நாடிச்

செல்லுகின்றது. இதை "முகக்கண்" பிரயோகம் என்பார் யோகியர். இதுவே மருள் நிலையும் ஆகும்.

விழிப்பு நிலையை அடுத்துக் கனவு நிலை. கனவு நிலையில் எல்லாக் கருவிகளும் செயல்படுவதில்லை. குறிப்பாக ஞானேந்திரியங்கள், கன்மேந்திரியங்கள் போன்றவை ஒடுங்கி நிற்கும் நிலையாகும். இந்த நிலையில் உட்கருவிகள் தொடர்ந்து பணியாற்றும். கனவில் நடப்பது உண்மை போலவே தோன்றும். விழிப்பு நிலையில் ஏற்படும் அனுபவங் களுக்கு, பல்வேறு காரணங்களால் மனம் இடம் கொடுக்காதபொழுது, கனவு நிலையில் இந்த அனுபவங்கள் மனத்திரையில் நிறைந்து மறைகின்றன.

அடுத்து ஆழ்ந்த உறக்க நிலை. இந்த நிலையில் கருவி கரணங்களின் இயக்கம் ஒடுங்கி இருந்தாலும், உயிரானது உடலில் தங்குவதற்கான செயல்களெல்லாம் நடைபெறும். ஆகவேதான், விழித்தவுடன் உயிரானது தொடர்ந்து உடலில் தங்கி அனுபவிக்கும் தன்மையைக் காணலாம்.

அதற்கடுத்தாற்போல் துரியம் என்றும் துரியாதீதம் என்றும் உள்ள நிலைகளை யோகிகள் தம்முள் பலவாறு அனுபவிக்கின்றனர். மெய்ப்பொருளை உணர்ந்தவர்கள் துரிய நிலையிலும், துரியாதீத நிலையிலுமே நிற்பார்கள். அவர்களுடைய அறிவு உள் அறிவாகும்.

**"ஐயைந்து மத்திமை யானது சாக்கிரங்**
**கைகண்ட பன்னான்சிற் கண்டங் கனாவென்பர்**
**பொய்கண் டிலாத புருடனித யஞ்சுழுனை**
**மெய்கண் டவனுந்தி யாகுந் துரியமே". (திருமந்திரம் - 2142)**

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது. உயிரானது உடலாகிய கோட்டையிலே கருவி கரணங்களுடன் கூடியும். அவற்றை விட்டும் ஓடிக் கொண்டே இருக்கின்றது. விஷய அனுபவங்கள் கருவி கரணங்களை வலிமையாகத் தாக்குவதால், அவற்றுடன் கூடியிருக்கும் உயிரும் தன்னை உயர்த்திக் கொள்ளும் ஆற்றலைப் பெற்றிருப்பதை உணர்ந்து கொள்வதில்லை. ஐந்து இந்திரிய சக்திகள் வஞ்சனை புரிந்து, மனதிலே ஒரு கலக்கத்தை ஏற்படுத்தி, மாயை இருளில் உயிரினைப் புகுத்தி, பரம்பொருளின் சேர்க்கையைத் தவிர்த்து வைப்பதால் ஏற்படும் அல்லலை, துன்பத்தை மாணிக்கவாசகர் உள்ளம் உருகப் பாடுகின்றார்.

**"மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை**
**மறைந்திட மூடிய மாய இருளை**
**அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி**
**புறந்தோல் போர்த்து எங்கும் புழுஅழுக்கு மூடி**
**மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை**
**மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய**

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கிக்" (சிவபுராணம்)

பல பிறப்புகளுக்குப் பிறகு ஏதாவது ஒரு பிறப்பில் பரம்பொருளின் பேரருள் உயிருக்குக் கிட்டுகிறது. உலகத்தை, உடலை உயிராகக் கருதுதல் மடமை என்கிற உணர்வு ஏற்படுகிறது. உடம்பு சடப்பொருள். அதற்கு அறிவு, இச்சை, செயல்கள் இல்லை. உயிருக்கே அறிவு, இச்சை, ஆற்றல் போன்றவை உண்டு. உயிர் கண்ணால் காணப்படும் பொருள் அன்று. ஆனாலும், காணப்படும் உடம்பின் செய்கைகளிலிருந்து காரணமாகிய உயிர் நிச்சயிக்கப்படுகின்றது. மயக்கம் நீங்க நீங்க அனுபவ முறையில் இந்த உயிரினை நடத்திச் செல்லுவது சிவம் என்னும் உண்மை புலப்படுகின்றது. ஆன்மா அல்லது உயிர் உடலில் அழுந்தி, ஜீவித்து சுகித்திருப்பது அறிவின் ஒரு நிலையாகும். பரம்பொருளை உணர்ந்து, பரம்பொருளில் அடங்கி நிற்றல் அறிவின் வேறு நிலையாகும். இறைவன் உயிரோடு கூடி உயிராக நிற்கின்றான். அப்படி இல்லையென்றால், உயிரானது எதனையும் விரும்பி அனுபவிக்கும் ஆற்றல் பெறாது. ஐம்பொறிகள், புலன்கள் ஆகிய வற்றிடமிருந்து தன்னை விடுத்துக் கொண்டு, தன்னை அறிவென்றும், பேரறிவே தன்னோடு கலந்து நிற்கின்றது என்றும் உணர்ந்திருப்பதே யோக நிலையாகும்.

"அஞ்சே அஞ்சாக அறிவே அறிவாகத்
துஞ்சாது இருந்து உணர்ந்து உந்தீபற
துய்ய பொருள் ஈதென்று உந்தீபற" (திருவுந்தியார்)

இத்தகைய அறியும் நிலையை ஆன்மா இறை அருளால் பெறுகின்றது. எவ்வாறு? படிகக்கல் வெண்மை நிறம் கொண்டது. ஆனாலும், சூரியனின் தோற்றம்முன் பல வண்ணங்களைத் தன்பால் காட்டுகிறது. மறுபடியும் சூரியன் உச்சி வேளையில் நிற்கும்பொழுது, மீண்டும் தனது இயல்பான வெண்மையையே காட்டுகின்றது. அதேபோல, இறைவனும் உயிருக்குத் தன்னை அறிந்து கொள்ளும் சக்தியை அளிக்கின்றான். பொருளைத் தன்னிடமிருந்து வேறாகத் தெரிந்து கொள்ளவும் உதவுகிறான். தன்னுடைய இந்த அறியும் சக்தியும், பரம்பொருள் தன்னோடு இருப்பதால்தான் பெற முடிகின்றது என்பதையும் உணர்த்துகின்றான்.

"தன்நிறமும் பல்நிறமும் தான்ஆம்கல் தன்மைதரும்
பொன் நிறம்போல் மன் நிறம்இப் பூ". (திருவருட்பயன்)

இறை அருள் உள்ளத்தில் பதியப் பதிய இந்த உயிரின் அறிவு நிலைகளில் மாறுதல்கள் தோன்றுகின்றன. இந்த மாறுதல்கள் எளிதாக வந்துவிடுவதில்லை. பிறவிப்பயன், வினைகள் அடங்குதல், குரு அருளின் வீழ்ச்சி, உடலின் மீது உள்ள பற்றினை நீக்குதல், உள்ளத்திலே தான்

வணங்கும் தெய்வத்தின்பால் ஆழ்ந்த அன்பு, இதுகாறும் தான் நடத்திய வாழ்க்கையைப் பற்றித் தானே நொந்து கொள்ளுதல், குறைகளைக் களைந்து சிவன் திருவடிகளைச் சேர வேண்டும் என்கிற சொல்லொணாத ஆவல், தான் செய்த பாவங்களுக்காகத் தன்னைத்தானே ஏசிக் கொள்ளுதல், எதிர்காலத்தில் பிறவிக் கடலைத் தாண்ட இறையருள் ஒன்றே உறுதியான தோணி, திருமுறைகளைக் கற்றோதல், சிவபூசை செய்தல், புறத்தேயும் அகத்தேயும் பரம்பொருளின் அருள் நிலையைக் கண்டு எண்ணி எண்ணி வியத்தல் போன்ற பல படிகளை உயிர் கடந்த பின்னரே அருளது நிலையில் உள்ளத்திலே ஓர் மாறுபட்ட உணர்வு தோன்றுகிறது. இந்த நிலையை அடைய பல ஆண்டுகள் ஆகலாம். பல பிறவிகள் எடுக்க நேரிடலாம். ஆயினும், ஒவ்வொரு உயிரும் இந்த நிலையை வந்தடைவது திண்ணம். கண்ணப்பர் போன்ற ஒப்பற்ற அடியார்கள் ஒரே பிறவியில் இந்தப் பேறினைப் பெறுகின்றனர். இறைவன் அவர்களை ஆட்கொள்கின்றான். சிக்கெனப் பிடித்துக் கொள்கின்றான். அந்த உள்ளங்களிலே மூடிக்கிடந்த சிவப்பண்புகள் ஒளிவிட்டு பிரகாசிக்கத் தொடங்குகின்றன. அவர்களைச் சேக்கிழார் பெருமான் **''கோதிலாதக் குணப்பெரும் குன்றனார்''** என்பார். இவர்களே **''தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்''** (திருமந்திரம்) ஆவர். இவர்கள் பெறுவது சொல்லொணா இன்பம். தாயுமான சுவாமிகள் தனது உள்ளக்கிடக்கையை வெகுநுட்பமாக வெளியிடுகின்றார்.

**''மோகமாதி தரும் பாசமானதை**
**அறிந்து விட்டுஉனையும் எனையுமே**
**முழுதுணர்ந்து சுகமான இன்ப வெளம்**
**மூழ்க வேண்டும்''.**

இந்த இன்ப உணர்ச்சி உள்ளத்திலே ஏற்படுகின்றது. இந்திரியங்கள் செயல்படாது அடங்குகின்றன. ஆமையானது தனது உறுப்புக்களைத் தன்னுள் அடக்குவது போன்ற நிலையாகும். உள்ளத்திலே ஓங்காரமான ஒளிமயம் தோன்றும். நான் என்கிற நினைப்பு அறவே ஒழிந்து விடும். அது ஒழிந்ததைக்கூட நாம் அறிய மாட்டோம். எஞ்சி நிற்பதெல்லாம் ஞானானந்த மயமே.

**''ஊமை யெழுத்தொடு பேசும் எழுத்துறில்**
**ஆமை யகத்தினில் அஞ்சும் அடங்கிடும்**
**ஓமய முற்றது வுள்ளொளி பெற்றது**
**நாமய மற்றது நாமறி யோமே''.** **(திருமந்திரம் - 2158)**

இதை ''தூங்காமல் தூங்கும் சுகம்'' என்பர் யோகியர். புலன்களை அடக்கி முக்தி தரும் ஞான மொழி எனும் வித்தை உள்ளத்திலே பதித்து, இறை அன்பெனும் நீரை அதன் மீது பாய்ச்சி, எல்லாம் சிவன் செயல் என்றிருந்து, முக்தியான வித்து வளர்ந்து, ஆன்மீக மரமாகப் படர்ந்து,

சிவத்தைத் தன்னுள் கொண்டும், சிவத்தை எல்லாவற்றிலும் பார்த்தும், எல்லாச் சீவராசிகளுக்கும் தன்னுடைய அன்பைப் பகிர்ந்தளித்தும் செய்யும் செயல்களெல்லாம் யோகியர் செயலாகும்.

**"ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்**
**தூங்காமற்றூங்கிச் சுகம் பெறுவதெக்காலம்"**

**"நீங்காச் சிவயோக நித்திரை கொண்டேயிருந்து**
**தேங்காக்கருணை வெள்ளந் தேக்குவது மெக்காலம்".**

**(பத்திரகிரியார்)**

நமது உணர்வுகள், ஆராய்ச்சி உணர்வு, அனுபவ உணர்வு என்று இரண்டு வகைப்படும். பகுத்தறிவைத் தூண்டி, ஞான நூல்களைக் கற்று, தத்துவங்கள் இன்னதெனத் தெரிந்து கொண்டு, தனக்கும் இறைவனுக்கும் உள்ள உறவை, மனம், புத்தி போன்றவற்றால் அறிந்து, அந்த அறிவால் தான் என்கிற முனைப்போடு, இறை உணர்வினைத் தம்முள் எழுப்பிக் கொள்வது ஒருவகை. பிறவிக்கடலை ஓரளவுக்கு நீந்திக் கடக்க இது வகைசெய்யும். ஆனால், எண்ணிறைந்த, விண்ணிறைந்த பரம்பொருளின் திருவடிகளில் என்றுமே தங்க இறப்பு, பிறப்புகளை முழுவதுமாகத் தாண்ட வேண்டியுள்ளது. அதற்காக நாம் பெற வேண்டிய ஞானம் இறைவனின் திருவருளால் ஏற்படுகிறது. மயக்கத்தைக் கடக்க வேண்டும். **"யாதும் உறங்காதே"** என்கிறது திருக்களிற்றுப்படியார் தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டு ஓரளவு எல்லாவற்றையும் தெரிந்து கொண்டதாக நம் உள்ளத்திலே ஏற்படும் எண்ணமும் நம்மைச்சரியான பாதையில் அழைத்துச் செல்லாது. ஆகவே, அதையும் **"உணராதே"** என்கிறது திருக்களிற்றுப்படியார். **"நீ பொதுவே நிற்கின்"** என்றும் அறிவுறுத்துகிறது.

எண்ணங்களின் அசைவை அடக்கி, உள்ளத்துள்ளே தனது பார்வையைத் திருப்பி, மெல்லக் கனலை எழுப்பி, கள்ளப் புலன் ஐந்தையும் கடிந்து விட்டு, தனது நாட்டத்தையெல்லாம் சிவ பரம்பொருள் மீது வைத்து, அங்குமிங்கும் தேடிக் கொண்டிராதபடி, ஒரே இடத்தில் தனது கவனத்தைச் செலுத்தி விழிப்போடு இருப்பவர்கள் சிவக்கனியைப் பெற்று, சார்பு கெட, பூதம் கலங்கிலும் அசைவற்று இருப்பார்கள் என்கிறார் திருமூலர்.

**"பூட்டொத்து மெய்யிற் பொறிப்பட்ட வாயுவைத்**
**தேட்டற்ற வந்நிலஞ் சேரும் படிவைத்து**
**நாட்டத்தை மீட்டு நயனத் திருப்பார்க்குத்**
**தோட்டத்து மாம்பழந் தூங்கலு மாமே".** **(திருமந்திரம் - 624)**

இதுவே துரிய நிலையாகும். விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம் போன்ற நிலைகளில் எல்லாம் யோகியர் துரிய உணர்வுடனேயேதான் பார்ப்பார்கள். ஐம்புலன்களுடைய சேட்டைகளைப் பொறுத்தவரை, அவர்களுடைய

உணர்வுகள் உறங்குகின்றன. இறை அருளைப் பொறுத்தவரை, அவர் களுடைய உணர்வுகளெல்லாம் விழித்த நிலையில் ஒளிவிட்டு நிற்கின்றன.

**''நித்திரை கெட்டு நினைவோடிருப் போர்க்கு**
**முத்திரை ஏதுக்கடி - குதம்பாய் முத்திரை ஏதுக்கடி''**

என்பார் குதம்பைச் சித்தர்.

கருவி கரணங்கள் கழட்டி விடப்பட்ட நிலையில், சுத்தாவத்தை தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கும். இறை அருளுடன் கூடி நிற்கும். அவர்கள் பார்க்கும் பார்வையெல்லாம் இறை உணர்வோடு காணப்படும். நனவிலும் சரி, கனவிலும் சரி, ஆழ்ந்த உறக்கத்திலும் சரி, அஞ்ஞானம் நீங்கிய நிலையில், யோகியர் கருவி கரணங்களைத்தம் வசம் கொண்டு வந்து பரம்பொருளின் தரிசனத்திற்காகவே அவற்றை ஈடுபடுத்துவர். தனது உயிர் அறிவு மயம் என்று கண்டுகொள்வர். அந்த அறிவுக்கு அறிவாய், இறை ஒளி எங்கும் பிரகாசமாய், வியாப்பியமாய் நிற்பதைக் காண்பர். அந்தப் பேரறிவின் வியாபகத்தில் அடங்கி நிற்பதே நிர்மலமான நிலை என்பதை அவர்கள் உணருகின்றார்கள். அவ்வாறு உணர்ந்து நிற்றல் துரிய நிலையாகும். ஆன்ம தரிசனம் பெறுவது ஒரு படி. ஆன்ம தரிசனம் பெற்றுச் சிவ வியாபகத்தில் பொருந்தி நிற்றல் எல்லாவற்றிற்கும் மேலான நிலையாகும்.

**''உன்னை யறியா துடலைமுன் நானென்றாய்**
**உன்னை யறிந்து துரியத் துறநின்றாய்**
**தன்னை யறிந்தும் பிறவி தணவாதால்**
**அன்ன வியாத்தன் அமலனென் றறிதியே''.**

**(திருமந்திரம் - 2279)**

இதுவே உயிரின் மேலான நிலையாகும் என்கிறார் திருமூலர். ஆறுகள் கடலைச் சேருவது போல, தூய்மை பெற்ற உயிரின் அறிவொளி இறைவனின் எல்லையற்ற ஞானப் பிரகாசத்தில் சேர்ந்து கொள்கின்றது.

**''சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ**
**சுத்த வெளியிற் சுடரிற் சுடர் சேரும்''** **(திருமந்திரம் - 135)**

சிவனடியார்கள் ஒப்பற்ற துரிய நிலையில் என்றுமே சஞ்சரிப்பவர்கள். சுயம்பிரகாசவெளியில் இருப்பதாகவும் கூறிக் கொள்வார்கள். **''இருத்தேன் இராப்பகல் அற்ற இடத்தே''** என்றார் திருமூலர். மிக்க பணிவோடு மணிவாசகப் பெருமான் **''தெய்வம் என்பதோர் சித்தமுண்டாகி''** என்கிறார்.

அத்தகையோர் நெஞ்சம் எப்போதும், எப்பணியிலும் சிவ பரம்பொருளின் திருவடியிலேயே தஞ்சமாகக் கிடக்கும். அகத்தேயும் புறத்தேயும் சிவத்தன்மையின் அடிப்படையில் பொருள்களைக்

காண்கின்றார்கள். விஷயங்களை அனுபவிக்கின்றார்கள். திருக்குறிப்புத் தொண்ட நாயனாரின் புறத்துப்பணி ஆடைகளை வெளுத்தலாகும். ஆனால், அவர் இப்பணியிலும் இறை பணி முன் நிற்றலைக் காண்கிறார். சுந்தர மூர்த்தி நாயனார் சிந்தையில் சிவமே நிரம்பி இருந்த காரணத்தால், சந்தனத் திருத்தொண்டுக்கு முழங்கையைத் தேய்த்தார். எல்லாவற்றிற்கும் மேலாக கண்ணப்பனார் அன்புருவானார். மணிவாசகப் பெருமான் இவருடைய பக்தி வெள்ளத்தின் ஆழத்தைக் கண்டு, கண்ணப்ப நாயனார் போல் தனக்கு அன்பு இல்லை எனக் கூறி **"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின் .... என்னையும் ஆட்கொண்டருளி"** என இறைவன் மீது தான் வைக்க வேண்டிய அன்பின் ஆழத்தைப்புலப்படுத்துகின்றார்.

இறை அனுபூதிமான்களுடைய புலன்கள் அவர்கள் வசம் சேர்ந்து, அவர்களால் கட்டுண்டு, அவர்களுடைய இறை உணர்வுக்குச் சான்றாகவும், அந்த உணர்வினை வெளிப்படுத்தும் சாதனங்களாகவும் பயன்படுகின்றன. இல்லாவிட்டால் சேக்கிழார் பெருமானுக்குக் காவிரி பாயும் சோழர் நாட்டில் நெல் வயல்களில் கதிர்கள் முதிர்ந்து நின்ற தோற்றம் அன்பின் வசப்பட்ட இறையடியார்கள் ஒருவருக்கொருவர் தலைவணங்கி இறைஞ்சுவதுபோலத் தோன்றாது. சேக்கிழார் பெருமானுடைய கண்ணோக்கு இறை அருளிலே ஆழ்ந்து கிடக்கும் கண்ணோக்கு.

சுந்தரமூர்த்தி நாயனார் திருவம்பலத்தின் அருகே மதிலைச் சூழ்ந்துள்ள ஆழ்ந்த அகழியில் உள்ள தாமரை மலர்களில் வண்டுகள் மகரந்தத் தூள்களிலே படுத்து, அந்தத் தூள் படிந்த மேனி உடையவைகளாகி இருப்பதைத் திருநீறு பூசிய சிவனடியார்களைப் போன்ற தோற்றமாகக் கண்டார் என்றால் அது வன்தொண்டருடைய சிறந்த சிவப்பண்பினை மட்டும் காட்டவில்லை. அந்தக் காட்சியை நமக்கு அருளித் தந்த சேக்கிழார் பெருமானின் தெய்வத் தன்மையையும் சுட்டிக் காட்டுகிறது.

அத்தகைய பெருமை பெற்ற சிவபரம்பொருளில் தம்மை அர்ப்பணித்து, சிவயோகத்தில், சிவபோகத்தில் திளைத்து நிற்கின்ற தூங்கிக் கண்டார் பெருமையை எவ்வாறு சொல்வது!



# 26. "பேச்சற்ற பேரின்பம்"

இறைவன் சத்திய ஞான தனிப்பொருள் ஆகும். அதுவே ஆனந்தம். வற்றாத இன்பக் கடல். இறைவனை அனுபவித்த அருளாளர்கள் இந்தப் பேரின்பக் கடலிலே முழுகித் திளைத்து நிற்பர். அருளாளர்கள் இறைவனுடன் ஒன்றி நிற்பதால் இந்த ஆனந்தம் தோன்றுகிறது. ஒன்றி நிற்பதாவது தனது உடல், பொருள், ஆவி, கருவி, கரணங்கள் அனைத்தையும் பரத்திலே ஈடுபடுத்தி, மெய்மறந்து, அகண்டமான வியாபகத்தில் தன்னைச் சேர்ப்பித்து, அதனால் கிடைக்கும் இன்பத்தை இடையறாது பருகுதலாகும். இதையே **"நான் பெற்ற இன்பம்"** என்றார் திருமூலர்.

எந்த உயிருக்கும் இன்பத்தின் மேல் விருப்பம் இயல்பாகவே உண்டாகும். நாமும் பலவகையான இன்பங்களை விரும்பி அவற்றை அடைய முயன்று அந்த இன்பங்களுக்காகவே வாழ்ந்து வருகின்றோம். இன்பம் என்று ஒன்று இல்லையென்றால் வாழ்வும் கசந்துபோய் விடும். இன்பம் பெறுவதே வாழ்வின் குறிக்கோள் என்னும் ஒருவித மாயையில் உயிரானது உடலையும், அதன் கருவிகளையும் பல துறைகளில் பயன்படுத்துகிறது. நமது மனம் ஒரு குரங்குபோல. ஒரு பொருளில் அதை நுகர்ந்து, இன்பம் பெற்றுத் திருப்தி அடைந்தவுடன், வேறொரு பொருளுக்குத் தாவுகின்றது. இவ்வுலகிலே நமக்குப்பல பொருள்களை அனுபவிக்க வாய்ப்பினைத் திருவருளால் நாம் பெற்றிருப்பதன் காரணத்தால் நமது இன்ப வேட்டை ஓர் முடிவிலாத பாதையாக அமைந்து விடுகிறது. இதுவும் இறைவனுடைய திருவருளேயாகும். உடலையும், கருவிகளையும் அனுபவிப்பதற்குப்பல பொருட்களையும் இந்த உலகிலே நமக்கு இறைவன் தந்தருளி, குழந்தைகளைப் படிப்பிலே ஊக்குவிக்கத் தின்பண்டங்களைத் தருவதுபோல, பொருட்களுடன் இன்ப அனுபவத்தைக் கலந்து அவற்றின் மீது மேலும் மேலும் இன்ப நாட்டம் கொள்ளுமாறு நம்மை ஊக்குவித்து, நம்முடைய கர்ம பலன்களை அனுபவிக்கத் திருவருள் புரிவதும் இறைவனேயாகும். இதனையே **"இன்பமும் இன்பக் கலவையுமாய் நிற்கும்"** என்றார் திருமூலர்.

ஆனால், இப்பூவுலகில் பொருட்களைக் கொண்டு நாம் பெறும் எல்லாவிதமான இன்பங்களுக்கும் ஒரு முடிவு உண்டு. நிலையற்ற

பொருட்கள் மீது நாம் நாட்டம் செலுத்தி, அவற்றை நுகர்ந்து, கருவி கரணங்கள் வழியாக நாம் இன்பம் நுகரும்போது அந்த இன்பத்திற்கு மாறாகத் துன்பம் நேருவதும் இறைவனுடைய பேரருளாகும்.

இன்பத் துறையிலே நாம் ஈடுபடும்போதே அதன் வழிவரும் இடர்களைச் சந்திக்க நாமே வித்திடுகின்றோம். இப்பிறவியிலே நாம் பெறும் இன்பங்கள், துன்பங்கள், நாம் நமது முற்பிறவிகளில் செய்த வினைகளின் பயனே என்பது திருவருள் அமைத்துள்ள நீதியாகும்.

**"இன்பப் பிறவி படைத்த இறைவனுந்**
**துன்பஞ்செய் பாசத் துயருள் அடைத்தனன்"**

**(திருமந்திரம் - 432)**

**"இன்பம் இடர் என்று இரண்டுற வைத்தது**
**முன்பவம் செய்கையி னாலே முடிந்தது"** **(திருமந்திரம் - 267)**

அருளாளர்கள் துன்பம் கலந்த இன்பத்தை நாடாமல் எல்லாவற்றிற்கும் மேலான பேரின்பத்தை, சிவானந்தத்தை நாடிப்பெறுவர். இதனினும் சிறந்த இன்பம் வேறில்லை. இதுவே முடிவான இன்பமாகும். இந்த நிலையில் உயிருக்குப் பரிபூரண அமைதி கிடைத்து, அந்த அமைதியிலே உயிர் நிலைத்து நிற்கும். இதுகாறும் சிற்றின்பத்தை நாடிவந்த உயிரானது இப்போது பேரின்பத்தில் திளைத்து நிற்கும். இப்பேரின்பம் தடையற்றதாய், நிலையானதாய், எல்லை இல்லாததாய் இருக்கும். இத்தகைய இன்பத்திற்கு இருப்பிடம் இறைவன் ஆதலால் இறை அனுபவம் பெற்ற அருளாளர்கள் இறைவனுக்கும், இன்பத்திற்கும் இடைவெளியைக் காண்பதில்லை. இறைவனையே இன்பமாகக் கருதுவர். ''தேனையும், பாலையும், கன்னலை யும் ஒத்த இனிய கோன் அவன்'' என்பார் மணிவாசகப் பெருமான். இந்த இன்ப நிலையே அன்பு நிலையுமாகும். இறை இன்பத்தை அனுபவிப்பதும், அன்பு செலுத்தும் பண்பும் ஒன்றேயாகும். **"ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே என்னுடைய அன்பே"** என்பார் மாணிக்கவாசகர். அன்பின் முதிர்ச்சியில் இறை இன்பத்தை அருளாளர் காண்பர்.

**"இன்பில் இனி(து) என்றல் இன்(பு)உண்டேல் இன்புண்டாம்**
**அன்பு நிலையே அது".** **(திருவருட்பயன் - 80)**

அருளாளர்கள் பெறும் இன்பம் இறைவனை அறிந்து கொள்வதால் கிடைக்கின்றது. இறை அருளால் அவர்கள் முதலில் ஆன்மபோதம் பெறுகின்றனர். அதாவது பக்குவமடைந்த உயிர்கள் தம்மைப் பற்றித் தெரிந்து கொள்கின்றன. இது ஆன்ம விளக்கமாகும். இத்தோடு நின்று விட்டால் மட்டும் போதாது. இறைவனைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு அறிந்து கொள்ளும் பொழுதுதான் ஆன்ம அறிவு இறை அறிவோடு ஒன்றி நின்று **"கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்"** நலத்தை உயிரானது பெறும். இதுவே ஆனந்த விளக்கம் எனப்படும். சத்திய ஞானானந்தம் என்றும் கூறுவர். இந்த நிலையை அடையத் தகுதி பெறும்

சீவர்களுடைய உடல் முழுவதிலும், உள்ளத்திலும் மயிர்க்கால்தோறும் பாலுடன் தேனும், பழத்தின் சாறும், தூய்மையான அமுதத்தின் சுவையும்போல ஒருவித இன்பம் பெருகி நிற்கும். இது திருமூலரின் அனுபவமாகும்.

**"பாலொடு தேனும் பழத்துள் இரதமும்**
**வாலிய பேரமு தாகும் மதுரமும்**
**போலுந் துரியம் பொடிபட வுள்புகச்**
**சீல மயிர்க்கால் தொறுந்தேக் கிடுமே".** **(திருமந்திரம் - 2831)**

நாம் உடலையும், கருவி கரணங்களையும் பயன்படுத்தி இன்பத் துன்பங்களைப் பெறுகின்றோம். அருளாளர்கள் இறை அறிவு பெற்றவர்கள். கருவி கரணங்களால் அவர்கள் இறைவனைப் பற்றிய ஞானத்தை அடையவில்லை. இறைவனுடைய திருவருளாலே அவன் வழங்கி அருளும் ஞானத்தைப் பெற்று எல்லாவற்றையும் அறிந்து கொள்வார்கள். அதனால் பேரின்பம் பெறுவார்கள். இந்த இன்பத்தை அனுபவித்தவர்களுக்கே அதன் தன்மை விளங்கும். பிறர் அதன் தன்மையை அறிய மாட்டார்கள். கன்னிப்பெண் ஒருத்திக்கு காம இன்பம் தெரியாதது போல இந்த நிலை இருக்கும். கணவனும் மனைவியும் கூடிப்பெறும் இன்பம் வாயினால் சொல்ல முடியாது. இதை அவ்விருவருமே அறிவர். அதேபோல அருளாளர்கள் இறைவனோடு ஒன்றிப்பெறும் இன்பத்தை அவர்களே அறிவர். உடல் முதலிய கருவிகளின் துணையைக் கொண்டு உலகியற் பொருட்களை அறிந்து கொள்ளலாம். உயிரின் தன்மையையோ இறைத் தன்மையையோ அவற்றால் அறிந்து கொள்ள முடியாது. அவ்வாறு அறிந்துகொள்வதாக நம்மில் சிலர் நினைத்தாலும் அது கற்பனையே ஆகும். இறை ஞானம் பெற்றவரே முழுமையான அறிவினைப் பெற்றவர்கள். அவர்களே வீட்டின்பம் பெறுவர். மற்றவர்களுடைய வினை நீங்குவதில்லை, ஆணவம் அகலுவதில்லை.

**".... .... ....**
**.... கன்னிகைதான் காமரதம் காணாள்;**
**மருவிஇரு வரும்புணர வந்தஇன்பம்**
**வாயினால் பேசரிது; மணந்தவர்தாம் உணர்வர்;**
**உருவின்உயிர் வடிவதுவும் உணர்ந்திலர் காண்; சிவனை**
**உணராதார் உணர்வினால் உணர்வதுகற் பனைகாண்;**
**அருள்பெறின்,அவ் இருவரையும் அறிவுஇறந்து அங்கு அறிவர்**
**அறியாரேல்; பிறப்பும் விடாது! ஆணவமும் அறாதே."**
**(சிவஞானசித்தியார் - 288)**

உலகப் பொருட்களை அனுபவிக்க நமது உடல் பயன்படுகிறது. உடலின் வேட்கைகளைத் திருப்தி செய்து அதனால் இன்பம் அடையும்பொழுது அந்த உடலே நமக்கு இன்பத்தைத் தருவது போன்ற ஒரு

மயக்கம் ஏற்படுகிறது. உடல் முழுவதுமே கரும்பும், தேனும் கலந்திருப்பது போல ஒரு உணர்வு ஏற்படுகிறது. கரும்பும் தேனும் தித்திக்கும் பொருள்கள்தாம். ஆனால், அவற்றைவிட மேலானதொரு இன்பத்தைத் தரக்கூடிய ஒரு பொருள் உண்டு. அதுவே சிவபரம்பொருளாகும். இறைவன் திருவருளால் அந்தச் சிவபரம்பொருளை, நமச்சிவாயக் கனியை நாடுகின்ற ஆர்வம் நம்முடைய உள்ளத்திலே தோன்றத் தொடங்கிவிட்டால் அதைவிடக் கூடுதலான ஆனந்தம் வேறு எந்த வழிகளிலும் பெற இயலாது. உள்ளத்தினுள்ளே அரும்புகின்ற சிவானந்தத்தை உணர்வு நிலையில் நாம் பெறும்பொழுது, உடலும் அதனால் பெறக்கூடிய இன்பங்களும், சுவைகளும் ''சீ'' எனப்புளித்துவிடும். இதுவும் திருமூலரின் அனுபவமாகும்.

**''கரும்புந் தேனுங் கலந்ததோர் காயத்தில்**
**அரும்புங் கந்தமு மாகிய ஆனந்தம்**
**விரும்பியே உள்ளம் வெளியுறக் கண்டபின்**
**கரும்புங் கைத்தது தேனும் புளித்ததே''.**

**(திருமந்திரம் - 2976)**

இந்தச் சிவானந்தத்தைப் பெற நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் தெளிந்த சிந்தையுடன் இருக்க வேண்டும் என்கிறார் திருஞானசம்பந்தர். இறைவன் அப்பாலுக்கு அப்பாலாய் நிற்பவன். ஐம்பூதங்களையும் தம்முள் அடக்கி வைத்துக் கொண்டிருப்பவன். சந்திரனைத் தலையிலே அணிந்து கொள்ள வல்லவன். அத்தகையவனின் எல்லோருடைய உள்ளத்திலும் குடிகொண்டிருக்கிறான். அவனுடைய குடியிருப்புத் தெளிவாக இருக்க வேண்டும். தூய்மையாக இருக்க வேண்டும். மாசு மறு நீங்கி இருக்க வேண்டும். ஆசைகளாலும் தீய குணங்களாலும் அழுக்கடைந்து கலங்காமல் இருக்க வேண்டும். தூய்மையான உள்ளத்துடன் இறைவனுக்கு இன்பம் தரும் பணியை நாள்தோறும் செய்ய வேண்டும். அது என்ன பணி? சிவபெருமானைத் தினந்தோறும் நாடிச் செல்ல வேண்டும். சென்று அவன் புகழைப் பாடித் துதிக்க வேண்டும். அவனுடைய குணங்களையும் புகழையும் உலகுக்கு எடுத்துக்கூற வேண்டும். அவ்வாறு செய்தால் குறைகள் முற்றும் ஒழிந்து இறைவனைச் சந்திக்கலாம். தெளிந்த சிந்தையுள் சந்திக்கலாம். அவன் அங்கே எவ்வாறு இருப்பான்? **''தேனுமாய் அமுதாகி நின்றான்''** என்பார் திருஞானசம்பந்தர். தேனும் அமுதமும் தரக்கூடிய இன்பத்தைச் சிவபெருமான் தெளிந்த சிந்தையுள் நின்று நமக்குக் கொடுத்துக் கொண்டேயிருப்பான்.

**''தேனு மாய்அமு தாகிநின் றான்தெளி சிந்தையுள்;**
**வானு மாய்மதி சூடவல் லான்மங்க லக்குடிக்**
**கோனை நாள்தொறும் ஏத்திக் குணங்கொடு கூறுவார்**
**ஊனம் ஆனவை போய்அறும்; உய்யும் வகைஅதே''.**

இறைவனுடைய அருளால் அருளாளர்களுடைய தெளிந்த சிந்தையில் வைரமணி போன்ற இறைவனைக் கண்டறிந்த - மாத்திரத்திலேயே

அன்பர்களுடைய உள்ளத்தில் தனிப்பெரும் இன்பம் பொங்குகின்றது. இந்த இன்பத்திற்கு முன், இந்த உலகத்திலுள்ள மற்ற சுவைதரும் பொருள்களெல்லாம் சுவையற்றுப் போகின்றன. முருகப்பெருமான் மீது அளவிலாப் பற்று வைத்து ஆழ்ந்த இன்பம் பெற்ற ஒப்பற்ற அனுபூதிமானாகிய அருணகிரிநாதரும் திருமூலரைப் போலவே உவகை பொங்கப்பாடுகின்றார்.

**''பெரும்பைம் புனத்தினுள் சிற்றேனல்**
**காக்கின்ற பேதைகொங்கை**
**விரும்பும் குமரனை மெய்யன்பி**
**னால்மெல்ல மெல்லஉள்ள**
**அரும்பும் தனிப்பர மானந்தம்**
**தித்தித் தறிந்த அன்றே**
**கரும்பும் துவர்த்துச்செந் தேனும்**
**புளித்தறக் கைத்ததுவே''.**

சிவானந்தத் தேனைப் பருகி, அந்த இன்பத்திலே மூழ்கித் திளைத்து நிற்பவர் மாணிக்கவாசகப் பெருமான். **''நானேயோ தவம் செய்தேன்?''** என்று கேட்பவர் சிவன் அவன் சிந்தையுளே புகுந்த நிலையைக் கண்டு, எண்ணி எண்ணி வியப்பு மேலிட்டு நிற்பவர். தேனாய் இன் அமுதமாய்ச் சிவபெருமான் தித்திக்கும் தன்மையை உள்ளத்திலே கண்டவர். பூவினுள் இருக்கும் தேன் அவரை ஈர்க்குமா? ஈர்க்காதே. ஆனால் சாதாரணத் தும்பிக்கு சிவானந்தத் தேனின் அருமை எவ்வாறு தெரியும்? பூக்களிலுள்ள தேனையும் நறுமணத்தையும் மட்டுமே நாடிச் சென்று சுற்றித் திரிகின்றது. இது என்ன பயனற்ற பணி என்று நினைக்கிறார் மணிவாசகப் பெருமான். பூவிலுள்ள தேனுக்காகச் சுற்றாமல் நாள்தோறும் நினைக்கும்பொழுதெல்லாம், காணும்பொழுதெல்லாம் எப்பொழுதுமே தன் நெஞ்சம் உருக உருக திருக்கூத்துடையானை அடைந்து அவனைப் பாடித் திரிவதால் கிடைக்கும் ஆனந்தத் தேனினைப் பருகி, இன்பம் எய்துவது சாலச்சிறந்தது என்றும், ஆகவே அதைத் தும்பி செய்ய வேண்டும் என்றும் மாணிக்கவாசகப் பெருமான் தும்பியைக் கடிந்து கொள்கின்றார். உலகோரிடம் பாசம் வைக்காமல், தெய்வத்தின் மீது பற்றை வைக்கும்பொழுது உயிருக்குக் கிடைக்கும் ஆனந்தமே எல்லாவற்றிற்கும் மேலானதாகும் என்கிற கருத்தை மாணிக்கவாசகர் தெளிவுபடுத்துகின்றார்.

**''தினைத்தனை உள்ளது ஓர் பூவினில் தேன் உண்ணாதே,**
**நினைத்தொறும், காண்தொறும், பேசும்தோறும், எப்போதும்,**
**அனைத்து எலும்பு உள்நெக, ஆனந்தத்தேன் சொரியும்**
**குனிப்பு உடையானுக்கே சென்று ஊதாய்; கோத்தும்பீ'**

**(திருவாசகம் - திருக்கோத்தும்பி - 217)**

உலகப் பொருட்கள் மீது பாசத்தை வளர்க்க உதவுவது நமது உடலும், உடலைச் சார்ந்த கருவிகளும் கரணங்களும் ஆகும். கருவி கரணங்கள்

ஐடப்பொருள்கள் ஆகும். நமது உயிரே அவற்றைப் புறப்பொருட்கள் மீது செலுத்துகின்றது. ஆனால், இறை அனுபவம் பெற்ற அருளாளர்களுக்கு இதே கருவி கரணங்கள் சிவானந்தத்தில் அருளாளர்கள் தொடர்ந்து திளைத்து நிற்க உதவும் கருவிகளாகத்தன்மை மாறிவிடுகின்றன. அவற்றைக் கொண்ட அருளாளர்கள் சிவானுபவத்தில் இருந்து கிடைக்கும் பேரின்பத்தை மேலும் மேலும் பருகி அமைதி அடைய பயன்படுத்திக் கொள்கிறார்கள். உயிர் ஒரு பக்கம், உடல் ஒரு பக்கம் என்று இருவிதப் பாதைகளிலே அவை செல்லாமல் சித்தத்தைச் சிவமாக்கும் பாதையிலே அவற்றைச் செலுத்திப் பேரின்பம் அடைகின்றார்கள். தன்னை ஆட்கொண்ட பிரானை **"பித்தன் இவன்"** என அழைத்தார் சுந்தரமூர்த்தி நாயனார். ஆட்கொள்ளப்பட்ட காரணத்தால் அவருடைய சீவன் சிவமாம் தன்மையைப் பெற்று விட்டது. அந்த நிலையில் அவர் தில்லையம்பதியில் நடராஜப் பெருமானைத் தரிசிக்கும் போது அவருடைய கருவி கரணங்கள் எல்லாம் சிவானுபவத்தில் மூழ்கிப் பேரின்பத்தில் திளைத்து நின்ற ஒரு ஒப்பற்ற காட்சியைச் சேக்கிழார் பெருமான் தனது அகக்கண்களால் கண்டு தெய்வமணம் வீசும் வாசகமாக நமக்கு அருளித் தந்துள்ளார். அருளாளர்களுடைய சித்தமெல்லாம் தெய்வமாகிய காரணத்தினால் அவர்கள் புறத்தே தெய்வீகக் காட்சியில் ஈடுபடும்பொழுது தங்கள் கருவி கரணங்களைத் தம் வசமே ஒடுக்கிச் சிவத்தை நோக்கிச் செலுத்தி இன்பம் அடைகின்றார்கள். அவர்களுடைய உள்ளத்திலே இறை அனுபவம் நிரம்பி நிற்க மற்றவர்கள் மனதிலே படியாத புறக்காட்சிகள் அருளாளர்களுடைய உள்ளத்திலே மாறிலா மகிழ்ச்சியைத் தந்து விடும்.

**"ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள**
**அளப்பருங் கரணங்கள் நான்கும்**
**சிந்தையே யாகக் குணம்ஒரு மூன்றும்**
**திருந்துசாத் துவிகமே ஆக**
**இந்துவாழ் சடையான் ஆடும்ஆ னந்த**
**எல்லையில் தனிப்பெருங் கூத்தின்**
**வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து**
**மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்".** (பெரியபுராணம்)

இறை அனுபவத்தால் மெய்ஞ்ஞானம் கிட்டுகிறது. மெய்ஞ் ஞானமாவது எல்லா ஞானங்களையும் தன்னுள் அடக்கியுள்ள சிவ பரம்பொருளைப் பற்றிய பரஞானமாகும். திருவருளால் உயிர் மெய்ஞ்ஞானம் பெற்றவுடன், மெய்ஞ்ஞான நிறைவில் ஒப்பற்ற சிவானந்தத்தை அனுபவிக்கின்றது. சிவ பரம்பொருளோடு ஒன்றி நிற்கும் அனுபவமே சிவானந்த அனுபவமாகும். இது உள்ளத்திலே எழுவது. ஆனாலும் இதனால் வரும் பெருமகிழ்ச்சி கருவி கரணங்களிலே நிரம்பி வழிந்தோடுகிறது. கருவி கரணங்கள் அவற்றால் பாதிக்கப்படுகின்றன. இறைவனுடைய பெரும் கருணை அருளாளர்களுடைய ஐம்பொறிகளின் செய்கைகளில் வெளிப்படுகிறது. கண்கள் களிப்படைகின்றன. வாய்

இன்னிசை பாடுகின்றது. கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர்மழை பொழிகின்றது. மனதிலே இறைவனைப் பற்றியே நினைப்பு. உடல் ஆனந்தக் கூத்தாடுகின்றது. திருஞானசம்பந்தருக்கு இந்த நிலை திருச்சிற்றம்பலத்திலே ஏற்படுகின்றது. பெருமானார் அதனைக் கண்டு வியக்கின்றார். இறைவனுடைய ஒப்பற்ற கருணையைப் போற்றுகின்றார். ''எம்பெருமானே! சிவபோகம் என்பது என் உள்ளே நேருகின்றது. அந்த அனுபவத்தை ஐம்பொறிகளின் அளவிலேயும் எளிதில் வரும்படி அருளினாயே. உன் பெரும் கருணையை எவ்வளவு போற்றினாலும் போதாதே'' என்பார்.

**''அண்ண லார்தமக்கு அளித்தமெய்ஞ் ஞானமே யான**
**அம்பலமும்தம்**
**உண்ணி றைந்தஞா னத்துஎழும் ஆனந்த ஒருபெருந்**
**திருக்கூத்துங்**
**கண்ணின்முன் புறக்கண்டுகும்பிட்டு எழுங்களிப்பொடும்**
**கடற்காழிப்**
**புண்ணி யக்கொழுந் தனையவர் போற்றுவார் புனிதரா**
**டியபொற்பு.** (பெரிய புராணம் - 2058)

**''உணர்வி னேர்பெற வருஞ்சிவ போகத்தை யொழிவின்றி**
**உருவின்கண்**
**அணையும் ஐம்பொறி யளவினும் வெளிவர அருளினை**
**யெனப்போற்றி**
**இணையில் வண்பெருங் கருணையேயேத்தி,**
**முன்னெடுத்தசொற்பதிகத்திற்**
**புணரு மின்னிசை பாடின ராடினர் பொழிந்தனர் விழிமாரி;**
(பெரிய புராணம் - 2059)

சிவானந்தத்தைப் பற்றிப் பேசுகின்றோம். அதைப் பெற்ற அருளாளர்களின் நிலை என்ன என்று ஓரளவு விளக்கலாம். ஆனால், சிவானந்தம் இத்தகையது என்று நம்மால் சொல்ல முடியாது. வேண்டுமானால் யாவற்றினும் மேம்பட்ட இன்பம் என்று மட்டுமே சொல்லலாம். சிவானந்தம் தனக்கு மேல் சிறந்தது ஒன்று இல்லாத பேரின்பமாகும் என்றும் ஒப்புக் கொள்ளலாம். அது அனுபவித்தவர்களுக்கே தெரியும். **''எங்ஙன் இருந்ததென்று அவ்வண்ணஞ் சொல்லுகேன்**
**அங்ஙன் இருந்ததென்று உந்தீபற''** என்கிறது திருவுந்தியார். இதனைப் **''பேச்சற்ற பேரின்பம்''** என்பார் திருமூலர். இறைவனுடைய பெரும் கருணையால் அவனுடைய அருட்கடலில் மூழ்கினோம். எல்லாவிதப் பாசத் தொடர்புகளைக் களைந்து கொண்டோம். மாயையிலிருந்து விலகிக்கொண்டோம். இறைவனுடைய பேரருள் உண்மையைப் புகட்டிச் செயலற்று இருக்கும்படி செய்து விட்டது. இதுவே சோதனையாகும் என்கிறார் திருமூலர்.

"பெம்மான் பெருநந்தி பேச்சற்ற பேரின்பத்
தம்மா னடிதந் தருட்கடல் ஆடினோம்
எம்மாய மும்விடுத் தெம்மைக் கரந்திட்டுச்
சும்மா திருந்திடஞ் சோதனை யாகுமே". (திருமந்திரம் - 2635)

உள்ளத் தூய்மையில் இறைவனுடன் ஒன்றியிருந்து, ஒப்பிலாத ஆனந்தம் பெற்ற "செப்பு அரிய சிவம் கண்டு தான் தெளிந்து" இறையுணர்வாளர்கள் சிவமாகவே விளங்கி நிற்பர். ஒருவர் நமக்கு உதவி செய்தால் அவருக்கு நாம் நன்றி செலுத்துகின்றோம். அனுபூதிமான்கள் இறைவனுக்கு எவ்வாறு நன்றி செலுத்தப் போகின்றார்கள்? அதற்கு ஒரேவழிதான் உண்டு என்பதையும் உணருகிறார்கள். தங்களை இறைவனுக்கே அர்ப்பணித்து விடுகின்றார்கள். அவனன்றி வேறில்லை என்கிற உணர்வில் தமது உடல், பொருள், ஆவி, உடைமை யாவற்றையும் இறைவனுடைய திருவடிகளிலே காணிக்கையாகச் செலுத்தி விடுகின்றார்கள். இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் இறைவனுக்கு அடிமை களாகிறார்கள். அவனுக்கு ஆளாய்விடுகிறார்கள். தங்களுக்கென்று ஒரு உரிமையும் இல்லை என்பதை உள்ளத்தில் தெரிந்து கொள்கின்றார்கள்.

எல்லாம் அவன் அருளால் நடக்கின்றது. எல்லாம் அவனுடைய உடைமைகள் என்கிற உணர்வு சிவபோகத்தில் ஏற்படுகிறது. இந்த உலகில் ஒருவரும் மற்றொருவருக்கு அடிமையாகச் செல்ல விரும்புவதில்லை. அடிமையாவதில்லை. நிர்ப்பந்தத்தால் அடிமையாக்கப்படலாம். ஆனால், மெய்ஞ்ஞானம் பெற்ற அனுபூதிமான்கள் இறைவனுக்கு அடிமையாவதைத் தவிர வேறு வழி இல்லை என்கிற ஒப்பற்ற நிலைக்கு வந்து விடுகிறார்கள். அந்த எண்ணமே அவர்களுக்குப் பேரானந்தத்தைக் கொடுக்கின்றது. தங்கள் நினைப்பெல்லாம் இறைவன்பால், தங்கள் செய்கையெல்லாம் இறைவனுக்கு இனியவை, தங்கள் உணர்வெல்லாம் இறைவனுக்குக் காணிக்கை என்று அருளாளர்கள் தங்களை இறைவனுக்கு உடைமையாக்கிக் கொள் கின்றார்கள். இந்த நிலையை அவர்கள் தாமாகவே விரும்பிப் பெற்றுச் சொல்லொணா இன்பம் அடைகின்றார்கள். இறைவனை அனுபவித்தோம் என்பது மட்டும் அவர்களுக்கு இன்பத்தைக் கொடுப்பதில்லை. இறைவனுக்கு ஆட்பட்டோம், அடிமையானோம் என்கிற நினைப்புப் பன்மடங்கு அதிகமான ஆனந்தத்தைத் தருகிறது. அடிமை என்றால் இன்று நேற்று அன்று. மெய்ஞ்ஞானம் பெற்ற அடியார்கள் பன்னெடுங்காலம் தங்களுடைய உயிர் இறைவனோடு பிணைக்கப்பட்டிருக்கின்றது என்பதைக் கண்டறிந்தார்கள். அந்த உண்மைத் தொடர்பு மாயையால் மறைக்கப்படுகிறது. மாயை நீங்கியவுடன் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டமை உள்ளத்திலே பளிச்செனப் புலப்படுகிறது. ஊழிதோறும் ஊழி உயிரானது உலகில் பிறப்பெடுத்து, கன்ம பலன்களை அனுபவித்து இறைவன் திருவடிகளைச் சேரும் வரை இறைவனின் திருவருளே உயிரை நடத்திச் செல்லுகின்றது என்கிற ஞானமே உயிரினை இறைவனுக்கு அடிமையாக்கி விடுகின்றது. இறைவனுக்கு நாம் எல்லோரும் கட்டுப்பட்டவர்கள். அவனுடைய

அடிமைகள் என்னும் உண்மை நம்முடைய உயிரின்மேல் ஆணவங்களிலே எழுதுவது போல எழுதப்பட்டுள்ளது. அதை எழுதியவன் பிரம்மன். சாட்சியாக நின்றவன் திருமால். நமது பிறப்பும், காப்பும், இறப்பும் இறைவனுடைய கைகளிலே இருக்கின்றது. ஏனென்றால், நாம் எல்லோரும் அவனுடைய அடிமைகள். அவனே நமக்கு இன்பம் அளிப்பவன். அவனுக்கே நாம் ஆட்பட்டோம். வேறு யாவருக்கும் குடியல்லோம் என்றார் திருநாவுக்கரச நாயனார். அடியார்கள் சிவனுக்கு வழிவழி அடிமை யானவர்கள். சுந்தரர் வரலாற்றில் சிவபெருமான் இதைத் தெளிவாக்கினார். திருமந்திரம் இதையே படம் பிடித்துக் காட்டுகிறது.

**''என்தாயோ டென்னப்பன் ஏழேழ் பிறவியும்**
**அன்றே சிவனுக் கெழுதிய ஆவணம்**
**ஒன்றா யுலகம் படைத்தான் எழுதினான்**
**நின்றான் முகில்வண்ணன் நேரெழுத் தாயே''.**

**(திருமந்திரம் - 1876)**

தன்னை இறைவனுக்கு அர்ப்பணித்துக் கொண்டதில் அந்தம் ஒன்றும் இல்லா ஆனந்தம் பெறுகிறார் மணிவாசகப் பெருமான். அதை அவர் ஒப்புக் கொள்கிறார். உடனே அவருடைய மனதில் ஒரு எண்ணம் தோன்றுகிறது. ''நான் என்னை உனக்குக் கொடுத்தேன். நீயோ உன்னையே எனக்குக் கொடுத்துவிட்டாயே சங்கரா, நம்மில் யார் சாமர்த்தியசாலி? உன்னைப் பெற்றதால் எனக்கு அளவிலா ஆனந்தம் கிட்டியது. என்னைப் பெற்றதால், உனக்கு என்ன கிடைக்கப்போகின்றது. அதுமட்டுமல்ல என்னுடைய சிந்தையையே நீ இருப்பிடமாக்கிக் கொண்டாய். என்னுடைய உடலில் குடியிருந்தாய். நானல்லவா பாக்கியசாலி. நீ இவ்வாறு உன்னை எனக்குத் தந்து கொண்டதற்கு நான் எவ்வாறு உனக்குக் கைம்மாறு செய்யப்போகிறேன்'' என்கிறார் மணிவாசகப் பெருமான், ஒரு ஒப்பற்ற அருளாளர். அவருடைய திருவாக்கு இந்தப் பூவுலகில் வாழும் எல்லா மக்களின் உள்ளங்களில் இறைவன்பால் எழும் நன்றி உணர்விற்கு இலக்கணமாக அமைகின்றது.

**''தந்தது, உன்-தன்னை; கொண்டது, என் தன்னை;**
**சங்கரா! ஆர் கொலோ, சதுரர்?**
**அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம்; பெற்றேன்;**
**யாது நீ பெற்றது ஒன்று, என்பால்?**
**சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்**
**திருப்பெருந்துறை உறை சிவனே!**
**எந்தையே! ஈசா! உடல் இடம் கொண்டாய்**
**யான் இதற்கு இவன், ஓர் கைம்மாறே!''**

**(திருவாசகம் - 395)**

❋ ❋ ❋

# 27. "அடியார் பெருமை"

இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவரும் ஆன்ம சாதனங்களைத் தீவிரமாகப் பற்றிக் கொண்டு, ஆன்ம பக்குவம் அடைந்து, இறைவனின் திருவடிகளையே தஞ்சம் எனக் கொண்டு, கற்பனை வாழ்க்கையில் கவனம் செலுத்தாது, திருவருளுக்காக வேண்டி, எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்தி வாழ்தலே பிறப்பின் நோக்கமாகும். உலகில் பிறந்த ஒவ்வொருவரையும் அளவில்லாத கர்மங்கள் ஒன்று கூடித்திரண்டு, இடையீடின்றி, வாட்டி வருத்தும் என்பது உண்மை. அவரவரைச் சார்ந்த கர்மங்கள் எவ்வளவாக இழிவுபடுத்த வேண்டுமோ, அவ்வளவாக இழிவுபடுத்தும் என்பதில் ஐயமில்லை. ஆயினும், இறைவன் திருவருளாலும், குரு அருளாலும், எல்லாத் துன்பங்களையும் அனுபவித்துத் தொலைப்பதன் மூலமாகவே மாயையின் பிடிப்பு நீங்கும். எத்தனையோ பிறவிகளுக்கு வித்தாய் உள்ள கர்மங்களை ஒரே பிறவியில் முழுதும் அனுபவித்து முடிப்பது என்பது முடியாத காரியமாகும். ஆகவே, திருவருள் விதிப்படி அந்த வினைகளையெல்லாம் அனுபவிக்க அனுபவிக்க அவற்றின் ஆற்றல் குறைந்து நம்மை விட்டு நீங்கி விடும் மெய்யடியார்களும் இதுபோன்ற துன்பங்களை அனுபவித்தவர்களே. என்றாலும், அவை அனைத்தையும் திருவருட்செயல் என உணர்ந்து, எம் கடன் பணி செய்து கிடப்பதே என்பதே தலையாய அறம் என்று துணிந்து, எல்லாவற்றையும் சகித்துக் கொள்பவர்களே மெய்யடியார் ஆவர்.

இறைவன் வினை என்னும் மாயையை அகற்றி அருள் செய்கின்றான். அன்பரை அடிமை கொள்கின்றான். அவர்களுடைய வினையை அருளால் அனுபவிக்கச் செய்தும், அனுபவிக்காமல் நீக்கத்தக்கவற்றை நீக்கியும் அருள் புரிகின்றான். வினையை வினையாலேயே தீர்க்க வைக்கின்றான். அன்பர்களது வினையை எவ்வண்ணம் நடத்தி அகற்ற வேண்டுமோ அவ்வண்ணம் நடத்தி, அகற்றி ஆட்கொள்வதே கடவுளின் அருளாகும். இதை உணர்ந்தவர்கள் அடியார்கள். இவ்வாறு கடவுள் செய்வதால் தாங்களும் இறைவனுடைய அன்புக்குப் பாத்திரமாகின்றோமே என்று நினைந்து மகிழ்பவர்கள் அடியார்கள்.

**"வெருளாவண்ணம் மெய்யன்பை**
**யுடையாய் பெற நான்வேண்டுமே"**

**(திருவாசகம் - பிரார்த்தனைப் பத்து)**

வினைப் போராட்டங்களால் துன்பம் அடைந்த மெய்யடியார்கள் எல்லாம் தங்களைப்பாவிகள் என்று இழித்துக் கூறி, நைந்து நைந்து, இரங்கி இருக்கின்றார்கள். (திருவாசகம் - உயிருண்ணி 10). ஒருவன் தன்னைப் பாவி என்றும், அருளுக்குத் தகுதியற்றவன் என்றும் உணர்வதற்கே பல பிறவிகளில் புண்ணியம் செய்திருக்க வேண்டும். மாயை நிலையில் சீவர்கள் தங்களை பாவிகள் என்று உணர்வது முடியாத காரியம். தங்களுடைய பிறவிகள்

வினைவழி வந்தவை என்று அறியாதவர்கள். எடுத்த பிறப்பில் அனுபவிக்கும் கர்மங்களைக் கொண்டே அடுத்த பிறவிக்குரிய வினைகளுக்கு வித்திடுகின்றார்கள் என்று தெரிந்து கொள்வதில்லை.

இதனுடைய இலக்கணம் நமது ஆன்மிக நூல்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. திருமந்திரம், திருவாசகம், தேவாரம், திவ்வியப் பிரபந்தம் போன்ற அருள் நூல்கள் இந்த இலக்கணத்தை வலியுறுத்துகின்றன. ஆனால், அவற்றைக்கற்றதனால் மட்டும் பயனை அடைந்துவிட முடியாது. அவை எடுத்து வைக்கும் நியாயங்களை நன்கு உணர்ந்து, அவை காட்டும் வழியிலேயே சென்று, அவை எடுத்து வைக்கும் நெறிகளைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

இவ்வாறு சாதக யோகங்களை வழுவறத்தாங்கி, ஒழுகி, மாயையை அடிமைப்படுத்தித் தங்களை மலமற்ற நிலைக்கு மெய்யடியார்கள் உயர்த்திக் கொள்வார்கள்.

சிலர் தாங்கள் படித்ததை வைத்துத் தங்களுக்கு எல்லாம் தெரியும் என்கிற கற்பனையுடன் நடந்து கொள்வார்கள். ஆனால், அவர்களுடைய நடத்தை வெறும் கற்பனைதான். வார்த்தைகள் சரளமாக வெளிவரும். ஆனால், அவற்றில் ஆழம் இருக்காது, உணர்ச்சி இருக்காது, அமைதி இருக்காது. அலை ஓய்ந்த, ஆழ்ந்த கடல் போன்ற தெளிந்த சிந்தனை யுடையவர்களே பரம்பொருளின் வியாபகத்தை உணர்ந்து கொள்ள முடியும்.

**"திரையற்ற நீர்போல் சிந்தை தெளிவார்க்குப்**
**புரையற் றிருந்தான் புரிசடை யோனே".** **(திருமந்திரம் - 2955)**

தத்துவம் படித்து, பேசி, புகழ்ச்சி வலையில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளல் ஒருவனை ஆன்மிகப் பாதையில் நடத்திச் செல்லாது. விவரங்கள் தெரிந்திருந்தால் மட்டும் போதாது. விவரங்களைத் தனதாக்கிக் கொள்ள வேண்டும். தனதாக்கிக் கொள்வது என்றால் தத்துவப் பரம்பொருளை அனுபவித்துத் தான் என்கின்ற உணர்வை மறுத்தலே ஆகும். மெய்யடியார்கள் அத்தகைய நிலையிலே நிற்பவர்கள்.

இயமம், நியமம் போன்ற ஒழுக்கங்கள் அவர்களுக்கு இயல்பாகவே வரும். அவர்கள் அதற்காகத் தீவிர முயற்சி செய்யத் தேவையில்லை, பாடுபட வேண்டியதும் இல்லை. அவர்கள் வாழ்க்கையே இயமம், நியமம், தாரணை, பிரத்தியாகாரம், தியானம் போன்ற ஒழுக்கங்களின் அடிப்படையில் அமைந்திருப்பதன் காரணத்தால், அவர்களுடைய வாழ்க்கையே இந்த ஒழுக்கங்களின் இலக்கணமுமாகும்.

பயிற்சி வழியில் இந்த ஒழுக்கங்களை அடைய முற்படும்பொழுது, ஒவ்வொரு படியாக ஏற வேண்டியுள்ளது. ஆனால், மெய்யடியார்கள் நூல்களில் கூறப்பட்ட எல்லா நெறிகளுக்கும் சொந்தக்காரர்கள். அவர்கள் சாதனைகளைச் சிறிது சிறிதாக அடைவதில்லை. அவர்கள் சாதனை வடிவம். அவர்கள் உடல் உயிரை வாட்டி, வருத்தித் தவம் செய்துதான் உண்மை நெறிகளைக் கண்டுகொள்ள முடியும் என்பதில்லை. அவ்வாறு உடலை வாட்டாமலேயே அந்த நெறிகளை அனுபவித்தவர்கள் மெய்யடியார்கள்.

அறிவதும் எளிது! உணர்வதும் எளிது! உணர்ந்ததை மற்றவர்களுக்கு எடுத்துரைப்பதும் மிக எளிது! ஆனால், உணர்ந்தவாறே ஒழுகுவது என்பது மிகவும் அரிது. மெய்யடியார் பெருமை சொல்லுவதற்கு அரியது. அளவிடுவதற்கும் அரியது.

**"தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே**
**அடியர்தம் பெருமை அளக்கவும் பெரிதே."**

மெய்யடியார்கள் இறைவனின் திருவடியைக் கண்டவர்கள். திருவடியைப் பற்றினவர்கள். பலகோடி பிறவிகளில் செய்த நற்றவத்தின் பயனால், இறைவனுடைய திருவடிகளைத் தரிசனம் செய்து, பல்வேறு யோகங்களை இயல்பாகவே கடைப்பிடித்து உடலாலும், உள்ளத்தாலும் ஒழுக வேண்டிய நெறிகளைப் பின்பற்றி, தம்முள்ளும் புறத்தேயும் இறைவனுடைய ஆற்றலைக் கண்டு அனுபவித்தவர்கள் மெய்யடியார்கள் ஆவர். இறைவன் அருள்வழி நின்று பணி செய்து கிடப்பவர் தொண்டராவர். இறைவனுடைய அருள் சேர்க்கையால் மலம் நீங்கி, உள்ளம் முழுவதும் அருள் அமுதம் நிரம்ப நிற்பர்.

**"அருளொடு பரா அமுதாக்கினன்"**

என்பார் மாணிக்கவாசகர்.

**"மாய வாழ்க்கையை மெய்யென் றெண்ணி மதித்தி**
**டாவகை நல்கினான்**
**வேய தோளுமைபங்க னெங்கள் திருப்பெருந்துறை மேவினான்**
**காயத் துள்ளமு தூற வூறநீ கண்டுகொள்ளென்று காட்டிய**
**சேய மாமலர்ச் சேவ டிக்கணஞ் சென்னி மன்னித் திகழுமே"**

**(திருவாசகம் - சென்னிப்பத்து)**

**"காயத்துண் மெய்ஞ்ஞானக் கள்ளுண்ண மாட்டாதே**
**மாயக்கள் உண்டாரென் றுந்தீபற**
**வறட்டுப் பசுக்களென் றுந்தீபற"** **(திருவுந்தியார்)**

மெய்யடியார் சிவானந்தத்தில் சிவத்துக்கு அடிமையானவர். சிவபிரானிடத்தில் அடங்கி நின்றவரே அடியார் ஆவர். சிவபெருமானின் திருவடி சேர்ந்த பேரின்பத்தில் திளைத்திருப்பவரே சிவனடியார். தம்முள்ளும் வெளியிலும் சதா நடைபெறும் இறைவனின் திரு நடனத்தைக் கண்டு, களிப்பில் ஆழ்ந்தவர் அடியார் ஆவர்.

**"அடியார் அரனடி யானந்தங் கண்டோர்**
**அடியா ரானவ ரத்தரு ளுற்றோர்**
**அடியார் பவரே யடியவ ராமால்**
**அடியார்பொன் னம்பலத் தாடல்கண் டாரே".**

**(திருமந்திரம் - 2740)**

மெய்யடியார்கள் இவ்வுலகைச் சார்ந்தும், சாராமலும் நிற்பர். பிரபஞ்ச இயக்கத்தில் ஈடுபட்டாலும், அறியாமை வழிபட்டு மயங்காமல், அறிவு வழியில் இறையமுதை அனுபவித்தவர்களாகச் செல்வர். மயங்கா வழி செல்லும் மெய்யடியார்கள் நித்தியத்துவம் பெறுவர். மாயை வலைப்பட்டு மயங்கி, இரந்து, பிறப்புக்கு வித்திடமாட்டார்கள். அவர்களை ''வானுலகு ஆள்வர்'' என்பார் திருமூல நாயனார். எந்த வகை சலனம் நேர்ந்தாலும், இறைவன் திருவடிகளில் வேரூன்றியவர்களாகச் சலனமற்று நிற்பர் மெய்யடியார்கள்.

''இயங்கும் உலகினில் ஈசன் அடியார்
மயங்கா வழிச்செல்வர் வானுல காள்வர்
புயங்களு மெண்டிசை போதுபா தாள
மயங்காப் பகிரண்ட மாமுடி தானே''. (திருமந்திரம் - 1873)

சிவபெருமான் அடியவர் உடலில் குடிபுகுந்து, அவர் சிந்தனையுள்ளே தேனூறி நின்று, அவருடைய உட்லை அமலமாக்கி, பிறவியை ஒழிப்பன்.

''கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூ றி நின்று
பிறந்த பிறப்பறுக்கு மெங்கள் பெருமான்''
(திருவாசகம் - சிவபுராணம்)

''தந்தது உன் தன்னைக் கொண்டது என் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றது ஒன்றுஎன்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்
திருப்பெருந் துறை உறை சிவனே
எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்
யான் இதற்கு இலன்ஓர் கைம்மாறே''.
(திருவாசகம் - கோயிற்றிருப்பதிகம்)

இறைவன் திருவருளால் அடியவர்களுடைய உடல் இறப்பு, பிறப்பு என்னும் வட்டத்தைவிட்டு நீங்கி அருள் சுரக்கும் மலமற்ற சுக்கும தேகமாய் மாறி, பொன்மயமான வடிவம் பெற்று ''ஈனமில் காயமாக'' எங்கும் நீக்கமற நிறைந்த அருளாகிய சக்தியின் வடிவமாகும். சீவர் வீடு சிவ வீடாகும். மலமற்ற ஊன் அருள் வடிவாக, அதனைப் பிரியாதிருக்கும் உயிர் தானும் மலம் நீங்கி, சிவமாகும் தன்மையைப் பெறுதலை மெய்யடியார்களிடம் காண்கின்றோம்.

❋ ❋ ❋

# 28. "அடியார் உள்ளம்"

சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் திருமணம் செய்ய வேண்டிய நேரம் வந்தது. எல்லா ஏற்பாடுகளும் விமரிசையாக நடந்தன. நம்பி ஆரூரர் தனது திருமணத்திற்காக ஊர்வலமாக வந்து கொண்டிருந்தார். அப்போது ஒரு கிழவர் எதிர்ப்பட்டார். ஊர் மக்களுக்கு ஒரு ஓலையைக் காட்டி நம்பி ஆரூரராகிய சுந்தரமூர்த்தி தனது அடிமை என்று வாதிட்டார். பல தலைமுறைகளாகச் சுந்தரமூர்த்தியைத் தனக்கு அடிமையாக்கி அவருடைய பாட்டனார் எழுதி வைத்துவிட்டதாகச் சொன்னார். நாயனாருக்குப் பெரும் கோபம் வந்தது. கிழவர் கையிலிருந்த ஓலையைப் பிடுங்கி அதைக் கிழித்து விட்டார். ஆனால், வந்த கிழவர் விடுவதாக இல்லை. மூல ஆவணம் தன்னிடம் இருப்பதாக ஊராருக்குத் தெரிவித்தார். ஊர்த்தலைவர்கள் அந்த ஓலையைக் கிழவரிடமிருந்து பெற்றுப்படித்தார்கள். சுந்தரருடைய பாட்டனார் திருவெண்ணெய் நல்லூர்ப்பித்தனுக்குத் தானும் தன்னுடைய பரம்பரையில் வரும் அனைத்துப் பேரும் அடிமை என்று அதில் எழுதியிருந்ததை ஊர் மக்கள் படித்தனர். அது உண்மையாகத்தான் இருக்க வேண்டும் என்று ஏற்றுக் கொண்டனர். இதுவரை அந்த ஊரில் கிழவரை எவரும் சந்தித்ததில்லை. திகைப்பு மேலிட்டு அந்தக் கிழவரைப் பார்த்து அவருடைய இருப்பிடத்தைப் பற்றிக் கேட்டனர். ''என்ன, இதுகூடத் தெரியாதா?'' என்று கூறிக்கொண்டு அந்தக் கிழவனார் வெண்ணெய்நல்லூர் திருக்கோவிலுக்குள் சென்று அங்கே மறைந்தார். பின்னர் இறைவனாகக் காட்சியளித்தார். சுந்தரரைத் தடுத்தாட்கொண்டதாக அறிவித்தார். சுந்தரருக்கு வன்தொண்டன் என்றும் பெயர் வழங்கினார். தனக்கு மிகவும் விருப்பமான தீந்தமிழ்ப் பாடலால் தன்னை மகிழ்விக்க வேண்டுமென்று இறைவன் சுந்தரரைக் கேட்டுக் கொண்டார்.

அப்போது சுந்தரருடைய உள்ளம் எப்படி இருந்தது? குழந்தை தாயை மறக்குமா? அல்லது தாய் குழந்தையை மறப்பாளா? பல பிறவிகளாகச் சுந்தரருடைய உள்ளத்திலே தோய்ந்து நிற்கின்ற இறை உணர்வு ஒரு பிறவியில் மட்டும் அகன்றுவிடுமா? அகலாதே! கருவி கரணங்களுடன் பொருந்தியிருக்கும் இவ்வுடலிலே சில காலம் தங்குவதற்காக மட்டும் வந்துள்ள அந்த உயிருக்கு இறைவனுடைய நினைப்புச் சற்று நீங்கியிருக்கலாம். ஆனால், இறைவனுக்கு உயிரைப் பற்றிய நினைப்பு நீங்கவே

நீங்காது. ஏனென்றால் இறைவன் உள்ளத்து ஒருவன். உள்ளுறு சோதி. உள்ளத்தைவிட்டு ஓரடி நீங்காதவன். உள்ளமும் தானும் சேர்ந்தே நிற்கும் தன்மை உடையவன். ஆகவே, சுந்தரருடைய உள்ளத்திலே அன்பு ஆற்றுப்பெருக்கெடுத்து ஓடியது. ஒரு விநாடியில் இறைவனைவிட்டு அகன்று தனிக்கோலம் பூண்டு நாடகத்திலே நடித்து, அதுவே உண்மை என்று எண்ணிக் கொண்டிருப்பது எவ்வளவு மடத்தனம் என்கின்ற மெய்யுணர்வு ஏற்பட்டது. ''பித்தா, அருளாளா'' என்றெல்லாம் இறைவனை அழைக்கத் தோன்றியது. உண்மை நிலையைத் தன்னிடமிருந்து மறைத்து வைத்ததும், மீண்டும் நினைவுபடுத்தியதும் இறைவனுடைய அருளே என்கின்ற உணர்வு சுந்தரருடைய உள்ளத்தில் தலைதூக்கி நின்றது. ''இறைவா! உனக்கும் எனக்கும் உள்ள தொடர்பு அநாதிகாலமாக வந்து கொண்டிருக்கின்றது. நான் மறந்தாலும் நீ மறவாமல் உன்னை எனது மனதிலே வைத்தாய். எல்லையற்ற பரம்பொருளாகிய உனக்கு நான் காலமெல்லாம் அடிமையாயிற்றே. இப்பொழுது நான் உனது அடிமையில்லை என்று சொல்லலாகுமா?'' என்று பாடுகின்றார்.

**''பித்தா!பிறை சூடீ!பெரு மானே!அரு ளாளா!**
**எத்தால்மற வாதேநினைக் கின்றேன் மனத்துஉன்னை**
**வைத்தாய்; பெண்ணைத் தென்பால் வெண்ணெய்**
**நல்லூர்அருட் டுறையுள்**
**அத்தா!உனக்கு ஆளாய்இனி அல்லேன் எனல் ஆமே?''**

மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையவர்கள் உள்ளத்தில் தோன்றும் முதல் உணர்வு இதுதான். உடைமை, உடல், உள்ளம் எல்லாம் இறைவனுக்கு ஆட்பட்ட உணர்வு முன்நிற்கின்றது. ''அன்றே உனக்கு ஆளானேன்'' என்றார் காரைக்கால் அம்மையார். **''ஒன்றே நினைந் திருந்தேன்; ஒன்றே துணிந்தொழிந்தேன்; ஒன்றே என் உள்ளத்தின் உள் அடைத்தேன்''** என்றார். அந்த ஒன்று யாராக இருக்க முடியும்? அது **''கங்கையான், திங்கட்கதிர்முடியான், பொங்குஒளிசேர் அங்கை யானா''**கத்தான் இருக்க முடியும் அல்லவா?

இதே கருத்துடன் திருமூலர் கூறுகின்றார்:- ''என்னுடைய தாயும், என்னுடைய அப்பனும் நான் பிறந்த உடனேயே என்னை ஒருவனுக்கு அடிமையாக ஓலை எழுதிக் கொடுத்தார்கள். இந்த அடிமைப் பதவி ஒரு நாளைக்கன்று, பல நாளைக்கன்று. இந்த அடிமைப்பதவி பல பிறப்பு களிலும் தொடரும். என்னுடைய பெற்றோர்கள் இந்த ஆவணத்தை எழுதும்பொழுது நன்றாக யோசித்துத்தான் செய்தார்கள். இதை மற்றவர்கள் மாற்றமுடியாத அளவுக்குச் செய்தார்கள். எப்படித் தெரியுமா? வேறொருவரை வைத்து எழுத வைத்தார்கள். அவன் யார்? இந்த உலகம் அனைத்தையும் படைத்த பிரம்மன் அல்லவா இதை எனது பெற்றோர்களுக்காக எழுதினான். அதுமட்டுமன்று, என் பெற்றோர்கள் வேறு சாட்சியையும் வைத்தார்கள்.

அந்தச் சாட்சி யார் என்று நினைக்கிறீர்கள்? இந்தப் பிரபஞ்சத்தைக் காத்து அருளுகின்ற முகில்வண்ணனாகிய திருமால் அல்லவா சாட்சியாக நின்றான்! யாருக்கு அடிமை என்று எழுதினார்கள்? அந்தச்சிவமாகிய பரம் பொருளுக்கு அல்லவா நான் அடிமை என்று எழுதி வைத்தார்கள்.'' இந்த அடிமை உணர்வில் அல்லவா சுதந்திரம் இருக்கின்றது. இந்த அடிமை உணர்வு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது.

**''என்தாயோடு என்னப்பன் ஏழேழ் பிறவியும்**
**அன்றே சிவனுக்கு எழுதிய ஆவணம்**
**ஒன்றாய் உலகம் படைத்தான் எழுதினான்**
**நின்றான் முகில்வண்ணன் நேரெழுத்தாயே'' (திருமந்திரம் - 1876)**

இறைவனுக்குத் தான் அடிமை என்கிற உணர்வு வந்த பின்பு உள்ளத்தில் ஒப்பற்ற அன்பு தோன்றுகின்றது. இது சாதாரணக் காதல் அன்று. இது ஒரு தெய்வீகக் காதலாகும். உள்ளும் புறமும் தன்னைப் பற்றிய நினைப்பு ஒழிந்து விடுகின்றது. இது சீவபோதம் குறைந்து சிவபோதம் மிகுந்த நிலையாகும். இறைவன் மீது ஏற்பட்ட அன்பால் உடலைப் பற்றிய அறிவு மறைந்தொழிகிறது. இறைவனுடைய திருவடியைப் போற்றும் அன்பே அன்பாகும் என்கிற எண்ணம் ஏற்படுகிறது. இந்த அன்பிலே பேச்சுக்கு இடமில்லை. செயலுக்குத்தான் இடமுண்டு. அந்தச் செயலும் இறைவனைப் பற்றியதாகவே இருக்கும். **''நினைத்தொறும், காண்தொறும், பேசுந்தொறும், எப்போதும் அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத்தேன் சொரியும்''** என்கிற திருவாசகப் பாடல் இந்த அன்பினை உணர்த்தும். அத்தகைய அன்புடைய பக்தன், அன்பில் உருகி அழுவன், அரற்றிக் கொண்டே இருப்பான். இறைவனைத் தனதாக்கிக் கொள்கின்ற நினைப்பிலேயே தன்னுடைய உடலையும், உள்ளத்தையும் வருத்திக் கொண்டிருப்பான். அழுதலும், அரற்றலும், அதனால் அறிவு கெடுதலும், அதன்விளைவாக முக்திப்பேறு கிடைத்தலும், இத்தகைய அன்பின் தன்மைகளாகும். இந்த அன்பும் தியாகமும் ஒன்றே. இறைவனுடைய பெருமையை உணர்ந்து, அதைக் கண்டு வியந்து, மெய்சோர்ந்து, உடல் தளர்ச்சி பெற்றுத் தங்களுடைய இந்திரிய அறிவு அறவே போய், நினைவு கெட்டு, இறைவனைத் தவிர வேறொன்றும் இல்லை என்கின்ற பேரானந்த நிலைமையை அடியார்கள் பெறுகின்றனர். இந்த இன்ப அன்பு அனுபவத்தைத் திருமூலர் பின்வரும் திருமந்திரப் பாடல்களில் சிறப்பாக விளக்கிக் காட்டுகின்றார்:

**''விம்மும் வெருவும் விழும்எழும் மெய்சோருந்**
**தம்மையுந் தாமறி யார்கள் சதுர்கெடுஞ்**
**செம்மை சிறந்த திருஅம் பலக்கூத்துள்**
**அம்மலர்ப் பொற்பாதத் தன்புவைப் பார்கட்கே''**

**(திருமந்திரம் - 2744)**

''அன்புள் உருகி அழுவன் அரற்றுவன்
என்பும் உருக இராப்பகல் ஏத்துவன்
என்பொன் மணியை இறைவனை ஈசனைத்
தின்பன் கடிப்பன் திருத்துவன் தானே'' (திருமந்திரம் - 2980)

இத்தகைய அன்பு அயரா அன்பு எனப்படும். இந்த அன்பு மெய்யுணர்வு பெற்று உயிர் அடைந்த முதிர்ந்த நிலையைச் சுட்டிக்காட்டும். இந்த அன்பின் முதிர்ச்சி பிஞ்சு முதிர்ந்து, பழமாகி இனிப்பது போலாகும். **''அன்போடுருகி அகங்குழைவார்க்கன்றி என் பொன்மணியை எய்தவொண்ணாதே''** என்று திருமந்திரம் கூறுகின்றது. இந்த அன்பின் நிலையைச் **''சாற்றும்பழம்''** என்று திருக்களிற்றுப்படியார் கூறுகிறது. அத்தகைய அன்பின்றிச் செய்யும் சரியை, கிரியை போன்றவை பயனற்றது என்றும் திருக்களிற்றுப்படியார் கூறுகின்றது.

''அன்பேஎன் அன்பேஎன் றன்பா லழுதரற்றி
அன்பேயன் பாக,அறிவு அழியும்-அன்பன்றித்
தீர்த்தம்தி யானம் சிவார்ச்சனைகள் செய்யுமவை
சாற்றும் பழமன்றே தான்'' (திருக்களிற்றுப்படியார் - 55)

அன்பின் சிகரம் கண்ணப்ப நாயனார். ஒருநாள் கானகத்தில் வேட்டையாடச் செல்லும்போது உடல் இளைப்பாற வேண்டி ஒரு குன்றின் பக்கத்திலுள்ள நீரோடைக்குச் செல்லும்போது அருகிலுள்ள திருக்காளத்தி மலையில் ஒரு இறைவனுடைய கோவிலுக்குச் செல்லலாம் என்று கண்ணப்பருடைய தோழன் கூறினான். அதை நினைத்தமாத்திரத்திலேயே கண்ணப்பர் உள்ளத்தில் முந்தைய தவத்தின் பயனாக வெளிவர துடித்துக் கொண்டிருக்கும் இறை அன்பு பொங்கிப் பெருக ஆரம்பித்தது. அவர் உள்ளத்தில் இருந்த பாரம் குறைவது போன்ற அனுபவம் ஏற்பட்டது. நெஞ்சம்தன்னை இறைவனுடன் மேலும் மேலும் பொருத்திக் கொண்டது. முன்செய்த தவத்தின் விளைவால் முடிவிலா இன்ப அன்பினைப் பெற்று, ஆர்வம் பொங்கி, கண்ணப்பனார் கோவிலைச் சென்றடைய, இறைவனுடைய அருள்நிரம்பிய திருவிழிகள் கண்ணப்பனார் மீது பட்டபொழுது கண்ணப்பரின் முன்னைய வினைகள் இவரை விட்டு அகல, ஒப்பற்ற அன்பே தமது உருவமாக ஆயினார் என்று சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர்புராணத்தில் கூறுகின்றார்.

''திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணா முன்னே
அங்கணர் கருணை கூர்ந்து அருள்திரு நோக்க மெய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய வொளியின் நீழற் பொருவில்அன்புருவ மானார்''
(பெரியபுராணம் - 753)

மணிவாசகப் பெருமான் இறைவன் மீது கொண்ட அன்பின் தன்மை யாவருக்கும் தெரிந்த ஒன்றே. பக்தி வெள்ளத்தில் படிந்த அந்த பெரியாரே கண்ணப்பரைப் பற்றி நினைக்கும்பொழுது அவருடைய அன்பின் அளவு தனக்கில்லையே என்று கூறிக் கொள்கின்றார். **"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்"** என்பது அந்த வாசகம். அத்தகைய அன்பினை யார் அறிவர்? மணிவாசகப் பெருமான் போன்ற மெய்யுணர்வு பெற்ற பெரியார்களுக்கே அன்பின் நிலைமை புலப்படும். திருக்களிற்றுப்படியார் இதனைக் **"கண்ணப்பர் தாமறிதல்"** என்பர். வேறு யாருக்கு இது தெரியும்? கண்ணப்பருக்கு ஞானக்கண் அளித்த காளத்தி மலை இறைவனுக்கு அல்லவா அது தெரியும். அவ்வாறு அறிதலின்றி மற்றவர் மட்டும் அறியும் அன்பு அன்பன்று என்று திருக்களிற்றுப்படியார் கூறுகின்றது.

அன்பு மிகும்பொழுது ஐம்புலன்கள், நான்கு கரணங்கள் ஆகியவை தான் என்ற ஆணவ மலைப்பை விட்டுவிடுகின்றன. எல்லாமே பரம், எல்லாமே சிவம் என்ற உணர்வு தோன்றுகின்றது. சிவ ஒளியில் சீவ ஒளி அடங்குகின்றது. சீவன் என்ன, சிவன் என்ன வேறில்லை என்ற நிலைமை தெளிவாகிறது. எல்லாம் அவனது அரங்கம், எல்லாம் அவனது செயல் என்று தெள்ளத் தெரிந்தவர்களுக்கு நான் என்கிற நினைப்பு ஒழிந்துவிடுவதில் வியப்பு ஏதேனும் உண்டா? இல்லையே!

**"நானென்றுந் தானென்றும் நாடினேன் நாடலும்**
**நானென்றுந் தானென் றிரண்டில்லை யென்பது**
**நானென்ற ஞான முதல்வனே நல்கினான்**
**நானென்று நானும் நினைப்பொழிந் தேனே"**

**(திருமந்திரம் - 2320)**

இதில் ஒன்றைக் கவனிக்க வேண்டும். நம்மைப் போலவே திருமூலரும் முதலில் ஆன்மிக அனுபவத்திற்கு எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொண்டதாகத் தெரிவிப்பதுபோல இந்த மந்திரம் அமைந்துள்ளது. முதலில் மற்றவர்களைப்போல நான் என்றும், தான் என்றும் நினைத்து வேறுபாடு உள்ள நிலையில் இருந்ததைப்போலக் கூறுகின்றார். பின்னர், சரியை, கிரியை, யோகம், தவம் போன்ற மார்க்கங்களால் அவருடைய உள்ளத்தில் ஞான ஒளி எழும்பியது. அவர் மெய்யுணர்வு பெற்றார். இறைவனுடைய அருளால் வேறுபாடு உள்ள நிலைமை அவரைவிட்டு அகன்றது. இதைப் பார்க்கும்போது அவரைப்போலவே நாமெல்லோரும் படிப்படியாக உயர்ந்து சிறந்த ஆன்மிக நிலைமையை அடைய முடியும் என்பது விளங்கு கிறதல்லவா. மேலும், ஆன்மீகப் பாதையில் நாம் முதலில் காலடி வைக்கும்பொழுது இறைவனை ஒரு புறப்பொருளாக நினைத்து வழிபட முற்படுகின்றோம். பின்னர்ப்படிப்படியாக நம்முடைய உள்ளம் பக்குவம் அடைய அடைய நம்முள் கிடக்கும் அறிவு ஒளியானது தூண்டப்படுகின்றது. அப்போது இறைவனை வெளியில் காணத்தேடிச் செல்லத் தேவையில்லை

என்கின்ற எண்ணமும் நமக்கு வருகிறது. நம்முள்ளேயே இறைவன் இருக்கின்றான் என்ற நினைப்பில் வேறுபாடுகள் மறைகின்றன. இதையும் இந்தத் திருமந்திரம் தெளிவாக்குகின்றது.

அந்த நிலையில் மணிவாசகப் பெருமான் **''ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வு கெட்டு என் உள்ளமும் போய் நான் கெட்டவா''** என்று உருகுகின்றார். தான் என்கின்ற நினைப்புப் போய் விடுகின்றது. உலகப் பொருள்கள், செல்வம், மனைவி மக்கள், அந்தஸ்து போன்றவை மீதுள்ள பற்று மறைந்து விடுகின்றது. உடலும் உடலைப் பற்றிய கரணங்களும் நான் என்கிற உணர்வைத் தூண்டுவதில்லை. செயலற்று நின்றுவிடுகின்றன. இயற்கையால் உந்தப்பட்டு எண்ண அலைகள் மோத, கொந்தளிக்கும் கடலிலே மேலும் கீழுமாக ஆடி வரும் கப்பலைப் போன்ற மனம், ஆசாபாசங்களுக்கு உட்பட்ட மனம், இதுவரை உள்ளத்தைத் தன்வசம் ஆக்கி வைத்த மனம் இப்போது வலிவற்று விடுகின்றது. ஆறு கடலிலே கலந்து விடுவதைப் போல சிறிய மனம் பெரிய மனத்தில் ஆழ்ந்து விடுகின்றது. வேட்கைகள் அழிந்து விடுகின்றன. தூல உடலைப் பற்றிய நினைப்பு நின்று விடுகின்றது. தன்னைப் பற்றிய நினைப்பும் அழிந்து விடுகின்றது. இது ஆன்மீகத்தின் உயர்ந்த அனுபவ நிலையாகும். இதைப் பெற்றவர்கள் இறையுணர்வாளர் ஆவர்.

**''தானும் அழிந்து தனமும் அழிந்துநீ**
**டீனும் அழிந்து உயிரும் அழிந்துடன்**
**வானும் அழிந்து மனமும் அழிந்துபின்**
**நானும் அழிந்தமை நானறி யேனே''** **(திருமந்திரம் - 2951)**

இங்கே அழிவதாவது ஆசைகளும் பாசங்களும். **''ஆசை அறுமின்கள், ஆசை அறுமின்கள்''** என்பார் திருமூலர். ஆசைகள் பிறப்பிற்கு வித்திடுகின்றன. வினைகளுக்குக் காரணமாக இருக்கின்றன. வினைகளை விட்டு ஒழிந்தாலன்றிப் பிறவிச் சூழலிலிருந்து மாற இயலாது. வினைக்கு ஈடாய் இறைவனுடைய பேரருளால் நமக்குக் கிடைத்துள்ள இந்த வாழ்க்கையை நல்ல முறையில் பயன்படுத்தி இறைவன் என்கின்ற ஒரே குறிக்கோளை மனத்தில் நிலையாக நிறுத்தி அந்தக் குறிக்கோளை அடைவதற்கான எல்லா வழிகளையும் மேற்கொண்டு இறை அனுபவத்தை முற்றிலும் பெற்றவர்கள் அடியார்கள் ஆவர். அவர்களுடைய வாழ்க்கையில் பாசங்கள் கழிந்து விடுகின்றன. மறுபிறவிக்கு இடமில்லை. முன்னம் வினையின் முடிச்சு அவிழ்ந்து விடுகின்றது. பின்னம் வினைகள் தோன்று வதில்லை. இவற்றையெல்லாம் சாதிக்க உதவுவது இறைவனுடைய பேரருளாகும். அந்தப் பேரருளினால் இறை உணர்வை முற்றும் பெற்றதால் சீவன் சிவத்தில் இரண்டறக் கலக்கின்றது. இத்தகைய பெரும் பதவியை அடியார்கள் இந்தப் பிறப்பிலேயே பெற்று விடுகின்றார்கள். அதை அழகாகத் திருமூலர் பின்வரும் பாடலில் எடுத்துரைக்கின்றார்:

"ஒழிந்தேன் பிறவி உறவென்னும் பாசம்
கழிந்தேன் கடவுளும் நானும் ஒன்றானேன்
அழிந்தாங்கு இனிவரும் ஆக்கமும் வேண்டேன்
செழுஞ்சார் புடைய சிவனைக்கண் டேனே"

(திருமந்திரம் - 2958)

பாசங்களின் சேர்க்கையிலிருந்து விடுபட்டவர்கள் அடியார்கள். சிந்தை தெளிந்தவர்கள். தன் நிலையை முற்றும் உணர்ந்தவர்கள். அவர்களுக்கு உலகின் மீது விருப்போ, வெறுப்போ கிடையாது. வேண்டுதல், வேண்டாமை இவற்றிற்கு அப்பாற்பட்ட நடுநிலைமையில் வாழ்வார்கள். அவர்கள் விரும்புவதற்கென பொருளும் இல்லை. சேருவதற்கென உறவும் இல்லை. பற்று அற்றவர்கள் இறைவன் மீது மட்டுமே பற்றினை வைக்கின்றார்கள். கடைசியில் அந்தப் பற்றினையும் விட்டுவிடுகின்றார்கள். அந்த நிலையில் அவர்களுக்கு உலகப் பொருள்கள் மீது கவர்ச்சி எண்ணங்கள் தோன்றத் தேவையில்லை. ஒன்றை விரும்பி வேண்டி அதைப் பற்றிச் சிந்தித்து, அதை அடைய எல்லா முயற்சிகளும் செய்து, ஏமாற்றமோ, பெருமையோ அல்லது இறுமாப்போ அடைவதற்கான மனநிலையும் அவர்களிடம் இல்லை. திருமந்திரம் இந்த நிலையைப் பின்வருமாறு எடுத்துக் கூறுகின்றது:

"தான்வரை வற்றபின் ஆரை வரைவது
தான் அவன் ஆனபின் ஆரை நினைவது
காமனை வென்றகண் ஆரை உகப்பது
தூ மொழி வாசகஞ் சொல்லுமின் நீரே" (திருமந்திரம் - 2954)

உடலின் மீது பற்று இருக்கும்பொழுது மனத்தில் மரண பயம் எப்போதும் நிற்கும். சீவன் சிவமயமான உணர்வினைப் பெற்ற பின் இறப்பைப் பற்றி அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை. மெய்யுணர்வு பெற்ற அடியார்கள் எப்போதும் இறைவனுடைய திருவடியிலேயே சரணடைந்த வர்களாக இருக்கின்றார்கள். ஆகவே, மீண்டும் மீண்டும் பிறப்பினைத் தரும் வினைகளை அவர்கள் முன்பே களைந்துவிட்டவர்கள் ஆவார்கள். தவத்தினாலும், யோகத்தினாலும் முழுமையான ஞான சாதனையை அடைந்தவர்கள். தம்முள் ஒளியைக் கண்டவர்கள் அறியாமை இருளுக்காக அவர்கள் பயப்படப்போவதில்லை. உள்ளத்தில் சுடர்விட்டு எரியும் ஞான விளக்கின்முன் அறியாமை இருள் என்ன செய்யும்?

"நமன்வரின் ஞானவாள் கொண்டே எறிவன்
சிவன்வரின் நானுடன் போவது திண்ணம்
பவம்வரும் வல்வினை பண்டே யறுத்தேன்
தவம்வருஞ் சிந்தைக்குத் தானெதி ராரே" (திருமந்திரம் - 2968)

இறையடியார்கள் பரிபூரண சித்திக்கு வழிகாட்டும் இறையுணர் வாளர்கள் ஆவார்கள். அவர்கள் வெறுமனே அறிவை வளர்த்து,

தத்துவங்களிலே மூழ்கியவர்களாக, ஆன்மீகத்தை ஏட்டளவிலே புரிந்து கொண்டு, அதைப் பேசிப் பேசி பிறரை மயக்குபவர்கள் அல்லர். அவர்கள் பேரறிவு பெற்றவர்கள். இவ்வுலகிலும் இறையுணர்வோடு கலந்து வாழ்வார்கள். அவர்களுடைய உள்ளத்தில் சுத்தசிவம் எங்கும், எப்போதும் தோய்ந்து நிற்கின்றான். அதன் காரணமாக அன்பும் அருளும் ஆற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவது போல மக்களிடையே ஒன்றிப் பாமரர்களாகக் கலந்து திரிவார்கள். சித்து, அசித்து; உண்மை, இன்மை; வித்தை, அவித்தை; அறிவு, அறியாமை; இன்பம், துன்பம் போன்றவற்றை நன்குணர்ந்து உள்தெளிந்து இறைவனுடைய திருவடியே தஞ்சமாகிப், பிறப்பை வளர்க்கும் மலக்கூட்டங்களிலிருந்து விடுபட்டு என்றும் இறைவனுடன் இரண்டறக் கலந்து வாழ்வார்கள். தம்முள் சிவத்தை அவர்கள் கொண்டிருப்பதாலும், சிவமெனும் பரம்பொருள் எங்கும் நிறைந்திருப்பதாலும், இவர்களும் எங்கும் இருப்பர். காலத்திற்கு அப்பாற்பட்ட இறைவனுடனேயே அவர்கள் கலந்து இருப்பதால் முக்காலத்து இயல்பையும் நன்கு உணர்ந்தவர்களாகிறார்கள். இந்த நிலையைத் திருமூலர் **''இழவு வந்து எய்திய சோம்பே''** என்று அழைக்கின்றார். தன் நினைவு இழந்த நிலை இழவாகும். சோம்பல் என்பது பந்த பாசங்களை விலக்கி, மனத்தை ஒடுக்கி, இறைவனுடன் முழுதும் கலந்த நிலையில் சும்மா இருத்தலும் ஆகும். இந்த அரிய கருத்தை விளக்கும் திருமந்திரம் நமக்கு எத்துணை நிறைவைத் தருகின்றது என்று பாருங்கள்.

**''இருந்தார் சிவமாகி எங்குந் தாமாகி**
**இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி**
**இருந்தார் முக்காலத் தியல்பைக் குறித்தங்**
**கிருந்தார் இழவுவந் தெய்திய சோம்பே''** **(திருமந்திரம் - 127)**

உள்ளத்தில் சிவத்தை அறிந்த அடியார்கள் எதற்கும் அஞ்சமாட்டார்கள். அவர்களைக்கூரிய வாள் கொண்டு செதுக்கலாம், சீவலாம் மற்றும் பல வகைகளில் துன்புறுத்தலாம். திருநாவுக்கரசர் பெருமானுக்கு எத்தனையோ தீங்குகள் செய்யப்பட்டன. அவற்றையெல்லாம் அவர் மகிழ்ச்சியுடன் தாங்கிக் கொண்டார். **''மாசில் வீணையும் மாலை மதியமும்''** என்று பாடினார். **''நாமார்க்கும் குடியல்லோம்''** என்று பறைசாற்றினார். அதேநேரத்தில் அடியார்களுக்குப்புகழ் மாலைகளையும் சூட்டிப் பாருங்கள். இவை அனைத்தும் அவர்களைப் பாதிக்காது. இறைவனுடைய நியதிப்படியே எல்லாம் நடக்கின்றது என்கின்ற உண்மையை உணர்ந்த இப்பெரியார்கள் எதற்கும் கலங்கமாட்டார்கள். தங்களுடைய கோட்பாடுகளையும் விட்டுக்கொடுக்க மாட்டார்கள். நாள்தோறும் இறைவனுடைய திருவடிகளையே வாழ்த்தி, துன்பங்களை விட்டொழிந்து, நீங்காத இன்பம் பெற்று தனக்கு **''சூழ் உலகில் ஊழ்வினை வந்து உற்றால் என்னே?''** என்ற திருநாவுக்கரசர் கேட்கின்றார். இந்தக் கருத்தைப் பின்வரும் திருமந்திரத்தில் காணலாம்:

"செற்றில்என் சீவில்என் செஞ்சாந்து அணியில்என்
மத்தகத்தே உளிநாட்டி மறிக்கில்என்
வித்தகன் நந்தி விதிவழி யல்லது
தத்துவ ஞானிகள் தன்மை குன்றாரே" (திருமந்திரம் - 2847)

திருநாவுக்கரசர் பெருமான் இதே உணர்வுடன் பின்வருமாறு பாடுகின்றார்:

"வானந் துளங்கிலென்! மண்கம்ப மாகிலென்! மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென்! தண்கடலும்
மீனம் படிலென்! விரிசுடர் வீழிலென்! வேலைநஞ்சுண்
டீனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே"

ஐம்பூதங்கள் கலங்கலாம், தடுமாறலாம், ஆனால் அடியார்கள் இறைவனுடைய அன்பு வழியிலே தம்மை நிலையாக நிறுத்தி வைத்துக் கொண்டு, மலை போன்ற மாறாத நெறியினை மேற்கொண்ட காரணத்தினால் அவர்களும் அசைவற்று நிற்பார்கள். அடியார்களுடைய திருக்கூட்டச் சிறப்பை விளக்கும் சேக்கிழார் பெருமான் அவருடைய மனநிலையைப் பின்வருமாறு குறிக்கின்றார்:

"பூத மைந்து நிலையிற் கலங்கினும்
மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்
ஓது காத லுறைப்பி னெறிநின்றார்
கோதி லாத குணப்பெருங் குன்றனார்"

இந்தப் பெருநெறியை உலகில் பிரியாப் பெருநெறி என்று திருமூலர் அழைக்கின்றார். அவர்களுக்குக் கிடைத்த பேறு இறைவனிடமிருந்து என்றும் பிரியாப் பேறு. அத்தகைய பேறு பெற்ற பின் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பயன் பிறப்பை அறுத்தலாகும். மற்றவர்கள் வாக்கினாலும், மனத்தினாலும் அறிய இயலாத பரம்பொருள் ஒன்றை அவர்கள் தம் உள்ளத்தில் கண்டு கொண்ட பிறகு, அவர்கள் அடையக் கூடிய நிலை பேச்சற்ற பெருமையாகும்.

"பெற்றார் உலகிற் பிரியாப் பெருநெறி
பெற்றார் உலகிற் பிறவாப் பெரும்பயன்
பெற்றார்அம் மன்றிற் பிரியாப் பெரும்பேறு
பெற்றார் உலகுடன் பேசாப் பெருமையே" (திருமந்திரம் - 132)

❋ ❋ ❋

## 29. ''அருளால் அமுதப் பெருங்கடல் ஆட்டி''

''இறைவன் இருக்கின்றானா?''

''இருக்கின்றான்''

''இறைவன் எங்கு இருக்கின்றான்? அவனை எனக்குக் காட்ட முடியுமா?''

''ஓ. காட்ட முடியுமே. இறைவன் தூணிலும் இருக்கின்றான். துரும்பிலும் இருக்கின்றான். நமக்குள்ளும் இருக்கின்றான். வெளியேயும் இருக்கின்றான். அவன் உள்ளே சுடர்விட்டுப் பிரகாசிக்கும் சோதியாக அமர்ந்துள்ளான். உள்ளத்தை விட்டு ஓரடி நீங்காமல் நிற்கின்றான்''.

''அதெல்லாம் சரி. இதுபோன்ற விளக்கத்தை ஏற்கனவே பலர் தந்திருக்கின்றார்கள். நீங்கள் இப்போது சொல்லுவதில் ஒன்றும் சிறப்பாக இல்லையே. நீரோ இறைவனைப் பார்த்ததில்லை. நானும் பார்த்ததில்லை. இந்த நிலையில் இறைவன் இருக்கின்றான் என்று சொல்லிக்கொண்டே போவதில் என்ன பயன்?''

திருமூலர்பெருமான் இதைக்கேட்டுப் பதட்டப்பட்டவில்லை. இறைவனைப் பற்றிய விளக்கத்தைக் கொடுப்பதற்காகத் தானே யோகியார் மண்ணுலகில் பிறவியை எடுத்திருக்கின்றார்! அதுவும் முற்பிறவிகளில் சிறந்த தவத்தைச் செய்து இறைவனைப் பற்றிய உண்மைகளை எடுத்துரைக்கும் தகுதியை முழுமையாகப் பெற்றவராக அல்லவா இருக்கின்றார். அதற்காகவே அல்லவா இறைவன் அவரைப் பூவுலகில் தோன்றச் செய்திருக்கின்றான். முன்னம் பிறவிகளில் தவத்தையும் அறத்தையும் மேற்கொண்ட திருமூலர் பெருமான் போன்ற அருளாளர்கள் இந்த உலகில் பிறவி எடுப்பதின் நோக்கமே, இறைவனுடைய அன்பு, கருணை ஆகியவற்றைப் பற்றிப் பேசுவதற்காகத்தானே!

**''பின்னைநின் றென்னே பிறவி பெறுவது**
**முன்னைநன் றாக முயல்தவம் செய்கிலர்**
**என்னைநன் றாக இறைவன் படைத்தனன்**
**தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே''.** (திருமந்திரம் - 81)

திருமூலர்பெருமான் தொடருகின்றார்.

''களிமண்ணை எடுத்துக்கொண்டு அதிலிருந்து பல அழகான பாண்டங்களைக் குயவன் செய்து தருகின்றான். தங்கம் ஒன்றுதான். தங்கத்திலிருந்து பல ஆபரணங்களை ஆசாரி செய்து கொடுக்கவில்லையா? மரம் ஒன்றுதான். அதிலிருந்து நமக்குத் தேவையான பல மரச் சாமான்கள் செய்யப்படலாமல்லவா! கண் ஒன்றுதான். அது பலவற்றைக் காண்கின்றதே. உலகில் பிறந்த சாதாரண உயிர்கள் இவற்றையெல்லாம் செய்ய முடியுமென்றால் பேராற்றல் மிக்க இறைவன் தனது மனதில் எண்ணியவற்றையெல்லாம் செய்து கொண்டே போகலாமல்லவா?''

**''குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணைக்**
**குசவன் மனத்துற்ற தெல்லாம் வனைவன்**
**குசவனைப் போல்எங்கள் கோள்நந்தி வேண்டில்**
**அசைவில் உலகம் அதுஇது வாமே''.** **(திருமந்திரம் - 443)**

உலகம் இயங்குவது திருவருளாலே. நாம் பெறும் அனுபவங்களெல்லாம் இறைவனின் திருவருளால்தான். இறைவனைப் பார்க்க வேண்டுமென்பதில்லை. அவனுடைய அருளைப் பற்றிய சிந்தனையே இறைவனை நமது அகக்கண்முன் வைக்கும். இதை உணர்ந்துகொள்வது கடினமல்ல. நமது மனதை நேரான பாதையில் செலுத்தினாலேயே இறைவன் அருளை எங்கும், எதிலும் காணலாம். கவிஞன் ஒருவன் இயற்கையின் எழிலைக் கண்டு ரசித்து கவிதை பாடுகின்றான். விஞ்ஞானி இயற்கையின் தன்மையை அறிந்து கொள்வதற்காக விஞ்ஞான ரீதியில் பல பரிசோதனைகளைச் செய்கின்றான். தன் அறிவிற்குப்புலப்பட்ட உண்மைகளை இயற்கையின் நியதிகளாகக் கருதுகின்றான். இறையுணர் வாளன் இயற்கையில் இறைவனின் அருளைக் காண்கின்றான். இறைவனையே காண்கின்றான். அவ்வாறே திருமூலர் பெருமானும் சுற்றிப்பார்க்கும் இடமெல்லாம் இறைவன் அருள்உருவாக நிற்பதைக் காண்கின்றார். உடலாய், உயிராய், உலகமதாய், கடலாய், கார்முகில் நீர்பொழிவானாய் நிற்கும் இறைவன் தனது அருளைப்பல நிலைகளில் வெளிக்காட்டி வருவதைக்கண்டு அந்தப் பேரானந்த அனுபவத்தில் மூழ்கி நிற்கின்றார். அவனுடைய அருளாலேயே எட்டுத்திசைகளிலும் காற்று வீசுகின்றது. ஐம்பூதங்கள் ஒன்று சேருகின்றன. உடல் உருவாகிறது. இந்த உடலுடன் உயிரைச் சேர்த்து வைப்பதும் அவனுடைய அருளேதான். பின்னர் அந்த அருளே உடலிடமிருந்து உயிரைத்தக்க நேரத்தில் பிரித்தும் வைக்கின்றது. இவற்றையெல்லாம் தனது அகக்கண்களால் கண்டு, அனுபவித்த திருமூலர் பெருமான் இறை அருளின் தன்மையை எண்ணி, எண்ணி வியப்படைகின்றார்.

**''எட்டுத் திசையும் எறிகின்ற காற்றொடு**
**வட்டத் திரையனல் மாநிலம் ஆகாயம்**
**ஒட்டி உயிர்நிலை என்னும்இக் காயப்பை**
**கட்டி அவிழ்ப்பான் கண்ணுதல் காணுமே''.**

**(திருமந்திரம் - 441)**

நாமும் திருமூலர் வழிச்செல்வோம். பிரபஞ்சத்தை நோக்கினால் எண்ணற்ற தாரகைகளும், கோள்களும் தங்கள் பாதை தவறாது நீதியுள் நின்று ஒரு பேரியக்கத்தில் ஈடுபட்டு வருவதைப் பார்க்கின்றோம். அவற்றைப் படைப்பதும் இறைவனுடைய திருவருளாகும். படைத்தவற்றைக் காப்பதும், காத்தவற்றைத்தகுந்த நேரத்தில் ஒடுக்குவதும், ஒடுக்கி அவற்றிற்கு ஓய்வு கொடுப்பதும், பின்னர் மீண்டும் அவை தலைப்படச் செய்வதும் இறைவனுடைய அருளேயாகும்.

**''தானே படைத்திடுந் தானே அளித்திடுந்**
**தானே துடைத்திடுந் தானே மறைத்திடுந்**
**தானே யிவைசெய்து தான்முத்தி தந்திடுந்**
**தானே வியாபித் தலைவனு மாமே''.**

**(திருமந்திரம் - 1809)**

**''அருளே உலகெலாம் ஆள்விப்பது''** என்கின்றார் காரைக்கால் அம்மையார். உயிரானது உடல், ஐம்பொறிகள், ஐம்புலன்கள், மனம், போன்றவைகளுடன் சேராமல் தனித்து நிற்பது கேவல நிலையாகும். இது இருள் நிலை எனவும் அழைக்கப்படுகிறது. இந்த நிலையில் தன்னைப் பற்றியும், தனது தலைவனைப் பற்றியும், தன்னை மாய இருளில் மூடியுள்ள ஆணவத்தைப் பற்றியும் தெரிந்து கொள்ள இயலவில்லை. இருந்தாலும், தன்னிலை விளக்கம் பெற்று, இறைநிலையை உணர்ந்து இறைவனின் திருவடிகளைச் சேர்வதே உயிரினுடைய முடிவான நோக்கமாகும். இந்த முயற்சியில் உயிரை ஈடுபடுத்துவதற்காக அதற்கு உடலையும் கருவிகளையும் கொடுத்து, உயிரை வாழ்க்கைப் பாதையில் உயிரோடு உயிராக நின்று நடத்திச் செல்வதும் திருவருளாகும். இதனால் உயிர் பல அனுபவங்களைப் பெறுகிறது. இன்ப, துன்பங்களில் மாறி மாறி மூழ்கி எழுகின்றது. தனது சிற்றறிவாலும், சிறு ஆற்றலாலும் உலகில் பல சாதனைகளைப் புரிகின்றது. எனினும், தான் என்கிற உணர்வு ஓங்கியிருப்பதாலும், நிலையற்றவற்றை நிலையானதாக எண்ணி அடைய முற்படுவதாலும், உயிரினுடைய இந்த நிலை மருள் நிலை எனப்படும். பல பிறவிகளுக்குப் பிறகு உயிர் பக்குவம் அடைகிறது. சிறிது சிறிதாகத் தெளிவு பெறுகிறது இவையெல்லாம் திருவருளின் காரியமே. உயிரைப் பாசத்தில் பொருத்தி அனுபவிக்கச் செய்வதும் அருளாகும். அந்தப் பாசத்திலிருந்து உயிரை வேறுபடுத்துவதும் அருளாகும். உலகத்தில் உயிர் வைத்துள்ள

பற்றினைக் குறைத்துச் சிவத்துடன் பொருந்தும்படிச் செய்வதும் அருளாகும். இறைவனுடன் உயிரினைச் சேர்த்து, உள்ளத்திலே அருளினை நிலைநாட்டி, ஒளிமயமான காட்சியினைக் காண்பிப்பதும் அருளாகும். அருளின் விளைவாக உயிரானது ஒப்பற்ற ஆனந்தத்தைப் பெறுகின்றது.

**"அருளிற் பிறந்திட் டருளில் வளர்ந்திட்**
**டருளில் அழிந்திளைப் பாறி மறைந்திட்**
**டருளான ஆனந்தத் தாரமு தூட்டி**
**அருளால் என்நந்தி யகம்புகுந் தானே".** (திருமந்திரம் - 1800)

**"பாசத்தி லிட்ட தருளந்தப் பாசத்தின்**
**நேசத்தை விட்ட தருளந்த நேசத்திற்**
**கூசற்ற முத்தி யருளந்தக் கூட்டத்தின்**
**நேசத்துத் தோன்றா நிலையரு ளாமே".** (திருமந்திரம் - 1802)

இறைவன் சுந்தரமூர்த்தி நாயனாரைத் திருவெண்ணெய் நல்லூரில் ஆட்கொள்கின்றான். நாயனார் தனக்கு அடிமையென்று உலகுக்கு அறிவிக்கின்றான். உலகில் பிறந்த எல்லா உயிர்களும் அவனுக்கு அடிமைகள்தானே? உண்மையான சுதந்திரம் அந்த அடிமை உணர்வில் அல்லவா இருக்கின்றது! **"என் தாயொடு என்னப்பன் ஏழேழு பிறவியும் அன்றே சிவனுக்கு எழுதிய ஆவணம்"** என்கிறார் திருமூலர். முதலிலே சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனுடன் சண்டை பிடிக்கின்றார். அதற்காக இறைவன் அவருக்கு வன்றொண்டன் என்னும் பெயர் வழங்குகின்றான். தெரியாமல் தான் செய்த பிழையையும் ஏற்று இறைவன் தன்னை ஆட்கொண்டதை எண்ணிப் பார்த்த சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனுடைய அருள்நிலையை நினைத்து வியக்கின்றார். **"பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா!"** என்று மனம் உருகப் பாடுகின்றார். இறைவனுடைய திருவருளால் சுந்தரருக்குச் சிவஞானம் தோன்றுகின்றது. "எல்லாம் உனது அருள், நீ நினைக்கின்றாய், நீ முடிக்கின்றாய், எனது மனதில் உன்னை வைத்தாய்" என்கின்ற வகையில் பாடுகின்றார்.

**"பித்தா! பிறை சூடீ! பெரு மானே! அரு ளாளா!**
**எத்தால்மற வாதேநினைக் கின்றேன் மனத்துஉன்னை**
**வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்**
**நல்லூர்அருட் டுறையுள்**
**அத்தா!உனக்கு ஆளாய்இனி அல்லேன் எனல்ஆமே?"**

உயிரைப் பந்திப்பது பாசமாகும். அந்தப் பாசத்திலிருந்து தன்னை விலக்கிக் கொள்வது உயிரின் குறிக்கோளாகும். அந்த உணர்வு உள்ளத்தில் ஏற்படுவதே திருவருளின் செய்கையாகும். பேரருளாளனாகிய இறைவன் இவ்வுலகில் பிறவாமை என்கின்ற குறிக்கோளை நம்முள் வைத்து, அதற்கான

நெறியையும் தந்தருளுகின்றான். கற்பகம் போன்ற, என்றும் குறையாத கருணைக்கடலாகிய இறைவன் உயிர்கள் உலக இன்பத்திலே ஈடுபட்டு, அருளை மறந்து, வினைக் கடலிலேயே என்றும் மூழ்கி இருக்கா வண்ணம் தக்க நேரத்தில் உயிரினைத் தனதாக்கிக் கொள்கின்றான், ஆட்கொள் கின்றான். திருமூலர் பெருமான் சொல்லுவதைக் கேளுங்கள்.

**''பிறவா நெறிதந்த பேரரு ளாளன்**
**மறவா அருள்தந்த மாதவன் நந்தி**
**அறவாழி அந்தணன் ஆதிப் பராபரன்**
**உறவாகி வந்தென் உளம்புகுந் தானே''.** (திருமந்திரம் - 1803)

காரைக்கால் அம்மையார் தன்னை இறைவனுக்கு அர்ப்பணித்த நேரத்திலேயே பேயுருவம் பெறுகிறார். இறைவன் ஐம்பொறிகளை அடக்கியவன். அதற்கு எடுத்துக்காட்டாக யானைத் தோலைப் போர்த்தி யிருக்கின்றான். நெற்றியிலே கண்ணை உடையவன். கண்ணுதலான். நெற்றிக்கண் ஞானக்கண் ஆகும். ஞானம் பெற்றவர்கள் அருளாளர் ஆவார்கள். இறைவன் எல்லாவற்றையும் துறந்தவன். அழிவற்றவன். இந்த இரண்டையும் திருநீறு காட்டுகின்றது. இறைவன் திருநீற்றைப் பூசியுள்ளான். அத்தகைய அம்மானுக்கு ஆளாயினேன் என்கிறார் காரைக்கால் அம்மையார்.

**''யானேஅக் கைம்மா உரிபோர்த்த கண்ணுதலான்,**
**வெண்ணீற்ற அம்மானுக்(கு) ஆளாயினேன்.''**

(அற்புதத் திருவந்தாதி)

இறைவனின் அருளின் தன்மையைக் காரைக்கால் அம்மையார் மேலும் விளக்குகின்றார். ''இறைவனுக்கு நான் அடிமையாகி விட்டேன். அதனால் எனக்குப் பிறவித் துன்பம் ஒழிந்து விட்டது. நான் இறைவனுக்கு அடிமை யாவது பெரிதல்ல. அதனால் மீண்டும் பிறவாத தன்மையைப் பெற்று விட்டேனே. அதல்லவா இறைவனுடைய அருள்!'' என்று கூறுகின்றார்.

**''ஆயினேன் ஆள்அவனுக்(கு); அன்றே பெறற்கரியன்**
**ஆயினேன்; அஃதன்றே ஆமாறு''** (அற்புதத் திருவந்தாதி)

எல்லாம் அருளே என்கின்ற உணர்வினைப் பெற்றவர் காரைக்கால் அம்மையார். உலகத்தில் எல்லா இயக்கங்களும் திரு அருளாலேயே நடைபெறுகின்றன. திருவருளே பிறவித் துன்பத்திற்குக் காரணமாகிய வினைக்கடலைத் தாண்டிச் செல்ல உதவும் தோணியாகவும் அமைகின்றது. இன்பத்திலும் துன்பத்திலும் இறைவனின் அருளைக் காணுபவர் காரைக்கால் அம்மையார். அம்மையார் ஒருபடி மேல் செல்கின்றார். இன்பத்திற்கும் துன்பத்திற்கும் காரணமாக அருள் இருப்பது என்பது ஒரு பக்கம். ஆனால் உலக அனுபவங்களில் ஈடுபட்டு, இன்பத் துன்ப நிலைகளில் மூழ்கி நிற்கும்

வேளையிலும், இறைவனுடைய திருவருளைப் பற்றிச் சிந்திப்பது, அக மகிழ்வது போன்றவை பக்குவமடைந்த ஆன்மாக்களுக்கு இயல்பாகவே நிகழும். எனக்கு எக்காலத்தும், எல்லாப் பொருளும் ஆவது அந்த அருளே என்கின்ற தெளிவு அம்மையாரைப் போன்ற அருளாளர்களுக்குத்தான் கிட்டும்.

**"அருளே உலகெலாம் ஆள்விப்ப(து), ஈசன்**
**அருளே பிறப்பறுப்பது; ஆனால் - அருளாலே**
**மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன், எஞ்ஞான்றும்**
**எப்பொருளும் ஆவ(து) எனக்கு"**

**(அற்புதத் திருவந்தாதி)**

திருவருள் எங்கும், எல்லாவற்றிலும் கலந்து நிற்கிறது. குறிப்பாக சீவராசிகளிடையே இறைவனுடைய அருள்மழை பொழிந்து கொண்டே இருக்கின்றது. ஆனால், அதை மக்கள் உணருவாரில்லை. ஏனென்றால் அவர்கள் அந்தக் கண்களுடன் பார்ப்பதில்லை. அருட்செல்வத்தை உணர்ந்து கொள்ளத் தனி முயற்சி தேவை. பொருட்செல்வத்தை உயிரும், உடலும் சதா நாடிக்கொண்டே செல்கின்றன. பொருளிலுள்ள ஈடுபாட்டின் காரணமாக அருளைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. மேலும், நாம் நினைப்பதும், பேசுவதும் அவனருளாலேயே என்று உணர்த்துவதற்கும் ஒருவருமில்லை. ஆகவே, நமக்குக் கண்ணிருந்தாலும் கண்ணற்றவர்கள் போல வாழ்க்கையை நடத்திச் செல்லுகின்றோம். அப்பொழுதும் இறைவன் தன்னுடைய பணியைச் செய்யத் தவறுவதில்லை. சரியான நேரத்தில் நமது உள்ளத்தில் வந்து புகுந்து கொள்கின்றான். குளிர்ச்சி பொருந்திய தனது திருவடியை நமக்குப் பாதுகாவலாக முன் வைக்கின்றான். உள்ளே இருந்து கொண்டு ஊனுடம்பினை உருகச் செய்கின்றான். ஒப்பற்ற ஆனந்தத்தை நமது உடலிலும், உயிரிலும் பாய்ச்சுகின்றான். அதுமட்டுமன்று, நம்முடைய மலங்களை நீக்கி அருளுகின்றான். அதை எப்படிச் செய்கின்றான் தெரியுமா? நம்முள்ளேயே மூடிக்கிடக்கின்ற அருட்கண்களை விழிப்பித்து நம்முடைய குற்றம், குறைகளைப் போக்குகின்றான். இறைவனுடைய அருள்பட்ட மாத்திரத்திலேயே நமது அகக்கண் திறந்து விடுகின்றது. இறைவனுடைய தூய ஒளி உயிரில் பதிந்து கொள்கின்றது. உலக நாட்டம் உள்ள வரையில் அருட்கண் விழிப்பதில்லை. அருட்கண் திறக்கும்போது புலன்களின் இயக்கம் மாறி விடுகின்றது. ஐம்புலனறிவின் தன்மை மாறுகிறது. புலன்கள் தம் வழியே செல்வதில்லை. அருட்கண்ணின் நோக்கிலேயே செல்லும். பளிங்கு இருக்கின்றது. எப்போதும் பளிங்கில் அருகில் உள்ள பொருட்களின் நிறத்தைப் பாய்ச்சுகின்றோமோ அதனை அது பிரதிபலிக்கும். இறைவன் தனது ஒப்பற்ற அருளாகிய பவளத்தை உயிராகிய பளிங்கில் பதிக்கும்போது பளிங்கானது அந்தப் பவளத்தின் தன்மையைப் பிரதிபலிக்கும். சீவகரணங்கள், சிவகரணங்களாக மாறிவிடும்.

**''விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு**
**தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து**
**உண்ணின் றுருக்கியொ ரொப்பிலா ஆனந்தக்**
**கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே''.** (திருமந்திரம் - 113)

**''களிம்பறுத் தான்எங்கள் கண்ணுதல் நந்தி**
**களிம்பறுத் தான்அருட் கண்விழிப் பித்துக்**
**களிம்பணு காத கதிரொளி காட்டிப்**
**பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே''.** (திருமந்திரிம் - 114)

இவையெல்லாம் இறைவனுடைய அருளாலேயே நடக்கின்றன. சுந்தரமூர்த்தி நாயனார் எண்ணி எண்ணிப் பார்த்து வியக்கின்றார். உயிர்களுக்கு இறைவன் இன்பத், துன்பங்களைத் தருகின்றான். அவற்றை அனுபவித்து மக்கள் தங்களை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்பதே திருவருள் இயக்கத்தின் நோக்கமாகும். மாசு மறைந்து தூய்மை வர வேண்டும். அதற்காக இறைவன் உயிர்களை ஒறுக்கின்றான், பொறுத்துக் கொள்கின்றான். எத்தனை பிழைகள் செய்தாலும் அவற்றைச் சட்டை செய்வதில்லை. நாம் செய்கின்ற தீங்குகளை மறந்து நம்மைத் திருத்திக் கொள்வதற்காக வாய்ப்புகளைக் கொடுத்துக் கொண்டே வருகின்றான். நாய் போன்ற நம்மையும் பொறுத்து ஆளாக்கி அவனுடைய அருளுக்கு உரிய பொருளாக நினைத்து அவ்வப்போது நமக்குத் தண்டனையும் கொடுத்து, நமது உயிரினைத் தீயிலிட்ட தங்கமாக்குகின்றான். என்னே அவனுடைய கருணை!

**''ஒறுத்தாய் நின் அருளில்; அடியேன் பிழைத்தனகள்**
**பொறுத்தாய் எத்தனையும்; நாயேனைப் பொருட்படுத்திச்**
**செறுத்தாய்; வேலைவிடம் அறியாமல் உண்டுகண்டம்**
**கறுத்தாய்; தண்கழனிக் கழிப்பாலை மேயானே!''**

இந்த உணர்வினை வேறொரு விதத்தில் திருமூலர் விளக்குகின்றார். குற்றம் உடையவர்களை இருட்கண்ணினோர் என்று அழைக்கின்றார். அவர்கள் மீது இறைவன் அருள்படவில்லை. எனவே, அவர்களுக்கு அந்த அருளின் தன்மை தெரியாது. கண்ணற்றவர்கள் சூரிய ஒளியைப் பார்க்க முடியாது. கண்ணுடையவர்கள் சூரிய ஒளியைப் பார்க்கின்றார்கள். அதேபோல, அருட்கண் இல்லாதவர்களுக்கு மெய்யுண்மை தோன்றாது. அதன் காரணமாகப் பிறவிப் பெருங்கடலை நீந்த மாட்டாமல் பல பிறவிகள் பெற்று இன்னலடைவார்கள். ஆனால், தனக்குள்ளேயே இருக்கும் அருட்கண் திறந்தமாத்திரத்தில் இறைவனே அவர்கள் முன் தோன்றி அருள்புரியும் நிலையை அவர்கள் உணருவார்கள் திருவருள் காரணமாக உள்ளத்திலேயே ஒரு ஒப்பற்ற ஒளி தோன்றிடும்.

**"அருட்கண்ணி லாதார்க் கரும்பொருள் தோன்றா**
**அருட்கண்ணு ளோர்க்கெதிர் தோன்றும் அரனே**
**இருட்கண்ணி னோர்க்கங் கிரவியுந் தோன்றாத்**
**தெருட்கண்ணி வோர்க்கெங்குஞ் சீரொளி யாமே".**

**(திருமந்திரம் - 1808)**

அறுபத்து மூன்று நாயன்மார்களும் இறைவனின் அருள் வெள்ளத்தில் மூழ்கி இருப்பவர்கள். இறைவன் தங்களை ஆட்கொண்டதைப் பற்றி வியந்து தங்களுடைய உடலையும், உயிரையும் இறைவனுக்கே அர்ப்பணித்தவர்கள். அவனுடைய அருளை நெஞ்சையள்ளும் பாடல்கள் மூலமாகப் போற்றி அவர்கள் பெற்ற இன்ப அனுபவத்தை நாமும் பெறலாம் என்று உலகுக்குப்பறை சாற்றுகின்றார்கள். அவர்கள் அருளனுபவம் பெற்றுப்பேரின்பம் பெற்றதன் காரணமாக மேலும் மேலும் திருவருளைப் பெற வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் வாழ்க்கை நெறியை வகுத்துக் கொண்டார்கள். இறைவனுடைய குணங்களையெல்லாம் தெரிந்தும் தன்னகத்தில் இறைவன் இன்னும் காலடி வைக்கவில்லையே என்று ஏங்குவார்கள். திருவருள் அமுதத்தை முழுமையாகப் பருகி அதிலே தன்னை மறந்து கொள்ள வேண்டுமென்பதே அவர்களுடைய விருப்பமாக அமைகின்றது. இத்தகைய வேட்கையைக் காரைக்கால் அம்மையார் பின்வரும் பாடலில் பாடுகின்றார்:

**"தனக்கே அடியனாய்த் தன்அடைந்து வாழும்**
**எனக்கே அருளாவாறு என்கொல்? - மனக்குஇனிய**
**சீராளன், கங்கை மணவாளர், செம்மேனிப்**
**பேராளன், வானோர் பிரான்".**

**(அற்புதத் திருவந்தாதி)**

இறைவனுடைய அருளை நன்கு தெரிந்து கொண்டவர் ஆளுடைய பிள்ளையார் திருஞானசம்பந்தர் பெருமான். எத்தகைய இடர்ப்பாடு வந்தாலும், எத்தகைய இன்னல் நேர்ந்தாலும், இறைவனுடைய திருவடியே தனக்கு இன்பம் தருவது என்கின்ற உறுதிப்பாடு கொண்டவர். ஒருநாள் அவருடைய தந்தையார் வேள்வி செய்வதற்காகப் பொருள் வேண்டுமென்று ஞானசம்பந்தர் பெருமானிடம் கேட்ட போது, சம்பந்தர் பெருமான் தன்னிடம் பொருள் ஒன்றும் இல்லாத நிலையைக் கண்டு இறைவனிடம் பொருள் கேட்கின்றார். அருட்செல்வர் தனது தந்தைக்காக இறைவனிடம் பொருட்செல்வத்தைக் கேட்கின்றார். எப்படிக் கேட்கின்றார்? "எனக்குத் தேவையானவற்றை எல்லாம் நீ கேட்காமலேயே கொடுத்து வருபவன். இப்போது என் தந்தையாருக்குப் பொருள் வேண்டும். என்னிடம் பொருள் இல்லை. பொருள் இல்லாமல் நான் வாடுவது உனது அருளுக்கு அழகில்லையே. என்னைப் போன்றவர்களுக்கு வேண்டாமலேயே

குறிப்பறிந்து கொடுப்பதற்கான அருள் செய்ய வேண்டாமா'' என்று வருந்துகிறார். அந்தக் குறிப்புடன் பதிகம் பாடுகின்றார். அவர் வேண்டியவாறே இறைவனும் ஆயிரம் பொற்கிழியை அவருக்கு அளித்தருளுகின்றான்.

**''இடரினும் தளரினும் எனதுறுநோய்**
**தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்;**
**கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை**
**மிடறினி லடக்கிய வேதியனே!**
**இதுவோஎமை ஆளுமாறு? ஈவதொன்று எமக்கு இல்லையேல்**
**அதுவோஉனது இன்னருள்? ஆவடு துறைஅரனே!''**

பிரான் அருள் உண்டெனில் உண்டு நற்செல்வம், பிரான் அருள் உண்டெனில் உண்டு நல்ஞானம் என்கிறார் திருமூலர். உலகத்திற்கு வேண்டியது பொருட்செல்வம். கிடைக்கும் பொருட்செல்வத்தை நல்ல முறையில் பயன்படுத்திப்பெற வேண்டியது அருட் செல்வம். அருட்செல்வத்தால் கிடைப்பது ஞானம். உயிர் தன்னுள் இறைவனிடமிருந்து கிடைக்கப்பெறும் அருளினால் அந்தப் பேரறிவின் இயக்கத்தை உணர்ந்து கொள்ளும் தன்மையைப் பெறும்போது பெரும் தெய்வமும் ஆகிறது என்பதும் திருமூலருடைய வாக்காகும். இவ்வுலகத்தில் கேட்பவர்கள், கொடுப்பவர்கள் என்று இரண்டு பெரிய கூட்டங்கள் உண்டு. நாமெல்லோரும் கேட்பவர்கள். நம்மில் பலர் பொருட் செல்வத்திற்காகப் பாடுபடுகின்றோம். சிலர் அருட்செல்வத்தின் பெருமை உணர்ந்தவர்கள். கொடுப்பதற்கு மனம் வர வேண்டும். ஒரு சிலரே பிறருக்குக் கொடுக்கும் தன்மையைப் பெற்றிருக்கின்றார்கள். அவர்களுக்கு அந்த எண்ணம் தோன்றுவதே இறைவனுடைய அருளால்தான். **''ஈபவர்க்கு அருளும் வைத்தார்''** என்கிறார் திருநாவுக்கரசர். அதேசமயத்தில் ஈவதற்குச் செல்வம் இருந்தும் அதைப் பிறருக்குக் கொடுக்காமல், அது தங்களுக்கு இறைவனால் கிடைத்தது என்கிற உணர்வும் பெறாமல் வாழ்பவர்களுக்கு இறைவன் இம்மையிலும், மறுமையிலும் துன்பங்களை வைப்பான். மிக்க அருளுடன் கங்கையாளை இறைவன் தனது தலையில் வைத்துக் கொண்டான். கைலை மலையில் இராவணன் அகப்பட்டுத் தவிக்கும்போது சாம வேதத்தைப் பாடி இரந்தான். உடனே இறைவனும் அதற்கு இரங்கிப் பேரருளுடன் இராவணனுக்கு உடைவாளும், முக்கோடி வாழ்நாளும் வழங்கினான். என்னே இறைவனுடைய அருள் என்று திருநாவுக்கரசர் திருவையாற்றில் பாடுகின்றார்.

"இரப்பவர்க்கு ஈய வைத்தார்;
ஈபவர்க்கு அருளும் வைத்தார்;
கரப்பவர் தங்கட் கெல்லாம்
கடுநர கங்கள் வைத்தார்;
பரப்புநீர்க் கங்கை தன்னைப்
படர்சடைப் பாகம் வைத்தார்;
அரக்கனுக்கு அருளும் வைத்தார்;
ஐயன்ஐ யாற னாரே".

இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல், தொழில்களை மட்டும் செய்யவில்லை. இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக இருந்து கொண்டு அருள் வடிவாக அகத்திலும், புறத்திலும் காட்சி அளிக்கின்றான். தேவர் களுக்கு அமுதம் தேவைப்பட்ட போது பெருங்கடலைக் கடையச் செய்வித்து அவர்களுக்கு அமுதத்தைக் கொடுத்தருளினான். அதே நேரத்தில் விஷமும் வந்தது. தேவர்களைக் காக்கும்பொருட்டு அந்த விஷத்தைத்தானே உண்டான். அவர்கள் கேட்காமலேயே தனது திருவடிகளை அவர்களுக்குப் பாதுகாவலாக வைத்தான். உள்ளத்திலே அருள் புகும்போதே ஆர்வம் ஏற்படுகின்றது. ஆனந்தம் ஏற்படுகின்றது. தாயூட்டும் உணவைவிடப் பதின்மடங்கு ருசியுடன் உள்ளது இந்த அருளமுது.

"அருளால் அமுதப் பெருங்கடல் ஆட்டி
அருளால் அடிபுனைந் தார்வமுந் தந்திட்
டருளான ஆனந்தத் தாரமு தூட்டி
அருளால் என்நந்தி யகம்புகுந் தானே".

(திருமந்திரம் - 1801)

# 30. "அருளாளர்களின் அருள் உணர்வுகள்"

திருமூல நாயனார் அருளிச் செய்துள்ள திருமந்திரம் தமிழ் மக்களின் மிக ஆதிநூல் என்று மெய்யுணர்வாளர்கள் போற்றுகின்றனர். சிவபெருமானுக்கு முதற்சீடரான நந்தி தேவரின் எட்டு மாணாக்கர்களில் தானும் ஒருவர் என்று பின்வரும் பாடலால் திருமூலர் கூறுகின்றார்:

**"நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்,**
**நந்திகள் நால்வர், சிவயோக மாமுனி**
**மன்று தொழுத பதஞ்சலி, வியாக்கிரமர்**
**என்றிவர், என்னோ டெண்மரு மாமே".** **(திருமந்திரம் - 67)**

நந்திகள் நால்வர் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் எனப்படுவர். சிவயோக மாமுனி என்பவரைப் பற்றி விவரம் இருப்பதாகத் தெரியவில்லை. பதஞ்சலியாரும், வியாக்கிரமரும் தமிழ்நாட்டுடன் தொடர்புகொண்டவரென்று கருதப்படுகின்றது.

நந்தி பெருமானது அருளால் தான் ஆசிரியன் எனப்பெயர் பெற்றதாகவும், அவரைச் சேர்த்து எட்டு ஆசிரியர்களும் இறைவனது ஆகம மந்திரங்களை எட்டுத் திக்கிலும் பரப்பினர் என்றும், திருமூலரிடமிருந்து திருமந்திரத்தைப் பெற்று உணர்ந்த அவருடைய சீடர்களும் பல இடங்களிலே திருமந்திரத்தை ஓதி நந்தி மரபினை நிலைபெறச் செய்தனர் என்றும் திருமந்திரம் கூறுகின்றது.

மெய்ப்பொருளை உணரும் சன்மார்க்கத்தை உலக மக்கள் அறிந்து உய்வதற்கு அறம், பொருள், இன்பம், வீடு என்கிற நான்கு புருஷார்த்தங்கள் உண்டு. அவற்றை விளக்கும் ஞானக்களஞ்சியமாகத் திருமந்திரம் தொன்றுதொட்டு ஞானிகள், முனிவர்கள் போன்றவர்களுடைய உள்ளங்களைக் கவர்ந்துள்ளது. இவற்றைச் சிவனெறி என்றும், சன்மார்க்கம் என்றும் கூறித் திருமூலர் சைவ சமயத்திற்குத்தனி நாயகன் நந்தியம்பெருமான் எனக் கூறுகின்றார்.

**"சைவப் பெருமைத்தனி நாயகன் நந்தி**
**உய்யவகுத்த குருநெறி ஒன்றுண்டு**
**தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்ந்துய்ய**
**வையகத்துள்ளார்க்கு வகுத்து வைத்தானே".**

**(திருமந்திரம் - 1478)**

நந்தி என்னும் சொல்லைப்பல இடங்களில் திருமூலர் சிவபெருமானைக் குறித்தே உபயோகிக்கின்றார். ஆயினும், தனக்கு ஆசானாக நந்தி தேவனை அவர் குறிப்பிடும் காரணத்தினால் விடை ரூபமாக அமைந்துள்ள நந்தி தேவனையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. நந்தி தேவனை விடை ரூபமாகத் தமிழ் மக்கள் பல ஆயிரம் ஆண்டுகளாக வணங்கியுள்ளதாகச் சான்றுகள் உண்டு என்று இலங்கையைச் சேர்ந்த பேரறிஞர் திரு சி.இராமநாதன் போன்றவர்கள் கருதுகிறார்கள். தாயுமான சுவாமிகள் **"நந்திமரபு வாழ்க மூலன் மரபில் வரும் மவுன குருவாழ்க"** என்று போற்றியுள்ளார். அவர் மேலும் கூறுகின்றார். **"சக்கரவர்த்தி தவராசயோகி எனும் மிக்க திருமூலன் அருள் மேவு நாள் என் நாளோ".**

இலங்கையைச் சேர்ந்த பேரறிஞர் திரு சி.இராமநாதன் அவர்கள் திருமந்திரத்தில் மிக்க ஈடுபாடு உடையவர். திருமந்திரத்தில் பல நுட்பமான கருத்துகளைத் தெளிவாக விளக்கக்கூடிய ஆற்றலைப் பெற்றவர். தன்னுடைய கருத்துகளை அவர்கள் இன்றும் எனக்குக் கடிதங்கள் வாயிலாகத் தெரிவித்து வருகின்றார்கள். அதற்கு நான் அவருக்கு மிக்க கடமைப்பட்டிருக்கிறேன். இங்கு அவருடைய சில கருத்துகளை மட்டும் எடுத்துக்கூறிட விரும்புகின்றேன்.

"ஆதியில் பிரபஞ்ச உற்பத்திக்கு முன் இருந்த ஒரே அழியாத அனாதியான மெய்ப்பொருள் விந்து என்று திருமந்திரம் கூறுகின்றது. நாசா (NASA) விண்வெளி ஆராய்ச்சியாளர்களும் இந்த உண்மையையே மின்சார காந்த அணுசக்தி (Electro - Magnetic Weak and Strong Atomic Energy) என்று கூறுகின்றது. இச்சக்தி, தன் அமுக்கம் தாங்க முடியாமல் வெடித்துப் பெருமுழக்கம் (Big Bang) உண்டாகிப்பிரபஞ்சமும் உயிர்களும், அசைவு அசைவற்ற பொருள்களும், 50 கோடி சூரியன்களும், சந்திரர்களும், நட்சத்திர மண்டலங்களும், அண்டங்களும், பஞ்ச பூதங்களும் வெளிப்பட்டதாகக் கூறுகின்றது.

### BIG BANG THEORY

The Universe arose from a region millions of times smaller than a proton of an atom.

திருமூலரும் தன் ஞான திருஷ்டியால் உணர்ந்ததைக் கீழ்க்காணும் திருமந்திரங்களால் விவரிக்கின்றார்:

"மேல்வரும் விந்துவும் அவ்வெழுத்தாய் விடும்
மேல்வரும் நாதமும் ஓங்கும் எழுத்துடன்
மேல்வரும் அப்பதி அவ்வெழுத்தே வரின்
மேல்வரும் சக்கரமாய் வரும் ஞாலமே". (திருமந்திரம் - 1258)

"ஞால மதாக விரிந்தது சக்கரம்
ஞால மதாய் விடும் விந்துவும் நாதமும்
ஞால மதாய் விடும் அப்பதி யோசனை
ஞால மதாக விரிந்தது எழுத்தே". (திருமந்திரம் - 1259)

"விரிந்த எழுத்தது விந்துவும் நாதமும்
விரிந்த எழுத்தது சக்கரமாக
விரிந்த எழுத்தது மேல்வரும் பூமி
விரிந்த எழுத்தினில் அப்புறம் அப்பே". (திருமந்திரம் - 1260)

"அப்பதுவாக விரிந்தது சக்கரம்
அப்பினில் அப்புறம் அவ் அனலாய் விடும்
அப்பினில் அப்புறம் மாருதமா யெழ
அப்பினில் அப்புறம் ஆகாசமாமே". (திருமந்திரம் - 1261)

"விரையது விந்து விளைந்தன எல்லாம்
விரையது விந்து விளைந்த உயிரும்
விரையது விந்து விளைந்த விஞ்ஞானம்
விரையது விந்து விளைந்த அவன்தாளே" (திருமந்திரம் - 1279)

"விளைந்த எழுத்தது வ்விந்துவும் நாதமும்
விளைந்த எழுத்தது சக்கரமாகும்
விளைந்த எழுத்தவை மெய்யினில் நிற்கும்
விளைந்த எழுத்தவை மந்திரமாமே". (திருமந்திரம் - 1280)

அருணகிரி நாதரும் திருப்புகழில் நாத, விந்து கலாதி நமோ நமோ வென்றும், திருவள்ளுவரும்

கற்றதனலாய பயனென் கொல் வாலறிவன்
நற்றாள் தொழாரெவனின்.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

எனக் கூறுகின்றார்.

கருவில் மிதித்த கமலப்பாதமான விந்துவிலிருந்து விரிந்து உயிராய் நிற்கின்றது. இந்த ஆத்ம சக்கரத்தை நந்தி கருவில் மிதித்த கமலப்பாதத்தை அகாரமாயும், அதிலிருந்து இகாரம், உகாரம், ஓங்காரம், மகாரம் ஐந்து எழுத்துக்களாய்ப் பிரித்து விளக்கியுள்ளார். பதஞ்சலியும் தனது யோக சூத்திரத்தில் பஞ்ச அக்கரமாய் (ஐந்து எழுத்து) பிரித்து பஞ்சாக்கர மந்திரமென்று விளக்கியுள்ளார்.

கருவில் மிதித்த கமலப்பாதத்திலிருந்து உதித்த உயிர், சீவன் சிவனென்று எல்லா ஞானிகளும் கூறுகின்றார்கள். பின்வரும் திருமந்திரங்கள் அவற்றை விளக்குகின்றன.

"வித்தினிலன்றி முளையில்லை அம்முளை
வித்தினிலன்றி வெளிப்படு மாறில்லை
வித்தும் முளையும் உடனன்றி வேறில்லை
அத்தன்மை யாகும் அரன்நெறி காணுமே".

(திருமந்திரம் - 1932)

"சீவனென்ன சிவனென்ன வேறில்லை
சீவனார் சிவனாரை அறிகிலர்
சீவனார் சிவனாரை அறிந்தபின்
சீவனார் சிவனாயிட் டிருப்பரே". (திருமந்திரம் - 2017)

"தானென்று அவனென்று இரண்டென்பர் தத்துவம்
தானென்று அவனென்று இரண்டற்ற தன்மையைத்
தானென்றிரண்டுள்ளார் கேவலத் தானவர்
தானின்றித் தானாக தத்துவ சுத்தமே". (திருமந்திரம் - 2348)

"ஒன்றும் இரண்டும் இலதுமாய் ஒன்றாக
நின்று சமய நிராகாரம் நீங்கியே
நின்று பராபரை ஞேயத்தை பாதத்தாற்
சென்று சிவமாதல் சித்தாந்த சித்தியே". (திருமந்திரம் - 1437)

கருவில் மிதித்த கமலப் பாதத்திலிருந்து எழும் சக்தியை, பிராணவாயுவை உணர்வால் ஓதுவதே இறைவனின் நாமம். திருமந்திரம் விளக்கமாகக் கூறுகின்றது.

"மருவும் துடியுடன் மன்னிய வீச்சு
மருவிய அப்பு மன்னுடன் இசையும்
கருவில் மிதித்த கமலப் பதமும்
உருவில் சிவாய நமவென ஓதே". (திருமந்திரம் - 2798)

"நாட்டமிரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமுமில்லை மனைக்கும் அழிவில்லை
ஓட்டமுமில்லை உணர்வில்லை தானில்லை
தேட்டமுமில்லை சிவனவனாமே". (திருமந்திரம் - 604)

தாயுமானவரும்,

"சைவ சமயமே சமயம் சமயாதீதப்பழம் பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டும் இக்கருத்தை விட்டு
பொய் வந்துழலும் சமயநெறி புகுதவேண்டாம் முத்தி தரும்
தெய்வசபையைக் காண்பதற்குச் சேரவாரும் ஜெகத்தீரே"

எனக் கூறுகின்றார்."

மேலும், பேரறிஞர் சி.இராமநாதன் அவர்கள் பிரணவத்தைப்பற்றி கூறும் சில கருத்துக்களைப் பின்வருமாறு காண்போம்:

"ஆகாரம், இகாரம், உகாரம், ஓங்காரம், மகாரமாகிய ஐந்தெழுத்தில் இயங்கும் ஆத்மா குரு தீட்சை பெற்ற ஞானிகளுக்கு அகாரம், உகாரம், மகாரமாகிய முப்பதங்களில் இயங்கி ஓம் என்னும் நாதத்தை, இறைவனின் நாமத்தை ஒதிச்சித்தாகாசத்தில் சோதியாய் வெளிப்படும் எனத் திருமந்திரம் விளக்குகின்றது.

"ஓரெழுத்தாலே உலகெங்கும் தானாகி
ஈரெழுத்தாலே இசைந்தங் கிருவராய்
மூவெழுத்தாலே முளைத்தோங்கும் சோதியை
மாவெழுத்தாலே மயக்கமே உற்றதே". (திருமந்திரம் - 885)

அழியாத மெய்ப்பொருளான சீவன் 'ஓம்' என்னும் திருநாமத்தைக் கூறிக்கொண்டு சிதாகாசப் பர வெளிக்கு ஏறித் தன் பசுத்தன்மை மாறிச் சிவனாகும் தத்துவத்தைக் கீழ்க்காணும் திருமந்திரம் கூறுகின்றது:

"கூறும் பொருளிது அகார உகாரங்கள்
ஏறும் பொருளிது சிந்தையுள் நின்றிட
கூறும் அகாரம் குழல் வழி ஓடிட
மாறும் அமர்ந்திடும் அண்ணலு மாமே." (திருமந்திரம் - 765)

யோகிகள் பிரணவ சொரூபத்தில் மனத்தைப் பதித்துத்தவம் செய்து மண்ணுலகம் கடந்து விண்ணுலகப் பெருவெளியில் ஏறும் வழியில் பல நிலையங்களைக் கண்டு பலவாறாகப் பெயர்கள் சூட்டி விளக்கியுள்ளார்கள். திருமூலர் அவ்விடங்களை இலங்கை, தில்லை, சிற்றம்பலம், சிதம்பரம், அருளம்பலம், பேரம்பலம், சிவலோகம், சிவபூமியென்று பல பாடல்களில் கூறியுள்ளார்.

**''மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை**
**கூரும் இவ்வானில் இலங்கைக் குறியுறுஞ்**
**சாருந்திலை வனத் தன் மாமலயத்து**
**ஏறுஞ் சுழுனை இவை சிவபூமியே''.** **(திருமந்திரம் - 2747)**

பிராண வாயுவை அகார உகாரத்தில் கழுனை நாடியில் இயங்கச் செய்வதே தவம்.

**''இடைபிங்கலை இமவானோடு இலங்கை**
**நடுநின்ற மேரு நடுவாஞ் சுழுனை**
**கடவுந் திலைவனம், கைகண்ட மூலம்**
**படர்வொன்றி யென்னும் பரமாம்பரமே''.** **(திருமந்திரம் - 2754)**

இமவான் சித்தாகாசப் பரவெளியைக் குறிக்கும்.

**''அறம் அறியார் அண்ணல் பாதம் நினையுந்**
**திறம் அறியார் சிவலோக நகர்க்குப்**
**புறம் அறியார் பலர் பொய்ம்மொழி கேட்டு**
**மறம் அறிவார் பகை மன்னி நின்றாரே''** **(திருமந்திரம் - 262)**

| | | |
|---|---|---|
| ''அறம் | - | பிராணாயாமம் ஓதும் தவநெறி |
| அண்ணல் பாதம் | - | கருவில் மிதித்த இறைவனின் பாதம் ஆத்ம சக்கரத்தின் முதலெழுத்தான அகார எழுத்து |
| சிவலோக நகர் | - | விண்ணுலகில் தில்லை நகரம் |
| பொய்ம்மொழி | - | அஞ்ஞானம் |
| மறம் | - | பாவ வழி '' |

மேலும் சில சிந்தனைகள். மந்திரம் என்னும் சொல்லுக்கு விளக்கமாகப் பொருள் கூறுவது சுலபமில்லை. தொல்காப்பியம் ரத்தினச் சுருக்கமாகச் சொல்லிவிட்டது. பட்டினத்துப் பிள்ளையார் ''பேசாத மந்திரம்'' என்கிற சொற்றொடரை உபயோகிக்கின்றார்.

**''வெட்டாத சக்கரம் பேசாத மந்திரம் வேறொருவர்க்கு**
**எட்டாதபுட்பம் இறையாத தீர்த்தம் இனி முடிந்து**
**கட்டாதலிங்கம் கருதாத நெஞ்சம் கருத்தினிலே**
**முட்டாத பூசையன்றோ குருநாதன் மொழிந்ததுவே''.**

''விந்து நாதத்தில் இயங்கும் சக்கரத்தை வெட்ட முடியுமோ வாயால் பேசி உரைக்க முடியுமோ? எமக்குள் பிராணவாயுவோடு நீர் வழங்குவதையும், தேன் ஊறுவதையும், சீவன் சிவலிங்கமாய் மாறுவதையும் பஞ்சாக்கர மந்திரம் ஓதுபவர்களே அறிவார்கள். இது ஒரு பெரும் விந்தை, அற்புதம்''.

''வழுதலை வித்திட்டேன் பாகல் முளைத்தது
புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது
தொழுது கொண்டு ஓடினர் தோட்டக் குடிகள்
முழுதும் பழுத்தது வாழைக்கனியே'' (திருமந்திரம் - 2869)

கத்தரி வித்தை நாட்ட பாக கொடி முளைத்தது. மண்ணைத் தோண்ட பூசணிப்பூ வெளிப்பட்டது. என் மனத்தில் குடிகொண்டிருக்கும் பல கற்பனைகளும் நாங்கள் போகிறோம் போகிறோமென்று தொழுது கொண்டு ஓடினர். மெய்ப்பொருளைப் பற்றிய அறிவு ஞானம் பழுத்து அமிர்தம் விளைந்தது.

''தத்துவமானது தன்வழி நின்றிடில்
வித்தகனாகி விளங்கி இருக்கலாம்
பொய்த் தவமாம் அவை போயிடும் அவ்வழி
தத்துவமாவது அகார எழுத்தே''. (திருமந்திரம் - 2180)

தன் ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்து வழியான பஞ்சாக்சர மந்திரத்தை ஓதி நின்றிடில் மெய்ப்பொருளை உணர்ந்த ஞானி உலகில் வாழலாம். உலக மாயைச் சிக்குகள் கழன்றுவிடும். மெய்ப்பொருளாவது கருவில் மிதித்த கமலப் பாதமான அகார எழுத்து. அகார எழுத்தே விரிந்து பிரபஞ்சத்தில் சகல தோற்றங்களையும் படைத்துக் காத்து நிற்கும் மெய்ப்பொருள். அவனே இறைவன். திருமந்திரம் கூறுகின்றது.

''ஆரும் அறியார் அகாரம் அலனென்று
பாரும் உகாரம் பரந்திட்ட நாயகி
தாரம் இரண்டும் தரணி முழுதுமாய்
மாறி எழுந்திடுந் ஓசைய தாமே''. (திருமந்திரம் - 1751)

அகாரத்தை இறைவனாகவும், அதிலிருந்து எழுந்த உகாரத்தை இறைவி, சத்தி சக்தியாகவும், இரண்டும் சேர்ந்து பிரபஞ்சத்தைப் படைத்த ஓமெனும் ஓசையெனக் கூறுகின்றது.

''அகாரமுதலாய் அனைத்துமாய் நிற்கும்
உகாரமுதலாய் உயிர்ப்பு எய்தி நிற்கும்
அகாரம் உகாரம் இரண்டும் அறியில்
அகார உகாரம் இலிங்கம தாமே''. (திருமந்திரம் - 1753)

திருவள்ளுவரும் அகர எழுத்தை முதல் எழுத்தாகக் கொண்ட ஐந்து எழுத்துக்களுமே ஆதிபகவன் முதல் உலகமென்று கூறுகின்றார்.

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு''.

திருமூலரும் பின்வரும் திருமந்திரத்தால் இந்த உண்மையையே வலியுறுத்துகின்றார்:

**''அஞ்செழுத்தால் ஐந்து பூதம் படைத்தனன்**
**அஞ்செழுத்தாற் பல யோனி படைத்தனன்**
**அஞ்செழுத்தால் இவ் அகலிடம் தாங்கினன்**
**அஞ்செழுத்தாலே அமர்ந்து நின்றானே''.** **(திருமந்திரம் - 966)**

அகாரம், இகாரம், உகாரம், ஓங்காரம், மகாரமாகிய ஐந்து எழுத்துக்களில் இயங்கும் ஆத்மா ''ஓம்'' என்னும் இறை நாமத்தை, பஞ்சாக்கர மந்திரத்தை ஒலிக்கின்றது. இம்மந்திரத்தைப் பற்றி ஓதினால் இவ்வுலக வாழ்வில் பேரின்பமும் ஆத்ம விமோசனமும் உண்டாகுமென்று எல்லா ஞானிகளும், முனிவர்களும், ரிஷிகளும் விளக்கமாகக் கூறியுள்ளார்கள். நாமும் இந்த உபதேசத்தை அனுட்டித்து உய்வோமாக.



# 31. ''அருளாளர் பெற்ற அறிவு''

மனிதன் ஆறறிவு பெற்றவன். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத் தனது அறிவாற்றலைப் பயன்படுத்தித் தான் வாழும் நிலையை உயர்த்திக் கொள்ளப் பல்வேறு முயற்சிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வெற்றியும் கண்டுள்ளான். இயற்கை ஆற்றலின் தன்மையையும், விதிமுறைகளையும் கண்டறிந்து அவற்றைத்தனது வாழ்க்கையின் வளத்திற்காக நன்றாகப் பயன்படுத்தியுள்ளான். ''இயற்கையின் குணாதிசயங்களைக் கண்டுகொண்டு அவற்றை ஆளுக'' என்னும் கோட்பாடே நமது நாகரிகத்தின் வியப்புமிக்க சாதனைகளுக்கு மையமாக இருந்து வருகிறது.

விஞ்ஞானத் துறையில் மனிதன் புரிந்துள்ள சாதனைகள் பகுத்தறிவின் அடிப்படையில் அமைந்துள்ளன. இந்த அறிவினைப் பெற நாம், நமது உடல், அதைச் சார்ந்த கருவிகள், உட்கருவிகள், ஐம்புலன்கள் போன்றவற்றைப் பயன்படுத்துகிறோம். இக்கருவிகள் புறத்தோற்றத்தை நோக்கி இயல்பாகவே செல்கின்றன. புறத்தோற்றத்தின் விஷய அனுபவத்தில் ஈடுபடுகின்றன. ஒவ்வொரு விநாடியும் இந்த விஷய அனுபவங்கள் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய கருவிகளைத் தாக்குகின்றன. ஐம்பொறிகள் வழியாக இந்தத் தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மனம் விஷய அனுபவங்களைச் சேகரிக்க, புத்தி அவற்றைப் பாகுபடுத்த, அகங்காரம் அவற்றிற்கு ஒரு எழுச்சியைக் கொடுக்க, சித்தம் அவற்றிற்கு ஒரு விளக்கம் கொடுத்துக் கிடைத்த அனுபவத்தை அறிவாக்க, அந்த அறிவு நமக்கு ''நாம்'', ''நமது'' என்கிற உணர்வினைக் கொடுத்து நம்மை ஒருவிதமான மாயையில் ஆழ்த்துகின்றது. நமது அன்றாட வாழ்வில் நாம் ஏதாவது ஒரு சிறிய சாதனையைப் புரிந்திருந்தாலும் அது நமது சாதனை, அதை நாம் புரிந்தோம் என்று எண்ணி, மகிழ்ச்சியடைந்து, பெருமிதம் கொண்டு நம்மைப் பிறரிடமிருந்து பிரித்துக் கொண்டு, வேற்றுமை காட்டி நமக்கென்று ஒரு தனித்தன்மையை நாம் சதா வலியுறுத்தி வருவதும் இந்தக் கருவி, கரண இயக்கத்தின் அடிப்படையில்தான். இந்த இயக்கம் நமது உடலில் நடைபெறுகிறது. நமது உடல் ஐம்பூதங்களால் ஆகியது. அங்கே ஞான இந்திரியங்களாகிய ஐந்து பறவைகள் தங்குகின்றன. அவை ஐம்புலன்கள்வழி சதா செல்லுகின்றன. இத்துடன் நமது உடலில் ஐந்து கன்மேந்திரியங்கள் உள்ளன. அவை புரியும் செயல்களும் உடலுக்கு அனுபவத்தைச்

சேர்க்கின்றன. இவ்வாறு ஒரு இயக்கம் நடைபெறுகின்றதென்றால் அதை நடத்த ஒருவன் வேண்டும். அதுவே உடலை இருப்பிடமாகக் கொண்ட உயிராகும். உயிரானது உடலின் பல்வகைக் கருவிகளைத் தனது இயக்கத்திற்குப் பயன்படுத்தி வருகின்றது. இதைத் திருமந்திரம் அழகாக எடுத்துக்காட்டுகிறது.

**"புலம் ஐந்து புள் ஐந்து புட்சென்று மேயும்**
**நிலம் ஐந்து நீர் ஐந்து நீர்மையும் ஐந்து**
**குலமொன்று கோல்கொண்டு மேய்ப்பான் ஒருவன்**
**உலம்வந்து போம்வழி யொன்பது தானே".**

**(திருமந்திரம் - 2025)**

கருவிகள் கருவிகளே. அவை சடப்பொருள்கள் தானாக இயங்கமாட்டா. உயிரின் அறிவாற்றலால் அவை இயங்குகின்றன. எனினும், கருவி கரணங்களோடு உயிரானது இணைந்து செயல்படும்பொழுது, கருவி கரணங்களே தானாகவே இயங்குவது போன்ற ஒரு பிரமை நமக்குத் தோன்றுகிறது. உயிர் வேறு. கருவி கரணங்கள் வேறு என்கிற நிலை அறியப்படாதபொழுது கருவி கரணங்களே தன்னிச்சையாக செயல்படுகின்றன என்கிற மயக்கம் நம்முன் எழுகிறது. உயிருக்குக்கருவி கரணங்கள் தேவை. கருவி கரணங்கள் இல்லாதபொழுது உயிர் இருளில் மூழ்கிக் கிடக்கும். இறைவன் அருளால் உயிருடன் உடலும், கருவி கரணங்களும் பிறப்பின்போது சேருவதால் உயிருக்கு விளக்கம் பெறக்கூடிய வாய்ப்புக்கிட்டுகிறது. விஷய அனுபவங்களைப் பற்றிய அறிவைப் பெறுவதற்கும் தகுதி கிடைக்கின்றது. விஷய அனுபவங்களையே உண்மையானவை என்றும், அவற்றைப்பெற வசதி செய்து கொடுக்கும் உடம்பும் கருவிகளுமே உண்மையானவை என்றும் ஒருவித விபரீத உணர்வும் உயிருக்குத்தோன்றத் தொடங்குகின்றது. நாய் வாலாட்டும். வால் நாயை ஆட்டுமா? உடம்பைப் பற்றி நம்முடைய மனத்திலே தோன்றும் விபரீத எண்ணம் வால் நாயை ஆட்டுவது போல் உள்ளது.

கருவி கரணங்கள் வழியாக நாம் பெறும் அறிவு உயிரைச் சேர்ந்த அறிவாகும். உயிருக்கு அறியும் தன்மை உண்டு. உயிரே அறிவுமயம் எனவும் கொள்ளலாம். ஆனால், உயிரானது எத்தகைய அறிவினைப் பெறுகிறது என்பது உயிரின் பக்குவ நிலையைப் பொறுத்திருக்கின்றது.

ஆகவே, நாம் பெறும் விஷய அனுபவங்களைப் பற்றிய அறிவு உயிரின் திறனுக்கேற்ப நிற்கும். இந்த அறிவு நமது கல்வி கேள்விகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. மனிதனின் ஆக்கபூர்வமான சக்தி இந்த அறிவைப் பயன்படுத்திக் கொண்டு மனிதன் பல துறைகளில் முன்னேற வழிவகை செய்கிறது. சமுதாய வளர்ச்சிக்கு இந்த அறிவே மையமாகிறது. விஷய அனுபவங்களின் அறிவு விஞ்ஞானம், கலை, பண்பாடு ஆகிய துறைகளில் மனிதன் பல பிரமிக்கத்தக்க சாதனைகளைப்புரிய

பயன்பட்டுள்ளது. அறிவே ஆற்றல் என்று மேலை நாட்டு அறிஞர்கள் கூறும் அளவுக்கு ஐம்பொறிகள் வாயிலாகக் கிடைக்கக்கூடிய அனுபவ அறிவு மனிதனின் சிந்தனையில் பெருமைக்குரிய இடத்தைப் பெற்றிருக்கிறது.

ஆனால், இந்த அறிவு ஒரு சிறிய வட்டத்திற்குள்தான் இயங்கும். விஷய அனுபவங்கள் புலன், பொறிகளின் செயல்களுக்கேற்ப உயிரை வந்து சேரும். பொறி, புலன்கள் உடலைச் சார்ந்த கருவிகளாதலால் அவற்றின் செயல்கள் உடலின் நிலையைப் பொறுத்திருக்கும். உடலை உயிர் இயக்கும் காரணத்தினால் உயிரின் நிலை கருவி கரணங்களின் செய்கைகளை வெகுவாகப்பாதிக்கும். உடலும், அதன் கருவி கரணங்களும் நிலையற்றவை. அழியும் தன்மை பெற்றவை. ஆக, அவற்றின் வழியாகப் பெறக்கூடிய அனுபவமும், அறிவும் நிலைத்து நிற்காது. அவை காலத்தின் போக்கால் கட்டுப்படுத்தப்படும். காலம் என்பது நிகழ்வதையும், நிகழ்ந்ததையும், நிகழப் போவதையும் வேறுபடுத்தி நமது சித்தத்திற்கு அளிக்கும்பொழுது விஷய அறிவும் காலத்தின் கட்டுப்பாட்டால் பாதிக்கப்படும். விஷய அனுபவங்களுக்கு கலை எழுச்சியூட்டும். அனுபவங்களின் தன்மை உயிரின் கன்ம பலத்தின் அடிப்படையில் அமையும். கலையும் நியதியும் உயிரானது பல பிறவிகளில் பெற்ற வினைக்கூட்டங்களும் பொறிபுலன்களின், காட்சி அனுபவங்களின் உண்மைத் தன்மையை மாற்றியும் விடும்.

விஷய அறிவு, பொதுவாக, பொருட்களைப் பற்றியதாக இருக்கும். ஏனென்றால், ஐம்பொறிகளும், ஐம்புலன்களும் புறத்தேயுள்ள பொருட்களின் மீது இயல்பாகவே கூடுதலாகத் தங்களுடைய நாட்டத்தைச் செலுத்தும். கருவி கரணங்கள் பொருட்களைப் பற்றிய அறிவினைப் பெறுவது நேரிடையாகவும் இருக்கலாம். மறைமுகமாகவும் இருக்கலாம். கண்ணால் பார்த்தும், காதால் கேட்டும் பொருட்களைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம். அத்துடன் சூக்குமமாக இருக்கும் பொருட்களைப் பற்றியும் யூகித்தல், அனுமானித்தல் போன்ற வழிகளில் அறிந்து கொள்ளலாம். ஒரு பொருளைப் பார்க்கிறோம். நேராகத் தெரிந்து கொள்கிறோம். அப்பொருளிலுள்ள கோடிக்கணக்கான அணுக்களை நாம் பார்க்க முடிவதில்லை. ஆனால், அதற்காக நிறுவப்பட்ட கருவிகளை வைத்து அவற்றைப் பார்த்துக் கொள்கின்றோம். இல்லாவிட்டால் அவற்றினுடைய தன்மையைப் பற்றி மறைமுகமாகத் தெரிந்து கொள்கின்றோம். பௌதிகம், இரசாயனம், தொழில்நுட்பக் கல்வி போன்ற பலவிதமான துறைகளில் நாம் இன்று பெற்றுள்ள அறிவு நமது பொறிகள், புலன்கள், மனம், புத்தி, சித்தம், அகங்காரங்கள் ஆகிய உட்கருவிகள் இணைந்து செயல்பட்டதன் விளைவே ஆகும். பொறி, புலன்களிலிருந்து வெளிப்படும் அறிவு மீண்டும் மீண்டும் அவற்றையே வலுப்படுத்த முயலும். அதனால் கிடைக்கக்கூடிய இன்பங்களை வளர்த்தும், துன்பங்களைத் தவிர்த்தும் வாழ்க்கையைப்புலன் அனுபவப் பாதையிலே செலுத்துவது உயிருக்கு இயல்பாகி விடுகிறது. இந்த அறிவினால் உயிருக்கு உடல் மீது உள்ள பாசம் வளரும்.

மேற்கூறிய அறிவைத் தவிர வேறு எத்தகைய அறிவும் இல்லை என்று நமது உள்ளத்திலே ஓர் எண்ணம் எழுவதும், அந்த அறிவின் விளைவே என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும். உண்மையில் வேறு ஒரு அறிவு உள்ளது. நாம் இப்பொழுது பெற்றுள்ள அறிவைச் சிற்றறிவு என்றும், பெற்றிராத அறிவைப் பேரறிவு என்றும் குறிப்பிடுவது வழக்கம். சாந்தோக்கிய உபநிடதத்தில் ஒரு நிகழ்ச்சியில் இதைப் ப ற்றிய உரையாடல் ஒன்று வருகிறது. சனத்குமார முனிவரிடம் நாரதர் சென்று தனக்குத் தக்க அறிவினைப்புகட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றார். ''உனக்குத் தெரிந்ததைப் பற்றிச் சொல், தெரியாததைப் பற்றிப் பின்னர் விளக்குகின்றேன்'' என்கிறார் சனத்குமாரர்.

''எனக்கு வேதங்கள் தெரியும். இதிகாசப் புராணங்கள் தெரியும், இலக்கணம் கற்றுள்ளேன், கணிதம், தத்துவம், விஞ்ஞானம், பௌதிகம், கலைகள் ஆகியவெல்லாம் நன்கு தெரியும். இவற்றையெல்லாம் நான் கற்றிருந்தும் எனது உள்ளத்திலே ஒரு குறை உண்டு. எல்லாவற்றையும் நான் முழுமையாகத் தெரிந்துகொண்டதாக ஓர் உணர்வினைப் பெறவில்லை'' என்கிறார் நாரதர்.

''நீ கற்றதெல்லாம் பெயரளவில்'' என்று சனத்குமாரர் பதிலளிக்கிறார்.

ஔவையார் கற்றதெல்லாம் கைம்மண் அளவு என்றார். சனத்குமாரர் கற்றதெல்லாம் பெயரளவில் என்கிறார்.

ஒவ்வொரு பொருளுக்கும் உருவம் உண்டு, பெயரும் உண்டு. பெயரையும் உருவத்தையும் வைத்து அப்பொருளின் தன்மையை, இடத்தை, காலத்தை நிர்ணயித்துக் கொள்கின்றோம். பெயரும் உருவமும் ஒரு பொருளைச் சுட்டிக் காண்பிக்கின்றன. அதாவது, அவற்றால் ஒரு பொருள் உண்டு என்பதை அறிந்து கொள்ள வேண்டும். நாரதர் கற்ற கல்வி பெயரளவில்தான் என்று சனத்குமாரர் கூறும்பொழுது அந்தக் கல்விக்கு அப்பால் வேறொரு கல்வி உள்ளது. வேறொரு அறிவு உள்ளது. அந்த அறிவே இந்தக் கல்விக்கு அதனுடைய விசேஷத் தன்மையைக் கொடுக்கின்றது என்கிற உணர்வு நம்முள் தோன்றுகிறது. பெயர், பெயரிலிருந்து வாக்கு, வாக்கிலிருந்து மனம், புத்தி, சித்தம், தியானம், ஞானம், வலிமை, உணவு, நீர், நெருப்பு, ஆகாயம், நினைவாற்றல், இச்சை, பிராணன், வாய்மை, சிரத்தை, தவம் என்றெல்லாம் படிப்படியாகச் சனத்குமாரர் நாரதருக்கு அவர் பெற்ற அறிவின் தன்மையை விளக்கி, பரம்பொருள் விளக்கத்திற்கு அழைத்துச் சென்று பரம்பொருளைப் பற்றிய அறிவே, பரம்பொருளே எல்லாவற்றிற்கும் மேலான அறிவென உள்ளத்தில் பதிய வைக்கின்றார்.

பரம்பொருளைப் பற்றிய அறிவு முழுமையான அறிவு எனப்படும். நாம் கருவி கரணங்களைப் பயன்படுத்திப் பெறும் அறிவு பகுதி அறிவாகும். விஞ்ஞான அறிவு நமக்குக் கொடுக்கும் அறிவு பகுதி அறிவுதான். ஒரு பொருளைப் பற்றி நாம் தொடர்ந்து விசாரித்துக் கொண்டே போனால் அந்த

விசாரணையின் வழியாக நமக்குப்பற்பல அறிவு கிட்டலாம். ஆனால், இத்தகைய அறிவு உடலுடன் இயங்கும் கருவி கரணங்களின் வழியாகப் பெறப்படும் அறிவாகையால் இது இடம், காலம் முதலியவற்றால் கட்டுப்படுத்தப்பட்டது. நான் என்கிற முனைப்பின் அழுத்தத்தால் வெளிப்படும் அறிவின் திறன் நம்முடைய குறைந்த ஆற்றலையே பிரதிபலிக்கும் தன்மையுடையது. முழு அறிவு என்பது ஒரு மிகப்பெரிய வட்டமாகும். பகுதி அறிவு இந்த வட்டத்தில் எங்கோ ஒரு சிறிய பகுதியை இடம் கொண்டதாகும்.

சிற்றறிவு என்றுமே முழுமையான அறிவாகாது. அதே நேரத்தில் முழு அறிவாகிய பெரிய வட்டம் சிற்றறிவுப் பகுதிகளைத் தன்னுள் அடக்கி நிற்கும். முழு அறிவாகிய பெரிய வட்டத்தின் தன்மையை மாற்ற முடியாது. அது நிலையான தன்மை பெற்றது. சிற்றறிவுப் பகுதிகளின் தன்மை மாறிக் கொண்டே இருக்கும். அதையே விஞ்ஞான வளர்ச்சி என்கின்றோம். விஞ்ஞான அறிவு வளர வளர நாம் முன்பு பெற்றிருந்த அறிவை ஆழப்படுத்தியும், அகலப்படுத்தியும் புதிய உண்மைகளைச் சேகரித்துக் கொள்கின்றோம். ஆனாலும் இவ்வாறு நாம் பெறும் அறிவு முழுமையான அறிவாகாது. நம்மை ஒரு மயக்கத்திலே ஆழ்த்தும். அத்தகைய அறிவின் வளர்ச்சி ஆற்று வெள்ளத்தோடு போகும் பொருட்களைப்போல நம்மைக் கட்டுக்கடங்காத நிலைக்கு அழைத்துச் செல்லும்.

இதனை

**"அறிவு ஐம்புலனுட னேநான்ற தாகி**
**நெறியறி யாது உற்ற நீராழம் போல"** (திருமந்திரம் - 119)

என்பார் திருமூலர்.

இந்த அறிவைப் பெறுவதும், இந்த அறிவினால் இன்பத் துன்பங்களை அநாதி காலம் முதல் தாங்கி அனுபவிப்பதும் உயிராகும். உயிர் அறிவுடைய பொருள்தான். ஆனால், அதனுடைய அறிவாற்றல் சிறியது. ஐந்து இந்திரியங்கள், ஐம்புலன்கள், உட்கருவிகள் போன்றவை இல்லாத இடத்தில் உயிரின் அறிவாற்றல் இயங்குவதற்கு வழியே இல்லை. உயிரினுடைய அறிவாற்றல் வட்டம் சிறியது. பேரறிவாகிய இறைவனின் வட்டம் நமது கற்பனைக்கு எட்டாத அளவுக்குப் பெரியது. இதை உணரும்பொழுது நாமே அறிவு, நமது அறிவின் சாதனையே சாதனை என்றெல்லாம் நாம் இறுமாப்படைவது நமது சிறுமையை எடுத்துக் காட்டுகின்றது.

நாமே எல்லா அறிவுக்கும் சொந்தக்காரர்கள் என்பது ஒரு பெரிய வேடிக்கை அல்லவா என்கிறது திருவருட்பயன்.

**"பொறிஇன்றி ஒன்றும் புணராத புந்திக்(கு)**
**அறி(வு)என்ற பேர்நன்(று) அற".**

பேரறிவினைப் பற்றித்தம்முள் உணர்ந்துகொண்ட அருளாளர்கள் இத்துடன் நிற்பதில்லை. முழுமையான அறிவே உண்மையான அறிவென்றும் மற்றதெல்லாம் அறியாமை என்றும் கூறுகிறார்கள். ஏனெனில், உடலின் கருவி கரணங்களைப் பற்றி நாம் பெறும் அறிவு உடலையே சார்ந்திருக்கும். ஆகையால் உடலைப் பற்றிய அறிவு பரம்பொருளைப் பற்றிய ஒரு அறியாமை நிலையில் நம்மைத் தள்ளி விடும். ஒன்றைப் பார்க்கும்பொழுது மற்றதைப் பார்க்க உள்ளத்திலே ஆவல் எழும்பாது. அந்த அறிவு பாசத்தோடு சம்பந்தப்பட்ட அறிவாகும். அதாவது உயிரைச் சார்ந்த ஆணவம், கன்மம், மாயை போன்ற மலங்கள் அந்த அறிவுக்கு ஒரு உருவத்தைக் கொடுக்கின்றன. நமது மனம் அந்த உருவத்திலே ஈடுபட்டு விடுகின்றது. உருவம் எத்தகைய மூலப்பொருளினால் செய்யப்பட்டிருக்கின்றது என்று அறிந்துகொள்ள நமக்கு ஆவல் எழுவதில்லை. ஆகவே, உருவத்தைப் பற்றிய அறிவு உண்மையிலேயே ஒரு அறியாமையாகும். யானைப் பொம்மையைப் பார்க்கும் ஒரு குழந்தைக்கு அது மரத்தால் செய்யப்பட்டுள்ளது என்கிற உணர்வு தோன்றுவதில்லை. பல தங்க ஆபரணங்களைப் பார்த்து அதிசயப்பட்டு நிற்கும் பெண்மணிக்கு அவற்றின் மூலப்பொருள் தங்கமே என்கிற உண்மை தோன்றுவதில்லை. அந்த அளவுக்கு அவள் அந்த ஆபரணங்களின் அழகில், வேலைப்பாட்டில் தனது மனத்தைப் பறிகொடுத்து விடுகிறாள். உண்மை அறிவின் முன் நாம் பெற்றுள்ள அறிவெல்லாம் அறியாமைதான் என்கிறார் திருமூலர். இந்த அறிவு, அறியாமை ஆகிய நிலைகளுக்கு அப்பால் ஒரு நிலை உள்ளது. அதுவே ஒரு பேரறிவு நிலை, பேரனுபவ நிலையுமாகும். அந்தப் பேரறிவு நிலை கதிரவனின் ஒளி போல மற்ற எல்லா அறிவு நிலைகளையும் இருளிலிருந்து மீட்டு பிரகாசப்படுத்துகிறது. அந்த அறிவு நிலைக்குச் சமானம் வேறொன்றுமில்லை. அது பேரானந்தத்தைக் கொடுக்கும். திருமூலர் கூறுவது போலவே அது ஓர் அழகிய நிலையாகும். தன்னிலை விளங்கும். பிற உயிர்களுடைய நிலையும் தெளிவாகும். நமது உயிரின் இயக்கத்திற்கான மூலகாரணங்களாகிய ஆணவம், கன்மம், மாயை போன்றவைகளுக்கும் சுத்தமான விளக்கம் கிடைக்கும்.

**"அறிவு அறிவுஎன்று அங்கு அரற்றும் உலகம்**
**அறிவு அறியாமை யாரும் அறியார்**
**அறிவு அறியாமை கடந்தறி வானால்**
**அறிவு அறியாமை யழகிய வாறே".** **(திருமந்திரம் - 2362)**

இன்றைய உலகில் கல்விக்கு ஒரு பெரிய இடத்தை நாம் கொடுத்திருக்கின்றோம். கல்விக் கூடங்களில் விஞ்ஞானத்தைப் பற்றிய கல்வி முதலிடம் பெறுகிறது. விஞ்ஞானத்தை மேலும் மேலும் கற்று, விஞ்ஞானக் கல்வியை வாழ்க்கை இன்பத்திற்காகப் பயன்படுத்தி, வசதிகளைப் பெருக்கிக் கொள்வதே ஒரு சிறந்த குறிக்கோளாக வைக்கப்பட்டுள்ளது. இத்தகைய கல்வியால் ஒழுக்கமோ, அடக்கமோ,

நேர்மையோ, சீலமோ கற்பவர்களுக்குக் கிடைக்குமா என்று நாம் பெரிதும் கவலைப்படுவதில்லை. அதற்கு மேலாக நம்முடைய உள்ளங்களிலே பரம்பொருளைப் பற்றிய விளக்கம் கிடைக்குமா என்றும், நாம் கற்கும் கல்வியின் பயனாக அமைய வேண்டுமென்றும் நினைத்துக் கொள்வதில்லை. ஆனால், நமது முன்னோர்கள் கல்வியின் பயன் இறை உணர்வு என்றும், அந்த உணர்வின் விளைவு ஒழுக்கம் என்றும், அந்த ஒழுக்கத்தைப் பெற்றவர்கள் நற்கல்வி கற்றவர்கள் என்றும் அறிவுறுத்தினர். **''கரிப்பு (உவர்ப்பு) அறியா மிகும் கல்வி கற்றேனே''** என்றார் திருமூலர். **''துணையது வாய்வருந் தூயநற் கல்வியே''** என்பதும் அவரது திருவாக்காகும். அத்தகைய கல்வியைப் பெறுவதே நமது குறிக்கோளாக அமைய வேண்டும். அத்தகைய அறிவினைப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளாமல் சிற்றறிவினைப் பெருக்கிக் கொண்டு போவதில் பயனில்லை என்கிறார் திருமூலர். மாறாக நம்முடைய முயற்சிகள் இறை அறிவைப் பெறுவதில் செலுத்தப்பட வேண்டும். நம்முடைய முயற்சிகளின் பலனாக, இறைவனுடைய திருவருளால் பரம்பொருளைப் பற்றிய ஞானத்தை நாம் பெற்றோமாகில் எல்லாவற்றையும் அறிந்த ஒரு நிலையை நாமும் பெற்றுவிடலாமே என்கிறார் திருமூலர். இந்த அறிவே பரஞானமாகும். திருவருள் வைப்பினால் நிகழ்கின்றது. இந்த அறிவினை நாம் உள்ளுணர்வாகப் பெறுகின்றோம். இந்த அறிவு நமக்கு அனுபவத்தால் கிடைக்கின்றது.

**''எல்லாம் அறியும் அறிவு தனைவிட்டு**
**எல்லாம் அறிந்தும் இலாபமங் கில்லை**
**எல்லாம் அறிந்த அறிவினை நானென்னில்**
**எல்லாம் அறிந்த இறையென லாமே''.** **(திருமந்திரம் - 2596)**

அருளாளர்கள், இறை உணர்வாளர்கள் இந்த அனுபவத்தைப் பெற்றிருந்தனர். புறக்கண்களால் காண முடியாத ஒன்றை அகக்கண்களால் கண்டு பேரின்பம் பெற்றார்கள். புறக்கருவிகளால் இந்த அனுபவத்தைப் பெறுவது இயலாது. சிற்றறிவு வட்டத்திற்கு அப்பால் நிற்கும் ஒன்றைச் சிற்றறிவினால் பிடித்துவிட முடியாது.

**''முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்**
**அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்''**

என்கிறது திருமந்திரம் (2944)

பரம்பொருளைப் பற்றிய ஞானக்கல்வி அருளாளர்களுக்கு உள் அனுபவமாகக் கிடைக்கின்றது. இது திருவருளால் கிடைத்த காரணத்தால் அருள் அனுபவமாகவும் உள்ளத்துள்ளே நின்று ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றது திருவருளால் அந்த அனுபவத்திற்கான தகுதியும் பக்குவமும் பெற்றவர்கள் அந்த அனுபவத்தைப் பெறுகின்றனர்.

''திருவருளால் விளக்கம் பெற்ற அகக்கண்ணைத் திறந்து பார்த்தேன் - அவ்வாறு திறந்து பார்க்கும்பொழுது ஒப்பற்ற தலைவன் சிவமாகிய பரம்பொருள் என் உள்ளத்தில் சோதிமயமாக நிறைந்திருந்து என்னை அறிவுமயமானவன் என்று உணர்த்தி அருளினான்'' எனத் திருமூலர் தனது அனுபவத்தைச் சொல்லுகின்றார்.

**''மின்னுற்ற சிந்தை விழித்தேன் விழித்தலுந்**
**தன்னுற்ற சோதி தலைவன் இணையிலி**
**பொன்னுற்ற மேனிப் புரிசடை நந்தியும்**
**என்னுற் றறிவனான் என்விழித் தானே''.**

அருள் அனுபவம் வாக்கிற்கும், ஐம்புலன்களுக்கும் அப்பாற்பட்டது. பரம்பொருளை அழியும் பொருள்களால் அளக்க முடியாது. அருள் அனுபவம் பெற்ற பெரியோர்கள் வியப்புண்டு, அன்பு மேலிட்டு, பேச்சற்ற நிலைக்கு வந்து விடுகின்றனர். அந்த நிலையையே அவர்கள் பேரின்ப நிலையாகக் கருதுகிறார்கள். **''பெற்றார் உலகுடன் பேசாப் பெருமையே''** என்பார் திருமூலர். அருள் அனுபவத்தை வெறும் சொற்களாலும், மொழிகளாலும் மட்டும் விளக்கிவிட முடியாது. இறைவனைத் தம்முள் உணர்ந்தபின்னர் பேரின்ப வெள்ளத்தில் திளைத்து நிற்கும் இறை உணர்வாளர்கள் தங்களுடைய அனுபவத்தைச் சம்பிரதாய முறையில் மொழியைப் பயன்படுத்தி மக்களுக்குத் தெளிவாக்க முற்பட்டாலும், அவர்களுடைய உள்ளக்கிடக்கை, பண்பட்ட உணர்வினை மொழிகள் முழுமையாகப் பிரதிபலிக்காது என்பது அறிவாளர்கள் நமக்குக் கூறும் உண்மையாகும். எனினும், மக்களுக்குத் தங்களது உணர்வைப் பகிர்ந்து கொடுக்க வேண்டிய காரணத்தினால் அவர்கள் மொழியினைக் கையாளுகிறார்கள். உண்மையில் **''சும்மா இருக்கும் சுகம்''** மொழிக்கு அப்பாற்பட்டது. இந்த நிலையில் அருள் அனுபவத்தைச் சாத்திரங்களிடமிருந்தும், நூல்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ள முடியாது. சாத்திர நூல்கள் ஒரு வழியை, பாதையைக் காண்பித்துக் கொடுக்கலாம். ஆனால், சென்று அடைய வேண்டிய இடம் சாதகனுடைய சாதனையைப் பொறுத்திருக்கின்றது. நூல் அறிவு பெற்று மட்டும் இறைவனை அடைய முடியாது என்பது அருளாளர்களுடைய அனுபவமாகும். தவம், சீலம், நோன்பு போன்றவற்றின் அடிப்படையில் இறைவனை அடைய வேண்டிய பல கோட்பாடுகளையும் நெறிமுறைகளையும், நேர்மையுடனும், முழுமனதுடனும் கையாளும்போது வந்தடையக்கூடிய இன்பம் இறை இன்பமாகும் என்பது காரைக்கால் அம்மையாருடைய அனுபவமாகும். அந்த நிலையில் இறைவனை எந்தக் கோலத்தில், எந்த வடிவாக எண்ணியும், பார்த்தும் எத்தகைய தவம் செய்தாலும் அந்தக் கோலத்தில், அந்த வடிவிலேயே வந்து இறைவன் அருள் புரிவான் என்கிற உண்மையை நமக்குத் தெளிவாக்குகின்றார் காரைக்கால் அம்மையார்.

"நூல்அறிவு பேசி நுழைவுஇலா தார்திரிக!
நீல மணிமிற்றான் நீர்மையே - மேல்உவந்து
எக்கோலத்து எவ்வுருவாய் எத்தவங்கள் செய்வோர்க்கும்
அக்கோலத்து அவ்வுருவே ஆம்". (அற்புதத் திருவந்தாதி)

"ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா. சுடர் விட்டுளன் எங்கள் சோதி" என்றார் திருஞானசம்பந்தர்.

இறை அனுபவம் இறை அருளால்தான் கிட்டும். இறை அருள் ஆசான் உருவமாக எழுந்தருளி, உபதேசித்தருளி பக்குவப்பட்ட உயிருக்கு இறை அனுபவத்தைக் கூட்டி வைக்கும். எல்லாவற்றிற்கும் காரணமான பொருளை ஏடுகள், சுவடிகள் மூலமாக மட்டும் அனுபவித்துவிட முடியாது.

"காட்டுங் குறியும் கடந்தவர் காரணம்
ஏட்டின் புறத்தில் எழுதிவைத் தென்பயன்
கூட்டுங் குருநந்தி கூட்டிடி னல்லது
ஆட்டின் கழுத்தில் அதர்கிடந் தற்றே". (திருமந்திரம் - 2937)

எழுத்தில் அடங்கி நிற்காத பரம்பொருளை விரிவுபடுத்திப்பேசவும், உரை செய்யவும் முயலுகின்றோம். இந்த முயற்சி வெற்றி பெறுமா? பெறாது. வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. ஒரு கரையில் நின்றுகொண்டு வெள்ளத்தைப் பார்க்கலாம். மறுகரை நமது கண்ணுக்கு எட்டாத அளவுக்கு வெள்ளம் ஓடுகிறது. அதேபோல உரையற்ற பரம்பொருளுக்கு உரை காண முயலுவது வீணான முயற்சியாகும். ஆனால், ஒன்று. இறைவன் நம்முடைய சிந்தைக்கு அகப்படக்கூடியவன்தான். ஆனால், அந்த சிந்தை எவ்வாறு இருக்க வேண்டும்? அது தெளிந்த சிந்தையாக இருக்க வேண்டும். திரையற்ற நீர்போல் சிந்தை தெளிந்திருக்கும்பொழுது அந்தச் சிந்தையில் இறைவன் வெளிப்படுவான். அதுவே உயர்ந்த தியான நிலையாகும். மோன சமாதியுமாகும். பேரின்பம் சுரக்கும் அனுபவ நிலையுமாகும்.

"உரையற்றது ஒன்றை உரைசெய்யும் ஊமர்காள்
கரையற்றது ஒன்றைக் கரைகாண லாகுமோ
திரையற்ற நீர்போல் சிந்தை தெளிவோர்க்குப்
புரையற் றிருந்தான் புரிசடை யோனே".

(திருமந்திரம் - 2955)

# 32. "ஆனந்த உணர்வு"

திருமந்திரம் ஓர் அருளாளரின் அனுபவக் களஞ்சியம். ஓர் ஒப்பற்ற ஞான நூல். யோக சாதனையைக் கோடிட்டுக் காண்பித்து ஞானத்திற்கான மார்க்கத்தையும் நமக்கு விளக்குகின்றது. திருமந்திரத்தில் யோகம் முக்கியமாகவே காணப்படுகிறது. யோகம் செய்வதற்கு நமது உடல் தேவைப்படுகிறது. இந்திரியங்களும் உட்கருவிகளும் யோகத்தில் பயன்படுத்தப்படுகின்றன. எனவே, உடலைப் பற்றிய பல்வேறு கூறுகள், பகுதிகள், இவை இயங்கும் தன்மை என்ற செய்திகளெல்லாம் திருமந்திரத்தில் நிறையக் காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் தற்கால விஞ்ஞான அறிவு பெறுவதற்காக நாம் பயன்படுத்தி வரும் கருவிகளை வைத்து மட்டுமே போதிய அனுபவத்தைப் பெற முடியாது. இந்த அனுபவத்தை நாம் பெற, நமக்கு நேரான வழிகளைக் காட்டிட, அதேபோல அனுபவங்களைப் பெற்ற மெய்யுணர்வாளர்களின் அருளும் தேவைப்படுகின்றது. அதுவே இறையருளுமாகும். ஆகவே, எல்லாவற்றிற்கும் மேலாக ஆன்மிக சாதனைக்கு இறையருள் இன்றியமையாததாக உள்ளது.

திருமந்திரம் அருள் அனுபவம் பெற்ற அனுபூதிமான்களின் நிலையைப் பல இடங்களில் விளங்குகின்றது. சில மந்திரங்களை மட்டும் இங்கே சுட்டிக் காண்பிப்பது இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

திருமூலர் பெருமான் பரம்பொருளைத் தம்முள் உணர்ந்தவர். அதன் விளைவாக இறைவன் திருவாக்கான சிவாகமத்தை எடுத்துரைக்கும் பேறுபெற்றவர். அண்டமெல்லாம் இறைவன் ஆற்றலால் இயங்குகின்றது. அதே இயக்கம் பிண்டத்திலும் நடைபெறுகிறது. பிண்டமென்றால் உடலாகிய தூலப்பொருள் மட்டுமன்று. உடலின் பல கூறுகள் சூக்கும நிலையிலும் இருக்கின்றன. அந்த நிலையில்தான் பரம்பொருளின் பேரறிவும், பேராற்றலும் அனுபவிக்கும் ஒரு வாய்ப்புக் கிடைக்கின்றது. இந்த அனுபவம் ஓர் தொடர் அனுபவம். சூக்கும நிலைக்கு ஒரு அனுபவம், தூல நிலைக்கு ஒரு அனுபவம் என்பதன்று. அருள் அனுபவம் உள்ளத்தின் உணர்வுகளைப்பல நிலைகளிலிருந்து தாக்குகிறது. இதுவே பரம்பொருளின் தரிசனமும் ஆகும். இந்த அனுபவத்திலே ஒன்றிப்போன உயிரானது கால

வரம்பிற்கு அப்பால் சென்று விடுகிறது. இந்த நிலையில் திருவருள், ஞானம், ஆற்றல் எல்லாம் ஒன்றே.

திருமூலர் பெருமான் இந்த அனுபவத்தை இரண்டு மந்திரங்களில் எடுத்துக்கூறுகின்றார். தனது உணர்வுகள் பரம்பொருளின் இயக்கத்தோடு ஒன்றிப்போகும்போது, தான் என்கிற நினைவு இழந்து, காலத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அனுபவங்கள் மறைந்து, நிலையான, ஒளி பெற்ற இடத்தில் தான் பொருந்தியிருந்ததாகவும் திருமூலர் கூறுகிறார்.

**''செப்புஞ் சிவாகமம் என்னும்அப் பேர்பெற்றும்**
**அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றுத்**
**தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்**
**ஒப்பில் எழுகோடி யுகம்இருந் தேனே''.** (திருமந்திரம் - 74)

**''இருந்தேன்இக் காயத்தே எண்ணிலி கோடி**
**இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே**
**இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே**
**இருந்தேன் என்நந்தி இணையடிக் கீழே''.** (திருமந்திரம் - 80)

அருவமாகிய பரம்பொருள் மனித உடம்புக்குள் புகுந்து நிற்கின்றது. உடலையும், உடலைச்சார்ந்த கருவிகளையும், புலன்களையும் தத்துவங்களையும் உயிரோடு இணைத்து இயக்குகிறது. உடம்புக்கு உள்ளும் வெளியிலும் பரம்பொருளின் அருளாட்சி நடைபெறுகின்றது. மெய்ப்பொருளைத் தம்முள்ளேயே அனுபவிப்பதைச் சிறந்த யோக சாதனையாகத் திருமூலரைப் போன்ற சித்தர்கள் எடுத்துக்கூறுகின்றனர். இந்தச் சாதனையில் உயிரும், உடலும், உணர்வுகளும் பரம்பொருளின் பேரறிவுடனும், பேராற்றலுடனும், சுருதியும், இலயமும்போல இணைந்து செயல்படுகின்றன. இந்தச் சேர்க்கையைப் பெறுவதே யோகத்தின் நோக்கமாகும். ''**மூலனை நாடி**'' என்கிறார் திருமூலர் பெருமான். திருவருளால் பஞ்சபூத இயக்கத்தைப் பற்றிய அறிவினைத்திருமூலர் பெறுகிறார். அந்த அறிவாகவும் மாறுகின்றார். **''சதாசிவனாயினேன்''.** இந்த அறிவின் சேர்க்கையால் மெய்ஞ்ஞானம் கிட்டுகிறது. இந்த மெய்ஞ்ஞானம் பெற்ற திருமூலர் சிவசொரூப தரிசனம் கிடைக்கப்பெற்று, சத்திய ஞானானந்தத்தில் நிலைத்து நிற்கிறார். இந்த உணர்வுகள் எல்லாமே ஞானியின் உள்ளத்தில் ஏற்படக்கூடிய உணர்வுகளே.

**''நந்திஅரு ளாலே மூலனை நாடிப்பின்**
**நந்திஅரு ளாலே சதாசிவ னாயினேன்**
**நந்திஅரு ளால்மெய்ஞ் ஞானத்துள் நண்ணினேன்**
**நந்திஅரு ளாலே நானிருந் தேனே''.** (திருமந்திரம் - 92)

உடலின் பொறிகளும், புலன்களும் செயற்படும்பொழுது நமக்குக் கிடைக்கக்கூடிய அனுபவங்கள் உண்மையில் நம் உள்ளேதான் உருவம்

பெறுகின்றன. இந்தக் கருவிகளின் செயல்களைக் கட்டுப்படுத்தும்பொழுது நம்முள்ளேயே வேறுசில அனுபவங்களும் தோன்றும். நமது ''பார்வை''யை உள்ளே திருப்பும்பொழுது இந்த அனுபவங்கள் கிடைக்கின்றன. பரம்பொருளை ஞானிகள் ''ஒளியாகவும்'', ''ஒலியாகவும்'' காண்கிறார்கள். பொறிகளைப் பயன்படுத்தி அனுபவிக்கும் ஒளியும் ஒலியும் ஒருவிதம். பொறிகளைக் கட்டுப்படுத்தி, அவற்றைச் செயலிழக்கச் செய்து அனுபவிக்கும் ஒளியும் ஒலியும் வேறுவிதம். புறத்தே உள்ள இருளைப்போல், உள்ளத்திலும் இருள் உண்டு. உள்ளத்தின் இருளை நீக்கி அகப்பொருளை நுகரும்பொழுது கிடைக்கும் அனுபவம் வேறு. அதைப்பிரணவத்தில் அடங்கும் மந்திரமாகத் திருமூலர் பெருமான் விளக்குகின்றார். அந்தப் பிரணவப் பொருளே உள்ளத்தின் இருளை நீக்குகிறது. உள்ளத்திலேயே ஒளி வீசத் தூண்டுகிறது. மயிர்க்கால்தொறும் அருள் ஒளி வீசுகின்றது. **''ஆரழல் வீச உருக்கி ரோமம் ஒளிவிடுந்தானே''.**

**''இருக்கில் இருக்கும் எண்ணிலி கோடி**
**அருக்கின்ற மூலத்துள் அங்கே இருக்கும்**
**அருக்கனும் சோமனும் ஆரழல் வீச**
**உருக்கிய ரோமம் ஒளிவிடுந் தானே''.** **(திருமந்திரம் - 93)**

இறைவன் அருளோடு கூடி உயிர் சிவமாம் தன்மையைப் பெறுகிறது. யோகத்தாலும், தவத்தாலும், ஞானத்தாலும் இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. சீவத்தன்மை மாறிச் சிவமாம் தன்மை வெளிப்படுகிறது. மலங்களால் கட்டப்பட்ட உயிரானது பல பாச வகைகளில் ஆழ்ந்து, இருளில் நிற்கிறது. இறைவனுடைய அருள் அந்த இருளை நீக்கி ஒளியை நிரப்புகின்றது. சிவனுடைய சார்பால் சீவன் சிவத்தன்மையைப் பெறுகிறது. அப்பொழுது பழமையான மூல மலமாகிய ஆணவ மலமும், அந்த மலத்தை நீக்க இறைவன் புகுத்திய கன்ம மலமும், மாயா மலமும் சூரியன் முன் சந்திரன் போல ஒளி மழுங்கும். **''சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்''** என்றார் மாணிக்கவாசகர். சூரியனுடைய ஒளி இயல்பாக உள்ளது. சந்திரனுடைய ஒளி சூரியனிடமிருந்து பெற்றது பேரொளியில் சிற்றொளி ஒடுங்கி இருப்பது போலாகும். **''அறிவு அறிவுள்ளே அழிந்தது போல''** என்பார் திருமூலர். சிவன் அறிவுமயம், சீவனும் அறிவுடையது. அறிவுடைய சீவனுக்கு அறிவுமயமான சிவனைத் தவிர ஒடுங்குவதற்கு வேறு இடம் இல்லை. சிவ ஒளியோடு ஆன்ம ஒளி பொருந்துவதே இயல்பாகும். அது சுத்த வெளியிலே நிகழ்கின்றது. அந்தச் சுத்த வெளியானது சிவமும் சீவனும் பொருந்தும் இடமாகும். இவ்வாறு பொருந்துவதால் சீவன் சிவமாம் தன்மையைப் பெறுகின்றது. **''சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ சுத்த வெளியிற் சுடரிற் சுடர்சேரும்''** (திருமந்திரம் - 135) இந்த நிலையில் பேரறிவின் ஒளி உள்ளத்திலே வீசும் தன்மையுடையதாகி உயிரானது மலங்களின் சேர்க்கையிலிருந்து தன்னை விடுபடுத்திக்

கொள்கின்றது. மலங்களின் ஆட்சியின் வலிமை குன்றி சீவன் தன்னொளி பெறுகின்றது. மலங்களும் வியாபகம் இழந்து நிற்கின்றன.

**"தானே சிவமான தன்மை தலைப்பட**
**ஆன மலமு மப்பாச பேதமு**
**மான குணமும் பரான்மா வுபாதியும்**
**பானுவின் முன்மதி போற்பட ராவே"** (திருமந்திரம் - 2314)

மனம் தன்னைப் பற்றியே கருதிக்கொண்டிருக்கின்றது. தான் ஆகி விடுகிறது. எதை நினைக்கிறாயோ அது நீயாகிறாய் என்கிறது உபநிடதம். சிவனையே எண்ணி, சிவசமாதியில் கூடியிருந்தால் தான் அவனாகும், சீவன் சிவமாம் தன்மையைப் பெறும். மனதை ஒடுக்கி, குற்றங்களுடைய சம்பந்தத்தைக் குறைத்துக் கொண்டு, புலன்களின் செயல்களைக் கட்டுப்படுத்தி, சிந்தையை ஒருமுகமாக்கி இறைவனுடைய திருவடிகளிலே பதித்து, இறை உணர்விலேயே தன்னைப் பொருத்திக் கொண்டிருப்பது சமாதியாகும். இங்கே யோக சாதனை விளக்கப்படுகின்றது. இந்த யோக சாதனையால் சிவமாம் தன்மை கிட்டுகிறது. அப்போது அநாதியே உயிரைக் கட்டுப்படுத்தும் ஆணவ மலத்தின் சக்தி அகற்றப்படுகிறது. பாசங்களால் கட்டுண்ட தன்மை அகலுகிறது. தூல உடல், சூக்கும உடல் மலங்கள் நீக்கி புத்தொளி பெற்று விளங்கும். திருவருளில் ஒன்றுவோர்க்குச் சிவ வாழ்வு கிடைக்கும். பிறப்பினை வளர்க்கும் இயல்பு சக்தி இழந்து, குற்றமிலாத, ஒளி பெற்ற உடலுடன் வாழலாம்.

**"தானவ னாகுஞ் சமாதிகை கூடினால்**
**ஆன மலமறும் அப்பசுத் தன்மைபோம்**
**ஈனமில் காயம் இருக்கும் இருநிலத்**
**தூனங்கள் எட்டு மொழித்தொன்று வோர்கட்கே".**
(திருமந்திரம் - 2320)

ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றால் கட்டுண்ட உயிரானது தன்னை ஒரு விசேஷத் தன்மை பெற்றதாகக் கருதி, பிற உயிர்களிடமிருந்து தன்னை வேறுபடுத்திக்கொண்டு, ஒருவித கலக்கத்தில் நிற்கும். இந்த நிலையில் உடலும், உடலைச் சார்ந்த கருவிகளும் முக்கியமாக எடுத்துக் கொள்ளப்படும். கருவிகளின் இயக்கங்கள் உயிரைப் புறத்தேயுள்ள அனுபவங்களில் ஈடுபடுத்தி முழுமையை மறைக்கும். இதுவே பிறப்பிற்கு வித்திடும். ஆன்மாவின் உண்மைச் சொரூபம் மறைக்கப்படும். இதற்கு மாறாகத் திருவருளால் ஞானம் பெற்ற உயிர் புலன், பொறிகளின் இயக்கத்திற்கு அப்பாற்பட்டு நிற்கும். அதே நேரத்தில், அந்த இயக்கத்தைத் தன்னுள் ஒடுக்கிக் கொள்ளும். விருப்பம், வெறுப்பு ஆகியவை நீங்க, ஆன்மாவானது இதுவென்றும், அதுவென்றும் வேற்றுமை பாராது உண்மை அறிவைப் பெற்று, அந்த உண்மை அறிவினில் தன்னை ஒடுக்கிக் கொண்டு நிற்கும்பொழுது சிவத்துடன் கலந்திருக்கும். அப்பொழுது உடல்கூறுகளின்

வட்டத்திற்கப்பால் வியாபகமாக நின்று, சிவகதி பெற்று ஞான சொரூபியாக நிற்கும். இதுவே உயிரின் சொரூப இலக்கணமாகும்.

**"எல்லாந்தன் னுட்புக யாவுளுந் தானாகி**
**நல்லாந் துரியம் புரிந்தக்கா னல்லுயிர்**
**பொல்லாத வாறாறுட் போகாது போதமாய்ச்**
**செல்லாச் சிவகதி சென்றெய்து மன்றே".** **(திருமந்திரம் - 2308)**

எது ஆனந்த அனுபவமாகும்? திருவருளிலே முடிவாகத் தோய்ந்து நிற்கும் நிலையே இந்த அனுபவமாகும். இதில் தியானம் கைகூடிடும். ஞானமே வடிவாக உள்ளுணர்வுகளெல்லாம் சிவதியானத்தில் நிற்கும். சிவனறிவே தம்மறிவாகப் பொருத்தி, உடலையும், உடலைச் சார்ந்த உணர்வுகளையும் கடந்து உயிரானது தன்னிலையில் நிற்கும். கருவி கரணங்களின் இயக்கம் இல்லாமையால் இது சமாதி நிலையாகும். அதாவது, தனது தன்மை கெட்டு அருளின் தன்மை தானே வெளிப்படும் காட்சியாகும். இத்தன்மையை எய்துவது உபநிடத மகாவாக்கியமான தத்துவமசி நிலையாகும் என்பார் திருமூலர். அதாவது, சிவசக்தியினிடையில் உயிரானது தற்போதமற்ற ஒடுங்கிக் கிடக்கும் அனுபவமாகும். இறைவனின் அருள் அணைப்பிலே ஆன்மா செயலற்று தாயிடம் ஓர் குழந்தை இருப்பதுபோல் இருக்கும். உயிர் தன்னையே சிவம் என்று கருதிக்கொள்வதில்லை. ஆனால், சிவ ஒளியில் சீவ ஒளி கலந்து தனித்தன்மை இழந்து சிவவியாபகத்தில் நிற்கும். இதைத் திருமூலர் **"தூங்கிக் கண்டார் சிவயோகம் தம்முள்ளே"** என்பார்.

**"ஆனந்த மாகு மரனருட் சத்தியிற்**
**றானந்த மாமுயிர் தானே சமாதிசெய்**
**தூனந்த மாயுணர் வாயுள் ளுணர்வுறிற்**
**கோனந்த வாய்க்கு மகாவாக்கிய மாமே".** **(திருமந்திரம் - 2326)**

# 33. ''அருள் அனுபவம்''

பரம்பொருளைப் பற்றிய அறிவு பேரறிவு ஆகும். இறைவனுடைய திருவருளால் அருளாளர்கள் ஒப்பிலா இறை அனுபவம் பெறுகிறார்கள். இந்த அனுபவம் உணர்வு நிலையில் பெறப்படுகிறது. இந்த அனுபவத்தின் விளைவாக அருளாளர்கள் பேரறிவைப் பற்றிய விள்க்கம் பெறுகின்றார்கள். பேரறிவினுடைய விளக்கம் அவர்களுடைய உள்ளங்களை உருக்கி, மலங்களை நீக்கித் தூய்மைப்படுத்திச் சொல்லொணா ஆனந்தத்தைத் தருகிறது. இத்தகைய ஆனந்தம் உடலைச் சார்ந்த கருவி கரணங்களால் நாம் பெறக்கூடிய இன்பத்தைப் போன்றது அன்று. பேரறிவினால் கிடைக்கும் ஆனந்தத்தைப் பெற்றபின் உயிரானது பேரறிவின் நிலையை உணர்ந்து கொள்கின்றது. பேரறிவின் தன்மையைப் பெறுகிறது பேரறிவாக மாறிவிடுகின்றது. அத்தகைய பேரறிவு பேரறிவுதான். அதற்கு எதிராக நாம் ''அறிவு அறிவு'' என்று பறைசாற்றி வரும் சிற்றறிவு சிற்றறிவுதான்.

**''சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ**
**சுத்த வெளியிற் சுடரிற் சுடர்சேரும்''** **(திருமந்திரம் - 135)**

அருள் அனுபவத்தை அடைய உயிருக்குத்தகுதி ஏற்பட வேண்டும். அந்தத் தகுதி பல பிறவிகள் பெற்று பின்னர்த்தான் கிடைக்கின்றது. ஒவ்வொரு பிறவியிலும் உயிர்கள் புரியும் வினை காரணமாக, உயிரானது பல பிறவிகள் எடுத்து வினைகளின் வலிமையை படிப்படியாக குறைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. வினைக்கேற்ப உயிருக்கு உடலைக் கூட்டுவிப்பது திருவருள்தான். உடலின் சேர்க்கையாலேதான் உயிருக்கு வினைகளைத் தீர்க்கும் வாய்ப்பு கிடைக்கின்றது. பின்னர் தக்க நேரத்தில் அந்த உயிருக்கு அருள் அனுபவத்தை அளித்துத் தனது திருவடிகளிலே உயிரைப் பதித்துக் கொள்வதும் இறைவனுடைய திருவருளே.

**''விண்ணின்று இழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு**
**தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து**
**உண்ணின்று உருக்கி ஓர் ஒப்பிலா ஆனந்தக்**
**கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே''.**

**(திருமந்திரம் - 113)**

"களிம்பறுத் தான்எங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பறுத் தான்அருட் கண்விழிப் பித்துக்
களிம்பணு காத கதிரொளி காட்டிப்
பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே". (திருமந்திரம் - 114)

பல பிறப்புகள் எடுத்து, இளைத்து உயிர் உலகப் பொருட்களில் நாட்டம் செலுத்துவதில் தன்மை குன்றி, இறை அனுபவத்தைப் பெற ஏங்கி நிற்பதும் இறைவனுடைய அருளாலேதான் நடைபெறுகிறது.

மாணிக்கவாசகப் பெருமான் தான் அனுபவித்ததை.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்"
(திருவாசகம் - சிவபுராணம்)

என்று எடுத்துக் கூறுவார்.

அறியாமையால் கட்டுண்டு நிற்கும் உயிரைத் திருமூலர் ஒரு குருட்டுக் கிழவனுக்கு ஒப்பிடுகிறார். வயோதிகத்துடன் குருட்டு நிலையும் சேர்ந்தால் அந்த உயிர்படும் பாட்டைச் சொல்ல முடியாது. உயிரானது சோர்ந்து, இளைத்து, தன்னம்பிக்கை இழந்து நிற்கும் நிலையாகும். தனது குறைபாடுகளைத் தெரிந்து கொண்டு "இறைவனே, அறியாமையால் மயங்குகின்றேன். உன்னைத்தவிர புகலிடம் வேறொன்றும் இல்லை. இறைவனே என்னைத் தாங்கிக்கொள்ளே" என்று மணிவாசகப் பெருமான் தான் துணையற்று அல்லல்படுவதை இறைவன்முன் எடுத்து வைத்தது போன்ற நிலையை ஒவ்வொரு உயிரும் பல பிறவிகள் எடுத்த பின்னர் அடையும்பொழுது, அதுவரை தனது ஆற்றலை உயிர் பக்குவப்படுத்த வேண்டிய வழிகளிலே செலுத்திய இறைவனின் அருட்சக்தி பின்னர் உயிருடைய அறியாமையைப் போக்கி ஆட்கொள்கிறது.

"இருட்டறை மூலை யிருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி யவனை மணம்புரிந் தாளே". (திருமந்திரம் - 1514)

அறியாமையாவது தன்னைப் பற்றியும், தன்னை ஆட்கொண்ட பரம்பொருளைப் பற்றியும் தன்னுள் உணர்ந்து கொள்ளாமல் பிற பொருள்களை அறிய வேண்டும் என்கிற நாட்டத்துடன் கருவி கரணங்களைப் பயன்படுத்தி ஒருவித மயக்க அறிவிலே தன்னை ஈடுபடுத்திக் கொள்வதாகும். அறிவாவது திருவருளை உணர்ந்து, திருவருளில் மூழ்கி,

திருவருளுக்கு அப்பால் வேறொன்றுமில்லை என்கிற முடிந்த முடிவிற்கு வந்து, அந்தத் திருவருளே தன்னை ஆட்டுவிக்கின்றது என்கிற உண்மையைக் கண்டறிந்து, அதனால் ஏற்படும் தெளிவாக ஞானத்தில், ஆழ்ந்த அமைதியில், சிறந்த மன நிறைவில், மாறாத ஆனந்தத்தில் தனித்து நிற்பதாகும்.

**''அருளால் எவையும்பார் என்றான் - அத்தை**
**அறியாதே சுட்டிஎன் அறிவாலே பார்த்தேன்;**
**இருளான பொருள்கண்ட தல்லால் - கண்ட**
**என்னையும் கண்டிலன் என்னேடி தோழி''**

என்பார் தாயுமானவர்.

அருள் அனுபவம் உயிருக்கு இறை உணர்வைத் தருகிறது. ஒரு உயிருக்கு அருள் அனுபவம் திடீரென்று வருவது போலத் தோன்றலாம். ஆனால் அது தோற்றமே. உண்மையில் எங்கும் பரவி நிற்கும் திருவருள் எல்லாவற்றிற்கும் காரணமாக இருக்கிறது. உயிரைப்பாசத்தில் பொருத்துகிறது. பாசத்தைப் பற்றாகக் கொண்ட உயிரை அதனிடமிருந்து வேறுபடுத்துகின்றது. அந்தப் பாசத்தில் உள்ள பற்று நீங்கியவுடன் உயிரை இயல்பாகவே பரம்பொருளுடன் பொருந்தும்படி செய்கின்றது. இறைத் தன்மையைத் தருகின்றது. இந்த உணர்வினைப் பெற்ற அருளாளர்கள் அருளின் நிலைபெற்ற தன்மையையும், உயிரைப் படிப்படியாகப் பக்குவமடையச் செய்யும் ஆற்றலையும் அருளிலிருந்து நம்மைப்பிரித்து வைப்பது நமது அறியாமையே என்றும் உணர்ந்து கொள்கிறார்கள். திருவருளை நம்முடன் சேர்த்துக் கொள்வது நம்முடைய முயற்சியை ஒட்டியே உள்ளது என்பதும் தெளிவாகும்.

**''பாசத்தி லிட்ட தருணந்தப் பாசத்தின்**
**நேசத்தை விட்ட தருளந்த நேசத்தில்**
**கூசற்ற முத்தி யருளந்தக் கூட்டத்தின்**
**நேசத்துத் தோன்றா நிலையரு ளாமே''.** **(திருமந்திரம் - 1802)**

எனவேதான் அருளிலும் மேம்பட்டது யாதுமில்லை என்கிறது திருவருட்பயன்.

**''அருளின் பெரிய(து) அகிலத்து வேண்டும்**
**பொருளின் தலைஇலது போல்''** **(செய்யுள் - 31)**

ஒரு நல்ல பாற்கடலில் வசிக்கும் மீன் அந்தப் பாலைக் குடித்துத் தனது பசியைத் தீர்த்துக் கொள்ளாமல் அதனினும் சிறிய பிராணிகளை உண்டு மகிழ்வது போல உயிர்கள் உடலுடன் சேர்ந்து, உடல் இன்பத்தில் மூழ்கித்தாம் அருள் எல்லைக்குள் இருந்தும் அந்த அருளை அனுபவிக்காமல் நிற்குமாயின் அது அருளுக்கு இழப்பன்று. உயிருக்கே இழப்பாகும்.

"பால்ஆழி மீன்ஆளும் பான்மைத்(து) அருள் உயிர்கள்
மால்ஆழி ஆளும் மறித்து". (திருவருட்பயன் - செய்யுள் 34)

அருளாளர்கள் தாங்கள் பெற்ற இறை அனுபவத்தைப் பலவாறாக விளக்குகின்றனர். "இறைவனைக் கண்டுகொண்டேனே" என்று கூறுவது அவர்களுடைய இயல்பாகும். அவர்கள் காண்பது புறக்காட்சியாகவும் இருக்கலாம், அகக்காட்சியாகவும் இருக்கலாம். அண்டமெலாம் புரந்து நிற்கும் இறைவனைக் கருவி கரணங்கள் காணும் வகையில் அவர்கள் அனுபவித்ததுண்டு அல்லது சீரிய தவத்தால், நோன்பால், யோகத்தால் தங்களுடைய உள்ளங்களிலே அவர்கள் இறை உணர்வினைப் பெற்று அனுபவிப்பதும் உண்டு. திருமூலர் பல மந்திரங்களில் தான் பெற்ற அனுபவத்தைக் கோடிட்டுக் காண்பிக்கின்றார். அவர் அனுபவித்த காட்சிகள் பெரும்பாலும் அகக்காட்சிகளாக இருந்துள்ளன. அதாவது, திருமூலர் இறைவனைத் தம்முள் தரிசித்துள்ளார். யோக சாதனையால் இறைவன் அருள்பெற்ற திருமூலர் திருவடிப் பேற்றினைத் தம்முள்ளேயே பெறுகிறார்.

"செப்புஞ் சிவாகமம் என்னும்அப் பேர்பெற்றும்
அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றுத்
தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகம்இருந் தேனே". (திருமந்திரம் - 74)

தன்னுள் இருக்கும் எல்லா ஆற்றலையும் குவித்து, சீவ கரணங்களுக்கு இடம் கொடுக்காமல், பார்வதி தேவியோடு கூடிய பரமேஸ்வரனை இடைவிடாமல் தியானித்து, உடலைச் சார்ந்த கரணங்களைக் கடந்து, மறைந்து நிற்கும் பரம்பொருளைக் கண்டுகொண்டேனே என்கிறார் திருமூலர். இதிலும் அகக்காட்சியின் தொடர்பையே காணலாம்.

"தலைநின்ற தாழ்வரை மீது தவஞ்செய்து
முலைநின்ற மாதறி மூர்த்தியை யானும்
புலைநின்ற பொல்லாப் பிறவி கடந்து
கலைநின்ற கள்வனைக் கண்டுகொண் டேனே".

(திருமந்திரம் - 2597)

"இந்திரியங்களின் வயப்பட்டிருந்தேன். அவைகளால் தாக்கப்பட்டு கட்டுண்டு கிடந்தேன். என் மனத்தை என்னால் அடக்க இயலவில்லை. அப்போது இறைவன் என்னை அடங்கும்படியாக என் மீது தனது திருவடியைப் பதிப்பித்தான். எனது உள்ளொளியைப் பெருக்கி என்னைப் பேரின்பத்தில் திளைக்கச் செய்தான். நன்மைதரும் ஞான நடனத்தைப் புரியும் சிவபெருமான் என் உள்ளத்தில் நிலைபெற்று விளங்கி என்னை அசைவற்ற, ஒடுங்கிய நிலையில் இருக்கச் செய்தான்" என்ற திருமந்திர அனுபவம் அகக்காட்சியின் அடிப்படையில் அமைந்துள்ளது.

"அடங்காத என்னை அடக்கி அடிவைத்
திடங்கான் பரானந்தத் தேஎன்னை இட்டு
நடந்தான் செயும்நந்தி நன்ஞானக் கூத்தன்
படந்தான்செய் துள்ளுட் படிந்திருந் தானே".

(திருமந்திரம் - 2741)

இறைவனும் சக்தியும் இணைபிரியாமல் நின்று ஊழிதோறும் வழி உயிர்களெல்லாம் உய்யும்பொருட்டுப்படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் போன்ற தொழில்களை நடத்தும் மேன்மையை என்னுடைய ஒளிமயமான அறிவில் உணர்ந்து கொண்டேனே என்கிறார் திருமூலர். இதுவும் ஒரு அகக்காட்சிக்குச் சான்றாகும்.

"இடங்கொண்ட சத்தியும் எந்தை பிரானும்
நடங்கொண்டு நின்றமை நானும் அறிந்தேன்
படங்கொடு நின்றஇப் பல்லுயிர்க் கெல்லாம்
அடங்கலுந் தாமாய்நின் றாடுகின் றாரே". (திருமந்திரம் - 2768)

யோக மார்க்கத்தில் சென்று முழுமையைக் கண்டவர் திருமூலர். சிவமும் சக்தியும் நம்முள்ளே நடமாடுகின்றன. நமது ஆற்றலைப் புறப்பொருட்களில் வீண் செய்யாமல், தட்டி எழுப்பி யோக சாதனை வழியாகச் சிவத்துடன் இணைத்துக் கொள்ளுவது சிவானுபவம் பெறுவதாகும். சிவமாகிய மந்திரம் ஒளிவிடும் மந்திரம். சீவனும் ஒளித்தன்மை வாய்ந்ததே. சீவ ஒளியும், சிவ ஒளியும் பொருந்தி நிற்பது யோகத்தின் முடிவாகும். எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருள் நமது உள்ளத்திலும் வீற்றிருக்கின்றது. எந்த அருளானது உடலையும் உயிரையும் சேர்த்து, உயிரின் இயக்கத்திற்கு உதவி புரிகிறதோ அந்த அருளும் நமது உள்ளத்தில் வீற்றிருக்கின்றது. அந்த அருளின் தன்மையை நம்முள் விளக்கிக் கொள்வது இறைவன் இருக்கும் இடத்தை அறிந்து கொள்வதாகும். அந்த இறைவன் நமது உயிரில் உயிருக்கு உயிராக நிற்கிறான். நமது உயிரும் அறிவுமயம் என்று நமக்கு அறிவிக்கின்றான். அறிவுமயமான உயிர் பேரறிவான இறைவனுடன் இணைந்து கொள்வது நம்முடைய சூக்கும உடலாகிய சிற்றம்பலத்தில் நடைபெறுகிறது. இதை நான் அனுபவத்தால் கண்டுகொண்டேனே என்கிறார் திருமூலர்.

"நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி
உற்றுற்றுப் பார்க்க வொளிவிடு மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பரம னிருந்திடஞ்
சிற்றம் பலமென்று சேர்ந்துகொண் டேனே".

(திருமந்திரம் - 2770)

"பல காலம் எனது கருவி கரணங்கள் தங்களுடைய இயல்பான பணியைச் செய்து வந்தன. இறைவனுடைய அருள் கிட்டியது. புறக்கண்கள்

மூடின. அகக்கண்கள் விழித்துக் கொண்டன. அகக்கண்களால் நான் பார்க்கும்பொழுது என்னுடைய தலைவனை, ஒப்பற்றவனைப் பொன்போன்ற திருமேனியை உடைய, சடைபொருந்திய சிவபெருமானை என்னிடம் பொருந்தக் கண்டேன். 'நீயே அறிவுமயமானவன்' என்று சிவபெருமான் என்னுள் உணர்த்தி அருளுவதையும் கண்டேனே'' என்கிறார் திருமூலர்.

**''மின்னுற்ற சிந்தை விழித்தேன் விழித்தனுந்**
**தன்னுற்ற சோதி தலைவன் இணையிலி**
**பொன்னுற்ற மேனிப் புரிசடை நந்தியும்**
**என்னுற் றறிவனான் என்விழித் தானே''.** **(திருமந்திரம் - 2859)**

''பரம்பொருளாகிய இறைவன் அருள்மயமாக நின்று உயிர்களுக்கு நன்மையைத் தருகின்றான். அத்தகைய பராபரம் என் உள்ளத்தோடு ஒன்றி நிற்பதை நான் உணர்வுபூர்வமாக அறிந்து கொண்டேன். அத்தகைய சிவபெருமானை அடைவதாகிய வழியையும் நான் என்னுள் உணர்ந்தேன். பசு பாச ஞானத்திற்கு அப்பால் அடைய வேண்டிய பதி ஞானமே உயிரையும், இறைவனையும் ஒன்றாக்குகிறது என்றும் உணர்ந்து கொண்டேன். அந்த உணர்வு நிலையில் சிவனும் சீவனும் ஒன்றி நிற்பதை நான் அறிந்தேன். அவ்வாறு அறிந்ததன் காரணமாகச் சிவமயமான உணர்வினைப் பெற்று, சிவமயமாய் எங்கும் தானாகிச் சிவன் செயல் யாவையும் நோக்கி முக்காலத்து இயல்பையும் குறித்து, இழவு வந்த சோம்பல் நிலையில் நின்றேன்.'' இதுவும் திருமூலர் பெற்ற அனுபவமாகும்.

**''ஒன்றிநின் றுள்ளே யுணர்ந்தேன் பராபரம்**
**ஒன்றிநின் றுள்ளே யுணர்ந்தேன் சிவகதி**
**ஒன்றிநின் றுள்ளே யுணர்ந்தேன் உணர்வினை**
**ஒன்றிநின் றேபல வூழிகண் டேனே''.** **(திருமந்திரம் - 2953)**

அருளாளர்கள் பெறும் அருள் அனுபவம் அறிவின் அடிப்படையில் அமைந்ததன்று. அவர்களுடைய கருவி கரணங்கள் இந்த அனுபவத்தில் ஈடுபடுகின்றன. ஆனால், இந்தக் கருவி கரணங்கள்தான் இந்த அனுபவத்தைப் பெற்றன என்று கூறிவிட முடியாது. உண்மையில் கருவி கரணங்கள் ஆற்றல் அற்ற நிலையில் நிற்கின்றன. அறிவின் எல்லைக்குள் தங்காத ஒன்று கருவி கரணங்களைத் தாக்குகின்றது. அவற்றைச் செயலற்ற நிலைக்குக் கொண்டு போகின்றது. மீந்த உயிரெல்லாம் உணர்வெல்லாம் எல்லையற்ற பரம்பொருளில் மூழ்கி நிற்கின்ற அனுபவமாகும். அருளாளர்கள் கண்டேன் என்பார்கள். கேட்டேன் என்பார்கள், தொட்டேன் என்பார்கள், கடித்தேன், விழுங்கினேன் என்றும் கூறிக் கொள்வார்கள். இதுபோன்ற சொற்கள் அவர்கள் பெற்ற அனுபவத்தின் அளவையும், ஆழத்தையும் எடுத்துக்காட்டுகிறது. நாம் இந்த அனுபவத்தைப் பெறவில்லை. எனவே, அவர்கள் பயன்படுத்தும் சொற்கள் நமக்குப் புரிவதில்லை. அவர்கள் உள்ளத்திலே தோன்றும் திருவுருவம் நமது

கண்களுக்குப் புலப்படுவதில்லை. இறைக்காட்சியை அவர்கள் காணும்பொழுது அவர்களுடைய உடலின் இயக்கத்தைப் பற்றிய நினைப்பு மறைந்துவிடுகின்றது. ஆனால், உடலின் சேட்டைகளிலேயே எப்போதும் ஈடுபட்டிருக்கும் நமக்கு உள்ளத்தின் நிலை மறைந்து நிற்கிறது.

நமது ஊரிலிருக்கும் திருக்கோயிலில் ஆண்டுத் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. சிவபெருமான் பார்வதி தேவியோடு விடையேறித் திருவுலா வருகிறார். ஏராளமான பூக்களாலும், ஆபரணங்களாலும், பட்டாடைகளாலும் அலங்கரிக்கப்பட்டு இறைவன் திருவுலா வருவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது. ஆயிரக்கணக்கான மக்கள் அந்தக் காட்சியைப் பார்க்கிறார்கள். அவர்களுடைய உள்ளங்களில் பலவிதமான எண்ணங்கள் தோன்றுகின்றன. பலர் பூ வேலையையும் நகை, உடை அலங்கார எழிலைக் கூறிக் கொள்கின்றார்கள். அவர்களுடைய கண்களுக்குச் சிற்பங்களின் எழிலும் அலங்காரத்தின் அழகும் மட்டுமே தென்படுகிறது. வேறு சிலர் திருவுலாக் காட்சியைக் காண்கிறார்கள். திருக்கோலத்தைக் கண்டு மகிழ்கிறார்கள். ஆனால், அவர்கள் அத்துடன் நிற்கவில்லை. அவர்களுடைய பார்வையில் வடிவழகு மட்டும் நிற்கவில்லை. ''நமக்கெல்லாம் இறைவன் நம்மை ஆண்டு கொண்டவன். அவனைத் தொழுவோம்'' என்று அவர்கள் கருதுகிறார்கள். கருதலுடன் அவர்களுடைய கைகள் இறைவனைக் கும்பிடுகின்றன. வேறு சிலர் இருக்கிறார்கள். அவர்கள் இறை வடிவத்தைப் பார்க்கின்றார்கள், அலங்காரத்தைப் பார்க்கிறார்கள், இறைவனைப் பார்க்கிறார்கள். அதற்கு மேலும் அவர்கள் உள்ளம் செல்கிறது. இறைவன் மீது அழிவிலாத அன்பினால், காதலினால் உந்தப்பட்டவர்கள் அவர்கள். அவர்கள் வெறும் கண்களால் மட்டும் காண வேண்டியதில்லை. கண்களை மூடிக் கொண்டாலும் அவர்களுடைய மனத்திலே, சிந்தையிலே, உள்ளத்திலே இறைவன் நிறைந்து நிற்கின்றான். எப்படி நிற்கின்றான்? காரைக்கால் அம்மையார் விடை அளிக்கின்றார். அவர் இறைவனின் திருவுலாவைக் காண வந்த மூன்றாவது வகையினைச் சேர்ந்தவர். இறைவனைத் தம்முள்ளேயே கண்டவர். அவருடைய உள்ளத்திலே இறைவன் சோதிப் பிழம்பாகத் தோன்றுகின்றான். திருமாலும் அயனும் சென்று, முயன்று கண்டறியாத பிரபஞ்சத்தின் முதன்மைப் பொருளை காரைக்கால் அம்மையார் தனது சிந்தையுளே சோதியாகக் காண்கிறார்.

**''காண்பார்க்கும் காணலாம் தன்மையனே; கைதொழுது**
**காண்பார்க்கும் காணல்ஆம்; காதலால் - காண்பார்க்குச்**
**சோதியாய்ச் சிந்தையுளே தோன்றுமே, தொல்உலகுக்கு**
**ஆதியாய் நின்ற அரன்''.** **(அற்புதத் திருவந்தாதி)**

நமது நாயன்மார்கள் அனைவருமே இத்தகைய அனுபவத்தைப் பெற்றவர்கள். இறைவன் அவர்களுடைய உள்ளங்களிலே குடிபுகுந்திருப்பதும், அதை அவர்கள் உணர்ந்திருப்பதும் அல்லாமல் அவர்களுடைய வாழ்க்கையிலே நடந்த பல நிகழ்ச்சிகளுக்கு, அவர்களுடைய செய்கைகளுக்கு, அவர்களுடைய இயல்பான அணுகுமுறைகளுக்கு விளக்கம் காண்பது கடினம்.

ஞானசம்பந்தப் பிள்ளையார் திருக்குளத்தின் கரையில் நின்று அருள் அனுபவ நேரம் வந்தடைந்தமையால் ''அம்மே! அப்பா!'' என்று அழத் தொடங்கியபோது சிவபெருமான் தேவியாருடன் அங்கே வந்து ஞானப்பால் அளித்தது சேக்கிழார் பெருமானின் வரலாற்றுக் காட்சியாகும். திருக்குளத்தில் நீராடி விட்டுப் பிள்ளையாரின் தந்தையாகிய சிவபாத இருதயர் ''யாவர் அளித்த பால் அமுதினை நீ உண்டாய்?'' என்று கோபிக்கும்போது ஞானப்பிள்ளையார் உணர்வறிய மெய்ஞ்ஞானத்தைத் தாம் உணர்ந்த நிலையில், ஆனந்தக் கண்ணீர் கண்களிலிருந்து பாய, தனது சிறு திருவிரலைச் சுட்டிக்காட்டித் திருக்கோயிலில் அமர்ந்துள்ள இறைவனை எதிரில் காட்டி, தனது சொல்லொணா அனுபவத்தைக் கேட்டுப்பல உயிர்கள் உய்யும்பொருட்டு **"தோடுடைய செவியன்"** என்னும் திருப்பதிகம் பாடி **"எம்மை இதுசெய்தவன் பிரான் இவன் அன்றே"** என்று தந்தையாருக்கு அறிவிக்கின்றார். தனது உள்ளத்தைக் கவர்ந்த கள்வன் இவன் என்று கூறும் ஞானப்பால் உண்ட பிள்ளையார் தான் கண்ட புறக்காட்சிக்கு மேலாகத் தான் பெற்ற மெய் அனுபவத்தைச் சிறப்பித்துப் பேசுவது பிள்ளையாருடைய ஒப்புயர்வற்ற ஆன்மிக அனுபவத்தை நன்கு விளக்கிக் காட்டுகிறது.

**"விண்ணிறைந்த பெருகொளியால் விளங்குமழ விடைமேலே**
**பண்ணிறைந்த வருமுறைகள் பணிந்தேத்தப் பாவையுடன்**
**எண்ணிறைந்த கருணையினா னின்றாரை யெதிர்காட்டி**
**யுண்ணிறைந்து பொழிந்தெழுந்த வுயர்ஞானத் திருமொழியால்"**
**(பெரிய புராணம் - 1972)**

**"செம்மைபெற வெடுத்ததிருத் "தோடுடைய செவிய" னெனும்**
**மெய்ம்மைமொழித் திருப்பதிகம் பிரமபுர மேவினார்**
**தம்மையடை யாளங்க ளுடன்சாற்றித் தாதையார்க்**
**"கெம்மையிது செய்தபிரா னிவனன்றே" யெனவிசைத்தார்"**
**(பெரிய புராணம் - 1974)**

அப்பர் பெருமான் வாழ்க்கையிலும் அருள் அனுபவக் காட்சி நிகழ்கிறது. திருவையாற்றில் பெருமான் திருக்கயிலாயக் காட்சி பெறுகின்றார். சேக்கிழார் பெருமானின் திருவாக்குப்படி திருவையாற்றுத் திருக்கோயில் கயிலை மலையாக மாறுகிறது. சித்தர்களும், ஞானிகளும் நெருங்கி நிற்க, கணங்கள் போற்ற நந்தி தேவர் நடுவில் நிற்க, வெள்ளி மாமலையின் மீது பார்வதி தேவி அருகில் நிற்கச் சிவபெருமான் கயிலைக்காட்சி அருளினார். இந்தப் பெரும் காட்சியை அப்பர் அடிகள் கண்களால் பருகினார், பாடினார், ஆடினார், அழுதார், திருத்தாண்டகங்களால் போற்றித் துதித்தார். இவ்வாறு அப்பர் அடிகள் இறைவனை அனுபவித்துக் கொண்டு நின்றார். சிறிது நேரம் கழித்துத் திருக்காட்சி இறையருளால் மறைந்தது. காட்சி மறைந்ததால் அப்பர் அடிகள் மிக்க வருந்துகிறார். இதுவும் இறைவனுடைய திருவருளோ என்று வியந்து

அப்பர் பெருமான் பதிகம் பாடுகின்றார். திருக்கயிலாயக் காட்சியின் தெளிவில் திருநாவுக்கரசர் சராசரங்களின் ஒருமைப்பாட்டினையும் அவற்றில் முழுமையாக இறையருள் பதிந்து இருந்த தன்மையையும் காண்கிறார். பரம்பொருளையே பற்றுக்கோடாகக் கொண்ட அப்பருக்கு இந்த உணர்வு ஏற்பட்டதில் வியப்பொன்றுமில்லையே.

மணிவாசகப் பெருமானுக்குக் அருளிய காட்சி திருப்பெருந்துறையில் குருந்த மர நிழலில் வாய்த்த செய்தியைத் திருவாசகத்தில் பல இடங்களில் அகச்சான்றாகக் காணலாம். **''கண்ணால் யானும் கண்டேன் காண்க''** என்கிறார் மணிவாசகப் பெருமான். **''உந்தன் வண்ணம்தான் அதுகாட்டி, வடிவு காட்டி, மலர்க்கழல்கள் அவை காட்டி ... ஆட்கொண்டாய்''** என்று கூறுகிறார். புறக்காட்சி பெருமானது உள்ளத்தில் ஒரு ஒப்பற்ற அனுபவத்தைப் பதித்தது. அதுவரை காணாத காட்சி இறைவன் அருளாலேதான் தனக்குக் கிட்டியிருக்க வேண்டும் என்கிற உணர்வு பெருமானுடைய சிந்தையை நிரப்புகின்றது. ''காட்டாதன எல்லாம் காட்டி'' என்றும், **''பின்னும் கேளாதன ஏல்லாம் கேட்பித்து''** என்றும் பெருமான் கூறித்தனது அருள் அனுபவத்தின் பெருமையை விளக்குகின்றார். அவர்கள் கண்டது ஒரு உண்மைக்காட்சி என்பதற்கு **''மெய்யே உன் பொன்னடிகள் கண்டு''** என்னும் திருவாக்குச் சான்றாகும். மணிவாசகரும் பரம்பொருளைச் சோதியாகக் கண்டதும், உருவத்திருமேனியாகக் கண்டதும்,

**''செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்**
**திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி**
**அந்தண னாவதும் காட்டிவந் தாண்டாய்''**
என்பதிலிருந்து தெளிவாகிறது.

இவ்வாறு அருளாளர்களுடைய அருள் அனுபவங்களை, அவர்கள் கண்ட காட்சியைத் தொகுத்துக்கொண்டே போகலாம். அனுபவங்கள் எத்தன்மையின ஆயினும் அடியார்க்களின் உள்ளங்கள் விதிவிலக்கில்லாமல் அருளே உலகை ஆட்டுவிக்கின்றது என்றும், அருளன்றி வேறொன்றுமில்லை என்றும், அருளாலேதான் மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையோர் என்றும் நினைந்து மகிழும் தன்மையைப் பெறுகின்றன. காரைக்கால் அம்மையாரின் திருவாக்கு இதை நமக்கு அப்பட்டமாக அறிவிக்கின்றது.

**''அருளே உலகெலாம் ஆள்விப்ப(து), ஈசன்**
**அருளே பிறப்பறுப்பது; ஆனால் - அருளாலே**
**மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன், எஞ்ஞான்றும்**
**எப்பொருளும் ஆவ(து) எனக்கு''.** **(அற்புதத் திருவந்தாதி)**

❋ ❋ ❋

# 34. அருளாளர்களின் மந்திரமொழி

திருவருளில் நிற்பவர்கள் அருளாளர்கள். அவர்களுடைய வாக்கு இறைவனுடைய திருவாக்காகும். அவர்கள் நிறைமொழி மாந்தர். அவர்களுடைய உள்ளத்திலிருந்து வெளிப்படும் மறைமொழியே மந்திரமாகும். வேதங்களும், ஆகமங்களும், திருமுறைகளும், பிரபந்தங்களும் அவ்வாறே அருளாளர்களுடைய உள்ளங்களிலிருந்து வெளிப்பட்ட இறைவனுடைய வாக்காகும். அவை "இறைவன் நூல்", நாதன் உரை அவை" (திருமந்திரம்).

திருஞானசம்பந்தர் ஓர் ஒப்பற்ற அருளாளர். உலகம் கடந்த சிவஞானத்தை உணர்த்தப்பெற்றவர். எனினும், வேத விதிகளின்படி அவருக்கு உபநயனம் செய்வதற்குரிய சடங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒரு பிறப்பும் வராத நிலைமையை உடையவர் ஆளுடையபிள்ளையார். உபநயன நிகழ்ச்சியில் ஆயிரம் ஆயிரமாகிய வேதங்களை அங்கு வருகை தந்த பெரியோர்கள் முன்னிலையில் ஓதி அருளுகின்றார். அவர்களுடைய ஐயங்களைப் போக்கும்வகையில் சிந்தையில் கூடிய ஐயப்பாடுகளைத் தெளிய வைக்கின்றார். எல்லாவற்றிற்கும் மேலாக முதன்மை பெற்ற எல்லா மந்திரங்களும் தோன்றுவதற்குக் காரணமாகிய சிவபெருமானது ஐந்தெழுத்தே என்று எடுத்து உபதேசிக்கின்றார்.

சிவஞானம் உணரப்பெற்ற காரணத்தினால் திருஞான்சம்பந்தர் அந்தவகையில் உலகோருக்கு மந்திரத்தின் வடிவான நிலையை விளக்க முடிகின்றது. சேக்கிழார்பெருமான் இதை அழகாக எடுத்துக்கூறுகின்றார்.

**"மந்திரங்க ளானவெலா மருளிச் செய்து**
**மற்றவற்றின் வைதிகநூற் சடங்கின் வந்த**
**சிந்தைமயக் குறுமையந் தெளிய வெல்லாஞ்**
**செழுமறையோர்க் கருளியவர் தெருளு மாற்றான்**
**முந்தைமுதன் மந்திரங்க ளெல்லாந் தோன்று**
**முதலாகு முதல்வனா ரெழுத்தஞ் சென்பார்**
**"அந்தியினுள் மந்திரமஞ் செழுத்து மே"யென்**
**றஞ்செழுத்தின் றிருப்பதிக மருளிச் செய்தார்"**
**(பெரிய புராணம் - திருஞானசம்பந்த நாயனார் - 2164)**

அருளாளர்களின் திருவாக்கின் தன்மையைப் பற்றி மேலும் சிந்திக்கலாம். அவர்கள் தாம் பெற்ற இறை அனுபவத்தை நமக்குத் தெரிந்த மொழிகளில் சொல்கின்றார்கள். அவர்களுடைய இறை உணர்வு முழுமையும் மொழிகளின் வாயிலாக வெளிக்கொணர வேண்டும். நாம் பேசும் மொழிகள் பல ஆயிரம் ஆண்டுகளாக வளர்ந்து மாறி வந்துள்ளன. இந்த மொழிகள் நம்முடைய புலன்கள் கருவிகளோடு இணைந்துள்ளன. புலன்களும் கருவிகளும் பொருட்கள்பால் சென்று பொருள் சம்பந்தப்பட்ட அறிவை நமக்குத் தருகின்றன. அந்த அறிவு நம்முடைய உடலில் ஏற்படும் அனுபவத்தின் அடிப்படையில் அமைகின்றது. இந்த அறிவினை ஒருவரோடு ஒருவர் பரிமாறிக் கொள்ள மொழியினைப் பயன்படுத்துகின்றோம். ஆகவே, பொதுவாக நம்முடைய மொழிகள் புலனறிவு சம்பந்தப்பட்ட அளவே நிற்கின்றன. மொழியைப் பயன்படுத்தி நமது அனுபவங்களை விளக்க முற்படுகின்றோம். மொழி என்பது எழுத்துக்கள், அவற்றின் ஒலி ஆகியவற்றின் சேர்க்கையாகும். ஒலியானது நம் உள்ளிருந்து வெளிவருவதாகும். எனவே, மொழிக்கு இருப்பிடம் நமது உள்ளமாகும். வார்த்தைகளை வாய் வழியாக உச்சரிக்கின்றோம். மொழிக்கு இருப்பிடம் நமது மூளையின் ஒரு பகுதியென்றும், அந்தப் பகுதியில்தான் நமது எண்ணங்கள் எழுத்து வடிவம் பெறுகின்றன என்றும், பிறகு வாய் வழியாக அதற்கான ஒலியை எழுப்புகின்றோம் என்றும், இவ்வாறாக மொழியாற்றல், பேசும் திறன் ஆகியவை உடம்பின் கூறுகளின் ஒரு பகுதியாக அமைந்துள்ளன என்றும், மூளையின் இயக்கமே எழுத்து ஒலி வடிவம் பெறுகின்றது என்றும் விஞ்ஞானிக்ள் கருதுகின்றனர். இப்பொழுதுள்ள சொற்களின் அமைப்பையும், அவற்றின் வரலாற்றையும் ஆராய்ந்து பார்த்தால் விஞ்ஞானிகள் கொடுக்கும் விளக்கம் ஏறக்குறைய சரியானது என்றே கருதத் தோன்றும். புலன்களையும், கருவிகளையும் நாம் பயன்படுத்தி செய்கைகளில் ஈடுபடும்பொழுது தேவையான சொற்றொடர்கள் காலப்போக்கில் இந்தச் செயல்களை விளக்க உருவகம் பெற்றுள்ளன என்பது உண்மைதான். அதாவது, அன்றாட அனுபவத்தை விளக்குவதற்கு நம்மிடையே தேவையான சொற்கள் இருக்கின்றன. அந்தச் சொற்கள் காலக்கிரமத்தில் தேவைக்கேற்ப பல மாறுதல்களையும் பெறுகின்றன. நாம் பொருள்களைப் பற்றிய அனுபவம் பெறப்பெற புதிய சொற்களை உருவாக்கும் ஆற்றலும் நமக்கு உண்டு என்பதால் புதிய சொற்களும் அகராதியில் இடம் பெறுகின்றன. இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது மொழியமைப்பு மனிதனின் ஆற்றலுக்கு உட்படுகிறது. அந்த ஆற்றலால் மொழி வளருகிறது, பரிணமிக்கின்றது என்றெல்லாம் கருதுவது இயற்கை என்றே தோன்றுகிறது.

மெய்யுணர்வாளர்கள் விஞ்ஞானிகளின் விளக்கத்தை முடிவான ஒன்றாக ஏற்பதில்லை. விஞ்ஞானிகளுடைய விளக்கத்திற்கும் அடிப்படையான விளக்கத்தை மெய்ஞ்ஞானிகள் தருகின்றார்கள். அதை நமக்கு அவர்களுடைய அனுபவத்தில் கிடைத்த விளக்கமாகத்

தருகின்றார்கள். அருளாளர்கள் நாம் பேசும் மொழியை, சொற்களை மனிதனின் மூளைப் பகுதியிலே உருப்பெற்று அங்கேயே மறைந்து விடும் பொருட்களாகக் கருதுவதில்லை. மனிதனின் உணர்வுகளுக்கெல்லாம் ஆதாரமாக ஒரு சக்தி உண்டென்றும், அந்தச் சக்தி இறைவனுடைய அம்சமென்றும், அந்தச் சக்தி உடலில் பல நிலைகளில் ஆதார சக்தியாக நின்று, தேவைக்கேற்ப பரிணாமம் பெற்று சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை ஆகிய ஆதாரங்களிலே பொருந்தி நின்று எழுத்தாகவும், ஒலியாகவும் ஓசையாகவும் பரிணமிக்கின்றது என்ற உண்மையை அருளாளர்கள் அனுபவபூர்வமாக நமக்குத் தெரிவிக்கின்றார்கள்.

**"பரம்பொருளின் விளக்கங்கள் எத்துனையோ அத்துனை சொற்கள் உள்ளன"** என்கிறது ரிக் வேதம்.

**"வாக்கு பிரம்மமாகும்"** என்கிறது பிரகதாரண்யக உபநிடதம்.

**"ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே"** எனத் திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்தார்.

**"பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்**
**அண்ட முதலான் அறஞ்சொன்ன வாறே".** **(திருமந்திரம் - 59)**

**"தானே அகார உகாரம தாய்நிற்கும்"** **(திருமந்திரம் - 901)**

அருளாளர்களின் அனுபவப்படி மொழியின் தோற்றமும் பிரபஞ்சத்தின் தோற்றமும் இணைந்தே காணப்படுகின்றன. பரம்பொருளே இவற்றின் தோற்றத்திற்கு மூல காரணமாகும். இறைவன் உயிர்கள்பால் அன்பு மேலிட்டு ஐந்தொழில்களை நடத்துவதற்காகப் பிரபஞ்சத்தையும், மொழியையும் அருளிச் செய்கின்றான். உயிர்கள் அறிவு விளக்கம் பெற்று இறைவன் திருவடி சேர வேண்டும். அதுவே பிறப்பின் நோக்கமாகும். அதற்குத் தேவை மலநீக்கம். மலநீக்கத்திற்காக தனு, கரண, புவன போகங்கள் இறைவனால் தந்தருளப்பட்டுள்ளன. அவற்றை உயிர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அனுபவம் பெற வேண்டும். இன்பத் துன்பங்களை அடைய வேண்டும். அதற்கு வழி செய்யும் வகையில் இறைவன் மொழியையும் அருளிச் செய்கின்றான். மொழிக்கு ஒலியுண்டு, பொருளுண்டு. சொற்பிரபஞ்சம் என்றும், பொருட்பிரபஞ்சம் என்றும் கூறுவார்கள். ஒலியின் மூலமானது நாதம் எனப்படும். நாதம் என்பது எழுத்தோசைக்கு முதன்மையாக நிற்பது. இறைவியின் அம்சமாக விளங்குகிறது. சிவம் தோன்றுவதற்கு முதல் நிலைக்களமாகிய ஓசையே நாதம் எனக் கூறுப்படும். நாதமும் விந்துவும் முறையே பேரறிவும், பேராற்றலும் வெளிப்படுவதற்கான தத்துவங்களாகும். சக்தியின் ஆர்வத்தால் தோன்றுவது நாதம். இதனை **"சோதி யதனில் பரந்தோன்றத் தோன்றுமாம் தீதில் பரை; அதன் பால்திகழ் நாதமே"** என்று திருமந்திர வரிகள் உணர்த்துகின்றன.

உயிரைப் பந்திக்கும் மூல மலம் ஆணவ மலமாகும். ஆணவத்தின் வன்மை தணிந்து அறிவின் விளக்கம் உள்ளத்தில் எழ வேண்டும். இதற்கு உதவுவது மொழி. கலைகளும் கூட நின்று உதவுகின்றன. அருளாளர்கள் மொழியையும் வாக்குகளையும் தூய உலகு என்பர். பரம்பொருள் பேரறிவும் பேராற்றலும் கொண்டதாகும். உயிரோ சிற்றறிவும் சிறு ஆற்றலும் கொண்டது. மலத்தில் அழுந்திக் கிடப்பது. மலம் அகல உயிர் கருவி கரணங்களோடு செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்பட வாக்கும் தேவையாகும். பரம்பொருள் அசையாது, அறிவுப்பிழம்பாகி நிற்கும் அமைதி நிலை சலனமற்றது. பிரபஞ்சத் தோற்றம் தொடங்கும்பொழுது மொழியின் இயக்கமும் தொடங்குகிறது. வாக்குகள் பிறக்கின்றன. ஓம் எனும் மூல மந்திரம் ஒலிக்கத் தொடங்குகின்றது. மற்ற பீஜ மந்திரங்கள் எழும்புகின்றன. ஐம்பத்தோரு எழுத்துக்களும் வடிவம் கொள்கின்றன. திருவருளின் ஆற்றலே இவ்வெழுத்துக்களை இயக்குகின்றது. ஐம்பத்தோரு எழுத்துக்களும் சக்தியின் வடிவாகக் கொள்ள வேண்டுமென்பார் திருமூலர். வேதங்களும், ஆகமங்களும் இந்த ஐம்பத்தோரு எழுத்துக்களால் ஆகியவை. ஐம்பத்தோரு அக்கரங்கள் மாறி மாறிப்பதங்களாகின்றன. அவை மாறி மாறி வாக்கியங்களாகின்றன. இறைவன் வேத ஆகமங்களை அவ்வாறே அருளிச் செய்வார். வேத ஆகம வாக்கியங்கள் அல்லது திருமுறைத் திருமொழி நாம் காதினால் கேட்கின்ற ஓசை மட்டும் ஆகாது. அந்த ஓசையின் வழியே எழுந்து நம்முள் ஒரு தெய்வீக உணர்வை உண்டாக்குகின்ற ஆற்றலும் ஆகும். இந்த ஆற்றல் எழுத்துக்கள் மறைந்தாலும், ஓசை நின்றாலும் தொடர்ந்து நமது உள்ளத்திலும், உடலிலும் சில சலனங்களை எழுப்புகின்றன. இந்தச் சலனங்கள் உயிரினைப் பரம்பொருளுடன் இணைந்து போகச் செய்யும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றன. இந்த ஆற்றல்தான் அருளாளர்களுடைய திருவாக்கிற்கு அடிப்படையாகும்.

விஞ்ஞானரீதியாக நாம் கண்களால் பொருட்களைப் பார்க்கிறோம். காதுகளால் ஓசையைக் கேட்கின்றோம். இது பரு உடம்பிலுள்ள கருவி கரணங்களின் இயக்கத்தால் நடைபெறுகிறது. விஞ்ஞானம் இதனைத் தூல நிலையிலேயே கண்டு ஆராய்ச்சி செய்கிறது.

ஆனால், எந்தவொரு பொருளுக்கும் நுட்ப நிலை உண்டு. அந்தப் பொருளின் உண்மையைக்குறிப்பது அந்த நுட்பநிலை. எழுத்துக்களுக்கும் நுட்ப நிலை உண்டு. நமது காதுகளால் கேட்க முடியாத ஓர் உணர்வினை எழுத்துக்களின் நுட்ப நிலையில் நாம் தெரிந்து கொள்ளலாம். அவ்வாறு தெரிந்து கொள்வதற்கு இறையருளுடன் கூடிய பயிற்சி தேவை. ஆழமாகப் பார்க்கும்பொழுது பரு நிலையை விட நுட்ப நிலையே வாக்கினுடைய வலிமையைக் காட்டுகிறது.

விஞ்ஞானிகள் ஒரு பொருளினுடைய பருத் தன்மையிலிருந்து

அதனுடைய நுட்பத் தன்மைக்குச் செல்கின்றார்கள். மெய்ஞ்ஞானிகள் நுட்பத்திலிருந்து பருத் தன்மைக்குப் போகிறார்கள். அணுவைப் பிளந்தால் அபாரமான சக்தி வெளிப்படுவதுபோல, நுட்பத்தை உணர்ந்தால் இறைத் தன்மை பெறலாம் என்பது அருளாளர்களுடைய அனுபவமாகும். மொழியைப் பொறுத்தவரையிலும் இதே நிலைதான். நமது உயிரின் மையமாகிய இறை நிலை எழுத்து வடிவமாகவும், ஒலி வடிவமாகவும் பொதிந்து கிடக்கின்றது. நம்முடைய அறிவுக்கும் எட்டாத நிலையில் இருக்கின்றது. பின்னர் சூக்கும நிலையிலிருந்து தூல நிலைக்கு வருகிறது. இவ்வாறு வாக்குத் தன்மை மாறி வருவது உயிரினுடைய தூல அறிவை விளக்கம் பெற உதவுவதற்கேயாகும். ஆகவே, வாக்கு என்பது இறை அம்சமாயினும், பகுத்துணர்வு நிலை பெற பயன்படுகிறது. இத்தகைய வாக்கு இல்லையெனில் உயிர் ஞானம் பெறமாட்டாது. இப்படிப்பட்ட வாக்குத் தோன்றுவதற்கு முதலோசையாக நாதம் உள்ளடக்கிக் கொண்டிருக்கும். மிக சூக்குமமான நிலையில் இது மேலும் இறைவனால் தூண்டப்படுகின்றது.

இந்த நாதத்தைச் சுத்த மாயையின் நுட்ப நிலை என்று அருளாளர்கள் கருதுகின்றனர். ஆக, சிவசக்தியின் அம்சமாகிய நாதத்தால் வாக்கும், வாக்கினால் உணர்வும், உணர்வினால் பல்வேறு மனோநிலைகளும், அந்த மனோநிலைகளினால் பலதரப்பட்ட அறிவும் நமக்கு விளங்கத் தொடங்குகின்றன. ஆகவே, அறிவின் உற்பத்திக்கு நாதமே காரணம் என்பது அருளாளர்களுடைய அனுபவம். நாதம் சூக்கும வாக்காகப் பரிணமிக்கின்றது. சூக்கும வாக்கிலிருந்து பைசந்தி வாக்கு வந்தடைகின்றது. சூக்குமத்தில் உள்ள வாக்கு ஓரளவு தூலமடைகின்றது. மயிலின் முட்டைக்குள் முழுமையான மயிலுக்கு இருக்க வேண்டிய எல்லா நிறங்களுக்குமான கரு அமைந்திருக்கின்றது. அந்த முட்டை பக்குவப்படும்பொழுது இந்த நிறங்கள் யாவும் பிரகாசம் பெறுகின்றன. பைசந்தி வாக்கு சித்தத்தில் உணர்வாய் நிற்கும் என்கிறது சிவப்பிரகாசம்.

**"வந்தடைந்து பின்னமாய் வண்ணங்கள் தோற்றம்**
**பெரும் அடைவு படஒடுக்கி மயிலண்ட சலம்நேர்"**

என்கிறது சிவப்பிரகாசம்.

சூக்கும நிலைக்கு அடுத்து பைசந்தி நிலை, அதைத் தொடர்ந்து வாக்கு மத்திமை நிலைக்கு வருகிறது. பேசுபவருடைய உள்ளத்திலே எழும்பும் நுண்ணிய உணர்வுகளுக்கு இந்த வாக்கு ஒரு வாகனமாகின்றது. செவியில் கேட்கப்படாதது. கழுத்திலே எழும்புவது. ஞானிகளால் உள்ளத்திலே உணரப்படும் ஓசையாக உள்ளது. சூக்குமமான நிலையில் அக்கரங்களுடைய வடிவு பிரிந்து தோன்றி விளங்குதலுக்கு இடமாவது.

**''உள்உணர் ஓசைஆகி, செவியினில் உறுதல் செய்யாது -**
**ஒள்ளிய பிராண வாயு விருத்தியை உடையது அன்றி,**
**தெள்ளிய அக்கரங்கள் சிந்திடும் செயலது இன்றி -**
**மெள்ளவே எழுவது, ஆகும் மத்திமை, வேறதாயே,''**
**(சிவஞான சித்தியார் - 41)**

வாக்குகளில் நான்காவது வைகரியாகும். தனது செவிக்கு மட்டும் கேட்கப்படுவது சூக்கும வைகரியாகும். தன் செவிக்கும், பிறர் செவிக்கும் கேட்கப்படுவது தூல வைகரியாகும். இது மனத்தில் எழும்பும் சொல்லுக்கு ஒலி வடிவம் கொடுப்பதாகும். பேசுபவனுக்கும் கேட்பவனுக்கும் இடையே பகுத்தறிவிற்கான உணர்வினைத் தோற்றுவிப்பதாகும். கழுத்திலிருந்து எழும்பி வாயில் நின்று வெளிவருவது. வைகரி நிலையில் அகங்காரமும் புத்தியும் சேர்ந்து செயல்படுகின்றன.

**''வைகரி செவியில் கேட்ப தாய், அத்த வசனம் ஆகி,**
**மெய்தரும்''**

என்கிறது சிவஞான சித்தியார்.

»ாக்கிற்கு மூலம் பிரணவம். **''எம்பிரான் ஓர் எழுத்தே''**, **''ஓரெழுத்தாலே உலகெங்கும் தானாகி''** எ«்பது திருமந்திரம். பிரணவமே திருவைந்தெழுத்தாகும். மொழியினுடைய ஐம்பது எழுத்துக்களும் திருவைந்தெழுத்தில் அடங்கும். வேதங்களும் ஆகமங்களும் ஐம்பது எழுத்துக்களில் அடங்கும். பிரபஞ்சத்திற்குக் காரணமான பரம்பொருள் மிக நுட்பமான நிலையில், பிரணவத்திலும் ஐந்தெழுத்திலும் உள்ளத்திலே சதா ஒலித்துக் கொண்டிருக்கும்.

**''ஐம்ப தெழுத்தே அனைத்துவே தங்களும்**
**ஐம்ப தெழுத்தே அனைத்தாக மங்களும்**
**ஐம்ப தெழுத்தின் அடைவை யறிந்தபின்**
**ஐம்ப தெழுத்தே அஞ்செழுத் தாமே''.** **(திருமந்திரம் - 2698)**

ஒரு பொருளுக்கு உருவம் உண்டு என்கிறபோது அதற்கான நுட்ப நிலை அருவமாய் இருப்பதில் வியப்பு ஒன்றுமில்லை. இந்தப் பிரபஞ்சம் முழுவதிலும் அணுக்கள் நிரம்பியுள்ளன என்பது விஞ்ஞானம். அதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனாலும், அணுக்களை நம் கண்களால் காண முடிவதில்லை. அதேபோல, நாம் பேசும் தூல வாக்கிற்குச் சூக்கும நிலை உண்டு என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அத்தகைய உணர்வும் சூக்கும நிலை வாக்கும் இணைந்தே நிற்கின்றன. எல்லாவிதமான சூக்கும வாக்குகளுக்கும் மூலமாகிய பொருள் ஓங்காரமாகும். ஓங்காரத்தில் எல்லாம் அடங்கி நிற்பது. இதை உணரும் வகையில் பயிற்சி பெற வேண்டும். ஓங்காரத்தில் பலவகையான எழுத்துக்களும், நூல்களும் அடங்கியுள்ளன.

அதன் இயல்பு அறிந்து பயிற்சி பெறுவோர்க்கு நல்ல பேறுகளும், வீட்டுப் பேறும் கிடைக்கும் என்பார் திருமூலர்.

**"ஓமெனும் ஓங்காரத் துள்ளே யொருமொழி**
**ஓமெனும் ஓங்காரத் துள்ளே யுருவரு**
**ஓமெனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்**
**ஓமெனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே".**

**(திருமந்திரம் - 2676)**

அருளாளர்களுடைய திருவாக்கு, அருள்வாக்கு, உள்ளத்தின் மையத்திலிருந்து இறையுணர்வின் தொடக்கமாகிய நாத அனுபவத்திலிருந்து வெளிக் கிளம்புகின்றது. மொழி மொழியாக மட்டும் பயன்படுத்தப் படவில்லை. அந்த மொழியில் இறை சக்தி, ஆன்மிக ஆற்றல் இணைந்து நிற்கின்றது. அந்த மொழியினுடைய ஒலி கேட்போருடைய உள்ளத்தை நேரடியாகத் தாக்கவல்லது. சிற்றறிவுக்கு அப்பாற்பட்ட ஒரு உணர்வு நிலையிலிருந்து அது பேரருவி போல வெளிக்கிளம்பிக் கேட்போர் மனதையெல்லாம் புனிதப்படுத்துகிறது. அதே நேரத்தில் அருளாளர் களுடைய திருவாக்கு எளிமையும், தெளிவும் மிக்கது. அறிவு நிலையைத் தாண்டி உணர்வு நிலையில் இயங்குவதால் அவர்களுடைய திருவாக்கு சொற்கள் தாங்கி நிற்கின்ற கருத்துக்களுக்கு அப்பால் ஆழம் கொண்டதாக அமைகின்றது. எளிமை, தெளிவு, தூய்மை, ஆழம் இத்துணை இயல்பு கொண்டது அருளாளர்களுடைய திருவாக்கு.

அறிவுரீதியில் அவர்களுடைய அருள்வாக்கை ஆய்வு செய்தால் அவற்றிலே பொதிந்து கிடக்கும் உண்மைகள் புலப்படாது. பகுத்தறிவினைத் தள்ளி வைத்துவிட்டு அந்தத் திருவாக்குகளுக்கு நம்மையே அர்ப்பணம் செய்து கொண்டால் அவற்றின் உண்மைக் கருத்துக்கள் நம்முடைய உள்ளத்திலே உதயமாகும். இந்தக் கருத்துக்கள் நம்முடைய உள்ளத்திலே படியப்படிய அறியாமையாகிய இருள் நீங்கி ஓர் புத்தொளி தோன்றும். இந்தப் புத்தொளியில் மூழ்கி நிற்கும் உயிரானது தன்னை மறந்து உணர்வு நிலையில், சலனமின்றி அருள்வாக்கின் நுண்ணிய நிலையில் அமைதியடையும். **"பெற்றார் உலகில் பேசாப் பெருமையே"** என்கிறது திருமந்திரம்.

பரம்பொருளின் இயல்பான நிலை மௌனம் என்று அருளாளர்கள் கூறுகின்றனர். தற்போதம் இழந்து இறையுணர்வோடு கலந்து நிற்கும் நிலையை மோன சமாதி என்று அருளாளர்கள் குறிப்பிடுகின்றனர். மோன சமாதி பரம்பொருளின் இயல்பான நிலை என்றால், வாக்கு பரம்பொருளின் தோற்ற நிலையாகும். தோற்றம், உற்பத்தி, வளர்ச்சி, ஒடுக்கம் இவையெல்லாம் வாக்கின் பல்வேறு இயக்க நிலைகளாகும்.

மொழியின் உண்மை நிலையை நன்கு உணர்ந்தவர்கள் அருளாளர்கள். மொழியிலே இறைவனைக் காண்பதால் அவர்களுடைய அருள்வாக்கு இறை உணர்வை பிரதிபலிக்கின்றது.

சேக்கிழார் பெருமான் ஆனாய நாயனார் புராணத்தில் நாயனார் குழலூதிச் சிவபெருமானது திருவைந்தெழுத்தை இசைப்படுத்தி வாசிக்கும்பொழுது அகில சராசரங்கள் மட்டுமல்ல இறைவனாரே கேட்டு இன்புற்றதாகக் கூறுகின்றார். ஆனாய நாயனார் ஓர் மெய்யன்பர். அவருடைய சூழலில் எழும்பிய இசை அன்புநிறைந்த மனத்தால் விளைந்தது. அது திருவைந்தெழுத்தை மையமாகக் கொண்டது. திருவைந்தெழுத்திற்கு மலம் நீக்கும் வலிமையுண்டு. அதனுடைய இசை உயிர்களின் உண்மையான இன்பத்தைப் பெருக்கும். அத்தகைய இன்பம் உயிர் வகைகள் எல்லாவற்றையும் தொட்டது. அதுமட்டுமல்ல உலகத்தையும் நிறைவித்து, வானுலகத்தையும் தன் வசம் கொண்டது. இறைவனுடைய திருச்செவியின் பக்கத்தில் அணையும்படி பெருகிற்று. இது ஓர் அருளாளருடைய பெருமைமிக்க இசை நிலையாகும்.

**"மெய்யன்பர் மனத்தன்பின் விளைந்தவிசைக் குழலோசை**
**வையந்தன் னையுநிறைத்து வானுந்தன் வயமாக்கிப்**
**பொய்யன்புக் கெட்டாத பொற்பொதுவி னடம்புரியும்**
**ஐயன்றன் திருச்செவியி னருகணையப் பெருகியதால்".**

**(பெரியபுராணம் - ஆனாய நாயனார் புராணம் - 962)**



# 35. ''என்னை ஆண்டு கொண்டான்''

மூன்று மாதங்களுக்குள் இரண்டு பெரிய அறுவைச் சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டு, பிணியும், வலியும் என்னை வருந்திக் கொண்டிருந்த நேரம், சிந்தனைகள் எல்லாம் உடல் உபாதையைப் பற்றியே. மனதை மாற்றி, எண்ணங்களை இறைவன்பால் வைக்க முயன்றும் இயலவில்லை. உடலின் உபாதை உள்ளத்தை நிரப்பி, வேறொரு பொருளையும் பற்றிச் சிந்திக்கவிடாமல் தடை செய்தது. அன்பர் ஒருவர் என்னைப் பார்க்க வந்தார். திருவாசகப்பிரதி ஒன்றை என்னிடம் கொடுத்துவிட்டுச் சென்றார். அது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட நூல் திரு நீ.கந்தசாமிப்பிள்ளை அவர்கள் அந்த நூலின் பதிப்பாசிரியர். பழைய பதிப்பு. பக்கங்கள் கிழிந்திருந்தன. படுக்கையிலே கிடந்து வேறொன்றும் செய்ய இயலாத நேரத்தில் திருவாசகத்தைச் சற்று படித்தாவது எனது துன்பத்தைப் போக்கிக்கொள்ளலாம் என்கின்ற எண்ணம் முதல் தடவையாக எழுந்தது. பெருத்த இன்னல்களுக்கு ஒருவர் ஆளாக்கப்படும்போது, வேறு வழி தெரியாமல் இறைவனை நினைந்து, தன்னைக் காப்பாற்ற வேண்டுமென்று வருந்தி வேண்டிக்கொள்வது மனித இயல்பு என்று சொல்லுவதுண்டு. ஆனால், அந்த நிலையில்கூட நான் இல்லாத தருணம் அது. சற்று பிரயாசைப்பட்டு மனதை ஒருவழிப்படுத்தி, எனது கைக்கு வந்த திருவாசகப் பிரதியின் பதிப்பாசிரியரின் முன்னுரையைப் படிக்கத் தொடங்கினேன்.

முன்னுரையின் ஒரு பகுதியை அப்படியே தருகிறேன். அதைச் சுருக்க விரும்பவில்லை. அதிலுள்ள உணர்வுகள் அத்தகையவை. அதற்கு மேல் சொல்ல விரும்பவில்லை.

''மற்றொரு நிகழ்ச்சி. என் நண்பர் ஒருவரைக் குறித்தது; நண்பர் என்று சொல்லுவதிலும், ஆசிரியர்களுள் ஒருவர் எனக்கூறுவதே பொருத்தமாகும். இவர் எனக்கு இலத்தீன் மொழி கற்பித்தவர்; கத்தோலிக்கக் கிறிஸ்துவ சமயத்தினர்; அழுத்தமான சமயப்பற்றும் நெறியும் உடையவர்; வழக்கறிஞர்; நான்காம் வகுப்புக்குமேல் தமிழ்ப் பயிலாதவர்; இலத்தீன், ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளில் வல்லவர். இப்போது இருந்தால் இவருக்கு வயது எண்பத்து நான்கு இருக்கலாம். நாற்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு நாள், நீதிமன்றத்தில் வழக்கு உரைத்து உடலும் மனமும் அலுத்து மாலையில் வீட்டிற்கு வந்தார். நான் எப்போதும் மாலைக்காலத்தில்தான் அவரிடம்

இலத்தீன் படிப்பது வழக்கம். உடைகளை மாற்றிக் கொண்டு வந்து என்முன் நின்றார். ''தம்பி, என் வாழ்க்கை ஆண்டவனைத் தூற்றுவதிலேயே கழிகிறது. என்ன செய்வது, மனம் அமைதியடையவில்லை; இச்சொற்கள்தான் ஆறுதல் "a broken and a contrite heart O God thou will not despise' (Psalms 51-57)

என்று சொல்லிக் கொண்டு அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தார். பின்னர், அவ்விவிலிய நூல் சொற்றொடரின் அருமையை எல்லாம் எடுத்துக்கூறி'' பார், இந்த ஒரு சிறுதொடர் உள்ளத்தை எவ்வாறு அமைதி செய்கின்றது; இத்தகைய அரிய வாசகங்கள் நம் தமிழில் இல்லையே'' என்றார். நான், உடனே அவர் கூறிய விரிவுரைகளுக்கெல்லாம் பொருத்தமானதும், இனிய எளிய சொற்களாலானதுமான **''ஏசினும், யான் உன்னை ஏத்தினும், என் பிழைக்கே குழைத்து வேசறு வேனை விடுதி கண்டாய்''** என்னும் திருவாசகத் தொடரைக் கூறி, திருவாசகம் என்றால் என்ன என்பதையும், மாணிக்க வாசகர் யார் என்பதைப்பற்றியும் விளக்கமாகத் தெரிவித்தேன். மனம் மகிழ்ந்தார். ''அருமையாக இருக்கிறது; இதுகாறும் தெரிந்து கொள்வதற்கியலாது போயிற்று; இனியும் தெரிந்து கொள்ளும் வாய்ப்பில்லை; அதனால் குறையில்லை; நீ ஒவ்வொரு நாளும் திருவாசகத்தில் ஒரு பாட்டை வாசித்துச் சொல்'' என்று சொன்னார். அவ்வாறே, நானும் சிலநாள் சொல்லி வந்தேன். சில ஆண்டுகள் கழிந்தன. அவர் நோய்வாய்ப்பட்டிருந்தார். காணச் சென்றேன்; ஆவி அகத்ததோ புறத்ததோ என்ற நிலையில் படுத்திருந்தார். என்னைப் பார்த்ததும், ''தம்பி அதிகம் பேசுவதற்கில்லை; நீயும் என் நலத்தைப் பற்றி ஒன்றும் கேட்க வேண்டாம். காலத்தை வீண்போக்காது திருவாசகத்தில் ஒன்று சொல்'' என்றார். நானும் மிகவும் தளர்ந்த குரலில்

**மா வடு வகிர் அன்ன கண்ணி பங்கா! நின் மலர் அடிக்கே**
**கூவிடுவாய்? கும்பிக்கே இடுவாய்? நின் குறிப்பு அறியேன்;**
**பா இடை ஆடு குழல் போல், கரந்து பரந்தது, உள்ளம்,**
**ஆ: கெடுவேன்; உடையாய்! அடியேன் உன் அடைக்கலமே.**

என்ற செய்யுளைப் பாடினேன். ''போதும், அந்தத் தாளை எடுத்துப் பெரிய எழுத்துக்களில் 'மலர் அடிக்கே கூவிடுவாய் அடியேன் உன் அடைக்கலமே' என்பதை மட்டும் எழுதிக் கொடு'' என்றார். அவ்வாறே செய்தேன். அத்தாளை வாங்கி அருகே வைத்துக் கொண்டார். ஒருமுறை என்னைப் பார்த்தார். ''நீ போகலாம். இனி வரவேண்டியதும் இல்லை'' என்று கூறிவிட்டுக் கண்ணை மூடிக் கொண்டார். இனி எழுத என் மனம் வருந்துகின்றது. மறுநாள் அவர் இல்லை.''

மேற்கண்ட செய்யுள் மணிவாசகப் பெருமானின் அடைக்கலப் பத்து எனும் பாடலில் வருகிறது. பக்கங்களைத் திருப்பி, அந்தப் பாடலை அடைந்து படிக்கத் தொடங்கினேன். படிக்கப் படிக்க மணிவாசகப்

பெருமானுடைய அருள் அனுபவத்தின் எல்லையற்ற அகலமும், ஆழமும், அதற்குக் காரணமாக இருந்த இறைவனின் பெருமையும் என் உள்ளத்தில் எங்கோ ஓரிடத்தில் பதியத் தொடங்கின.

**"ஆரறி வார்எங்கள் அண்ணல் பெருமையை**
**ஆரறி வார்இந்த அகலமும் நீளமும்"** **(திருமந்திரம் - 95)**

என்றார் திருமூலர்.

மணிவாசகப் பெருமான் இந்த அகலத்தையும், நீளத்தையும், ஆழத்தையும் தனதாக்கிக் கொண்டவர். எனவே, அந்த ஒப்பற்ற அருளாளர் **"அடியேன் உன் அடைக்கலமே"** என்று பாடினால் இறைவனும் அவரும் விவரிக்கவொண்ணாத நிலையில் ஒன்றிப் போனார்கள் என்பதே பொருளாகும். அடியேனைப் போன்றவர்கள் தொலைதூரத்தில் நின்று அந்தக் காட்சியைப் பார்க்க முயலுபவர்கள். மாணிக்கவாசகர் சிவனருள் பெற்றார். **"சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்"** (சிவபுராணம்). சிவனிடம் அபயம் புகுந்தார். **"அடியேன் உடையாய் உன் அடைக்கலமே"**. தன்னை இழந்தார். **"கொண்டது என்தன்னை"**. இறைவன் அவரை ஆட்கொண்டான். தன்னையும் காட்டிக் கொண்டான். பிறவிக் கடலிலிருந்து அவரை மீட்டுக் கொண்டான்.

**"காட்டாதன எல்லாம் காட்டி, பின்னும்**
**கேளாதன எல்லாம் கேட்பித்து, என்னை**
**மீட்டேயும் பிறவாமல் காத்து, ஆட்கொண்டான் -**
**எம்பெருமான் செய்திட்ட விச்சை - தானே!"** **(திருச்சதகம்)**

இது என்ன விந்தை? நம்மைப் போன்றவர்கள் உலக விஷயங்களில் சிறிய சாதனை புரியும்முன்னரே பெருமை கொள்கிறோம், இறுமாப்பு அடைகிறோம். மக்கள் தம்மைப் போன்றவர்கள் இல்லையென்று உலகெங்கும் பறைசாற்றிக் கொள்கிறார்கள். எந்தச்சிறிய சாதனைக்கும் மூல காரணமாக இறை அருள் வேண்டுமென்பதை உணர்ந்து கொள்வதில்லை. அந்த நேரங்களில் இறைவனைப் பற்றிய எண்ணமும் தோன்றுவதில்லை.

மணிவாசகப் பெருமான் ஒரு ஒப்பற்ற அருளாளர் அல்லவா. அவருடைய உள்ளத்திலே தோன்றும் எண்ணங்கள் வேறு. தேவர்களும் அறியாத தேவ தேவன் தன்னை அடியனாக்கி, அச்சம் தீர்த்து, ஆட்கொண்டு உள்ளம் புகுந்த பாங்கினை எண்ணிப் பார்க்கின்றார். இறையமுதம் ஊறிய உள்ளம் கரைகின்றது. தன்னையும் ஒரு பொருளாகக் கருதி இறைவன் ஆட்கொண்ட தன்மையைப் பற்றி நினைந்து வியக்கின்றார். ஏன்? தனது சிறுமை, இறைவனது பெருமை ஆகிய இரண்டும் அவருடைய எண்ணங்களில் மாறி மாறித் தோன்றுகின்றன. **"சிவன் எம்பிரான் என் சிறுமை கண்டும் என்னை ஆண்டு கொண்டான்"** என்று கூறிக்கொண்டு, தனக்குத் தகுதியில்லாதபோதிலும், இறைவன் தன்னை ஆட்கொண்ட

பெருமையை மீண்டும் மீண்டும் நினைந்து பார்க்கின்றார். சீவர்களின் சிறுமையைக் கண்டும் அவர்களை ஆட்கொள்ளுதல் இறைவனின் இயல்பாகும். ஆனால், தனது சிறுமையை உணர்ந்து கொள்வது சீவர்களின் இயல்பாகாது. சிவ்னது அருள் பெற்ற பின்னரே உயிரானது இந்த நிலையை அடைய முடிகின்றது. மணிவாசகப் பெருமான் இறைவனுடைய அருளாற்றலைத் தன்னுள் உணர்ந்து கொண்ட காரணத்தினால், தன்னைச் சுட்டெரித்துக் கொண்டு இறை ஒளியில் கலந்து, தனது உண்மை நிலையைத் தெரிந்து கொண்டு இறைவனுக்கு எவ்வாறு நன்றிக்கடன் செலுத்துவது என்று வியந்தவண்ணமாகத் தனது சிறுமையை வலியுறுத்துகின்றார்.

சிறுமை என்றால் என்ன? **''வெறுப்பனவே செய்யும் என் சிறுமையை''** என்றார் மணிவாசகப் பெருமான். விரும்பத்தகாதவற்றைச் செய்யத் துணியும் சீவர்களின் இயல்பினை இவ்வாறு குறிப்பிடுகின்றார். உடலைச் சார்ந்த புலன்களும், உட்கருவிகளும் எல்லா வேளைகளிலும் உள்ளத்தைப் புறத்தே அழைத்துச் செல்லுகின்றன. புலன்வழி சார்ந்து, பொருள்களையும், இன்பத்தையும் விரும்பி அவற்றில் ஈடுபடுவதே உயிரின் இயல்பாகத் தோன்றுகிறது. உடல் இயற்கையின் வலிமை பெரிது. அதனால் ஏற்படும் ஆசாபாசங்கள் மிக்க வலிமையுடன் உயிரை ஒருவித மயக்கத்தில் ஆழ்த்துகின்றன. மண், பெண், பொன் என்று உருவகம் கொடுத்து மக்கள் தங்களது சக்திகள் முழுமையும் வீணாகும்வண்ணம், இன்பங்களையும், துன்பங்களையும் மேலும் மேலும் சேர்த்துக் கொள்கின்றனர். உண்மையில் புலன்கள் மக்களுக்கு வஞ்சனை புரிந்து வருகின்றன என்பதை உணர்ந்து கொள்வதில்லை.

**''மாயக் குழியில் விழுவர் மனை மக்கள்**
**பாசத்தில் உற்றுப்பதைக்கின்றவாறே''**

என்றார் திருமூலர்.

உடலும் அதனைச் சார்ந்த அனுபவங்களுமே உயிரைத் தன்வசப்படுத்தி, அடிமையாக்கி, வேறொன்றையும் அறியவிடாத வகையில் கட்டுப்படுத்திவிடுகின்றன. புறக்கண்களே பார்க்கின்றன. அகக்கண்கள் மூடிக்கிடக்கின்றன. அந்த நிலையில் செய்வதெல்லாம் வெறுப்பனவே ஆகும்.

எனது அற்பத்தனத்தால் வெறுப்புண்டாகும்படி காரியங்களைச் செய்து வருகின்றேன் என்கிறார் மாணிக்கவாசகர். மாசு பட்ட மனமும், பரம்பொருளை அறியாத கல்வியும் தகாதவற்றைச் செய்ய ஏதுவாக நிற்கின்றன. நான் என்கிற உணர்வு இறை அனுபவத்திற்குத் தடையாகிறது. மனமோ துன்பக்கடலில் அகப்பட்ட தோணிபோல் தவிக்கிறது. வினைகள் கடல் போல் வளர வளரப் பல பிறவிகள் எடுக்கவும் நேரிடுகிறது. உலகக்காட்சியில் ஈடுபட்டுத் தவிப்பதை **''வெகுளி வலையில்**

அகப்பட்டுப்புரள்வேனை'' என்கிறார் மணிவாசகர். புறப்பற்றுகளில் ஆழ்ந்து கிடப்பதற்குக் காரணம் எனது என்கின்ற உணர்வு. அந்த உணர்வினை நீக்காமல், பிறவிப் பெருங்கடலில் மூழ்கி, வினைகளைக் கூட்டி, மேலும் மேலும் துன்பப்படுவதை **''வன்மத்து இட உடைந்த தாழியைப் பாவு தயிர்போல் தளர்ந்தேன்''** என்றார். அறியாமை இருள் பரவியிருக்கும் உள்ளம் இறைவனைக் காண இயலாமல் தன்னைத்தானே அழித்துக் கொள்கின்றது. இந்த நிலையில் புரியும் செயல்களெல்லாம் வெறுப்பனவே ஆகும்.

உயிருக்கு நன்மை தருவதைப்பின்பற்றாமல் தீமையைக் கொண்டு சேர்க்கும் காரியங்களிலே ஈடுபடுவதே சிறுமையாகும். இந்தத் தீமைகளால் உயிரானது அல்லல்பட்ட நிலையில் வாழ்நாட்களை வீணடிக்கின்றது. பிறவி என்கிற பெருங்கடலிலே நீந்தும் நிலை அறியாது, மூச்சு முட்டித் தனியாகக் கிடந்து உயிர் தத்தளிக்கின்றது. அலை அலையாகத் துன்பங்கள் உயிரை அங்குமிங்கும் மோதி அலைக்கின்றன. பெண் என்கிற சூறாவளி உயிரைச் சுழற்றி எறிந்து, ஆசை என்கிற சுறாமீனின் வாயிலே தள்ளுகிறது. இந்தத் துன்ப நிலையில் உயிருக்கு யாதொரு பற்றுக்கோடும் இல்லை. ''இறைவா! இறைவா!'' என்று அழுது தீர்த்தாலொழிய இந்தத் துன்பம் நீங்காது.

**''யான், இடர்க் கடல் வாய்ச் சுழிசென்று, மாதர்திரை பொர, காமச் சுறவு எறிய அழிகின்றனன்; உடையாய்! அடியேன் உன் அடைக்கலமே!''**

(திருவாசகம் - அடைக்கலப் பத்து 409)

நாம் தேடி அடைய வேண்டியது இறைவனுடைய அருளாகும். ஆனால், நாம் அறியாமை எனும் இருளில் மூழ்கி உடலைச் சார்ந்த அனுபவங்களை எந்நேரமும் பின்பற்றித் திரிகின்றோம். இறைவனுடைய அருள் எல்லைக்குள் நாம் இருந்தாலும், சிற்றின்ப வாழ்வை நாம் எல்லாவற்றிலும் மேலாகக் கொண்டிருப்பது நமது சிறுமையே ஆகும். பாற்கடல் ஒன்று உண்டு. அதில் வாழும் மீன்களுக்குப் பாற்கடலே ஆதாரமாகும். ஆனால், அதனை உணராமல் பாலைக் குடித்துப்பசி தீராமல், மீன்கள் கீழ்மையான பிராணிகளைப் புசிப்பதுபோல உயிர்களும் அருள் எல்லைக்குள் இருந்தாலும் பேரின்பத்தை நுகராமல், சிற்றின்பங்களில் மருண்டு நிற்றல் சிறுமையே ஆகும்.

**''பால்ஆழி மீன்ஆளும் பான்மைத்(து) அருள் உயிர்கள்**
**மால்ஆழி ஆளும் மறித்து''**

**(திருவருட்பயன் - உமாபதி சிவாசாரியார்)**

இறைவனுடைய திருவடிக்கு உருகித் தவிக்கும் மணிவாசகப் பெருமான் தன்னை இறைவன் உடன் அழைத்துச் செல்லவில்லையே என்று ஏங்குகின்றார். இறைவனுடைய சேவடி சேரத் தகுதி பெற்ற அடியார்கள் பழுத்த மனத்து அடியார்கள். இறைவனின் துணை கொண்டவர்கள்.

ஐந்தெழுத்து என்னும் தெப்பம் பற்றிப்பிறவிக் கடலைத் தாண்டும் தகுதியுடையவர்கள். வெகுளி மயக்கங்களை இன்னதென்று தெரிந்து கொண்டு திருவருளால் அவற்றிடமிருந்து தங்களை விலக்கிக் கொண்டவர்கள். **''நின் கழல் துணை கொண்டு இழிகின்ற அன்பர்கள் ஏறினர் வான்''.** இறைவனுடைய திருவடி நிழலின்கீழ் கிடக்கத்தக்கன வெல்லாம் பெற்றவர்கள். பெறவேண்டியது இறைவனுடைய திருவருளாகும். அதற்கு மேலான செல்வமும் இல்லை. அருட்செல்வத்தைப் பெற முயலாமல் பொருட்செல்வத்தை நாடி அலைவது சிறுமையாகும். இந்தச் சிறுமைக்குக் காரணம் அறியாமையே. தன்னைப் பற்றிய அறியாமை. இறைவனைப்பற்றிய அறியாமை, இறைவனை உணர்ந்து கொள்வதற்குரிய முறைகளைப் பற்றிய அறியாமை. இவ்வாறு அறியாமை எனும் இருளிலே மூழ்கிச் செய்யத்தகாதவற்றைச் செய்வது சிறுமையே ஆகும். இந்த அறியாமையை நீக்க இறைவனுடைய திருவருளே வழிகாட்டும். அவனுடைய திருவடிகளிலே தஞ்சம் புகுந்தாலொழிய இந்த அறியாமை நீங்காதே.

**''பிறிவு அறியா அன்பா, நின் அருள் பெய் கழல் தாள் இணைக் கீழ்,**
**மறிவு அறியாச் செல்வம் வந்து பெற்றார், உன்னை வந்திப்பது ஓர்**
**நெறி அறியேன்; நின்னையே அறியேன்; நின்னையே அறியும்**
**அறிவு அறியேன்; உடையாய்! அடியேன் உன் அடைக்கலமே''.**

**(திருவாசகம் - அடைக்கலப்பத்து - 414)**

ஆன்மாக்கள் இறை அருளின் வியாபகத்திலேதான் தங்கி இருக்கின்றன. அவன் அருளின்றி வேறொன்றும் இல்லை. அவ்வாறு தங்கியிருப்பினும், அருள் நிலையினை அறிந்து கொள்ள இயலவில்லை. இதற்குக் காரணம் ஆணவ மலமே. இதையும் ஆன்மா உணருவதில்லை. ஆணவ மலம் உயிரினுடைய அறிவை மறைத்துத் தான் என்கிற நினைப்பில் உயிரை நிற்கச் செய்கிறது. செயல்களைப் புரியத் தூண்டுகிறது. உடலும், உடலின் கருவிகளும் உயிரோடு சார்ந்து நிற்கும் காரணத்தினால் அவற்றைத் தவிர வேறொன்றும் இல்லை என்கிற உணர்வினை ஏற்படுத்துகிறது. உயிர் அறிவுடைய பொருள் என்று அருளாளர்கள் நமக்கு விளக்கியுள்ளார்கள். எனினும் உயிரானது சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் இயல்பினைப் பெற்றிருக்கின்றது, பளிங்கைப்போல. ஆகவே, கருவிகளைச் சார்ந்து நிற்கும்பொழுது, கருவிகளின் இயக்கத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி ஒரு மறைப்பு நிலையில் இருக்கிறது ஆணவம் என்கிற மலத்தினால் உண்மை அறிவு மறைக்கப்பட்டு உயிரானது பாசத்துடன் பொருந்தி, பாச காரியங்களுக்காக உடலையும், உடலின் கருவிகளையும் பயன்படுத்திக் கொள்கிறது.

❋ ❋ ❋

# 36. "நின் பெருமையினால் பொறுப்பவனே"

அறியாமையின் காரணத்தால் உலக வாழ்க்கையே மெய்யெனக் கொண்டு, உடலையும், உள்ளத்தையும், சிந்தனைகளையும் வினைக்கு ஆளாக்கி, அறம், பாவம் என்கிற கயிற்றால் கட்டுண்டு திரியும் நிலையைச் சிறுமை என்று கூறிய மணிவாசகப் பெருமான், இறைவனுடைய பேரருளால் அவன்தாள் வணங்கி, தாயினும் சிறந்த தத்துவனை எண்ணி எண்ணி, அவனுடைய பெருமையைப் பற்றி வியந்து, சிறுமை பொருந்திய தனது உயிருக்கும் ஒளியைக்காட்டி, வழியைக் காட்டி, தன்னை ஆட்கொண்ட இறைவனுடைய பெரும் கருணையை உணர்ந்து உள்ளம் மகிழ்கின்றார். நெகிழ்கின்றார். இறைவன் அளவற்ற பெருமையுடையவன். விண்ணுலகத்தில் வாழ்பவர்கள்கூட அறிய இயலாதவன். **"வான நாடரும் அறியொணாத நீ"** என்றார் மாணிக்கவாசகர். எல்லோருக்கும் மேலான பெருமையுடையவன் என்றார் திருமூலர். வானுலகவாசிகள் இறைவனை அறிய முயன்றாலும், அவர்களுடைய அறிவுக்கு அப்பாற்பட்டவன்.

**"ஏனோர் பெருமையன் ஆகிலும் எம்மிறை**

**... ... ... ...**

**வானோர் அறியும் அளவல்லன் மாதேவன்"**

**... ... ... ..."** **(திருமந்திரம் - 3024)**

அவன் அரியவன். மிக உயர்ந்த நிலையில் உள்ளவர்களாகிய வானவர்களும் அறியாத கோலம் படைத்தவன் அத்தகையவன் திருத்தில்லையில் யாவரும் காணக் கூத்தனாக விளங்குகின்றான். எல்லோரும் பார்க்கும் வகையில் வந்து என்னைக் கண்டு கொண்டான். அது எத்தனை சிறப்பு என்பார் மணிவாசகப் பெருமான்.

**"மேலை வானவரும் அறியாததோர்**

**கோலமே! எனை ஆட்கொண்ட கூத்தனே!"**

இறைவன் எல்லாக் குணங்களையும் கொண்டவன். குணங்களுக்கு அப்பாலும் நிற்பவன். எல்லா உயர்வுகளுக்கும் மேம்பட்ட உயர்வுகளை உடையவன். அத்தகையவன் என்னுடைய உள்ளத்தில் இருளை அழித்து, ஞானத்தையும், பக்தியையும் அடியேனுக்கு அருளினான் என்பார் நம்மாழ்வார்.

**''உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்**
**மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்''** (திருவாய்மொழி)

இறைவனுடைய பெருமையை அவனுடைய பெரும் கருணையில் காணலாம். எல்லாவற்றையும் பொறுத்து அருளுபவன் அவன். நமது பிழைக்கு இரங்குபவன். நமது சிறுமையால் நாம் செய்யும் அற்பத்தனமான காரியங்களையும் பொறுத்து, நமக்குப்பல வாய்ப்புகளை அளித்து, அவனை நாம் நாட வேண்டும் என்கிற அவாவிற்கு நம்முடைய உள்ளத்திலே வித்திடுகின்றான்.

இறைவனுடைய பொறுமைக்குப்பல உதாரணங்கள் கூறுவதுண்டு. கருடனால் துன்புறுத்தப்பட்ட பாம்புகள், கருடனுக்கு அஞ்சி சிவபெருமானிடம் அடைக்கலம் புகுந்தன. சிவபெருமானும் அவற்றை அணிகளாகப்பூண்டு கொண்டார். பின்னர் தாருகாவன முனிவர்கள் வேள்வியிலிருந்து தன்பால் சினந்து வந்த பாம்புகளையும் கையால் பற்றி ஆபரணங்களாக அணிந்து கொண்டார். சிவபெருமானின் திருவுருவத்தில் எங்கும் பாம்பு. **''அராப் பூண்பவனே''** என்பார் மாணிக்கவாசகர்.

காரைக்கால் அம்மையாருக்குப் பாம்பென்றால் பயம் போலும். இறைவனுடைய திருமேனியில் உள்ள பாம்புகளைப் பார்க்கின்றார். ''எம்பெருமானே! இந்தப் பாம்புகளை நீ பூணக்கூடாது. அவற்றை அகற்றி விடு. உனக்கு வேறு ஆபரணம் இல்லையா? எத்தனையோ பொன் ஆரங்கள் இருக்கின்றனவே. நீ விரும்பினால் அவையெல்லாம் கிடைக்காதா? பொன் ஆரம் ஒன்றை நீ அணிந்து கொள்ள வேண்டும். திரிபுரங்களை வென்ற உனக்குப்பொன் ஆரம் கிடைக்காதா?'' என்று காரைக்கால் அம்மையார் தாய்ப்பாச உணர்வுடன் சிவபெருமானிடம் வேண்டிக்கொள்கின்றார்.

அம்மையார் மீண்டும் அந்தப் பாம்புகளைப் பார்க்கின்றார். சிவபெருமானுடைய திருமேனியில் பாதியாக இறைவி வீற்றிருக்கின்றாள். அவள் இமவானுடைய அருமைச் செல்வியாவாள். ஒரு கணமும் சிவபெருமானிடமிருந்து பிரிய மாட்டாள். இடப்பக்கத்தில் நிற்பவள். பெருமானின் திருமார்பில் உள்ள ஒரு பயங்கரமான பாம்பு இறைவி இருக்கும் பக்கம் நகருவதைக் காண்கின்றார். உள்ளத்திலே ஒரு பெருத்த அச்சம் தோன்றுகிறது. இவ்வாறு பாம்பு நகர்ந்து வருவதை இறைவிக்குத் தெரிவிக்க வேண்டுமே. இறைவியோ அந்தப் பாம்பைப் பார்க்காததுபோல் இருக்கின்றாள். பெருத்த தாயன்புடன் காரைக்கால் அம்மையார் மக்களை நோக்கி ''தகுதியுடையவர்கள் இதைப் பற்றி ஏதாவது செய்யுங்கள். பாம்பு

மேலும் நகர்ந்தால் உமையம்மைக்கு என்ன நேரிடும் என்று தெரியவில்லையே. நினைத்தாலே பயமாக இருக்கின்றது'' என்கிற உணர்வில் பேசுகிறார்.

**''தகவுடையார் தாம் உளரேல் தார்அகலம் சாரப்**
**புகவிடுதல் பொல்லாது கண்டீர்! - மிகஅடர**
**ஊர்ந்திடுமா நாகம் ஒருநாள் மலைமகளைச்**
**சார்ந்திடுமேல் ஏபாவந்தான்!''** **(அற்புதத் திருவந்தாதி)**

அம்மையார் பாம்பைப் பற்றி பயப்பட வேண்டிய அவசியமில்லை. அம்மையார் அன்பு மேலிட்டு இவ்வாறு பாடுவது இறைவனுடைய திருவிளையாடலை நமக்கு எடுத்துக்காட்டுவதற்குத்தான். உமையம்மை அருளுக்கு இருப்பிடம். கருணை வடிவம். சிவபெருமானின் சக்தி அம்சம். இறைவனிடம் அடைக்கலம் புகுந்த எல்லா உயிர்களும் எம்பெருமானின் அருள் பெற்று உயர்வுடன் வாழலாம் என்பதே பொருள்.

இறைவனுடைய கருணையே அவனது பெருமைக்கு அடையாளம். அவனுடைய கருணைக்கு வரம்பு கிடையாது. தன்னைச் சார்ந்தவர்களுக்கெல்லாம் புகலிடமாய் விளங்குகின்றான். பாம்புக்கும் திங்களுக்கும் எப்போதுமே பகை. பாம்பும் திங்களும் இயற்கையால் மாறுபட்டவை. பாம்பு நடுக்கத்தைத் தருகிறது. சந்திரன் மகிழ்ச்சியைத் தருகின்றான். சந்திரனிடம் இருப்பது அமுதம். பாம்பு விஷத்திற்கு இருப்பிடம். இயற்கையில் இவை இரண்டும் வெவ்வேறு இடங்களில் இருப்பவை. ஆனால், இவை இரண்டும் ஓரிடத்தில் இருப்பது அருமை. அந்த அருமையான காட்சிக்குக் காரணம் சிவபெருமான். பாம்பையும் திங்களையும் இறைவன் தன்னுடைய செஞ்சடையிலே வைத்திருக்கிறான். அவன் சடையில் ஏறுவதற்கு முன்பு அவை இரண்டும் ஒன்றோடு ஒன்று பகைத்தன. சடையில் ஏறிய பிறகு இரண்டும் பகை ஒழிந்து சிவபெருமானுடைய சடைக்கு அணியாகத் திகழ்கின்றன. ஞானசம்பந்தப் பெருமானுக்கு இந்தக் காட்சி பெருத்த வியப்பைத் தருகின்றது.

**''சொலீர் .....**
**பின்னு செஞ்சடையிற் பிறை பாம்புடன் வைத்ததே''**

பாம்புக்கும் திங்களுக்கும் தஞ்சம் அளித்த பெருமான் கங்கையையும் தனது சடையில் தாங்கிக் கொள்கின்றான். கங்கை வானுலகத்தில் பரந்து, விரைந்து, ஆழ்ந்து, மிக்க ஆரவாரத்தோடும், மிடுக்கோடும் சுழன்றுகொண்டு இருந்தது. அலைகளோடு சீறிக்கொண்டு, விண்ணுக்கு அடங்காமல் செருக்கோடு உலவி வந்த கங்கையைச் சிவபெருமான் தனது சடையில் தாங்கி, அதன் வேகத்தை அடக்கி, பகீரதனுடைய தவத்திற்கு இரங்கி, பூமியின் தாங்கும் சக்திக்கேற்ப கங்கையின நீரைப்பூமிக்கு அளித்தான். இறைவனுடைய பெரும் கருணைக்கு இதுவும் ஓர் உதாரணம். ''பொங்கு

**கங்கைச்சடைச் செருப்பவனே!''** என்றார் மாணிக்கவாசகர். கங்கை பெட்டிப் பாம்பைப் போல அடங்கி விட்டது. இருந்தாலும், காரைக்கால் அம்மையாருக்கு, அவருடைய தாயுள்ளத்திலே ஒரு பயம் தோன்றுகிறது. இறைவனோ கங்கையைத் தலையில் வைத்திருக்கின்றான். கங்கையானவள் இன்றைக்குக்குளம் போல அமைதியாக வீற்றிருக்கின்றாள். ஆனாலும், அவளுடைய செருக்கு முழுமையாக நீங்கிற்றா என்று தெரியவில்லை. சிவபெருமானுடைய சடை கங்கைக்குக் கரையாக இருக்கின்றது. அந்தக் கரைக்குள்ளேயே பாம்பையும், பிறையையும் இழுத்துக்கொண்டு, அங்குமிங்கும் ஓடுகின்ற கங்கை ஒருவேளை வெள்ளம் பெருகி, சடைக்கு மேலாக வளர்ந்து நீர் பெருக ஆரம்பித்தால் இறைவன் என்ன செய்வானோ என்று வியக்கின்றார் காரைக்கால் அம்மையார். சிறுகுழந்தைக்குச் சொல்லுவதுபோல, இந்தப் பொல்லாத கங்கையை நம்பாதே என்கின்றார். ஏன் இவ்வாறு செய்கின்றாய் என்று இறைவனிடம் கேட்கின்றார்.

**''கூறுஎமக்கு ஈது, எந்தாய்! குளிர்சடையை மீது அழித்திட்டு**
**ஏற மிகப்பெருகின் என்செய்தி? -சீறி**
**விழித்துஊரும் வாள்அரவும் வெண்மதியும் ஈர்த்துத்**
**தெழித்துஓடும் கங்கைத் திரை''.** **(அற்புதத் திருவந்தாதி)**

''நங்கையைப் பாகம் வைத்தார்; கங்கையைச் சடையுள் வைத்தார், கங்கை மணவாளன்''. உமையாளுக்குத் தன்னுடைய இடப்பாகத்தை அளித்திருந்தார். அவர் கண்டால் கோபம் கொள்வாரோ என்று எண்ணிச் சிவபெருமான் கங்கை தேவியைத் தனது சடைமுடி மேல் வைத்துக் கொண்டிருக்கின்றான் போலும் என்று கருவூர்த் தேவர் வியக்கின்றார்.

**''.... .... கொடியிடை காணில்**
**கொடியள்என்(று) அவிர்சடை முடிமேல்**
**கங்கைகொண் டிருந்த கடவுளே! கங்கை**
**கொண்டசோ ளேச்சரத் தானே''.** **(திருவிசைப்பா)**

இதுவே அம்பிகையின் ஊடலுக்குக் காரணமாகிறது. அவருடைய ஊடலைத் தீர்க்க வேண்டியது இறைவனுடைய பொறுப்பல்லவா! இறைவி அருள்மயமானவள். அருள் என்றுமே கோபிக்கலாகாது. ஆகவே, இறைவன் பிராட்டியாருடைய ஊடலைப் போக்க வேண்டும். இறைவன் என்ன செய்கின்றான்? அருள்மயமான தேவியின் திருவடிகளில் வீழ்ந்து வணங்குகின்றான். அவள் சிலம்புகளை அணிந்திருக்கின்றாள். சிலம்படியாள். தேவியின் திருவடிகளில் அழகேற்றுவதற்காகச் செம்பஞ்சுக் குழம்பு பூசப்பட்டுள்ளது. இறைவன் தேவியின் திருவடிகளை வணங்கும்பொழுது, அந்தக் குழம்பு அவனுடைய திருமுடியிலே படுகின்றது. காரைக்கால் அம்மையார் இந்தக் காட்சியைக் கற்பனை செய்து கொள்கின்றார். இறைவனுடைய சடை முடிக்கு இயல்பாகவே சிவப்பு நிறம் உண்டு. அந்தச் சிவப்பு நிறத்திற்குக் காரணம் காட்டுகின்றார் காரைக்கால்

அம்மையார். தேவியாருடைய திருவடிகளிலே பூசப்பட்ட குழம்பின் சிவப்பே இறைவனுடைய திருமுடியிலே பட்டதுபோலும் என்று எண்ணிக் கொள்கின்றார். இந்தச் சிவப்பு நிறத்தால் இறைவனுடைய திருமுடி அழகுபெற்று, நலம் பெற்று விளங்குகின்றது. ஆனால், இந்தச் சிவப்பு நிறம் தேவியாருக்கும் இறைவனுக்கும் நடுவே நிகழ்ந்த ஊடல் நிகழ்ச்சியை அம்பலப்படுத்திவிடுகின்றது!

**"சிலம்படியான் ஊடலைத் தான்தவிர்ப்பான் வேண்டிச்**
**சிலம்படிமேல் செவ்வரத்தம் சேர்த்தி-நலம்பெற்று**
**எதிராய செக்கரினும் இக்கோலம் செய்தான்**
**முதிரா மதியான் முடி".** **(அற்புதத் திருவந்தாதி)**

இறைவனுடைய கருணைக்கு எல்லையே இல்லை. அம்மையின் அருட்சக்தி மக்களுக்கு நலம் அளிக்க வேண்டி இறைவன் தேவியினுடைய பாதங்களிலும் விழுந்து, வணங்கத் துணிகின்றான். அதுமட்டுமா? நங்கையாளின் ஊடலைத் தீர்க்க இறைவன் சாம வேதத்தைப் பாடினான். பாடலோடு ஆடினான். இவ்வாறு செய்து பெருமாட்டியின் ஊடலைத் தீர்க்க விரும்பினான். பாடலும், ஃ'–லும் இறைவனுக்குக் கைவந்த கலை. அம்மைக்கும் அப்படியே. சாமர்த்தியமாக இறைவன் சாம வேதத்தைப் பாடியும், பாடிய பாணியாலே ஆடியும் தேவியினுடைய ஊடலைத் தீர்த்தான். தேவியின் ஊடல் தீரவில்லையென்றால் இறைவனுக்கு அமைதி இல்லை. இறைவனுக்கு அமைதி இல்லையென்றால் உயிர்களுக்கு இன்பம் இல்லை. உயிர்களுக்கு இன்பம் அளிக்க வேண்டி இறைவன் இவ்வாறு செய்கின்றான். திருநாவுக்கரசர் பெருமான் இறைவனுடைய கருணையை நினைத்து உள்ளம் நெகிழ்கின்றார்.

**"குடினார் கங்கை யாளைச்**
**சூடிய துழனி கேட்டுஅங்கு**
**ஊடினாள் நங்கை யாளும்;**
**ஊடலை ஒழிக்க வேண்டிப்**
**பாடினார் சாம வேதம்;**
**பாடிய பாணி யாலே**
**ஆடினார், கெடில வேலி**
**அதிகைவீ ரட்ட னாரே".**

இறைவனுடைய ஆற்றல் எல்லையற்றதாக இருக்கலாம். அவனுடைய சாதனைகள் கணக்கிலடங்காமல் இருக்கலாம். அவனுடைய அருளாலும கருணையாலும் விண்ணோர் மகிழ்வு எய்தலாம். இவற்றால் எனக்கு ஆவது என்ன? என்னுடைய சிறுமையைப் பொறுத்துக் கொள்வானா? என்னுடைய பிழைக்கு இரங்குவானா? இறைவனுடைய கருணைக்கு நான் தகுதியுடைவன் என்று எவ்வாறு முடிவு செய்து கொள்வது? இறைவன் அருளால் எனக்கு

நலம் பிறந்தால் அல்லவா அவனுடைய பெருமையை நான் உணர்ந்துகொள்ள முடியும். அவ்வாறு எனக்கு ஒரு நலமும் கிட்டவில்லை யென்றால் இறைவனுடைய பெருமையைப் பற்றிச் சாத்திரங்களும், தோத்திரங்களும் பேசி என்ன பயன்? இவ்வாறெல்லாம் சிறியோராகிய நாம் நினைததுக் கொள்ளலாம். நமது அகக்கண் திறந்து, இறைவனுடைய பெருமையைக் கண்டுகொள்ளத் தயங்கலாம். அருளாளராகிய மணிவாசகப் பெருமானுடைய உள்ளம் அத்தகைய சிந்தனையில் ஈடுபடவில்லை. அதுபோன்ற நினைப்பே அவருக்கு எழவில்லை.

சாதாரணமாக இருந்தவன் நான். சிறுமை பொருந்தியவன். வெறுப்பனவே செய்பவன். பொய்யெல்லாம் மெய்யென்று மயங்கி நின்றவன். முக்தி நெறி அறியாத மூர்க்கரோடு இடைவிடாது பற்றிப் பழகி வந்தவன். சாதி, குலம், பிறப்பு எனும் சுழிபட்டுத் தடுமாறுகின்றேன். இந்திரியங்கள் வசப்பட்டு இறப்புக்கும், பிறப்புக்கும் காரணமாகின்ற வினைகளை அஞ்சாமல் செய்யும் தன்மை உடையவன். வைத்த நிதி, பெண்டிர், மக்கள், குலம், கல்வி என்று மாய உலகின் கலக்கத்தால் அறிவிழந்த நிலையில் இருந்தேன். ஆனால், அவற்றையெல்லாம் நீ பொருட்படுத்தவில்லை என்றார் மாணிக்கவாசகர். அருளாளன் என்னுடைய பிழைக்கு இரங்கினான். மாய வலையில் கிடந்து புரளாமல் இருக்க அருளினான். **''நானேயோ தவம் செய்தேன்; சிவாயநம எனப் பெற்றேன்''** என்றார். திருவருள் அமுதம் அவரது உள்ளத்தில் ஊறி தித்தித்தது. பிறவிக் கடலிலிருந்து என்னை விடுவித்து, மாறாத பேரின்பக் கரையிடம் சேர்த்தது. **''நின் திருவருளால் என் பிறவியை வேரறுப்பவனே!''** என்கிறார் மணிவாசகர்,

உனது மென் கழலைக் காட்டினாய். சித்த மலத்தை அறுத்தாய். சிவமாம் தன்மையைப் பெற வைத்தாய். என்னை ஆண்டு கொண்டாய். நீ ஓர் பெரும் பெருமான். என்னைத் துன்பக் கடலிலிருந்து மீட்டு, உன்னுடைய திருவடிகளிலே நிலைபெற்றிருக்கச் செய்து, எனது உள்ளத்தை உனது உடைமையாக்கிக் கொண்டு என்னைப் பித்தனாக்கி விட்டாய் என்கிறார் மாணிக்கவாசகர்.

**''பெரும் பெருமான், என் பிறவியை வேர் அறுத்துப்**
**பெரும் பிச்சுத் தரும் பெருமான்,''**

**(திருவாசகம் - அடைக்கலப்பத்து - 408)**

இறைவன் அருளால் பிறப்பும் இறப்பும் ஏற்படுகின்றன. அந்த அருள் உயிரைப்பாசத்தில் இடுகிறது. உடல், பொருள், கருவி கரணங்களுடன் கூடி அந்த அருளாலே உயிரும் வளருகிறது. அருளே பாசத்தையும் நேசத்தையும் உயிருக்குத் தந்து, உயிரின் உய்வுக்காகப்பல பிறவிகளையும் உயிருக்கு அளிக்கிறது. அருளே முத்தியையும் தருகிறது. பிறவிக்கு விஞ்திடுவது ஆணவமும், கன்மமும், மாயையாகிய உலகமும், உலகத்தின் பொருட்களும்

ஆகும். பிறவியின் பயன் இதை உணர்ந்து, இதற்கு மூல காரணமாக இருக்கின்ற அருளின் தன்மையை உணருவதே ஆகும். இந்த நிலை வரும் வரை ஓர் அறியாமை உயிரினூடே பரவி நிற்கின்றது.

அந்த அறியாமையைப் போக்குவது இறைவனுடைய அருளே, திருவருளின் அருமையை நினைந்து வியக்கும் மணிவாசகப் பெருமான், தனக்கு அறிவைக் கொடுத்து, உலகப் பொருட்கள் மீது உள்ள பற்றினை நீக்கி இறைவன் தன்னை ஆண்டு கொண்ட பெருமையை ஆனந்தமயமான ஒரு அனுபவமாகப் பெருமான் தன் மனத்துள்ளே கொள்கின்றார். இறைவன் மக்களுக்குப்பல நன்மைகளைச் செய்கின்றான். ஆனால், எல்லாவற்றிற்கும் மேலான நன்மை இறைவன் உயிரை வினைக்கடலில் அகப்பட்டுள்ள நிலையிலிருந்து மீட்டுப் பிறவா நெறியைத் தருவதே ஆகும். ''பிறவா நெறி தந்த பேரருளாளன்'' என்கிறது திருமந்திரம். வினைக்கடலைக் கடந்தவர்கள் இறைவன்தாள் சேருகின்றார்கள். அவர்களுக்கு இடரேதும் இல்லை. பிறவாத பேரின்பப் பெருவாழ்வு அவர்களுக்குக் கிடைக்கின்றது. இத்தகைய அனுபவம் உயிருக்குக் கிட்டுகிறது என்றால் அது இறைவனுடைய பெருமையால்தான் என்கிறார் மாணிக்கவாசகர். இறைவன் வினை தீர்ப்பவன் மட்டுமல்லன். நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றான். நம்மை அறியாமலேயே நம்மில் புகுகின்றான். பாரெங்கும் சுற்றிச் சென்று அவனைத் தேடி அடைய முற்பட வேண்டியதில்லை. பிரம்மனும் திருமாலும் இவ்வாறு செய்தால் இறைவனை அடையலாம் என்று எண்ணினார்கள். அவர்கள் வெற்றி பெறவில்லை. கல்வியாலும் செல்வத்தாலும் இறைவனைப் பெற முடியாது. ஆனால், அன்பினால் பெறலாம். நமது உள்ளத்தை அவனுக்குத் தயாராக வைத்துக் கொள்ள வேண்டும். உள்ளத்திலே அழுக்கு நிரம்பி நிற்கும்பொழுது, அவனையும் அங்கு வைத்துக்கொள்ள வேண்டு மென்று முயன்றாலும் பயனில்லை. வேண்டாதவர்கள் மனத்தில் அவன் நிற்க மாட்டான். ஆனால், **''வினையேன் அழுதால் பெறலாமே!''** என்கிறார் மாணிக்கவாசகர். நம்முடைய ஆணவத்தை நீக்கி, நம்மை அவனிடம் ஒப்படைத்து, அவனுக்கே நம்மை உடைமையாக்கிக் கொண்டு, **''நீயலால் பிறிது மற்றொன்று இல்லை''** என்கிற நினைப்பு உள்ளம் முழுவதும் படர்ந்திருக்கும்பொழுது அவனைப் பெறலாம். இறைவன் பெரும் ஞானச்சுடர்.

சாதாரண உயிரும் அறியும் சக்தியைப் பெற்றுள்ளது. அந்தச் சக்தியால் இறைவனைக் கண்டுகொள்ளலாம். இதற்காகப் பெரிய சாதனைகள் தேவையில்லை. மந்திரமும் சடங்குகளும், தவமும் யோகமும் தேவையில்லை. அன்பொன்றே போதும் என்கிற நினைப்பில் நிற்பவர் மாணிக்கவாசகர். இது பற்றற்ற அன்பு. மாறிலாத அன்பு. பரம்பொருளிடம் வைக்கும் நீங்காத அன்பு. இந்த அன்பு வேறொன்றையும் எதிர்பார்ப்பதில்லை. தன்னுடைய குறைகளை நினைந்து நினைந்து, அந்தக் குறைகளைத் தீர்க்கும் ஒரே துணையாக இறைவனை நம்பி, அந்த இறைவனுக்குத் தனது உடலையும், உயிரையும், உடைமைகளையும்

அர்ப்பணித்து, அந்தத் தியாகத்தில் பேரின்பத்தைக் காண்கிறது. விண்ணோர்கள் தேடித் திரிந்து காண முயலும் ஒரு பரம்பொருள் எளியவனான தன் உள்ளம் புகுந்து, அங்கே நிற்கும் பாங்கினைக்கண்டு மணிவாசகப் பெருமான் உவகை கொள்கிறார். **''மலரோன், நெடுமால் அறியாமல் நின்ற அரும்பெருமான்! என் மனத்தின் உள்ளே வரும் பெருமான்!''** என்றார் மணிவாசகர். இதுகாறும் அழுக்கு நிறைந்த மனமானது அழுக்கினை நீக்கி, தூய்மை பெறும்பொழுது, இறை அருள் தானாகவே உள்ளத்தில் வந்து கலக்கின்றது. **''என்போல்வார் சிந்தையினும் இங்குற்றான்; காண்பார்க்கு எளிது''** என்பார் காரைக்கால் அம்மையார்.

**''நினைப்பவர் மனத்துளான்''** என்றார் திருஞானசம்பந்தர்.

என்னை இறைவன் ஆண்டு கொண்டான், என்னைத் தனது உடைமையாக்கிக் கொண்டான். ஆனால், நானோ சிறியவன். என்னிட மிருந்து அவன் பெறுவது போற்றத்தக்கதன்று. நான் அவனுக்கு அளிப்பது சிறிதாயினும் அதற்குக் கைம்மாறாக இறைவன் தன்னையே எனக்குத் தந்தருளினான். என் உள்ளத்திலே புகுந்து கொண்டான். என்னுடைய உணர்வுகளைத் தெய்வமாக்கினான். என் அகம் புகுந்தான். இப்பொழுது சொல்லுங்கள் யார் சாமர்த்தியசாலி என்பார் மாணிக்கவாசகர். சதுரப் பெருமான் என்றார். இறைவனைவிடத்தான் சாமர்த்தியசாலி என்று பெரு மிதம் கொள்கின்றார். சிறியவனான என்னைக் கொண்டதற்குப் பதிலாக நீ உன்னையே தந்துவிட்டாய். அந்தமிலாத ஆனந்தத்தை எனக்கு அளித்தாய். எனது சிந்தையே கோயில்கொண்டாய். உடல் இடம் கொண்டாய். ஆனால், என்னிடமிருந்து நீ ஒன்றும் பெறவில்லையே. நான் எவ்வாறு உனக்குக்கைம்மாறு செய்வேன் என்கிறார் மணிவாசகப் பெருமான்.

**''தந்தது, உன் தன்னை; கொண்டது, என் தன்னை;**
**சங்கரா! ஆர்-கொலோ, சதுரர்?**
**அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம்; பெற்றேன்;**
**யாது நீ பெற்றது ஒன்று, என்பால்?**
**சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்!**
**திருப்பெருந்துறை உறை சிவனே!**
**எந்தையே! ஈசா! உடல் இடம் கொண்டாய்;**
**யான் இதற்கு இலன், ஓர் கைம்மாறே!''**

**(திருவாசகம் - கோயில் திருப்பதிகம் - 395)**

உயிர்களின் சிறுமையைப் பொருட்படுத்தாது அவற்றை ஏற்றுக் கொள்வது இறைவனுடைய இயல்பாகும் இதை முற்றிலும் உணர்ந்தவர் மாணிக்கவாசகப் பெருமான். அவருடைய அனுபவத்தின் சிகரமாக ''அடைக்கலப்பத்து'' திகழ்கின்றது. அதைப் படித்து அனுபவித்து மகிழ்வோமாக!

❋ ❋ ❋

# 37. "தத்துவமசி மகாவாக்கியம்"

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு நடந்தது இது. காடுகளிலும் மலைகளிலும் முனிவர்கள் தாங்கள் கற்று அறிந்து கொண்ட வேதங்களைத் தீவிரமாக ஆராய்ந்து, அவற்றைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்து அவற்றின் உண்மைப் பொருளைத் தெளிவாகக்கண்டு உணர்ந்து கொள்வதற்காகச் சீடர்களுடன் சென்று பல ஆண்டுகள் நிட்டையில் அமர்ந்திருந்தனர். தவ யோக நெறியில் நின்றனர். உலகத்தை மறந்தனர். தங்களுடைய பார்வையையெல்லாம் தம்முள் செலுத்தினர். அவர்களுடைய உள்ளங்களில் பரம்பொருளைப் பற்றியும், தங்களைப் பற்றியும் உண்மைகள் தோன்றலாயின. அந்த உண்மைகளே நமக்கு உபநிடதங்களாகக் கிடைத்துள்ளன. உபநிடதங்கள் இந்திய நாடு உலகத்திற்கு அளித்த ஆன்மிகப் பொக்கிஷங்களாகும். என்றும் குறையாத செல்வமுமாகும். அவையே வேதாந்தம் எனப்படும். அவை பரம்பொருளை விளக்குகின்றன. சீடனைப் படிப்படியாக ஆன்மிக அறிவின் சிகரத்திற்கு அழைத்துச் செல்கின்றன.

உபநிடதங்களில் சாந்தோக்கியம் முக்கியமானது. அது சாம வேதத்தைச் சேர்ந்தது. சாந்தோக்கியத்தில் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய மிக முக்கியமான நிகழ்ச்சி ஒன்று பின்வருமாறு:

சுவேதகேது என்ற பெயருடைய ஓர் இளைஞன் வேதங்களைப் படித்துச் சிறந்த அறிவு பெறுகிறான். எனினும் தான் பெற்ற அறிவு முழுமையானதன்று என்று அவன் உணர்ந்து கொள்ளவில்லை. தன்னுடைய அறிவைப் பற்றி அவன் கர்வப்பட்டுக் கொண்டிருக்கும்போது அவனுடைய தந்தை, அருணி என்பவர் அவனை அழைத்து, "எல்லாவற்றையும் படித்து விட்டதாகச் சொல்லிக் கொள்கின்றாயே, எல்லாவற்றிற்கும் மேலான பரம்பொருளின் தன்மையைப் பற்றி என்ன தெரிந்து கொண்டிருக்கின்றாய்" என்று கேட்கிறார். தனது அறிவின்மையை நன்கு உணர்ந்த சுவேதகேது தந்தையாரிடம், பரம்பொருளைப் பற்றித் தனக்கு விளக்க வேண்டும் என்று அடக்கத்துடன் கேட்டுக் கொள்கின்றான். பல உதாரணங்களைக் கொடுத்து, படிப்படியாகத்தனது மகனை அருணி முனிவர் முற்றிலும் உணர வைக்கின்றார் அவனுடைய ஆன்மிக இருளைப் போக்குகின்றார். உள்ளொளியைப் பெருக்குகின்றார்.

மண் ஒன்று, அதை வைத்துக்குயவன் பல மண் பாண்டங்களைச் செய்கின்றான். பாண்டங்கள் பெயரிலும் உருவத்திலும் வெவ்வேறாக இருக்கலாம். அவற்றிற்கு அடிப்படை மண்தான். தங்கம் ஒன்று. தங்கத்திலிருந்து தட்டான் பல ஆபரணங்களைச் செய்கின்றான். அவற்றிற்கு மூலம் தங்கம்தானே. சூரியனைக் காண்கின்றோம். சூரியனுடைய கிரணங்களில் பல நிறங்கள் கலந்து நிற்கின்றன. ஆனால், அவையெல்லாம் சூரியனிடமிருந்தே எழுந்தவை. பால் தயிராகிறது தயிர் வெண்ணெய் ஆகிறது. வெண்ணெய் நெய் ஆகிறது. எல்லாவற்றிற்கும் தயிர்தான் அடிப்படையாக இருக்கிறது. அதேபோல எல்லா உலகிற்கும், உயிருக்கும் அடிப்படையாக இருப்பது பரம்பொருளே. நாம் பார்ப்பது, அனுபவிப்பது போன்றவைக்குப் பரம்பொருளே ஆதாரமாகும். அதுவே மூலப்பொருள். தேனீக்கள் பல பூக்களிலிருந்து தேனைச் சேகரிக்கின்றன. ஆனால், தேன் ஒன்றே. உயிருள்ளவை, உயிரற்றவை எல்லாமுமே பரம்பொருளில் சேருகின்றன. உலகெங்கிலும் பல நதிகள் கிழக்கிலும் வடக்கிலும், மேற்கிலும் தெற்கிலும் பாய்ந்து கடலை அடைந்து அங்கே தங்குகின்றன. கடலை அடைந்தவுடன் நதிகளுக்கெனத் தனிப்பெயர் கிடையாது. உருவம் கிடையாது. மனிதன் விழித்திருக்கும்பொழுதும், உறங்கும்பொழுதும், கனவு காணும்பொழுதும், அவனுடைய உயிரானது தொடர்ந்து இயங்குகின்றது. ஒரு சிறிய ஆல மரவித்து நாளடைவில் பெரிய மரமாக வளருகிறது. வித்திலும் மரத்திலும் இருக்கின்ற மூலப்பொருள் ஒன்றே. ஒரு பாண்டத்தில் தண்ணீரை வைத்து அந்தத் தண்ணீரில் சிறிது உப்பைக் கலக்கும்பொழுது தண்ணீர் முழுவதும் உப்பாகின்றது. அதேபோல பரம்பொருள் எல்லாவற்றிலும் அடிப்படையாக, மூலமாக, சாரமாக நிற்கின்றது. இதுவே உண்மை. **''அதுவே ஆத்மா. அதுவே நீ ஆகிறாய்''** என்று அருணி சுவேதகேதுவிற்கு விளக்குகின்றார்.

அதுவே தத்துவமசி மகாவாக்கியமாகும். இதே கருத்தைக்கொண்ட **''பிரஞ்ஞானம் பிரம்ம''** என்னும் மகாவாக்கியம் இருக்கு வேதத்தில் வருகிறது. **''பிரம்மைவாஹம் அஸ்மி''** என்பது யசுர்வேத மகாவாக்கியம்.

**''அயமாத்மா பிரஹ்ம''** என்பது அதர்வ வேத மகாவாக்கியம். மிகப்பெரிய உண்மையை இந்த மகாவாக்கியங்கள் வெகு சுருக்கமாகச் சொல்லி முடிக்கின்றன. அதை விளக்க சங்கரர், இராமானுஜர், மத்துவர் ஆகிய மகான்கள் முன்வந்தனர். அத்வைதம், துவைதம், விஸிஷ்டாத் துவைதம் ஆகிய தத்துவங்கள் தோன்றி மக்களிடையே வெகுவாகப் பரவின. பரம்பொருள், உயிர் (ஆத்மா) இவற்றிற்கான தொடர்பு போன்றவைகளுக்கு இந்தத் தத்துவங்கள் விளக்கங்களாக அமைந்துள்ளன. மகாவாக்கியங்கள் கடலைப் போன்றவை. ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்டவை. ஆன்மிகப் பாதையில் முன்னேற விரும்பும் ஒவ்வொருவரும் அனுபூதிமானாகிய குருவிடமிருந்து இந்தக் கருத்துக்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். அவற்றைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அவற்றிலுள்ள உண்மையை அனுபவிக்க வேண்டும். பின்னர்த் தெளிவடைய வேண்டும். பரம்பொருளை

உணர்ந்து கொள்வது அவ்வளவு எளிதன்று. அறிவு முதிர்ந்த நிலையில் இறைவனுடைய அருளால் இது நடந்தேற வேண்டும். இதுவும் அவரவருடைய அனுபவத்தால்தான் நிகழும். **"தானே தனித்து எம்பிரான் தன்னைச் சந்தித்தே"** என்பார் திருமூலர். ஆகவேதான் குருவானவர் சீடனை நோக்கிப்பல விளக்கங்களைக் கொடுத்து, "அது நீ ஆகிறாய்" என்கிறார். இந்த வாக்கியத்தில் பொதிந்து கிடக்கும் உண்மையை உணர்ந்துகொண்ட சீடனும் "நானே பரம்பொருள் ஆகிறேன்" என்று அறிந்து கொள்கின்றான்.

இங்கே நாம் கவனிக்க வேண்டிய சொற்கள் அது, பரம்பொருள், நீ, நான் ஆகும். அது என்னும் சொல் பரம்பொருளைக் குறிக்கும். நீ, நான் என்னும் சொற்கள் சீவனை, அதாவது உயிரைக் குறிக்கும். பரம்பொருளைத் தவிர வேறொன்றும் இல்லை; உயிர், உலகம் போன்றவையெல்லாம் கற்பனையே என்று உள்ளத்தில் உணர்ந்து கொள்வது ஒரு நிலையாகும். அந்த நிலையில் பரம்பொருள் ஒன்றே, அதுவே எல்லாவற்றிலும் வியாபித்திருக்கின்றது. அதுவே மெய் மற்றவையெல்லாம் பொய் என்கின்ற அறிவு தோன்றுகின்றது. இந்த அறிவு அத்வைத அறிவு என்ப்படும். இறைவனை நினைத்து நினைத்து, உருகி உருகிச்சித்தம் சிவமாகிய நிலையில் மாணிக்கவாசகப் பெருமான் **"நீயலாற் பிறிது மற்றின்மை"** என்றும், **"ஒன்று நீயல்ல அன்றி ஒன்று இல்லை"** என்றும் தனது உள்ளக்கிடக்கையை வெளியிடுகின்றார். **"நானும் பொய், என் நெஞ்சம் பொய், என் அன்பு பொய்"** என்கின்ற மாணிக்கவாசகரின் திருவாக்கும் இதே உணர்வைத்தான் பிரதிபலிக்கின்றதோ!

தவத்தாலும், யோகத்தாலும், ஆன்மிகத்தின் நிறைவினாலும் உயர்ந்த மனமுடைய சீவன் எல்லாம் பரம்பொருளே என்கின்ற உணர்வுடன் சமுதாயத்தில் வாழ்ந்து வருவது வியப்பு ஒன்றுமில்லை. அத்தகைய மாண்பு பெற்ற பக்குவன் மகாவாக்கியங்களின் தெளிவைப் பெற்ற சீவன் என்றே எடுத்துக் கொள்ள வேண்டும். இதுபோன்ற தெளிவைப் பெற்றவர்கள் வாழ்க்கையை வெறுத்து, வாழ்க்கை அனுபவங்களைப் புறக்கணிக்க வேண்டும் என்பதில்லை. பலர் இந்த வாழ்க்கை மாயை என்பதை உள்ளத்தில் ஏற்று இறைவன் அருளால் அந்த வாழ்க்கையைத்தாமரை இலைத்தண்ணீர் போல நடத்தி வருவதையும் நாம் பார்க்கின்றோம். **"மாய வாழ்க்கையை மெய்யென்றெண்ணி மதித்திடா வகை நல்கினான்"** என்று மாணிக்கவாசகப் பெருமான் பாடுகின்றார்.

திருமூலர் பெருமான் ஓர் சிறந்த ஞானியும் யோகியுமாவார். பரம்பொருளைத் தம்முள் உணர்ந்தவர். இறைவனுடைய பேரறிவு, பேராற்றல், பெரும் கருணை ஆகியவற்றை நன்கு அறிந்து கொண்டவர். உயிர்களுடைய தன்மையைப் பற்றியும், உயிர்களைக் கட்டுப்படுத்தும் பாசத்தைப் பற்றியும் தனது யோக வலிமையால் அறிந்து, தெளிந்து கொண்டவர். அவர் அருளிச் செய்துள்ள திருமந்திர மணிமாலை ஆன்மிகத்தைப் பற்றிய எல்லாப் பொருள்களையும் எடுத்துக் கூறுகின்றது.

மகாவாக்கியங்கள் பற்றியும் பல இடங்களில் கூறுகின்றது. திருமூலர் ஞானத்துள் ஞானத்தை நமக்குப் பிழிந்து கொடுக்கும் ஒப்பற்ற ஞானாசிரியராக இருப்பதால், அவருடைய விளக்கம் மிகச் சிறப்புடையதாகும். அதையும் நாம் தெரிந்து கொள்ள முற்படுவோம்.

பரம்பொருள் ஒன்றே. அது அநாதியானது. மலமில்லாதது. என்றும், எங்கும் உள்ளது. யாவற்றையும் தன்னுள் அடக்கியுள்ளது. குணமும் குறியும் இல்லாதது. அதுவே நித்தியப் பொருள். பேரறிவும், பேராற்றலும் பெற்றது. ஆனந்தமயமானது. உயிர்களை உய்விக்க சதா தனது அருள் மழையைப் பொழிந்து கொண்டே இருக்கின்றது. பரம்பொருளின் திருவருள் இயக்கம், ஐந்தொழில்கள் நடத்தப்படுவதன் வாயிலாக நம்முடைய அனுபவத்திற்கு உட்படுகிறது.

இறைவனைப் போல உயிரும் அநாதி. உயிரைப் பந்திக்கும் பாசமும் அநாதி. உயிர் சிற்றறிவும், சிறு ஆற்றலும் பெற்ற ஒன்று. உயிரினுடைய அறிவு தான் சார்ந்ததன் பொருளையே அறிந்து கொள்ளும். உடலில் புகுந்து பொறிகளையும் மற்ற கருவிகளையும் பெற்று நிற்கும் பொழுது அவற்றால் கிடைக்கக்கூடிய அறிவையே முழுமையாக எடுத்துக்கொள்ளும். அவற்றிடமிருந்து சுதந்திரம் பெற்று இறைவனைச் சாரும்பொழுது இறையறிவு பெற்றுச்சிவமாம் தன்மையில் நிற்கும். முதலில் சுட்டறிவு, பின்னர் முற்றறிவு ஆகியவை உயிரினுடைய அறிவின் வளர்ச்சியைக் குறிக்கும்.

உயிருடன் அநாதியாகச் சேர்ந்துள்ளது ஆணவமலமாகும். மாயையும், கன்மமும் வந்து பொருந்தியவை. உயிர் மேலும் மேலும் பிறப்புகள் எடுக்க இவை வழி செய்கின்றன. இவற்றின் வலிமையால் உயிரானது உடலையும், கருவிகளையும் பயன்படுத்தி அவை வழி சென்று, உலக விஷயங்களில் பொருந்தித் தோய்கிறது. தன்னை இந்திரியங்கள் போன்ற கருவிகள் மயமாகவே கருதிக்கொள்கின்றது. **''மாயக் குழியில் விழுவர் மனை மக்கள்; பாசத்தில் உற்றுப் பதைக்கின்றவாறே''** என்கிறார் திருமூலர். மும்மலங்களைக் கொண்ட பாசம் சீவனைச் சிவத்திடமிருந்து பிரித்து வைக்கின்றது.

ஆனால், இறைவனுடைய நியதிப்படி எல்லா உயிர்களும் இறைவனுடைய அருளைக் காலப்போக்கில் பெற்றே தீரும். உயிர்களுடைய நலன் கருதி இறைவன் தன் பேரருள் தன்மையால் மிகவும் இழிந்த நிலையில் உள்ள உயிர்களாகிய நம்மை, நமது பக்குவத்திற்கேற்ப ஆட்கொள்கின்றான். உயிருக்கு அருள் விளக்கம் கிடைக்கின்றது. உயிருக்குள்ள ஒரு முக்கியத் தன்மை மலப்பற்றில் இருப்பது அல்லது சிவனுடைய அருளைப்பற்றி நிற்பதாகும். மலமாகிய பற்றை விட்டுச் சிவப்பற்றைப் பெறுவது இறைவனுடைய திருவருளால்தான். ஊஞ்சல் சங்கிலியைப் பற்றி விட்டத்திலிருந்து தொங்கி ஆடிக்கொண்டிருக்கின்றது. சங்கிலி அறுந்தால் ஊஞ்சல் தரையில் விழுந்து, தரையைப் பற்றி நிற்கின்றது. ஊஞ்சலின்

ஆட்டமும் ஒய்ந்துவிடுகின்றது. அதேபோல்தான் உயிரினுடைய இயக்கமும் நடைபெறுகிறது. அறிவு விளக்கம் பெற்ற நிலையில் உயிருக்குப் பிறப்பு நீங்க வேண்டும் என்கின்ற எண்ணம் தோன்றும். இதன் காரணமாக உயிரானது சரியை, கிரியை, யோகம் போன்ற நெறிகளை மேற்கொள்ள விழையும். இந்த நெறிகள் ஞானத்திற்கான வழியைக்காட்டுகின்றன. அப்பொழுது இறைவன் குரு வடிவாக வந்து நமக்கு அருள் செய்கின்றான். அந்த அருளால், சூரியனுடைய ஒளியால் சூரியகாந்தக் கல்லைப் பாய்ச்சிய பஞ்சில் தீ பிடிப்பது போல உயிருக்கு ஞான விளக்கம் ஏற்படுகின்றது. அப்பொழுது உயிர் தான் சார்ந்துள்ள உடல், கருவிகள் ஆகியவற்றைத் தனக்கு வேறுபட்டதாக உணர்ந்து கொள்கின்றது. தன்னுடைய அறிவு இறைவனுடைய அறிவு என்கின்ற எண்ணமும் தனது செயல் அவனுடைய செயல் எனவும் உணர்வு தோன்றும். உடலுக்கு அடிமையாகிய தன்மை நீங்கித்தான் என்றுமே சிவத்திற்கு அடிமை என்று உயிர் புரிந்துகொள்கிறது. இந்த நிலையைத் திருமூலர்.

**"செப்ப அரிய சிவங்கண்டு தான்தெளிந்து**
**அப்பரிசாக அமர்ந்திருந் தாரே".** **(திருமந்திரம் - 126)**

என்று விளங்குகிறார்.

சிவமாம் தன்மையைப் பெற்ற பெருமைக்குரிய உயிர்கள் எல்லாம் சிவன் செயல் என்கின்ற உணர்வில் நிற்கும்.

**"இருந்தார் சிவமாகி எங்குந் தாமாகி**
**இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி"**

**(திருமந்திரம் - 127)**

நமக்கு நேரும் நன்மையும், தீமையும், இன்பமும், துன்பமும் அவனால் ஆவன. அவன் செயலுக்கு நாம் நம்மை அர்ப்பணித்து விட்டோம். அவனுடைய திருவருள் ஒன்றுதான் நமக்குத் தெரியும். இதைத்தவிர நாம் நாமாகச்செய்வது வேறொன்றில்லை என்கிற உணர்வு உள்ளத்திலே தோன்றும். அந்த உணர்வை மாணிக்கவாசகப் பெருமான்

**"நன்றே செய்வாய் பிழைசெய்வாய்**
**நானோ இதற்கு நாயகமே"**

என்று புலப்படுத்துகின்றார்.

இந்த உணர்வுகளைத் திருமூலர் இரண்டு திருமந்திரங்களில் வெளிப்படுத்துகின்றார். அவை பின்வருமாறு:

"சிந்தையது என்னச் சிவன் என்ன வேறில்லை
சிந்தையி னுள்ளே சிவனும் வெளிப்படும்
சிந்தை தெளியத் தெளியவல் லார்கட்குச்
சிந்தையி னுள்ளே சிவனிருந் தானே". (திருமந்திரம் - 2853)

"சீவன் எனச்சிவ னென்னவே றில்லை
சீவ னார்சிவ னாரை அறிகிலர்
சீவ னார்சிவ னாரை அறிந்தபின்
சீவ னார்சிவ னாயிட்டிங் கிருப்பரே" (திருமந்திரம் - 2017)

முன்சொன்ன மகாவாக்கியங்களின் உட்பொருள் இந்த இரண்டு மந்திரங்களில் அடங்கியிருக்கின்றது. மகாவாக்கியத்தில் உள்ள த்வம்(நீ) என்கிற சொல் உயிரைக் குறிக்கும். உயிரானது இப்பொழுது உடம்பினில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. நாம் உடம்போடு உள்ள நிலை சகல நிலை என்று கூறப்படும். இந்தச்சகல நிலையில் உயிரானது உடம்புடனும், இந்திரியங்களுடனும், அந்தக் கரணங்களுடனும் கூடியுள்ளது. சகல நிலையில்தான் கன்மம், மாயை இரண்டும் சேர்ந்து உயிரை இயக்கி வைக்கின்றன. இந்த நிலையில்தான் உயிரானது வினைகளைச் சேர்க்கின்றது. சுட்டறிவின் அடிப்படையில் உயிர் உடலையும் அதன் கருவிகளையும் சார்ந்தவண்ணம் அவற்றின் இன்பத்துன்பங்களுக்கு ஆளாகிறது.

இத்தகைய கருவிகளுடன் சேராமல் உயிரானது முடங்கிக்கிடக்கும் நிலை கேவல நிலையாகும். இந்த நிலையில் உயிருடன் ஆணவ மலம் மட்டுமே அநாதியாகச் சேர்ந்துள்ளது. இதைக் கேவல நிலை என்று குறிப்பிடுவர். இந்த நிலையில் உயிரானது இச்சை, ஞானம், கிரியை போன்ற இயக்கங்களுக்கு ஆளாகாது தனியாக நிற்கும். ஆணவம் ஒன்றே சேர்ந்துள்ள இந்த நிலையை இருள் நிலை என்றும் அழைப்பர்.

அறியாமை வயப்பட்டு நிற்கும் உயிர் இறைவன் அருளால் சகல நிலையைப் பெறுகிறது. உயிரானது அறிவு விளக்கம் பெறுவதற்காக இந்த நிலை கடவுளால் ஏற்படுத்தப்பட்டது. இருள்சூழ்ந்த அறையில் நிற்கும் ஒருவனுக்கு கையில் ஒரு சிறிய விளக்குக் கிடைத்தால், அது அந்த இருளை முழுமையாக நீக்காவிட்டாலும் சிறிது வெளிச்சம் பட உதவி புரிவதுபோல் இந்தச் சகல நிலை உள்ளது.

சகல நிலையிலுள்ள உயிருக்கு அதன் பக்குவ நிலைக்கேற்ப, கர்மங்களின் வலிவு குறைய இறைவனுடைய அருட்சக்தி உயிரின்மீது பதியத் தொடங்கும். உயிர் குரு அருள் பெறும். உலக விஷயங்களின் போக்கும்வரத்தும் உயிரிடமிருந்து பிரியத் தொடங்கும். இறைவனுடைய அருள் உயிரின் வேகத்தைக் கெடுத்து கருவிகளுடைய வலுவைக் குறைத்து சிவஞானத்தைப் பெருக்கி உயிரைச் சுத்தப்படுத்தும். இதுவே உயிரினுடைய சுத்த நிலையுமாகும். இதுவே உயிரின் அருள் நிலையுமாகும்.

இந்த நிலையில் உயிர் முப்பத்தாறு தத்துவங்களை நீக்கியுள்ளது என்று பெரியோர் கூறுவர். இந்த நிலையைச் சீவதுரியம் என்றும் குறிப்பிடுவார்கள். மனிதனுக்கு நனவு, கனவு மற்றும் உறக்கம் என்கின்ற மூன்று நிலைகள் உண்டு என்பதை நாம் அறிவோம். அவற்றிற்கு அப்பாற்பட்ட ஒரு நிலையைத்துரியம் என்று பெரியோர் வைத்துள்ளனர். இந்த நிலையில் நான் என்கின்ற மனோபாவம் காய்ந்து, தேய்ந்து உடலுடைய தொடர்பை விட்டுவிடுகின்றது. இதைத் திருமூலர்பெருமான் **''சீவதுரியத்துத் தொம்பதம்''** என்கிறார்.

உயிரினது ஆன்மிக முன்னேற்றம் இத்துடன் நிற்கவில்லை. விளக்கின் சுடரைத் தூண்டினால் வெளிச்சம் அதிகப்படும். இறைவனுடைய அருளால் ஆன்மாவின் தன்மை இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வரும். உடலைச் சேர்ந்த கருவிகள், கரணங்கள் தங்கள் இயக்கத்தில் இறைவனுக்கே உரிமைப்பட்டுவிடுகின்றன. உயிர் அவற்றைத் தொடர்ந்து பயன்படுத்தும். ஆனால், திருமூலர் கூறுவதுபோல **''தானே புலனைந்தும் தன்வசம் ஆயிடும்; தானே புலனைந்தும் தன்வசம் போயிடும்; தானே புலனைந்தும் தன்னில் மடைமாறும்''** (திருமந்திரம் - 140). சீவகரணங்கள் சிவகரணங்களாக மாறிய நிலை பரதுரியம் எனப்படும். இந்த நிலையைத் திருமூலர் **தற்பதம்** என்று குறிப்பிடுகின்றார்.

அடுத்துச்சீவனார் சிவனாராக இட்டிருக்கும் உணர்வு. இது ஆன்மிகத்தின் மேலான படி. உயிர் இந்தப் படியை அடையும்பொழுது அஸிபதம் இயக்கத்திற்கு வருகிறது. அப்பொழுது இறைவன் சீவ, சிவ பேதமில்லாமல் கலந்து நிற்பான். இறைவன் திருவ்ருளால் மல வாசனைகள் நீங்கி உயிர் உயர்நிலையை அடையும். அறியாமை, அறிவு என்கின்ற படிகளைக் கடந்து, அருள் பெற்று சிவத்தை உணர்வற உணர்வதற்குப்பொருந்திய நிலை இது. சீவன் அப்போது சிவமாய் ஒன்றி நிற்கும். இந்த உணர்வே தத்துவமசி மகாவாக்கியத்தின் இயல்பாகும் என்பது திருமூலரின் அருள்வாக்காகும்.

**''சீவ துரியத்துத் தொம்பதம் சீவனார்**
**தாவு பரதுரி யத்தினில் தற்பதம்**
**மேவு சிவதுரி யத்தசி மெய்ப்பத**
**மோவி விடுந்தத் துவமசி உண்மையே''. (திருமந்திரம் - 2568)**

உயிர் தத்துவங்களுடன், புறக்கருவிகள், உட்கருவிகள் ஆகியவற்றுடன் சேர்ந்து நிற்கும்போதும் உயிரின் நிலைமை அறியாமையாகும். அப்பொழுது தொம்பதத்தின் எல்லை தொடங்குகின்றது. உயிரின் உள்நின்று அவற்றை ஆட்டுவிப்பவன் இறைவனே. இறைவன் எங்கும் பரவி இருக்கின்றான். அதை உணர்ந்த உயிர் தொம்பத எல்லையை விட்டுத்தத்பத எல்லைக்கு வருகிறது. பின்னர் இறையருளால் தன்னை இறைவனுக்கு ஒப்படைக்கின்றது. இதை ஒன்றும் நெறி அனுபவம் எனலாம்.

இறைவனும் திரு அருளும் ஒன்றுதான். அவை வேறு அல்ல. உயிரின் சிந்தையில் திருவருள் நிறைந்து நிற்கும் பொழுது அந்த உயிரின் செயல்கள் சிவச்செயல்களாகின்றன. இதனை மணிவாசகப் பெருமான் **''சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்''** என்று குறிப்பிடுகின்றார். இதுவே தித்திக்கும் சிவபதமாகும். இந்த இன்பம் உள்ளத்திலே பதிந்த இறைக் கலப்பு அளித்த இன்பமாகும். மணிவாசகர் இதனை **''ஊனாய், உயிராய், உணர்வாய் என் உட்கலந்து''** என்று கூறுகின்றார். எங்கும் நிறைந்துள்ள பரம்பொருள் இந்த உயிரிலும் உயிரோடு உயிராகக் கலந்து நிற்கின்ற ஒரு பெருமையை உயிர் அனுபவிக்கின்றது. **''தன்னையே எனக்குத் தந்தருள் ஒளியால் என்னை வேதித்த என்தனி அன்பே''** என்று வள்ளலார் உள்ளம் உருகக் கதறுகின்றார்.

**''மெய்வாய்கண் மூக்குச் செவியென்னும் மெய்த்தோற்றத்**
**தன்வாய அந்தக் கரணம் அகிலமும்**
**எவ்வா யுயிரும் இறையாட்ட ஆடலாற்**
**கைவாயி லாநிறை எங்குமெய் கண்டதே''.**

**(திருமந்திரம் - 2586)**

மகாவாக்கியத்தின் உட்பொருளை மேலும் சற்று நெருங்கிப் புரிந்து கொள்ள முயலலாம். **''நீ அதுவாகின்றாய்''** என்றால் பரம்பொருள் ஒன்றே. உயிர் என்பது இல்லை, எல்லாமே கற்பனை என்கின்ற உணர்வு பிறந்து, பரம்பொருளைத் தவிர வேறொன்றுமில்லை என்று பாவித்துக் கொள்ளுதல் மகாவாக்கியத்திற்கு ஒருவிதப் பொருளைக் கொடுப்பதாகும். அதேநேரத்தில் உயிர் என்று ஒன்று இருந்தால்தான் அந்தப் பாவனை செய்ய முடியுமல்லவா! ஆனால், அந்த உயிர் உடலைப் பற்றிய அறிவில் மூழ்கியிருக்கும்போது, உடலையும், இறைவனைப் பற்றிய அறிவில் மூழ்கியிருக்கும்போது இறைவனையும் சாரும் என்கிற உண்மையை நாம் கண்கூடாக அனுபவிக்கின்றோமே! உயிருக்கு உடலைப் பற்றும் வரை தன்னைப் பற்றிய அறிவு தோன்றாது என்பதையும், உடல் மீது உள்ள பற்றை அறுத்தால் உள்ளத்திலே இறை அனுபவம் தோன்றும் என்பதையும் நாம் அறிகின்றோம். இந்த அறிவே தத்துவமஸி மகாவாக்கியத்தின் உட்பொருளுக்கு அடிப்படையாகும். உலகம் தான் அல்ல என்கின்ற அறிவைப் பெற்று உயிர் உலகத்தை ஒதுக்கியதுமே இறைவன் திருவடியே தஞ்சமென்று அதனை அணையும். **''அந்நியம் இன்மையின் அரன்கழல் செலுமே''** என்று சிவஞானபோதம் கூறுகிறது. சிவம் எங்கும் வியாபித்துள்ளது. உயிர் சிவனை அடைகிறது என்றால் உயிரில் சிவம் இல்லை என்று பொருள்படும். அது குறையாகும். ஆகவே, இறைவன், எவ்வாறு உடம்பில் உயிர் கலந்துள்ளதோ, அவ்வாறே உயிரிலும் கலந்து நிற்பான். முழுமையான அறிவை உயிர் பெறும்பொழுது உயிர் சிவத்துடன் கலந்து நிற்கின்ற தன்மையை உணருகின்றது. இதுவே சிவஞானமாகும். **''சிவன் எம்பெருமான் என்மனம் ஒன்றுவித்தானே''** என்பார் திருமூலர். பிறப்பிலிருந்து விடுபட விரும்புவோர்க்கு உயிர் போன்றது சிவஞானமாகும்.

அவர்களுக்கு உயிர் போன்றது சிவமேயாகும். அவர்கள் ஒடுங்கும் இடம் பிரணவம் ஆகும். சிவமே அவர்களது அறிவுக்கு அறிவாய் விளங்குவன.

**"உய்யவல் லார்கட் குயிர்சிவ ஞானமே**
**உய்யவல் லார்கட் குயிர்சிவ தெய்வமே**
**உய்யவல் லார்கட் கொடுக்கம் பிரணவம்**
**உய்யவல் லாரறி வுள்ளறி வாமே".** (திருமந்திரம் - 2822)

இறைவனுடைய திருவருளால் சீவன் தன் நிலை பற்றி அறிவு பெற்றுச்சிவத்தில் அழுந்தி நிற்பதே மகாவாக்கியத்தின் உட்பொருளாகும் என்று திருமூலர் பெருமான் அருளிச் செய்கின்றார். மெய்யுணர்வு உயிருடன் பொருந்தி நிற்கும்பொழுது சிவன் அதனுள் விளங்கித் தோன்றுவான் என்கிறார். **"மெய்யுணர்வு வைத்தபடியே அடைந்து நின்றானே"** (திருமந்திரம்).

சீவன் சிவனாதல் உள்ளத்தில் எழும்பும் ஒரு உணர்வு நிலையாகும். அந்த நிலையில் உயிர் சிவம் என்னும் நினைப்பில் அடங்கிக் கிடக்கும். இறைவன் வந்து ஆட்கொள்ள உயிர் தன்னை அடிமையாக்கிக் கொள்ளும். **"எம்மை ஆட்கொண்ட இறை"** என்கிறார் காரைக்கால் அம்மையார்.**"அவர்க்கே எழுபிறப்பும்"** என்பதும் அவருடைய திருவாக்காகும். தானே தவம் செய்து நெஞ்சத்தில் இறையுணர்வை நிரப்பிக் கொண்டதால் அந்த ஒரு பேற்றினைத்தான் பெற்றதாக அம்மையார் கூறும் திருவாக்கு **"யானே தவம் உடையேன்; என்நெஞ்சே நன்னெஞ்சம்"** என்பதாகும். அப்பொழுது நான் என்றும், தான் என்றும் தேட வேண்டியதில்லை. நாட வேண்டியதில்லை. நான் என்ற ஞான முதல்வன் இந்த வேற்றுமை உணர்வு வேண்டாம் என்கின்ற உண்மையைச் சீவனுக்கு உணர்த்தி விடுகின்றான். சீவன் தான் என்ற நினைப்பை ஒழிக்கின்றது. அந்த நினைப்பை ஒழித்தது பற்றிய நினைப்புக்கூட உயிருக்கு வருவதில்லை. அத்தகைய இறைக்கலப்பை "கடவுளும் நானும் ஒன்றானேன்" என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். நாமும் அந்த நிலையை அடைவோமாக!

**"நானென்றும் தானென்றும் நாடினேன் நாடலும்**
**நானென்றும் தானென்றும் இரண்டில்லை யென்பது**
**நானென்ற ஞான முதல்வனே நல்கினான்**
**நானென்று நானும் நினைப்பொழிந் தேனே".**

**(திருமந்திரம் - 2820)**

# 38. ''மறைபொருளும் மறைமொழியும்''

இறைவன் நமது புலன்களுக்குப் புலப்படுவதில்லை. புலனறிவு சிற்றறிவாகும். புலனறிவைக் கொண்டு பேரறிவைக் காண இயலாது. சிற்றறிவு என்பது ஓர் சிறிய வட்டமாகும். நாம் எல்லோரும் அந்த வட்டத்தின் வரம்பிற்குள் இருக்கின்றோம். பேரறிவானது எல்லையற்றது, வரம்பற்றது. ஆறு ஆனது கடலில் கலந்து மறையலாம். ஆனால், கடல் ஆற்றல் மறைந்து போவதில்லை. சிற்றறிவு பேரறிவிலே சங்கமம் ஆகலாம். **''அறிவு அறிவுள்ளே அழிந்தது போல''** என்பார் திருமூலர். ஆனால், பேரறிவுக்குச் சிற்றறிவினால் ஈடுகட்ட இயலாது.

சிற்றறிவைப்பெற்றுள்ள நமது நிலைமை கிணற்றில் வசிக்கும் ஆமையின் நிலைமையைப் போன்றதாகும். கிணற்று ஆமை கடலில் வசிக்கும் ஆமையைப் பார்த்து ''உங்கள் கடல் எங்கள் கிணற்றுக்கு ஒப்பாகுமோ?'' என்று கேட்டால் அது அந்தக் கிணற்று ஆமையின் அறியாமையைத்தானே குறிக்கும்! வினைகளால் உந்தப்பட்டு நாம் நமது வாழ்க்கையை நடத்தி வருகின்றோம். அறிவைவிட அறியாமை என்கின்ற அடிப்படையில்தான் நம்முடைய வாழ்க்கை நடந்து வருகின்றது. இந்த அறியாமையைப் பெருக்க நாம் மேலும் மேலும் செய்யும் வினைகள் வித்திட்டு வருகின்றன. அந்த நிலையில் நம்மில் பலர் கடவுளே இல்லை என்று சொல்லி நம்முடைய மனத்திலிருந்து அந்த எண்ணத்தையே விலக்கி விடுகின்றோம். வேறு பலர் இறைவனைக் காண்பது அரிது என்று சொல்லி அவனைக் காணத்தாம் மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் பயன் தராது என்று சொல்லியும் தம்மைத்தாமே திருப்தி செய்து கொள்கின்றார்கள்.

இது என்ன பேதைமை என்கிறார் திருநாவுக்கரசர்.

**''கூவல் ஆமை குரைகடல் ஆமையைக்**
**கூவ லோடுஒக்கு மோகடல் என்றல்போல்**
**பாவ காரிகள் பார்ப்பரிது என்பரால்**
**தேவ தேவன் சிவன்பெருந் தன்மையே''.**

உண்மையில் இறைவனுடைய அருட்சத்தியே இந்த வினைகளைச் செய்ய வைக்கின்றது. பாசத்தைக் கொடுக்கின்றது. உயிரை மலங்களோடு

சேர்த்து வைக்கின்றது. இறைவனுடைய மறைப்புச்-சக்தி காரணமாக நாம் இறைவனை அறிவதில்லை. இறைவன் நம்மிடமிருந்து மறைந்து நிற்கின்றான். நம்முடைய கண்கள் புறப்பொருட்களைப் பார்க்கும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றன. ஆனால், நம்முள் நிற்கும் இறைத் தன்மையைக் காண முடிவதில்லை. **''கண் ஒன்று பல காணும்: தனைக் காணா; அண்ணலும் இவ்வண்ணம் ஆகி நின்றானே''** என்கிறார் திருமூலர். எனவேதான் இறைவனை மறைபொருள் என்று குறிப்பிடுவது உண்டு. இந்த மறைபொருள் புலனறிவுக்கு அப்பாற்பட்டது. இன்னதென்று சொல்லிக்குறிப்பிட்டு உணர்த்த இயலாது. இறைவன் மறைபொருளான காரணத்தினால் அவனை எழுத்தாலோ, வாக்காலோ கட்டுப்படுத்த முடியாது. இதைத்தான் திருமூலர்.

**''காட்டுங் குறியும் கடந்தவர் காரணம்**
**ஏட்டின் புறத்தில் எழுதிவைத் தென்பயன்'' (திருமந்திரம் - 2937)**

என்பார்.

இந்தக் கருத்தை மேலும் விளக்குகின்றார் திருமூலர். பரம்பொருள் எழுத்துக்களுள் அடங்கி நிற்காதவன். சிற்றறிவுக்கு உட்பட்ட பொருளை எழுத்தாலும் வாக்கினாலும், விரிவுரையாலும், வாதத்தாலும் விளக்கி விடலாம், அறிந்து கொள்ளலாம். ஆனால், பரம்பொருள் இவற்றிற்கு அப்பாற்பட்டது. பரம்பொருளைப் பொறுத்தவரை நம்முடைய அறிவு ஒரு எல்லைக் கோட்டில் நின்று விடுகின்றது. அந்த எல்லைக் கோட்டைத் தாண்ட நாம் அறிவைக் கொண்டு எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறாது. பரந்த, விரிந்த கடலின் மற்றொரு கரையை நாம் கண்களாலேயே கண்டுகொள்ள முடியுமா? கரையற்ற பெரும் வெள்ளம் அடித்து வரும்போது அதனுடைய கரையைக் காண்பது மிகவும் கடினம் அல்லவா? அதேபோல உரையற்ற இறைவனுடைய தன்மையை நம்முடைய புலனறிவினால் மட்டும் கண்டுகொள்ள முடியாது.

**''உரையற்ற தொன்றை யுரைசெய்யு மூடர்காள்**
**கரையற்ற தொன்றைக் கரைகாண லாகுமோ**

**(திருமந்திரம் - 2955)**

நமது அறிவுக்கு எட்டாத பரம்பொருளை மறைபொருள் என்கின்றோம். ஆனாலும் இறை என்னும் உண்மையைத் திருமூலரைப் போன்ற மகான்கள் முழுமையாக அனுபவித்தவர்கள். அவ்வாறு அனுபவித்த திருமூலர் இறைவனை அனைத்து உலகுக்கும் தலைவனாகக் காண்கின்றார். உயிருக்கு உயிராய் உயிர்களின் அறிவில் பொருந்தியிருத்தலைக் காண்கின்றார். அண்டத்தில் உலகெங்கிலும் நிறைந்து நிற்பதைக் காண்கின்றார்.

உள்ளத்தில் தியானப் பொருளாக விளங்கி நிற்பதை அனுபவிக்கின்றார். இறைவனுடைய அருளின் தன்மையை உணருகின்றார். பொய்மை நிறைந்த உடலில் உயிர்ப்புச் சக்தியாக உட்புகுந்து வெளிவருதலைக் காண்கின்றார். அதே நேரத்தில் உயிர்களின் புலனறிவால் அறியப்படாத மறைந்து நிற்பவனாகக் கள்ளத் தலைவனாகக் காண்கின்றார். மற்றவர்கள் இந்த உண்மையைத் தெரிந்து கொள்ளவில்லையே என்றும் நினைத்துக் கொள்கின்றார்.

**''உள்ளத்து ளேதான் உகந்தெங்கும் நின்றவன்;**
**வள்ளற் றலைவன்; மலருறை மாதவன்;**
**பொள்ளற் குரம்பைப் புகுந்து புறப்படும்**
**கள்ளத் தலைவன் கருத்தறி யார்களே''** (திருமந்திரம் - 1531)

கள்ளத் தலைவன் என்னும் சொல் எத்துணைக் கருத்துக்களை உள்ளடக்கி வைத்துள்ளது! இறைவன் சகல உயிர்களுக்கும் தலைவன்தான். **''தானே உலகில் தலைவனெனத் தகும்; தானே உலகுக்கு ஓர் தத்துவமாய் நிற்கும்''** என்கிறார் திருமூலர். எனினும் அவன் ஓர் கள்ளத் தலைவன். நம்மால் அறியப்படாது அவன் நிற்பதால் இவ்வாறு அழைக்கப்படுகின்றான். அவன் நம்மிடமிருந்து மறைந்து நிற்பதால் மட்டும் அவன் நம்மிடையே இல்லையென்று சொல்லிவிட முடியாது. இத்தப்பற்றிச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள் என்கிறார் திருமூலர். ''இறைவன் அண்டங்களில் பரவி நிற்கின்றான் என்று சிலர் கருதுகின்றீர்கள். அப்படியே இறைவனும் அண்டங்களில் பரந்து நிற்பான். இல்லை இல்லை இறைவன் நம் உள்ளத்திலேயே குடிகொண்டுள்ளான் என்று சிலர் நினைப்பீர்கள். நீங்கள் நினைப்பது போலவே இறைவன் உங்கள் உள்ளத்தில் குடிகொண்டிருப்பான் இல்லை இல்லை பரம்பொருள் என்று ஒன்றுமில்லை. அதெல்லாம் ஒரு கற்பனை. அது உள்ளத்திலும் இல்லை, வெளியிலும் இல்லை என்று நீங்கள் நினைத்தால் உங்களுடைய மனத்தில் அந்த எண்ணமே உண்மை என புலப்பட்டுக் கொண்டிருக்கும். பரம்பொருளாவது உங்களுடைய எண்ணங்களுக்கு எல்லாம் அப்பாற்பட்டது'' என்கிறார் திருமூலர்.

**''உள்ளத்தும் உள்ளன், புறத்துளன் என்பவர்க்**
**குள்ளத்தும் உள்ளன்; புறத்துளன் எம்மிறை;**
**உள்ளத்தும் இல்லை; புறத்தில்லை என்பவர்க்**
**குள்ளத்தும் இல்லை; புறத்தில்லை தானே''** (திருமந்திரம் - 1532)

இறைவனைக் கண்டுகொள்ள அறிவை ஒதுக்கி வைத்துவிட்டு உணர்வைப் பயன்படுத்த வேண்டும். உணர்வு என்பது அவனருளே. அதுவே மறைபொருளை நம் முன் நிறுத்தி வைக்கின்றது. அந்த உணர்வே இறைவனுடைய உண்மைத் தன்மையை நம்முள் வெளிப்படுத்துகின்றது. அப்போது இறைவன் ஒருவன் அல்லது ஒருத்தி அல்லது ஒருவரைச் சேர்ந்தவன், இத்தகைய நிறத்தையும் வண்ணத்தையும் கொண்டவன்.

இப்பேர்ப்பட்டவன் என்றெல்லாம் பேசாமல் பரம்பொருள் எத்தகையது என்கின்ற உண்மையை நாம் கண்டுகொள்கின்றோம் என்கிறார் நாவுக்கரசர். அந்த உணர்வு வரும் வரை நம்முடைய மனது சஞ்சலத்திலே தொடர்ந்து மூழ்கி இருக்கும் நிலையில் மனதில் ஒரு தெளிவு ஏற்படுவதில்லை.

**ஒப்புடைய னல்லன் ஒருவ னல்லன்**
**ஓரூர னல்லன் ஒருவ னில்லி**
**அப்படியும் அந்நிறமும்அவ் வண்ணமும்**
**அவனருளே கண்ணாகக் காணி னல்லால்**
**இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்**
**இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே.**

**- நாவுக்கரசர்**

கடவுள் என்னும் பேரின்பத்தை அனுபவிக்கத் தெளிந்த சிந்தை தேவைப்படுகிறது. மனத்திலே எண்ணங்கள் வாயு வேகத்தில் ஓடிக் கொண்டிருக்கும்போது ஆழ்ந்த சிந்தனைகளுக்கு இடம் கிடைக்காது. நீரின் பரப்பில் காற்றினால் அலை அடிக்கும்போது ஆழத்தைக் காண முடியாது. அசைவற்ற நீரிலே ஆழத்தைக் காணலாம். அசைவற்ற மனமே தெளிந்த மனமாகும். தெளிந்த மனத்திலே புலனறிவு அடங்கி உணர்வாகிய ஒளி தோன்றும். இறைவனே அந்த உணர்வாவான். **"உணர்வும் அவனே உயிரும் அவனே; புணரும் அவனே புலவி அவனே"** என்கிறார் திருமூலர். தெளிந்த சிந்தை பெற்றார்க்கு இறை உணர்வு இயல்பாகவே தோன்றும்.

**"திரையற்ற நீர்போற் சிந்தைதெளி வார்க்குப்**
**புரையற்று நின்றான் புரிசடை யோனே"** **(திருமந்திரம் - 2955)**

சீவன் சிவலிங்கமாவதற்கு வழியும் அதுவே என்கிறார் திருமூலர். அதாவது நம்முடைய சிந்தையைத் தெளிந்த நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும். புலனறிவினால் நமது மனத்திலே ஏற்படும் சஞ்சலங்களின் தன்மை குறைய வேண்டும். சஞ்சலங்கள் வினைகளுக்குக் காரணமாக இருக்கின்றன. வினைகள் வளர வளர மனமும் சித்தமும் அவற்றால் நிரப்பப்பட்டுத் தங்களுடைய உண்மை இயல்பைப்பறி கொடுத்துவிடுகின்றன அப்படி விடாமல் புலன்களின் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் சித்தத்தைத் தெளிய வைத்தவர்களுக்கு இறை உண்மை தோன்றும். வஞ்சனை செய்து மனத்தைத் தவறான வழிகளில் ஈடுபடச் செய்யும் புலன்கள் ஒளிபொருந்திய விளக்காக அமையும்.

**"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்**
**வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே"**

**(திருமந்திரம் - 1823)**

இதையே மேலும் விளக்கும் வகையில் உள்ளது பின்வரும் திருமந்திரம்:

**"சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை**
**சிந்தையி னுள்ளே சிவனும் வெளிப்படுஞ்**
**சிந்தை தெளியத் தெளியவல் வார்கட்குச்**
**சிந்தையி னுள்ளே சிவனிருந் தானே"** (திருமந்திரம் - 2853)

திருமூலர் இறை உணர்வை அனுபவித்து, ஞானம் பெற்றுத் திருமந்திரத்தை நமக்கு அளித்துள்ளார். தெய்வீக அனுபவத்தை விளக்குவது கடினம். நாம் பேசும் மொழி இந்த விஷயத்தில் ஓரளவுதான் நமக்குத் துணைபுரியும். தமிழ் மொழி ஓர் சிறந்த தொன்மையான மொழியாகும். உள்ளத்திலே தோன்றுகின்ற பல நுட்பமானவற்றைத்தமிழ் மொழி விளக்குவது போல வேறு மொழிகள் விளக்குவதில்லை என்று அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். ஒரு மொழியினுடைய பெருமை அந்த மொழி வெளிப்படுத்தும் எண்ணங்கள், கருத்துகள், உணர்வுகள் ஆகியவற்றின் நுட்பத்தையும், ஆழத்தையும் பொறுத்து இருக்கும். அந்த வகையில் பார்த்தால் தமிழ் மொழியின் பெருமை அளவிடற்கரியது என்று எல்லோரும் போற்றுகின்றனர். இந்த நூற்றாண்டின் புகழ்பெற்ற விஞ்ஞானி ஐன்ஸ்டீன் அவர்கள் ஒரு சொற்பொழிவில் இறை உண்மை போன்ற உயர்ந்த எண்ணங்களை வெளிப்படுத்த நமது மொழிகளில் சொற்கள் இல்லையே என்று கூறினார். அவருக்குத் தமிழ் தெரியாது. தமிழைப் படிக்க அவருக்கு வாய்ப்புக்கிட்டியிருந்தால் தமிழ் மொழியின் அருமையை அவர் நன்கு உணர்ந்துகொண்டிருப்பார். புலன்களால் அனுபவிக்க முடியாத ஒன்றை, பரம்பொருளை, தங்கள் உணர்வினாலே அனுபவித்து நாயன்மார்களும் ஆழ்வார்களும் இனிய தமிழில் பாடி அந்த உணர்வுகளை நமது உள்ளங்களில் ஆழப் பதிய வைத்த அந்தச் சாதனை வியக்கத்தக்க ஒன்றாகும் அல்லவா!

உள்ளத்திலே தெளிவு இருந்தால், மனத்திலும் வாக்கிலும் தெளிவு இருக்கும். உள்ளத்திலே குழப்பம் இருந்தால், குழம்பிக் கிடக்கின்ற மனத்தில் இருந்து குழப்பமான வாக்குத்தான் வெளிவரும். தெளிந்த உள்ளத்திலிருந்து வெளிவரும் வாக்கு ஆழமுடையதாக இருக்கும். காலம் கடந்ததாக இருக்கும். உண்மையை அப்படியே பிரதிபலிக்கும். தெளிவற்ற மனம் சொற்களைக் கொட்டிக் கொண்டே இருக்கும். அவற்றில் ஆழம் இராது. தொடக்கமோ முடிவோ இராது. அவற்றில் சிந்திக்கத்தகுந்த அல்லது பயன்படுத்தக்கூடிய கருத்துக்களோ அமைந்திராது. ஆழ்ந்த சிந்தனையுடையவர்கள் அதிகமாகப் பேசமாட்டார்கள். அந்த நிலையையே ஒரு சிறந்த நிலை என்கின்றார் திருமூலர். **"பெற்றார் உலகில் பேசார் பெருமையே"** என்பார் அவர். அதே நேரத்தில் திருமூலரைப் போன்ற சித்தர்கள் மக்களுடைய வாழ்க்கையின் அமைதியிலும், ஆன்மீக

வளர்ச்சியிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள். தாங்கள் பெற்ற பேரின்பத்தைப் பிறருக்கு விளக்கி எல்லோரும் ஆன்மீக அனுபவத்தைப் பெறச் செய்வதற்கான முயற்சியில் அவர்கள் எப்பொழுதும் தம்மை ஈடுபடுத்திக் கொள்வார்கள். இறைவன் அருளால் மனப்பக்குவம் அடைந்த, ஞானப் பொருளைப் பற்றிய நுட்பமான உபதேசத்தைப் பெறத் தகுதியுடைய சீடர்களுக்கு அவர்கள் தங்கள் விளக்கத்தை அருளிச் செய்வதன் தன்மை வேறு. ஆனால், விவரம் அறியாத பாமர மக்களுக்கு ஆன்மீக நுட்பங்களை விளக்குவதன் தன்மை வேறு.

திருமூலர் ஒன்பதாம் தந்திரத்தில் சூன்ய சம்பாஷணை என்கிற பகுதியில் கையாளும் முறை ஆன்மீகத்தின் ஆழ்ந்த, நுண்ணிய கருத்துகளையும், அனுபவங்களையும் சுவைபட, படிப்போர், கேட்போர் மனதில் நிலைத்து நிற்கும் வகையில் அமைந்துள்ளது. இதை மறைமொழி எனலாம். மேலாகப் பார்த்தால் சொற்களின் பொருள் ஒருவகையாக இருக்கும். ஆனால், அவற்றின் உட்கருத்து வேறு ஒரு வகையாக இருக்கும். சற்று யோசித்தால் பொருள் எளிதில் விளங்கிவிடும். சொற்களில் ஆழ்ந்த ஞானப்பொருள் பொதிந்து கிடப்பதைப் பார்க்கலாம். படிப்போருக்கு இன்பம் கிட்டும். நம்மை அறியாமலேயே பாடல்களில் உள்ள பொருள் பற்றிய ஒளி நமது உள்ளத்திலே தோன்றிவிடும். ஆழ்ந்த ஞானம் பெறுவதற்கு இதை ஒரு வழியாகவும் எடுத்துக் கொள்ளலாம். பௌத்த சமயத்தில் சென் என்னும் ஞான மார்க்கத்தைப் பின்பற்றும் அறிஞர்கள் இந்த உத்தியைப் பரவலாகக் கையாளுகிறார்கள். திருமந்திரத்தில் மறைபொருளைப்பற்றி மறைவாகப் பேசி ஞானம் போதிக்கும் பாடல்கள் பல இடங்களிலே காணப்படுகின்றன. அவற்றில் சிலவற்றைத் தெரிந்து கொள்ளலாம்.

படைத்தல் தொழிலுக்குக் காரணமாக இருப்பவன் இறைவன். உயிரானது உடலில் புகுதலும், வெளிவருதலும் அவன் அருளாலே நடக்கின்றது. இதை அறிந்து கொள்ளாமல் பிறப்பை நாம் புரியும் சாதனை என்றல்லவா நினைக்கின்றோம். உண்மையில் வித்திட்ட தந்தைக்கு என்ன நடக்கின்றது என்று தெரிவதில்லை. ஏற்றுக்கொண்ட தாயோ அதனுடைய விவரத்தை அறிவதில்லை. படைப்புத் தொழிலைச் செய்து வரும் பிரம்மனாகிய தட்டான் இதுபற்றித்தாய், தந்தையருக்கு விளக்கம் கூறுவதில்லை. ஐந்தொழில்கள் நடந்தேற நெறிகளை அமைத்துக் கொடுக்கும் இறைவன் எங்கும் உள்ளான். ஆனால், பிறப்பின் இரகசியத்தை அவன் வெளிப்படுத்துவதில்லை. இந்த நிலையிலும் மக்கள் தான் என்கிற செருக்கில் மாயையால் உந்தப்பட்டு அறியாமையில் மயங்கி நிற்கின்றனரே!

"இட்டான் அறிந்திலன் ஏற்றவள் கண்டிலள்
தட்டான் அறிந்தும் ஒருவர்க் குரைத்திலன்
பட்டாங்கு சொல்லும் பரமனும் அங்குளன்
கெட்டேன் இம்மாயையின் கீழ்மையெவ் வாறே".

(திருமந்திரம் - 486)

பிரம்மன், விஷ்ணு, ருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்கிற ஐந்து தேவர்களும் ஐந்தொழிலைப் புரிந்து வருகிறார்கள். ஐம்பூதங்களாலான உடம்பாகிய நிலத்தில் ஐம்புலன்கள், இந்திரியங்கள் இவற்றின் வழியாக அவர்கள் தத்தம் பணிகளைச் செய்து வருகின்றார்கள். இதைத் திருமூலர் **"ஐவருக்கு ஒரு செய் (நிலம்) விளைந்து கிடந்தது"** என்பார். இவர்கள் இந்த நிலத்தைப் பேணிக்காத்து வருவார்கள். அதாவது இந்த உடம்பினை ஓம்பி, அந்த உடம்பிலே தங்குகின்ற உயிருக்கு வினைப்போகத்தை ஊட்டி வருவார்கள். ஐம்புலன்களும் தங்களுடைய ஆட்டத்தை ஆடி நாளடைவில் இளைத்து விடுகின்றன. இவ்வுடலினால் நுகர வேண்டிய வினைக்கூட்டங்கள் முடிவு பெறுகின்றன. இறைவனிடமிருந்து உயிருக்கு "கிளம்பு" என்று அழைத்து இறுதிச் சீட்டு வந்துவிடுகின்றது. உடனே ஐவரும், மற்ற நுண்சக்திகளும் இந்த **"செய்"** ஆகிய நிலத்தை விட்டு பறந்து விடுகின்றன. "ஐவரும் அச்செய்யைக் காவல் விட்டாரே" என்கிறார் திருமூலர்.

"ஐவர்க் கொருசெய் விளைந்து கிடந்தது
ஐவரும் அச்செய்யைக் காத்து வருவர்கள்
ஐவர்க்கு நாயகன் ஓலை வருதலால்
ஐவரும் அச்செய்யைக் காவல்விட் டாரே".

(திருமந்திரம் - 188)

இந்த உடலில் குடிகொண்டுள்ளது உயிராகும். உயிரே ஐம்பொறிகளுக்கு நாயகனாகும். இந்த உடலாகிய ஊருக்குத் தலைவனாக இருப்பதும் இந்த உயிராகும். உயிர் தான் வாழ்வதற்காக, உய்வதற்காக ஒரு குதிரையைப் பயன்படுத்துகின்றது. அந்தக் குதிரைதான் பிராணவாயு என்கிற உயிர்க்காற்று. இந்தக் குதிரையை அடக்கி ஓட்டுவது மெத்தக் கடினம். அடிக்கடி சண்டி செய்யும். ஆனால், இறைவனிடம் பற்றுக் கொண்டுள்ள மெய்யர்கள் பிராணவாயுவாகிய குதிரையின் மீது ஏறி அமர்ந்து கடிவாளத்தைப் பற்றும்பொழுது அவர்களுடைய கட்டுப்பாட்டுக்கு அடங்கி ஓடும். ஆனால், உலகப் பற்றுடன் கீழ்நோக்கிச் செல்லும் எண்ணங்களுடன் அந்தக் குதிரையை வசப்படுத்த முயலும் மெய்யுணர்வு இல்லாத பொய்யர்களை இந்தக் குதிரை துள்ளி எழுந்து தரையிலே வீழ்த்தி விடும். அதாவது பிராணாயாமம் என்கிற பயிற்சி யோக சாதனையில் ஒரு முக்கியமான கட்டமாகும். இதைக் கவனமாகக்கற்க வேண்டும். வெறும் பிராணயாமம் மட்டும் போதாது. மெய்யுணர்வைப் பற்ற வேண்டும் என்கிற

குறிக்கோளுடன் வாழ்க்கையிலே இயம நியமங்களைக் கடைப்பிடிக்கும் பொழுதுதான் பிராணாயாமத்தின் முழுப்பலனும் வெளிப்படும்.

**''ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன்**
**உய்யக் கொண்டேறுங் குதிரை மற்றொன்றுண்டு**
**மெய்யர்க்குப் பற்றுக் கொடுங்குங் கொடாதுபோய்ப்**
**பொய்யரைத் துள்ளி விழுத்திடுந் தானே''. (திருமந்திரம் - 564)**

உடலோடு கூடியுள்ள சீவனை ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள் பற்றியுள்ளன சீவனால் தானாகவே அந்த மலங்களை அறிந்து கொள்ள முடிவதில்லை எனவே, சீவனைக் குருட்டுக் கிழவன் என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். சீவன் இருக்குமிடம் மாயை. இந்த மாயா சக்திக்கு ஆதாரமாக இருப்பவளும் குமரி என்று அழைக்கப்பெறும் சக்தியாவாள். மாயைக்கு அவள் தலைவியானதால் திருமூலர் அந்த நிலையை **''இருட்டறை மூலையிருந்த குமரி''** என்கிறார். இந்தக் குமரி அருளுக்கு இருப்பிடம். குருட்டுக் கிழவனாகிய சீவனுக்கு ஞானம் போதித்துச் சீவனை உய்விக்க விரும்புகின்றாள். அப்பொழுது இறைவனின் பேரறிவைச் சீவன் அனுபவித்து இன்பத்தையும் பெறும். அது ''கூடல்'' எனப்படும். இந்த நிலையை அடைய அருட்சக்தி சீவனை மாய உலகில் உடலில் வாழச் செய்து, இன்பத் துன்பங்களை அனுபவிக்கச் செய்து பின்னர் தன்னுடன் சேர்த்துக் கொள்கின்றாள். சீவனுடைய மலங்களை நீக்குகின்றாள். இறைவன், உயிர், பாசம் ஆகியவற்றின் உண்மை இயல்புகளை உணரச் செய்கின்றாள். சீவன் ஞானம் பெறுகின்றது. இதுவே ''மணம்புரிந்த நிலை'' எனப்படும். இங்கேகூடல், மணம் போன்ற சொற்களுக்கு மாறுபட்ட பொருள் இருப்பதைப் பார்க்கலாம்.

**''இருட்டறை மூலை யிருந்த குமரி**
**குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்**
**குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி**
**மருட்டி யவனை மணம்புரிந் தாளே'' (திருமந்திரம் ..... 1514)**

உழவன் நிலத்தை நன்றாக உழுது, பயிரிட்டு, பாத்தி கட்டி, தண்ணீர் பாய்ச்சி, உரம் முதலியவற்றைப் போட்டு பயிரை வளர்க்கின்றான். பயிரோடு களைப் பூண்டுகளும் வளர ஆரம்பிக்கின்றன. நாளடைவில் இந்தப் பூண்டுகள் முற்றிலும் வளர்ந்து பயிரையே அழித்து விடுகின்றன. பயிருக்குரிய உணவுப் பொருள்களை, உரத்தை, அவைகளே எடுத்துக் கொள்கின்றன. நல்ல பயிர் முளைக்கப்பூண்டுகளைக் களைய வேண்டும். அந்தப் பூண்டுகளைக் களையும் வகையை அறியவில்லையென்றால் பயிருக்கே நாசம் வந்து விடும். அதேபோல உடலாகிய நிலத்தில் உயிரானது தூய்மையான நெறியைக் கடைப்பிடித்து முன்னேற வேண்டும். உயிர் இந்த முயற்சியிலே வெற்றி பெறாதவாறு காமம், வெகுளி, மயக்கம் போன்ற

பூண்டுகள் தடைசெய்கின்றன. இவற்றை அகற்றிச் சிவனெறிப் பயிரை வளர்க்கும் வகையினைத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போர்ப்பட்டவர்கள் ஏனையோர்களால் அன்பு வைத்துப் போற்றப்படுபவர்கள் ஆவார்கள்.

**''தூறு படர்ந்து கிடந்தது தூநெறி**
**மாறிக் கிடக்கும் வகையறி வாரில்லை**
**மாறிக் கிடக்கும் வகையறி வாளர்க்கு**
**ஊறிக் கிடந்தென் உள்ளன்பு தானே''.** (திருமந்திரம் - 2867)

ஆன்மீகப் பாதையில் நாம் முன்னேற வேண்டுமென்றால் பல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. முதலில் ஞான சாதனை புரிய வேண்டுமென்கிற எண்ணம் மனத்தில் தோன்ற வேண்டும். திருவருளால் இது நடக்கிறது. அந்த எண்ணத்தை நிறைவேற்ற யோகப் பயிற்சிகளை மேற்கொள்ளலாம். இதன் விளைவாக வைராக்கியமாகிய பாகல் கொடி கிடைக்கின்றது. அத்துடன் நின்றுவிடக் கூடாது. தத்துவ ஆராய்ச்சியையும் புரிய வேண்டும். மெய்ப்பொருளைப் பற்றிய அறிவினைப் பெறத்தத்துவங்களிலும் ஈடுபட வேண்டும். இது புழுதியைத் தோண்டுவதாகும். அப்பொழுது சிவத்தைப் பற்றிய அறிவு ''பூசணி'' உள்ளத்திலே தோன்றும். வைராக்கியம், அறிவு போன்றவை தோன்ற ஆரம்பித்தவுடன் நமக்கு விஷய அனுபவங்களைக் கொடுத்துக் கொண்டு வரும் இந்திரியங்கள் போன்றவை தங்களுடைய செயல்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளும். இதைத் திருமூலர் **''தொழுது கொண்டே ஓடினார் தோட்டக் குடிகள்''** என்பார். முடிவில் ஆன்ம லாபமாகிய வாழைக்கனியை நாம் பெறலாம். வாழைக்கனி மெய்ப்பொருளைப் பற்றிய அறிவு உள்ளத்திலே எழுந்தவுடன் வரும் பேரின்பத்தைக் குறிக்கும்.

**''வழுதலை வித்திடப் பாகன் முளைத்தது**
**புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்த**
**தொழுதுகொண் டோடினார் தோட்டக் குடிகள்**
**முழுதும் பழுத்தது வாழைக் கனியே''.** (திருமந்திரம் - 2869)

உடம்பானது உயிரின் அனுபவங்களுக்காகப் படைக்கப்பட்டுள்ளது. உடலின் தலைவன் ''பார்ப்பான்'' என்று கூறப்படும் உயிராகும். இந்த உடலிலே இந்திரியங்களாகிய கறவைப் பசுக்கள் ஐந்து உள்ளன. அவை அடக்குவாரின்றி விருப்பம் போல வெறிகொண்டு செல்கின்றன. அவற்றை அடக்கி நடத்திச் செல்வதற்கு ஓர் மேய்ப்பார் வேண்டும். சிவனருளே இந்த மேய்ப்பார் ஆகும். பொறிகளையும், புலன்களையும் அடக்க இறைவனின் அருளும் ஆற்றலும் நமக்குத் தேவைப்படுகின்றன. அந்த நிலையில் உயிரும் புலன்வழி தனது மனத்தை செலுத்தும் விருப்பத்தை விடத் தொடங்குகின்றது. இறைவனுடைய அருளும், நம்முடைய வைராக்கியமும் சேரும்பொழுது

ஐம்பொறிகள், புலன்கள் ஆகியவை தத்தம் வழி செல்லாது இறை இன்பத்தை நாடுகின்றன. இறை இன்பத்தையும் பெறுகின்றன. இதையே வேறொரு இடத்தில் திருமூலர் **''தானே புலனைந்தும் தன்வசம் ஆயிடும்; தானே புலனைந்தும் தன்வசம் ஓடிடும்''** என்பார்.

**''பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு**
**மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன**
**மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினாற்**
**பார்ப்பான் பசுஐந்தும் பாலாச் சொரியுமே''**

**(திருமந்திரம் - 2883)**

அருட்சக்தி உள்ளத்தில் பதியும்பொழுது இருள் விலகுகிறது. பொன்னிறம் கொண்ட ஞான ஒளி உள்ளத்தை நிரப்புகிறது. சிரசிலே உள்ள சகஸ்தரதளம் மலரத் தொடங்குகிறது. அதாவது அறிவும் அருளும் அங்கே பதிகின்றன. இறைவனுடைய திருவடிகள் அப்போது விளக்கம் பெறுகின்றன. புன்னை மலரின் மகரந்தப்பொடி போன்று இருக்கும் மலமாகிய அணுக்கள் மலரிலிருந்து ஒதுக்கப்படுகின்றன. இறைவனுடைய திருவடிகளில் **சிலம்**பொலி கேட்கத் தொடங்குகிறது. மூலாதாரத்தில் வீற்றிருந்த **சதக்தி**யானவள் குளிர்ந்த மண்டலத்தில் இறைவனுடன் பொருந்துகின்றாள். **அத்து**ணையும் உள்ளத்தின் உணர்வுகளிலே நடைபெறுகின்றது. சீவனும் **சிவனும்** பொருந்தி விடுகின்றனர்.

**''போதும் புலர்ந்தது பொன்னிறங் கொண்டது**
**தாதவிழ் புன்னை தயங்கு மிருகரை**
**ஏதமில் ஈசன் இயங்கு நெறியிது**
**மாத ரிருந்ததோர் மண்டலந் தானே''.** **(திருமந்திரம் - 2931)**

திருமந்திரத்தில் வரும் சூன்ய சம்பாஷணை என்னும் பகுதி ஓர் அருமையான படைப்பு. ஆன்மீகக் களஞ்சியம். மெய்யுணர்வைப் பற்றிய பல நுட்பமான உண்மைகள் எளிதில் விளங்குவதற்காகத் திருமூலர் அன்றாட அனுபவங்களிலிருந்து சிறந்த கற்பனையுடன் உருவகப்படுத்தியுள்ளார். திருமூலரின் இந்த அற்புத இலக்கியப் படைப்பு பல நூற்றாண்டுகளாக அவர் வழிவரும் சித்தர்களின் உள்ளங்களைக் கவர்ந்துள்ளது. பின்னால் வந்த பல சித்தர்கள் மெய்ப்பொருளை விளக்க மறைமொழியை இதுபோன்றே பரவலாகக் கையாண்டு வந்தார்கள். பல தடவைகள் படித்தாலும் தெவிட்டாத சூன்ய சம்பாஷனைப் பகுதியை முழுமையாக நாம் எல்லோரும் படித்து, சிந்தித்து, அதன் உண்மையை உணர்ந்து பயன்பெறுவோமாக.

❋ ❋ ❋

# 39. திருமந்திரச் செம்பொருள்

சிவபெருமானின் திருவருள் பெற்ற நான்மறை யோகிகளில் ஒருவரான திருமூலதேவ நாயனார் அருளிச் செய்த திருமந்திர மாலை சைவப் பெருமக்கள் போற்றி வணங்கும் பன்னிரு திருமுறைகளில் பத்தாவது திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது. சைவ சித்தாந்த தத்துவ உண்மைகளை விளக்கும் சிறந்த சாத்திர நூலாகவும், சைவ நெறியில் நின்று சிவமாம் பரம்பொருளைப் பற்றிச் சிந்தித்து, வழிபட்டு, சிவமாம் தன்மையைப் பெறுவதற்கான சாதனங்கள் கொண்ட ஓர் ஒப்பற்ற நூலாகவுந் திகழ்கின்றது. அதுமட்டுமின்றிச் சிவயோக முடிவாகிய சிவஞான அனுபவம் அடைவதற்கான பாதையைச் சுட்டிக்காட்டும் தனிச்சிறப்புப் பெற்றதாயும் விளங்குகின்றது. அத்துடன், சிவஞானத்தின் வாயிலாகக் கிடைக்கப்பெறும் அரும்பெரும் உணர்வுகளுக்கு இலக்கணமாகவும் திருமந்திரம் அமைந்துள்ளது.

திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் பெருமான் திருவாக்கின்படி திருமூலநாயனார் இந்நிலவுலகில் பன்னெடுங்காலம் சிவயோகத்தில் அமர்ந்து உலகம் உய்யச்சிவயோக, சிவலோக, சிவஞான பாதைகளுக்கான உபதேசங்களையெல்லாம் அருளிச் செய்தார் என்பதற்குத் திருமந்திரத்திலேயே சான்றுகள் கிடைக்கின்றன.

"... ... ... ...
... ... ... ...
**தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்**
**ஒப்பில் எழுகோடி யுகம்இருந் தேனே".** (திருமந்திரம் - 74)

**"இருந்தேன் இக்காயத்தே எண்ணிலிகோடி**
**இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே**
**இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே**
**இருந்தேன் என்நந்தி இணையடிக் கீழே".** (திருமந்திரம் - 80)

திருமூலர் தனது ஒப்பற்ற யோக சாதனையாலும், தவ வலிமையாலும் உடம்பினைப் பல்லாண்டுகள் பாதுகாத்துக் கொள்வதற்கான உபாயங்களை நன்கு அறிந்து கொண்டதன் காரணமாக அவர்கள் நெடுங்காலம் தரணியிலே

வாழ்ந்திருந்து, முழுதுணர்ந்த மெய்ஞ்ஞானச் சிந்தையிலே இறைவன் தந்த ஆகமப் பொருளை இப்புவியில் பிறந்த மக்கள் அனைவரும் பிறவிப்பயனை அடையும்பொருட்டுத் திருமந்திர மாலையினை அருளிச் செய்தார் என்பதற்குப் பின்வரும் திருமந்திரங்களையும் சான்றாகக் கொள்ளலாம்:

''உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே''.

(திருமந்திரம் - 724)

''உடம்பினை முன்னம் இழுக்கென்றி ருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே''.

(திருமந்திரம் - 725)

திருமூலருடைய காலம் இன்றும் சரிவர வரையறுக்கப்படாத காரணத்தினால் திருமந்திரத்தில் காணப்படும் பல சமய ஆன்மிகக் கருத்துகள் உணர்வுகள் எத்துணை பழமையானவை என்று கூற இயலவில்லை. குறிப்பாகப் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் அவர்களுடைய மிகச்சிறந்த பெரிய புராண ஆய்வு நூலில் திருமந்திரம் எவ்வாறு பத்தாம் திருமுறையாக வைக்கப்பட்டது என்கின்ற வினாவை எழுப்புகின்றார். பக்தி இயக்கத்தின் தலைவர்களாகிய ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற அருளாளர்களுடைய தோத்திரப் பகுதிகளுக்கிடையே திருமந்திரம் வைக்கப்பட்டுள்ளது எவ்வாறு என்று மேலும் ஆராய வேண்டும் என்கிற கருத்தையும் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் அவர்கள் முன்வைக்கின்றார்கள். சைவ சமய அறிஞர்கள் இந்தப் பிரச்சினையை மேலும் ஆராயலாம். அதற்கான வாய்ப்புகள் நிறைய உண்டு.

ஆனால், நம்மைப் போன்றவர்களைப் பொறுத்தவரை பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் அவர்கள் கூறுவதைப் போலவே திருமூலரை நம்பிரான் என்று போற்றிச்சுந்தரர் பெருமான் தொண்டர் குழுவிலும் அவரைச் சேர்த்துக் கொள்கின்றார் என்பது நமக்கு ஒரு ஆழ்ந்த அமைதியைத் தருகிறது. எந்த ஒரு சமயத்திற்கும், சாத்திரத்திற்கும், தோத்திரத்திற்கும் சமமான பங்கு உண்டு. ஒன்றின்றி மற்றது இல்லை. முழுமையான சமயம் தோத்திரத்திற்கும் சாத்திரத்திற்கும் போற்றத்தகு பங்கினை அளிக்கிறது.

சைவம் போன்ற தொன்மை வாய்ந்த சமயம் அளப்பரிய காலம் வளர்ந்து வந்ததன் விளைவாகப் பல்வேறு நீரோட்டங்களைத் தன்னுள் அடக்கிக் கொள்கின்றது. அறிவுக்கெட்டாப்பரம்பொருளைக் காண விழையும்போது மனத்திலே ஏற்படும் பயம், வியப்பு, பக்தி, அன்பு,

ஆச்சரியம் போன்ற உணர்வுகள் கவிதைகளாகவும், பாடல்களாகவும், ஆற்றுப்பெருக்கத்தைப்போல் வெளிவருபவைகளாகச் சமயத்தின் தோத்திரப் பகுதிகளுக்கு அடிக்கல் நாட்டுகின்றது. அதே நேரத்தில் மனிதனின் தனிச் சொத்தாகிய பகுத்தறிவும் பணியாற்றத் தொடங்கி விடுகின்றன. மனதிலே உருவாகும் எண்ண அலைகளைப்பாகுபடுத்தி அவற்றின் தன்மையை ஆராய்ந்து தத்துவ வடிவம் அளித்துப்பல்வேறு கருத்துக்களிடையே உரிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அளிக்கும் வகையில் மனிதனின் பகுத்தறிவு தனது பணியினை மேற்கொள்கிறது. இப்பணியின் முடிவே சாத்திரமாகும். தோத்திரங்களுக்கிடையே சாத்திரங்கள் தோன்றுவது இயற்கையே தவிர வேறொன்றில்லை. சைவ சமயத்திற்கு நாயன்மார்கள் இலக்கியம் மட்டும் அளிக்கவில்லை. இலக்கணத்தையும் தந்துள்ளார்கள். ஏன்? மூவர் முதலிகளின் இலக்கியத்தின் முடிவே இலக்கணமாகக் கருதப்பட வேண்டும். இந்த நிலையிலிருந்து நோக்கும்போது திருமந்திரம் தந்த திருமூல தேவர் சைவசமயத்திற்குத் தனித்தன்மை வாய்ந்த சித்தாந்தத்தைக் கொடுத்துள்ளார்கள் என்றே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சித்தாந்தம் என்பது முடிந்த முடிவினைக் குறிக்கும். சைவம் என்பது சிவத்தொடர்புடையது எனப் பொருள்படும். **''சைவம் சிவத்துடன் சம்பந்தமாவது''** - திருமந்திரம் பின்வருமாறு கூறுகிறது.

**''சைவம் சிவத்துடன் சம்பந்தமாவது**
**சைவம் தனையறிந் தேசிவம் சாருதல்**
**சைவம் சிவந்தன்னைச் சாராமல் நீவுதல்**
**சைவம் சிவானந்தஞ் சாயுச் சியமே''.**

**(ஐந்தாம் தந்திரம் - சாயுச்சியம் - 1)**

அதாவது சைவமாவது சிவமாம் பரம்பொருளுடன் பொருந்தி நிற்றலாம். சிவ தத்துவத்தை உணர்ந்து அதன் மையமாக விளங்கும் சிவத்தைப் பற்றி ஒன்றி நிற்றலாம். சீவன் தன்னிடத்திலேயே சிவமானது ஒளிவிட்டு அமைந்திருப்பதை உணர்ந்து கொள்வதாம். இந்த நிலையில் கிடைக்கும் பேறே சிவானந்தப் பேறாகும் என்பதையும் அறிந்து கொள்வதாம். எனவே, சைவ சித்தாந்தம் உயிர்கள் சிவத்துடன் சம்பந்தப்படுவதால் அடையக்கூடிய பெருநிலையை விளக்குகின்றது. சிவ பரம்பொருள் உயிர்கள் மேல் கொண்ட பெரும் கருணையின் காரணமாக அருளாளர்கள் மூலம் அருளிச் செய்த ஞானத் தொகுதியே சைவ சித்தாந்தமாகுமெனவும் கூறலாம். இறைவன், உயிர் அவற்றினைப்பற்றி நிற்கும் தளை, இவற்றிற்கும் இடையே உள்ள தொடர்பு போன்றவற்றின் தன்மையை ஆய்ந்து, அத்தளையின் தன்மையை விளக்கி மாய இருளை அகற்றிச்சீவன் சிவனைச் சாரும் முறைகளைப் போதிப்பதே சைவ சித்தாந்தமாகும்.

பன்னிரு திருமுறைகள் சைவசமயத்தின் உயிர் நாடியாக விளங்குகின்றன. பத்தாவது திருமுறையாகிய திருமந்திரம் சைவ சமயத்திற்கான சித்தாந்தத்தைத் தெளிவாக எடுத்துத் தருகின்றது என்பதும் அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். இறைவன் இறைவிக்கு அருளிச் செய்த சிவாகமங்களின் பொருளை, சாரத்தை திருமூலர் தமிழில் வகுத்துத் தந்தார் என்பதற்கான சான்றுகள் திருமந்திரப் பாடல்கள் மூலமாகவே கிடைக்கின்றன (மந்திரம் 77, 81 போன்றவை).

சிவாகமங்கள் உயிர்களைப் பற்றியும், உயிர்களைப் பந்திக்கின்ற பாசத்தின் தன்மையைப் பற்றியும், பாசத்தை நீக்கி உள்ளொளி பெருக்கி இறைவனுடைய திருவடியைச் சார்தல் பற்றியும் விளக்குகின்றன. இவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாக நான்கு பாதங்களாய் வகுத்துப் பேசப்படுகின்றன. ஆகவே, அறியப்படும் பொருளைப் பற்றியும், அறிகின்ற அறிவின் தன்மையையும், அறிகின்றவனையும், அவனைச் சுற்றியுள்ள இருளாகிய மாயையின் கூட்டத்தைப் பற்றியும், அதனூடே விளங்கும் சிவத்தைப் பற்றியும் சிவசொரூபத்தின் பிரபாவத்தைப் பற்றியும் திருமந்திர மாலையில் தான் முற்றிலும் விளக்கி விட்டதாகத் திருமூலர் கூறுகின்றார்.

அதுவே சைவ சித்தாந்தப் பொருளாகும்.

**"ஞேயத்தை ஞானத்தை ஞாதுரு வத்தினை**
**மாயத்தை மாமாயை தன்னில் வரும்பரை**
**ஆயத்தை யச்சிவன் தன்னை யகோசர**
**வீயத்தை முற்றும் விளக்கியிட்டேனே".** **(திருமந்திரம் - 90)**

அதாவது திருமூலர் அருளிய திருமந்திரம், பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் உண்மையினையும், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நன்னெறிகளையும் விளக்குவதாக அமைந்துள்ளது. எனவேதான் சேக்கிழார் பெருமான் திருமூலரைக் குறித்து **"நலஞ்சிறந்த ஞானயோகக் கிரியா சரியையெலாம் மலர்ந்த மொழித் திருமூலத்தேவர்"** என்று வாழ்த்துகிறார். இந்நூலிலுள்ள ஒன்பது தந்திரங்களுள் முதல் நான்கும் சிவஞானம் பெற விரும்புவோர்க்குத் தேவையான தகுதியைப் பற்றியும் அதற்கான சாதனங்களையும் விளக்குகின்றன. ஆறு முதல் ஒன்பது வரையிலுள்ள தந்திரங்கள் ஞானத்தைப் பற்றியும், ஞானம் பெற்றோருடைய அனுபவம் பற்றியும், அனுபவம் பெற்றோர் எய்தும் பேற்றினைப் பற்றியும், அவர்களுடைய உலக வாழ்வின் பெருமையைப் பற்றியும் எடுத்துக் கூறுகின்றன. இவற்றிற்கு மையமாக நிற்பது ஐந்தாவது தந்திரம். இதில்தான் சைவ சித்தாந்த உண்மைகள் பேசப்படுகின்றன. சரியையாதி நாற்பாதங்கள் விளக்கப்படுகின்றன. அவற்றை மேற்கொள்வதன் விளைவாகப் பெறப்படும் சம்பந்தத்தின் தன்மை தெளிவாக்கப்படுகின்றன.

பிறவித் துன்பத்திலிருந்து நீங்கி வீடு பேறு பெறுதல் என்பது சிவனை அடைவதாகும், சிவமாம் தன்மையைப் பெறுவதாகும். எல்லாவற்றிற்கும் மேலானவன் அவனே. இரண்டவன் இன்னருள் (1)சிவனோடொக்கும் தெய்வம் தேடினுமில்லை. அவனோடொப்பார் இங்கு யாவருமில்லை, (5) அவனையொழிய அமரருமில்லை, (6) தன்னை அப்பாயெனில் அப்பனுமாயுளன் (7) அவன் தீயினும் வெய்யன் புனலினுள் தண்ணியன்; சேயினும் நல்லன்; தாயினும் நல்லன், (8) அவன் கடந்து நின்றான் எங்கும் கண்டு நின்றானே, (14) பிறப்பிலி பிஞ்ஞகன், பேரருளாளன்; இறப்பிலி யாவர்க்கும் இன்பமருளும் துறப்பிலி, (25) ஒப்பிலி வள்ளல், ஊழிமுதல்வன், (36) இத்தகைய சிவமாகிய பரம்பொருளைச் சூடியும், நெஞ்சிடை வைத்தும் பிரான் என்று பாடியும் பன் மலர் தூவி பணிந்து நின்று ஆடியும், அமரர்பிரான் என்று நாடியும், வாழ்த்தவும் செய்வோர்க்கு ஈசன் அருள் நிச்சயம் கிடைக்கப்பெறும். ஐயமில்லை.

இறைவனைப் போல் உயிருக்கும் ஆக்கமும் அழிவும் இல்லை என்பது சைவக்கொள்கையாகும். **"பதியினைப்போல் பசு பாசம் அனாதி"** உடல், செல்வம், இளமை போன்றவற்றில் ஈடுபாடு கொண்டு அவற்றிற்காக உழைப்பவன் ஞானம் பெறத் தகுதியற்றவன். இவற்றின் நிலையாமையை உணர்ந்து எல்லாவற்றிற்கும் அடிப்படையான இறைவன் மீது நீங்காத பற்று வைப்பதே ஞானம் பெறுவதற்கு முதற்படியாகும். இதை உணராமல் நிலையற்றதொன்றை நிலையெனக் கருதுபவர், உயிரின் உண்மைத் தன்மையினை அறியாதவர்கள் ஆவார்கள். அதனையடுத்து ஞானம் பெற முயல்பவன் அறம் செய்தும், அன்பு பூண்டும், கல்வி கேள்வி மேற்கொண்டும், கொல்லாமை, புலால் மறுத்தல், பிறன் மனை நயவாமை, கள்ளுண்ணாமை போன்ற விரதங்களை மேற்கொண்டும் தெய்வப்புலவர் திருவள்ளுவர் அருளிய கருத்துக்களை அகத்திற் கொண்டு அவற்றைப் பின்பற்றுவதன் மூலம் சைவ சித்தாந்த நெறியைக் கடைப் பிடித்தவனாகின்றான் என்கின்ற நிலை திருமந்திரத்தில் முதல் தந்திரத்தில் விளக்கப்படுகின்றது. அத்தோடு நன்னெறி அறிந்து, ஒழுகி வீடு பேற்றினை அடையும் குறிக்கோளுடன் நற்பொருளைக் கேட்டுணர்வதற்கான ஆவலுடன், பெரியோர்களை அறிந்தும் வழிபட்டும் உள்ளமாகிய தீர்த்தத்தின் உண்மைகளை உணர்ந்தும் சிவநிந்தை, குரு நிந்தை, மகேஸ்வர நிந்தை ஆகிய தீமைகளை அறவே அகற்றியும் தம்மை அறிந்த தத்துவ ஞானிகளைத் துணையாகக் கொண்டும் சைவ சித்தாந்த ஏணியில் அடுத்த படியில் கால் வைக்க வேண்டுமென்பதும் முதலாவது தந்திரத்தின் சாரமாகும்.

மூன்றாம் தந்திரத்தின் குறிக்கோள் சரீர சித்தி உபாயமாகும். உயிர் தங்கியுள்ள உடம்பு பேணப்பட வேண்டும். அறம் முதலியவற்றைச் செய்ய உடம்பு தேவைப்படுகின்றது. ஆனால், உடம்பின் வலிமை, மனத்தின் வலிமை, இறைவனை நாடுவதற்கேயாம். இறைவனை நாடுதல் வேண்டி யோக மார்க்கமாகச் செய்யத் தகுந்தவற்றைச் செய்தும், தகாவற்றை நீக்கியும்,

உடலையும், உள்ளத்தையும் ஒருமுகப்படுத்திச் சிவயோக சாதனத்தை மேற்கொண்டு சிவஞானத்தைப் பெறுவது சைவ சித்தாந்த நெறியின் நான்கு பாகங்களில் ஒன்றானபடியால் திருமந்திரம் யோகத்திற்கு ஓர் சிறந்த இடத்தை நல்கி யோகானுபவங்களை விரிவுபடுத்தியுள்ளது. அதேபோல சிவயோகத்தைப்பெற மந்திரங்களின் துணையும் இன்றியமையாததாக உள்ளது என்பதையும் நான்காம் தந்திரத்தில் தெரிவிக்கின்றது.

ஐந்தாம் தந்திரம் திருமந்திரத்திற்கு உயிர் நாடியாகக் கருதப்படுகிறது. இதன்கண் சுத்தம், அசுத்தம், மார்க்கம், கடும் சுத்தம் என்னும் நால்வகைச் சைவங்களும், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகைச் சைவ நெறிகளும் அவற்றிற்குரிய சன்மார்க்கம், சக மார்க்கம், சற்புத்திர மார்க்கம், தாச மார்க்கம் என்கின்ற வழிகளும் அவற்றைப் பின்தொடர்பவர் பெறக்கூடிய சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்னும் நால்வகைப் பேறுகளும் அறிவுறுத்தப்பட்டுள்ளன. இருவினை ஒப்பு என்கிற நிலையில் சத்திநிபாதம், மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என்கிற நான்கு படிகளாகத் திருவருள் உயிரை ஆட்கொள்கின்ற அனுபவ உண்மையும் விளக்கப்பட்டுள்ளது.

இறைவன் ஒருவனே, உயிர்கள் பல, உயிர்கள் அனாதியே, மலத்தால் கட்டுப்பட்டு நிற்பன. அவை உய்யும்பொருட்டு இறைவன் வினைக்கீடாய் மெய்க்கொண்டு உண்ணின்று உருக்கி ஒப்பிலா ஆனந்தக் கண்ணின்று காட்டி களிம்பு அறுக்கின்றான். அருட் கண்ணை விழிப்பிக்கின்றான். இதன் விளைவால் கிடைக்கப் பெறும் இன்பமே பேரின்பமாகும். அதற்காகச் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனகின்ற பாதைகளில் செல்லும் சற்குருவின் அருள்பெற்றும் திருநீறு போன்ற சாதனங்களைத் துணைக் கொண்டும் பக்குவ நிலையை அடைபவர் இறைவன் அருள் பெறுகின்றனர்.

சரியைக்கு

நாடு நகரமும் நற்றிருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெரு மான்என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே

(திருமந்திரம் - 1445)

கிரியைக்கு

பத்துத் திசையும் பரமொரு தெய்வமுண்
டெத்திக் கிலரில்லை என்பதின் அமலாக்
கொத்துத் திருவடி நீழல் சரணெனத்
தத்தும் வினைக்கடல் சாராது காணுமே.

(திருமந்திரம் - 1451)

யோகத்திற்கு

நெறிவழியே சென்று நேர்மையுள் ஒன்றித்
தறியிருந் தாற்போல் தம்மை யிருத்திச்
சொறியினுந் தாக்கினுந் துண்ணென் றுணராக்
குறியறி வாளர்க்குட்குக்கூடலுமாமே. (திருமந்திரம் - 1457)

ஞானத்திற்கு

சத்தமுஞ் சத்த மனனுந் தகுமனம்
உய்த்த உணர்வு முணர்த்தும் அகந்தையுஞ்
சித்தமென் றிமமூன்றுஞ் சிந்திக்குஞ் செய்கையுஞ்
சத்தங் கடந்தவர் பெற்றசன் மார்க்கமே. (திருமந்திரம் - 1468)

என்கின்ற திருமந்திரங்கள் சைவ சித்தாந்த நன்னெறிகளுக்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

ஏழு, எட்டு, ஒன்பது தந்திரங்களில் வரும் இறையருள் பெற்ற உயிர்கள் சிவயோக, சிவஞான நெறிகளில் ஆழ்ந்து நின்று நற்பண்புகளை மேற்கொண்டனவாய், அறிவுதயம் பெற்றவையாய், சிவ தரிசன அனுபவம் பெற்று அம்பலவாணனின் திருநடனத்தைப் பல்வேறு நிலைகளில் கண்டுகளித்துச் சிவத்தைத் தம்முள் அனுபவித்து மோன சமாதியில் திளைத்துச்சர்வ வியாபியாகிய சிவனின் பெருமையை என்றென்றும் உணர்வில் கொண்டு வாழ்ந்து வரும் உன்னதமான நிலையைப் பற்றிய விளக்கம் திருமந்திர மாலைக்குப் பெருமை தரக்கூடிய ஒன்றாகும்.

ஒன்றே குலமும், ஒருவனே தேவனும் என்கின்ற திருமந்திர வாக்கு சைவ சித்தாந்தத்தின் மையக் கருத்தாக அமைகின்றது.

சித்தாந்த நெறியின் தாரக மந்திரமாகச் செந்தமிழ்த் திருவைந்தெழுத்து திருமந்திரத்தில் பல்வேறு இடங்களில் போற்றிப் பேசப்படுகின்றது.

"ஒன்றுகண் டீர்உல குக்கொரு தெய்வமும்
ஒன்றுகண் டீர்உல குக்குயிராவது
நன்றுகண் டீர் இனி நமச்சிவா யப்பழந்
தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே."

(திருமந்திரம் - 2962)

"அஞ்செழுத் தாலே அமர்ந்தவன் நந்தியும்
அஞ்செழுத் தாலே அமர்ந்தபஞ் சக்கரம்
அஞ்செழுத் தாகிய வக்கர சக்கரம்
அஞ்செழுத் துள்ளே அமர்ந்திருந் தானே"

(திருமந்திரம் - 934)

"சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே யடிமைய தாக்கிச்
சிவாய சிவ சிவ வென்னென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்தமாமே". (திருமந்திரம் - 2718)

இறைவனது திருப்பெயராகிய திருவைந்தெழுத்தினை உச்சரித்து மனதை ஒருமித்துச் சிவத்தில் பொருத்தினால் பிறவித் துன்பம் நீங்கும்.

"நமவென்னு நாமத்தை நாவில் ஓடுக்கிச்
சிவவென்னு நாமத்தைச் சிந்தையு ளேற்றப்
பவமது தீரும் பரிசுமதற்றால்
அவமதி தீரும் அறும்பிறப் பன்றோ". (திருமந்திரம் - 2717)

சிவஞானம் பெற்ற உயிர் தன்னுடம்பையும், கருவி கரணங்களையும் மற்ற தத்துவங்களையும் தன்னில் வேறாகப் பகுத்துணர்ந்து சிவ பரம்பொருளே மெய்ப்பொருளெனக் கண்டு தெளியும் தன்மையை "மெய்கண்டதே" என்று திருமூலர் சிறப்பிக்கின்றார்.

"மெய்வாய்கண் மூக்குச் செவியென்னும் மெய்த்தோற்றத்
தவ்வாய அந்தக் கரணம் அகிலமும்
எவ்வா வுயிரும் இறையாட்ட ஆடலாற்
கைவா யிலா நிறை எங்குமெய் கண்டதே".

(திருமந்திரம் - 2586)

என வரும் திருமந்திரப் பாடல் உணர்த்தும்.

சிவ பரம்பொருள் உயிருக்கு அருள் செய்தல் வேண்டி ஆசிரியத் திருமேனி கொண்டு எழுந்தருளி, பாசங்களை நீக்கி மெய்யுணர்வு அளித்து அருள்வான் என்பது சைவ சித்தாந்தத் துணிவாகும். இதைக் கூறும் திருமந்திரம் பின்வருமாறு:

"குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே".

(திருமந்திரம் - 1581)

உயிரானது பாச ஞானம், பசு ஞானம், பதி ஞானம் ஆகியவற்றைச் சிவத்தின் அருட்சக்தியால் படிப்படியாக அடைவதற்கான முயற்சிகளில் ஈடுபடும்பொழுது அழியும் தன்மையுடைய பிரபஞ்சத்தை அசத்து எனவும், அழிவின்றி நிற்கும் பரம்பொருளைச் சத்தெனவும், சிவமாகிய பரம்பொருளைச் சிவசத்து எனவும், அசத்தினைச் சார்ந்த நிலையில் அசத்தாகவும், சத்தினைச் சார்ந்த நிலையில் சத்தாகவும், இவ்விரு

பொருள்களின் உண்மைத் தன்மையை அறியும் திறமை படைத்துச் சதசத்தாகவும் நிற்கும் நிலை சைவ சித்தாந்தம் சமய தத்துவங்களுக்கு வழங்கிய தனித்தன்மை வாய்ந்த மாபெரும் உண்மையாகும். திருமந்திரம் இதைப்பின்வருமாறு கூறுகின்றது.

"சத்தும் அசத்தும் சதசத்துந் தான்கண்டு
சித்தும் அசித்தும் சேர்வுறா மேநீத்த
சுத்தம் அசுத்தமும் தோய்வுறா மேநின்று
நித்தம் பரஞ்சுத்த சைவர்க்கு நேயமே". (திருமந்திரம் - 1420)

"சத்தும் அசத்தும் சதசததுந் தான்கூடிச்
சித்தும் அசித்தும் சிவசத்த தாய்நிற்கும்
சுத்தம் அசுத்தம் தொடங்காத் துரியத்துச்
சுத்தரா மூன்றுடன் சொல்லற் றவர்களே". (திருமந்திரம் - 2328)

"தானே அறியான் அறிவிலோன் தானல்லன்
தானே யறிவான் அறிவு சதசத்தென்
றானால் இரண்டும் அரணருளாய் நிற்கத்
தானே யறிந்து சித்துடன் தங்குமே". (திருமந்திரம் - 2329)

பாச ஞானமாவது ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களைப் பற்றி அறிந்து கொள்வதாகும். அவை முறையே நெல்லின் பகுதிகளாகிய முளை, தவிடு, உமி என்பவற்றைப் போன்று உயிரைப் பிணித்து மறைத்துள்ளது போலாகும். இந்த உண்மையைப் பின்வரும் திருமந்திரப்பாடலில் காணலாம்.

"ஆணவ மாயையுங் கன்மமு மாமலங்
காணு முளைக்குத் தவிடுமி யான்மாவும்
தாணுவை யொல்வாமற் றண்டுல மாய்நிற்கும்
பேணுவாய் மற்றுநின் பாசம் பிரித்தே." (திருமந்திரம் - 2192)

சித்தாந்தச் சமயத்தின் பெருமை வாய்ந்த கோட்பாடு இறைவனடி பேணுதலாகும். இறைவன் திருவடியை அருட் சக்தியென்றும், அருள் ஞானமென்றும் உள்தெளிவென்றும் சுட்டிக்காட்டுவது சித்தாந்தமேயாகும். பின்வரும் திருமந்திரம் இதைப் பிரதிபலிக்கின்றது.

"திருவடியே சிவ மாவது தேரில்
திருவடி யேசிவ லோகஞ் சிந்திக்கில்
திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே" (திருமந்திரம் - 138)

**"சிந்தையி னுள்ளே எந்தை திருவடி**
**சிந்தையும் எந்தை திருவடிக் கீழது**
**எந்தையும் என்னை யறியகி லானாகில்**
**எந்தையை யானும் அறியகி லேனே".** **(திருமந்திரம் - 2428)**

இறைவனுடைய திருவடியினை வேண்டுமென்பாருக்கு அருளல் அவனது இயல்பாகும். உலகெங்கும் தானான உண்மையை அவன் அளிப்பான். நீக்கமற நிற்கின்ற பரிபூரணானந்தன் ஆதலில் திருவடி சார்ந்தோருக்குப் பேரின்பத்தை அருள் வடிவில் அளிக்கின்றான். சித்து இவை, அசித்து இவை என அறிவித்து யோகத்தின் வாயிலாகச் சிவ ஒளியுடன் கலந்து அவயோகம் புகாவண்ணம் பேரின்பத்தைப் பெறுவதற்கான் அருளைப் புரிபவனும் அவனேயாகும்.

**"சிவயோக மாவது சித்தசித் தென்று**
**தவயோகத் துள்புக்குத் தன்னொளி தானாய்**
**அவயோகஞ் சாரா தவன்பதி போக**
**நவயோக நந்தி நமக்களித் தானே".** **(திருமந்திரம் - 122)**

**"அளித்தான் உலகெங்குந் தானான உண்மை**
**அளித்தான் அமரர் அறியா உலகம்**
**அளித்தான் திருமன்றுள் ஆடுந் திருத்தாள்**
**அளித்தான் பேரின்பத் தருள்வெளி தானே".**

**(திருமந்திரம் - 123)**

சைவ சித்தாந்தம் தத்துவ விளக்கங்களுடன் நின்று விடவில்லை. சிவமாம் பரம்பொருள் தத்துவங்களுக்கு அப்பாற்பட்டவன். தத்துவாத்தன், **"அப்பாலாய், அதற்கும் அப்பாவாய், அப்பாலுக்கப்பாலாய் நிற்பன்"** என்பார் வள்ளலார். இறைவன் தத்துவக் கூட்டத்தில் நிற்கின்றான், தத்துவக் கூட்டத்திற்கு அப்பாலும் நிற்கின்றான். **தத்துவம் எங்குண்டு, தத்துவன் அங்குண்டு; தத்துவம் எங்கில்லை தத்துவன் அங்கில்லை.** (பாடல் 2817). இருவினைக்கு அப்பால் நிற்கும் பரம்பொருளை, பேரின்ப நிலையை, அன்பின் வடிவை, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் போன்ற ஐம்பெருந் தொழில்களையெல்லாம் புரிந்து சக்திகளுக்கு அப்பாற்பட்ட ஓர் உண்மையை இப்பிரபஞ்சத்திற்கு ஆதாரமாய், பிரபஞ்சமாய், எல்லாவற்றிற்கும் காரணமாய், எல்லாமாய் நிற்கின்ற ஒருவனை மனத்துள் உணர்ந்து அவனது தன்மையை விளக்கி, அவனை அடையும் வழிகளை உலகிற்கு எடுத்துக்காட்டுவது மட்டுமின்றி அந்த வழிகளால் கிடைக்கக்கூடிய பேரின்பத்திற்கு இலக்கணமாகவும், இலக்கியமாகவும் நிற்கும் பெரும் பெருமை சைவ சித்தாந்தத்தைச் சாரும். ஐம்புலன்களினால் கிடைக்கக்கூடிய விஷயாதி அனுபவங்களில் மக்கள் மயங்கி நிற்கும்போது அந்தச் சிற்றறிவினை **"ஆமேவு, பால் நீர் பிரிக்கின்ற**

**அன்னம் போல**'' பேரறிவில் இருந்து பிரித்துப் பிறவிக்குக் காரணமான கன்ம நிலையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு வாழ்வையும், வாழ்வு தரும் அனுபவங்களையும் சிவனின் தன்மையை வெளிக்காட்டும் ஏணியாக அமைத்து அந்த ஏணியில் படிப்படியாக ஏறி ஒப்பில்லாத ஆனந்தத்தைத் தம்முள் பெற்று விவரிக்க இயலாத நிலையைத்தம்முள் கண்டு அந்த நிலையைப் பிறரும் அனுபவிக்கச் செய்வதே சைவ சித்தாந்தத்தின் தலையாய கொள்கையாகும். பின்வரும் திருமந்திரம் இதற்குச் சான்றாகும்.

**''முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்**
**ஒப்பிலா ஆனந்தத் துள்ளொளி புக்குச்**
**செப்ப அரிய சிவங்கண்டு தான்தெளிந்**
**தப்பரிசாக அமர்ந்திருந் தாரே''.** (திருமந்திரம் - 126)

திருமந்திரத்தில் முதல் தந்திரத்தில் அமைந்திருக்கும் உபதேசம் என்கின்ற பகுதியில் சைவ சித்தாந்தக் கருத்துகளையெல்லாம் ஒருங்கே சேர்க்கப்பட்டு ஒளி வீசும் முத்துக்குவியல்போல் விளங்குவது திருமந்திர மாலை. வெறும் தத்துவ நூல் மட்டுமன்று. ஓர் உணர்வு நூல் என்கின்ற உண்மையை எடுத்துக்காட்டும் பாங்குடன் அமைந்திருப்பது வியக்கத்தக்கதாகும். இந்த உபதேசம் என்கின்ற தலைப்பில் முப்பது மந்திரங்கள் உள்ளன. இப்பகுதிதான் ''**மூலன் உரைசெய்த முப்பது உபதேசம்**'' என்பதற்குச் சான்றாக இருக்கலாம். துடிசைக்கிழார் இந்த உபதேசப் பகுதி ஏனைய பகுதிகளினின்றும் வேறாகத் தனிப்பட்டு விளங்குவதைச் சுட்டிக்காட்டி இப்பகுதியை, ஒரு தனி நூலாகக் கருதுகின்றார்கள். அது எப்படியாயினும், உபதேசம் என்கின்ற ஒரு பகுதி ஒரு அறிவுப் பொக்கிஷமாக, ஓர் விரிந்த, ஆழ்ந்த அனுபவக் கடலாகக் காணப்படுகின்றது. சிவயோகத்தில் மூழ்கி, சிவஞானம் பெற்றவர்களாகச் சிவ உணர்வோடு என்றும் கலந்த அன்பும் கருணையும் நிறைந்த உள்ளம் படைத்தவர்களாக வாழும் சிவலோகச் சித்தர்களை உபதேசப் பகுதி படமெடுத்துக்காட்டுகிறது.

**''சித்தர் சிவலோகம் இங்கே தெரிசித்தோர்**
**சத்தமுஞ் சத்த முடிவுந்தம் முள்கொண்டோர்**
**நித்தர் நிமலர் நிராமயர் நீள்பர**
**முத்தர்தம் முத்தி முதல்முப்பத் தாறே''.**

(திருமந்திரம் - 125)

தம்முள் இவர்கள் சிவத்தைக் கொண்டிருப்பதாலும், சிவமெனும் பரம்பொருள் எங்கும் நிறைந்திருப்பதாலும், இவர்களும் எங்குமிருப்பர். எல்லாம் இறைவன் செயல் என்பதை எப்பொழுதும் மனதில் கொண்டிருப்பர். காலத்திற்கு அப்பாற்பட்ட சிவமாகிய பரம்பொருளுடன் இவர்கள் கலந்து நிற்பதால் முக்காலத்தின் இயல்பையும் இவர்கள் நன்கு உணர்ந்தவர்களாகிறார்கள். இந்த நிலையே ''**இழவு வந்த எய்திய சோம்பே**''

எனப்படுகிறது. தன்னினைவு இழந்த நிலையில் உணர்வுகளெல்லாம் சிவமாகி நிற்கும் பொழுது கிடைக்கும் அனுபவமே சோம்பல் எனப்படும். தாயுமானவர் இந்த நிலையை **"தூக்காத தூக்கமது தூக்கும் பராபரமே"** என்று அழகாக வருணிக்கின்றார். திருமந்திரம் இந்த நிலைக்கு இலக்கணம் வகுக்கின்றது.

**"இருந்தார் சிவமாகி எங்குந் தாமாகி**
**இருந்தார் சிவன் செயல் யாவையும் நோக்கி**
**இருந்தார் முக்காலத் தியல்பைக் குறித்தங்கு**
**இருந்தார் இழவுவந் தெய்திய சோம்பே".** **(திருமந்திரம் - 127)**

திருமூலர் சைவ சித்தாந்த வித்தகராக மட்டுமின்றி ஓர் தலைசிறந்த சித்தபுருடராகவும் விளங்கியிருக்கிறார். சிவமாம் பரம்பொருள் ஒன்றே என்பது சித்தர்கள் கண்ட உண்மையாகும். சித்தர்கள் சிவமென்கின்ற ஒரே உண்மையைப் பற்றிய அனுபவத்தை, உணர்வினை எடுத்துக் கூறுகிறார்கள். பரிபூரணானந்தத்திற்கு வழிகாட்டும் இறையுணர்வாளர்களாகவும் வாழ்கிறார்கள். அவர்களுடைய உள்ளத்தில் சுத்த சிவம் எங்கும் எப்போதும் தோய்ந்து நிற்கின்றது. தங்களுடைய மனவெளியிலே சிவமெனும் பரம்பொருள் என்றும் கலந்த நிலையில், ஐம்புலன்களால் தூண்டப்படும் உணர்ச்சிகளை முழுமையாக அடக்கியவர்களாகத்தானென்கின்ற தன்மையை அறவே ஒழித்து வாழ்ந்து வருபவர்கள் சித்தர்களாவார்கள். சிவத்தில் திருவருள் அமுதத்தைத் தம்முள்ளேயே பெறுகின்றனர். மனமும் சித்தமும் அந்தக்கரணங்களும் சிவ நினைவில் ஒடுங்கியிருத்தல் காரணமாக ஒப்பற்ற யோக நிலையில் இருக்கின்றனர். அந்த நிலையின் விளைவாக அவர்கள் பெரும் பேரின்பத்தை விவரிக்கவும் இயலுமா?

**"தூங்கிக்கண் டார்சிவ லோகமும் தம்உள்ளே**
**தூங்கிக்கண் டார்சிவ யோகமும் தம்உள்ளே**
**தூங்கிக்கண் டார்சிவ போகமும் தம்உள்ளே**
**தூங்கிக்கண் டார்நிலை சொல்வதெவ் வாறே".**

**(திருமந்திரம் - 129)**

சித்தர்கள் உயர்ந்த ஞானப்பொருளை வேறு மொழிகளில் பேசிவரும் மரபையும் கொண்டிருந்தனர். ஞானப்பொருளைத் தத்துவரீதியாக விளக்கி உணர்த்த வைப்பது கடினம் என்கின்ற நிலையில் கேட்போர் மனதில் எளிதாகப் பதியும் வகையில் அன்றாடம் மொழியைப் பயன்படுத்தித் தெளிய வைப்பது வழக்கமாக இருந்து வருகின்றது. திருமந்திரத்திலும் ஒன்பதாவது தந்திரத்தில் இடம்பெற்றுள்ள சூனிய சம்பாஷனை என்கின்ற பகுதி இத்தன்மை உடையது. உண்மை விளக்க விடுகதை போன்றுள்ள பின்வரும் மந்திரங்களையும் பார்க்கலாம்.

"வழுதலை வித்திடப் பாகன் முளைத்தது
புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது
தொழுதுகொண் டோடினார் தோட்டக் குடிகள்
முழுதும் பழுத்தது வாழைக் கனியே". (திருமந்திரம் - 2869)

"பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசு ஐந்தும் பாலாச் சொரியுமே".

(திருமந்திரம் - 2883)

முதல் தந்திரத்திலுள்ள உபதேசப் பகுதியைப் போலவே ஒன்பதாம் தந்திரத்திலுள்ள சூனிய சம்பாஷணைப் பகுதியிலுள்ள கருத்துகள் சித்தாந்தக் கோட்பாடுகளாகவே உள்ளன. அத்துடன் சித்தாந்தத்தின் முடிவாகிய சிவஞான அனுபவமும் இந்த இரண்டு பகுதிகளிலும் கணிசமான அளவுக்கு இடம் பெறுவது தவராஜ யோகியான திருமூலரின் சித்தாந்த அனுபவத்திற்கு மேன்மை பொருந்திய எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

எல்லையற்ற சிவ பரம்பொருளை அணுகவும், அடையவும் சைவ சமயம் மேற்கொள்ளும் முறைகள் மனிதனின் ஆன்மிக வேட்கையை எல்லா வகைகளிலும் தணிக்கும் வகையில் அமைந்துள்ளன என்பது அறிஞர்கள் கண்ட முடிவு. அத்தகைய ஆழ்ந்த, பரந்த சைவ சமயத்திற்கு இலக்கணமும், இலக்கியமும் அருளித் தந்த பெருமைவாய்ந்த சிவனருட் செல்வர்கள் பலருள் திருமூலநாயனார் தன் யோகத்தால், தவத்தால், பேரின்பத்தைப் பெற்றவராய்த் தான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம் என்கின்ற குறிக்கோளுடன் திருமந்திரத்தை அருளிச் செய்தார்கள். திருமந்திரம் ஓர் ஆழ்ந்த சைவ நூல்.



# 40. "உபதேசம்"

பல ஆயிரம் ஆண்டுகளாக நமது நாட்டில் எண்ணற்ற முனிவர்களும், சித்தர்களும் வாழ்ந்திருந்த தங்களுடைய வாழ்க்கையை, எண்ணங்களை, அனுபவங்களை நமது உள்ளங்களிலே அவ்வப்போது தோன்றும் இறைவனைப் பற்றிய சிந்தனைக்கு ஆதாரமாக வைத்து விட்டுச் சென்றார்கள். அவர்களுடைய அனுபவங்களே நம்முடைய ஆன்மிக வேட்கைக்குத் தொடர்ந்து வித்திட்டு வருகின்றன. சமுதாயத்தில் மீண்டும் மீண்டும் தோன்றி வரும் நல்ல உள்ளங்கள், பல முனிவர்கள், சித்தர்கள் ஆகியோர்களுடைய இறை உணர்வினை ஏற்றுக்கொண்டு, தமதாக்கி, அந்த இறை உணர்வை மேலும் மேலும் தெளிவுபடுத்தி நம்மைப் போன்ற பாமர மக்களுக்கு உபதேசித்து வந்தும், அத்த நாமும் ஏற்றுக் கொண்டும் வந்த காரணத்தால்தான் இன்றும் நம்முடைய வாழ்க்கை நெறிகளும் பண்புகளும் இறை உணர்வுடன் பின்னிக்கொண்டு நிற்கின்றன. ஆகவேதான், தொடர்ந்து ஆன்மிக அனுபவங்களையும், இறை உணர்வையும் நாம் போற்றி வருகிறோம். அவற்றை நமக்குக் கொடுத்தருளும் முனிவர்களையும் சித்தர்களையும் இறைவனாகவே மதிக்கிறோம். வணங்குகிறோம், வழிபடுகிறோம். இதில் தவறு ஒன்றுமில்லை. முனிவர்களும், சித்தர்களும் அவாவை அறுத்தவர்கள், பாசத்தை விட்டவர்கள், நேசத்தைத் துண்டித்தவர்கள். விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டவர்கள். இன்பத்திலும் துன்பத்திலும் நடுநிலை வகிப்பவர்கள். உலகில் வாழும் எல்லாச் சீவராசிகளும் ஒன்றே என்கிற உண்மையைத் தம்முள் உணர்ந்தவர்கள். விளக்குவதற்கு அரிய ஒரு பரம்பொருள் பல நிலைகளில் இருந்து கொண்டு இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தும், காத்தும், அழித்தும், ஊழிதோறும் ஊழி எண்ணில்லாத உயிர்களைத் தனது மறைப்புச் சக்தியில் ஆழ்த்தி, அறியாமை என்கின்ற இருளில் வைத்து, உடலுடன் சேர்த்துப் பல அனுபவங்களைக் கொடுத்தருளிப் படிப்படியாகத் தன் திருவடி நிழலிலே சேர்த்துக் கொள்கின்றது என்கிற மாபெரும் உண்மையை அனுபவரீதியாக உணர்ந்தவர்கள். அப்பாலாய், அப்பாலுக்கு அப்பாலாய் நிற்கின்ற மாதேவன் நம்முள் அணுவில் அணுவாய், உயிருக்கு உயிராய் **"பாலினில் நீர்போல் நிற்கின்ற நேர்மையை சோராமற் காணும்"** சுகம் அறிந்தவர்கள் நமது முனிவர்களும் சித்தர்களும் ஆவார்கள். அத்தகைய பரம்பொருளைப் பேரன்பு வடிவமாகக் கண்டு, அந்த அன்பே எல்லா உயிர்களிடையே பொதிந்திருக்கின்ற தன்மையை உணர்ந்து உயிர்கள்பால் அன்பு

செலுத்துவதன் மூலமாகவே இறைவனுடைய திருவடியைச் சேரலாம் என்கின்ற தெளிவையும் தம்முள் பெற்றவர்கள் அவர்கள்.

அத்தகைய முனிவர்களும், சித்தர்களும் நமக்கு அருளிச் செய்வது உபதேசமாகும். முனிவர்கள் இதைச் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பது இல்லை. உயிர்களின் பக்குவத்திற்கு ஏற்ப இறைவன் அவைகளுடைய உள்ளங்களிலே இறை உணர்வைப் பதிக்கின்றான். பல சித்தர்கள் தங்களுடைய வாழ்நாட்களிலே அதிகமாகப் பேசாத நிலையில் இருந்தவர்கள். ஆயினும் இறைவனைத் தம்முள் கண்டவர்கள். அவர்களைப் பற்றிப் பேசும்பொழுது **''பெற்றார் உலகில் பேசாப் பெருமையே''** என்பார் திருமூலர். பக்குவமடைந்த சீடர்கள் தங்களை நெருங்கும்போது அவர்களுடைய தகுதியை உடனே தெரிந்து கொண்டு தான் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெற வேண்டும் என்ற நோக்குடன், அந்தச் சீடர்களை ஏற்றுக் கொண்டு, பெரும் கருணையுடன் அவர்களுக்கு உண்மையை உணர்த்துவார்கள். இதுவே பேரறிவாகும். இந்தப் பேரறிவு ஏட்டிலும், புறத்திலும் எழுதி வைக்கப்பட்ட அறிவு அல்ல. காட்டும் குறியும் கடந்து நிற்கும் பரம்பொருளைப்பற்றிய விளக்கத்தை நூல் அறிவால் மட்டும் பெற இயலாது. அந்த அறிவு அனுபவமுறீதியாக அமைய வேண்டும். அந்த அனுபவத்தைச் சீடன் பெறுவதற்கான வழிகளை அறிவிப்பவர்கள் இந்த முனிவர்களும் சித்தர்களும் ஆவார்கள். அவர்களுடைய உபதேசம் சீடனுக்கு ஒரு படகு போலப் பயன்படும்.

வாழ்க்கை என்னும் கடலைக் கடப்பதற்கான ஆற்றலையும், அறிவையும் இந்தப் படகானது சீடனுக்குத் தரும். **''திளைக்கும் வினைக்கடல் தீர்வுறு தோணி; இளைப்பினை நீக்கும் இருவழி உண்டு''** என்பார் திருமூலர். படகு கிடைத்தால் மட்டும் போதாது. படகை ஓட்டும் அடிப்படை அறிவு வேண்டும். இதுவே பக்குவம் எனப்படும். பல பிறவிகளில் கிடைக்கும் வினைக்கூட்டங்களின் ஆற்றல்கள் குறைந்த நிலையில் இருவினை ஒப்பு ஏற்படுகிறது. இறைவனுடைய அருள் சீடன் மீது பதியத் தொடங்குகின்றது. அந்த நேரத்தில் தகுந்த குருவும் சீடனுக்குக் கிடைக்கின்றான். அந்தக் குருவினுடைய உபதேச மொழிகள் சீடனுக்குப் படகுபோல உதவி புரிந்து சீடனை வினைக்கடலிலிருந்து மீட்டுச் செல்கின்றன. சீடனுடைய பக்குவமும், குருவினுடைய உபதேசமும் இறைவனுடைய ஒப்பற்ற பெரும் கருணையாலேதான் நடைபெறுகின்றது. அவன் அருளின்றி ஒன்றும் நடைபெறாது.

சனகர் போன்ற முனிவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்தவர்கள், கற்றறிந்தவர்கள். ஆனால், அவர்களுக்கும் அனுபவம் வரவில்லை. வேதப்பொருள்களின் உண்மை அவர்களுக்கு விளங்கவில்லை. முழுமுதற்கடவுளின் உருவமான தட்சிணாமூர்த்தியிடம் வேதப்பொருளின் விளக்கத்தைக் கேட்டார்கள். அருள்மேனி தாங்கிய பெருமான் சுட்டு

விரலைப் பெருவிரலோடு சேர்த்துக் காட்டி ஞான முத்திரையால் உண்மையினை உணர்த்தினார். பெருவிரல் சிவமாகும். சுட்டுவிரல் உயிரைக் குறிக்கின்றது. நடுவிரல், மோதிர விரல், சிறுவிரல் ஆகிய மூன்றும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களைக் குறிக்கின்றன. தட்சிணாமூர்த்தி தனது கைக்குறிகளால் சனகாதி நால்வருக்கும் உணர்த்தியபொழுதும் அவர்கள் உணரவில்லை. பின்னர் இறைவன் அவர்களுடைய சிரத்தைத் தீண்டி அவர்களுக்குத் தீட்சையை அளித்து உணர வைத்தான். அவர்களுடைய உள்ளத்திலே உண்மையைப் பதிய வைத்தான். அவர்களும் தட்சிணாமூர்த்தியிடம் தீட்சையைப் பெற்றுத் தம்மைத் தாமே உணர்ந்து கொண்டு உள்ளொளி பெற்று நிலைபெற நின்றார்கள்.

**"அத்தத்தில் உத்தரங் கேட்ட அருந்தவர்**
**அத்தத்தில் உத்தர மாகும் அருள்மேனி**
**அத்தத்தி னாலே யானையைப் பிடித்தலும்**
**அத்ததில் தம்மை யடைந்துநின் றாரே". (திருமந்திரம் - 2424)**

இறைவன் ஒன்றே. உயிர்கள் அநேகம். அநாதியும்கூட. உயிரைக் கட்டி வைப்பது பாசமாகும். பாசமானது ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களிலும் தங்கும். உயிரைப் போலவே பாசமாகிய தளையும் அநாதித் தன்மை வாய்ந்தது. உயிரைப் பதியிடமிருந்து பிரித்து வைப்பது பாசமாகும். நெல்லில் உமி போல, செம்பினில் களிம்பு போல பாசம் உயிருடன் சேர்ந்து நிற்கும். பாசம் என்றுமே உயிரைப் பற்றி நிற்பதால் உயிருக்குச் சுதந்திரமான தன்மை கிடையாது. இறைவனோ என்றும் சுதந்திரமாக நிற்பவன். மலங்கள் அற்றவன். மலங்கள் உயிரினை அணுகும். ஆனால், இறைவனை அணுகாது. எனினும், இறைவனுடைய அருளால் மலங்களைத் தன்னிடமிருந்து நீக்கிக்கொண்டு உயிர் ஒரு சில நேரங்களில் இறைவனை அணுகும் தகுதியைப் பெறுகின்றது. அப்பொழுது உயிரைப் பற்றியுள்ள பாசங்கள் அதனை விட்டு நீங்கி விடும். இறைவனுடைய பெரும் கருணையால் முதிர்ச்சி பெற்ற உயிர் பாசங்களிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு இறைவனுடைய திருவடியைச் சேருகின்றது.

**"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்**
**பதியினைப் போற்பசு பாசம் அனாதி**
**பதியினைச் சென்றணு காப்பக பாசம்**
**பதியணு கிற்பசு பாசம் நிலாவே". (திருமந்திரம் - 115)**

உயிர் உய்வதற்கான எல்லா வழிகளையும் காண்பிப்பவன் இறைவனே ஆகும். பல பிறவிகளில் உயிர் பல வினைகளைப் புரிந்து அனுபவங்களைப் பெறுகிறது. நன்றே புரினும் தீதே புரினும் அனுபவம் அனுபவம்தான். அந்த அனுபவத்தைத் தொடர்ந்து பல்வேறு அனுபவங்கள் உயிர் பெற்றாக வேண்டும். இதைச் செய்வதற்காக இறைவனுடைய அருள் உயிரை ஐந்து

பூதங்களாலான உடலுடன் சேர்க்கின்றது. வினைக்கேற்ப வாழ்வும் கிடைக்கின்றது. அந்த வாழ்வை ஏணியாக வைத்து உயிரானது படிப்படியாக இறைவனுடைய திருவடியைச் சேர முயல வேண்டும். மரம் வைப்பவன் மரத்தைக் காப்பான். இறைவனுடைய திருவடி நிழல் உயிருக்கு எப்பொழுதும் கிடைத்துக்கொண்டே இருக்கின்றது. உயிரைச் சுற்றி வேலி போல் நிற்கின்றது. குளிர்ச்சிமிக்க திருவடிகள் அவை. இந்தத் திருவடிகளின் தன்மையை, பெருமையை உடலிலும் காணலாம். உள்ளத்திலும் அனுபவிக்கலாம். புறத்திலும் பார்க்கலாம். ஆனால், வினைகள் உயிரை மருள் நிலையில் அழுத்தி வைப்பதால் உயிருக்கு இறைவனுடைய திருவடிகளைத் தம்முள் உணர்ந்து கொள்ள இயலவில்லை. திருவடிகளின் குளிர்ச்சி பொருந்திய தன்மையை அறிந்து கொள்வதில்லை. உடலின் வெப்பமான பகுதிகளிலேயே உயிரானது சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது. அந்த நிலையை மாற்றச் செய்வதும் ஈசனுடைய அருளாகும். அதுவே சத்திநிபாதம் எனப்படும். இறை அருளை உயிர் பெறும்பொழுது உயிரைப் பற்றியுள்ள களிம்புகள் அழிக்கப்படுகின்றன. அதாவது மும்மலங்களின் வேகம் குறைந்து விடுகின்றது. உயிரானது தன் சொரூப நிலையைப் பெறுகிறது. அதாவது தான் உடலிலிருந்து வேறுபட்டது என்பதை உணருகின்றது. உடல் மீது உள்ள நாட்டம் ஒழிந்து விடுகிறது. **''உண்ணின்று உருக்கி''** என்பார் திருமூலர். இந்த அனுபவத்தை **''பாவியேன் என்னுடைய ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி''** என்று பாடுகிறார் மாணிக்கவாசகப் பெருமான். உயிர் தன்னுடைய உண்மை நிலையில் இறைவனுடைய மாசற்ற ஒளியைத் தனதாக்கிக் கொண்டு அந்த ஒளியிலே பிரகாசிக்கின்றது. இறைவனுடைய திருத்தாள்களை உயிர் பற்றிக் கொள்கிறது. சுந்தரமூர்த்திப் பெருமான் இத்தகைய அனுபவத்தை சித்தவடமடத்தில் இறைவனுடைய திருவடி தீட்சையால் பெற்றார். மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் இறைவனே குருவாக எழுந்தருளிய போது அவருடைய பரிச தீட்சையால் பெற்றார். இத்தகைய ஒப்பற்ற பேற்றினை அருளிச் செய்பவன் இறைவனே ஆகும்.

**''விண்ணின்று இழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு**
**தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து**
**உண்ணின்று உருக்கி ஓர் ஒப்பிலா ஆனந்தக்**
**கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே''.** **(திருமந்திரம் - 113)**

இதையே உணர்த்தும் திருவாசக அடிகளைப் பாருங்கள்:

**''எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம் பெருமான்**
**மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்''.**

உயிர் பாசத்தால் கட்டுண்டு கிடக்கும்போது இறைவனைக் காண்பதில்லை. உயிருடைய கருவிகள் அனைத்தும் உலக விஷயங்களையே பற்றிச் செல்கின்றன. அவ்வாறு செல்லும்பொழுது உயிரினுடைய அறிவு

உலக விஷயங்களின் தன்மையைப் பெறுகிறது. அதாவது உயிராவது தான் சார்ந்தவற்றின் இயல்பையே பெறுகிறது. பளிங்கின் முன் நீல ஒளியை வைத்தால் அது நீல ஒளியைப் பெறுகிறது. வேறொரு ஒளியுடைய பொருளை அதன் முன் வைத்தால் அது அந்தப் பொருளினுடைய ஒளியின் தன்மையைப் பெற்று அந்த ஒளியைச் சாருகிறது. இது நாம் அன்றாடம் காணும் அனுபவமாகும்.

அதேபோல்தான் உயிரும். உயிர் பளிங்கைப்போல. உலக விஷயங்களில் ஈடுபட்டு உயிர் தன் நிலை மறந்து நிற்கும்போது இறைவனுடைய அருளால் உலக விஷயங்கள் உயிரினுடைய கண் பார்வையிலிருந்து நீக்கப்படும் போது சுயசொரூபம் அடைந்து, தனக்கு எதிரே உள்ள இறை நிலையைப் பிரதிபலிக்க ஆரம்பிக்கின்றது. பவளத்தை சிவத்திற்கு உதாரணமாக வைத்தால் பளிங்காகிய உயிரில் பவளமாகிய சிவத்தைப் பதிக்கும்போது பளிங்கு பவளத்தின் தன்மையை அடைகிறது. பவளம் இதுவரை பளிங்கில் பதிக்கப்படாத காரணம் அந்தப் பளிங்கைப் பற்றியுள்ள களிம்புதான். கண்ணாடிக்குப் பிரதிபலிக்கும் தன்மை உண்டு. ஆனால், கண்ணாடிப் பரப்பில் மாசு படிந்திருந்தால் அது பிரதிபலிப்பது இல்லை. அவ்வாறே உயிரும் இந்திரிய விஷயங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள போது தனது உண்மை நிலையை அறியமாட்டாது. மாசைத் துடைத்தெடுத்து விட்டால் கண்ணாடி சாதாரணமாகத்தான் சார்ந்திருந்ததைப் பிரதிபலிக்கும். பேரருளாளனாகிய இறைவன் நமது இருளை நீக்குகிறான். மும்மலங்களை அறுக்கின்றான். தனது திருவடி நிழலை நம்முள் வைத்து, உள்ளத்தை உள்ளிருந்து உருக்கித் தன்னொளியை உள்ளத்தில் பதிக்கிறான். அதாவது நமது அகத்தின் கண்களை விழிப்பிக்கிறான். இந்த அகக்கண்களே அருள் எனப்படும். புறக்கண்களாலேயே பார்த்துப் பார்த்து அனுபவங்களைச் சேர்த்து வரும் உயிரானது இறைவனுடைய அருளால் உள்ளொளியைப் பார்க்க ஆரம்பிக்கின்றது. சீவன் சிவன்வழிச் சாரும் தன்மையைப் பெறுகிறது. சிவஞானம் பொலிகிறது. புலன்களின் வேகம் தடுக்கப்படுகிறது. இறை அறிவு பெருகுகிறது. மாணிக்கவாசகர் **"ஊனாய் உயிராய் உணர்வாய் என்னுட் கலந்து - ஆனா அறிவாய் அளவிறந்த பல்லுயிர்க்கும் கோனாகி நின்றவா"** என்கிறார்.

**"களிம்பறுத் தான்எங்கள் கண்ணுதல் நந்தி**
**களிம்பறுத் தான்அருட் கண்விழிப் பித்துக்**
**களிம்பணு காத கதிரொளி காட்டிப்**
**பளிக்கிற் பவளம் பதித்தான் பதியே"** **(திருமந்திரம் - 114)**

அருளைப் பொழியும் இறைவன் எங்கேயோ தன்னந்தனியாக நின்றுகொண்டு இதைச் செய்யவில்லை. உயிருடன் சேர்ந்து உயிருக்குயிராகவே நிற்கிறான். அவன் உள்ளத்திலேயே குடி

கொண்டுள்ளான். **''உள்ளத்துளேதான் கரந்து, எங்கும் நின்றவன்; வள்ளல் தலைவன், மலர் உறை மாதவன்''** என்று திருமந்திரம் கூறுகிறது. இந்த உடம்பாகிய கோவிலிலே நீங்காது குடிகொண்டு மறைந்திருக்கின்றான். அது எப்படியென்றால் மூங்கிலுக்குள் மறைந்து சதா நின்றுகொண்டிருக்கும் தீயைப்போல என்கிறார் திருமூலர். தீயானது மூங்கிலுடன் சேர்ந்தே நிற்கும். அதுபோல சிவன் சீவனில் என்றும் தங்கும். மூங்கிலிலிருந்து தீ வெளிப்பட வேண்டிய காலத்தில் வெளிப்பட்டு விளங்கும். தக்க நேரத்தில் சீவனும் சிவமாம் தன்மையைப் பெற்றுச் சிவ ஒளியைத் தன்னுள்ளும், வெளியிலும் பரப்பும். இந்த ஓர் பேற்றினை நல்குவது சிவனாகும். அடர்ந்த காட்டிலே மூங்கிலிருந்து தீ எழும்பும்போது சுற்றுப்புறம் ஒளிபெறும். உள்ளத்திலே குடிகொண்டிருக்கும் இறைவன் உயிரின் பக்குவ காலத்தில் சூரியனாக வெளிப்பட்டு மும்மலங்களின் இருளை நீங்குவான். அவன் தாயைவிடச் சிறந்தவன். தாய்க்குத் தனது குழந்தையின் மீது அளவற்ற அன்பு உண்டு. அன்பினால் குழந்தையைப் பேணுகின்றாள். குழந்தையை நீராட்டி அழுக்கை நீக்கிக் குழந்தையை பாலூட்டி வளர்க்கின்றாள். தாய் குழந்தைக்குக் காட்டுவது அன்பை. நீக்குவது குழந்தையின் உடலிலுள்ள புற அழுக்கை. இறைவன் தாயினும் சிறந்தவன். தாய் அன்பினைத் தருகிறாள். இறைவன் பேரருளை வெள்ளமாகப் பொழிகின்றான். தாய் குழந்தையின் புற அழுக்கை நீக்குகிறாள். இறைவன் தனது அருளால் உயிரின் மும்மலங்களை நீக்கி அமைக்கிறான். **''நல்லன்பர்க்குத் தாயினும் நல்லன் தாழ்சடையோனே''** என்கிறார் திருமூலர். **''தாயிற் சிறந்த தயாவான தத்துவனே''** என்கிறார் மணிவாசகப் பெருமான். **''பால்நினைந்தூ ட்டும்தாயினும் சாலப் பரிந்து; பாவியேனுடைய ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி''** என்கிறார் மணிவாசகப் பெருமான். அவனுடைய அருள் மழையை, கருணை வெள்ளத்தை எவ்வாறுதான் விவரிப்பது!

''வேயின் எழுங்கனல் போலேஇம் மெய்யெனுங்
கோயி லிருந்து குடிகொண்டு கோன்நந்தி
தாயினும் மும்மலம் மாற்றித் தயாஎன்னுந்
தோயம தாய்எழுஞ் சூரிய னாமே''. (திருமந்திரம் - 116)

''இன்றெனக் சுருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று,
நின்றநின் றன்மை நினைப்பற நினைத்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை;
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றும்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்று நீயல்லை; யன்றி யொன்றில்லை;
யாருனை யறியகிற் பாரே!''

திருமூலர் இதை வேறொரு உதாரணத்தாலும் விளக்குகின்றார். கடல் நீருடன் உப்புக் கலந்து ஒன்றாய்ச் சேர்ந்து நிற்கிறது. அந்த உப்பை அடையவேண்டுமென்றால் முதலில் கடல் நீரைப் பாத்தியில் பாய்ச்ச வேண்டும். பின்னர்ச் சூரியனுடைய வெப்பத்தால் நீர் வற்றி உப்புத் தோன்றுகிறது.

அதாவது கடல் நீரானது உப்பெனும் வேறு உருவம் எய்துகிறது. அதே போல் உயிர் சிவத்துடன் என்றும் ஒன்றாய் இருப்பதற்கு உரியது. மும்மலங்கள் உயிரைப் பற்றுவது காரணமாக இறைத்தன்மை மறைக்கப்பட்டுச் சீவன் தனியாகச் சிவத்திடமிருந்து வேறுபட்டு நிற்கும் நிலையை அடைகிறது. கடல் நீரிலிருந்து வெளிவரும் உப்பை எடுத்து உப்பினால் ஒரு உருவத்தைச் செய்து மீண்டும் கடலில் இட்டால் என்னவாகும்? கடல் நீரில் உப்புக் கரைந்து கடல் நீருடன் ஒன்றாகி விடுமல்லவா! அதேபோல இறைவனுடைய அருளால் மும்மலங்கள் நீங்கும்பொழுது உயிரும் சிவத்துடன் சேர்ந்து வேறு நில்லாது ஒன்றாகிவிடும். அகண்ட சிவ வியாபகத்தில் சீவ குணங்கள அடங்கிவிடுகின்றன.

**"அப்பினில் கூர்மை ஆதித்தன் வெம்மையால்**
**உப்பெனப் பேர்பெற் றுருச்செய்த அவ்வுரு**
**அப்பினிற் கூடிய தொன்றாகு மாறுபோற்**
**செப்பினிற் சீவன் சிவத்துள் அடங்குமே". (திருமந்திரம் - 136)**

இது எவ்வாறு நடைபெறுகிறது? இது இறைவனுடைய அருட்சக்தியால் நடைபெறுகிறது. இறைவனாகிய சூரியன் உள்ளத்திலே எழுந்தது அழுக்குகளை நீக்கும்பொழுது ஏற்படுகிறது. சூரியகாந்தக் கல்லைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். பூதக்கண்ணாடி என்று எடுத்துக் கொள்ளலாம். சாதாரண நேரத்தில் சூரியகாந்தக் கல்லை உபயோகப்படுத்திப் பொருட்களைப் பெரிதாகப் பார்ப்பதற்கு பயன்படுத்திக் கொள்கிறோம். அத்துடன் சூரியகாந்தக் கல்லினால் வேறு பயனும் உண்டு. திறந்தவெளியில் பஞ்சை வைத்து சூரியகாந்தக் கல்லைச் சூரியனுக்கும் அந்தப் பஞ்சிற்கும் இடையே வைத்துக் காண்பித்தால் சூரியகாந்தக் கல் வழியாகப் பாயும் சூரிய கிரகணங்கள் அந்தப் பஞ்சைச் சுட்டெரித்துவிடும்.

இறைவனாகிய சூரியன் தக்க நேரத்தில் தனது அருட்கிரணங்களைப் பாய்ச்சி உயிருடைய மும்மலங்களை, சூரியகாந்தக் கல்லைப் போலவே சுட்டெரித்து விடுகின்றான். உயிர்களின் பக்குவத்திற்கேற்ப இறைவன் அவற்றின் உள்ளேயே இருந்தும் இறைவனாக நேரில் வந்தும் அல்லது ஞான குருவாகத் தோன்றியும் அருள்பாலித்து இந்தப் பணியினைச் செய்து மலங்களை அகற்றுகின்றான்.

**''சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே**
**சூரிய காந்தஞ் சூழ்பஞ்சைச் சுட்டிடா**
**சூரியன் சந்நிதி யிற்கடு மாறுபோல்**
**சூரியன் தோற்றமுன் அற்ற மலங்களே''.** (திருமந்திரம் - 117)

திருமூலர் ஒரு சிறந்த அனுபூதிமான். ஒப்பற்ற மெய்யுணர்வாளர். ஒரு சிறந்த சித்தர். சீவன் முக்தர். உலகெங்கும் தானான உண்மையைப் பெற்றவர். அவருக்குக் கிடைத்த பேறு விண்ணில் வாழும் அமரர்களுக்குக் கூட கிடைத்திராது.

அவரைப் போன்ற சித்தர்கள் **''சிவலோகம் இங்கே தரிசித்தவர்கள்''** ஆவார்கள். அதாவது தான் என்கின்ற நினைப்பு ஒழிந்து இறை உணர்வையே தம் உணர்வாகக் கொண்டவர்கள். மல, மாசு அகன்றவர்கள், மனக்கவலை மாற்றியவர்கள், எல்லையில்லாப் பேரின்பத்தில் நிற்பவர்கள், பாலிலுள்ள நீரை அன்னம் பிரித்தெடுத்துப் பாலை மட்டும் பருகுவதைப்போல சித்தர்கள் தற்போத உணர்வுகளை விட்டு இறை உணர்வையே பருகித் திளைக்கின்றவர்கள். தங்களுடைய உடலுடன் சேர்ந்து நிற்கும் கருவிகளின் சேட்டைகளிலிருந்து விடுபட்டு இறை உணர்வுடன் ஒன்றிக்கிடப்பவர்கள். அந்தக் கருவிகளைப் பலவாறாகப் பிரித்து முப்பத்தாறு தத்துவங்களாக எடுத்துரைப்பது வழக்கம். நம்மைப் போன்றவர்கள் அந்த முப்பத்தாறு கருவிகளிலேயே, மாயையின் காரியத்தால் மயங்கி நின்று, அந்தக் கருவிகளாலேயே ஆக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் வருகின்றோம். ஆனால், சித்தர்கள் தெளிந்தவர்கள். அவர்களுடைய நிலையில் சிற்றறிவு பேரறிவில் அடங்கிக் கிடக்கின்றது. அறிவு, அறியாமை இவற்றைத் தெரிந்து கொண்டு தெளிந்து நிற்பவர்கள், சிற்றறிவைப் பேரறிவு அடைவதற்கான வழியாகக் கொண்டவர்கள். பிறப்பையும் இறப்பையும் வளர்க்கக்கூடிய அனுபவங்களைத் தள்ளிவைத்து நிற்பவர்கள். பாசங்களைச் சாரார். தங்களுடைய புலன்களையும், கருவிகளையும் ஏணிப்படிகளாகப் பயன்படுத்திப் பேரின்ப எல்லைக்குள் நுழைந்து, இறை உணர்வைப் பெற்றுத் தெளிந்து நிற்பவர்கள். மேலும், அப்பர் பெருமானைப் போன்று உலகெலாம் சிவமயம் கண்டவர்கள். தங்களுடைய மலங்கள் நீங்கப் பெற்றமையால் காலத்தாலும், நேரத்தாலும், இடத்தாலும், பொருளாலும் கட்டுக்கு அடங்காதவர்கள். இறை நினைவிலேயே அழுந்தி நிற்பவர்கள். அந்த நிலையில் அவர்கள் சிவமாம் தன்மையைப் பெற்றுப் பிரபஞ்சம் முழுவதிலும் பரவி இருக்கக்கூடிய நிலையில் சதாசிவ போகத்தில் ஆழ்ந்து நிற்பர். இந்த உணர்வினைத் திருமூலர் **''இழவு வந்து எய்திய சோம்பு''** என்கிறார்.

**''சித்தர் சிவலோகம் இங்கே தரிசித்தோர்**
**சத்தமுஞ் சத்த முடியும் தம்முள் கொண்டோர்**
**நித்தர் நிமலர் நிராமயர் நீள்பர**
**முத்தர்தம் முத்தி முதல்முப்பத் தாறே''.** (திருமந்திரம் - 125)

"முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்
ஒப்பிலா ஆனந்தத் துள்ளொளி புக்குச்
செப்ப அரிய சிவங்கண்டு தான்தெளிந்து
அப்பரிசாக அமர்ந்திருந் தாரே". (திருமந்திரம் - 126)

"இருந்தார் சிவமாகி எங்குந் தாமாகி
இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி
இருந்தார் முக்காலத்து இயல்பைக் குறித்து அங்கு
இருந்தார் இழவுவந் தெய்திய சோம்பே". (திருமந்திரம் - 127)

இழவு என்றால் தன் நிலையும் இழந்து இருத்தலாகும். சோம்பல் என்றால் பந்தங்களைத் துறந்து தன்முனைப் பற்று அவனுடன் கலந்து அவனன்றி வேறில்லை என்கின்ற உணர்வில் நிற்பதாகும். இதையே சும்மா இருக்கும் நிலை என்றும் சித்தர்கள் அழைக்கின்றார்கள். ''தூங்காத தூக்கம்'' எனவும் அழைக்கப்படும். இந்த நிலையில் எங்குமாய் நிற்கும் இறைவன் அல்லாமல் ''நான்'' என்று ஒன்று இல்லை என்கிற எண்ணம் உறுதியாகத் தரப்படுகின்றது. உயிர்களுக்கு இருக்கும் அறிவெல்லாம் இறைவனுடைய அறிவே என்கிற நினைப்பும், உயிர்கள் புரியும் எல்லாச் செயல்களும் இறைவன் செயலே என்கின்ற நினைப்பும் உயிரினை அகண்ட ஒளியில் ஆழ்த்துகின்றன. இத்தகையவர்களே ''சோம்பர்'' என்று அழைக்கப்படுவர். இறைவனுடைய ஆற்றலை நடனமாக உமையாகிய சக்தி மட்டும் காண்பதில்லை. சித்தர்கள் அந்தத் திருநடனத்தைத் தம்முள்ளேயே காண்கின்றார்கள். கண்டு உலகில் பிரியாப் பெருநெறியைப் பெறுகிறார்கள். பிறவாப் பெரும்பயனைப் பெறுகிறார்கள். பிரியாப் பெரும் பேற்றினைப் பெறுகிறார்கள். அந்தப் பேறானது சித்தர்களுக்குச் சிவலோக, சிவயோக, சிவபோக அனுபவத்தைக் கொடுக்கின்றது. அவர்களுடைய பெருமையைப் பற்றி மேலும் சொல்ல வேண்டுமா!

"தூங்கிக் கண் டார்சிவ லோகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்சிவ யோகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்சிவ போகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்நிலை சொல்வதெவ் வாறே"

(திருமந்திரம்..129)

திருமந்திரத்தில் உபதேசம் என்கிற அனுபவப் பகுதி முதல் தந்திரத்தில் வருகிறது. முப்பது மந்திரங்களைக் கொண்டது. ''மூலம் உரை செய்த முப்பது உபதேசம்'' என்று திருமந்திரத்திலும் வருகிறது. இந்தப் பகுதியிலுள்ள முப்பது மந்திரங்களும் சிறந்த அனுபவ உண்மைகளை விளக்குகின்றன. முதல் தந்திரத்திலேயே இந்தப் பகுதியை வைத்ததன் நோக்கம் தெரியவில்லை. இந்தப் பகுதி திருமூலரால் வேறு நூலாகச் செய்யப்பட்டிருக்கலாம் என்றும் சில அறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால்,

திருமூலர் வரலாற்றைத் திருத்தொண்டர்புராணத்தில் கூறும் சேக்கிழார் அடிகள் இதை வேறு பகுதியாகக் கருதிச் சொல்லவில்லை. எப்படியிருந்தாலும் திருமந்திரத்தின் உபதேசப் பகுதி அரிய உண்மைகளை விளக்குகின்றது என்றால் முற்றிலும் பொருந்தும். சித்தர் உணர்வுகளுக்கு இதுபதி இலக்கணத்தைத் தருகின்றது. நம்மைப் போன்றவர்களுக்குப் பதி, பசு, பாச நிலைகளுக்கான விளக்கம் கிடைக்கிறது. இந்த நிலைகளைக் கற்றறிந்த சாதகர்கள் பொறிகள், புலன்கள் இவற்றின் வழி செல்லாது. எவ்வாறு ஆமை தனது உடலை ஓட்டுக்குள் இழுத்து அடக்கிக் கொள்கிறதோ அவ்வாறே மன ஒருமைப்பாட்டுடன் புலன்களைத் தன்வசமாக்கி இறைவனைச் சந்திக்கலாம் என்கிற அனுபவ உண்மையைத் திருமந்திரத்தின் உபதேசப் பகுதி நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

திருக்கோவிலில் இறைவனை நாம் தரிசிக்கச் செல்கின்றோம். வெளிப்பிரகாரத்தில் கொடி மரத்தைக் காணலாம். அதை அடுத்துப் பலி பீடத்தையும், நந்தி உருவத்தையும் காணலாம். பின்னர் உட்பிரகாரத்திற்கு இறைவனைச் சந்திக்கச் செல்கின்றோம். அங்கே மூலத்தானத்திற்கு அருகிலுள்ள நந்தி சிறிதாக இருப்பதைக் காணலாம். வெளியிலுள்ள பலிபீடத்தில் நம்முடைய பாச மனங்களை வைத்துவிட்டு உள்ளே வரும்பொழுது காணும் சிறிய நந்தியைப் போல நம்முடைய மலங்களின் ஆற்றல் குறைந்து, வலுவற்று இருக்க வேண்டும். அதாவது பசுத்தன்மை ஒடுங்கிவிட வேண்டும். புலன்களும், கருவிகளும் இறைவன்பால் சென்றிருக்க வேண்டும். மனம், வாக்கு, காயம் ஆகியவற்றின் கிலேசங்களும், ஆசைகளும் நீங்கி இறைவனுடன் சந்திப்பு நிகழ வேண்டும். **"தானே தனித்து எம்பிரான் தன்னைச் சந்தித்தே"** என்பார் திருமூலர். இந்த நிலையை அடைய திருமந்திரத்தின் உபதேசப் பகுதி முழுவதும் பயன்படும்.

"ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடலே றெனநிற்கும்
ஆய பலிபீட மாகுநற் பாசமாம்
ஆய அரனிலை யாய்ந்துகொள் வார்கட்கே".

(திருமந்திரம் - 2411)

# 41. "நான் பெற்ற இன்பம்"

திருமூலதேவ நாயனார் மூவாயிரம் ஆண்டுகள் தவம் செய்கிறார். பரம்பொருள் அனுபவத்தில் மூழ்கிப் போய், அந்தப் பேரின்பத்தில் திளைத்து நிற்கின்றார். அவருடைய உள்ளத்திலே இறை உணர்வு மட்டும் நிரம்பி நிற்கவில்லை. அத்துடன் உயிர்கள்பால் அளவற்ற கருணை உணர்வு அவருடைய உள்ளத்திலே மேலோங்கி நிற்கிறது. அருளாளர்களுடைய உள்ளங்களே அப்படித்தான். அவர்கள் இறைவனை மனதார நேசிக்கின்றார்கள். இறைவனை தங்களுடைய அன்பெனும் பிடிக்குள் எப்பொழுதும் வைத்துக் கொள்கிறார்கள். ஆனால், அவர்கள் இறைவன் மீது அன்பு செலுத்துவதோடு மட்டும் நின்று விடுவதில்லை. அவர்களுடைய கருணை உள்ளம் உயிர்களை நாடுகின்றது. உயிர்களுடைய துன்பங்களைப் போக்க விரும்புகிறது. அவர்களுடைய வாழ்வு உய்வடைவதற்காகத் தேவையான நெறிகளைப் போதிக்க விரும்புகிறது. புத்தர் பெருமான் தொடங்கிய பௌத்த சமயத்தில் சென் என்கிற சமயம் ஒரு உட்பிரிவாக இருக்கிறது. சென் ஞானிகளைப் பற்றி வழக்கமாக ஒன்று சொல்வார்கள். அதாவது அவர்கள் காடுகளிலே நிட்டையில் அமர்ந்து கொண்டு அத்துடன் தங்களது பணி முடிந்தது என்று கருதவில்லை. மெய்ஞ்ஞானம் பெற்ற பிறகு அவர்கள் மக்களிடையே மீண்டும் திரும்பி வருகிறார்கள். மக்களோடு மக்களாகப் பழகுகின்றார்கள். மக்களுடைய நல்வாழ்வுக்குத் தேவையான கருத்துக்களை எடுத்துச் சொல்கின்றார்கள். அவர்களுடைய துன்பங்களைப் பகிர்ந்து கொள்கின்றார்கள். அவர்களுடைய இன்ப உணர்விலே தங்களையும் சேர்த்துக் கொள்கின்றார்கள். அவர்களுடைய வாழ்க்கையே மக்களுக்கு உதாரணமாகி விடுகின்றது. சீரிய நெறிகளும், யோகமும், தவமும் இயல்பாகவே மக்களைப் பற்றிக் கொள்கின்றன. ஒரு ஞானியின் தன்னலமற்ற பணி சமுதாயத்தையே மாற்றும் சக்தி பெற்றது. அத்தகைய ஞானிகள் மக்களிடையே ஆற்றும் பணிகளும் மகத்தானவையே. பொதுவாக எல்லாச் சமயங்களிலும் ஞானிகளுடைய மனப்போக்கு இவ்வாறுதான் இருக்கும்.

திருமூலர் பெருமான் ஆழ்ந்த நிட்டையில் அமர்ந்திருந்தாலும், அவருடைய எண்ணங்கள் இயல்பாகவே உயிர்களைச் சுற்றிச் சுற்றி வருகின்றன. உயிர்களுக்கு அன்பு செய்ய வேண்டும் என்கின்ற ஒரு

நோக்கத்தால் உந்தப்பட்டு, திருமூலர் பெருமான் அவ்வப்பொழுது தூய நனவு நிலைக்கு வந்து மந்திரங்களை அருளிச் செய்கின்றார்.

அந்த மந்திரங்கள் இறைவனுடைய திருவாக்காகும். அவற்றைத் திருமூலர் பெருமான் தானாக அருளிச் செய்யவில்லை. இறைவனுடைய கருவியாகவே அவருடைய உள்ளம் அந்த மந்திரங்களை வெளியிடுகிறது. **''எனக்கு இங்கு அருளால் அளித்ததே''** என்று திருமூலர் பெருமான் கூறுகின்றார். திருமூலதேவ நாயனார் இறை உணர்வை முழுதும் பெற்ற ஒப்பற்ற யோகியாவார். முடிவான முடிவைக் கண்ட ஓர் தலைசிறந்த ஞானியும் சித்தரும் ஆவார். அவர் அருளிச் செய்துள்ள திருமந்திர மணிமாலை இறை அனுபவம் பெறுவதற்கான சாதனங்களையெல்லாம் நமக்குத் தெள்ளத் தெளிவாக விளக்கிக் காட்டும் சிறந்த அனுபவ நூலாகும். இந்த மந்திர மொழியை முதலில் படிக்க வேண்டும். பிறகு ஒவ்வொரு மந்திரத்தைப் பற்றியும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். பல மந்திரங்களை ஒருதடவை படிக்கும்பொழுதே தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். ஆனால், வேறு பல மந்திரங்கள் புரிந்து கொள்வதற்குக் கடினமானவை. சில மந்திரங்கள் படிப்பதற்கு எளிதாக இருக்கும். ஆனால், அவற்றிலே கருத்துகள் ஆழமாகப் பொதிந்து கிடக்கும். பல ஆண்டுகளுக்கு முன்பு நான் திருமந்திரமணிமாலையைப் படிக்கத் தொடங்கியபொழுது அறிஞர் களுடைய உரையைப் பக்கத்திலே வைத்துக் கொண்டிருந்த காரணத்தினால், எல்லா மந்திரங்களையும் ஓரளவு விளக்கத்தோடு புரிந்து கொள்ளலாம் என்கிற உணர்வு ஏற்பட்டது. போக போகத்தான் இந்த உணர்வு எவ்வளவு தவறானது என்ற உண்மை எனக்குப்பட்டது. காரணம், திருமந்திரத்தில் வரும் மந்திரங்கள் பல படிப்பதற்கு எளிதாக இருந்தாலும், சிந்திக்கச் சிந்திக்கப் புதிய உண்மைகளை உள்ளத்திலே தோற்றுவிக்கின்றன. அவ்வாறு உள்ளத்தில் புதிய உண்மைகள் தோன்றுவது என்பதே இறைவனுடைய திருவிளையாடலாக எடுத்துக் கொள்ள வேண்டும். திருவருள் நமக்கு மந்திரங்களின் பொருளைச் சற்றுக் கொடுத்தும் கொடுக்காமலும் மேலும் மேலும் படிக்கச் செய்கின்றது. புராணங்களையும், நீதிநெறி நூல்களையும் படிக்கும்பொழுது அத்தகைய அனுபவம் ஏற்படாமல் போகலாம். ஆனால், திருமந்திரம், திருவாசகம் போன்ற அருள் நூல்களை நாம் படிக்கும்பொழுது திருவருள் பின்னணியிலே இருந்து கொண்டு நமக்கு உண்மை அனுபவங்களை எடுத்துத்தருகின்றது என்று படுகிறது.

ஆகவே, திருவருளை நாடியே இந்த நூல்களைப் படிக்க வேண்டும். படித்த பின்பு ஒவ்வொரு மந்திரத்தைப் பற்றியும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். கடுமையான மந்திரங்களாக இருந்தாலும், அவற்றைக் கண்டு பின்வாங்காமல் படித்துப்படித்து மனதைத் தெளிய வைக்கும் முயற்சியிலே ஈடுபட வேண்டும். முயற்சி வீணாகாது. மனதை வளர்க்கும், களிம்பினை நீக்கும். சிறிது சிறிதாக உள்ளொளியைப் பெருக்கும்.

**"விளக்கினை ஏற்றி வெளியை அறிமின்**
**விளக்கின் முன்னே வேதனை மாறும்"**

என்கிறது திருமந்திரம்.

இந்த விளக்கே பேரறிவாகும். பேரறிவாகிய விளக்கை மனக்கோயிலிலே ஏற்றி வைக்க வேண்டும். விளக்கைத் தூண்டித் தூண்டி வெளிச்சத்தைப் படிப்படியாகக் கூடுதலாக்கி, மனம் முழுவதிலும் பேரறிவு என்னும் விளக்கின் ஒளியால் நிரப்ப வேண்டும் என்கின்ற ஒரே குறிக்கோளை நம்மோடு வைத்து, வாழ்க்கைப் பாதையிலே திருவருள் உணர்வோடு முன்னேற வேண்டும். இந்தக் குறிக்கோளை நாம் எப்பொழுது அடைந்துவிட முடியும் என்று தெளிவாகச் சொல்ல முடியாது. இறைவன் திருவருள் வைத்த ஆணையின்படிதான் நடக்கும். ஒரே நாளில் சாதனையைப்புரிந்துவிட முடியாது. இப்பொழுது சமுதாயத்திலே புதிதாகப் பெயர் பெற்று வருகின்ற ஆன்மிகவாதிகள் குறிப்பிட்ட நாட்களில் ஆன்மிக அனுபவத்தை அவர்கள் கொடுக்கும் தீவிரப் பயிற்சியின் மூலமாக அடைந்துவிட முடியும் என்று கூறிவிடுவதோடு மட்டுமல்லாமல் பல நூற்றுக்கணக்கான மக்களை அவர்கள்பால் ஈர்த்து வருகிறார்கள். ஆன்மிகப்பாதை ஒரு கரடுமுரடான பாதை. கல்லும் முள்ளும் ஏராளம். இறைவன் நம்மைச் சோதிக்கும்பொழுது முதலில் நமக்குத் துன்பங்களைக் கொடுத்ததுத்தான் சோதிப்பான். அவனுக்கு வேண்டியது நாம் எந்த அளவுக்கு அவன் நம்முன் வைத்த நெறியை மேற்கொள்கின்றோம் என்பது தான். நாம் அத்தகைய நெறிகளைப் பற்றி நன்கு தெரிந்து கொண்டிருக்கலாம். கட்டுரைகள் எழுதலாம். திறம்படப்பேசி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தலாம். இவையெல்லாம் நம்மை அதிக தூரம் அழைத்துச்செல்லாது. எந்த அளவுக்கு நாம் நம்முடைய வாழ்க்கையை நெறிகள் அடிப்படையில் அமைத்துக் கொள்கின்றோமோ அந்த அளவுக்குத்தான் நமக்கு ஆன்மிகத்தில் வெற்றி கிடைக்கும். நெறியைப் படைத்த இறைவன் நெருஞ்சி முள்ளையும் படைத்திருக்கின்றான். நெறியில் வழுவக்கூடாது. நெறியில் தவறினால் நமக்கு ஏற்படும் துன்பத்தைச் சாதாரணமாக நீக்கிவிட முடியாது.

**"நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்**
**நெறியில் வழுவின் நெருஞ்சில் முட்பாயும்**
**நெறியில் வழுவா தியங்கவல் லார்க்கு**
**நெறியின் நெருஞ்சில்முட் பாயகி லாவே". (திருமந்திரம் - 1617)**

இங்கே நாம் பேசி வரும் ஆன்மிகக் குறிக்கோள் இறைவனுடைய திருவடிப் பேற்றினை அடைவதாகும். இதைத் திருவடி ஞானம் பெறுதல் என்று அருளாளர்கள் கூறுவார்கள். நமது அறியாமையைப் போக்கி அறிவைத் தருவது இறைவன். இந்த அறிவு சாதாரண அறிவன்று. எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட அறிவாகும். அறிவுக்கு அறிவாம் பேரறிவைப் பற்றிய அறிவாகும். **"எல்லாம் அறியும் அறிவு"** என்பார்

திருமூலர் பெருமான். இந்த அறிவை ஏட்டளவில் பெற்று விட முடியாது. குருவின் துணையோடு அனுபவரீதியாகவே அடைய முடியும். இந்த அறிவை நமது கருவி, கரணங்கள் வழியாகப் பெற்றுவிட முடியாது. ஏனென்றால், நாம் அனுபவிக்க வேண்டிய பேரறிவு கருவி கரணங்களுக்கும் அப்பாற்பட்டது. இறைவனுடைய திருவருள்தான் நமக்கு இந்த அனுபவத்தைக் கொடுக்கும். சகலராகிய நமக்கு இந்த அனுபவம் குருவின் துணையோடு கிடைக்கின்றது. **''கொள்ளினும் நல்ல குருவினைக் கொள்க; உள்ள பொருள், உடல், ஆவியுடன் ஈக''** என்கிறார் திருமூலர் பெருமான். குருவின் துணைக்காக ஏங்கி நிற்க வேண்டும். முயற்சி செய்ய வேண்டும். முயற்சியின்றி ஒன்றும் நடக்காது. எல்லாம் அவன் அருளால்தான் நடக்கின்றது என்று சும்மா இருந்து விடக்கூடாது. அவனுடைய அருளைப் பெற்றிட நம்மை நாம் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். நெறிகளிலே முனைப்போடு நின்று, பரம்பொருள் பற்றிய விளக்கத்தை நமது உள்ளத்திலே பதிய வைக்க வேண்டும். இதனை **''அப்பனை பூண்டுகொண்டு புகுந்தறிவார்''** என்கிறார் திருமூலர் பெருமான். போற்றுதலுக்குரிய நிலையை அடையப்பல ஆண்டுகள் ஆகலாம். பல பிறவிகள் எடுக்கவேண்டி வரலாம். **''எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்''** என்கிறார் மாணிக்கவாசகப் பெருமான். புல்லிலிருந்து மனிதராய், பேயாய், கணங்களாய், முனிவராய், தேவராய் உயிர்கள் பிறக்கும் பேற்றினைப் பெற்றிருந்தும் வீடு பேறு அடைவதே தலைசிறந்த இன்பம் என்று மணிவாசகப் பெருமான் கருதுகின்றார். எல்லா உயிர்களுடைய இயல்பான விருப்பமும் அதுவே. அந்த விருப்பத்தை என்றாவது ஒருநாள் எல்லா உயிர்களும் அடையும். வெற்றி பெறும். **''மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடுற்றேன்''** என்கிறார் மாணிக்கவாசகர். நாம் வேண்டுவது உறுதிகொண்ட நெஞ்சம். ஆன்மிகப் பயணத்தை இன்றே தொடங்க ஆயத்தமாக வேண்டும். தள்ளிப் போடக்கூடாது. மாயை என்னும் திரை நம்முடைய கண்களை மூடுவதால் இறை அனுபவம் நமக்கு அப்பாலாய், விளக்க முடியாத, அடைய இயலாத ஒன்றாக இருக்கிறது என்கின்ற ஒரு விபரீத உணர்வு ஏற்படுகின்றது. இந்த விபரீத உணர்வே நம்முடைய முயற்சிகளையெல்லாம் தள்ளிப்போடத் தூண்டுகிறது. ஆனாலும், திருமந்திர மணிமாலை, திருவாசகம், திருமுறைகள், பிரபந்தங்கள் போன்ற அருளாளர் பெருமக்களின் திருவாக்குகள் நமக்கு என்றென்றும் வழித்துணையாக இருந்து நம்மைச் சரியான பாதையில் அழைத்துச் செல்லக்காத்துக் கொண்டிருக்கின்றன.

இன்றைய சமுதாயச் சூழ்நிலையில் ஆன்மிக அனுபவத்திற்கு மக்கள் தேவையான இடத்தைத் தருவதில்லை. இது தேவைதானா என்று கேட்கிறார்கள். ஆன்மிகத்தைப் பற்றிய தவறான கருத்துக்கள் பல மக்களிடையே வளர்ந்து வருகின்றன. விஞ்ஞானம் வளர்ந்து, நம்முடைய வாழ்க்கை வசதிகள் பெருகி, இவ்வுலகத்தில் இன்பத்தைத் தரும் பொருள்களை நாடி, அவற்றைப் பெறுவதே பிறப்பின் குறிக்கோள் என்கிற

அளவுக்கு மக்கள் பொருள் ஈட்டியும், செலவழித்தும் வருகிறார்கள். இதிலே கிடைக்கக்கூடிய இன்பம் என்றும் நிலைக்காது என்று தெரிந்து கொள்வதற்குக்கூட நமக்கு நேரம் கிடைப்பதில்லை. பொருள்கள் மீது உள்ள மோகத்தில் நாம் முக்கியமான எல்லாவற்றையும் மறந்து விடுகின்றோம். இந்த இன்பத்தை நாடிக்கொண்டே பூமியிலே வாழ்நாட்களை வீணடித்துக் கொள்ளாதீர்கள் என்றார் திருமூலர் பெருமான். ஒழிந்தன காலங்கள், ஊழியும் போயின, கற்பனை கழிந்தன, நாளும் குறுகி நமது உடல் ஒன்றுக்கும் பயன்படாத அளவுக்கு அழிந்து விடுகின்றது. இதை நாம் எல்லோரும் தெரிந்து கொண்டிருந்தாலும், நிலையான ஒன்றைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்கிற அவர் அவா இன்னும் எழவில்லையே என்று நம்மைப் பார்த்துக்கடிந்து கொள்கிறார் திருமூலர் பெருமான்.

**"ஆண்டு பலவுங் கழிந்தன அப்பனைப்**
**பூண்டுகொண் டாரும் புகுந்தறி வார்இல்லை**
**நீண்டன காலங்கள் நீண்டு கொடுக்கினுந்**
**தூண்டு விளக்கின் சுடரறி யாரே".** (திருமந்திரம் - 178)

நமது மனம், புத்தி போன்றவை வெறும் கருவிகள்தான். ஆனாலும், அவற்றிற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கின்றோம். அவைகள் செல்லும் வழியே செல்கின்றோம். தங்களுக்குத் தெரிந்த ஒரு பாதையில் செல்வதையே அவை பழக்கமாகக் கொண்டிருக்கின்றன. அந்தப் பழக்கத்திலிருந்து திசை மாற்றி, வேறு குறிக்கோள்களை அடைய அவைகளைப் புதிய பாதையிலே திருப்பி விடுவது கடினமாகத் தோன்றுகிறது. அதே நேரத்தில், உண்மையான அனுபவம் பெற வேண்டி நாம் நமது கருவிகளை நம் வசம் கொண்டு வந்து, உலக இன்பங்களை நாடிச் செல்வதே வாழ்க்கையின் குறிக்கோள் என்ற எண்ணத்தைக் கைவிட்டு, பேரறிவிற்கும், பேரின்பத்திற்கும் இருப்பிடமான பரம்பொருளை நாடுவதைத் தலையாய கொள்கையாகக் கொள்ள வேண்டும். பரம்பொருள் ஆனந்தத்திற்கு இருப்பிடம். இன்பம் என்கிற சொல்லைப் பயன்படுத்தும்பொழுது, அதற்கு எதிராகத்துன்பம் என்கிற அனுபவம் நாம் நினைத்தமாத்திரத்திலேயே நம்மைப் பற்றிக் கொள்கிறது. ஆனால், ஆனந்தம் என்கிற நிலைக்கு எதிராகவோ, மேலாகவோ ஒரு நிலையும் கிடையாது. இறைவனுக்கு அப்பாற்பட்டு வேறொரு அனுபவமோ இருக்க முடியாது. அந்த அனுபவத்தில் தோய்ந்து நிற்பதே பிறவியின் நோக்கமாகும். அருளாளர்கள் இந்தப் பேரின்பத்தைப் பெற்றிருக்கின்றார்கள். அதன் தன்மையை நமக்கு விளக்கியிருக்கின்றார்கள். ஆனால், நம்மிடையே ஆணவ மலமும் மற்றக் குறைபாடுகளும் மிகுந்து காணப்படுகின்றன. ஆகவே, நம்முடைய அனுபவம் இந்தக் குறைபாடுகளால் பாதிக்கப்படுகிறது. இருந்தாலும் நம்முடைய குறைகளை நீக்கிக் கொள்ளலாம் என்கிறார் திருமூலர் பெருமான். அவ்வாறு நீக்கியவாறே அவர்கள் பெற்ற இன்பத்தை யாவரும் பெறலாம் என்கிறார்.

இறைவன் தந்த பேரின்பத்தைத் திருமூலர் பெருமான் திருமந்திர மணிமாலையாக அருளிச் செய்திருக்கின்றார். அதை **"நான் பெற்ற இன்பம்"** என்கிறார். திருமூலர் பெருமானைப் போன்ற யோகிகள் பெறும் இன்பம் முற்றுணர்வினால் ஏற்பட்டது. பரம்பொருள் ஒன்று உண்டு. அதுவே உலகையெல்லாம் ஆளுகின்றது. நம்மையெல்லாம் ஆளாக்குகின்றது. பரம்பொருள் பல்வேறு நிலைகளில் உயிரை உய்விப்பதற்காகத் தானாகவே ஐந்தொழில்களை மேற்கொண்டு உயிரின் மலங்களைக் களைவதற்காக நிலைக்களனை ஏற்படுத்தித் தருகின்றது. தன்னுடைய திருவடியைக் காணச் செய்கின்றது. கண்ட திருவடிகளின் நிழலிலேயே என்றென்றும் நிலைத்து நின்று மாறாத இன்பத்தை அள்ளித் தருகின்றது என்பது போன்ற உணர்வுகளெல்லாம் அருளாளர்கள் பெறும் பேரின்பத்திற்கு மூலகாரணமாக இருக்கின்றன. இது நிலையான இன்பம். துன்பத்தோடு சேர்ந்து வரும் இன்பம் அன்று. இறைவனுடைய திருவருளால் உயிரினுடைய மலம் நீங்கிய பிறகு, உயிரானது இறைவனுடன் இரண்டறக் கலந்து நிற்கும் நிலையில் இந்த இன்பம் ஏற்படுகிறது. உடலின் இயக்கத்தில் ஏற்படும் இன்பமல்ல இது. எனவே, இங்கே துன்பத்திற்கு இடம் கிடையாது. இந்தப் பேரின்பத்தைப் பெறும் பொழுது உடம்பினுடைய இயக்கத்தின் நினைவு அற்றுப் போய்விடும். அத்தகைய இன்பத்தைத்தான் பெற்றதாகத் திருமூலர் பெருமான் கூறுகின்றார். இந்த இன்பத்தை விவரிக்கவும் இயலாது என்று திருமூலர் நமக்குச் சொல்லுகின்றார். ஏனென்றால், நாம் விளக்கம் என்று கூறும்பொழுது அந்த விளக்கம் அறிவோடு சேர்ந்த ஒன்றாக அமைகிறது. சிவமாம் தன்மை பெற்ற உயிர் திருவருள் இன்பத்தை அடையும்பொழுது இந்த இன்பத்தின் தன்மை அறிவுக்கு அப்பாற்பட்டு நிற்கின்றது. ஆகவே, இந்த இன்பத்தை அனுபவித்தால்தான் அதன் உண்மையை உணர முடியும். எல்லாவற்றிற்கும் அடிப்படையாக அமைவது முற்றுணர்வு. இதைச் சிற்றறிவினால் பெற முடியாது. ஆகவே, திருமூலர் பெருமான் பெற்ற பேரின்பம் அவர் இறைவனோடு இரண்டறக் கலந்து நின்ற நிலையில் கிடைத்த அனுபவமாகும். சொல்லுக்கும் சிந்தனைக்கும் அப்பாற்பட்டது.

இந்த அனுபவம் எத்தகையது என்று ஓரளவாவது தெரிந்து கொள்ள வேண்டும். நாம் பல பொறிகளையும், உட்கருவிகளையும் பயன்படுத்தி விஷயானுபவம் பெறுகிறோம். இந்த அனுபவம் நமது மனதிலே பதியும்பொழுது உள்முகத்தான் காணப்படுகிறது. ஆனால், இறைவனைப் பற்றிய அனுபவம் கருவி கரணங்களால் பெறப்பட்டதன்று. இந்த அனுபவத்தைப் பெற நாம் உள் நோக்கிப் பார்க்க முயல வேண்டும். நம்முடைய அகப்பார்வையைப் பயன்படுத்திப்புதிய உணர்வுகளைப் பெறும் பணியில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். இதற்கு உள்ளத்திலே தெளிவு தேவை. அன்றாட வாழ்க்கை, பிரச்சினைகள், அனுபவங்கள் இவற்றையெல்லாம் சற்றுத்தள்ளி வைத்துவிட்டு, இறைவனுடைய திருவடிகளைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்கும் இயல்பினை வளர்க்க வேண்டும்.

சிந்தையைத்தெள்ளத் தெளிய வைப்பார்களுக்கு ஈசன் உறவு வலுப்படும் என்பார் திருமூலர். இது எளிதான ஒன்றன்று. யோகத்தாலும், தவத்தாலும், ஞானத்தாலும், சரியையாலும், கிரியையாலும், உள்ளத் தூய்மையாலுமே அகப்புற அனுபவங்களைப் பெற இயலும். எனவே, திருமூலர்பெருமான் பேரின்பத்தைத் தான் பெற்றதாகக் கூறும்பொழுது அவர் உபயோகித்துள்ள **"நான்"** என்கிற சொல்லுக்குத் தனி விளக்கம் தேவை. **நான், எனது** என்பவை ஆணவ மலத்தின் வெளிப்பாடுகள். மலத்தோடு கூடிய ''நான்'' இறை உண்மையைப்பெற இயலாது. ''நான்'' என்கிற ஒருவனுடைய தன்மையும் நோக்கமும் மாற வேண்டும். தூய்மையற்ற ''நானுக்கு'' இங்கே இடமில்லை. சகலராகிய ''நான்'' சாதனை நெறியை மேற்கொண்டு இறைவனுடைய திருவருளால், வினை ஒப்பு என்கிற நிலையைப்பெற்று, மலபரிபாகம் செய்தவனாகச் சுத்த நிலையை அடைய வேண்டும். சுத்த நிலையில் உள்ள உயிரால்தான் இறை அனுபவத்தைப் பெற இயலும். சுத்தமற்ற நிலையில் இறைவனை நாடலாம். ஆனால் அனுபவம் கிடைக்காமல் போகலாம். சுத்த நிலையில் இருப்பவர்களுக்கு இறை அனுபவம் தானாகவே வரும். நான், எனது போன்ற சொற்கள் வேற்றுமையை உருவாக்கும் சொற்கள். பரம்பொருளை அனுபவிக்கும்பொழுது வேற்றுமை மறைந்து விடுகிறது. நம்மைப் போலவே திருமூலர் பெருமான் வேற்றுமை நிலையில் இருந்து கொண்டு இறை உணர்வைப்பெற முயன்றதாகக் கூறுகின்றார். இறைவன் அவரை அழைத்துக்கொண்டு வேற்றுமை நிலை இல்லையென்று கூறி அவருக்குப்பேதமற்ற இன்பத்தை அருளிச் செய்கின்றான். அந்த மாத்திரத்திலேயே நான், எனது போன்ற நினைப்புகள் நீங்கி விடுகின்றன. இது ஒரு உயர்ந்த ஆன்மிக அனுபவம் ஆகும்.

**"நானென்றுந் தானென்றும் நாடினேன் நாடலும்**
**நானென்றுந் தானென் றிரண்டில்லை யென்பது**
**நானென்ற ஞான முதல்வனே நல்கினான்**
**நானென்ற நானும் நினைப்பொழிந் தேனே".**

**(திருமந்திரம் - 2820)**

இந்த அனுபவம் ஏற்படும்பொழுது உயிரானது ''நிர்மல அவத்தை'' நிலையில் உள்ளது என்பார் திருமூலர் பெருமான். **"ஊனை இருளற நோக்குதல்"** என்று திருமூலர்பெருமான் கூறுவதும் இதுவே. தன்னை அறிதல், சிவனை அறிதல், சிவனை அறிந்து சிவனில் மூழ்கி நிற்றல் போன்ற அனுபவங்கள் இந்த நிலையில் கிடைக்கும் என்றும் திருமந்திரம் நமக்குக் கூறுகின்றது.

இறை உணர்வைப்பெறும் உயிரானது தீயிலிட்ட தங்கத்தைப்போல ஒளிவிட்டுப்பிரகாசிக்கக்கூடிய தன்மையைப் பெறுகின்றது. இந்த உயிரே பேரின்பத்திலும் ஆழ்ந்து நிற்கின்றது. நாம் எல்லோரும் இந்த இன்பத்தை அடையலாம் என்கிறார் திருமூலர் பெருமான். இறைவனுடைய நியதிப்படி

சில உயிர்களுக்குத்தான் வீடு பேறு கிடைக்கும். மற்றவை இந்தப் பேற்றினைப் பெறாது என்பதன்று. எல்லாச்சீவராசிகளும் தனித்தனியாகச் சிவமாம் தன்மை பெற்று, சிவலோகத்தில் சிவபோகத்தை அடையும் வாய்ப்பை அவரவருடைய வினைப்பயனுக்கு ஏற்றவாறு பெறுகின்றன. இறைப்பேற்றினைப் பெற வேண்டுமென்றால் நம்முடைய முயற்சியும் தேவை. நாம் சும்மா உட்கார்ந்து கொண்டு முக்திப் பேற்றினை அடைய வேண்டும் என்று விரும்பினால் மட்டும் போதாது. நம்முடைய முயற்சியும் தேவை. அதுவே சாதனை நெறியுமாகும். திருமூலர்பெருமான் மூவாயிரம் ஆண்டுகள் தவத்தில் அமர்ந்திருக்கின்றார். அவருடைய தவ வலிமை திருமந்திரங்களாக வெளிவருகிறது. நம்மைப் போன்றவர்கள் ஆன்மிகப் பயிற்சியை மேற்கொள்வதற்கு மனத்தைத் தயார் செய்து, திருவருளிலே முழுமையான நம்பிக்கை வைத்து, திருவருளையே நாடி, தகுந்த குரு ஒருவர் மூலமாகத் திருவருளின் சக்தியை உணர்ந்து, ஆன்மிக ஏணியில் படிப்படியாக ஏறி வர வேண்டும். ஆனால், நம்முடைய முயற்சிக்கெல்லாம் தடை போடுவது நம்முடைய ஆணவ மலத்தின் மறைப்புச் சக்தியாகும். இந்த மறைப்புச் சக்தி மாயையால் உருவாக்கப்பட்ட கருவிகளோடு சேர்ந்திருக்கும்பொழுது இறை உண்மையைப் பற்றி நமக்கு ஒரு எண்ணமும் எழாமல் இருப்பது மட்டுமல்ல. நம்மைப் பற்றியும், இறைவனைப் பற்றியும் ஒரு விபரீத எண்ணமும் ஏற்பட்டு விடுகின்றது. அதன் விளைவாக நம்மைப் பற்றித் தவறான கருத்துக்கள் நம்முடைய உள்ளத்திலே தோன்றுகின்றன. இவை தவறான நடத்தையைச், செயலை தூண்டி விடுகின்றன. உயிரானது இதுபோன்ற மாயச் சூழலில் அகப்பட்டுத் தவிக்கின்றது என்றும், இந்தத் துன்பத்தைப் போக்கிக்கொள்ள திருவருள் தேவைப்படுகின்றது என்றும், திருவருளைத் தீவிரமாக நாடித்தான் நமது அறியாமை இருளைப் போக்கிக்கொள்ள வேண்டும் என்றும் அருளாளர்கள் தாங்கள் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் நமக்கு எடுத்துக் கூறுகின்றார்கள். அவர்களுடைய அருளுரையை அவ்வாறே நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். முடிந்தளவுக்கு நம்முடைய குணங்களின் தன்மையை மாற்றிக் கொள்ள வேண்டும். நமது சிந்தனையைத் தீவிரப்படுத்தி இறைவன்பால் செலுத்த வேண்டும். **"வெல்லும் அளவில் விடும் வெகுளியை; செல்லும் அளவில் செலுத்துமின் சிந்தையை"** என்பார் திருமூலர் பெருமான்.

சிந்தனையின் போக்கை ஆன்மிகப் பாதையில் செலுத்துவதற்கு உள்ளத்திலே வைராக்கியம் தேவை, தூய்மை தேவை, தெளிவு தேவை. எதையும் நாம்தான் சாதிக்கின்றோம் என்கிற மனநிலையை மாற்றி அமைப்பதும் தேவை. இறைவன் மீது பற்றினை வளர்த்து, மற்றவை மீது உள்ள பற்றினைக்குறைப்பது தேவை. இந்த முயற்சியைத் தீவிரமாக மேற்கொள்வதால் வாழ்க்கை என்னும் சூழலிலே அகப்பட்டு, குணங்களின் ஆற்றலுக்கு அடிமையாகி, காமம், வெகுளி, மயக்கம் போன்ற கீழ்த்தரமான உணர்ச்சிகளுக்கு ஆளாகி அவதிப்படும் நிலைமை சிறிது சிறிதாக மாறும்.

அந்த மாற்றம் தோன்றும்போதே உள்ளத்தில் தெளிவு பிறக்கும். அப்பொழுது அறிவுச்சுடரின் ஒளியை உள்ளம் காணத் தொடங்குகின்றது. நமது வாழ்க்கைப் பாதையின் நீளமும் அகலமும் நம் அகக்கண்களுக்குத் தெளிவாகத் தோன்றுகின்றன. எங்கே செல்ல வேண்டும் எப்படிச் செல்ல வேண்டும் என்பன போன்றவற்றில் மனம் தன்னை ஈடுபடுத்திக் கொள்கின்றது. அற வாழ்க்கையை நடத்தி வருவதன் மூலமாகவும், தவம் போன்ற நெறியை மேற்கொள்வதன் மூலமாகவும், பற்றற்ற தன்மையை வளரவிட்டு இறைவன்பால் உள்ளத்தைத் திருப்பிக் கொள்ள ஒரு இயக்கம் நம்மையும் அறியாமலேயே தொடங்குகின்றது. இதைச் சத்தி நிபாதம் என்று சொல்லலாம். ஞானத்தீ சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றது. நம்மைத் தெரிந்து கொள்கின்றோம். நம்மை ஆளாக்கிய தலைவரைத் தெரிந்து கொள்கின்றோம். யார் தலைவன் என்று உலகம் முழுவதும் பறந்து தேடிக்கொண்டு போகும் மனப்பான்மையை மாற்றி உள்ளத்திலே இறைவனைக் காண்கின்றோம். இது அருளாளர்களுடைய அனுபவமாகும். **''சித்த மலம் நீக்கிச் சிவமாக்கி என்னை ஆண்ட அத்தன்''** என்று இறைவனைப் பார்த்து வியக்கின்றார் மாணிக்கவாசகப் பெருமான்.

**''உரையற்ற தொன்றை உரைகாணும் ஊமர்காள்**
**கரையற்ற தொன்றைக் கரைகாண லாமோ**
**திரையற்ற நீர்போல் சிந்தை தெளிந்தார்க்குப்**
**புரையற் றிருந்தான் புரிசடை யோனே''.** **(திருமந்திரம் - 2955)**

எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருள் நம் உள்ளத்திலும் **வீற்றிருக்கின்றது** என்கிற உணர்வுமயமான அனுபவத்தைப்பெற்று இன்புற்றிருப்பதே உயிரின் இயல்பான நோக்கமாகும். இறைவனைப் போலவே உயிரும் ஒரு அறிவுப்பொருள். சார்ந்ததன்வண்ணம் ஒரு பொருளை அறிந்து கொள்வதும், இறைவன் அறிவிக்கத்தான் அந்த அறியும் ஆற்றலைப் பெற்றுக் கொண்டிருப்பதும் உயிரின் இயல்பாகும். உயிரின் இயல்பான தன்மையையும், நோக்கத்தையும் உயிர் தெரிந்துகொள்ளாத அளவுக்கு மூலமலமாகிய ஆணவமலம் உயிரின் அறிவைக் கட்டுப்படுத்துகின்றது. ஆணவமலம் உயிரின் இயல்பு அன்று. உயிரின் ஒரு குறைபாடு. தொன்றுதொட்டு ஆணவ மலம் உயிரோடு இணைந்திருந்தாலும், உயிரானது திருவருளின் துணையுடன் தனது முயற்சியால் இந்த மலத்தை நீக்கும் சக்தியையும், தகுதியையும் பெறுகிறது. அந்த நிலையில் உயிரின் அறிவுச் சக்தி இறைவனுடைய திருவருள் மூலமாகப் பேரறிவின் உண்மையை உணர்ந்து கொள்கிற்து. எங்கும் வியாபித்திருக்கும் பரம்பொருள் நம்முடைய உள்ளத்திலும் நிரம்பியிருப்பதை உயிரால் உணர்ந்து கொள்ள முடிகின்றது. தெளிந்த, தூய்மையான, மலக்கலப்பற்ற நிலையில் இந்த உணர்வு தோன்றத் தொடங்குகிறது. இது ஒரு உணர்வு ஆகையால் அறிவு நிலையில் மட்டும் இதைப் பெறுவது இயலாது என்கிற உண்மையும் உள்ளத்தில் பதிகின்றது. எல்லாம் அவனுடைய திருவருளாலே

நடக்கின்றது என்கிற எண்ணம் உள்ளத்திலே ஆழப்பதியத் தொடங்குகிறது. உயிரின் இயக்கமே இறைவனுடைய அருட்சக்தியால்தான் நடக்கின்றது என்பதும் நன்கு புலப்படுகின்றது. இறைவன் உயிருக்கு உயிராக, உயிருக்கு அப்பாலாக இருந்து உயிரினை நடத்திச் செல்லும் பாங்கினை உயிர் உணர்ந்து கொள்ளத் தொடங்குகின்றது. இறைவன் ஒரு அனுபவப்பொருள் என்றால் அந்த அனுபவம் உடலுக்குள்ளேயே நிகழ்கின்றது.

அந்த அனுபவத்துளே மூழ்கியிருக்கும் உடலும், உடலைச் சார்ந்த கருவிகளும் தங்கள் வழிச் செல்லாது அந்த உணர்வின்வழியே செல்கின்றன. ஈசனை நோக்கிச் செல்வது உயிருக்கு இயல்பாக அமைகின்றது. உள்ளமே ஆனந்த அனுபவத்திற்கு இருப்பிடமாக அமைகிறது. இறைவனை எங்கும் சென்று தேடத் தேவையில்லை. இங்கேயே, நம்முள்ளேயே, நமது உணர்வுகளிலேயே அடையாளம் கண்டு கொள்ளலாம்.

**''மாயனை நாடி மனநெடுந் தேரேறிப்**
**போயின நாடறி யாதே புலம்புவர்**
**தேயமும் நாடுந் திரிந்தெங்கள் செல்வனைக்**
**காயமின் னாட்டிடைக் கண்டுகொண் டேனன்றே''.**

**(திருமந்திரம் - 2982)**

உயிரினுடைய அறிவு சிற்றறிவாக இருந்தாலும், இறைவனுடைய அருள் அந்த உயிரிலே படும்பொழுது சிற்றறிவு இறைத்தன்மையைப் பெறுகின்றது. சீவன் சிவத்துடன் சேர்ந்துகொள்கின்றது. **''சித்துக்கு சித்தன்றி சேர்விடம் வேறுண்டோ; சுத்த வெளியில் சுடரிற் சுடர்சேரும்''** என்பார் திருமூலர் பெருமான். திருமூலர் பெருமான் உபயோகிக்கும் ''நான்'' என்கிற சொல் பக்குவ நிலையில், முற்றுணர்வு பெற்ற உயிரைக் குறிக்கும். பள்ளத்திலும் மேட்டிலும் பறந்து திரியாமல் உள்ளத்திலே உள்ள பல தீர்த்தங்களில் மூழ்கி, நீராடி இன்புறும். அத்தகைய இன்பத்தை நான் பெற்றிருக்கின்றேன். இதை உலக மக்கள் யாவரும் பெறலாம் என்கிறார் திருமூலர்பெருமான்.

இந்த இன்ப அனுபவம் நினைத்தமாத்திரத்திலேயே கிடைத்துவிடுமா? **''தான் பற்றப் பற்றத் தலைப்படுந் தானே''** என்கிறார் திருமூலர் பெருமான். ஆன்மிகப் பற்றினை வளர்க்க வேண்டுமானால் மற்ற பற்றுக்களை வெகுவாக குறைத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக உலகத்தோடு உள்ள தொடர்பு வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட வேண்டும். எல்லோரும் துறவிகளாகி காடுகளுக்குச் சென்று, தவம் கிடந்து ஞானிகளாகிவிட முடியாது. ஆனால், நம்முடைய அன்றாட வாழ்க்கையிலேயே அருளாளர்பெருமக்கள் நமக்கு எடுத்துத் தந்திருக்கும் சாதனை நெறிகளை மேற்கொள்ளும்போது உலகப் பற்றின் தன்மை தானாகவே மாறும். உலகப் பற்றுக்களிலிருந்து நாம் விடுதலை அடையும்பொழுது நம்முடைய உள்ளங்களிலே ஆன்மிக ஒளி தோன்றி, அக இருளை நீக்கும். சாதனை, மேலும் மேலும் சாதனை என்கிற

ஒரே அடிப்படையில் நம்முடைய ஆன்மிக வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும். முழு மனதுடன் நம்முடைய முயற்சிகளையெல்லாம் மேற்கொள்ள வேண்டியது நம்முடைய பொறுப்பாகும். திருவருளின் துணை நமக்குத்தானாகவே வந்து சேரும். பற்றுதல் என்கின்ற முயற்சி வெறும் பெயரளவில் இருக்கக் கூடாது. சுய விளம்பரமாக இருக்கக்கூடாது. நான், எனக்காக என்கின்ற உணர்ச்சிகளைத் திருப்தி செய்வதற்காக இந்த முயற்சி அமையக்கூடாது. பரம்பொருளை நாடுதலே ஒரு இன்பத்தைத் தருகின்றது என்கிற எண்ணத்தோடு இந்த முயற்சியை மேற்கொள்ள வேண்டும். பலனை எதிர்பார்த்துச் செய்யும் செயல்கள் நம்மை இறை அனுபவத்திற்கு அழைத்துச் செல்லா. நம்முடைய முயற்சிகளுக்கு இறைவனே காரணம் என்கின்ற உணர்வோடு ஆன்மிகப் பாதையில் நாம் முன்னேற வேண்டும். நான் என்கிற முனைப்பு குறையக் குறைய இறைவன் உள்ளே பிரகாசிக்கத் தொடங்குவான்.

திருமூலர் பெருமான் தனக்குக் கிடைத்த பேரின்பத்துடன் நின்று விடவில்லை. தனது ஆன்மிக அனுபவங்களை நம்முன் வைத்து, அந்த அனுபவங்களை நாமும் பெறலாம் என்கிறார். அதே நேரத்தில் அதற்கான நெறிகளைக் கடைப்பிடிக்கச் சொல்கின்றார்.

திருமந்திர மணிமாலை இறைவனுடைய அருள் வாக்காகும். உள்ளம் தெளியவும், தெளிந்த உள்ளத்தில் இறைவன் தோன்றவும் திருமந்திர மணிமாலை பல வழிகளை நமக்கு காண்பிக்கின்றது.



# 42. திருமூலர் ஒரு சித்தர்

கோடை மாதங்களில் கடும் வெயிலைச் சமாளிப்பதற்காக மலைப் பிரதேசங்களுக்குச் சென்று சில நாட்கள் தங்கி, வாழ்க்கைப் பிரச்சினைகளை மறந்து, இயற்கையின் எழிலைக் கண்டு, ரசித்து, மனதில் அமைதியையும், உடலில் புத்துணர்ச்சியையும் பெற்று வருவது நம்மிடையே பலருக்கு ஓர் வழக்கமாக இருந்து வருகிறது. மலைச்சாலைகள் பொதுவாகக் குறுகியும், வளைந்தும் இருக்கும். சிறிது சிறிதாக உயர்ந்து கொண்டு செல்லும். பல ஆண்டுகளுக்கு முன்பு இவ்வாறு நான் மலைப் பகுதிகளுக்குச் செல்லும்போது, மலைச் சாலைகளைச் சுற்றி அடர்ந்த காடுகளைப் பார்த்திருக்கின்றேன். ஆனால், இப்போது காடுகளைக் காண்பது அரிதாகி விட்டது. சாலை செங்குத்தான பகுதி வழியாகச் செல்லும்பொழுது இளைப்பாறுவதற்கும், இயற்கையைக்கண்டு களிப்பதற்கும் இடவசதி செய்திருப்பார்கள். அந்த இடங்களிலிருந்து நாம் கீழே பார்க்கும்பொழுது கண்ணுக்கு எட்டிய தூரம் அடர்ந்த பச்சை நிறக் காடுகள் மலைச் சாரல்களிலும், பள்ளத் தாக்குகளிலும் பரவி இருப்பதையும், ஆங்காங்கே சில மரங்கள் மற்ற மரங்களைவிட அதிகமாக உயர்ந்து நிற்பதையும் காணலாம். அந்தச் சில மரங்கள் தங்களுடைய விசேஷத் தன்மையால், தரத்தால் உயர்ந்து நிற்கின்றன.

மாந்தருள் சித்தர்கள் அதேபோல உயர்ந்தவர்கள். தங்களுடைய ஆன்மிக பலத்தால், உள்ளறிவால், தூய கரணங்களால், தெளிவான சிந்தனையால், தம்முள் பெற்ற இறை உணர்வினால், பரந்த மனிதாபிமானத்தால் சித்தர்கள் மக்களுக்கு வழிகாட்டிகளாகத் திகழ்கின்றார்கள். சித்தர்களை எல்லா நாடுகளிலும், சமயங்களிலும், சமுதாயங்களிலும் காணலாம். நாடு, சமயம், சமுதாயம், சாதி போன்றவற்றிற்குச் சித்தர்கள் அப்பாற்பட்டவர்கள். அவர்களுடைய குறிக்கோள் ஒன்றே! அவர்கள் நாடுவதும் ஒன்றே! அவர்கள் அடைவதும் ஒன்றே! அவர்களுடைய அறிவுரைகளும் ஏறத்தாழ ஒரே தன்மையைப் பெற்றவைகளாகவும் இருக்கின்றன. சித்தர்கள் வரலாற்றைப் பொறுத்தவரை நமது நாடு தனிப்பட்ட பெருமைக்குரியது. பல ஆயிரம் ஆண்டுகளாக இந்திய மக்களின் உணர்வுகளிலே ஊறி நிற்கின்ற ஆன்மிகமும், அவர்களுடைய வாழ்க்கையுடன் பின்னிக் கிடந்து இருக்கின்ற சமய நெறிகளும், எளிமையான வாழ்வும், உயர்ந்த பண்புகளும், சித்தர்களின்

வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் நன்கு உழப்பட்ட நிலங்களாக அமைந்திருக்கின்றன. ஆகவே, சித்தர்கள் என்றால் இந்திய நாட்டுச் சித்தர்களைக் குறிப்பிடுவதே ஒரு வழக்கமாகி விட்டது.

சித்தர்கள் வரலாற்றில் தமிழ்நாட்டுக்குச் சிறப்பான இடமுண்டு. மிகத்தொன்மை வாய்ந்த தமிழ் இலக்கியம் சித்தர்களின் சாதனைகளை எடுத்துக் காட்டுகின்றது. பல சித்தர்களின் வாழ்வும் வாக்கும், காலங்கடந்த தன்மை பெற்றவைகளாக, இன்றும் பாமர மக்களின் எண்ணங்களிலும், உணர்வுகளிலும் நிலைத்து நிற்கின்றன. மக்களின் ஆன்மிக சிந்தனைகள் வளருவதற்கும், சமய நெறிகள் தழைக்கவும், மக்களுடைய பண்புகளும் நடத்தையும் உயர்வதற்கும் சித்தர்கள் அரும்பாடுபட்டிருக்கிறார்கள். ஏன், இன்னும் சொல்லப்போனால், சமயக் கோட்பாடுகளின் எல்லைக்குள் நின்று சமய நெறிகளைப் பரப்பி வந்த பெரியார்களைவிடப் பல சித்தர்கள் மக்களை ஆன்மிகப் பாதையில் அழைத்துச் செல்லும் பொருட்டு கலங்கரை விளக்குப் போன்று சுடர்விட்டுப் பிரகாசித்து, மக்களின் சிந்தனைகளை இறை உணர்வோடு இணைக்கும் பணியில் வெற்றியும் கண்டிருக்கிறார்கள். இதற்கு முக்கிய காரணம், சித்தர்கள் மக்களிடையே வேற்றுமையின்றி, உயர்வு தாழ்வின்றிப் பழகி அவர்களுடன் ஒன்றி இருந்ததுதான். மக்களின் உள்ளக்கிடக்கைகளை அவர்கள் நன்கு அறிந்தவர்கள். அவர்களுடைய ஆசாபாசங்களைத் தெரிந்து கொண்டவர்கள். சித்தர்கள் வெறும் தத்துவவாதிகள் மட்டுமல்லர். தத்துவங்களைக் கடந்தவர்கள். இறை உணர்வைப் பெற்றவர்கள். தம்முள் இறைவனை அனுபவித்தவர்கள். அதன்விளைவாக மட்டிலா பேரின்பத்தைப் பெற்று அதனுள் திளைத்து வருபவர்கள். அனுபூதிமான்கள். அதேநேரத்தில் அவர்கள் சமய நெறிகளைப் புறக்கணிக்கவில்லை. சமய நெறிகள் ஆன்மிகத்திற்குப் பயன்படாத உயிரற்ற சடங்குகளாக மட்டும் நின்றுவிடக்கூடாது என்பதை நன்கு உணர்ந்தவர்களாக, அவற்றிற்கெல்லாம் அடிப்படையான அன்பையும், அறத்தையும் சுட்டிக்காட்டி, அன்பு வழி, அறவழி நடந்து செல்பவர்கள் இயல்பாகவே சமய நெறிகளைக் கடைப்பிடித்து, வீடு பேறு அடையத் தகுதி உடையவர்களாகிறார்கள் என்று மக்களுக்குத் தெளிவுபடுத்தினார்கள். வாழ்க்கை நிலையற்றது; வாழ்க்கையோடு ஒன்றிப் போவதைவிட, நிலையான ஒன்றை நாம் பெற முயல வேண்டும் என்கின்ற உபதேசத்தை நமக்கு அருளிச் செய்து, சித்தர்கள் சமய நெறிகளை மக்கள் மேலும் தீவிரமாக மேற்கொள்ளும் ஆவலைப் பெற அதற்குத் தேவையான ஒழுக்கத்தை மக்களிடையே பரப்பி உள்ளார்கள். சுருங்கச் சொன்னால், சித்தர்களை ஆன்மிக விஞ்ஞானிகள் என்று அழைக்கலாம்.

விஞ்ஞான அறிவு நமது உடலினில் கருவி, கரணங்களோடு சம்பந்தப்பட்டது. ஒரு பொருளை நன்கு ஆராய்ந்து அதைப் பற்றிய விவரங்களையும், விளக்கங்களையும், காரண காரியங்களையும் நமது புலனறிவைப் பயன்படுத்திக் கொண்டு விளக்கிக் கூறுவதே விஞ்ஞானம் ஆகும். விஞ்ஞானத்திற்கென சில ஆய்வு முறைகள் உள்ளன. அவற்றைப்

பயன்படுத்தி நாம் பெறும் அறிவின் நிலையை ஆழப்படுத்தியும், பரவலாக்கியும் மேலும் புதிய அறிவினை நமக்குச் சேகரித்துக் கொடுப்பது விஞ்ஞான வளர்ச்சியின் முக்கிய நோக்கமாகும். இத்தகைய அணுகுமுறைகளை மேற்கொண்டு கடந்த சில நூற்றாண்டுகளில் விஞ்ஞான வளர்ச்சியில் வியக்கத்தக்க சாதனைகளை உலகம் புரிந்திருக்கின்றது என்பது உண்மை. இந்தச் சாதனைகள் நமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், நம்முடைய வசதிகளைப் பெருக்கவும் உதவி புரிந்திருக்கின்றன என்பதிலும் ஐயமில்லை.

இவ்வாறு நாம் பெறும் அறிவைச் சிற்றறிவு என்று மெய்யுணர்வாளர்கள் குறிப்பிடுவார்கள். அதைத் தவிர பேரறிவு என்று ஒன்று இருக்கின்றது. அதுதான் இறைவனைப் பற்றிய அறிவு. நாம் எல்லாவிதமான அறிவைப் பெற்றிருந்தாலும், பேரறிவைப் பெறாதவரை நாம் இந்த உலகில் பிறந்து வாழ்வதனுடைய நோக்கம் நிறைவேறாது என்பது மெய்யுணர்வாளர்களுடைய கருத்தாகும். இந்த அறிவை நாம் பெற வேண்டும். இறை அறிவைப் பெற்ற மாத்திரத்திலேயே நான் என்னும் தன்மை மாறி, இறை என்னும் உணர்வு பிறந்து, அந்த உணர்விலே மூழ்கிக் கிடந்து பேரின்பத்தைப் பெறலாம். இந்த அறிவைப் பெறுவதற்கான தகுதியை நாம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அதுவே நமது வாழ்க்கையின் நோக்கமாக இருக்க வேண்டும்.

திருமூலர்பெருமான் பேரறிவை அனுபவித்த காரணத்தால், தனது சிந்தனையைத் தெள்ளத் தெளிவாக நமக்கு அருளிச் செய்கிறார்.

**"எல்லாம் அறியும் அறிவு தனைவிட்டு**
**எல்லாம் அறிந்தும் இலாபமங் கில்லை**
**எல்லாம் அறிந்த அறிவினை நானென்னில்**
**எல்லாம் அறிந்த இறையென லாமே".** **(திருமந்திரம் - 2596)**

விஞ்ஞான அறிவைப் பயன்படுத்திப் பல பொருள்களை விளக்கி விடலாம். ஆனால், இறைவனைப் பற்றிய பேரறிவை நமது சுட்டறிவால் மட்டும் அடைந்துவிட முடியாது. இறைவன் நமது அறிவுக்கு எட்டாதவன். காட்டும் குறியும் கடந்தவன். கரையில்லாத கடல் போன்றவன். அவனைப் பற்றிய அறிவை ஏடுகளிலிருந்தும், நூல்களிலிருந்தும் பெற இயலாது. அவனுக்கு உரை காண்பதும் கடினம். **"நூல் அறிவு பேசி நுழைவு இலாதார் திரிக!"** என்பார் காரைக்கால் அம்மையார். **"ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா சுடர் விட்டுளன் எங்கள் சோதி"** என்பது சம்பந்தருடைய திருவாக்காகும்.

அறிவின் வழியாக இறைவனைத் தெரிந்து கொள்ள முயலுவதை விட்டு உணர்வின் வாயிலாகத் தெரிந்து தெளிவதுதான் சித்தர்களுடைய ஞானமாகும். எந்த வாக்கினாலும், எந்த விரிவுரையினாலும் பிற பொருளைப்போல் அறிய முடியாத பொருளே இறைவனாகிய

பரம்பொருளாகும். இந்த இறைவனை அனுபவிக்க வேண்டுமென்றால் முதலில் சிந்தையைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். களங்கங்களை நீக்க வேண்டும். திரையற்ற நீர்போல் அசைவற்று நிற்க வேண்டும். இந்த உயர்ந்த தியான நிலையில் இறைவன், மாசு, மறு அற்றவன், வெளிப்பட்டு அருள் செய்வான்.

**"உரையற்றது ஒன்றை உரைசெய்யும் ஊமர்காள்**
**கரையற்றது ஒன்றைக் கரைகாண லாகுமோ**
**திரையற்ற நீர்போல் சிந்தை தெளிவார்க்குப்**
**புரையற் றிருந்தான் புரிசடை யோனே".** **(திருமந்திரம் - 2955)**

அறிவுக் கண்களால் பார்ப்பதைவிட அருள் கண்களால் பார்ப்பதே இறைவனை அடைவதற்கு ஒரு முக்கிய சாதனமாகும் என்பது சித்தர்களுடைய ஞானமாகும். சித்தர்கள் முழுமையாக இந்த அருள் அனுபவத்தைப் பெற்றவர்கள். தன்னை மறந்து, தனது கரணங்களை மறந்து, உடலை மறந்து, சித்தத்தைச் சிவமாக்கி அந்த சிவானந்தப் பேரின்பத்தில் திளைப்பவர்கள் சித்தர்கள். எனவேதான் சித்தர்களை அருளாளர்கள் என்றும், மெய்யுணர்வாளர்கள் என்றும் அழைக்கின்றோம். சித்தர்கள் வெறும் சித்து வேலைகளைச் செய்பவர்கள் மட்டுமல்லர். பல சித்தர்கள் பல வியப்புச் செயல்களைச் செய்து காட்டியது உண்மைதான். ஆனால், அவர்கள் வெறும் சித்து வேலைக்காரர்கள் மட்டுமல்லர். தங்கள் பயிற்சிகள் மூலம் பல ஆன்ம ஆற்றல்களை அவர்கள் பெறுகின்றார்கள். முக்திப் பேற்றை நோக்கி வழி நடக்கும்பொழுது பல சித்திகளைச் சந்திக்கின்றார்கள். ஆனால், அவர்களுடைய நோக்கம் ஆன்மிகப் பாதையின் எல்லையை அடைந்து, இறைவனுடைய திருவடிகளிலே தங்களைச் சதா பொருத்திக் கொள்வது தான். அத்தகையவர்கள் சித்துகள் போன்ற சாதனைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அவர்களுடைய நோக்கமெல்லாம் இறைவனை அடைவதே. அதற்காக எல்லாத்தத்துவங்களையும் படிப்படியாகத் தங்களிடமிருந்து விலக்கிக் கொள்கின்றார்கள். தத்துவங்களை அறிந்து கொள்வதும், அவற்றைக் கடப்பதும் ஆன்மிக அனுபவத்தின் முக்கியக் கட்டமென்று சித்தர் பெருமக்கள் நமக்கு விளக்குகின்றார்கள். சொல்லுவதற்கு அரிய பரம்பொருளை அனுபவித்துத் தெளிவடைகின்றார்கள். ஒப்பிலாத ஆனந்தம் பெறுகின்றார்கள். ஒளிமயமான நிலையில் புகுந்த பேரின்ப நிலையில் தங்களை அமர்த்திக் கொள்கின்றார்கள்.

**"முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்**
**ஒப்பிலா ஆனந்தத் துள்ளொளி புக்குச்**
**செப்ப அரிய சிவங்கண்டு தான்தெளிந்து**
**அப்பரிசாக அமர்ந்திருந் தாரே"** **(திருமந்திரம் - 126)**

இறை அனுபவத்தை முற்றிலும் பெற்ற காரணத்தினால் திருமூலர் ஓர் ஒப்பற்ற சித்தராவார். சித்தர்களுக்கெல்லாம் தலைவராவார். அவரைத் தொடர்ந்து வந்த பல அருளாளர்கள் தாங்கள் திருமூலர் உருவாக்கிய சித்தர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்று பெருமை கொள்கிறார்கள். சித்தர் இலக்கணத்திற்குத் திருமூலர் வழிவகுத்தார் என்றும் கூறலாம். திருமூலர் இறைவனின் முதற் சீடனான நந்தி தேவனிடம் உபதேசம் பெற்றவர். எண்ணற்ற காலம் தவம் செய்தவர். இறைவனைத்தன்னுள் முழுமையாக உணர்ந்தவர்.

**"தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்**
**ஒப்பில் எழுகோடி யுகம்இருந் தேனே".** **(திருமந்திரம் - 74)**

தான் இறைவனுடைய திருநாமங்களைப்பல காலம் ஓதி, இறைவனைப் பயிற்சி வழிபட்டு, பேரறிவாகிய இறைவனின் நிழலில் அமர்ந்து, இனிமையான அனுபவத்தைப் பெற்று, சீவ உணர்வு நீங்கிச் சிவ உணர் வாகிய அனுபவத்தைப் பெற்றதைத் திருமூலர் பெருமானே விளக்குகின்றார்.

**"இருந்தேன்இக் காயத்தே எண்ணிலி கோடி**
**இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே**
**இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே**
**இருந்தேன் என்நந்தி இணையடிக் கீழே".** **(திருமந்திரம் - 80)**

அத்தகைய யோகியார் சித்தர்களைப் பற்றிக்கூறும் விளக்கம் மனத்தில் வைக்கத்தக்கது. சித்தர்களைச் சிவயோகியர்கள் என்றும், சிவசித்தர்கள் என்றும் திருமூலர் குறிக்கின்றார். அவர்கள் பிறவிக்குக் காரணமான வினையின் தன்மையை ஒடுக்கியவர்கள். பந்தங்களை நீக்கியவர்கள். தூய்மையான துரிய நிலையை அடைந்து இறை உணர்வுடன் பொருந்தியிருப்பதன் காரணத்தினால் உடலில் செத்திட்டு இருப்பார்கள். அதாவது, பொறிகளும், உட்கருவிகளும் நடத்தும் இயக்கம் ஒய்ந்து செயலற்று நிற்பார்கள். புலன்கள் தம்வழி செல்லாமல் சிவத்தில் புகுந்த சீவன் வழி செல்லும் நிலையில் இருப்பார்கள்.

**"வித்தைக் கெடுத்த வியாக்கிரத் தேமிகச்**
**சுத்தத் துரியம் பிறந்து துடக்கற**
**ஒத்துப் புலனுயிர் ஒன்றாய் உடம்பொடு**
**செத்திட் டிருப்பர் சிவயோகி யார்களே".** **(திருமந்திரம் - 121)**

சித்தர்களுடைய நிலை ஓர் உணர்வு நிலையாகும். உணர்வு உள்ளத்தைச் சார்ந்தது. அந்த உள்ளமாகிய பெருங்கோயிலில் இறைவன் குடி கொண்டுள்ளான். அதை ஆய்ந்தறியாமல் சீவன் பொறிகளின் அட்ட காசத்தினால் புறத்தே செல்கின்றது. அவற்றைத் திருப்பி உள்ளடக்குவது சித்தர்களுடைய சாதனையாகும். அப்பொழுது சீவன் உள்ளமாகிய பெருங்கோயிலில் கலந்து நிற்கும். அதாவது சிவமயமாகிவிடும்.

அதற்கென்று ஆசைகளோ பாசங்களோ இருக்காது. தன் செயல் சிவத்தின் செயல் என்று இருக்கும்.

**"சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட**
**அத்தன் எனக்கு அருளியவாறார் பெறுவார் அச்சோவே"**

என வரும் மாணிக்கவாசகரின் திருவாக்கு அவருடைய ஆழ்ந்த அனுபவத்தை எடுத்துக்காட்டுகிறது. சீவனுக்கு அறிவு உண்டு. சிவத்தை உணர்ந்த நிலையில் சீவனுடைய அறிவாகிய ஒளி சிவத்தின் ஒளியில் போய் ஒடுங்கும்.

**"சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ**
**சுத்த வெளியிற் சுடரிற் சுடர்சேரும்"** **(திருமந்திரம்ம - 135)**

என்ன அருமையான நிலை! இது எல்லோருக்கும் கிடைக்குமா? இந்த நிலையைப் பெற்றவர்கள் சிவசித்தர்கள் என்று திருமூலர் கூறுகின்றார். இதுவரை ஆணவம், கன்மம், மாயை போன்ற மலங்களால் கட்டுண்டு நிற்கும் உயிரானது அந்தத் தளைகளிலிருந்து விடுபட்டு, தான் பெற்ற உலகியல் அறிவை உதறித் தள்ளி விட்டுச் சிவமாகிய பேரறிவில் நிற்கும் நிலையைச் சித்தர்கள் பெறுகின்றார்கள்.

**"வெளியில் வெளிபோய் விரவிய வாறும்**
**அளியில் அளிபோய் அடங்கிய வாறும்**
**ஒளியில் ஒளிபோய் ஒடுங்கிய வாறுந்**
**தெளியும் அவரே சிவசித்தர் தாமே".** **(திருமந்திரம் - 124)**

சித்தர்கள் சிவத்தைக் காண உலகெங்கும் சுற்றவில்லை. அவர்கள் சிவத்தை இங்கேயே தரிசிக்கின்றார்கள். தம்முள் கண்டுகொள்கின்றார்கள். **"சித்தர் சிவலோகம் இங்கே தரிசித்தோர்"** என்பார் திருமூலர். அவர்களுடைய உணர்வுகளெல்லாம் சிவமயமாகி நிற்கின்றன. அவர்களுடைய செயல்களெல்லாம் சிவனை நோக்கி அர்ப்பணம் செய்யப்பட்டுள்ளன.

**"இருந்தார் சிவமாகி எங்குந் தாமாகி**
**இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி"**
**(திருமந்திரம் - 127)**

என்பது திருமந்திர வாக்கு.

சித்தர்கள் இறைவன் தன்னுடைய அன்பர்களுக்குத் தரும் சாலோகம், சாமீபம், சாரூபம் போன்ற பதங்களை வேண்டுவதில்லை. பாசங்களை வலுப்படுத்தும் மாயாகாரியங்களைப் பற்றுவதில்லை. ஆணவமாகிய இருளைத் தன்னிடமிருந்து அகற்றி, தான் என்னும் நினைப்பையும் ஒழித்து, இறைஉணர்வுடன் எங்கும், எப்போதும் கலந்து நிற்பதையே சித்தர்பெருமக்கள் விரும்புகிறார்கள்.

**''பதமுத்தி மூன்றும் பழுதென்று கைவிட்டு**
**இதமுற்ற பாச இருளைத் துரந்து**
**மதம் அற்று எனது யான் மாற்றிவிட்டு அங்கே**
**திதமுற் றவர்கள் சிவசித்தர் தாமே''.** (திருமந்திரம் - 2525)

சித்தர்கள் சிவத்தைக் கண்டவர்கள் என்று மேலும் திருமூலர் வலியுறுத்துகின்றார். மாயையில் இரண்டு வகை உண்டு. ஒன்று சுத்த மாயை, மற்றது அசுத்த மாயை. சித்தர்கள் தங்களுடைய வினைப்பற்றை நீக்கியவர்கள். எனினும், இந்த உலகில் உடலுடன் சம்பந்தப்பட்டிருப்பதால் மாயையின் காரியங்களுக்கு உட்பட்டவர்கள். ஆனால், சித்தர்கள் அவற்றினுடைய ஆற்றலுக்கு அடிமையானதில்லை. தோய்ந்தும், தோயாமலும், தாமரை இலை நீர் போல் பற்றின்றி நிற்பர். **''நீரினில் பால் போல் சோராமற் காணும் சுகமறிந்தேனே''** என்று தனது அனுபவத்தைத் திருமூலரே வெளிப்படுத்துகின்றார். இறைவனால் அளிக்கப்படும் எல்லாவிதமான பதங்களுக்கும் சித்தர்கள் முழுமையாகத் தகுதி பெற்றவர்களாக இருந்தாலும், இறைவனுடைய வியாபகத்தில் ஒன்றிக் கொண்டதால் அவற்றிற்கும் மேலான நிலைமை அடைந்து இறைத் தன்மையைப் பெறுவர்.

**''சித்தர் சிவத்தைக் கண்டவர் சீருடன்**
**சுத்தாசுத் தத்துடன் தோய்ந்துந்தோ யாதவர்**
**முத்தரம் முத்திக்கு மூலத்தர் மூலத்துச்**
**சத்தர் சதாசிவத் தன்மையர் தாமே''.** (திருமந்திரம் - 2526)

இறைவன் காலனை வென்றவன். காலத்திற்கு அப்பாற்பட்டவன். காலம் போன்ற கலைகள் அவனிடமிருந்தே வெளிப்படுகின்றன. காலனை வென்றவன் குறிப்பு அறிந்த சித்தர்கள் தங்களுடைய உடலைப் பற்றியும், உயிரைப் பற்றியும், இறைவனைப் பற்றியும் முழுமையான ஞானத்தைப் பெற்றவர்களாக இறைவனுடைய ஒளியைத் தன்னொளியாகப் பெற்று நிற்கின்றார்கள். அதனால் அவர்கள் காமம், வெகுளி, மயக்கம் போன்ற மூக்குற்றங்களை அறவே நீக்கி விடுவார்கள். உடல் இருப்பதையும், இல்லாமல் போவதையும் பற்றிச் சித்தர்கள் கவலைப்படுவதில்லை. இதுவே சித்தர்கள் அடையும் ஒளி நெறி அல்லது சன்மார்க்க நெறி என்பார் திருமூலர்.

**''சாற்றும் சன்மார்க்கமாய் தற்சிவ தத்துவத்**
**தோற்றங்க ளான சுருதிச் சுடர்கண்டு**
**சீற்றம் ஒழிந்து சிவயோக சித்தராய்க்**
**கூற்றத்தை வென்றார் குறிப்பறிந் தார்களே''.**

(திருமந்திரம் - 1477)

சைவப் பெருமக்களால் போற்றப்படும் திருமந்திரம் பன்னிரு திருமுறைகளில் பத்தாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது. சைவ இலக்கண விளக்கங்களுக்கு ஓர் தலைசிறந்த நூலாகத் திகழ்கின்றது. அதேநேரத்தில் திருமந்திரம் ஓர் ஆழ்ந்த அனுபவ நூலாகவும் பயன்படுகின்றது. தான் பெற்ற அனுபவங்களைத் திருமூலர் பெருமான் திருமந்திர மணிமாலையாக நமக்கு அளித்துள்ளார். இறை அனுபவத்தை அடைய விரும்புவோர் திருமந்திரத்தை முறைப்படி கற்றுத் தெளிந்து கொள்வதன் மூலமாகச் சிறந்த பயனைப் பெறலாம். ஆனால், அந்த அனுபவத்திற்கு நம்மை நாம் தகுதியுடையோராக்கிக் கொள்ள வேண்டும். இதற்கு மனம், வாக்கு, காயம் ஆகியவற்றில் முதிர்ச்சி தேவை. உடல், உடலால் பெறப்படும் இன்பங்கள், இளமை, செல்வம் போன்றவை நிலைத்து நிற்பதில்லை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். உடலும், உயிரும் வேறு வேறு என்பதும் உணரப்பட வேண்டும். உள்ளத்தை வளர்க்க, உயிரின் அருங்குணங்கள் வெளிவர உடலைத் தகுந்த முறையில் பேணிக்கொள்ள வேண்டும். திருமூலர் அருளிச் செய்த யோக மார்க்கங்கள் இதற்கு வெகுவாகப் பயன்படுகின்றன. இறைபணி தொடங்க வேண்டும். சரியை, கிரியை, யோகம் போன்ற மார்க்கங்களும், மந்திரம், தந்திரம் போன்ற வழிபாடுகளும் உள்ளத்தைப் பக்குவமாக்கி நம்மை இறைவன்பால் அழைத்துச் செல்ல ஓர் சூழ்நிலையை உருவாக்குகின்றன. மனிதன் மனத்தால் உயர வேண்டும். இந்த நான்கு வழிகளும் இந்த மனத்தின் ஆற்றலைப் பெருக்க உதவுகின்றன. ஒழுக்கமும், சீலமும், தவ வாழ்க்கையும் மனத்தைப் பக்குவப்படுத்தி, மனத்தை இறைவன் அருகில் கொண்டு செல்கின்றன. அப்பொழுது இறைவன் அருளால் தகுந்த குருவும் வந்து சேருவார். குரு என்பது ஒளி, உயிரைச் சுற்றியுள்ள மலங்களின் இருள் உயிரை விட்டு அகலத் தொடங்கும். இவையெல்லாம் இறைவனுடைய அருளால் நடந்தேறுகிறது. தக்க தருணத்தில் இறைவன் அன்பனின் உள்ளம் புகுந்து, ஆனந்த வெள்ளத்தில் அழுத்துகின்றான்.

**''எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன் அடியார்க்கு**
**இங்கே என்று அருள் புரியும் எம்பெருமான்''**

என்பது திருஞானசம்பந்தர் வாக்கு.

இருள் அகன்று ஒளி பரவிய நிலையில் பேரின்ப அமுத ஊறலும் எலும்பின் உருக்கமும் மணிவாசகருக்கு அனுபவமாயிற்று என்பதை

**''இரும்புதரு மனத்தேனை ஈர்த்து ஆர்த்தென் என்புருக்கிக்**
**கரும்புதரு சுவைஎனக்குக் காட்டினை''**

என்னும் திருவாக்கிலிருந்து காணலாம்.

சித்தர்கள் இறை அனுபவத்தை உள்ளொளியாகக் காண்கின்றார்கள். திருமூலரும் **''தேயமும் நாடும் திரிந்து எங்கள் செல்வனைக் காயம்**

**இந்நாட்டிடைக் கண்டுகொண்டேனே''** என்பார். **''ஒன்றி நின்று உள்ளே உணர்ந்தேன் பராபரம்; ஒன்றி நின்று உள்ளே உணர்ந்தேன் சிவகதி''** என்பதும் திருமந்திர வாக்காகும்.

வாழ்க்கைக்கு ஒரு நோக்கம் இருக்கின்றது. அது இறைவனைப் பற்றுதலாகும். அந்த நோக்கத்தை நாம் அறிந்து கொள்ளாதவரை ஓயாத துன்பம் தரும் உலக வாழ்க்கையில் மூழ்கிக் கிடப்போம். உலக வாழ்க்கையும் ஓயாது அடித்து வரும் கடலில் அலைகள் போல உள்ளத்தில் விளங்கும் ஒளியை நாம் எல்லோரும் நாட வேண்டும். அங்கே ஒளிக்கு ஒளியாய்ச் சிவன் விளங்குகின்றான். அந்தச் சிவத்தை நாடிப்பற்றிக் கொள்ள வேண்டும். துன்பக் கடலைக்கடக்க உதவும் தெப்பமும் அதுவே.

**''கடலிடை வாழ்கின்ற கௌவை உலகத்து**
**உடலிடை வாழ்வுகொண்டு உள்ளொளி நாடி**
**உடலிலிடை வைகின்ற உள்ளுறு தேவனைக்**
**கடலின் மலிதிரைக் காணலு மாமே''.** **(திருமந்திரம் - 3028)**

திருமந்திரம் காரிருளில் பிரகாசிக்கும் மின்னலைப்போல உயிர்களை உய்விக்கச் செய்யும் பாதையைக் காட்டி அதன் வழியாக நம்மையெல்லாம் அழைத்துச் செல்லக் காத்துக் கொண்டிருக்கின்றது. திருமந்திரத்தைக் கற்று, உணர்ந்து, தெளிந்து, இறைவனுடைய அருள் பெற்று, இம்மைக்கும் மறுமைக்குமான எல்லாவிதமான பயன்களையும் பெற்று, இறைவன் திருவடிகளைச் சார்ந்து அங்கு என்றும் வீற்றிருக்க வேண்டும் என்பதையே ஒரே குறிக்கோளாக மனத்தில் வைப்போம்.

**''வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி**
**வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்**
**வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்**
**வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே''.** **(திருமந்திரம் - 3047)**

## திருச்சிற்றம்பலம்